மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

TIRUNELVELI

தொலைநெறித் தொடர்கல்வி இயக்ககம்

DIRECTORATE DISTANCE CONTINUING EDUCATION

TIRUNELVELI

தமிழ் இலக்கிய வரலாறு

JETA51

முனைவர் கு.பிருந்தா M.A., M.Phil., Ph.D., P.G.D.C.A., Drawing T.T.C.,

உதவிப்பேராசிரியர்,

தமிழியல்துறை,

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி – 627 012.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி – 627 012.

தமிழ் இலக்கிய வரலாறு

அலகுஎண் - 1	**சங்க இலக்கியங்களும் சங்கம் மறுவியகால இலக்கியங்களும்** சங்ககாலம் ஓர் அறிமுகம்-பதினெண் மேல்கணக்கு நூல்கள் (பாட்டும் தொகையும்)-பதினெண் கீழ்கணக்கு நூல்கள்
அலகுஎண் - 2	**பக்தி இலக்கியங்களும் காப்பியங்களும்** பக்தி இலக்கியம் (சைவம் வைணவம் பௌத்தம் சமணம்)-காப்பியங்கள் (ஐம்பெருங்காப்பியங்கள் ஐஞ்சிறு)-பிறகாப்பியங்கள்(கம்பராமாயணம் மகாபாரதம் பெரிய புராணம்வில்லிபாரதம் நளவெண்பாநைடதம்)-பிற்காலக் காப்பியங்கள்.
அலகுஎண் - 3	**சிற்றிலக்கியங்களும்உரைகளும்** சிற்றிலக்கியங்கள்-நிகண்டுகள்-இலக்கண நூல்கள்-தத்துவ நூல்கள்-உரையாசிரியர்கள்-உரைகள்.
அலகுஎண் - 4	**பிறசமய இலக்கியங்களும் சித்தர் இலக்கியங்களும்** பிற்காலஅருள்நூல்கள் (தாயுமானவர் அருணகிரிநாதர் வள்ளலார்)உரைநடை இலக்கியங்கள்-இசுலாமிய இலக்கியங்கள்-கிறித்துவ இலக்கியங்கள்-சித்தர் இலக்கியங்கள்-தனிப்பாடல்கள்.
அலகுஎண் - 5	**இக்கால இலக்கியங்களும் வாய்மொழி இலக்கியங்களும்** புதினம்-சிறுகதை-கட்டுரை-நாடகம்-கவிதை(மரபுக்கவிதை-புதுக்கவிதை-ஹைக்கூ சென்றியூ லிமரைக்கூ)-வாழ்க்கைவரலாறு (தன்வரலாறுபிறர் வாழ்க்கைவரலாறு)-தமிழிசை- வாய்மொழி இலக்கியம்-ஊடகத் தமிழ்

Text books

• தமிழ் இலக்கியத் தகவல் களஞ்சியம் தேவிரா ஸ்ரீநந்தினிபதிப்பகம் சென்னை
• புதிய நோக்கில் தமிழ் இலக்கியவரலாறு-தமிழண்ணல் மீனாட்சிபுத்தகநிலையம் மதுரை
• புதிய இலக்கியவரலாறு (3தொகுதிகள்)-சிற்பிபாலசுப்ரமணியம் நீல.பத்பநாபன்

தமிழ் இலக்கிய வரலாறு

அலகு 1

சங்க இலக்கியங்களும் சங்க மருவியகால இலக்கியங்களும்

தமிழரின் பொற்காலம் எனக் கருதப்படுவது சங்க காலமாகும். இங்குக் குறிக்கப்படும் சங்கம் என்பது கடைச்சங்கமாகும். இக்காலத்தில் எழுந்த இலக்கியம் உலகின் பழைமையான இலக்கியச் செல்வத்தின் ஒரு பகுதியாக அமைகிறது. சமயச் சார்பற்ற உயர்ந்த இலக்கியமாக இது போற்றப்படுகிறது. இக்காலத்தில் தனித்தனிச் செய்யுட்களை இயற்றுவதே வழக்கமாக இருந்தது. அங்ஙனம் இயற்றப்பட்டவை பல்லாயிரக்கணக்காக இருந்திருக்க வேண்டும். அவற்றுள் அழிந்தவை போக இன்று எஞ்சியிருப்பவை 2381 செய்யுட்கள். இவை மூன்றடி முதல் 782 அடி வரை அமைந்தவை. இவற்றை இயற்றியோராக 473 புலவர்கள் அறியப்படுகின்றனர். பல பாடல்கட்கு ஆசிரியர் யார் எனத் தெரியவில்லை. இவை அகம், புறம் என்ற இலக்கணக் கட்டுக்கோப்புடன் படைக்கப்பட்டவை. இவை மன்னர் பலர் முயற்சியாலும் அறிஞர்களின் உழைப்பாலும் தொகுத்துக் காக்கப்பட்டுள்ளன. பண்டைத் தமிழரின் அரசியல், சமூக, சமயப் பண்பாட்டு வரலாற்றினை வரைய விலைமதிப்பற்ற செல்வமாகப் பயன்படும் சங்க இலக்கியங்களின் சிறப்பை உணர்த்துவது இப்பாடம். இதில் சங்க காலம் பற்றியும், சங்கத் தொகைநூல்கள் உருவானமை பற்றியும், அத்தொகைகளில் இடம்பெறும் தனித் தனி நூல்களின் அமைப்பு, சிறப்பு ஆகியவை பற்றியும் கூறப்படும்.

தமிழ்மொழி வரலாற்றில் தொல்காப்பியர் காலத்தை அடுத்து இடம் பெறுவது சங்க காலம். பாண்டிய மன்னர்களால் நிறுவப்பட்ட தமிழ்ச் சங்கத்தில் புலவர்கள் இருந்து தமிழ் ஆராய்ந்த காலம் என்பதால் இது சங்ககாலம் எனப்பட்டது. இது கி.பி. முதல் இரு நூற்றாண்டுகளைக் குறிக்கும் என அறிஞர்கள் கருதுகின்றனர். சங்ககாலத் தமிழின் வரலாற்றை அறிவதற்குச் சங்க இலக்கியம் என்று கூறப்படும் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் தலைசிறந்த சான்றுகளாகத் திகழ்கின்றன.

ஒரு மொழியில் காலந்தோறும் படிப்படியாகவே மாற்றங்கள் நிகழ்வது இயற்கை. தொல்காப்பியர் காலத்திற்கு இருநூறு ஆண்டுகள் பிற்பட்டதே சங்ககாலம். எனினும் சங்ககாலத்தில் வழங்கிய தமிழ், தொல்காப்பியர் காலத் தமிழிலிருந்து பெரும்பாலும் வேறுபடவில்லை. “தொல்காப்பியர் காலத்தமிழில் காணப்படும் இலக்கணப் போக்குகள் பல சங்ககாலத் தமிழில் நிலைபெறுகின்றன. குறிப்பிடத்தக்க சில மாற்றங்களைத் தவிரச் சங்ககாலத் தமிழ் முழுக்க முழுக்கத் தொல்காப்பியர் காலத் தமிழே ஆகும்” என்று டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் குறிப்பிடுவது இங்கே கருதத்தக்கது.

இப்பாடத்தில் தொல்காப்பியர் காலத் தமிழ்மொழியின் ஒலியனியல், உருபனியல் ஆகியவை குறித்த இலக்கணங்கள் சங்ககாலத் தமிழில் எந்த அளவு நிலைபெற்றுக் காணப்படுகின்றன என்பது பற்றியும், எந்த அளவு வழக்கொழிந்து போயின அல்லது செல்வாக்கு இழந்து போயின என்பது பற்றியும் காணலாம். மேலும் தொல்காப்பியர் காலத் தமிழிலிருந்து சங்ககாலத் தமிழ் பெற்றுள்ள மாற்றங்களும் வளர்ச்சிகளும் சுட்டிக் காட்டப்படுகின்றன.

சங்ககாலத் தமிழ் இலக்கியங்கள் - ஓர் அறிமுகம்

சங்ககால இலக்கியம் என்று கூறப்படுவன எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு, பதிற்றுப்பத்து, புறநானூறு, பரிபாடல் ஆகிய தொகை நூல்கள் எட்டுத்தொகையுள் அடங்குவன. திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் ஆகிய நெடும்பாடல்கள் பத்தும் பத்துப்பாட்டுள் அடங்கும்.

தெ. பொ.மீனாட்சிசுந்தரனார், ச.அகத்தியலிங்கம், செ.வை.சண்முகம், சு.சக்திவேல் போன்ற தமிழ்மொழி வரலாற்று ஆசிரியர்கள் எட்டுத்தொகையில் உள்ள பரிபாடல், கலித்தொகை ஆகிய இரு நூல்கள் சங்ககாலத்தில் தோன்றியவை அல்ல சங்ககாலத்தை அடுத்த சங்கம் மருவிய காலத்தில் தோன்றியவை எனக்கொள்கின்றனர். பரிபாடலில் மட்டும் நான் என்ற புதிய தன்மை ஒருமை வடிவம் காணப்படுவது கொண்டும், கலித்தொகையில் மட்டும் கள் எனும் அ்றிணைப் பன்மை விகுதி உயர்திணைப் பன்மையில் வருவது கொண்டும் அவர்கள் இம்முடிவுக்கு வருகின்றனர்.

இவ்வழக்குகள் மிகச் சிறுபான்மையானவை. அகநானூற்றில் (43-ஆம் பாடல்) பாடிய நல்லந்துவனாரே பரிபாடலிலும் கலித்தொகையிலும் பாடியுள்ளார். ஆகவே கலித்தொகையும் பரிபாடலும் சங்ககால இலக்கியங்கள் என்று கொள்வதே பொருந்தும். எனவே இப்பாடத்தில் பாட்டும் தொகையும் ஆகிய பதினெட்டு நூல்களையும் சங்ககால நூல்களாகவே கொண்டு அவற்றின் வழிநின்று சங்ககாலத் தமிழ்மொழியின் இயல்புகள் காட்டப்படுகின்றன.

சங்க காலம்

கடைச் சங்க காலத்தின் மேல் எல்லையைக் கி.மு.500 என்றும் கி.மு.300 என்றும் கூறுவார் உளர். கி.மு.800 என்ற கருத்தும் உண்டு. கி.பி.100-250, கி.பி.500, கி.பி.800 என்று கூறுவோரும் உளர். ஆனாலும் மிகப்பெரும்பான்மையோர் இக்காலத்தைக் கிறித்துநாதருக்குப் பின் வரும் முதல் மூன்று நூற்றாண்டுகட்கு உரியதாகக் கூறுகின்றனர். கி.பி.300 முதல் கி.பி.900 வரை தமிழகத்தில் ஆண்ட பல்லவர் பற்றிய ஒரு குறிப்பும் சங்க நூல்களில் இல்லை. எனவே, கி.பி.3 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதே சங்க காலம் என்பர். இதற்கு வலிமை சேர்க்க அகழ்வாராய்ச்சி முடிவுகளும், சங்க நூலில் இடம்பெறும் யவனர் பற்றிய குறிப்புகளும், தாலமி, பிளைனி முதலானோர் எழுத்துகளும் உதவுகின்றன. பாண்டிச்சேரிக்குப் பக்கத்தில், அரிக்கமேட்டிலும், பிற இடங்களிலும் செய்த அகழ்வாராய்ச்சிகளும், கண்டெடுத்த பானை ஓடுகளும், கிரேக்க உரோமர்களின் காசுகளும் பிறவும் சங்க இலக்கியக் குறிப்புகளோடு ஒத்துச் செல்கின்றன. எனவே கடைச்சங்க காலம் என்பது கி.பி. முதல் மூன்று நூற்றாண்டுகட்கு உட்பட்டது என்பதே சரியான முடிவாகத் தெரிகிறது.

சங்க காலம் ”வரலாற்றின் உயிர்நாடி, காலக் கணிப்பாகும். இன்ன ஆண்டில், இன்ன திங்களில், இன்ன நாளில் இன்னது நிகழ்ந்தது என்று கூறுதல் வரலாற்றின் இலக்கணமாகும். பண்டையத் தமிழக வரலாற்றில் பல நிகழ்ச்சிகளுக்குக் காலங்கணித்தல் எளிதாகத் தோன்றவில்லை. மன்னர்களைத் தம் பாடல்களில் குறிப்பிடும் பழந்தமிழ்ப் புலவர்கள் அம்மன்னர்கள் வாழ்ந்திருந்த காலத்தைத் தெரிவிப்பதில்லை. அவர்களுடைய செய்யுள்களில் விளக்கப்படும் சில நிகழ்ச்சிகளைக் காலங்கணிக்கப்பட்ட வேறு நிகழ்ச்சிகளுடன் தொடர்புறுத்தி அவற்றில் காலத்தை ஒருவாறு அறுதியிட வேண்டியதுள்ளது” என வரலாற்றுப் பேராசிரியர் கே.கே.பிள்ளை குறிப்பிடுகின்றார். எனவே, புறச்சான்றுகளைவிட, அகச்சான்றுகளையே அடிப்படையாகக் கொண்டு காலத்தை வரையறுக்க வேண்டியுள்ளது.

அகச்சான்றுகள் பெரும்பாலும் இலக்கியங்களாகவே உள்ளன. அவ்விலக்கியங்கள் தரும் சான்றுகளிலிருந்து தமிழகத்தின் வரலாற்றுக்கு உட்பட்ட காலம் சங்ககாலம் என்பது பெறப்படுகிறது. இக்காலம் தமிழ் இலக்கிய வரலாற்றில் பொற்காலம் என்று கருதப்படுகிறது. இக்காலத்தில் பாண்டியன், சோழன், சேரன் என்ற முப்பெரும் மன்னர் அரசாண்டு வந்தனர். பாண்டியரின் தலைநகரம் மதுரை சோழர்களின் தலைநகரம் காவிரிப்பூம்பட்டினமும்(புகார்) உறையூரும் ஆகும். சேரனின் தலைநகரம் வஞ்சி.

சங்ககால மன்னர்கள் தமிழ்ப் புலவர்களைப் பாராட்டிப் பரிசில் வழங்கிப் புரந்து வந்தனர். சங்ககால மன்னர்கள் எழுப்பிய எழிலோங்கு அரண்மனைகள், மாளிகைகள், கோயில்கள், அங்காடிகள், துறைமுகங்கள், அவர்கள் ஓட்டிய நாவாய்கள் அனைத்தும் மறைந்துவிட்டன. ஆனால் அவர்கள் காலத்துப் புலவர்கள் பாடிய பாடல்கள் - மன்னர்களது அருமைகளையும், பெருமைகளையும், பண்புகளையும் பறைசாற்றும் பாடல்கள் இப்போதும் எஞ்சி நிற்கின்றன. அந்தப் பாடல்களே சங்ககாலத் தமிழகத்தின் நாகரிகத்தையும், பண்பாட்டையும் உணர்த்துகின்றன. தமிழர்களின் அக, புற வாழ்வு ஒழுக்கங்கள், அரசியல், வீரம், வழிபாடு, விழாக்கள், ஆடல் பாடல்கள், வணிகம், ஓவியம் சிற்பம் கட்டடம் போன்ற கலைகள் ஆகிய எல்லாவற்றையும் சங்கப் பாடல்களே சான்றாக நின்று விளக்குகின்றன.

சங்கம் எனும் சொல்

“சங்கம்“ என்னும் சொல் (புலவர் கூட்டம் என்ற பொருளில்) சங்க இலக்கியம் ஒன்றிலேனும் இடம் பெறவில்லை. அது தமிழ்ச் சொல்லா, வடமொழிச் சொல்லா என்ற வாதங்களும் உண்டு. சங்கம் என்னும் சொல் பிற்காலத்திய ஒன்றாக இருக்கவேண்டும் என்பதில் ஐயமில்லை. இதற்கு நேரான தமிழ்ச் சொற்கள் கூடல், அவை, மன்றம் போன்றவை ஆகும். அவை முன்பு வழக்கிலிருந்தன. சொற்கள் மறைவதும் மாறுவதும், புதிதாகத் தோன்றுவதும் ஒவ்வொரு மொழியிலும் நிகழக்கூடியது. எனவே தொடக்க காலத்தில் “சங்கம்“ என்ற சொல் கையாளப் படாமையால், சங்கம் என்ற அமைப்பு இருந்திருக்க இயலாது என்பார் கூற்று உண்மைக்குப் புறம்பான ஒன்று. ஆகவே, பண்டைத் தமிழகத்தில் தமிழ்ப் புலவர்கள் கூடித் தலை, இடை, கடை என்று மூன்று சங்கங்கள் அமைத்து, அவற்றின் வாயிலாகத் தமிழ் வளர்த்தார்கள் என்று கூறும் மரபைப் புறக்கணித்துவிட முடியாது.

சங்க காலம்

தென்னிந்திய வரலாற்றில் சங்க காலம் ஒரு சிறப்பான அத்தியாயம் ஆகும். தமிழ்ப் பழங்கதைகளின் படி பண்டைய தமிழ்நாட்டில் முச்சங்கம் என்றழைக்கப்பட்ட மூன்று தமிழ் சங்கங்கள் இருந்தன. பாண்டிய மன்னர்களின் ஆதரவில் இந்த சங்கங்கள் தழைத்தோங்கின. தென்மதுரையில் இருந்த முதற்சங்கத்தில் கடவுளரும், முனிவர்களும் பங்கேற்றனர் என்று கூறப்பட்டிருந்தாலும், இச்சங்கத்தைச் சேர்ந்த நூல்கள் ஏதும் கிடைக்கவில்லை. இரண்டாவது சங்கம் கபாடபுரத்தில் நடைபெற்றது. தொல்காப்பியம் தவிர ஏனைய இலக்கியங்கள் யாவும் அழிந்து போயின. மூன்றாவது சங்கத்தை மதுரையில் முடத்திருமாறன் என்ற பாண்டிய மன்னன் நிறுவினான். அதிக எண்ணிக்கையிலான புலவர்கள் இதில் பங்கேற்றனர். ஏராளமான இலக்கியங்கள் படைக்கப்பட்டன என்றாலும் ஒருசிலவே எஞ்சியுள்ளன. இந்த இலக்கியங்கள் சங்க கால வரலாற்றை அறிந்து கொள்ள பெரிதும் உதவுகின்றன.

சங்க இலக்கியங்கள்

சங்க இலக்கியத்தொகுப்பில் தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ் கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியன இடம் பெற்றுள்ளன. காலத்தால் தொன்மை பெற்றதான தொல்காப்பியத்தை இயற்றியவர் தொல்காப்பியர். இது ஒரு இலக்கண நூல் என்றாலும், சங்க கால அரசியல், சமூக பொருளாதார நிலைமைகளைப் பற்றிய தகவல்களைத் தருகிறது.

எட்டுத் தொகை என்பது ஐங்குறுநூறு, நற்றிணை, அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, கலித்தொகை, பரிபாடல், பதிற்றுப்பத்து என்ற எட்டு நூல்களின் தொகுப்பாகும்.

பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்ற பத்து நூல்கள் உள்ளன. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் அகம், புறம் என்ற இரண்டு திணைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பதினெண்கீழ்கணக்கில் அறத்தையும் ஒழுக்கத்தையும் வலியுறுத்தும் பதினெட்டு நூல்கள் உள்ளன. அவற்றில் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் குறிப்பிடத்தக்கதாகும். இளங்கோ அடிகள் இயற்றிய சிலப்பதிகாரமும், சீத்தலைச்சாத்தனார் இயற்றிய மணிமேகலையும் சங்க கால சமூகம் மற்றும் அரசியல் குறித்த தகவல்களைத் தருகின்றன.

பிற சான்றுகள்

சங்க இலக்கியங்களைத் தவிர, கிரேக்க எழுத்தாளர்களான பிளினி, டாலமி, மெகஸ்தனிஸ், ஸ்ட்ராபோ ஆகியோர் தென்னிந்தியாவிற்கும் மேலை நாடுகளுக்கும் இடையே நிலவிய வர்த்தகத் தொடர்புகளை குறிப்பிட்டுள்ளனர். மௌரியப் பேரரசுக்கு தெற்கேயிருந்த சேர, சோழ, பாண்டிய ஆட்சியாளர்கள் பற்றி அசோகரது கல்வெட்டுக்கள் கூறுகின்றன. கலிங்கத்துக் காரவேலனின் ஹதிகும்பா கல்வெட்டும் தமிழ்நாட்டு அரசுகளைப் பற்றி குறிப்பிடுகிறது. அரிக்கமேடு, பூம்புகார், கொடுமணல் போன்ற இடங்களில் மேற்கொள்ளபட்ட அகழ்வாய்வுகளும் தமிழர்களின் வாணிப நடவடிக்கைகளை வெளிப்படுத்துகின்றன.

சங்க இலக்கியத்தின் காலம்

சங்க இலக்கியத்தின் காலவரையறை பற்றி அறிஞர்களுக்கிடையே இன்னும் கருத்தொற்றுமை ஏற்படவில்லை. இலங்கை அரசன் இரண்டாம் கயவாகு, சேர அரசன் செங்குட்டுவன் இருவரும் சமகாலத்தவர் என்ற செய்தி சங்க காலத்தை நிர்ணயிப்பதற்கு அடிப்படையாகத் திகழ்கிறது. இச்செய்தியை சிலப்பதிகாரம், தீபவம்சம், மகாவம்சம் ஆகிய நூல்கள் உறுதிப்படுத்துகின்றன. மேலும், கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த ரோமானியப் பேரரசர்கள் வெளியிட்ட ரோமானிய நாணயங்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எனவே, இலக்கியம், தொல்லியல், நாணயவியல் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு, சங்க இலக்கியங்களின் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை என்ற முடிவுக்கு வரலாம்.

அரசியல் வரலாறு

சங்க கால தமிழகத்தில் சேர, சோழ, பாண்டிய மரபுகள் ஆட்சி புரிந்தனர். இலக்கிய குறிப்புகளிலிருந்து இந்த மரபுகளின் வரலாற்றை ஓரளவு அறிந்து கொள்ளலாம்.

சேரர்கள்

தற்காலத்திய கேரளப் பகுதியில் சேரர்கள் ஆட்சிபுரிந்தனர். அவர்களது தலைநகரம் வஞ்சி. முக்கிய துறை முகங்கள் தொண்டி மற்றும் முசிறி. பனம்பூ மாலையை அவர்கள் அணிந்தனர். கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த புகலூர்க் கல்வெட்டு சேர ஆட்சியாளர்களின் மூன்று தலைமுறைகள் பற்றி குறிப்பிடுகிறது. சேர அரசர்களைப் பற்றி பதிற்றுப் பத்தும் கூறுகிறது. பெரும்சோற்று உதியன் சேரலாதன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், சேரன் செங்குட்டுவன் ஆகியோர் சேர மரபின் சிறந்த அரசர்களாவர்.

சேரன் செங்குட்டுவன் கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவன். அவனது இளவலான இளங்கோ அடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார். செய்குட்டுவனின் படையெடுப்புகளில் அவன் மேற்கொண்ட இமாலயப் படையெடுப்பு குறிப்பிடத்தக்கதாகும். பல்வேறு வட இந்திய ஆட்சியாளர்களை அவன் முறியடித்தான். தமிழ்நாட்டில் கற்புக்கரசி கண்ணகி அல்லது பத்தினி வழிபாட்டை செங்குட்டுவன் அறிமுகப்படுத்தினான். இமாலயப் படையெடுப்பின்போது பத்தினிசிலை வடிப்பதற்கான கல்லைக்கொண்டு வந்தான். கோயில் குடமுழுக்கு விழாவில் இலங்கை அரசன் இரண்டாம் கயவாகு உள்ளிட்ட பல அரசர்கள் கலந்து கொண்டனர்.

சோழர்கள்

தற்காலத்திய திருச்சி மாவட்டத்திலிருந்து தெற்கு ஆந்திரப் பிரதேசம் வரையிலான பகுதியே சங்க காலத்தில் சோழ நாடு எனப்பட்டது. சோழர்களின் தலைநகரம் முதலில் உறையூரிலும் பின்னர் புகாரிலும் இருந்தது. சங்க காலச் சோழர்களில் சிறப்பு வாய்ந்தவன் கரிகால் சோழன். அவனது இளமைக்காலம், போர் வெற்றிகள் குறித்து பட்டினப்பாலை விவரிக்கிறது. சேரர்கள், பாண்டியர்கள், பதினொரு குறுநில மன்னர்கள் அடங்கிய பெரிய கூட்டிணைவுப் படைகளை கரிகாலன் வெண்ணிப் போரில் முறியடித்தான். இந்த நிகழ்ச்சி சங்கப் பாடல்கள் பலவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவன் மேற்கொண்ட மற்றொரு போர் வாகைப் பறந்தலைப் போராகும். அதில் ஒன்பது குறுநில மன்னர்களை மண்டியிடச் செய்தான். கரிகாலனின் போர் வெற்றிகள் தமிழ்நாடு முழுவதையும் சோழர்களின் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தன. அவனது ஆட்சிக் காலத்தில் வாணிகமும் செழித்தோங்கியது. காடுகளைத் திருத்தி விளை நிலமாக்கியவன் கரிகாலன். இதனால் நாட்டின் செல்வச் செழிப்பு பெருகியது. காவிரி ஆற்றின் குறுக்கே கல்லணையை கரிகாலன் அமைத்தான். வேறு பல நீர்ப்பாசன ஏரிகளையும் அவன் வெட்டுவித்தான்.

பாண்டியர்கள்

தற்காலத்திய தெற்குத் தமிழ்நாட்டில் சங்ககாலப் பாண்டியர்கள் ஆட்சி புரிந்தனர். அவர்களின் தலைநகரம் மதுரை. நெடியோன், பலயாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, முடத்திருமாறன் போன்றோர் முற்காலத்திய பாண்டிய மன்னவர்களாவர். ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், கோவன் கொல்லப்படவும், கண்ணகி சினமுற்று மதுரையை எரிக்கவும் காரணமாக இருந்தவர். மற்றொருவர் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். நக்கீரன் மற்றும் மாங்குடி மருதனார் ஆகிய புலவர்களால் போற்றப்பட்டவர். தற்கால தஞ்சை மாவட்டத்திலிருந்த தலையாலங்கானம் என்ற விடத்தில் நடைபெற்ற போரில் எதிரிகளை வீழ்தியதால் அவருக்கு இப்பெயர் வழங்கலாயிற்று. இவ்வெற்றியின் பயனாக, நெடுஞ்செழியன் தமிழகத்தை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார். செழிப்பான துறைமுகமான கொற்கை பற்றியும், பாண்டிய நாட்டின் சமூக – பொருளாதார நிலைமைகளை குறித்தும் மாங்குடி மருதனார் மதுரைக் காஞ்சியில் விவரித்துள்ளார். உக்கிரப் பெருவழுதி மற்றொரு சிறப்பு மிக்க பாண்டிய அரசன். களப்பிரர்கள் படையெடுப்பின் விளைவாக சங்க காலப்பாண்டியர்கள் ஆட்சி வீழ்ச்சியடைந்தது.

குறுநில மன்னர்கள்

சங்க காலத்தில் குறுநில மன்னர்கள் முக்கிய பங்காற்றினர். பாரி, காரி, ஓரி, நல்லி, பேகன், ஆய், அதியமான் என்ற கடையெழு வள்ளல்கள் கொடைக்குப் பெயர் பெற்றவர்கள். தமிழ்ப் புலவர்களை ஆதரித்துப் போற்றினர். சேர, சோழ, பாண்டி ஆட்சியாளர்களுக்கு அவர்கள் கீழ்ப்படிந்தவர்கள் என்ற போதிலும் தத்தம் ஆட்சிப் பகுதிகளில் வலிமையும் புகழும் பெற்றுத் திகழ்ந்தனர்.

சங்க கால அரசியல்

சங்க காலத்தில் மரபுவழி முடியாட்சி முறையே வழக்கிலிருந்தது. அமைச்சர், அவைப்புலவர், அரசவையோர் போன்றவர்களின் ஆலோசனையை அரசன் கேட்டு நடந்தான். வானவரம்பன், வானவன், குட்டுவன், இரும்பொறை, வில்லவர் போன்ற விருதுப் பெயர்களை சேர மன்னர்கள் சூட்டிக் கொண்டனர். சென்னி, வளவன், கிள்ளி என்பன சோழர்களின் பட்டப் பெயர்களாகும். தென்னவர், மீனவர் என்பவை பாண்டிய மன்னர்களின் விருதுப் பெயர்களாகும். ஒவ்வொரு சங்ககால அரச குலமும் தங்களுக்கேயுரிய அரச சின்னங்களைப் பெற்றிருந்தனர். பாண்டியர்களின் சின்னம் மீன். சோழர்களுக்கு புலி,சேரர்களுக்கு வில், அம்பு. அரசவையில்

குறுநிலத் தலைவர்களும் அதிகாரிகளும் வீற்றிருந்தனர். ஆட்சியில் அரசருக்கு உதவியாக பெரும்திரளான அதிகாரிகள் இருந்தனர். அவர்கள் ஐந்து குழுக்களாக பிரிக்கப்பட்டிருந்தனர் – அமைச்சர்கள், அந்தணர்கள், படைத்தலைவர்கள், தூதுவர்கள், ஒற்றர்கள். சங்க காலத்தில் படை நிர்வாகம் திறம்பட சீரமைக்கப்பட்டிருந்தது. ஒவ்டிவாரு ஆட்சியாளரும் நிரந்தரப் படையையும், தத்தமக்குரிய கொடிமரத்தையும் கொண்டிருந்தனர்.

அரசின் முக்கிய வருவாய் நிலவரி. அயல்நாட்டு வாணிகத்தின் மீது சுங்கமும் வசூலிக்கப்பட்டடது. புகார் துறைமுகத்தில் நியமிக்கப்பட்டிருந்த சுங்க அதிகாரிகள் பற்றி பட்டினப்பாலை குறிப்பிடுகிறது. போரின்போது கைப்பற்றப்படும் கொள்ளைப் பொருட்கள் அரசுக் கருவூலத்திற்கு முக்கிய வருவாயகத் திகழ்ந்தது. சாலைகளும் பெருவழிகளும் நன்கு பராமரிக்கப்பட்டுவந்தன. கொள்கை மற்றும் கடத்தல் ஆகியவற்றை தடுப்பதற்காக இரவும் பகலும் அவை கண்காணிக்கப்பட்டன.

சங்க கால சமூகம்

ஐந்து வகை நிலப்பிரிவுகள் பற்றி தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

- குறிஞ்சி, மலையும் மலைசார்ந்த பகுதி

- முல்லை, மேய்ச்சல் காடுகள்

- மருதம், வேளாண் நிலங்கள்

- நெய்தல், கடற்கரைப் பகுதி

- பாலை, வறண்ட பூமி

இந்த நிலங்களில் வாழ்ந்த மக்கள் தத்தம் கடவுளர்களையும் தொழில்களையும் பெற்றிருந்தனர்.

1. குறிஞ்சி – முதன்மைக் கடவுள் முருகன் (தொழில்: வேட்டையாடுதல், தேன் எடுத்தல்)

2. முல்லை – முதன்மைக் கடவுள் மாயோன் (விஷ்ணு) (தொழில்: ஆடு, மாடு வளர்ப்பு, பால் பொருட்கள் உற்பத்தி)

3. மருதம் – முதன்மைக்கடவுள் – இந்திரன் (தொழில்: வேளாண்மை)

4. நெய்தல் – முதன்மைக்கடவுள் – வருணன் (தொழில்: மீன் பிடித்தல், உப்பு உற்பத்தி)

5. பாலை – முதன்மைக் கடவுள் – கொற்றவை (தொழில்: கொள்ளையடித்தல்)

நான்கு வகை சாதிகள் – அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் – குறித்து தொல்காப்பியம் கூறுகிறது. ஆளும் வர்க்கத்தினர் அரசர் என்றழைக்பட்டனர். சங்க கால அரசியல் மற்றும் சமய வாழ்க்கையில் அந்தணர் முக்கிய பங்கு வகித்தனர். வணிகர்கள் வணிகத் தொழிலில் ஈடுபட்டனர். வேளாளர்கள் பயிர்த் தொழில் செய்தனர். பழங்குடி இனத்தவர்களான பரதவர், பாணர், எயினர், கடம்பர், மறவர், புலையர் போன்றோரும் சங்க கால சமுதாயத்தில் அங்கம் வகித்தனர். பண்டையக்கால தொல்பழங்குடிகளான தோடர்கள், இருளர்கள், நாகர்கள், வேடர்கள் போன்றோரும் இக்காலத்தில் வாழ்ந்தனர்.

சமயம்

சங்க காலத்தின் முதன்மைக் கடவுள் முருகன் அல்லது சேயோன் தமிழ்க்கடவுள் என அவர் போற்றப்பட்டார். முருக வழிபாடு தொன்மை வாய்ந்தது. முருகன் தொடர்பான விழாக்கள் சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. அறுபடை வீடுகள் அவனுக்கே உரித்தானவை. மாயோன் (விஷ்ணு), வேந்தன் (இந்திரன்), வருணன், கொற்றவை போன்ற கடவுள்களையும் சங்க காலத்தில் வழிபட்டனர். வீரக்கல் அல்லது நடுகல் வழிபாடு சங்க காலத்தில்

முக்கியத்துவம் பெற்று விளங்கியது. போர்க்களத்தில் வீரனது ஆற்றலையும் தியாகத்தையும் போற்றும் வகையில் அனவது நினைவாக வீரக்கல் நடப்பட்டடது. தமிழ்நாட்டின் பல பகுதிகளில் மறைந்த வீரர்கள் பற்றிய குறிப்புகள் அடங்கிய வீரக்கற்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இத்தகைய நீத்தோர் வழிபாடு மிகவும் தொன்மையானதாகும்.

மகளிர் நிலை

சங்க காலத்தில் மகளிர் நிலை குறித்து அறிந்து கொள்ள சங்க இலக்கியங்களில் ஏராளமான தகவல்கள் உள்ளன. அவ்வையார், நச்செள்ளையார், காக்கைபாடினியார் போன்ற பெண் புலவர்கள் இக்காலத்தில் வாழ்ந்து தமிழ் இலக்கியத்திற்கு சிறப்பான பங்களிப்பை வழங்கியுள்ளனர். மகளிரின் வீரம் குறித்து பல்வேறு பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. கற்பு பெண்களின் தலையாய விழுமியமாகப் போற்றப்பட்டது. காதல் திருமணம் சாதாரணமாக வழக்கத்திலிருந்தது. பெண்கள் தங்கள் வாழ்க்கைத் துணையை தெரிவு செய்யும் உரிமையைப் பெற்றிருந்தனர். இருப்பினும், கைம்பெண்களின் நிலை மிகவும் பரிதாபமாக இருந்தது. சமுதாயத்தின் மேல்மட்டத்தில் 'சதி' என்ற உடன்கட்டையேறும் வழக்கம் பின்பற்றப்பட்டது. அரசர்களும், உயர்குடியினரும் நாட்டிய மகளிரை ஆதரித்துப் போற்றினர்.

நுண்கலைகள்

கவிதை, இசை, நாட்டியம் போன்ற நுண்கலைகள் சங்ககாலத்தில் புகழ்பெற்று விளங்கின. அரசர்கள், குறுநில மன்னர்கள், உயர்குடியினர் போன்றோர் புலவர்களுக்கு தாராளமாக பரிசுப் பொருட்களை வழங்கி ஆதரித்தனர். பாணர், விறலியர் போன்ற நாடோடிப் பாடகர்கள் அரசவைகளை மொய்த்த வண்ணம் இருந்தனர். நாட்டுப்புற பாடல்களிலும் நாட்டுப்புற நடனங்களிலும் தேர்ச்சி பெற்ற கலைஞர்கள் சங்க காலத்தில் வாழ்ந்தனர். இசையும் நடனமும் நன்கு வளர்ச்சி பெற்றிருந்தது. சங்க இலங்கியங்களில் பல்வேறு வகையிலான யாழ்களும் முரசுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. கணிகையர் நடனத்தில் சிறந்து விளங்கினர். 'கூத்து' மக்களின் சிறந்த பொழுதுபோக்காக திகழ்ந்தது.

சங்க காலப் பொருளாதாரம்

வேளாண்மை முக்கியத் தொழில் ஆகும். நெல் முக்கியப் பயிர் கேழ்வரகு, கரும்பு, பருத்தி, மிளகு, இஞ்சி, மஞ்சள், இலவங்கம், பல்வேறு பழவகைகள் போன்றவையும் பயிரிடப்பட்டன. பலா, மிளகு இரண்டுக்கும் சேர நாடு புகழ் பெற்றதாகும். சோழ நாட்டிலும், பாண்டிய நாட்டிலும் நெல் முக்கிய பயிராகும்.

சங்க காலத்தில் கைத்தொழில்கள் ஏற்றம் பெற்றிருந்தன. நெசவு, உலோகத் தொழில், தச்சுவேலை, கப்பல் கட்டுதல், மணிகள், விலையுயர்ந்த கற்கள், தந்தம் ஆகியவற்றை பயன்படுத்தி ஆபரணங்கள் செய்தல் போன்றவை ஒருசில கைத்தொழில்களாகும். இத்தகைய பொருட்களுக்கு நல்ல தேவைகள் இருந்தன. ஏனென்றால் சங்ககாலத்தில் உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு வாணிகம் சுறுசுறுப்பாக நடைபெற்றது. பருத்தி மற்றும் பட்டு இழைகளைக் கொண்டு நெய்யப்பட்ட துணிகள் உயர்ந்த தரமுடையதாக இருந்தன. நீராவியைவிடவும், பாம்பின் தோலைவிடவும் மெலிதான துணிகள் நெய்யப்பட்டடதாக சங்க இலக்கியப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. உறையூரில் உற்பத்தி செய்யப்பட்ட பருத்தியாடைகளுக்கு மேலை நாடுகளில் பெரும் தேவை காணப்பட்டடது.

உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு வர்த்தகம் சங்க கால்தில் நன்கு சீரமைக்கப்பட்டிருந்தது. சங்க இலக்கியங்கள், கிரேக்க – ரோமானிய நூல்கள் மற்றும் தொல்லியல் சான்றுகள் இது குறித்த ஏராளமான தகவல்களைத் தருகின்றன. வண்டிகளிலும் விலங்குகள் மேல் ஏற்றப்பட்ட பொதிகளின் மூலமாகவும், வணிகர்கள் பொருட்களை கொண்டுசென்று விற்பனை செய்தனர். உள்நாட்டு வாணிகம் பெரும்பாலும் பண்டமாற்று முறையின் அடிப்படையிலேயே நடைபெற்றது.

தென்னிந்தியாவிற்கும், கிரேக்க அரசுகளுக்கும் இடையே அயல்நாட்டு வர்த்தகம் நடைபெற்றது. ரோமானியப் பேரரசு தோன்றிய பிறகு ரோமாபுரியுடனான வாணிபம் சிறப்படைந்தது. துறைமுகப்பட்டினமான புகார் அயல்நாட்டு வணிகர்களின் வர்த்தகமையமாகத் திகழ்நததது. விலை மதிப்பு மிக்க பொருட்களை ஏற்றிவந்த பெரிய கப்பல்கள் இந்த துறைமுகத்திற்கு வந்து சென்றன. தொண்டி, முசிறி, கொற்கை, அரிக்கமேடு, மரக்காணம் போன்றவை பிற சுறுசுறுப்பான துறைமுகங்களாகும். அயல்நாட்டு வாணிபம் குறித்து 'பெரிப்புளூஸ்' நூலின் ஆசிரியர் பல அரிய தகவல்களைக் கூறியுள்ளார். அகஸ்டஸ், டைபீரியஸ், நீரோ போன்ற ரோமானியப் பேரரசர்கள் வெளியிட்ட தங்கம் மற்றும் வெள்ளியாலான நாணயங்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஏராளமாகக் கிடைக்கின்றன. சங்க காலத்தில் நடைபெற்ற வாணிகத்தின் அளவு மற்றும் தமிழ்நாட்டில் ரோமானிய வணிகர்களின் செயல்பாடுகள் ஆகியவற்றை இவை வெளிப்படுத்துவதாக உள்ளன. பருத்தியாடைகள், மிளகு, இஞ்சி, ஏலக்காய், இலவங்கம், மஞ்சள் போன்ற நறுமணப் பொருட்கள், தந்தவேலைப்பாடு நிறைந்த பொருட்கள், முத்துக்கள் மற்றும் விலையுயர்ந்த கற்கள் போன்றவை சங்க காலத்தில் ஏற்றுமதி செய்யப்பட்டட பொருட்களாகும். தங்கம், குதிரைகள், இனிப்பான மதுவகைகள் ஆகியன முக்கிய இறக்குமதிகளாகும்.

சங்க காலத்தின் முடிவு

கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் சங்ககாலம் மெல்ல முடிவுக்கு வரத் தொடங்கியது. சுமார் இரண்டரை நூற்றாண்டுகள் தமிழகத்தை களப்பிரர்கள் ஆக்கிரமித்துக் கொண்டனர். களப்பிரர்கள் ஆட்சிகுறித்து நமக்கு சொற்ப தகவல்களே கிடைக்கின்றன. இக்காலத்தில் புத்த சமயமும், சமண சமயமும் முக்கியத்துவம் பெற்றிருந்தன. பின்னர் களப்பிரர்களை விரட்டிவிட்டு வடக்கு தமிழ்நாட்டில் பல்லவர்களும், தெற்குத் தமிழ்நாட்டில் பாண்டியர்களும் தத்தம் ஆட்சியை நிறுவினர்.

முற்கால வரலாறு

பண்டைய தமிழ்நாட்டில், வேந்தர் என அழைக்கப்பட்ட அரசர்களின் தலைமையின் கீழ் இருந்த மூன்று முடியாட்சி மாநிலங்களும் வேள் அல்லது வேளிர் என்ற பட்டப் பெயர் கொண்டு அழைக்கப்பட்ட பல பழங்குடி இனத் தலைவர்களின் தலைமையில் இருந்த பழங்குடி இனக் குழுக்களும் இருந்தன.இவர்களுக்கும் அடுத்ததாக, உள்ளூர் பகுதிகளின் இனக் குழுக்களின் தலைவர்கள் இருந்தனர், இவர்கள் கிழார் அல்லது மன்னர் என அழைக்கப்பட்டனர்.கி.மு மூன்றாம் நூற்றாண்டின் போது தக்காணப் பீடபூமி மௌரியப் பேரரசின் ஒரு அங்கமாக இருந்தது. கி.மு முதல் நூற்றாண்டின் இடைப்பகுதி முதல் கி.பி இரண்டாம் நூற்றாண்டு வரை இந்த பகுதி சாதவாகனர் வம்சத்தினரால் ஆட்சி செய்யப்பட்டது. வடக்கு பகுதியைச் சேர்ந்த இந்தப் பேரரசுகளின் கட்டுப்பாட்டிலிருந்து தமிழ் பகுதி தன்னிச்சையாக இருந்தது. தமிழ் அரசர்கள் மற்றும் குழுத்தலைவர்கள் எப்போதும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். பெரும்பாலும் அவர்கள் சண்டையிடுவது இடங்களுக்காகவே. அரசனின் நீதிமன்றங்கள் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கு பதிலாக சமூக நிகழ்வுகளுக்கான மையங்களாக இருந்தன. அவை வளங்களைப் பகிர்ந்தளிக்கும் மையங்களாக இருந்தன. ஆட்சியாளர்கள் படிப்படியாக வட இந்தியார்களின் ஆதிக்கம் மற்றும் வேதக் கொள்கைகளைப் பின்பற்றத் தொடங்கினர். இவைகள் ஆட்சியாளரின் நிலையை மேம்படுத்த பலி கொடுக்கும் பழக்கத்தையும் ஊக்குவித்தன.

அசோகப் பேரரசின் கீழ் இல்லாத பேரரசுகள் மற்றும் இந்தப் பேரரசுடன் நட்பு நிலையில் இருந்த பேரரசுகள் பற்றிய விவரங்கள் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுடன் சேர்ந்து சோழர்கள், பாண்டியர்கள் மற்றும் சேரர்களின் வம்சங்கள் (கி.மு 273-232) அசோகத் தூண்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.ஐநூறு ஆண்டுகளுக்கும் மேலாக இருந்த தமிழ் பேரரசுகளின் கூட்டமைப்பின் கதிகும்பா கல்வெட்டில், சுமார் கி.மு 150 ஆம் ஆண்டு கலிங்கப் பேரரசை ஆட்சி செய்த அரசன் கார்வேலா (முாயசயஎநடய) பற்றிய தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

முற்கால சோழர்களில் கரிகாலச் சோழன் மிகப் பிரபலமாக இருந்தார். சங்க இலக்கியங்களின் பல்வேறு செய்யுள்களில் கரிகாலச் சோழன் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.பின்னாளில் எழுதப்பட்ட சிலப்பதிகாரம் நூலில் வரும் பல்வேறு கதைகளிலும் கரிகாலன் பற்றிய செய்திகள் முக்கிய பொருளாக இருந்தது. மேலும் 11 மற்றும் 12 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இலக்கிய நூல்கள் மற்றும் கல்வெட்டுகளிலும் கரிகாலன் பற்றிய தகவல்கள் உள்ளன. இமாலயம் வரையிலான இந்தியா முழுவதையும் வென்றவன் எனவும் நிலமானியங்களைக் கொண்டு காவேரி ஆற்றின் வெள்ளத்தை தடுப்பதற்காக கரைகளைக் கட்டியவன் எனவும் இந்த நூல்கள் விளக்குகின்றன. சங்க இலக்கியங்களில் இந்த தகவல்கள் இல்லை என்பதால் இந்த புராணம் பற்றி வெளிப்படையாக தெரிவதில்லை. சோழர்களில் மற்றொரு பிரபலமான மன்னன் கோச்செங்கண்ணன் ஆவான். சங்க கால இலக்கியப் பாடல்கள் பலவற்றில் அவனைப் பற்றி புகழ்ந்து பாடப்பட்டுள்ளது. இடைக்காலத்தின் போது சைவத் ஞானியாகவும் கருதப்பட்டார்.

இந்திய தீபகற்பத்தின் தென்கோடிப் பகுதியான கொற்கையிலிருந்து முதலில் ஆட்சி செய்ய தொடங்கிய பாண்டியர்கள் பின்னாளில் மதுரை நகருக்கு மாறினர். சங்க இலக்கியத்திலும் பாண்டியர்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இதே காலத்தில் இருந்த கிரேக்க மற்றும் ரோமானிய ஆவணங்களிலும் பாண்டியர்கள் பற்றி உள்ளது. மெகஸ்தனிஸ் (ஆநபயளவாநநெள), இந்திகா (ஐனெமைய) என்ற தனது நூலில் பாண்டியப் பேரரசு பற்றி குறிப்பிட்டுள்ளார். மதுரையின் தற்போதைய மாவட்டங்கள், திருநெல்வேலி மற்றும் தெற்கு கேரளாவின் சில பகுதிகளை பாண்டியர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். பாண்டியர்கள் கிரேக்கம் மற்றும் ரோம் ஆகிய நாடுகளுடன் வணிகத் தொடர்பையும் கொண்டிருந்தனர்.

பாண்டியர்கள் தமிழகத்தின் மற்ற பேரரசுகளுடன் இணைந்து ஈழத்தின் தமிழ் வணிகர்களுடன் வியாபார மற்றும் திருமணத் தொடர்பையும் கொண்டிருந்தனர். சங்க இலக்கியங்களின் பல்வேறு பாடல்களில் பாண்டிய மன்னர்கள் பலர் பற்றி குறிப்புகள் காணப்படுகின்றன. இவர்களில் “தலையாலங்கானம் வென்ற“ நெடுஞ்செழியன் மற்றும் தியாகச் செயல்களுக்கான சிறப்பான ஒருவராக குறிப்பிடப்படும் ஆரான் முதுகுடுமி பெருவழுதி என்ற மற்றொரு நெடுஞ்செழியன் ஆகியோர் சிறப்பாக குறிப்பிடப்பட்டுள்ளனர். அகநானூறு மற்றும் புறநானூறு போன்ற தமிழ்நூல்களின் தொகுப்புகளில் உள்ள சிறிய பாடல்கள், மதுரைக் காஞ்சி மற்றும் நெடுநல்வாடை போன்ற இரண்டு முக்கிய நூல்களிலும் (பத்துப்பாட்டு தொகுப்புகளில் உள்ளது) சங்க காலத்தில் பாண்டிய பேரரசில் மேற்கொள்ளப்பட்ட சமூக மற்றும் வணிக ரீதியான செயல்கள் பற்றிய செய்திகள் உள்ளன. மூன்றாம் நூற்றாண்டின் முடிவில் களப்பிரர்களின் ஊடுருவல் காரணமாக முற்க

தென்னிந்தியாவின் மலபார் கடற்கரை அல்லது அதன் மேற்கு பகுதியுடன் இணைந்த, தற்போதைய கேரள மாநிலம் ஆகியவை ஒன்றிணைந்த பகுதியாக சேரர்களின் பேரரசு இருந்தது. கடல் வழியாக ஆப்பிரிக்காவுடன் வாணிகம் செய்வதற்கு ஏற்ற வகையில் அவர்களின் இருப்பிடம் இருந்தது இந்தியாவின் மாநிலமான கேரளாவில் உள்ள இன்றைய மக்கள், பண்டையக் காலத்தில் தங்கள் பகுதியை ஆட்சி செய்த சேரர்கள் பேசிய மொழியே பேசுகின்றனர். மேலும் தமிழ் நாட்டின் பிற பகுதிகளுடனும் இவர்கள் பரவலான தொடர்பு கொண்டிருந்தனர். இது ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டு வரை மட்டுமே வழக்கத்தில் இருந்தது, இதன் பிறகு தமிழ் மொழியில் சமசுகிரதத்தின் தாக்கம் காரணமாக மொழியின் தனிப்பட்ட அங்கீகாரம் மாறி புதிய மொழி ஒன்று பயன்பாட்டிற்கு வந்தது.

பழமையான இலக்கியங்கள் தமிழில் வளர்வதற்கு இந்த முற்கால பேரரசுகள் ஆதரவளித்தன. சங்க இலக்கியம் என்று அறியப்படும் செவ்வியல் இலக்கியம் கி.மு 200 முதல் 300 ஆம் ஆண்டு வரையிலான காலத்தைச் சேர்ந்ததாக அறியப்படுகிறது.சங்க இலக்கியத்திலுள்ள பாடல்கள் பெரும்பாலும் உணர்வு மற்றும் பொருள் சார்ந்த தலைப்புகளையே கொண்டுள்ளன. இடைக்காலத்தில் இவைகள் வகைப்படுத்தப்பட்டு பல்வேறு தொகை நூல்களாக திரட்டப்பட்டுள்ளன. செழுமையான நிலம் மற்றும் பல்வேறு தொழில்

சார்ந்த மக்கள் குழுக்கள் பற்றியே இந்த சங்கப் பாடல்கள் சித்தரிக்கின்றன. இந்த பகுதிகளை ஆட்சி செய்வது பரம்பரை குடியாட்சி முறையில் இருந்தது. எனினும் இந்த பகுதிகளின் செயல்பாடுகள் மற்றும் ஆட்சி செய்பவரின் அதிகாரம் ஆகியவை முன்பே இயற்றப்பட்ட ஒழுங்குமுறைகளை (தர்மம்) பின்பற்றியே இருந்தது.மக்கள் தங்களின் அரசரிடம் மிகவும் விசுவாசமாக இருந்தனர். உலகம் சுற்றும் புலவர்களும் இசைக்கலைஞர்களும் நடனக் கலைஞர்களும் தாராள மனமுடைய அரசனின் அவைகளை அலங்கரித்தனர். இசை மற்றும் நடனக் கலைகள் மேம்பட்டு பிரபலமாக இருந்தன. சங்ககாலப் பாடல்களில் பல்வேறு வகையான இசைக் கருவிகள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தன. தெற்கு பகுதி மற்றும் வடக்கு பகுதி நடனங்களை ஒருங்கிணைத்து புதிய வகை நடனம் ஆடுவது இந்த காலத்தில் தான் தொடங்கியது. இந்த வகை நடனங்கள் இதிகாசமான சிலப்பதிகாரத்தில் முழுமையாக வெளிப்பட்டு இருந்தது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகம் சிறப்பான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டு இயக்கத்தில் இருந்தது. தொல்லியல் துறை ஆய்வுகள் மற்றும் இலக்கியங்களில் யுவனர்களுடனான (கிரேக்கர்) வெளிநாட்டு வியாபாரம் செழுமையாக இருந்ததைக் கூறுகின்றன. தென்னிந்தாவின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் இருந்த முசிறி மற்றும் கிழக்குக் கடற்கரைப் பகுதியின் துறைமுக நகரம் பூம்புகார் ஆகிய இரு இடங்களில் ஏராளமான கப்பல்கள் நிறுத்தப்பட்டு வெளிநாட்டுப் பொருள்களை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்து வியாபார மையங்களாக விளங்கின. இந்த வர்த்தகம் இரண்டாம் நூற்றாண்டிற்கு பிறகு வீழ்ச்சியடையத் தொடங்கியது. மேலும் ரோமானிய அரசுக்கும் பண்டைய தமிழ் நாட்டிற்கும் இருந்த நேரடி உறவு அரபியர்கள் மற்றும் கிழக்கு ஆப்ரிக்காவை சேர்ந்த ஆக்சுமைட்களின் நேரடி வணிகத்தால் சிதைவுறத் தொடங்கியது. உள்நாட்டு வணிகம் சிறப்பாக இருந்தது, பொருள்கள் வாங்குவது மற்றும் விற்பது பண்டகமாற்று முறைப்படி நடந்தது. பெரும்பாலான மக்களுக்கும் அதிக நிலங்களைக் கொண்டிருந்த பரம்பரை விவசாயிகளான வெள்ளாளர்களுக்கும் விவசாயம் முக்கிய தொழிலாக இருந்தது.

தொகை நூல்கள்

பழமையும் இலக்கிய வளமும் கொண்ட மொழிகளை உயர்தனிச் செம்மொழிகள் என்பர். கிரேக்கம், இலத்தீன், வடமொழி, எபிரேயம், சீனம் ஆகியவற்றோடு ஒத்த பழைமையுடைய தமிழும் இவ்வரிசையில் இடம் பெறுகிறது. மேற்சொன்ன பலமொழிகளிலும் செய்யுட்கள் தொகுக்கப்பட்டுத் தொகை நூல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே, தமிழில் அவை தோன்றியதில் வியப்பில்லை.

சங்க காலத்தில் எண்ணற்ற தனிச் செய்யுட்கள் இயற்றப்பட்டிருக்க வேண்டும். அவற்றுள் பல கால வெள்ளத்தில் அழிந்தன. எஞ்சியவற்றையாவது காப்பாற்ற வேண்டுமென்ற உணர்ச்சி ஏற்பட்டமையால் கிடைத்தனவே இன்றுள்ள தொகைகள். இம்முயற்சியில் மன்னர்களும் அறிஞர்களும் ஈடுபட்டனர். அவர்களின் பெயர்கள் சில அறியப்படுகின்றன.

கிடைத்தவற்றுள் பெரும்பான்மையானவை அகவற்பாக்கள். கலி, பரிபாடல் என்னும் பாவகைகளில் இயற்றப்பட்ட செய்யுட்கள் குறைவாகவே இருந்தன. இவற்றுள் மிகப் பெரும்பான்மையானவை அகப்பாடல்கள். புறப்பாடல்கள் குறைவாகவே இருந்தன. இவற்றைத் தொகைப்படுத்தும் பொழுது அகத்தொகை, புறத்தொகை, இரண்டும் கலந்த தொகை என்ற அடிப்படையிடப்பட்டதாகத் தெரிகிறது. அகவலால் செய்த அகப்பாடல்கள் மிகுதியானமையால் செய்யுட்களின் அடிவரையினை அடிப்படையாகக் கொண்டு தொகுதிகள் உருவாக்கப்பட்டன. 4-8, 9-12, 13-31 என்று அடியளவு அமைந்தவை மூன்று தொகுதிகளாயின. ஐவர் பாடிய தனித்தனி நூறு செய்யுட்கள் கொண்ட 500 அகவற்பாக்கள் ஒரு தொகையாயிற்று. கலிப்பாவால் ஆன பாடல்கள் ஒரு தொகுதியாக உருவாக்கப்பட்டது. பரிபாட்டால் ஆனது ஒரு தொகுதியாயிற்று.

புறப்பாடல்களுள் பல குடியினரையும் பல பொதுவான கருத்துக்களையும் பற்றி அகவற்பாக்கள் ஒரு தொகுதியாக்கப்பட்டது. சேரர் பற்றி மட்டுமே கூறும் 100 பாடல்களை இன்னொரு தொகுதியாக்கினர்.

103 அடி முதல் 782 அடிவரை அமைந்த பத்து நீண்ட பாடல்கள் பத்துப்பாட்டு என்று ஒரே தொகுதியாக அமைந்தது. இவ்வாறு தொகுக்கப்பட்டவை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்று வழங்கலாயின.

எட்டுத்தொகையுள் அடங்குவன எவை என்று கூறும் வெண்பா வருமாறு:

“நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு

ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்

கற்றறிந்தார் ஏத்தும் கலியொடு அகம்புறம்என்று

இத்திறத்த எட்டுத்தொகை”.

இவ்வாறே பத்துப்பாட்டுள் அடங்குவன பற்றியும் ஒரு வெண்பா கூறுகிறது. அது பின்வருமாறு:

“முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை

பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய

கோலநெடுநல் வாடைகோல் குறிஞ்சிப் பட்டினப்

பாலை கடாத்தொடும் பத்து”.

சங்க காலம் என்பது கிமு 300 முதல் கிபி 300 வரையிலான காலகட்டமாகும். மதுரை நகரை மையமாகக்கொண்டு தமிழ்ப்புலவர்கள் சங்கம் அமைத்து தமிழ் மொழியை வளர்த்ததால் இப்பெயர் பெற்றது. இக்காலகட்டத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தமிழ்நாட்டை ஆட்சி செய்தனர். இந்த காலகட்டத்தின் இலக்கியங்கள் எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு ஆகிய தொகுப்புகளாகப் பிரிக்கப்படுகின்றன.

சங்க காலத்தின் முக்கிய அம்சங்கள்:

அரசு: சேர, சோழ, பாண்டிய மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்டது.

இலக்கியங்கள்:

எட்டுத்தொகை: நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு (அகம்), புறநானூறு, பதிற்றுப்பத்து (புறம்), மற்றும் பரிபாடல் (அகம், புறம் கலந்து) போன்ற நூல்கள் இதில் அடங்கும்.

பத்துப்பாட்டு: இதுவும் சங்க காலத்தின் முக்கிய இலக்கியத் தொகுப்பு ஆகும்.

இலக்கிய வகைகள்: சங்க இலக்கியங்கள் இரண்டு முக்கிய வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன.

அகம்: காதல், அன்பு போன்ற தனிப்பட்ட உணர்வுகளைப் பற்றியது.

புறம்: போர், வீரம், ஆட்சி, ஒழுக்கம் போன்ற பொதுவான விஷயங்களைப் பற்றியது.

அழிந்துபோன சங்கங்கள்: மூன்று தமிழ் சங்கங்கள் இருந்ததாகவும், அவற்றில் கடைசி சங்கம் இருந்தபோதுதான் இந்த இலக்கியங்கள் இயற்றப்பட்டதாகவும் நம்பப்படுகிறது.

ஆதாரங்கள்: சங்க இலக்கியங்கள், தொல்லியல், கல்வெட்டுகள் மற்றும் நாணயங்கள் மூலம் இந்த காலத்தின் வரலாற்றைப் பற்றி அறியலாம்

எட்டுத்தொகை நூல்கள்

எட்டுத்தொகை நூல்கள் (1) அகம் சார்ந்தவை (2) புறம் சார்ந்தவை (3) இரண்டும் சார்ந்தவை என்று மூன்று வகையாக அமையும். அவற்றுள்,

அகம் சார்ந்தன

1. நற்றிணை
2. குறுந்தொகை
3. அகநானூறு
4. ஐங்குறுநூறு
5. கலித்தொகை

என்ற ஐந்துமாகும்.

புறம் சார்ந்தன

1. புறநானூறு
2. பதிற்றுப்பத்து

என்ற இரண்டுமாகும்.

அகமும் புறமும் கலந்தமைந்த தொகுதி

பரிபாடல் மட்டுமே.

இனி ஒவ்வொரு நூலின் அமைப்பும் சிறப்பும் பற்றிக் காண்போம்.

நற்றிணை

அகநானூறு போல் மிக நீண்டனவாகவும் குறுந்தொகை போல் மிகச் சிறியனவாகவும் அமையாமல் இரண்டிற்கும் இடைப்பட்ட அளவினதான 400 அகவல்கள் நற்றிணை என்ற தொகுப்பில் உள்ளன. இதன் அடியளவு 9 முதல் 12 அடிகள். இதில் 110, 379 ஆம் எண்ணுள்ள பாடல்கள் ஆகிய இரண்டும் 13 அடிகள் கொண்டவை. இந்த நூலுக்கு அமைந்த திருமால் வணக்கப் பாடல் பாரதம் பாடிய பெருந்தேவனார் இயற்றியது.

நற்றிணையில் உள்ள பாடல்களை இயற்றிய புலவர்கள் நூற்று எழுபத்தைவர். 56 பாடல்களை இயற்றியோர் பெயர் தெரியவில்லை. இதனைத் தொகுத்த புலவர் பெயரும் தெரியவில்லை. தொகுத்தவன் பாண்டியன் பன்னாடு தந்த மாறன் வழுதி.

உண்மைக்காதல் பிறவிதொறும் தொடரும் என்பதனை,

சாதல் அஞ்சேன், அஞ்சுவல் சாவில்

பிறப்புப் பிறிதாகுவ தாயின்

மறக்குவென் கொல்என் காதலன் எனவே (397)

என்னும் அடிகள் காட்டுகின்றன.

செல்வக் குடும்பத்தில் பிறந்தவள் தலைவி. அவளை மணந்தவன் குடி வறுமையுற்றது. அந்நிலையிலும் தலைவி தன் செல்வத் தந்தையின் உதவியை எதிர்பாராமல், எளிய உணவை வேளை தவறி உண்டு வாழ்கிறாள்.

கொண்டகொழுநன் குடிவறன் உற்றெனக்

கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்

ஒழுகுநீர் நுணங்கு அறல்போலப்

பொழுது மறுத்து உண்ணும் சிறு மதுகையளே (110)

என்ற பகுதி இதனைக் காட்டுகிறது.

ஒருவனுக்கு உண்மையான செல்வம் என்பது, தன்னை நம்பியோரின் துன்பம் கண்டு மனம் நெகிழ்ந்து அவர்களின் துயர்துடைக்கும் கருணை உள்ளமே என்கின்றார் இன்னொரு புலவர்.

சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்

புன்கண் அஞ்சும் பண்பின்

மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே (210)

பெரியோர் நன்கு ஆராய்ந்து ஒருவரோடு நட்புக் கொள்வர் என்றும், மாறாக நட்டபின்னர் அதன் பொருத்தத்தை ஆராயார் என்றும் ஒருவர் கூறுகின்றார். (32)

முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்

நஞ்சும் உண்பர் நனிநாகரிகர் (355)

என்ற நற்றிணைப் பகுதி "பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்" என்ற திருக்குறளை நினைவூட்டக் காணலாம்.

ஏனைய சங்க நூல்கள் போன்றே இந்நூலும் தமிழர் பண்பாட்டின் விளக்கமாகவும், உவமைகள் நிரம்பிய உயர்ந்த இலக்கியச் செல்வமாகவும் விளங்குகின்றது.

குறுந்தொகை

குறுகிய அடிகளால் ஆன 400 ஆசிரியப்பாக்களால் ஆன நூல் குறுந்தொகை ஆயிற்று. இதில் நாலடி முதல் எட்டடி வரை அமைந்த பாடல்கள் இடம் பெற்றன. இதனை இயற்றியோர் 205 புலவர்கள். இதற்குக் கடவுள் வாழ்த்தொன்று உண்டு. இதன் ஆசிரியர் பாரதம் பாடிய பெருந்தேவனார். இது முருகவேள் வணக்கமாக அமைந்துள்ளது. இதனைத் தொகுத்தவர் பூரிக்கோ என்பவர். தொகுப்பித்தார் பெயர் தெரியவவில்லை. இதற்குப் பேராசிரியரும், நச்சினார்க் கினியரும் எழுதிய உரைகள் கிடைக்கவில்லை. இதன் 235 பாடல்கள் பல்வேறு உரையாசிரியர்களால் மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள்ளன.

இயற்பெயரான் அன்றிச் சிறப்புப் பெயரால் அறியப்பட்ட புலவர் பலர் இதில் இடம் பெறுவர். அணிலாடு முன்றிலார், குப்பைக்கோழியார், விட்ட குதிரையார் என்பவை அவற்றுள் சில. தாம் பாடிய பாடல்களில் இடம் பெற்ற அழகிய தொடரே இப்பெயர்களுக்கு அடிப்படையாக அமைந்தது.

காதல் வாழ்வின் பல்வேறு சிறப்புகளும் இந்நூலில் சுவைபடக் கூறப்பட்டுள்ளன.

இம்மை மாறி மறுமை ஆயினும்

நீயாகியர் என் கணவனை

யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே (49)

(இம்மை ஸ்ரீ இப்பிறவி ˙ மறுமை ஸ்ரீ அடுத்து வரும் பிறவி நெஞ்சுநேர்பவள் ஸ்ரீ மனம் கவர்ந்தவள்)

என்ற பகுதி, காதலின் அமரத் தன்மைக்குச் சான்றாகும்.

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று

நீரினும் ஆரளவின்றே (3)

என்ற பகுதியால் காதலின் ஆழமும், விரிவும், உயர்ச்சியும் உணர்த்தப்படுகின்றன.

ஒரு பெண், ஊரார் பேசும் பழிச் சொல்லால் தன் உள்ளம் நைவதற்கு உவமையாக, யானையால் மிதிக்கப்பட்ட நன்கு முதிர்ந்த அத்திப் பழத்தைக் குறிப்பிடுகிறாள். (24)

மற்றொரு தலைவி தனக்கும் ஆகாது, தன் காதலனுக்கும் பயன்படாது வீணாகும் தன் பெண்மை நலத்துக்கு, கன்றும் உண்ணாமல், கலத்திலும் (பாத்திரத்திலும்) கறக்கப்படாமல், மண்ணில் வீழ்ந்து பாழாகும் நல்ல ஆவின் பாலை உவமை கூறுகின்றாள் (27). தாய்வழியிலும் தந்தை வழியிலும் உறவினராகாத ஓர் ஆணும் பெண்ணும் அன்பினால் ஒன்றுபடுதலுக்குச் செம்மண் நிலத்திலே பெய்த மழையை உவமை கூறினார் ஒரு புலவர். அவரே செம்புலப்பெயல் நீரார். அவரது இறவா வரிகள்:

செம்புலப் பெயல்நீர் போல

அன்புடை நெஞ்சம் தாம்கலந்தனவே (40)

(புலம் ஸ்ரீ நிலம்)

தன் காதலனாகிய கடுவனை இழந்த பெண் குரங்கு, தன் இளங்குட்டியைத் தன் இனத்திடம் விட்டு, மலையிலிருந்து வீழ்ந்து உயிர் துறத்தலை ஒரு புலவர் காட்டுகின்றார்.

ஆடவனுக்குக் கடமையே உயிராக, வீட்டிலிருந்து இல்லறம் செய்யும் பெண்களுக்குத் தம் ஆடவரே உயிர் என்பதை ஒரு செய்யுள்,

வினையே ஆடவர்க்கு உயிரே வாள்நுதல்

மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிர் (135)

என்று கூறுகிறது.

ஐங்குறுநூறு

இந்த நூலில் உள்ள பாடல்கள் குறைந்த அளவாக மூன்று அடிகளும் உயர்ந்த அளவாக ஆறு அடிகளும் கொண்டவை. இந்நூல் 500 குறும்பாடல்களால் ஆனது. ஒவ்வொரு திணைக்கும் நூறு பாடல்கள் உள்ளன. ஒவ்வொன்றையும் ஒவ்வொருவர் பாடியுள்ளனர். ஒவ்வொரு நூறும் பத்துப் பத்துக்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பத்தும் ஒரு பெயர் பெறுவது சிறப்பு. கருப்பொருள், உரிப்பொருள், பேசும் பாத்திரம், கேட்கும் பாத்திரம் முதலியவற்றுள் ஒன்று அப்பெயர்க்கு அடிப்படையாக அமையும்.

இதற்கும் பாரதம் பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்து இயற்றியுள்ளார். இதனைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்கிழார். தொகுப்பித்தவர் யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்பவர். இதன் 129, 130 ஆம் செய்யுட்கள் கிட்டவில்லை.

இதில் மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்ற முறையில் திணைகள் கோக்கப்பட்டுள்ளன. இதற்குச் சுருக்கமான பழைய உரை கிடைத்துள்ளது.

இதனை இயற்றியோர் பற்றிய விவரம் வருமாறு:

மருதம் - ஓரம்போகியார்

நெய்தல் - அம்மூவனார்

குறிஞ்சி - கபிலர்

பாலை - ஓதலாந்தையார்

முல்லை – பேயனார்

இதில் பல புதுமைகள் உண்டு. இதில் தொண்டிப்பத்து என்னும் பகுதி அந்தாதியாகவுள்ளது. மேலும் இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம் என்ற கிளவிகளும் தொடர்ச்சியாக உள்ளன. இதில் உள்ளுறையும் இறைச்சியும் மிகுதி. அவ்வாறே புதிய கிளவிகளும் பலவாக அமைந்துள்ளன.

ஒரு குறிப்பிட்ட அரசனை வாழ்த்திப் பாடும் போக்கை இந்நூலில் மட்டுமே காண முடியும். 'வாழி ஆதன் வாழி அவினி!' என்ற அடி பாடல்தோறும் இடம் பெறலை வேட்கைப் பத்தில் காண்க.

நாட்டில் பசியும் பிணியும், வறுமையும், அறமற்ற செயல்களும் இல்லாது ஒழியவும், அன்பும் அறமும், ஒழுக்கமும், செல்வ வளமும் பெருகவேண்டும் என வேண்டும் பெண்களை இந்நூலிலன்றி வேறெதிலும் காண முடியாது.

தன் கணவன் ஊரில், பாலை நிலத்தில் உள்ள கிணற்றடியில் கிடக்கும் அழுகல் நீர், தன் தாய் வீட்டில் தான் உண்ட தேன்கலந்த பாலை விட இனிமையாகக் கருதும் பெண்ணைக் கபிலர் அறிமுகப்படுத்துகின்றார். (203)

அகநானூறு

இது 13 அடிச் சிற்றெல்லையும் 31 அடிப்பேரெல்லையும் உடைய 400 பாடல்களைக் கொண்டது. ஆசிரியப்பா யாப்புடையது. பாரதம் பாடிய பெருந்தேவனார் இதற்கு வாழ்த்துப் பாடியுள்ளார். அது சிவ வணக்கப் பாடலாகும். இதற்கு நெடுந்தொகை என்ற பெயரும் உண்டு. இது களிற்று யானை நிரை (1-120) மணிமிடை பவளம் (121-300) நித்திலக்கோவை (301 - 400) என்று மூன்று தொகுதிகளாக உள்ளது. தொகுப்பு முறையில் இது ஏனையவற்றை விட வேறுபட்டுள்ளது. பாட்டின் எண் கொண்டு அதன் திணையைச் சொல்லும் வகையில் இவை கோக்கப்பட்டுள்ளன. ஒற்றைப்படை எண் கொண்ட 200 செய்யுட்கள் பாலைக்கு உரியன. 2, 8 என்ற எண்களில் முடிவன குறிஞ்சிக்குரியன. 4 என்ற எண்ணில் முடிவன முல்லைக்கும், 6 என்ற எண்ணில் முடிவன மருதத்திற்கும், 10, 20 என்றவாறு முடிவன நெய்தலுக்கும் உரியன. மதுரை உப்பூரிகுடி கிழாரைக் கொண்டு இதனைத் தொகுப்பித்தவன் உக்கிரப்பெருவழுதி என்பர். இதில் 175 புலவர்களின் செய்யுட்கள் உள்ளன. மூன்று பாடல்கட்கு ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

அரசியல், சமூக வரலாறுகள்

அகநானூறு பண்டைத் தமிழரின் அரசியல் வரலாற்றையும், சமூக வரலாற்றையும் அறியப் பெருந்துணை செய்யவல்லது. மூவேந்தர் பலர் பற்றியும் குறுநில மன்னர் பலர் பற்றியும் இது பதிவு செய்துள்ளது. வெண்ணிப் போர், ஆலங்கானத்துப் போர் முதலான பெரும்போர்கள் உவமை வாயிலாக விளக்கப்பட்டுள்ளன. யவனரின் கப்பல்கள் முசிறித் துறை முகத்திற்குப் பொன்னொடு வந்து, மிளகொடு திரும்பியதாக ஒரு செய்யுள் குறிப்பிட்டுள்ளது (149). ஒரு கன்னிப் பெண்ணின் மனத்தைக் கவர்ந்து, 'அவளைத் தெரியாது' என்று வாதிட்ட அறம் அற்ற ஒருவனுக்குக் கள்ளூர் அவையினர் தண்டனையளித்த செய்தியும் (256) அகநானூற்றில் காணப்படுகிறது.

வெண்ணிப்போரில் புண்பட்ட பெருஞ்சேரலாதன் வடக்கிருந்து மாண்ட செய்தி கேட்டுச் சான்றோர் பலர் மாண்ட செய்தியும் (58) பேசப்படுகின்றது. குடவோலை முறையில் அவை (கிராம சபை) உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டதை 77 ஆம் பாட்டால் அறியலாம். மக்களின் அன்றாட வாழ்வு பற்றியும், பழக்க வழக்கங்கள் பற்றியும் அரிய செய்திகள் இதில் உள்ளன. சிலவற்றை மட்டும் இங்குக் குறிப்போம்.

மக்கட்பேற்றின் சிறப்பினை,

இம்மை உலகத்து இசையொடும் விளங்கி

மறுமை உலகமும் மறுவின்று எய்துப

செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்

சிறுவர்ப் பயந்த செம்மலோர் (66)

(இம்மை ஸ்ரீ இப்பிறவி இசை ஸ்ரீ புகழ் மறுமை உலகம் ஸ்ரீ வான் உலகம் மறு ஸ்ரீ குறை எய்துப ஸ்ரீ அடைவார்கள் செறுநர் ஸ்ரீ பகைவர் செயிர்தீர் ஸ்ரீ குற்றமற்ற பயந்த ஸ்ரீ பெற்ற செம்மலோர் ஸ்ரீ உயர்ந்தோர்)

என்று ஒரு புலவர் குறிக்கின்றார்.

தமிழர் திருமணமுறை பற்றி இந்நூலின் 86, 136 ஆகிய செய்யுட்கள் விரிவாகக் கூறுகின்றன.

இசை

இந்நூலின் 82, 111, 352, 301 ஆகிய பாடல்கள் பண்டைத் தமிழிசையைப் பற்றி அறிய உதவுகின்றன. 352ஆம் செய்யுள் இசை இலக்கணத்தைக் குறிப்பிடுகின்றது.

இதிகாசச் செய்திகள்

சேதுக்கரையில் ஓர் ஆல மரத்தடியில், கடல் கடந்து இலங்கைக்குச் செல்வது பற்றிய ஆலோசனையில் இராமன் ஆழ்ந்திருந்த போது, ஆலமரத்திலிருந்து பறவைகள் ஒலி எழுப்பி இடையூறு செய்தன. அப்போது இராமன் தலைநிமிர்ந்து பார்த்த பார்வையில் அவை ஒலி அடங்கின. தலைவியின் திருமணச் செய்தி அறிந்த அலர்தூற்றுவோர் அடங்கிப் போயினர் என்பதை உணர்த்தத் தோழி இராமனது நிகழ்ச்சியை எடுத்துக் கூறுகிறாள். கம்பர் காப்பியத்தில் கூட இல்லாத இச்செய்தியை அகநானூறு (70) கூறுகிறது. கண்ணபிரான் கோபியர் தழை உடுத்திக் கொள்ளுதற்கு ஏற்ப மரத்தின் கிளையை மிதித்த செய்தி ஒருபாட்டில் காணப்படுகிறது. (59)

கலித்தொகை

கலிப்பா என்னும் பாவகையால் யாக்கப்பட்ட 150 பாடல்கள் கொண்டது இந்நூல். அகப்பொருளைப் பாட ஏற்ற யாப்பாகத் தொல்காப்பியரால் சொல்லப்பட்டவை கலியும் பரிபாடலும் என்பது நினையத்தக்கது.

பிற்காலத்து வெண்பாவொன்று, இதிலுள்ள ஐந்திணைகளையும் பாடிய புலவர்களைக் குறிப்பிடுகின்றது. இதன்படி, பாடியோரும் அவர் பாடிய திணையும் பின்வருமாறு அமையும்.

பாலை - பாலை பாடிய பெருங்கடுங்கோ

குறிஞ்சி - கபிலர்

மருதம் - மருதன் இளநாகனார்

முல்லை - சோழன் நல்லுருத்திரன்

நெய்தல் – நல்லந்துவனார்

நல்லந்துவனார் இந்நூலைத் தொகுத்தவர் ஆவார். நூல் முழுவதனையும் ஒரு புலவரே பாடியிருக்க வேண்டும் என்ற கருத்தும் உண்டு.

காதல் வாழ்வின் நுட்பங்களை மிக அழகாகக் கூறுவது கலித்தொகை. இதன் உவமைகள் அழகு மிக்கன ஓசை இனிமை மிக்கது எண்ணங்கள் மிக உயர்ந்தன.

இருக்கின்ற ஒரே ஆடையைப் பகுத்து உடுத்து வாழும் கொடிய வறுமை நிலையிலும், மனம் ஒன்றி வாழும் வாழ்க்கையே சிறந்த இல்லற வாழ்க்கை என்பதை ஒரு புலவர் பின்வருமாறு பாடுகிறார்.

ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆயினும்

ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை ! (18)

காதலன் துன்பத்தில் பங்கு ஏற்றலைவிடக் காதலிக்குப் பெரிய இன்பம் இல்லை என்கிறாள் ஒரு தலைவி.

அன்பறச் சூழாதே ஆற்றிடை நும்மொடு

துன்பம் துணையாக நாடின் அதுவல்லது

இன்பமும் உண்டோ எமக்கு? (6)

(அன்பற ஸ்ரீ அன்பு நீங்க் சூழாதே ஸ்ரீ கருதாமல் ஆற்றிடை ஸ்ரீவழியில் நாடின் ஸ்ரீ சிந்தித்தால்)

மனத்தில் வருத்தம் உண்டாகும்படி பிரிந்து செல்வதைப் பற்றி எண்ணாமல் உன்னுடன் வந்து வழியில் ஏற்படும் துன்பங்களைப் பகிர்ந்து கொள்வதைவிட வேறு இன்பம் எங்களுக்கு உண்டா? என்பது பொருள்.

கலித்தொகையில் மதுரையும், வையையும் மீண்டும் மீண்டும் புகழப்படுகின்றன. பாண்டியனும் பல பாடல்களில் புகழப்படுகிறான். இதில் இராமாயணக் கதை நிகழ்வுகளும், பாரதக் கதை நிகழ்வுகளும் உவமைகளாக ஆளப்பட்டுள்ளன. ஆயர்கள் ஏறுதழுவிப் பெண்ணை மணத்தல் இந்நூலில் மட்டுமே காணப்படுகிறது. கைக்கிளை, பெருந்திணை ஆகியவற்றைப் பற்றிய குறிப்புகள் இந்நூலில் மட்டுமே காணப்படுகின்றன.

புறநானூறு

புறப்பொருள் பற்றிய 400 அகவற்பாக்களைக் கொண்டது புறநானூறு. இதனைத் தொகுத்தாரும், தொகுப்பித்தாரும் யாவர் எனத் தெரியவில்லை. 267, 268 ஆகிய இரு செய்யுட்களும் அழிந்தன. 266 ஆம் செய்யுட்குப் பின்னர் வரும் செய்யுள்களில் சிதைவுகள் உள்ளன. இதற்கு வணக்கச் செய்யுள் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். அது சிவ வணக்கமாகும். இதற்கு 266 செய்யுட்கள் வரையில் பழைய உரை உண்டு. இதனை இயற்றியோர் 157 பேர் என்பர். பல பாடல்களை இயற்றியோர் பெயர் தெரியவில்லை. (16 செய்யுட்கள்) இதனை நமக்குத் தேடித் தந்தவர் தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாத ஐயராவார்.

தமிழரின் பொற்கால நாகரிகத்தை நாம் அறிந்து போற்றத் துணை நிற்கும் அரும்பெரும் பெட்டகம் புறநானூறு. தமிழகத்தின் அரசியல், சமூகநிலை, பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், கலைச்சிறப்பு, வானியல் முதலிய அறிவுத் துறைகளில் பெற்றிருந்த வளர்ச்சி ஆகியவற்றை இந்நூல் நிழற்படம் போல் தெரிவிக்க வல்லதாகும்.

சேர சோழ பாண்டியர் என்னும் முடியுடைய மூவேந்தர்கள், பாரி, காரி, ஓரி, பேகன், ஆய், அதியமான், நள்ளி என்னும் கடையெழு வள்ளல்கள் முதலிய பலருடைய போர் வெற்றிகள், கொடைவண்மை ஆகியவற்றை இந்நூல் விளக்கமாகத் தருகின்றது. மன்னர் சிலர்க்கும், புலவர் பெருமக்கட்கும் இடையே நிலவிய வியத்தகு நட்புறவும், புலவர்களின் தன்மான வாழ்வும் உலகம் வியக்கும் தன்மை உடையனவாகும்.

கணவனை இழந்த பெண்டிர் தம் கூந்தலையும், வளையலையும், பிற அணிகளையும் களைதல், உடன்கட்டை ஏறி உயிர்விடல், இறந்தாரைத் தாழியில் இட்டுப் புதைத்தல், தீ மூட்டி எரித்தல், வீரர்கட்கு நடுகல் நட்டு வழிபடல், நோய் கொண்டு இறந்த அரச குடும்பத்தார் உடலை வாளால் கீறிப் புதைத்தல், கணவனை இழந்த பெண்டிர் கைம்மை நோன்பு மேற்கொள்ளுதல் முதலான தமிழர் பண்பாட்டு நிலைகளை இந்நூல் காட்டி நிற்கின்றது.

தமிழர் கையாண்ட இசைக்கருவிகளைப்பற்றியும், இருபத்தொரு இசைத் துறைகளை பற்றியும் பன்னெடுங்காலத்திற்கு முன்பே தமிழர் வானியல் அறிவில் மேம்பட்டிருந்தனர் என்பது பற்றியும் இந்நூலிலிருந்து அறியலாம்.

மானம் அழிய வந்த பொழுது, வடக்கு நோக்கியிருந்து இறத்தலையும் (219) பகைவர்க்கு முன்னறிவிப்புச் செய்து படையெடுத்தலும் (9) அக்கால மரபுகளாம்.

உலகம் உள்ள அளவும் நிலைத்திருக்கத்தக்க உயர்ந்த அறநெறிகளின் அரங்கமாக இந்நூல் விளங்குகின்றது.

மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே (18)

செல்வத்துப் பயனே ஈதல்

துய்ப்போம் எனினே தப்புந பலவே (189)

எவ்வழி நல்லவர் ஆடவர்

அவ்வழி நல்லை வாழிய நிலனே (187)

நெல்லும் உயிர்அன்றே நீரும் உயிர்அன்றே

மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் (186)

யாதும் ஊரே யாவரும் கேளிர்

தீதும் நன்றும் பிறர்தர வாரா (192)

நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்

அல்லது செய்தல் ஓம்புமின் (195)

அறநெறி முதற்றே அரசின் கொற்றம் (55)

என்பவை அவற்றுள் சிலவாகும்.

பதிற்றுப் பத்து

பத்துச் சேர மன்னர்கள் பற்றிப் பத்துப் புலவர்கள் தலைக்குப் பத்துச் செய்யுள் வீதம் பாடிய 100 செய்யுட்களின் தொகுப்பு இது. இதன் முதற்பத்தும், இறுதிப்பத்தும் அழிவுற்றன. எஞ்சியவை 80 செய்யுட்களே. இதனைத் தொகுத்தார் தொகுப்பித்தார் இன்னார் எனத் தெரியவில்லை. இதற்குப் பழைய உரையொன்று உண்டு.

இந்நூலின் ஒவ்வொரு பத்துக்கும் ஒவ்வொரு பதிகம் உண்டு. அதன் முற்பகுதி செய்யுளாகவும் பிற்பகுதி உரைநடையாகவும் உள்ளன. இது, பாடிய புலவர், பாடப்பட்ட மன்னன், அவன் பெற்றோர், செய்த அருஞ்செயல்கள், ஆண்ட கால அளவு, பாட்டுகளின் பெயர்கள், புலவர் பெற்ற பரிசில் முதலிய அரிய செய்திகளைத் தருகின்றது.

இந்நூலிற் காணும் பத்துக்களை இயற்றியோர் பெயரும், பாடல் பெற்ற மன்னர் பெயரும் பின்வரும் அட்டவணை வழி அறிக.

பத்தின் பெயர்	பாட்டுடைத் தலைவன்	பாடிய புலவர்
முதற் பத்து		
இரண்டாம் பத்து	இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்	குமட்டூர்க் கண்ணனார்
மூன்றாம் பத்து	பல்யானைச் செல்கெழுகுட்டுவன்	பாலைக் கௌதமனார்
நான்காம் பத்து	களங்காய்க் கண்ணிநார்முடிச்சேரல்	காப்பியாற்றுக் காப்பியனார்
ஐந்தாம் பத்து	கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்	பரணர்
ஆறாம் பத்து	ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்	காக்கை பாடினியார் நச்செள்ளையார்
ஏழாம் பத்து	செல்வக் கடுங்கோ வாழியாதன்	கபிலர்
எட்டாம் பத்து	தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை	அரிசில் கிழார்

ஒன்பதாம் பத்து இளஞ்சேரல் இரும்பொறை பெருங்குன்றூர் கிழார்

பத்தாம் பத்து

இந்நூலில் உள்ள ஒவ்வொரு செய்யுட்கும், அதிலுள்ள ஒரு அழகிய தொடரால் தலைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. அருவியாம்பல், தசும்பு துளங்கு இருக்கை, பிறழ நோக்கு இயவர் என்பன அவற்றுள் சில.

ஒவ்வொரு பாட்டுக்கும் திணை, துறை, வண்ணம், தூக்கு என்பன காணப்படுகின்றன. இவை இசையுடன் பாடப்பட்டன போலும். இதன் நான்காம்பத்து அந்தாதித் தொடையால் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சேர வேந்தர்களின் வீரமும் கொடையும், அவர்தம் தேவியரின் அழகும், சிறப்பும், கற்பு மேம்பாடும் இப்பாடல்களில் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

பந்தர், கொடுமணம் என்ற இரண்டு ஊர்களின் செல்வ வளமும் இவ்விடங்களில் சேரரின் பண்டக சாலைகள் இருந்தமையும் அறியத் தக்கன. அண்மையில் செய்யப்பட்ட அகழ்வாய்வுகள் இப்பகுதிகளின் பண்டைப் பெருமையைக் காட்டவல்லன.

நன்மக்கள் வேண்டி வேள்வி செய்தல் உண்டு என்பதனை இந்நூலால் அறிகின்றோம். அந்தணரின் ஆறு கடமைகள் இன்னின்னவென்று ஒரு செய்யுள் (24) கூறுகின்றது. அறநெறிப்படி ஆளப்படும் அரசுக்குத் தடையாக அமைவன இன்னவை என இந்நூல் கூறுகின்றது. அதனைக் காண்க:-

சினனே காமம் கழிகண்ணோட்டம்

அச்சம் பொய்ச்சொல் அன்புமிக உடைமை

தெறல் கடுமையொடு பிறவும் இவ்வுலகத்து

அறம் தெரி திகிரிக்கு வழியடையாகும் (22)

(சினன் ஸ்ரீ கடுங்கோபம் கழிகண்ணோட்டம் ஸ்ரீ அளவுக்கு விஞ்சிய அருள் தெறல் கடுமை ஸ்ரீ மிகக் கடுமையாகத் தண்டித்தல் திகிரி ஸ்ரீ சக்கரம்)

பரிபாடல்

எட்டுத்தொகை நூல்களுள் அகமும், புறமும் கலந்து அமைந்த நூல் பரிபாடலாகும். பரிபாடல் என்பது யாப்பு வகையால் பெற்ற பெயர். இதில், திருமால், முருகன், கொற்றவை என்ற தெய்வங்கள் பற்றியும், மதுரை நகர் பற்றியும், வையையாறு பற்றியும் புகழ்ந்து பேசும் எழுபது பாடல்கள் இருந்தன. அழிந்தவை போக இப்போது 22 பாடல்களும் சில சிதைந்த உறுப்புகளுமே எஞ்சியுள்ளன. புறத்திரட்டிலிருந்து வேறு இரு பாடல்கள் கிடைத்துள்ளன.

இந்நூலைத் தொகுத்தார் தொகுப்பித்தார் பற்றிய விவரம் கிடைக்கவில்லை. இதிலுள்ள பாடல்களை இயற்றியோர் பதின்மூவர். இவற்றுக்கு இசை வல்லுநர்களைக் கொண்டு பண் வகுக்கப்பட்டுள்ளன. பாடலாசிரியர் பெயருடன், இசை வகுத்தவர் பெயரும், பண்ணின் பெயரும் ஒவ்வொரு பாடலுக்கும் கீழ் தரப்பட்டுள்ளன. கண்ணகனார் முதல் மருத்துவன் நல்லச்சுதனார் ஈறாகப் பத்து இசையறிஞர்கள் பண் வகுத்துள்ளனர்.

இதில் திருமால் பற்றியனவும், முருகன் பற்றியனவுமான புராணச் செய்திகள் மிகுதி. மேலும், புதிய இலக்கணக் கூறுகளும், புதிய சொல்லாட்சியும், வடசொற் கலப்பும் மிகுந்து காணப்படுகின்றன.

முருகப் பெருமானுக்கும் திருமாலுக்கும் தொடர்புடைய புராணச் செய்திகளும், வையையில் நீராடுவாரின் பல்வேறு செயற்பாடுகளும் சுவையுடன் இதில் கூறப்பட்டுள்ளன. இசை, கூத்து ஆகிய கலைகள் பற்றிய நுட்பமான செய்திகள் இதில் உண்டு. திருப்பரங்குன்றத்தில் ஓவிய மண்டபம் இருந்த செய்தியை அறியலாம்.

பிற உயிர்களைக் கொல்வோர், வெகுளி உடையோர், அறநெறியைப் பின்பற்றாதார், கூடா ஒழுக்கம் கொண்டோர், மறுமையை நம்பாதோர் ஆகியோர் முருகன் அருள் பெற மாட்டார்கள் என்று ஒரு பாட்டுக் கூறுகின்றது. (5 : 73-77)

முருகப்பெருமானிடம் பொன்னும் பொருளும் போகமும் வேண்டாமல், அருளும் அன்பும் அறனும் வேண்டும் அன்பர்களையும் இந்நூலில் காணலாம்.

யாம் இரப்பைவ

பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்

அருளும் அன்பும் அறனும் மூன்றும்

உருள் இணர்க் கடம்பின் ஒலிதாரோயே (5 : 78-81)

பத்துப்பாட்டு நூல்கள்

திருமுருகாற்றுப்படை முதல் மலைபடுகடாம் முடியப் பத்து நீண்ட பாடல்களின் தொகுப்பே பத்துப்பாட்டு என்று சான்றோரால் வழங்கப்படுகின்றது. இதனைப் பாட்டு என்றே வழங்கலும் உண்டு.

பத்துப்பாட்டுள் அடங்கிய நூல்கள் இன்னவை எனக் கூறும் பழைய வெண்பா ஒன்றுண்டு. அது வருமாறு:-

முருகு பொருநாறு பாண் இரண்டு முல்லை

பெருகு வளமதுரைக் காஞ்சி - மருஇனிய

கோல நெடுநல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்

பாலை கடாத்தொடும் பத்து.

இவ்வெண்பாவின் படி, அந்நூல்கள்

1. திருமுருகாற்றுப் படை
2. பொருநராற்றுப் படை
3. சிறுபாணாற்றுப் படை
4. பெரும்பாணாற்றுப் படை
5. முல்லைப்பாட்டு
6. மதுரைக் காஞ்சி
7. நெடுநல்வாடை

8. குறிஞ்சிப் பாட்டு

9. பட்டினப்பாலை

10. மலைபடுகடாம்

என்பனவாகும்.

பத்துப்பாட்டு என்னும் பெயர் வழக்கு இடைக்காலத்தில் தோன்றியது. கி.பி. 11, 12 ஆம் நூற்றாண்டுக்குரிய பன்னிருபாட்டியல் எனும் இலக்கண நூல் பத்துப்பாட்டிற்கு இலக்கணம் கூறிற்று. கி.பி.15ஆம் நூற்றாண்டினரான மயிலை நாதர் (நன்னூல் எனும் இலக்கணத்துக்கு உரை எழுதியவர்) பத்துப்பாட்டு என்ற பெயரைப் பயன்படுத்தியுள்ளார்.

பத்துப்பாட்டில் மிகச் சிறிய பாட்டு 103 அடிகளைக் கொண்டது. மிக நீண்டது 782 அடிகளைக் கொண்டது. இனி, பத்துப்பாட்டிலுள்ள நூல்களின் வகைப்பாட்டையும் ஒவ்வொரு வகையிலும் உள்ள செய்யுட்களின் தனித் தனியான சிறப்புகளையும் காணலாம்.

நூல்களின் வகைப்பாடு

பத்துப்பாட்டில் உள்ள செய்யுட்களும் எட்டுத்தொகையில் உள்ள நூல்களைப் போலவே அகம், புறம் என்ற இரு பிரிவுகளில் அடங்கும்.

முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப் பாலை, நெடுநல்வாடை என்ற நான்கும் அகப்பொருள் நூல்களாகும்.

திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப் படை, பொருநராற்றுப் படை, மலைபடுகடாம் என்னும் கூத்தராற்றுப்படை, மதுரைக் காஞ்சி ஆகிய ஆறும் புறப்பொருள் பற்றியன. இவ்வாறனுள்ளும் முதல் ஐந்தும் ஆற்றுப்படை என்ற பிரிவில் அடங்கும். இறுதியானது நிலையாமை பற்றிக் கூறும் காஞ்சித்திணையின் பாற்படுவதாகும்.

இனி ஒவ்வொரு பிரிவிலும் அமைந்த தனித்தனி நூல்கள் பற்றிக் காண்போம்.

முல்லைப் பாட்டு

பத்துப்பாட்டுள் மிகச்சிறிய பாட்டான இதில் 103 அடிகள் உள்ளன. இதனை இயற்றியவர் காவிரிப் பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் மகனார் நப்பூதனார் ஆவார். இதற்கு முல்லை என்ற பெயரும் உண்டு.

முல்லைத் திணைக்குரிய உரிப்பொருளான இருத்தலைப் பொருளாகக் கொண்டதால் இதற்கு முல்லைப்பாட்டு என்ற பெயர் அமைந்துள்ளது. கார்ப்பருவம் வருவதற்குமுன் திரும்புவதாக வாக்குறுதி தந்து போர்க்கடமை ஆற்றச் சென்ற தலைவன் வரும் வரையில், பிரிவுத் துயரைத் தாங்கி, இல்லறம் காக்கும் மனைவியின் ஒழுக்கம் பேசுவதே முல்லைத்திணை.

இப்பாட்டில், தலைவன் பிரிந்துபோய்ப் பாசறையில் இருக்கிறான். தலைவி அரண்மனையில் இருக்கின்றாள். கார்காலம் வருகிறது. தலைவன் வாராமை கண்டு அவள் வருந்துகின்றாள். அரண்மனையில் அவளுக்குத் துணையாகவுள்ள முதிய பெண்டிர், தலைவன் வெற்றியோடு திரும்பி வருவான் என உறுதி கூறித் தேற்றுகின்றனர். அப்பொழுது தலைவனும் திரும்புகின்றான். இதனை, பாணர், கூத்தர் முதலிய வாயில்கள் தம்முள் கூறிக் கொள்வதாக இப்பாட்டுப் புனையப்பட்டுள்ளது.

இப்பாட்டில், தமிழர்களின் பாசறை அமைப்பும், அதில் மகளிர் கச்சணிந்தும், வாள் ஏந்தியும் நின்று பணியாற்றல், கவசம் பூண்ட யவன வீரர்கள் காவல் புரிவது, பாவை விளக்கு

எரிதல், கன்னல் என்னும் கருவியால் நாழிகை கணக்கிடுதல் முதலிய செய்திகள் அழகுறக் கூறப்பட்டுள்ளன.

அரசன் வெற்றியோடு திரும்பி வரும் முல்லை நிலத்தில் பல்வேறு மலர்களும் மலர்ந்து மணம் பரப்பி நிற்றலை, நப்பூதனார் பாடும் அழகே அழகு!

குறிஞ்சிப் பாட்டு

இது 261 அடிகள் கொண்ட அகவற்பாட்டாகும். குறிஞ்சிக்குரிய இயற்கைப் புணர்ச்சியும் அதற்குரிய நிமித்தங்களும் இதில் காணப்பட்டமையால் குறிஞ்சிப்பாட்டாயிற்று. பெருங்குறிஞ்சி என்ற பெயரும் இதற்கு உண்டு. இது அறத்தொடு நிற்றல் என்ற அகத்துறைக்கு அழகான எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது. காதல் நோயால் அவதியுறும் தலைவியின் மேனி வேறுபாடுகளைக் கண்ட அன்னை, கடவுளர்க்குப் பூசைகள் நிகழ்த்தியும், நிமித்திகர்களைக் கலந்தும் (சோதிடர்கள்) துயர் உறுவது கண்ட தோழி, தலைவியின் துயருக்கு, அவள் ஒரு மலைநிலத் தலைவனிடம் கொண்ட காதலே காரணம் என்று வெளிப்படக் கூறும் வகையில் இப்பாட்டு இயற்றப்பட்டுள்ளது. ஆரிய அரசன் பிரகத்தன் என்பானுக்குத் தமிழ் அகத்திணைச் சிறப்பைக் கூறும் நோக்கத்தில் குறிஞ்சிக் கபிலர் இயற்றியது இச்செய்யுள் என்பர் அறிஞர். அருவியில் நீராடிய பெண்கள் பறித்து, பாசறையில் குவித்துச் சூடி மகிழ்ந்த 99 வகையான மலர்கள் பற்றிய வருணனை, கபிலரின் இயற்கையீடுபாட்டுக்குச் சான்றாகும்.

மிளகு உதிர்ந்து பரவிக் கிடக்கும் பாசறையிடையே காணப்பட்ட சுனையொன்றில், மாம்பழமும், பலாச்சுளையும், தேனும் விழுந்தமையால் உண்டான தேறலை நீரென்று கருதி உண்ட மயிலொன்று மயக்கமுற்றுத் தள்ளாடித் தள்ளாடி நடப்பது, பேரூர் ஒன்றில் விழாவில் கயிற்றின்மேல் ஏறி நின்று ஆடும் விறலிபோல் தோன்றுவதாகக் கபிலர் பாடுவது சிறப்பாக உள்ளது.

கதிரவன் மேற்றிசையில் மறையும் மாலைப் பொழுதின் நிகழ்வுகளையும், தலைவன் வரும் வழியில் தோன்றும் பல்வேறு இடையூறுகளையும், தலைவனுடைய உருவத் தோற்றத்தையும் கபிலர் தமக்கே உரிய வகையில் விளக்கியுள்ளார்.

பட்டினப்பாலை

பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறிய பாலைத்திணைச் செய்யுள் என்பது இப்பெயரின் பொருள். இங்குப் பட்டினம் என்பது புகார் நகர். 301 அடிகள் கொண்ட இதில் வஞ்சியடிகள் கலந்து வருவதால், இதனை வஞ்சிநெடும் பாட்டு என்பர். இதன் தலைவன் திருமாவளவன் என்னும் கரிகால் வளவன் ஆவான். இதனை இயற்றியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். பெரும்பாணாற்றுப்படையின் ஆசிரியரும் இவரே.

பொருள்தேடச் செல்ல விரும்பிய தலைவன் தன் மனைவியைப் பிரிய மனமின்றித் தன் செலவினைக் கைவிட்ட நிலையில் பாடப்பட்டது இது. அகப்பொருள் இதனைச் செலவழுங்குதல் என்று கூறும்.

இதில் வரும் கிளவித் தலைவன் (தலைவியின் கணவன்), பாட்டுடைத் தலைவனாகிய கரிகாலன் பெருமைகளை யெல்லாம் விவரித்து, அவனால் ஆளப்படும் புகார் நகரின் பல்வேறு சிறப்புகளையும் பலபடப் பாராட்டி, அத்தகைய பட்டினத்தினையே பெறுவதாக இருப்பினும் தன் மனைவியைப் பிரிந்து செல்ல மனமில்லாது செலவைக் கைவிடுவான்.

முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்

வாரிரும் கூந்தல் வயங்கிழை ஒழிய

வாரேன் வாழியே நெஞ்சே

என்று தன் நெஞ்சிற்குக் கூறுவான் தன் செயலுக்குக் காரணம் கூறுவான்.

திருமாவளவன் தன் பகைவரை நோக்கி ஓச்சிய வேலைவிடத் தான் செல்ல வேண்டிய பாலை வழி கொடுமையானது என்றும், தன் காதலியின் மெல்லிய பெரிய தோள்கள், சோழனுடைய செங்கோலினும் இனிமையானது என்றும் கூறுவான்.

301 அடிகள் கொண்ட இப்பாட்டில் 217 அடிகள் பட்டினச் சிறப்பையே பேசுகின்றன. பண்டைத் தமிழரின் வணிகச் சிறப்பையும், கலைச்சிறப்பையும், சமய வழிபாட்டுச் சிறப்பையும் பிறவற்றையும் இப்பாட்டு உலகறியச் செய்கிறது. துறைமுகத்தில் நடக்கும் ஏற்றுமதியும் இறக்குமதியும், அங்குச் சுங்க அதிகாரிகள் புலிச் சின்னம் பொறித்தலும், சுங்கம் பெறுதலும், அறச்சாலைகளில் உணவளிக்கும் சிறப்பும், வணிகர்களின் நடுவுநிலைப் பண்பும், அவர்களுடைய அறப் பண்பும் பாராட்டப்படுகின்றன.

திருமாவளவனின் நாட்டில் பல மொழியாளரும் வந்து குழுமியிருந்தனர் என்றும் அவர்கள் பலரும் ஒற்றுமையாக இனிது வாழ்ந்தனர் என்றும் புலவர் கூறுவார். திருமாவளவன் பகைவர் நாட்டில் செய்த அழிவுச் செயல்களையும், உறையூரை விரிவு செய்த தன்மையையும் புலவர் பாராட்டுவார். காடு கொன்று நாடாக்கி, குளம் தொட்டு வளம் பெருக்கியதாகப் பாராட்டுவார். சுருங்கச் சொன்னால், இந்நூல் தமிழக வரலாற்றின் பெட்டகம் ஆகும்.

நெடுநல்வாடை

இது 188 அடிகள் கொண்ட அகவல். இதனை இயற்றியவர் மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார். இவரும் திருமுருகாற்றுப்படை ஆசிரியரும் வெவ்வேறு புலவர்கள் என்பர். இருவரும் ஒருவரே என்பாரும் உளர்.

காதலன் பகைவர்மேல் படையெடுத்துச் சென்று பாசறையில் இருக்கிறான். காதலி பிரிவுத் துயரால் வாடிக்கிடக்கிறாள். காதலியின் துயரைப் போக்க முடியா அரண்மனைப் பெண்டிர், தலைவன் விரைவில் திரும்பி வருமாறு கொற்றவைக்கு வழிபாடு செய்கின்றனர். இதுவே இதன் மையக் கருத்து.

பிரிவுத் துயரால் வருந்தும் காதலிக்கு வாடைக் காற்று நெடியதாகத் தோன்றுகிறது. அதாவது, ஒரு பொழுது ஓர் ஊழி போல் காண்கின்றது. ஆனால் பாசறையில் இருக்கும் தலைவன் புண்பட்ட வீரர்க்கும், யானைகளுக்கும் குதிரைகளுக்கும் அன்பு காட்டி ஆறுதல் செய்கிறான். காமச் சிந்தனையற்றுக் கடமையில் கருத்தூன்றுகிறான். இதனால் வாடை அவனுக்கு நல்லதாயிற்று. பாட்டின் பெயர்ப் பொருத்தம் இதனால் விளங்கும்.

இப்பாட்டில் இடம்பெறும் கூதிர்கால வருணனையொன்றே புலவரின் பெருமையை நிலைநாட்ட வல்லது. இவ்வருணனை 70 அடிகளால் அமைகிறது. பண்டைத் தமிழர் மனையைச் சதுரமாகப் பிரித்து வீடு கட்டும் கலையில் தேர்ந்திருந்தமை இப்பாட்டால் விளங்கும். கட்டிடச் சிற்பியை நூலறிபுலவர் என்கின்றார் புலவர்.

அரசியின் கட்டில் வனப்பும், அரண்மனை அமைப்பும், பாசறையின் இயல்பும் அரசன் வீரன் ஒருவன் துணையுடன் இரவுப் பொழுதிலும் வீரரையும் விலங்குகளையும் பார்வையிடும் காட்சியும் நிழற்படம் போல் இனிமை செய்கின்றன.

பாவை விளக்குகளின் அகலில் நெய்யூற்றிப் பெரிய திரிகளில் தீக்கொளுவுதல், நிலா முற்றத்தில் இருந்து மழைநீர் குழாய்களின் மூலம் வழிதல், குன்றத்தினைக் குடைந்தமைத்தது போல் அமைந்த அரண்மனை வாயில், வென்றெடுத்த கொடியோடு யானை புகுந்து செல்லும் அளவில் இருந்த அதன் உயர்ச்சி ஆகியவற்றைப் புலவர் திறம்படக் காட்டியுள்ளார்.

ஆற்றுப்படை நூல்கள்

புறப்பொருள் பற்றியவற்றுள் 5 ஆற்றுப்படை நூல்கள் ஆகும். அவை பற்றிக் குறிப்புகள் பின்வருமாறு:

சிறுபாணாற்றுப் படை

இது ஓய்மான் நாட்டை ஆண்ட நல்லியக்கோடனைப் புகழ்ந்து இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடிய 269 அடிகள் கொண்ட அகவற்பாட்டு. சீறியாழை (சிறிய யாழ்) வாசிக்கும் பாணன் ஒருவனை, நல்லியக் கோடனிடம் ஆற்றுப்படுத்தும் நிலையில் பாடப்பட்டமையின் இப்பெயர் பெற்றது. பெரும்பாணாற்றுப்படையை விட அளவால் சிறியது என்பதால் பெற்ற பெயர் இது என்றலும் பொருந்தும்.

இதில் சீறியாழின் உருவ அமைப்பு அழகாக, உவமைகளுடன் விளக்கப்பட்டுள்ளது. நல்லியக்கோடன் நாட்டு வளமும், மக்கள் வாழ்வுச் சிறப்பும், விருந்தோம்பும் பண்பும் காட்டப்பட்டுள்ளன. கடையெழு வள்ளல்களின் வரலாறுகள் சுருக்கமாகக் கூறப்பட்டிருத்தலும், மூவேந்தர் நாடுகள் வருணிக்கப்பட்டிருத்தலும் இந்நூலின் வரலாற்றுத் தன்மைக்குச் சான்றாகும்.

நல்லியக் கோடன், கடையெழு வள்ளல்கள் எழுவரும் தாங்கிய ஈகையாகிய செவ்விய நுகத்தைத் தான் ஒருவனே தாங்கியதாகப் புலவர் புகழ்வார். பாணனுடைய வறுமை நிலை நெஞ்சை உருக்கும் வகையில் விளக்கப்படுகிறது.

ஆமூர், வேலூர், கிடங்கில் என்னும் ஊர்களின் சிறப்பை இப்பாட்டில் காணலாம். விறலியின் மேனியழகினை அழகிய உவமைகளால் புலவர் பாராட்டுவது கற்பாரைக் கவருகிறது. மதுரையைத் "தமிழ்நிலை பெற்ற தாங்கரும் மரபின் மகிழ்நனை மறுகின் மதுரை" என்று பாராட்டுவார் புலவர்.

பாணரின் அடுக்களையில் நாய்க்குட்டி ஈன்றுள்ளதையும், கண்ணும் திறவாத அதன் குட்டிகள் பாலில்லாத வறுமுலையைப் பற்றி இழுத்ததனால் துன்பம் தாளாது தாய் நாய் குரைத்தலையும் புலவர்,

திறவாக் கண்ண சாய்செவிக் குருளை

கறவாப் பான்முலை கவர்தல் நோனாது

புனிற்று நாய்குரைக்கும் புல்லென் அட்டில்

(குருளை ஸ்ரீ குட்டி · நோனாது ஸ்ரீ பொறுக்காமல் புனிற்று ஸ்ரீ அண்மையில் குட்டியீன்ற் புல்லென் ஸ்ரீ பொலிவு அற்ற் அட்டில் ஸ்ரீ அடுக்களை)

என்று கூறுவார். பாணர் குடும்பப் பெண் குப்பையில் முளைத்த வேளைக் கீரையைக் கொய்து கொண்டு வந்து, நீரை உலையாக ஏற்றி அதில் அதை வேகவைத்து, அதனைப் பிறர் காணாது கதவை அடைத்துத் தன் சுற்றத்தோடு உண்ணும் அவலத்தை, புலவர் அழகாகப் படம் பிடித்துள்ளார்.

பெரும்பாணாற்றுப் படை

இது கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் புலவர், காஞ்சியை ஆண்ட தொண்டைமான் இளந்திரையனைப் புகழ்ந்து பாடிய 500 அடிகள் கொண்ட அகவற்பாட்டாகும். பேரியாழை வாசிக்கும் பாணன் ஒருவன், தன்போல் இன்னொரு பாணனைத் தனக்குப் பரிசளித்த வள்ளலான இளந்திரையனிடம் ஆற்றுப்படுத்தும் நிலையில் பாடப்பட்டதாதலால் பெரும்பாணாற்றுப் படையாயிற்று. 269 அடிகள் கொண்ட சிறுபாணாற்றுப் படையை நோக்க இது பெரியது என்பது பற்றி இப்பெயர் பெற்றதாகவும் கொள்வர்.

இது சொற்சுவையும், பொருட்சுவையும் நிறைந்தது. இளந்திரையன் நாட்டின் ஐந்திணை வளமும், அவ்வத்திணையில் வாழ்ந்த வேடர், எயினர், மறவர், உழவர், பரதவர், ஆயர், அந்தணர் ஆகிய இனத்தவர் வாழ்க்கையும், அவர்களின் விருந்தோம்பற் பண்பும் பிறவும் பற்றி

விரிவாகப் பேசுகிறது. மாந்தரின் குடியிருப்பும் செயல்களும் உண்மைத் தன்மையுடன் இதில் பாடப்பட்டுள்ளன.

திருவெ.ஃகாவில் குடிகொண்ட திருமாலின் கோலத்தையும், கடலோரத்தில் அமைந்த விண்ணுயர்ந்த கலங்கரை விளக்கத்தையும், தொண்டைமானின் கொடைத்திறத்தையும், பேரியாழின் வருணனையையும், யானைகள் தவம் செய்யும் முனிவர்கட்கு உதவும் திறத்தையும், இளந்திரையன் ஆட்சிச் சிறப்பால் இடியும் காட்டுவிலங்குகளும் கூட வழிச் செல்வார்க்குத் தீங்கு செய்யாத தன்மையும், உமணர்கள் (உப்பு வணிகர்கள்) உப்பு மூட்டைகளை வண்டிகளில் ஏற்றி ஊர் ஊராக சேர்தலும், வம்பலர் என்ற வணிகர் கவசம் பூண்டும், காலிற் செருப்பணிந்தும், கழுதைச் சாத்துடன் (கூட்டத்துடன்) செல்லும் இயல்பும், ஆயர்குடிப் பெண் ஆன்படு பொருள்களை (பால் உணவுப்பொருட்களை) விற்றுக் குடும்பத்தைக் காத்தலும் பிறவும் இந்நூலில் கற்றுச் சுவைக்கத் தக்கனவாகும்.

பொருநராற்றுப் படை

சோழன் கரிகால் பெருவளத்தானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு முடத்தாமக் கண்ணியார் இயற்றிய இப்பாட்டு 248 அடிகள் கொண்டது. போர்க்களம் பாடும் பொருநன் ஒருவன் (கூத்தன்) தனக்குப் பரிசளித்த கரிகாலனிடம் இன்னொரு பொருநனை ஆற்றுப்படுத்துவதாக இயற்றப்பட்டது இது.

பொருநன் கையாண்ட யாழ் பற்றிய வருணனை பாட்டின் முன் பகுதியிலேயே அமைந்துள்ளது. (4-22) கொடியவரான ஆறலை கள்வரின் (வழிப்பறிசெய்வோர்) கல்மனத்தையும் அருள் மனமாக மாற்ற வல்லது பாலை யாழ் என்கிறார் புலவர்.

யாழ் வருணனையைத் தொடர்ந்து, விறலியின் மேனியழகு பற்றிய அழகிய விளக்கம் காணப்படுகிறது (25-47). விறலியின் அழகு தகுந்த உவமைகளால் விளக்கப்படுகின்றது. அவள் குழையணிந்த காதிற்குக் கத்தரிக்கோலின் கடைப்பகுதி உவமையாகும். அடியின் மென்மைக்கு, ஓடி இளைத்த நாயின் நாக்கினை உவமை கூறியுள்ளார்.

கலைஞர்கட்கு அருள் சுரந்து பரிசளிக்கும் கரிகாலனின் வண்மையைப் புலவர் சிறப்புறப் பாராட்டியுள்ளார். கண்ணால் பருகுவது போலப் பார்த்து, எலும்பையும் குளிரச் செய்யுமாறு அன்பு செலுத்தி,ஈரும் பேனும் தங்கியுள்ள கந்தலாடையினை நீக்கி, கண்ணுக்குப் புலப்படாத நுண்ணிய இழைகளால் நெய்யப்பட்ட பட்டாடையை உடுத்தி, உயர்ந்த அரிசியால் சமைத்த புலால் உணவினை உண்ணச் செய்து, கன்றொடு கூடிய யானைகளைப் பரிசாக அளித்துப் பிரியாவிடை தருவான் கரிகாலன் என்கின்றார் புலவர். பால்போல் வெண்மையான நான்கு குதிரைகள் பூட்டிய தேரைக் கொடுத்து, காலில் ஏழடிகள் பின் சென்று அவர்கட்கு விடையளித்தான் என்கின்றார் புலவர். பல திணைகளும் அடுத்தடுத்து இருந்தமையால் ஒவ்வொரு திணை மாந்தரும் தம் பொருள்களை அடுத்துள்ள நில மக்களோடு பண்ட மாற்றிக் கொண்டனர் என்பதனை விளக்கியவர்,

குறிஞ்சி பரதவர் பாட, நெய்தல்

நறும்பூங் கண்ணி குறவர் சூட,

கானவர் மருதம் பாட, அகவர்

நீல்நிற முல்லைப் ப.ஃறிணை நுவல

என்று அவர்களின் பண்பாட்டுப் பரிமாற்றத்தையும் விளக்கியுள்ளார்.

மலைபடுகடாம்

வேளிர்குடியைச் சேர்ந்த நன்னன் சேய் நன்னன் என்பானை இரணிய முட்டத்துப் பெருங்கௌசிகனார் பாடிய 583 அடிகள் கொண்ட அகவற்பாட்டு இது. பரிசில் பெற்ற கூத்தன், அது பெறவிரும்பிய இன்னொரு கூத்தனை நன்னனிடம் ஆற்றுப்படுத்தும் வகையில் இயற்றப்பட்டது. மலைக்கு யானையை உவமித்து, அதில் பிறந்த ஓசையைக் கடாம் (மதநீர்) எனச் சிறப்பித்தமையால் மலைபடுகடாம் எனப்பட்டது.

இதில் பேரியாழும் பிற இசைக் கருவிகளும் அருமையான உவமைகளால் விளக்கப்படுகின்றன. ஆகுளி, பாண்டில், கோடு, களிற்றுயிர்த் தூம்பு, குறுந்தூம்பு, குழல், தட்டை, எல்லரி, பதலை என்பன பிற கருவிகள்.

மலைச் சாரலில் தோன்றும் பல்வேறு ஓசைகள் பற்றிய வருணனையும், நன்னனைக் காணச் சென்ற குறவர்கள் கொண்டு போன கையுறைப் பொருள்கள் பற்றிய வருணனையும் நூலின் சிறந்த பகுதிகள்.

நன்னன் நாட்டு மக்கள் பலரும் வாழும் வாழ்க்கை முறைகளும், அவர்களின் விருந்தோம்பல் சிறப்பும் அழகாகக் கூறப்பட்டுள்ளன. நன்னன் ஊரின் பெருமையும், அவன் கலைஞர்கட்குப் பரிசளிக்கும் சிறப்பும் கூறப்பட்டுள்ளன. பல்வேறு தரப்பினரும் உண்ட உணவுகள் பற்றியும், மலைவழியில் போவார் எதிர்கொள்ளும் இடையூறுகளும் கூறப்பட்டுள்ளன.

நன்னன் மலையான நவிரத்தில் தோன்றும் சேயாற்றின் தன்மையும், அங்குக் குடிகொண்ட காரி உண்டிக் கடவுளும் (சிவபெருமான்) பற்றிய செய்தியும் இதில் காணப்படுகின்றன.

திருமுருகாற்றுப் படை

பத்துப்பாட்டுக்குக் கடவுள் வாழ்த்துப் போல அமைந்தது திருமுருகாற்றுப்படை. இது 317 அடிகள் கொண்ட அகவல். முருகன் அருள் பெற்ற ஒருவன், அதைப் பெற விரும்பும் இன்னொருவனை முருகப் பெருமானிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்த இதனை இயற்றியவர் நக்கீரர். இவரும் நெடுநல்வாடையைப் பாடியவரும் ஒருவரே என்பார் பலர். இருவரும் வெவ்வேறு ஆசிரியர்கள் என்பாரும் உளர். ஆற்றுப்படுத்தப் படுவோன் பெயர் நூலுக்கு அமைவது ஏனைய ஆற்றுப்படைகளின் பண்பு. இது, அதற்கு மாறாக, பாட்டுடைத் தலைவன் பெயரால் அழைக்கப்படுகிறது. இதற்குப் புலவராற்றுப் படை என்றும் ஒரு பெயர் உண்டு.

இதில் முருகப் பெருமான் எழுந்தருளியுள்ள ஆறுபடை வீடுகள் பற்றியும், ஆங்காங்கு நடக்கும் வழிபாடுகள் பற்றியும் கூறப்பட்டுள்ளன. முருகப் பெருமானின் திருஉருவச் சிறப்பும், அவர் மார்பில் அசையும் மாலையழகும், சூரமகளிர் இயல்பும், பெருமான் சூரபன்மனை அழித்த செயலும், மதுரையின் பெருமையும், திருப்பரங்குன்றத்தின் இயற்கை அழகும் முதற்பகுதியில் இடம்பெறுகின்றன.

பெருமான் ஏறும் பிணிமுகம் என்னும் யானையின் இயல்பு, அவருடைய ஆறு திருமுகங்கள், பன்னிரு திருக்கைகளின் செயல்கள், அவர் திருச்சீரலைவாயில் (திருச்செந்தூரில்) எழுந்தருளியிருக்கும் மேன்மை ஆகியன இரண்டாம் பகுதியில் இடம்பெறுகின்றன.

மூன்றாம் பகுதியில் திருவாவினன்குடியில் (பழனியில்) முனிவர்கள் பெருமானை வழிபடும் முறையும், சிவபெருமானும், திருமாலும், பிறதேவர்களும் பெருமானைக் காண வருதலும் விளக்கப்படுகின்றன.

நான்காவது பகுதியில், பெருமான் ஏரகத்தே (சுவாமிமலை) எழுந்தருளியிருத்தலும், அந்தணர் ஆறெழுத்து மந்திரத்தை உச்சரித்து வழிபடலும் கூறப்பட்டுள்ளன. அம்மந்திரம் "நமோ குமராய" என்பார் நச்சினார்க்கினியர்.

ஐந்தாவது பகுதியில் பெருமான் ஒவ்வொரு குன்றிலும் ஆடும் பண்பு விளக்கப்படுகிறது.

ஆறாம் பகுதியில் முருகப் பெருமான் ஊர் தோறும் கொண்டாடப்படும் விழாவிலும், வெறியாடும் களத்திலும், காட்டிலும், சோலையிலும், ஆற்றிடைக் குறைகளிலும் (திட்டு), ஆறுகளிலும், குளங்களிலும் சதுக்கங்களிலும் மன்றங்களிலும் பிறவிடங்களிலும் உறையும் நிலை விளக்கப்பட்டுள்ளது.

குறவர்கள் தமக்கே உரிய முறையில் உயிர்க் கொலையுடன் முருகனை வழிபடும் பண்பு இப்பாட்டில் விளக்கப்படுவது சிறப்பு.

முருகப் பெருமானை வழிபடும் முனிவர்களின் உருவத் தோற்றத்தையும், பழமுதிர்சோலையின் இயற்கை அழகையும் விளக்கும் பகுதிகள் நக்கீரர் புலமைக்குச் சான்று.

இந்நூலின் அருமை கருதி, பிற்காலத்தில் சைவத் திருமுறைகளுள் பதினோராம் திருமுறையில் ஒரு பகுதியாக இதனைச் சேர்த்துள்ளனர். இது, சைவர்களின் வழிபாட்டு நூலாக விளங்குகிறது.

மதுரைக் காஞ்சி

பத்துப்பாட்டுள் மிகவும் நீண்ட பாட்டான இது 782 அடிகளைக் கொண்டது. இது, தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ் செழியனுக்கு, நிலையாமையை எடுத்துக்கூறி, தனக்கென வரையறுத்த நாட்களை நல்ல முறையில் வாழுமாறு அறிவுறுத்தும் வகையில் மாங்குடி மருதனார் இயற்றிய காஞ்சித்திணைப் பாட்டாகும். மதுரை மன்னனுக்குக் கூறிய காஞ்சியாகையால் மதுரைக்காஞ்சியாயிற்று (காஞ்சி - நிலையாமை).

இதில் பாண்டிய நாட்டின் ஐந்திணை வளம், அவ்வந்நிலங்களில் நடக்கும் வாழ்க்கை முறைகள், பாண்டியன் பகைவர் நாட்டை அழித்தல், பணிந்தார்க்கு நலம் செய்தல், இருபெருவேந்தரையும் ஐம்பெருவேளிரையும் வென்றமை, சாலியூரையும், முதுவெண்ணிலையும் கைக்கொண்டமை, பரதவர்களை வென்றமை முதலான வெற்றிச் செயல்கள் ஆகியன விரிவாகக் கூறப்படுகின்றன.

வையையாற்று வளம், மதுரையைச் சூழ்ந்த அகழி, இரவும் பகலும் நடக்கும் அல்லங்காடி, நாளங்காடியின் தன்மைகள், அந்தணர் இருக்கை, சாவகர், சமணர், பௌத்தர்களின் இருக்கைகள், பெரியோர்களின் ஒழுகலாறுகள் ஆகியவற்றை ஆசிரியர் இனிதே விளக்கியுள்ளார். மாலை முதல் விடியற்காலம் வரையில் பல்வேறு மாந்தரின் செயல்களை அழகுறக் காட்டும் புலவர், பரத்தையர் தம்மை அழகுறுத்திக் கொண்டு செல்வக்குடி இளைஞர்களை மயக்கிப் பொருள் பறித்தலையும், உளியும், நூலேணியும் கொண்டு களவாடப்போகும் கள்வர் இயல்பையும், அவர்களைப் பற்றுதற்கு மறைந்து செல்லும் காவலர் இயல்பையும் காட்டுவது இதனுள் அழகாகவுள்ளது.

அமைச்சர்கள் காவிதிப் பட்டம் பெறுதல், அறங்கூர் அவையத்தின் சிறப்பு, சங்கறுத்து வளையல் செய்தல் முதலிய தொழில் வல்லுநரின் இயல்புகள், பாணர்களின் நிலை, அவர்களின் கலைவன்மை, கட்டிடக்கலை, நெசவுக்கலை முதலியவற்றின் மேம்பாடு என்பவை இப்பாட்டில் விளக்கப்படுவது சிறப்பாகவுள்ளது.

மதுரைக் காஞ்சி கூறும் நிலையாமை உலக வாழ்க்கையை இகழ்ந்து ஒதுக்குவது அன்று. உலகம் நிலையானது. இதில் நிலைத்த புகழை நிலைநிறுத்த வேண்டும் என்பதே புலவரின் அறிவுரை.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்பவை சங்கம் மருவிய காலத்தில் இயற்றப்பட்ட பதினெட்டு தமிழ் நூல்களின் தொகுப்பாகும். இவை பெரும்பாலும் அறநெறிகளைப் போதிக்கும் நீதி நூல்களாகும்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க இலக்கியங்களுக்குப் பின்னர் இடம்பெறுவது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாகும். இவற்றை சங்கமருவிய கால இலக்கியங்கள் எனவும் வழங்குவர். கி.பி 470 இல் வச்சிர நந்தி என்னும் சமண முனிவர் "திராவிட சங்கம்" என்ற ஒன்றை நிறுவினார். இச்சங்கத்து நூற்களே பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அவ்விலக்கியங்கள் எவை என்பதை பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

கீழ்க்கணக்கு

இச்செயலைக் கணக்காகச் செய்தான்' என்பர் தமிழர். இதன் பொருளாவது, பெரியோர் நூல்களில் சொல்லியபடியே சரியாகச் செய்தான் என்பதாகும். ஆசிரியர் கணக்காயனார் எனப்பட்டார். நூலை ஆய்பவர் என்பது இப்பெயரின் பொருள். கணக்கினை முற்றப் பகலும் முனியாது இனிது ஓதிக் கற்றலின், கேட்டலே நன்று என்ற பழமொழிப் பகுதியால், கணக்கு என்னும் சொல் நூல் என்ற பொருள் கொண்டது என்று அறியலாம்.

பல்வேறு நூல்வகைகளுக்கும் இலக்கணம் கூறும் பாட்டியல் நூல்கள் பிற்காலத்தில் தோன்றின. பன்னிருபாட்டியல் என்பது அவற்றுள் ஒன்று. அது ஆசிரியப்பா, கலிப்பா, பரிபாடல் ஆகிய பாவகைகளில் மிகுதியான அடிகள் கொண்டனவாக ஐம்பது முதல் ஐந்நூறு பாடல்களைத் தொகுத்தமைப்பது மேற்கணக்கு என்று கூறிற்று. அதுவே, வெண்பா யாப்பினைப் பயன்படுத்தி, குறைவான அடிகளால் ஐம்பது முதல் ஐந்நூறு பாடல்களைக் கொண்டு விளங்குவது கீழ்க்கணக்கு என்றும் கூறுகிறது.

இதனால் பாட்டிலுள்ள அடிகளின் மிகுதியும் குறைவுமே மேல் கீழ் என்ற அடைமொழிகளால் விளக்கப்பட்டன என்பது விளங்கும்.

இடைக்காலத்தில் எழுந்த நூல்களிலும், உரைகளிலும் - கீழ்க்கணக்கு என்று அடையில்லாமலும், பதினெண்கீழ்க்கணக்கு என்று அடையோடும் இவை குறிக்கப்படுகின்றன.

மூத்தோர்கள் பாடியருள் பத்துப்பாட்டும்

எட்டுத்தொகையும் கேடில் பதினெட்டுக் கீழ்க்கணக்கும்

என்பது தமிழ்விடுதூது.

நன்னூல் உரையாசிரியர் மயிலைநாதரும், நச்சினார்க்கினியரும் பதினெண்கீழ்க்கணக்கு என்ற குறியீட்டைக் கையாள்கின்றனர். எனவே இந்த வழக்கு, கி.பி. 13, 14 ஆம் நூற்றாண்டுகளுக்கு உரியது என்பது விளங்குகின்றது.

கீழ்க்கணக்கு நூல்கள்

கணக்கு என்பது நூலைக் குறிக்கும் சொல்லாகும். அடிவரையறையை கருதி மேற்கணக்கு எனவும் கீழ்க்கணக்கு எனவும் வகைப்படுத்தினர். மேற்கணக்கு என்பது சங்க இலக்கியங்களையும், கீழ்க்கணக்கு என்பது சங்கம் மருவிய காலத்து இலக்கியங்களையும் குறிப்பதாகும்.

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் 18.அவை பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என வழங்கப்படுகிறது. அவ்விலக்கியங்கள் எவை என்பதை,

”நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்

பால்கடுகம் கோவை பழமொழி - மாமூலம்

இன்னிலைசொல் காஞ்சியோடு ஏலாதி என்பவே

கைநிலைய வாம்கீழ்க் கணக்கு”

என பழைய வெண்பா கூறுகின்றது. குறிப்பாக, திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி, ஆசாரக்கோவை, முதுமொழிக்காஞ்சி, பழமொழி, கார் நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, தினை மாலை நூற்றைம்பது, திணைமொழி ஐம்பது, கைநிலை, களவழி நாற்பது ஆகிய 18 நூல்களும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாகும்.

இவற்றில் அறம் சார்ந்த நூல்கள் பதினொன்றும், அகம் சார்ந்த நூல்கள் ஆறும், புறம் சார்ந்த நூல் ஒன்றும் காணப்படுகின்றது.

இப்பாட்டின்படி, இத்தொகுப்பில் அடங்கும் பதினெட்டு நூல்களின் பெயர்களும் கீழே தரப்படுகின்றன.

1) நாலடியார்

2) நான்மணிக்கடிகை

3) இன்னா நாற்பது

4) இனியவை நாற்பது

5) கார் நாற்பது

6) களவழி நாற்பது

7) ஐந்திணை ஐம்பது

8) ஐந்திணை எழுபது

9) திணைமொழி ஐம்பது

10) திணைமாலை நூற்று ஐம்பது

11) திருக்குறள்

12) திரிகடுகம்

13) ஆசாரக்கோவை

14) பழமொழி

15) சிறுபஞ்சமூலம்

16) முதுமொழிக்காஞ்சி

17) ஏலாதி

18) கைந்நிலை

மேலே காட்டிய வெண்பாவில் ஒரு பாடவேறுபாட்டைப் புகுத்தி, கைந்நிலையின் இடத்தில் இன்னிலை என்ற நீதி நூலை வைத்து எண்ணுவாரும் உளர். எனினும் கைந்நிலையே பெரும்பாலோருக்கும் உடன்பாடானது.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் வகைப்பாடு

இப்பதினெட்டு நூல்களையும் 1. நீதி உரைப்பவை (11 நூல்கள்) 2. காதலைச் சிறப்பிப்பவை (6 நூல்கள்) 3. போர் பற்றியது (ஒன்று) என மூன்று பிரிவுகளுள் அடக்கலாம்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் காலம்

பதினெண்கீழ்க்கணக்கு என்னும் தொகுதியில் அடங்கும் தனித்தனி நூல்களின் காலத்தை வரையறுப்பது எளிதன்று. எனினும், இவற்றை இருண்ட காலத்துக்கு உரியன என்று பொதுவாகச் சுட்டுகின்றனர். கி.பி. 3ஆம் நூற்றாண்டின் இறுதி முதல் 6ஆம் நூற்றாண்டு வரை அமைந்துள்ள காலம் இருண்ட காலம் எனப்படுகிறது.

அறம் சார்ந்த நூல்கள் - அற இலக்கியங்கள்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அறக்கருத்துகளை கூறும் நூல்களாக பதினோரு நூல்கள் காணப்படுகின்றன. அவை,

1. திருக்குறள், 2. நாலடியார், 3. நான்மணிக்கடிகை

4. இன்னா நாற்பது, 5. இனியவை நாற்பது, 6. திரிகடுகம்

7. சிறுபஞ்சமூலம், 8. ஏலாதி, 9. ஆசாரக்கோவை,

10. முதுமொழிக்காஞ்சி, 11. பழமொழி

என்பனவாகும்.

1. திருக்குறள்

முப்பால், உத்தர வேதம், தெய்வ நூல், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை என்றெல்லாம் சான்றோர்களால் புகழப்படும் திருக்குறள், தெய்வப்புலவர் திருவள்ளுவரால் இயற்றப்பட்டதாகும்.

அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பால்களும்,133 அதிகாரங்களும், அதிகாரங்களுக்கு பத்து பாடல்கள் வீதம் 1330 குறட்பாக்களைக் கொண்டது. அறத்துப்பாலில் 38 அதிகாரங்களும், பொருட்பாலில் 70 அதிகாரங்களும், இன்பத்துப்பாலில் 25 அதிகாரங்களும் காணப்படுகின்றன.

திருவள்ளுவர், கி.மு முதல் நூற்றாண்டினர் எனவும், கிறிஸ்துவுக்கு முப்பது வருடங்களுக்கு முற்பட்டவர் எனவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். உலக மொழிகளில் பைபிளுக்கு அடுத்தபடியாக அதிகமாக மொழிபெயர்க்கப்பட்ட நூல் திருக்குறள் ஆகும். இந்நூல், எச்சமயத்தார்க்கும், எந்நாட்டவர்க்கும், எக்காலத்தவர்க்கும் பொதுவான பொது மறையாகும். அற வாழ்வியல் இன்பத்தை பொருள்படக் கூறும் இந்நூல் தமிழர்களின் அறக்கடலாக விளங்குகிறது.

திருக்குறளின் சிறப்பை எடுத்தோத ”திருவள்ளுவ மாலை” எனும் தனிநூலே எழுந்தது போல் வேறு எந்த நூலுக்கும் எழுந்தது இல்லை. பத்துக்கும் மேற்பட்டோர் உரை எழுதிய சிறப்பு திருக்குறளைத் தவிர்த்து வேறு எந்த நூலுக்கும் இல்லை. திருக்குறளின் சிறப்பினை மனோன்மணியம் சுந்தரனார்,

”வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்

உள்ளுவாரோ மனுவாதி ஒரு குலத்துக்கு ஒரு நீதி ”

எனக் கூறுவதில் இருந்து திருக்குறள் சமுதாய நலனில் அக்கறை கொண்ட தமிழ்மறை என வரையறுத்துக் கூறலாம்.

2. நாலடியார்

திருக்குறளைப் போன்றே நாலடியாரும் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பகுப்புகளைக் கொண்டது. 400 பாடல்கள் கொண்ட இந்நூல் “நாலடி நானூறு“ எனவும் வழங்கப்படுகிறது. நானூறு சமண முனிவர்கள் பாடிய பாடலின் தொகுப்பாக இந்நூல் காணப்படுகிறது. இந்நூலைத் தொகுத்தவர் பதுமனார் என்னும் சமணத் துறவி ஆவார். இது கி. பி எட்டாம் நூற்றாண்டு இலக்கியம் என அறிஞர்கள் கருதுகின்றார்கள்.

“வேளாண் வேதம்“ எனச் சான்றோர்களால் அழைக்கப்படும் இந்நூலில் பெருமையை உணர்ந்து ஜி. யு. போப் அவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். “நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி“ எனத் திருக்குறளோடு இணைத்துக் கூறுவதன் மூலம் திருக்குறளுக்கு இணையான சிறப்புக் கொண்டதாக நாலடியார் விளங்குகிறது என்பதனை அறியலாம்.

3. நான்மணிக் கடிகை

நான்மணிக்கடிகையை இயற்றியவர் விளம்பி நாகனார் ஆவார். 101 வெண்பாக்களைக் கொண்ட இந்நூல், ஒவ்வொரு பாடலிலும் மணி போன்ற நான்கு நீதி கருத்துக்கள் காணப்படுவதால் இப்பெயர் பெற்றது.

4. இன்னா நாற்பது

இவ்வுலகில் துன்பம் தருவன இவை இவை என ஒவ்வொரு பாடலுக்கும் நான்கு இன்னாதவைகளை கூறுவதாக 40 பாடல்களைக் கொண்டது இன்னா நாற்பதாகும். இதனை இயற்றியவர் கபிலர் ஆவார்.

5. இனியவை நாற்பது

பூதஞ்சேந்தனார் என்பவரால் பாடப்பட்ட இந்நூலில் 41 பாடல்கள் காணப்படுகின்றன. இவ்வுலகில் இன்பம் தருவன எவை என்பதை பற்றி எடுத்துக் கூறியுள்ளார்.

6. திரிகடுகம்

சுக்கு,மிளகு,திப்பிலி என்னும் மூன்று மருந்துகளால் ஆனது திரிகடுகம் எனப்படும். அதுபோல் ஒவ்வொரு பாடலிலும் மூன்று உறுதிப் பொருட்களைக் கொண்டுள்ளதால் இந்நூல் திரிகடுகம் என அழைக்கப்படுகிறது.101 பாடல்களைக் கொண்ட இன்நூலை நல்லாதனார் பாடியுள்ளார்.

7. சிறுபஞ்சமூலம்

கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறு மல்லி, பெருமல்லி, நெருஞ்சில் ஆகிய ஐந்து வேர்கள் சிறுபஞ்சமூலம் எனப்படும். இது நோய்க்கு மருந்தாவது போல மனிதர்களின் அக நோயினைப் போக்கும் ஐந்து ஐந்து கருத்துகளைக் கூறுவதாக ஒவ்வொரு பாடலும் காணப்படுவதால் சிறுபஞ்சமூலம் எனப்பட்டது. இதன் ஆசிரியர் காரியாசான் என்பவர் ஆவார். இதில் 102 பாடல்கள் காணப்படுகின்றன.

8. ஏலாதி

கணிமேதாவியார் என்பவரால் எழுதப்பட்ட ஏலாதி 80 பாடல்களைக் கொண்டதாகும். ஏலம், இலவங்கப்பட்டை, சிறு நாவற்பூ, மிளகு, சுக்கு, திப்பிலி ஆகிய ஆறும் கலந்த மருந்து ஏலாதி எனப்படும். இது நோய்க்கு மருந்தாவது போல மனிதர்களின் அக நோயினைப் போக்கும் ஆறு ஆறு கருத்துகளைக் கூறுவதாக ஒவ்வொரு பாடலும் காணப்படுவதால் இது ஏலாதி எனப்பட்டது.

9. ஆசாரக்கோவை

ஆசாரம் என்றால் நல்ல முறையில் நடத்தல் என்று பொருள். உள்ளும் புறமும் தூய்மையுடமையே ஆசாரமாகும். அவ்வகை ஆசாரத்தைப் பற்றி கூறுவது ஆசாரக்கோவை ஆகும்.100 பாடல்களைக் கொண்ட இந்நூலை பெருவாயின் முள்ளியார் பாடியுள்ளார்.

10. முதுமொழிக்காஞ்சி

முதுமொழிக்காஞ்சியின் ஆசிரியர் மதுரைக் கூடலூர்கிழார் ஆவார். இந்நூல், பத்துப்பாக்களால் ஆகிய 10 அதிகாரங்களைக் கொண்டது. ஒவ்வொரு அதிகாரமும் "ஆர்கலியுலகத்து" எனத் தொடங்கும். நீதி நூல்களில் இ.ன்தொன்றே சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் தன்மை கொண்டதாக காணப்படுகிறது.

11. பழமொழி

தொல்காப்பியர் கூறும் "முதுசொல்" என்பது பழமொழியைக் குறிக்கும். 400 பாடல்களைக் கொண்ட பழமொழி நானூறு எனவும் கூறுவர். முன்றுரை அரையனாரால் பாடப்பட்ட ஒவ்வொரு பாடலிலும் ஒரு பழமொழி பயின்று வருகிறது. இந்நூல், திருக்குறள் நாலடியார் போன்று அறம் கூறும் நூலாக விளங்குகிறது.

மேற்கண்ட பதினோரு நூல்களும் அறக்கருத்துக்களைக் கூறும் நூல்களாக பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் காணப்படுகின்றது.

அகம் சார்ந்த நூல்கள் - அக நூல்கள்

பதினெண் கீழ்க்கணக்கு நூற்களில் அகக் கருத்துக்களைக் கூறும் நூல்களாக ஆறு நூல்கள் காணப்படுகின்றன. அவை,

1. கார் நாற்பது, 2. ஐந்திணை ஐம்பது, 3. ஐந்திணை எழுபது,

4.திணைமாலை 150, 5. திணைமொழி ஐம்பது, 6. கைந்நிலை

என்பனவாகும்.

12. கார் நாற்பது

மதுரை கண்ணன் கூத்தனார் என்பவரால் பாடப்பட்ட, கார் நாற்பது என்னும் இந்நூல், முல்லைத் திணையின் பெரும்பொழுதான கார்காலத்தில், முல்லை நிலத் தலைவியின் ஒழுக்கத்தினை கூறுவதாக அமைந்துள்ளது. இதில் அகக்கருத்துக்களைக் கூறும் 40 பாடல்கள் காணப்படுகின்றன.

13. ஐந்திணை ஐம்பது

மாறன் பொறையனார் என்பவரால் பாடப்பட்ட ஐந்திணை ஐம்பது, ஐந்து திணைகளுக்கும் திணைகளுக்கு பத்து பாடல்கள் வீதம் 50 பாடல்களைக் கொண்டதாகும்.

14. ஐந்திணை எழுபது

மூவாதியார் என்னும் புலவரால் பாடப்பட்ட ஐந்திணை எழுபது, ஐந்து திணைகளுக்கும் திணைகளுக்கு 14 பாடல்கள் வீதம் 70 பாடல்களைக் கொண்டதாகும்.

15. திணை மாலை 150

திணை மாலை நூற்றிறைம்பதை பாடியவர் கணிமேதாவியா ராவார். ஐந்து திணைகளுக்கும் உரிய 153 பாடல்கள் இதில் காணப்படுகின்றன

16. திணைமொழி ஐம்பது

கண்ணன் சேந்தனார் என்பவரால் பாடப்பட்ட திணைமொழி ஐம்பதில் 50 அகப்பொருள் பாடல்கள் காணப்படுகின்றன.

17. கைந்நிலை

புல்லங்காடனார் என்பவரால் பாடப்பட்டது கைந்நிலையாகும். இதில் ஐந்து திணைகளுக்கும் பாடல்கள் காணப்படுகின்றன. திணைக்கு 12 பாடல்கள் வீதம் 60 பாடல்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

மேற்கண்ட ஆறு நூல்களும் அகத்திணை சார்ந்த நூல்களாக பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் இடம்பெற்றுள்ளது.

புறம் சார்ந்த நூல்

பதினெண்கீழ்க்கணக்கு நூற்களில் புறப்பொருளைக் கூறும் புறம் சார்ந்த நூலாக களவழி நாற்பது என்ற நூல் மட்டும் காணப்படுகின்றது.

18. களவழி நாற்பது

களவழி நாற்பதில் புறக்கருத்துகளை கூறும் 40 பாடல்கள் காணப்படுகின்றன. இதன் ஆசிரியர் பொய்கையார் ஆவார். இந்நூல் சோழன் செங்கணான் என்னும் மன்னன், கழுமலம் என்னும் இடத்தில் சேரமான் கணைக்கால் இரும்பொறை என்னும் மன்னனை போரிட்டு வென்ற செய்தியைக் கூறுவதாக அமைந்துள்ளது

கீழ்க்கணக்கு நூல்களின் பா வகை

கீழ்க்கணக்கு நூல்கள் ப.ஃறொடை, நேரிசை, இன்னிசை, சிந்தியல், குறள் வெண்பாக்களால் ஆன நூல். ப.ஃறொடை வெண்பா வருதலினால் சில பாடல்கள் நான்கடிக்கு அதிகமாக ஐந்து, ஆறு அடிகளிலும் வருகிறது. பொதுவாக நான்கும், நான்கிற்குக் கீழ்ப்பட்ட அடிகளுமே பதினெண் கீழ்க்கணக்கில் பெரும்பாலும் அமைந்துள்ளன. இரண்டாம் அடியில் நான்கு சீராய் வராது ஈற்றடி போல் முச்சீராய் வரும் சவலை வெண்பாவும் கீழ்க்கணக்கு நூல்களில் இடம் பெற்றுள்ளது.

சங்கம் மருவிய காலம் இருண்ட காலமா?

சங்கம் மருவிய காலம் இருண்ட காலம் என்று வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப்படுகிறது. ஆனால், அக்காலத்தில் தான் தமிழின் மிக முக்கியமான நீதி நூல்கள் தோன்றியிருக்கின்றன. ஆகவே, அதற்கான தேவை அக்காலகட்டத்தில் இருந்திருக்கிறது என்பதும், அத்தகைய சூழல்கள் அப்போது நிலவியிருக்கின்றன என்பதும் ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது.

அலகு 2

பக்தி இலக்கியங்களும் காப்பியங்களும்

பக்தி இலக்கியங்களும் காப்பியங்களும் தமிழ் இலக்கியத்தின் இரு முக்கிய வகைகளாகும், அவை வெவ்வேறான நோக்கங்களையும் வடிவங்களையும் கொண்டுள்ளன. பக்தி இலக்கியங்கள் இறைவனிடமான அன்பு மற்றும் பக்தியை மையமாகக் கொண்டுள்ளன. காப்பியங்கள் நல்ல நீதிகளை உள்ளடக்கிய, கதை சார்ந்த இலக்கியங்களாகும். பக்தி இலக்கியங்கள் நாயன்மார்களின் தேவாரப் பாடல்கள் மற்றும் ஆழ்வார்களின் நாலாயிர திவ்வியப் பிரபந்தம் போன்ற வடிவங்களில் பெருகியிருந்தன. மணிமேகலை, சிலப்பதிகாரம் போன்றவை காப்பியங்களாகும்.

பக்தி இலக்கியங்கள்

மையக் கருத்து: இறைவனிடமான அன்பு மற்றும் பக்தி உணர்வுகளை வெளிப்படுத்துவது.

வடிவம்: பதிகங்கள் (பல்லவர் காலத்தில் தோன்றியவை), பிரபந்தங்கள், பாடல்கள்.

உதாரணங்கள்: திருஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோரின் தேவாரப் பாடல்கள், ஆண்டாள், நம்மாழ்வார் ஆகியோரின் பாசுரங்கள்.

பங்கு: சமயத்தை வளர்ப்பதில் முக்கியப் பங்கு வகித்தது, சமண, பௌத்த சமயங்கள் தோற்கடிக்கப்படவும் உதவியது.

காப்பியங்கள்

மையக் கருத்து: நல்ல நீதிகளைக் கொண்ட, கதை வடிவில் அமைந்த இலக்கியங்கள்.

வடிவம்: கதை, பாத்திரங்கள், இலக்கண விதிகள் ஆகியவற்றைக் கொண்டவை.

உதாரணங்கள்: சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவக சிந்தாமணி.

பங்கு: தமிழ்ப் பெருங்காப்பியங்களின் இலக்கணத்தை வரையறுக்க தண்டியலங்காரம் போன்ற நூல்கள் உதவின.

இரண்டிற்கும் இடையே உள்ள தொடர்பு

பக்தி வெளிப்பாடு: காப்பியங்கள் எழுதப்பட்ட காலத்திலேயே பக்தி இலக்கியங்களும் உருவாகின. சங்க இலக்கியங்களில் கூட, இராமாயணம், பாரதம் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

கதைகளில் பக்தி: பல காப்பியங்களில் இறைவனின் அவதாரங்கள் மற்றும் பக்தியின் வெளிப்பாடுகள் கதைகளில் இடம்பெற்றன.

இலக்கிய வளர்ச்சி: பக்தி இலக்கியங்களின் வளர்ச்சி, காப்பியங்களின் உருவாக்கத்திற்கு உதவியது.

வடிவங்கள்: பக்தி இலக்கியங்களும் காப்பியங்களும் வெவ்வேறு கவிதை வடிவங்களைப் பயன்படுத்தினாலும், சில சமயங்களில் இரண்டிற்கும் இடையே பொதுவான வடிவங்கள் காணப்பட்டன.

பக்திஇலக்கியம்

பக்தி இலக்கியம் என்பது இறைவனிடம் அல்லது பெரியவர்களிடம் கொள்ளும் அன்பையும் பக்தியையும் மையமாக வைத்து எழுதப்பட்ட இலக்கியமாகும். இது பக்தி இயக்கத்தின் ஒரு பகுதியாகும், இது இடைக்காலத்தில் இந்திய கலாச்சாரம் மற்றும்

ஆன்மீகத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. தமிழ்நாட்டில் பக்தி இலக்கியம் பல்லவர் காலத்தில் பெரிதும் வளர்ந்தது, இதில் தேவாரம், திருவாய்மொழி, மற்றும் திருவாசகம் போன்ற படைப்புகள் முக்கியமானவை.

பக்தி இலக்கியத்தின் முக்கிய அம்சங்கள்:

பொருள்: இறைவனையும், பெரியோர்களையும், குலதெய்வத்தையும் போற்றிப் பாடும் பாடல்களே பக்தி இலக்கியம் எனப்படுகின்றன.

தொடக்கம்: காரைக்காலம்மையார், சேரமான் பெருமாள், முதலாழ்வார் போன்றோர்களால் தமிழில் பக்தி இலக்கியம் தொடங்கப்பட்டது.

காலம்: கி.பி. 6 முதல் 9 ஆம் நூற்றாண்டு வரை பக்தி இலக்கியங்கள் இயற்றப்பட்டன.

வகைகள்: தனித்தனிப் பதிகங்களாகவும், பிரபந்தங்களாகவும் பக்தி அனுபவங்களை வெளிப்படுத்துகின்றன.

முக்கியத்துவம்: இது இந்து மதத்தின் வளர்ச்சிக்கு உதவியது, சமணம் மற்றும் பௌத்த சமயங்களுக்கு மாற்றாக வளர்ந்தது.

இலக்கிய வடிவங்கள்: பக்தி இலக்கியத்தில் தல புராணங்கள், அந்தாதி, கலம்பகம், உலா, பிள்ளைத்தமிழ் போன்ற பல்வேறு சிற்றிலக்கிய வகைகளும் அடங்கும்.

எடுத்துக்காட்டுகள்: திருஞானசம்பந்தரின் தேவாரப் பாடல்கள், ஆழ்வார்களின் திருவாய்மொழி, மற்றும் காரைக்காலம்மையாரின் பாடல்கள் போன்றவை பக்தி இலக்கியத்தின் மிகச்சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகும்.

பக்தி இலக்கிய காலம் யாருடைய காலம்

பல்லவர் காலத்தையே குறிக்கிறது, இது கி.பி 6 முதல் 9 ஆம் நூற்றாண்டு வரை நீடித்தது. இக்காலத்தில் சமணம் மற்றும் பௌத்த சமயக் கருத்துக்களுக்கு எதிராக இந்து சமய பக்தி இயக்கம் வளர்ந்தது. பல்லவர் காலம் பக்தி இலக்கியங்களின் பெரும் வளர்ச்சிக்கு முக்கியக் காரணமாக இருந்தது.

காலம்: கி.பி 600 முதல் 850 வரை நீடித்த பல்லவர் ஆட்சி காலமே பக்தி இலக்கியங்களின் முக்கிய காலகட்டமாகும்.

வளர்ச்சி: பல்லவர் காலத்தில் பக்தி இலக்கியங்கள் பெருமளவில் தோன்றின, தமிழ் மொழியில் வேறு எந்த மொழியிலும் தோன்றாத அளவிற்குத் தமிழில் பக்தி இலக்கியங்கள் உருவாகின.

தொடக்கம்: பக்தி இலக்கியத்தின் தொடக்கம் காரைக்காலம்மையார், சேரமான் பெருமாள், முதலாழ்வார் ஆகியோரால் 6 ஆம் நூற்றாண்டு முதல் தொடங்கியது என அறியப்படுகிறது.

சமய வளர்ச்சி: இக்காலத்தில் சைவ மற்றும் வைணவ சமயங்கள் வலுப்பெற்றன, மேலும் சமண, பௌத்த சமயங்களின் செல்வாக்கு குறைந்தது.

பக்தி இலக்கியத்தின் முன்னோடி யார் என்றால் காரைக்கால் அம்மையார் பக்தி இலக்கியத்தின் முன்னோடியாக கருதப்படுகிறார். அந்தாதி, இரட்டை மணிமாலை, பதிகம்,கடைக்காப்பு, புதிய யாப்பு வடிவான கலித்துறை மற்றும் வெண்பா வடிவத்தினை பக்தி இலக்கியத்தில் அறிமுகம் செய்தார்.

பக்தி வகைகள்

பக்தி நிபந்தனையற்றது மற்றும் நிபந்தனையற்றது என இரண்டு வகைப்படும்.

பக்தி பாடல் என்றால்

பக்தி பாடல் (னுநஎழவழையெட ளழபெ) என்பது மத அனுஷ்டானங்கள் மற்றும் சடங்குகளுடன் குறித்த பாடலாகும். பாரம்பரியமாகப் பக்தி இசை இந்து இசை, யூத இசை, புத்த இசை, இசுலாமிய இசை மற்றும் கிறித்தவ இசை ஆகியவற்றின் ஒரு பகுதியாக இருந்து வருகிறது. ஒவ்வொரு பெரிய மதமும் பக்தி பாடல்களுடன் அதன் பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது.

பக்தி இலக்கியம் காட்டும் பண்பாடுகள்

நிலையாமை உணர்த்தப்படுகிறது. கலைகளும் போற்றப்படுகின்றன. இந்த உலக இன்பங்களை நுகர்ந்தவாறே இறைவனிடத்தில் பக்தி செலுத்தலாம் என்ற தெளிவைப் பக்தி இலக்கியம் தருகிறது. உலக வாழ்வைக் கண்டு அஞ்சும் அச்சம் நீங்கி, மக்கள் கூடி வழிபாடு செய்து பக்தியுணர்ச்சியில் திளைத்திருக்க ஊக்கமூட்டுகிறது.

உலகியல் இலக்கியங்கள் எனப் பல நூல்கள் தோன்றின. பக்தி இலக்கியங்களில் நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்களின் பாடல்கள், திருமூலரின் திருமந்திரம் போன்றவை அடங்கும். உலகியல் இலக்கியங்களில் நந்திக்கலம்பகம், பெருங்கதை, முத்தொள்ளாயிரம் மற்றும் பெருந்தேவனார் இயற்றிய பாரதம் போன்றவை முக்கியமானவை.

பக்தி இலக்கியங்கள்

சைவ இலக்கியங்கள்: திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோரின் தேவாரப் பாடல்கள் மற்றும் திருமூலரின் திருமந்திரம் ஆகியவை முக்கிய பக்தி இலக்கியங்கள் ஆகும்.

வைணவ இலக்கியங்கள்: முதலாழ்வார் மூவர் அல்லாத மற்ற ஆழ்வார்களின் பாசுரங்களும் இக்காலத்தில் இயற்றப்பட்டன.

உலகியல் இலக்கியங்கள்

நந்திக்கலம்பகம்: பல்லவர் காலத்தில் தோன்றிய முக்கியமான கவிதை நூல்களில் இதுவும் ஒன்று.

பெருங்கதை: கொங்குவேளிர் இயற்றிய ஐம்பெரும் காவியங்களில் ஒன்றான பெருங்கதை பல்லவர் காலத்தில் எழுதப்பட்டது.

முத்தொள்ளாயிரம்: இதுவும் இக்காலத்தில் தோன்றிய ஒரு சிறந்த இலக்கியப் படைப்பாகும்.

பெருந்தேவனார் பாரதம்: பெருந்தேவனார் இயற்றிய பாரதம் இந்த காலத்தில் எழுதப்பட்டது.

பிற இலக்கியங்கள்: இறையனார் களவியலுறை, பாட்டியல் நூல்கள், பாரத வெண்பா போன்ற பல நூல்களும் பல்லவர் காலத்தில் தோன்றியவை.

வடமொழி இலக்கியங்கள்

மத்தவிலாசப் பிரகசனம்: பல்லவ மன்னன் மகேந்திரவர்ம பல்லவனால் வடமொழியில் எழுதப்பட்ட ஒரு நகைச்சுவை நாடக நூல்.

காவ்யாதர்சம்: தண்டியின் வடமொழி நூலான இதுவும் பல்லவர் காலத்தில் தோன்றியது.

லோகவிபாகம், கிராதார்ச்சுனியம், அவந்திசுந்தரி கதை: இவையும் பல்லவர் கால வடமொழி வளர்ச்சிக்குச் சான்றுகளாகும்

பக்தி இலக்கியம் பெருமளவில் தோன்றியது பல்லவர் காலத்திலேதான். வேறு எம்மொழியிலும் தமிழில் தோன்றிய அளவு பக்தி இலக்கியம் தோன்றவில்லை. இக்காலத்தில் எழுந்த பக்தி இலக்கியம் இருவகைப்பட்டது. தனித்தனிப் பதிகங்களால் பக்தி அனுபவங்களை வெளிப்படுத்துதல், பிரபந்தங்களாக வெளிப்படுத்துதல் என அவை இருவகையாக உள்ளன.

தனித்தனிப் பதிகங்களுள் சில, அகத்துறைகள் தழுவி அமைந்துள்ளன. பெரும்பாலானவை முன்னிலைப் பரவலாகக் கடவுள் வாழ்த்தாக உள்ளன. பிரபந்தங்களுள் பெரும்பாலானவை அகத்திணை இலக்கணங்களுக்கு ஏற்ப அமைந்தவை. பதிகங்களிலும் பிரபந்தங்களிலும் அன்பின் ஐந்திணை தழுவி வந்தவை சிலவே. ஏனைய பல கைக்கிளை, பெருந்திணை சார்ந்தவை. பக்திப் பேரன்பை உணர்த்த அவை பொருத்தமான திணைகள் என்பதே இதற்குக் காரணம் எனலாம்.

பாடல் உள்ளடக்கங்களில் திருப்பமும் நெகிழ்ச்சியும்

இடையில் தோன்றிய சில நீதி நூல்களை ஒதுக்கிவிட்டுப் பார்ப்போமானால் சங்க இலக்கியத்திலிருந்து பக்தி இலக்கியத்துக்கு இடையேயுள்ள வளர்ச்சியை நன்கு உணரலாம். பெயர் குறிப்பிடப்படாத கற்பனை மனிதர் இருவரின் காதலாக இருந்த பாட்டுகள் மாறி, தெய்வத்தின்மீது கொண்ட காதலைப் பாடும் பாட்டுகளாக வளர்ந்தன. அரசர்களின் வீரச் செயல்களைப் பாடும் நிலை மாறி, கடவுளின் அற்புத விளையாட்டுகளைப் பாடும் நிலை வளர்ந்தது, வள்ளல்களின் கொடையைப் பாடும் பாடல்களுக்கு ஈடாக, கடவுளின் அருட் செயல்களைப் பாடும் பாடல்கள் வளர்ந்தன. கற்பனைக் காதலுக்குப் பின்னணியாகப் பொதுவான இயற்கைச் சூழல் வருணிக்கப்பட்டிருந்தது மாறி, கடவுளிடம் செலுத்தும் பக்திக்குப் பின்னணியாகக் குறிப்பிட்ட ஊர்களின் (கோயில் தலங்களைச் சூழ்ந்த) இயற்கையழகைப் பற்றிய வருணனைகள் அமைந்தன. சங்க இலக்கியக் காதல் பாடல்கள் பலவற்றிலும் இயற்கை வருணனைகள் அமைந்தமை போலவே திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனார், திருமங்கையாழ்வார் முதலானவர்களின் பக்திப் பாடல்கள் பலவற்றிலும் சிறந்த இயற்கை வருணனைகள் அமைந்தமை காணலாம். இந்த உள்ளடக்க மாறுதலுக்குச் சமயங்கள் வழிவகுத்தன.

சங்க காலத்திற்குப் பிறகு

சங்க காலத்திற்குப் பிறகு தமிழ்நாட்டில் சமண, பௌத்த சமயங்கள் செல்வாக்குப் பெற்றன. துறவறத்திற்குப் பெருமை ஏற்பட்டது. அதனால் மக்களின் காதல் வாழ்வுக்கும் இல்லறத்திற்கும் இருந்த பெருமை குறையத் தலைப்பட்டது. இந்த உலகில் உள்ள இன்பங்களை வெறுத்து, மறுமையை மட்டும் நாடுவதே கடமை என்ற மனப்பான்மை வலுத்தது. ஆடல், பாடல், ஓவியம், சிற்பம் முதலிய கலைகளின் மதிப்புக் குன்றியது. இந்த நிலையிலும் சிலப்பதிகாரம் இருவகை நிலைகளையும் எடுத்துரைத்து இரண்டிற்கும் பாலம் போலவே அமைந்தது.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்

ஆழ்வார் நாயன்மார் பாடல்களில் துறவறம் பழிக்கப்படவில்லை இல்லறம் வெறுக்கப்படவில்லை. நிலையாமை உணர்த்தப்படுகிறது. கலைகளும் போற்றப்படுகின்றன. இந்த உலக இன்பங்களை நுகர்ந்தவாறே இறைவனிடத்தில் பக்தி செலுத்தலாம் என்ற தெளிவைப் பக்தி இலக்கியம் தருகிறது. உலக வாழ்வைக் கண்டு அஞ்சும் அச்சம் நீங்கி, மக்கள் கூடி வழிபாடு செய்து பக்தியுணர்ச்சியில் திளைத்திருக்க ஊக்கமூட்டுகிறது. “மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்” என்கிறது திருஞான சம்பந்தர் பாடிய தேவாரத்திலுள்ள அறிவுரை.

எல்லாம் இறைவன் தரும் இன்பங்களே

சமணத்துறவியாக, துறவிகளின் தலைவராக இருந்து சைவ சமயத்திற்குத் திரும்பியவர் எனக் கூறப்படும் திருநாவுக்கரசர் பாடியுள்ள பின்வரும் பாடலில் இயற்கை தரும் இன்பங்களும் இயற்கையைப் பயன்படுத்திப் பெறும் இன்பங்களும் கலை இன்பங்களும் எல்லாம் இறைவன் தரும் இன்பங்களே என்ற உண்மை விளங்குகிறது.

குருகாம் வயிரமாம் கூறு நாளாம்

கொள்ளும் கிழமையாம் கோளே தானாம்

பருகா அமுதமாம் பாலின் நெய்யாம்

பழத்தின் இரதமாம் பாட்டில் பண்ணாம்

ஒருகால் உமையாளோர் பாக னுமாம்

உள்நின்ற நாவிற்கு உரையா டியாம்

கருவாய் உலகுக்கு முன்னே தோன்றும்

கண்ணாம் கருகாவூர் எந்தை தானே.

(திருநாவுக்கரசர் தேவாரம்)

பக்திப் பாடல்கள் விளைத்த புரட்சி

ஆழ்வார் நாயன்மார்களின் பக்திப் பாடல்கள் விளைத்த புரட்சி ஒன்று கடவுளுக்குமுன் மக்கள் எல்லோரும் சமமானவர்கள். கடவுள் ஒருவரே எல்லா மக்களுக்கும் தலைவர் என்ற கருத்தைப் பரப்ப அந்தப் பாடல்கள் உதவின. அதனால், அரசர்களையும் செல்வர்களையும் பாடுவதற்குப் பயன்பட்ட தமிழ், கடவுளைப் பாடுவதற்கு மட்டுமே பயன்பட வேண்டும் என்ற கொள்கை வளர்ந்தது. அரண்மனையில் நிகழ்ந்துவந்த விழாக்கள் பல, கோயில்களில் கடவுளுக்கு உரிய திருவிழாக்களாக மாறின.

பக்தி இலக்கியத்தில் வடிவம், வெளிப்பாட்டு முறைகள்

பக்திப் பாடல்கள்

வடிவம் என்ற அடிப்படையில் நோக்கும் போது, கற்றவர்களுக்கு உரியனவாகப் பாடப்பட்ட சங்கப் பாட்டுகள் போலன்றிக் கற்றவர்களோடு மற்றவர்களும் கூடிப் பாடுவதற்கு ஏற்றவாறு தமிழ் எளியதாய் நெகிழ்ந்து அமைந்தவை ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடிய பக்திப் பாடல்கள். ஊர் தோறும் பக்தர்கள் கூட்டம் கூட்டமாகப் பாடிக் கோயில்களைச் சுற்றிவந்து வழிபடுவதற்கு ஏற்ற வகையில் இசைப்பாடல்களாய் அவை அமைந்தன. இவ்வாறு நடை எளிமையும் இசையினிமையும் கூடினமையால், தமிழ் இலக்கிய நோக்கிலும் போக்கிலும் மாறுதல் ஏற்பட முடிந்தது.

பதிகம்

இக்காலத்தில் பெரும்பான்மை வகிப்பவை பதிகங்களே. பதிகம் என்பது பெரும்பாலும் பத்துப் பாக்களைக் கொண்டது. பதிகம், அப்பர் காலம் தொட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ச்சி பெற்று மாணிக்கவாசகர் காலத்தில் உச்சநிலை பெற்றது. சங்ககாலச் சான்றோர்கள் தெய்வானுபவத்தை வெளியிடப் பரிபாடல் முதலிய இசைச் செய்யுள் வகைகளைப் பயன்படுத்தினர் என்பது நாம் அறிந்த ஒன்று. நாயன்மார்களும் ஆழ்வார்களும் பதிகத்தைப் பயன்படுத்தினர். இது செய்யுள் வடிவத்தில் வளர்ச்சியை உணர்த்துகிறது எனலாம். அடியார்கள் தாம் புலப்படுத்தும் உணர்ச்சியை வரிசையாக அமைத்துக் காட்டுவதற்குப் பதிக முறையைப் பயன்படுத்தினர். இப்பதிக அமைப்பு சங்ககால யாப்பான ஒத்தாழிசைக் கலிப்பாவிலிருந்து உருவானது எனலாம். தாழிசை ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வருவது. தாழிசையில் ஓசையிலும் பொருளிலும் ஒத்திருத்தல் போலவே பதிகத்திலும் அவை ஒத்திருக்கின்றன. அக்கால மக்களைப் பக்தி நெறியில் ஈடுபடுத்த ஏற்ற கருவியாகப் பதிகம் அமைந்தது.

அகவல், வெண்பா

அகவல், வெண்பா முதலியனவும் பக்தி இலக்கியக் காலத்தில் கையாளப்பட்டாலும், பெருவழக்காகக் கையாளப்பட்டவை தாழிசை, துறை, விருத்தம் என்னும் பாவினங்களே. பல்வேறு உணர்ச்சி வேறுபாடுகளைக் காட்டப் பல்வேறு வகை ஓசைமுறைகள் பயன்படுத்தப்பட்டன. தமிழுக்கு அவை புதுவரவுகள். காப்பியங்கள் அகவற்பாவில் எழுதப்படவேண்டும் என்ற மரபு மாறுபட்டமைக்கு பக்தி இலக்கியக் காலப் பாவகைகள் காரணம் எனலாம்.

பழைமையான இசைச் செல்வம்

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடிய பாடல்கள் எண்ணாயிரமும் தேவாரம் என்ற பெயரால் சிறந்த பக்தி இலக்கியமாக விளங்குகின்றன. இன்ன பண் என்று குறிப்பிடப்பட்டு அவை பாடப்படுகின்றன. இவ்வளவு பழைமையான இசைச் செல்வம் வேறுமொழிகளில் இல்லை எனலாம்.

எல்லாம் கடவுள் செயலே.

திருநாவுக்கரசர் தாண்டகம் பாடுவதில் வல்லவராகத் திகழ்ந்தார். எல்லாம் கடவுள் செயலே என்பதை ஒரு திருத்தாண்டகப் பாட்டில் மிக அழகாகப் பாடியுள்ளார் திருநாவுக்கரசர். நீ ஆடச் செய்தால் அதற்குத் தகுந்தபடி ஆடாதவர் யார்? நீ அடங்கச் செய்தால் அடங்காதவர் யார்? நீ ஓடச் செய்தால் ஓடாதவர் யார்? உருகச் செய்தால் உருகாதவர் யார்? நீ காணச் செய்தால் காணாதவர் யார்? நீ காட்டா விட்டால் காணவல்லவர் யார்? என்ற கருத்தினை,

ஆட்டுவித்தால்ஆர் ஒருவர் ஆடா தாரே

அடக்குவித்தால் ஆர் ஒருவர் அடங்கா தாரே

ஓட்டுவித்தால் ஆர்ஒருவர் ஓடா தாரே

உருகுவித்தால் ஆர் ஒருவர் உருகா தாரே

பாட்டுவித்தால் ஆர் ஒருவர் பாடா தாரே

பணிவித்தால் ஆர்ஒருவர் பணியா தாரே

காட்டுவித்தால் ஆர்ஒருவர் காணா தாரே

காண்பார் ஆர் கண்ணுதலாய் காட்டாக் காலே

(திருநாவுக்கரசர் தேவாரம்)

என்ற தாண்டகப் பாட்டில் எடுத்துரைக்கிறார். அனைவருக்கும் புரியும் வகையில் எளிய சொற்களைக் கையாண்டு பொருள் நிறைந்த இனிய பாடல்களைப் பாடியவர் திருநாவுக்கரசர்.

திருஞானசம்பந்தர் சந்தங்களை அமைத்து அரிய பாடல்களைப் பாடினார். திருஞானசம்பந்தர் திரு அனேக தங்காவதம் என்ற பகுதியில்,

சூலமுண் டுமழு வுண்டவர் தொல்படை சூழ்கடல்

ஆலமுண் டபெரு மான்றன னேகதங் காவதம்

நீலமுண் டதடங் கண்ணுமை பாகம்நி லாயதோர்

கோல முண்டள வில்லைகு லாவிய கொள்கையே.

(ஞானசம்பந்தர் தேவாரம்)

எனச் சந்தங்களைப் பயன்படுத்திப் பாடியுள்ளார்.

திருக்குறள் --- திருவிருக்குக்குறள்

ஏழு சீர்களைக் கொண்ட ஈரடி வெண்பா வடிவம் திருக்குறள். ஆனால் எட்டுச் சீர்களைக் கொண்டு, இரண்டே அடிகளில் பாடல்களை இயற்றி, அதற்குத் 'திருவிருக்குக்குறள்' என்று பெயரிட்டுள்ளார் திருஞானசம்பந்தர்.

எடுத்துக்காட்டு:

ஞால மேழுமாம் ஆல வாயிலார்

சீல மேசொலீர் காலன் வீடவே.

(திருவிருக்குக்குறள், பா.2)

நாட்டுப் பாடல்

உருக்கமான திருவாசகப் பாடல்களைப் பாடிய மாணிக்கவாசகர், அக்காலத்தில் மக்களிடையே இருந்த சில நாட்டுப் பாடல் வடிவங்களையும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். சிறப்பாக, இளம்பெண்கள் ஆடிப் பாடும் பாடல் வடிவங்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் விளையாடல்களுடன் பக்தி உணர்வை கலந்து அமைத்துத் தந்திருக்கிறார். திருவாசகத்தில் உள்ள திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள¢ளேணம், திருத்தோணோக்கம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருப்பொன்னூசல் ஆகியவை அவ்வாறு பாடப்பட்டவை.

பெண்கள் உட்கார்ந்து ஆடுவது அம்மானை வாசனைப்பொடி இடித்தவாறே பாடுவது பொற்சுண்ணம் மலர் பறிக்கும்போது பாடுவது பூவல்லி ஊசல் ஆடும்போது பாடுவது ஊசல் தும்பி, தோணோக்கம், சாழல் முதலியனவும் மகளிர் ஆடல்களைக் குறிப்பன. நாட்டுப்பாடல்கள் ஏட்டுப் பாடல்களாக வடிவம் பெறுவதற்கு முன்னோடியாக விளங்கியவர் மாணிக்கவாசகர்.

மரபுசார்ந்த இசைப்பாடல்கள்

ஆழ்வார்கள் பாடிய நாலாயிரத் திவ்விய பிரபந்தத்திலும் நாட்டுப்பாடல் மரபுசார்ந்த இசைப்பாடல்கள் உள்ளன. திருமங்கையாழ்வாரும், மாணிக்கவாசகரைப்போல், நாட்டுப் பாடல்கள் சிலவற்றைப் பின்பற்றிப் பக்திப் பாடல்கள் பாடியுள்ளார். மகளிர் விளையாடும் விளையாட்டில் சாழல் என்பது ஒன்று. தும்பியை அழைத்துப் பெண்கள் பாடுவது ஒரு வகை. குயிலே கூவாய் என்று பாடுவது மற்றொரு வகை. வீட்டில் பல்லி ஒரு திசையில் ஒலித்தால் யாரோ விருந்தினர் வருவார் என்று நம்பும் பழைய நம்பிக்கையை ஒட்டி, 'திருமால் வருமாறு ஒலிசெய், பல்லியே!' என்று பாடுவது இன்னெரு வகை. இவ்வாறு சாழல் முதலான வகைகளில் நாட்டுப் பாடல் மரபில் பல பாடல்கள் பாடியுள்ளார் திருமங்கையாழ்வார்.

கூவாய் பூங்குயிலே

குளிர்மாரி தடுத்துகந்த

மாவாய் கீண்ட மணிவண்ண னைவரக்

கூவாய் பூங்குயிலே.

(நாலாயிர. 1944) இது குயிலை அழைத்துப் பாடும் பாட்டுகளில் ஒன்று.

கொட்டாய் பல்லிக்குட்டி

குடமாடிஉலகளந்த

மட்டார் பூங்குழல் மாதவ னைவரக்

கொட்டாய் பல்லிக்குட்டி.

(நாலாயிர.1945) இது பல்லிப் பாடல்களில் ஒன்று. இவை வெண்டுறை எனும் யாப்பில் அமைந்தவை.

கவிதைச் சுவை நிரம்பிய பக்திப் பாடல்கள்.

சங்க இலக்கியத்துள் காணப்படும் காதல் மரபுகளை அமைத்தும் திருமங்கையாழ்வார் பக்திப் பாடல்கள் பாடியுள்ளார். வண்டு, நாரை முதலியவற்றைத் தூது அனுப்பித் திருமாலின் அன்பை வேண்டச் செய்யும் பாடல்கள் சுவையானவை. "நாரையே! இன்றே நீ சென்று திருமாலுக்கு என் காதலைப்பற்றிச் சொல்லி வருவாயானால், எனக்கு அதைப்போன்ற இன்பமான உதவி வேறு எதுவும் இல்லை. அதற்குக் கைம்மாறாக, இந்தப் பசுமையான இடமெல்லாம் உன்னுடையதே ஆகுமாறு, நீ இங்கெல்லாம் மீன்களைக் கவர்ந்து உண்பதற்காகத் தருவேன். தந்த பிறகு, இங்கே உன் பெண் துணையும் நீயுமாக வந்து இனிமையாகத் தங்கி இந்த உலகில் இன்பமாக வாழலாம்" என்கிறார். காதல் நோயால் வருந்தி வாடிய மகளைப்பற்றிக் கவலைப்பட்டுத் தாய் சொல்லும் சொற்களாகவும், மகளின் நோயையும் வாட்டத்தையும்பற்றி அறிந்து குறி சொல்லவல்ல கட்டுவிச்சியின் சொற்களாகவும் அவர் பாடியுள்ள பாடல்களும் கவிதைச் சுவை நிரம்பிய பக்திப் பாடல்களாகும்.

திருமங்கையாழ்வாரின் பெரிய திருமடலும், சிறிய திருமடலும்

திருமங்கையாழ்வாரின் பெரிய திருமடலும், சிறிய திருமடலும் அவரது தனித்தன்மையை வெளிப்படுத்துவனவாகத் திகழ்கின்றன. நாணமும் அடக்கமும் கொண்ட பெண்கள் மடலூர்தல் இல்லை என்ற பழைய மரபை மாற்றி இயற்றப்பட்டன இவ்விரு மடல்களும்.

திருமாலைக் காதலிக்கும் பெண்கள் மடலேறுகின்றனர்.

அன்ன நடையார் அலர் ஏச ஆடவர்மேல்

மன்னும் மடலூரார் என்பதோர் வாசகமும்

தென்னுரையிற் கேட்டறிவதுண்டு அதனை யாம் தெளியோம்

மன்னும் வடநெறியே வேண்டினோம்.

(பெரிய திருமடல்,38 - 39) எனக் குறிப்பிடுகின்றார் தம்மைத் தலைவியாக உருவகித்துக் கொள்ளும் திருமங்கையாழ்வார்.

மேலும், காதலுக்காக நாணம் துறந்து சென்றவர்கள் இகழ்ச்சிக்கு உரியவர்களா என்ற வினா எழுப்புகிறார்.

வாரார் வனமுலை வாசவதத்தையென்று

ஆராலும் சொல்லப் படுவாள் அவளும்தன்

பேராயம் எல்லாம் ஒழியப் பெருந்தெருவே

தாரார் தடந்தோள் தளைக்காலன் பின்போனாள்

ஊரார் இகழ்ந்திடப் பட்டாளோ?

(சிறிய திருமடல், 66-67) இவ்வாறு பெண்கள் மடலேறும் மரபாகப் பெரிய திருமடலையும், சிறிய திருமடலையும் பாடியுள்ளார்.

பழைய யாப்பு வடிவங்களும் பயன்படுத்தப்படுதல்

பொய்கையாழ்வார் இயற்றிய முதல்திருந்தாதியில் வெண்பாவையே பயன்படுத்தியுள்ளார். எடுத்துக்காட்டாகக் கீழ்க் குறிப்பிடும் பாடலைப் பார்க்கலாம்.

வையம் தகளியா வார்கடலே நெய்யாக

வெய்ய கதிரோன் விளக்காகச் - செய்ய

சுடராழி யான்அடிக்கே சூட்டினென்சொன் மாலை

இடராழி நீங்குகவே என்று.

(முதல் திருவந்தாதி, பா.1) பேயாழ்வார் இயற்றிய பாடலிலும் வெண்பாவே பயன்படுத்தப் பட்டுள்ளது.

திருக்கண்டேன், பொன்மேனி கண்டேன் திகழும்

அருக்கன் அணிநிறமும் கண்டேன் - செருக்கிளரும்

பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்

என்னாழி வண்ணன்பால் இன்று,

(மூன்றாம் திருவந்தாதி, பா.1) பக்தியால் பரவசப்பட்ட பூதத்தாழ்வார் ஞானத் தமிழை விரும்பி நாராயணனுக்கு ஞானவிளக்கு ஏற்றியதாக உருகிப் பாடுகிறார்.

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக

இன்புருகு சிந்தை இடுதிரியா - நன்புருகி

ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன் நாரணற்கு

ஞானத் தமிழ்புரிந்த நான்.

(இரண்டாம் திருவந்தாதி, பா.1) என வெண்பாவில் பாடியுள்ளார். எனவே, பக்தி இயக்கக் காலத்தில் முதல் ஆழ்வார் மூவரும் தம் பக்திப் பாசுரங்களில் வெண்பாக்களையே பயன்படுத்தியுள்ளனர் என்பதை அறியலாம்.

திருமழிசை ஆழ்வார்

அடுத்துள்ள திருமழிசை ஆழ்வார், வெண்பாவும், விருத்தமும் பாடியுள்ளார்.

பாலிற் கிடந்ததுவும் பண்டரங்கம் மேயதுவும்

ஆலில் துயின்றதுவும் ஆரறிவார் - ஞாலத்

தொருபொருளை வானவர்தம் மெய்ப்பொருளை அப்பில்

அருபொருளை யானறிந்த வாறு?

(நான்முகன் திருவந்தாதி, பா.3) திருமழிசை ஆழ்வார் விருத்தம் பாடியதற்கு எடுத்துக்காட்டு :

பூநி லாய ஐந்துமாய்ப் புனற்கண் நின்ற நான்குமாய்

தீநி லாய மூன்றுமாய் சிறந்த கால்இ ரண்டுமாய்

மீநி லாயது ஒன்றுமாகி வேறு வேறு தன்மையாய்

நீநி லாய வண்ணம் நின்னை யார்நி னைக்க வல்லரே?

(திருச்சந்த விருத்தம், பா.1)

இவ்வாறு பழைய யாப்புகளில் தொடங்கிப் பின்னர் இசைப்பா வடிவங்களில் வளர்ந்து பக்தி இலக்கியம் வடிவச் சிறப்புகள் கொண்டதாக வளர்ந்திருப்பதைக் காண்கிறோம்.

உலகியல் இலக்கியங்கள் எனப் பல நூல்கள் தோன்றின. பக்தி இலக்கியங்களில் நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்களின் பாடல்கள், திருமூலரின் திருமந்திரம் போன்றவை அடங்கும். உலகியல் இலக்கியங்களில் நந்திக்கலம்பகம், பெருங்கதை, முத்தொள்ளாயிரம் மற்றும் பெருந்தேவனார் இயற்றிய பாரதம் போன்றவை முக்கியமானவை.

பக்தி இலக்கியங்கள்

சைவ இலக்கியங்கள்: திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோரின் தேவாரப் பாடல்கள் மற்றும் திருமூலரின் திருமந்திரம் ஆகியவை முக்கிய பக்தி இலக்கியங்கள் ஆகும்.

வைணவ இலக்கியங்கள்: முதலாழ்வார் மூவர் அல்லாத மற்ற ஆழ்வார்களின் பாசுரங்களும் இக்காலத்தில் இயற்றப்பட்டன.

உலகியல் இலக்கியங்கள்

நந்திக்கலம்பகம்: பல்லவர் காலத்தில் தோன்றிய முக்கியமான கவிதை நூல்களில் இதுவும் ஒன்று.

பெருங்கதை: கொங்குவேளிர் இயற்றிய ஐம்பெரும் காவியங்களில் ஒன்றான பெருங்கதை பல்லவர் காலத்தில் எழுதப்பட்டது.

முத்தொள்ளாயிரம்: இதுவும் இக்காலத்தில் தோன்றிய ஒரு சிறந்த இலக்கியப் படைப்பாகும்.

பெருந்தேவனார் பாரதம்: பெருந்தேவனார் இயற்றிய பாரதம் இந்த காலத்தில் எழுதப்பட்டது.

பிற இலக்கியங்கள்: இறையனார் களவியலுறை, பாட்டியல் நூல்கள், பாரத வெண்பா போன்ற பல நூல்களும் பல்லவர் காலத்தில் தோன்றியவை.

வடமொழி இலக்கியங்கள்

மத்தவிலாசப் பிரகசனம்: பல்லவ மன்னன் மகேந்திரவர்ம பல்லவனால் வடமொழியில் எழுதப்பட்ட ஒரு நகைச்சுவை நாடக நூல்.

காவ்யாதர்சம்: தண்டியின் வடமொழி நூலான இதுவும் பல்லவர் காலத்தில் தோன்றியது.

லோகவிபாகம், கிராதார்ச்சுனியம், அவந்திசுந்தரி கதை: இவையும் பல்லவர் கால வடமொழி வளர்ச்சிக்குச் சான்றுகளாகும். உலகியல் இலக்கியங்கள் எனப் பல நூல்கள் தோன்றின. பக்தி இலக்கியங்களில் நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்களின் பாடல்கள், திருமூலரின் திருமந்திரம் போன்றவை அடங்கும். உலகியல் இலக்கியங்களில் நந்திக்கலம்பகம், பெருங்கதை, முத்தொள்ளாயிரம் மற்றும் பெருந்தேவனார் இயற்றிய பாரதம் போன்றவை முக்கியமானவை.

பக்தி இலக்கியங்கள்

சைவ இலக்கியங்கள்: திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோரின் தேவாரப் பாடல்கள் மற்றும் திருமூலரின் திருமந்திரம் ஆகியவை முக்கிய பக்தி இலக்கியங்கள் ஆகும்.

வைணவ இலக்கியங்கள்: முதலாழ்வார் மூவர் அல்லாத மற்ற ஆழ்வார்களின் பாசுரங்களும் இக்காலத்தில் இயற்றப்பட்டன.

உலகியல் இலக்கியங்கள்

நந்திக்கலம்பகம்: பல்லவர் காலத்தில் தோன்றிய முக்கியமான கவிதை நூல்களில் இதுவும் ஒன்று.

பெருங்கதை: கொங்குவேளிர் இயற்றிய ஐம்பெரும் காவியங்களில் ஒன்றான பெருங்கதை பல்லவர் காலத்தில் எழுதப்பட்டது.

முத்தொள்ளாயிரம்: இதுவும் இக்காலத்தில் தோன்றிய ஒரு சிறந்த இலக்கியப் படைப்பாகும்.

பெருந்தேவனார் பாரதம்: பெருந்தேவனார் இயற்றிய பாரதம் இந்த காலத்தில் எழுதப்பட்டது.

பிற இலக்கியங்கள்: இறையனார் களவியலுறை, பாட்டியல் நூல்கள், பாரத வெண்பா போன்ற பல நூல்களும் பல்லவர் காலத்தில் தோன்றியவை.

வடமொழி இலக்கியங்கள்

மத்தவிலாசப் பிரகசனம்: பல்லவ மன்னன் மகேந்திரவர்ம பல்லவனால் வடமொழியில் எழுதப்பட்ட ஒரு நகைச்சுவை நாடக நூல்.

காவ்யாதர்சம்: தண்டியின் வடமொழி நூலான இதுவும் பல்லவர் காலத்தில் தோன்றியது.

லோகவிபாகம், கிராதார்ச்சுனியம், அவந்திசுந்தரி கதை: இவையும் பல்லவர் கால வடமொழி வளர்ச்சிக்குச் சான்றுகளாகும்.

பல்லவர் காலத்தில் பக்தி இலக்கியங்கள்

உலகியல் இலக்கியங்கள் எனப் பல நூல்கள் தோன்றின. பக்தி இலக்கியங்களில் நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்களின் பாடல்கள், திருமூலரின் திருமந்திரம் போன்றவை அடங்கும். உலகியல் இலக்கியங்களில் நந்திக்கலம்பகம், பெருங்கதை, முத்தொள்ளாயிரம் மற்றும் பெருந்தேவனார் இயற்றிய பாரதம் போன்றவை முக்கியமானவை.

பக்தி இலக்கியங்கள்

சைவ இலக்கியங்கள்: திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோரின் தேவாரப் பாடல்கள் மற்றும் திருமூலரின் திருமந்திரம் ஆகியவை முக்கிய பக்தி இலக்கியங்கள் ஆகும்.

வைணவ இலக்கியங்கள்: முதலாழ்வார் மூவர் அல்லாத மற்ற ஆழ்வார்களின் பாசுரங்களும் இக்காலத்தில் இயற்றப்பட்டன.

உலகியல் இலக்கியங்கள்

நந்திக்கலம்பகம்: பல்லவர் காலத்தில் தோன்றிய முக்கியமான கவிதை நூல்களில் இதுவும் ஒன்று.

பெருங்கதை: கொங்குவேளிர் இயற்றிய ஐம்பெரும் காவியங்களில் ஒன்றான பெருங்கதை பல்லவர் காலத்தில் எழுதப்பட்டது.

முத்தொள்ளாயிரம்: இதுவும் இக்காலத்தில் தோன்றிய ஒரு சிறந்த இலக்கியப் படைப்பாகும்.

பெருந்தேவனார் பாரதம்: பெருந்தேவனார் இயற்றிய பாரதம் இந்த காலத்தில் எழுதப்பட்டது.

பிற இலக்கியங்கள்: இறையனார் களவியலுறை, பாட்டியல் நூல்கள், பாரத வெண்பா போன்ற பல நூல்களும் பல்லவர் காலத்தில் தோன்றியவை.

வடமொழி இலக்கியங்கள்

மத்தவிலாசப் பிரகசனம்: பல்லவ மன்னன் மகேந்திரவர்ம பல்லவனால் வடமொழியில் எழுதப்பட்ட ஒரு நகைச்சுவை நாடக நூல்.

காவ்யாதர்சம்: தண்டியின் வடமொழி நூலான இதுவும் பல்லவர் காலத்தில் தோன்றியது.

லோகவிபாகம், கிராதார்ச்சுனியம், அவந்திசுந்தரி கதை: இவையும் பல்லவர் கால வடமொழி வளர்ச்சிக்குச் சான்றுகளாகும்.

பக்தி நெறி என்றால்

இறையிடம் அன்பு மூலம் ஒன்றியுணர்தலை மையமாக கொண்டு தமிழ் நாட்டில் தோன்றிய சமய நெறி பக்தி நெறி ஆகும். இது பக்தி இயக்கம், பக்திவழி என்றும் குறிப்பிடப்படுவதுண்டு.

சைவம், வைணவம், பௌத்தம், சமணம்

சைவம், வைணவம், பௌத்தம், சமணம் ஆகியவை இந்தியாவில் தோன்றிய வெவ்வேறு மதங்கள் மற்றும் தத்துவங்கள். சைவம் மற்றும் வைணவம் இரண்டும் இந்து மதத்தின் பிரிவுகளாகும். சைவம் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபட, வைணவம் விஷ்ணுவையும் அவரது அவதாரங்களையும் வணங்குகிறது. பௌத்தமும் சமணமும் தனி மதங்களாகும், இவை இரண்டும் உலக வாழ்வின் வெறுப்பு, துறவில் விருப்பம் ஆகியவற்றை மையமாகக் கொள்கின்றன.

சைவம்: சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயம்.

வைணவம்: விஷ்ணு மற்றும் அவரது பத்து அவதாரங்களை வணங்கும் சமயம்.

பௌத்தம்: புத்த மதத்தைப் பின்பற்றும் சமயம். இது உலக வாழ்க்கையில் துறவு மற்றும் அமைதியை வலியுறுத்துகிறது.

சமணம்: மகாவீரர் மற்றும் தீர்த்தங்கரர்களைப் பின்பற்றும் சமயம். இதுவும் அகிம்சை மற்றும் துறவை மையமாகக் கொண்டது.

சைவம் வைணவம்

சைவம் என்பது சிவனையும், வைணவம் என்பது விஷ்ணுவையும் முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயப் பிரிவுகள் ஆகும். சைவம் சிவனோடு தொடர்புடையது, அதே சமயம் வைணவம் விஷ்ணுவுடன் தொடர்புடையது.

சைவம்

கடவுள்: சிவனையும், உமையோடு கூடிய சிவபெருமானையும் முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம்.

வழிபாடு: இது சிவநெறி என்றும் அழைக்கப்படுகிறது.

குறிப்பு: சைவம் என்பது சிவசம்பந்தமுடையது என்று திருமூலர் திருமந்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

வைணவம்

கடவுள்: விஷ்ணுவையும், அவரது அவதாரங்களையும் வழிபடும் சமயம்.

நம்பிக்கை: உலகில் தீமைகள் ஓங்கும் போது விஷ்ணு மனித வடிவில் அவதாரம் எடுத்து, அவற்றைத் தடுத்து நல்லவரைக் காப்பார் என்று நம்பப்படுகிறது.

குறிப்பு: வைணவம் என்பது விஷ்ணு சம்பந்தமுடையது.

வைணவ சமயத்தின் முக்கிய நூல்கள்

வைணவத்தின் முக்கிய நூல்களாக நாலாயிர திவ்வியப் பிரபந்தம், பகவத்கீதை, பஞ்சராத்திர ஆகமம், விஷ்ணு புராணம், இராமாயணம், மகாபாரதம் மற்றும் பிற புராணங்கள் உள்ளன. சங்க கால இலக்கியங்களில் திருமால் பற்றிய குறிப்புகள் இருந்தாலும், வைணவ இலக்கியங்கள் கி.பி. 6-ஆம் நூற்றாண்டு முதல் விரிவாக வளர்ந்தன.

நாலாயிர திவ்வியப் பிரபந்தம்: இது ஆழ்வார்கள் இயற்றிய தமிழ் பாடல்களின் தொகுப்பு, வைணவத்தின் முக்கிய இலக்கியப் படைப்பாகக் கருதப்படுகிறது.

பகவத்கீதை: இந்து சமயத்தின் முக்கியமான நூல்களில் ஒன்றான இது, மகாபாரதத்தின் ஒரு பகுதியாகும்.

பஞ்சராத்திர ஆகமம்: வைணவத்தின் ஒரு முக்கிய ஆகம நூலாகும்.

புராணங்கள்: விஷ்ணு புராணம், பாகவதம், வராஹ புராணம் போன்ற பல புராணங்கள் வைணவ இலக்கியங்களின் முக்கிய பகுதியாக உள்ளன.

சங்க இலக்கியங்கள்: பரிபாடலில் உள்ள ஆறு பாடல்கள், பிற சங்கப் பாடல்களிலும் திருமால் பற்றிய குறிப்புகள் உள்ளன.

வைணவ இலக்கியங்கள்

திருமாலை முதற்கடவுளாக வணங்கும் வைணவத்தினைப் பற்றிய இலக்கியங்கள் வைணவ இலக்கியங்களாகும். இந்த இலக்கியங்கள் பொ.ஊ. 6-ஆம் நூற்றாண்டு முதல் தோன்றி வளர்ந்தன. பொ.ஊ. 3-ஆம் நூற்றாண்டுப் பரிபாடலில் திருமாலைப் போற்றிப் பாடல்கள் ஆறு உள்ளன. பிற சங்கப் பாடல்களிலும் திருமால், இராமன் பற்றிய குறிப்புகள் உள்ளன.

சில வைணவ இலக்கியங்கள்:

1.மகாபாரதம்

2. இராமாயணம்

3. ஆழ்வார்களின் கால வரிசை

4. வைணவ ஆசாரிய பரம்பரை,

5. தென்கலைக்கு முன்

6. வைணவ ஆசாரிய பரம்பரை, தென்கலை

7. வைணவ ஆசாரிய பரம்பரை, வடகலை

8. வைணவ குருபரம்பரை

9. வைணவ புராண ஆசிரியர்கள்

10. திருவாய்மொழி வியாக்கியானம்

11. வடமொழிப் பாகவதம்

12. வடமொழிப் புராணங்கள்

13. ஆசார்ய ஹ்ருதயம்

14. ஞான வாசிட்ட வமல ராமாயணம் -வீரை ஆளவந்தார்

நாலாயிரத்திவ்விய பிரபந்தம்

1.முதலாம் திருவந்தாதி - 100 பாடல்கள்

2. இரண்டாம் திருவந்தாதி - 100 பாடல்கள்

3. மூன்றாம் திருவந்தாதி - 100 பாடல்கள்

4. திருச்சந்த விருத்தம்

5. நான்முகன் திருவந்தாதி - பாடியவர்

6. திருமழிசையாழ்வார்

7. திருவாசிரியம்

8. திருவாய்மொழி

9. திருவிருத்தம்

10. பெரிய திருவந்தாதி

11. பெருமாள் திருமொழி

12. திருப்பல்லாண்டு

13. பெரியாழ்வார் திருமொழி

14. திருப்பாவை

15. நாச்சியார் திருமொழி

16. திருப்பள்ளியெழுச்சி

17. திருமாலை

18. பெரிய திருமொழி

19. திருக்குறுந்தாண்டகம்

20. திருநெடுந்தாண்டகம்

21. திருவெழுகூற்றுஇருக்கை

22. சிறிய திருமடல்

23. பெரிய திருமடல்

24. அமலனாதி பிரான்

25. கண்ணி நுண்சிறுத்தாம்பு

26. இராமானுச நூற்றந்தாதி.

காப்பியம்

இலக்கிய உலகில் காப்பியம் ஒரு தனி இடத்தைப் பெற்றுள்ளது. இதனைச் செவ்விலக்கிய வகையில் (ஊடயளளஉையட டுவைநசயவரசந) அடக்குவர். இலக்கிய வளம் நிறைந்த பழமையான மொழிகளில் முதல் இலக்கியம் காப்பியமாக அமைவதைக் காணலாம். இந்த நிலை தமிழுக்கு இருக்கிறதா? என்றால், இல்லை என்றே சொல்ல வேண்டும். இதனால் மட்டுமே தமிழ் பழமையான செம்மொழி அன்று என்று கூறிவிட முடியாது. இங்குக் கர் என்பார்

கூற்று நினைத்தற்கு உரியது. அவர் "வீரயுகத்தில் காப்பியம் மட்டுமே எழ வேண்டும் என்ற நியதி இல்லை. பல மொழிகளில் ஹோமரின் இலியத், ஒதீசி போன்ற காவியங்களுக்குப் பதிலாக, கதை எதுவும் இன்றித் தங்கள் தங்கள் நாட்டுச் சிற்றரசர்களையும் தலைவர்களையும் பாராட்டிப் பாடும் பாடல்கள் எழுந்துள்ளன" என்கிறார். சங்க இலக்கியமான புறநானூறும், பதிற்றுப்பத்தும் பத்துப்பாட்டில் பல பாடல்களும் இத்தகைய வீரயுகப் பாடல்கள்தாம். சீன மொழியிலும் இத்தகைய உதிரிப் பாடல்களே வீரயுகத்தில் எழுந்துள்ளன.

தமிழ் இலக்கிய வரலாற்றில் வீரயுகத்தை அடுத்துத்தான் காப்பியக் காலம் தொடங்குகிறது. இக்காப்பிய எழுச்சிக்கு வித்திட்டவர் இளங்கோ அடிகள் ஆவார். இவர் எழுதிய காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும். சிலப்பதிகாரத்திற்கு முன் பல காப்பியங்கள் எழுந்திருக்க வேண்டும் என அறிஞர்கள் கருத்துத் தெரிவித்தாலும் அவை அனைத்தும் ஊகங்களே. தமிழில் தோன்றிய முதல் காப்பியமே சிலப்பதிகாரம்தான். இதனை அடியொற்றியே தமிழில் பல காப்பியங்கள் எழுதப்பட்டுள்ளன.

காப்பியம்

காப்பியம் என்றால் என்ன? இந்தச் சொல்லின் பொருள் என்ன? இச்சொல் விளக்கும் இலக்கியம் எத்தகையது? ஒருவகையில் சிந்தாமணி, சிலப்பதிகாரம் போன்றவை கதைப்பாடல்கள் என்பதை நாம் அறிவோம். இன்னொரு நிலையில் 'காப்பியம்' என்றால் என்ன? இந்தச் சொல் எங்கிருந்தது வந்தது? இதன் அடிப்படைப் பொருள் யாது? இதற்கு விடை காண்பதே நமது நோக்கம்.

- சொல் விளக்கம்

வடமொழியில் காவ்யா என்றால் பாட்டு என்பது பொருள். கவியால் படைக்கப்படுவன அனைத்தும் காவியமே. எனவே காவ்யா - காவியம் - காப்பியம் என ஆகியது என்பர். தமிழில் தொல்காப்பியம், காப்பியக் குடி, வெள்ளூர்த் தொல்காப்பியர், காப்பியஞ் சேந்தனார், காப்பியாற்றுக் காப்பியனார் முதலான பெயர்கள் காணப்படுகின்றன. இவை காப்பு ஃ இயம் என்ற சொற்களின் சேர்க்கையாகக் கருதப்படுகின்றன. பழமரபுகளைக் காப்பது காப்பியம் எனக் கருத இடம் உண்டு. காப்பியம் என்ற இலக்கியமே, வரலாற்றுக்கு முற்பட்ட காலச் சமூக - சமய - அரசியல் வரலாற்றையோ அல்லது வரலாறாக நம்பப்படுவதையோதான் பாடுபொருளாகக் கொண்டுள்ளது. இவை வாய்மொழி மரபாகச் சொல்லப்பட்டு வந்த கதைகளாக அமைந்தன. இவ்வாறு வரலாற்றுக்கு முந்தைய கால மனிதனின் வாழ்வியல், சிந்தனை மற்றும் சமய நம்பிக்கை பற்றிச் சொல்லப்பட்டு வந்த கதைகளே ஹோமர் போன்ற கவிஞர்களால் காப்பியமாகத் தொகுக்கப்பட்டன.

ஆங்கிலச் சொல்லான நுiஉ என்பதும் 'நிழ' என்ற கிரேக்கச் சொல்லின் ஆக்கமாகக் கருதப்படுகிறது 'நிழ' என்றால் 'வழ வநடட' என்றும், 'நிழள' என்றால் 'யலெவாபெ வழ வநடட' என்றும் பொருள்படும். எனவே நுiஉ என்பது மரபுவழியாகச் சொல்லப்பட்டு வருவது என்பது பொருளாகிறது. இவ்வகையில் காப்பியம் என்பதும் பழமரபுகளைக் காத்து இயம்புவது. அதாவது 'சொல்லப்பட்டு வருவது' என்பது விளங்குகிறது அல்லவா?

காப்பிய வகை

காப்பியம் என்றாலே தமிழர்களுக்குச் சிலப்பதிகாரம், சிந்தாமணி முதலான ஐம்பெருங் காப்பியங்களும், சூளாமணி, நீலகேசி முதலான ஐஞ்சிறு காப்பியங்களுமே நினைவுக்கு வரும். தொடர்ந்து பெரியபுராணம், கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலான பலவும் நம் நினைவுக்கு வருவதுண்டு. 20ஆம் நூற்றாண்டில் பாரதியின் பாஞ்சாலி சபதம், பாரதிதாசனின் பாண்டியன் பரிசு, புலவர் குழந்தையின் இராவண காவியம், கண்ணதாசனின் ஏசு காவியம் போன்றனவும் காப்பியங்களாகவே எண்ணப்படுகின்றன. எனவே காப்பியம் என்ற இலக்கிய வகையைப் பற்றி நாம் தெரிந்து கொள்வது அவசியமாகிறது.

மேலை இலக்கியக் காப்பிய வகை

கிரேக்கம், இலத்தீன், பாபிலோனியம் முதலான பழமை வாய்ந்த மொழிகளில் எழுந்துள்ள காப்பியங்களைப் பின் வருமாறு வகைப்படுத்துகின்றனர்.

1) முன்முறைக் காப்பியம் (சைஅவைளைந ழச ழுசயட நுiஉ)

2) வழிமுறை அல்லது கலைக் காப்பியம் (ளுநஉழனெயசல ழச டுவைநசயசல நுiஉ)

3) வீரயுகக் காப்பியம் (ஊாளையடசஉ நுiஉ)

4) வீரயுகக் காதல் காப்பியம் (ஊாளையடசஉ சுழஅயஎந)

5) காதல் காப்பியம் (சுழஅயவெஉ நுiஉ)

6) நகைச்சுவைக் காப்பியம் (டீரசடநளஙரந நுiஉ)

கலைத் தன்மை பெறாத - அதே நேரத்தில் உணர்ச்சிப் பெருக்காகக் கவிஞனால் தங்கு தடையின்றி வாய்மொழி மரபில் பாடப்பட்டு வருவன முன்முறைக் காப்பியங்கள்.

இதனை அடுத்துத் தோன்றுவன கலைக்காப்பியங்கள். இவற்றில் கவிஞனின் சிந்தனைக்கும் கற்பனைக்கும் இடம் உண்டு. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கருத்தியல் இவ்வகைப் படைப்புகளில் சிறப்பான இடத்தைப் பெறும்.

வீரயுகக் காப்பியங்களில் வீரதீரச் செயல்கள், அற்புத ஆற்றல்கள், உணர்ச்சி பூர்வமாக மிகையான கற்பனையுடன் வெளியிடப் பெறும்.

வீரயுகக் காதல் காப்பியங்களில் காதல், காதலுக்காகப் போராடும் மிகப்பெரிய போராட்டம் முதன்மைப்படுத்தப் பெறும்.

நகைச்சுவைக் காப்பியங்களில் கிண்டலும் கேலியும் நிறைந்து, தன்னேரில்லாத் தலைவனாக உருவகப்படுத்தப்பட்ட காப்பியத் தலைவன், இங்குக் கிண்டலுக்கும் கேலிக்கும் உரியவனாக, ஆளுமையில் தரம் தாழ்ந்தவனாகச் சித்திரிக்கப்படுவான்.

வடமொழியில் காப்பிய வகை

வடமொழியில் காப்பியங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப் பெறுகின்றன.

1) இதிகாசம்

2) மகாகாவியம்

3) காவியம்

4) புராண காவியம்

5) உத்பாத்தியம்

6) சம்பு காவியம்

7) சந்தேச காவியம்

8) கண்ட காவியம்

இதிகாசம் என்ற சொல்லுக்கு 'இவ்வாறு முன் இருந்தது' என்று பொருள். இதிகாசங்கள் வரலாற்றுக்கு முற்பட்ட கால வரலாறாக சநாளைவழசஉ நசழைன) நம்பப்படுவன. வால்மீகி ராமாயணமும், வியாச பாரதமும் இவ்வகைப் படைப்புகளே. வடமொழியின் மகாகாவியம் என்பது இதிகாசக் கதையின் ஒரு பகுதியை எடுத்துக் கொண்டு, விரிவாகப் பேசுவது. இதில் அறம், பொருள், இன்பம், வீடுபேறு ஆகிய நாற்பொருள் இடம் பெறும்.

கற்பனை வளமும் வருணனைத் திறனும் பெற்றிருக்கும். மகா காவியத்திலிருந்து அளவால் குறைந்தது காவியம். நாற்பொருளும் இதில் இடம் பெறாது. ஒரு சில குறைந்து அமையும். உயரிய நோக்கமும் கற்பனை வளமும் குறைவாகவே காணப்படும். கடவுளர் பற்றிய புராண வரலாறாக அமைவது புராண காவியம். இதிகாசத்திலோ, புராணங்களிலோ இடம் பெறாத, புதிய கதையை மையமாகக் கொண்டு படைக்கப் பெறுவன உத்பாத்தியம் என்னும் காப்பிய வகையாகும். சம்புகாவியம் என்பது உரையிடை இட்ட பாட்டுடைச் செய்யுளாகும். சந்தேச காவியம் என்பது தூது இலக்கிய வகையாகும். கண்ட காவியம் என்பது பழைய இதிகாச - காப்பியக் கதையை எடுத்துக் கொண்டு, கால வேறுபாட்டிற்கு ஏற்ப மாற்றங்களையும், புதுமைகளையும் சேர்த்துப் படைக்கப் பெறுவது. தமிழில் பாரதிதாசனின் கண்ணகி புரட்சிக் காப்பியம், சாலை இளந்திரையனின் சிலம்பின் சிறுநகை போன்றவை இக்கண்ட காவிய வகையைச் சார்ந்தவை.

தமிழில் காப்பிய வகை

தமிழ்க் காப்பியம் என்றாலே நமக்கு நினைவுக்கு வருவன ஐம்பெருங் காப்பியங்கள் - ஐஞ்சிறு காப்பியங்கள் என்பனவே. கொங்குவேளிர் இயற்றிய பெருங்கதை என்ற ஒரு மிகச் சிறந்த காப்பியமும் உள்ளது. பெரியபுராணம், கம்பராமாயணம், வில்லிபாரதம் என்பனவும் தமிழில் தோன்றிய மிகச் சிறந்த காப்பியப் படைப்புகளே. இருபதாம் நூற்றாண்டிலும் காப்பியம் என்ற பெயரில் பல படைப்புகள் வெளி வந்துள்ளன. இவற்றைப் பின்வரும் வகைப்பாடுகளில் பகுத்துக் காணலாம்.

1) இதிகாசம்

2) புராணம்

3) பெருங்காப்பியம்

4) சிறுகாப்பியம்

5) மறைந்துபோன தமிழ்க் காப்பியம்

6) மொழிபெயர்ப்புக் காப்பியம்

7) இசுலாமிய சமயக் காப்பியம்

8) கிறித்தவ சமயக் காப்பியம்

9) தற்காலக் காப்பியம் - மற்றும் கதைப் பாடல்கள்

கம்பராமாயணமும் வில்லிபாரதமும் தமிழில் இதிகாசக் காப்பியங்களாகும். ஆனால் இவை இதிகாசத் தன்மையான வாய்மொழி மரபோ, உணர்ச்சியோ இன்றிக் கலைத்தன்மையோடு, கற்பனை வளமும், கருத்தியல் புனைவும் கொண்டு படைக்கப்பட்டுள்ளன. இதனால், இவை மேலை இலக்கியக் கலைக்காப்பியம் என்ற வகையைச் சார்ந்தன எனலாம்.

தமிழில் புராணக் காப்பியங்கள் மூன்று வகையாகப் படைக்கப் பட்டுள்ளன. ஒன்று, கந்தபுராணம் போன்ற கடவுளர் பற்றிய புராணக் காப்பியம். இரண்டாவது வகை திருவிளையாடல் புராணம் போன்ற கடவுளர் பற்றிய தலபுராணம். மூன்றாவது வகையைச் சார்ந்தவை மாமனிதர் பற்றிய பெரியபுராணம் போன்றவை ஆகும்.

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியன பெருங்காப்பியங்கள் என்றும் உதயண குமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், நீலகேசி, சூளாமணி ஆகியன சிறு காப்பியங்கள் என்றும் எண்ணப்படுகின்றன.

சமயப் போராட்டங்கள், மக்களின் கவனிப்பு இன்மை முதலான காரணங்களால் அழிந்து போன தமிழ்க் காப்பியங்கள் பல. உரையாசிரியர்களால் மேற்கோள் காட்டப்பட்ட ஒரு சில காப்பியங்களில் தகடூர் யாத்திரை, வளையாபதி, குண்டலகேசி, விம்பசார கதை, சாந்தி புராணம், நாரத சரிதை, கலியாணன் கதை, பருப்பதம், புராண சாகரம், அமிர்தபதி, பிங்கலகேசி, அஞ்சனகேசி, காலகேசி, இராசராச விசயம், வீரணுக்க சரிதம், குலோத்துங்க சோழன் சரிதை முதலான காப்பியங்களின் பெயர்கள் அறியப்படுகின்றன.

நச்சினார்க்கினியர் உரையிலும், புறத்திரட்டிலும் காணப்படும் இராமாயணச் செய்யுள்கள், பெருந்தேவனார் குறிப்பிடும் இராமாயண வெண்பா, யாப்பருங்கலத்திலும், வீரசோழியத்திலும் மேற்கோள் காட்டப்படும் வெண்பாவில் அமைந்த இராமாயணச் செய்யுள்கள், ஸ்ரீபுராணம் குறிப்பிடும் சைன ராமாயணம், பல திரட்டு என்னும் சுவடித் தொகுப்பில் உள்ள நான்கு இராமாயண வெண்பாக்கள் ஆகியவற்றின் மூல நூல்கள் அழிந்து போய்விட்டன.

இதே போன்று சங்ககாலம் தொட்டுப் பாரதக் கதை தொடர்பான பல காப்பியங்கள் எழுந்துள்ளன. சின்னமனூர்ச் செப்பேடு மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும் எனச் சங்க காலத்ததான ஒரு பாரதம் பற்றிக் குறிப்பிடுகிறது. அடுத்தது பெருந்தேவனார் பாடிய பாரதம். இவர் பாரதம் பாடிய காரணத்தால் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்று அழைக்கப்பட்டார். இவர் சங்க காலத்தில் வாழ்ந்த புலவர் ஆவார். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு ஆகிய சங்கத் தொகை நூல்களுக்கு அமைந்த கடவுள் வாழ்த்துப் பாடல்களைப் பாடியவர் ஆவார். மேலும் வத்சராசன் பாரதம் அல்லது அருணிலை விசாகன் பாரதம் என்ற ஒரு பாரத நூலும் குறிப்பிடப்படுகின்றது. இப்பாரத நூல்கள் அனைத்தும் மறைந்து போயின.

தமிழில் பல தழுவல் காப்பியங்கள் எழுந்துள்ளன. இத்தகைய தழுவலன்றி மொழிபெயர்ப்பாகவும் பல காப்பியங்கள் எழுந்துள்ளன. மனுசரிதை, வசுசரிதை, பிரபுலிங்க லீலை, வெள்ளக்கால் ப.சுப்பிரமணிய முதலியாரின் துறக்க நீக்கம் (மில்டனின் ியசயனளைந டுழளவ), அனந்த நாராயணரின் இலியதம் (ஹோமர்), அ.சிங்கார வேலுவின் ஒதீசியம் (ஹோமர்), ஜமதக்னியின் மொழிபெயர்ப்பான இரகுவம்சம், குமார சம்பவம், மேக சந்தேசம் (காளிதாசர்), ஆதி வரகவி மொழிபெயர்த்த காதம்பரி ஆகியன இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

இசுலாமியக் காப்பியங்களில் குறிப்பிடத்தக்கது சீறாப்புராணம். கிறித்தவக் காப்பியங்களில் தேம்பாவணியும், இரட்சணிய யாத்திரிகமும் சிறப்புடையன. தற்காலத்தில் பாரதியின் பாஞ்சாலி சபதம் முதலானவும், பாரதிதாசனின் பாண்டியன் பரிசு, தமிழச்சியின் கத்தி முதலானவும் காப்பிய வரிசையில் குறிப்பிடப்படுவன. முடியரசனின் பூங்கொடி, கவியோகி சுத்தானந்த பாரதியின் பாரத சக்தி மகா காவியம், புலவர் குழந்தையின் இராவண காவியம் ஆகியன பழந்தமிழ்க் காப்பிய மரபில் பாடப்பட்டனவாகும். பஞ்சபாண்டவர் வனவாசம், கர்ணன் சண்டை, நல்லதங்காள் கதை முதலான பல எண்ணற்ற கதைப் பாடல்கள் தற்காலக் காப்பிய வரிசையில் இடம் பெற்றுள்ளன.

பெருங்காப்பியமும் சிறுகாப்பியமும்

வடமொழியில் மகாகாவியம், காவியம் என்ற வகைமையையே பெருங்காப்பியம் - சிறுகாப்பியம் என்று தமிழில் குறிப்பிடுகின்றனர். வடமொழியில் இதிகாசங்களான இராமாயண - மகாபாரதக் கிளைக் கதைகளை எடுத்துக் கொண்டு, அவற்றைக் கலைத் தன்மையுடன் தண்டியலங்காரம் கூறும் இலக்கணப்படி பாடினர். இவையே மகாகாவியம் - காவியம் எனப்பட்டன. வடமொழி தமிழ்க் காப்பியங்களுக்கிடையே பெயரில் இந்த ஒற்றுமை காணப்பட்டாலும், பாடுபொருளில் இருமொழிக் காப்பியங்களும் வேறுபடுகின்றன. தமிழில் எந்த ஒரு பெருங்காப்பியமோ அல்லது சிறு காப்பியமோ இதிகாசத் தழுவலாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பெருங்காப்பிய இலக்கணம்

தமிழ்க் காப்பியக் கொள்கை பற்றிய விரிவான செய்தி பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் இல்லை எனலாம். வடமொழி மரபை ஒட்டி எழுந்த தண்டியலங்காரமே முதல்முதலில் காப்பிய இலக்கணம் பற்றி விரிவாகப் பேசுகின்றது. தொடர்ந்து பன்னிரு பாட்டியல், நவநீதப் பாட்டியல், வச்சணந்திமாலை, மாறன் அலங்காரம் முதலான பாட்டியல் நூல்கள் இவ்விலக்கணம் பற்றிப் பேசுகின்றன.

பெருங்காப்பியம் தனக்கு ஒப்புமை இல்லாத தலைவனைப் பற்றிய கதையாக அமைய வேண்டும் என்று தண்டியலங்காரம் கூறுகிறது.

பெருங்காப்பியம் வாழ்த்து, வணக்கம், வருபொருள் கூறித் தொடங்கப் பட வேண்டும் என்பார் தண்டி. அவையடக்கம் இடம் பெற வேண்டும் என்பதை மாறன் அலங்காரம் வலியுறுத்தும். காப்பியப் பாடுபொருள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருள் தருவதாக அமைதல் வேண்டும் என்பது இலக்கண நூலார் அனைவரின் கருத்தாகும்.

பெருங்காப்பிய வருணனைக் கூறுகளாக மலை, கடல், நாடு, வளநகர், பருவம், இருசுடர்த் தோற்றம் என்பனவற்றைத் தண்டி கூறுகிறார். தென்றலின் வருகை, ஆற்று வருணனைகளை மாறன் அலங்காரம் சுட்டும். நவநீதப் பாட்டியல் மாலை (பொழுது), குதிரை, யானை, கொடி, முரசு, செங்கோல் பற்றிய வருணனைகளைச் சேர்க்கும்.

பெருங்காப்பிய நிகழ்ச்சிகளைப் பொது நிகழ்ச்சி, அரசியல் நிகழ்ச்சி என இரண்டாக வகைப்படுத்தலாம். திருமணம், பொழிலாடல், நீராடல், புதல்வர்ப் பேறு, புலவியிற் புலத்தல், கலவியில் கலத்தல் ஆகியவற்றைப் பொது நிகழ்ச்சிகளாகத் தண்டி ஆசிரியர் குறிப்பிடுவார். மாறன் அலங்காரம் இல்வாழ்க்கை, நிலையாமை, கைக்கிளை ஆகியவற்றைச் சேர்த்துக் கூறும். குலவரவு, உலகின் தோற்றம், ஊழின் இறுதி, தொண்ணூற்று அறுவரது இயற்கை, வேதியர் ஒழுக்கம் இவை பற்றிப் பேச வேண்டும் என்பவற்றைப் புராணக் காப்பிய நிகழ்வுகளாக வச்சணந்திமாலை முதலான இலக்கண நூல்கள் குறிப்பிடும்.

பெருங்காப்பிய அரசியல் நிகழ்ச்சிகளாக மந்திரம், தூது, செலவு, இகல் வென்றி, முடிசூடல் ஆகியவை தண்டி கூறுவன. இவற்றுடன் ஒற்றாடல், திறை கோடல் ஆகியவற்றை மாறன் அலங்காரம் சேர்த்துக் கூறும்.

சுவை, பாவம் (மெய்ப்பாடுகள்) காப்பியத்தில் இடம் பெற வேண்டும். அத்துடன் சந்தி, பாவிகம் ஆகிய கதைப் பின்னல் அமைதல் வேண்டும் என்பார் தண்டி. இதனைச் சற்று விரித்து வித்து, எண், துளி, கொடி, கருப்பம் எனப் பன்னிரு பாட்டியல் குறிப்பிடும்.

பெருங்காப்பியக் கட்டமைப்பாகச் சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் ஆகியவை அமையும் என்பார் தண்டி. இவற்றுடன் படலம், காண்டம் ஆகியவற்றை மாறன் அலங்காரம் குறிப்பிடும். வெண்பா, விருத்தம், அகவல், கொச்சகம் என்னும் பாவகை காப்பியம் பாடச் சிறந்தவை எனப் பன்னிரு பாட்டியல் குறிப்பிடும்.

இவை தவிர வழிப்படுத்துதல், வழிப்பயணம், பந்தாடல், அசரீரி, சாபம் முதலான நிகழ்வுகளும், சுடுகாடு, தீஎரி முதலான வருணனைக் கூறுகளும், காதை, புராணம் ஆகிய கட்டமைப்புக் கூறுகளும் பெருங்காப்பியக் கூறுகளாக அமைவதைக் காணலாம்.

- தமிழில் பெருங்காப்பியங்கள்

தமிழில் பெருங்காப்பியங்களை ஐம்பெருங் காப்பியங்கள் என்ற வகையுள் அடக்குகின்றனர். அவை சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியன. இவற்றுள் சிலப்பதிகாரம் மணிமேகலை இரண்டையும் இரட்டைக் காப்பியங்கள் என்பர். ஆனால் இந்தப் பாகுபாடுகள் எதன் அடிப்படையில் செய்யப்பட்டன.

இப்பாகுபாடு சரிதானா? என்ற சிந்தனை அறிஞரிடையே இன்னும் கேள்விக் குறியாகவே உள்ளது. இங்கே குறிக்கப்பட்டுள்ள ஐம்பெருங் காப்பியங்கள் வரிசையில் உள்ள குண்டலகேசியும், வளையாபதியும் கிடைக்கப் பெறவில்லை. அவை எப்படி இருந்தன. அவை பெருங்காப்பிய மரபில் பாடப்பட்டவைதானா? என்பது யாருக்கும் தெரியாது. நன்னூல் மயிலைநாதர் உரையில் (நூ.387) ஐம்பெருங் காப்பியம் என்ற பெயர் காணப்படுகிறது. பின்னர் தோன்றிய தமிழ்விடுதூது கற்றார் வழங்கு பஞ்ச காப்பியம் என்று குறிப்பிடுகின்றது. இந்த இரு நூல்களிலும் எவை பஞ்ச காப்பியம் என்பது குறிக்கப்படவில்லை. கி.பி. 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கந்தப்ப தேசிகர்,

சிந்தா மணியாம் சிலப்பதிகாரம் படைத்தான்

நந்தா மணிமே கலைபுனைந்தான் - நந்தா

வளையா பதிதருவான் வாசகனுக்கு ஈந்தான்

திளையாத குண்டலகே சிக்கும்

என்று ஐம்பெருங்காப்பியங்களை எண்ணிச் சொல்கிறார்.

சிறுகாப்பிய இலக்கணம்

சிறு காப்பியங்களுக்கான தனி இலக்கணம் மேற்சுட்டிய இலக்கண நூல்களில் இடம் பெறவில்லை. பெருங்காப்பியம் தரும் நாற்பொருளில் சில குறைந்து இயல்வது சிறு காப்பியம் என்பார் தண்டி. தமிழிலுள்ள ஐஞ்சிறு காப்பியங்களில் இவை அளவில் குறைந்திருப்பது தெரிய வருகிறது. பெருங்காப்பியச் சுருக்கமும் சிறுகாப்பியமாக எண்ணப் படுகின்றது.

பெருங்காப்பியங்களுக்கு உள்ள உயர்ந்த, பரந்துபட்ட, நாடு தழுவிய ஓர் உன்னதத் தன்மை சிறுகாப்பியங்களுக்கு இல்லை என்றே சொல்லலாம். இவை குறிப்பிட்ட ஒரு கருத்தை, பகுதியை மட்டுமே மையப்படுத்துகின்றன எனலாம்.

- சிறுகாப்பியங்கள்

தமிழில் சிறுகாப்பியங்களை ஐஞ்சிறு காப்பியங்கள் என்று வகை செய்வர். இந்த வகைப்பாடும் கூடக் கருத்து வேறுபாடுகளுக்கு உரியதாக உள்ளது. யசோதர காவியம், நீலகேசி, உதயணகுமார காவியம், நாககுமார காவியம், சூளாமணி ஆகியவற்றை ஐஞ்சிறு காப்பியங்களாகத் தமிழ் இலக்கிய வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவர்.

காப்பியம் என்பது இலக்கிய வடிவங்களில் ஒன்று. இதனைப் பெருங்காப்பியம் என்றும், சிறுகாப்பியம் என்றும் பகுத்துக் காட்டினர். அறம், பொருள், இன்பம், வீடு என்பனவற்றோடு ஓர் ஒப்பிலாத் தலைவனையும் தலைவியையும் கொண்டு இயற்றப்படுவது பெருங்காப்பியமாகும். வாய்மொழி இலக்கியம், தன்னுணர்ச்சிப் பாடல்கள், கதைபொதி பாடல்கள் என்று இது விரிந்து வளர்கிறது. நான்கு பொருள்களையும் பயக்காமல் சில பொருள்கள் மட்டும் பயக்கும் கதைநூல் சிறுகாப்பியம்.

தமிழின் பழைய இலக்கியங்கள் தனிப்பாடல் திரட்டுக்களாகவே உள்ளன. தமிழ் மொழியில் 3 அடி முதல் 782 அடியுள்ள நீண்ட பாட்டு வரையில் உள்ள தனிப்பாட்டுகளே சங்க இலக்கியமாக உள்ளன. தொடக்கத்தில் நாட்டுப் பாடல்களின் ஓசையமைப்பையும் பொருள் வகையையும் ஒட்டி வளர்க்கப்பட்ட தனிப்பாடல்களே தமிழ் இலக்கியத்தின் தோற்றமாகும்.

சங்கப் பாடல்களில் நாட்டியக் கலையில் நன்கு தேர்ந்த விறலியர், கூத்தர், பொருநர் என்போர் பற்றிய குறிப்புகள் உள. ஆயினும் சங்க காலத்தில் கதை தழுவிய நாடகங்களும் கதைகளும் பல இருந்திருக்கக் கூடும். ஆனால், அந்தக் கதைகள் திரண்டு வளர்ந்து

காப்பியங்களாக உருவம் கொள்ளவில்லை. கற்றறிந்த புலவோர் அந்தக் கதைகளை எழுதிப் போற்ற மனம்கொள்ளாதது காரணமாக இருக்கலாம்.

காப்பியம், சொல்விளக்கம்

காப்பு ஃ இயம் ஸ்ரீ காப்பியம் ஆகியது. பழமரபுகளைக் குறிப்பாக இலக்கண மரபுகளைக் காத்து நிற்பது காப்பியம் என்ற பொருளில் தமிழில் இச்சொல் முதலில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

"இயம்பு" என்பது "சொல்" எனப் பொருள்படும் ஒரு வினைச்சொல். இசைக் கருவிகளை இயம் என்பது பண்டைய வழக்கு. பல இசைக் கருவிகளைப் பல்லியம் என்பர். சிறிய இசைக்கருவிகளை இயக்கிக்கொண்டு குன்றுதோறாடும் முருகன் "குறும்பல்லியத்தன்" எனப் போற்றப்படுகிறான். பல இசைக் கருவிகளை முழக்கிய சங்ககாலப் புலவர் நெடும்பல்லியத்தனார். இவை இயம்பும். இயம்பப் பயன்படுத்தப்படும். இசைக் கருவிகளால் இயம்புவோர் இயவர்.ஜ4ஸ தொல்காப்பியம் என்னும் நூலின் பெயரில் "காப்பியம்" என்னும் சொல் உள்ளது. தொல்ஃகாப்பூஇயம் என்பது தொல்காப்பியம். இது தமிழில் இருக்கும் மொழியியல் வாழ்வியல் தொன்மையை இயம்பும் நூல். இவற்றால் "காப்பியம்" என்பது தூய தமிழ்சொல் என்பது பெறப்படும்.

பாகுபாடு

காப்பியத்தை ஐம்பெருங்காப்பியங்கள் என்றும் ஐஞ்சிறுகாப்பியங்கள் என்றும் பிற்காலத்தில் பாகுபாடு செய்துள்ளனர். இந்தப் பாகுபாடு தோன்றிய காலம் கருத்தில் கொள்ளத்தக்கது. தமிழ் இலக்கிய வரலாற்றில் வீரயுகத்தை அடுத்துத்தான் காப்பியக் காலம் தொடங்குகிறது. இக்காப்பிய எழுச்சிக்கு வித்திட்டவர் இளங்கோ அடிகள் ஆவார். இவர் எழுதிய காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும். சிலப்பதிகாரத்திற்கு முன் பல காப்பியங்கள் எழுந்திருக்க வேண்டும் என அறிஞர்கள் கருத்துத் தெரிவித்தாலும் அவை அனைத்தும் ஊகங்களே. தமிழில் தோன்றிய முதல் காப்பியமே சிலப்பதிகாரம்தான். இதனை அடியொற்றியே தமிழில் பல காப்பியங்கள் எழுதப்பட்டுள்ளன.

"ஐம்பெருங்காப்பியம்" என்னும் தொடரை 14-ம் நூற்றாண்டு மயிலைநாதர் குறிப்பிடுகிறார். தணிகையுலா நூல் வழங்கியுள்ளதன் அடிப்படையில் இந்தப் பாகுபாடு தோன்றியது.

தமிழ் மரபு காப்பியங்கள்

காப்பியம் என்றாலே தமிழர்களுக்குச் சிலப்பதிகாரம், சிந்தாமணி முதலான ஐம்பெருங் காப்பியங்களும், சூளாமணி, நீலகேசி முதலான ஐஞ்சிறு காப்பியங்களுமே நினைவுக்கு வரும். தொடர்ந்து பெரியபுராணம், கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலான பலவும் நம் நினைவுக்கு வருவதுண்டு. 20-ஆம் நூற்றாண்டில் பாரதியின் பாஞ்சாலி சபதம், பாரதிதாசனின் பாண்டியன் பரிசு, புலவர் குழந்தையின் இராவண காவியம், கண்ணதாசனின் ஏசு காவியம் போன்றனவும் காப்பியங்களாகவே எண்ணப்படுகின்றன.

தமிழில் தோன்றியுள்ள காப்பியங்களுள் சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும் பெரிய புராணம் மட்டுமே தமிழ்நாட்டுக் கதைகளை மூலக் கருவாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளன. மற்றவை சமசுகிருதம், பிராகிருதம் ஆகிய மொழிகளின் தழுவல்களாகவோ அல்லது தமிழாக்கங்களாகவோ உள்ளன.

ஐம்பெருங் காப்பியங்கள்

முற்காலத்தில் தமிழில் எழுதப்பட்ட சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சீவக சிந்தாமணி என்னும் காப்பியங்கள் ஒருங்கே ஐம்பெருங் காப்பியங்கள் என அறியப்படுகின்றன. இவற்றுள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சங்கம் மருவிய காலத்திலேயே தோன்றியவை. ஏனையவை சோழர் காலத்தில் தோன்றியவையாகும்.

தமிழில் தோன்றியுள்ள காப்பியங்களுள் சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும் பெரியபுராணம் மட்டுமே தமிழ்நாட்டுக் கதைகளை மூலக் கருவாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளன. மற்றவைகள் சமசுகிருதம், பிராகிருதம் ஆகிய மொழிகளின் தழுவல்களாகவோ அல்லது தமிழாக்கங்களாகவோ உள்ளன.

அணிகலப் பெயர்கள்

இந்த நூலின் பெயர்கள் அணிகலன்களின் பெயரால் அமைந்துள்ளன.

சிலப்பதிகாரம் - சிலம்பு என்பது மகளிர் அணியும் காலணி - கண்ணகியின் சிலம்பால் அதிகரித்த வரலாறு

மணிமேகலை - ஆடை நழுவாமலிருக்க மகளிர் இடுப்பில் அணியும் அணி - இத்தொடர் அன்மொழித்தொகையாக அதனை அணிந்த பெண்ணை உணர்த்தும். இந்தப் பெயர் இடப்பட்ட பெண்ணின் வரலாறு.

குண்டலகேசி - குண்டலம் என்பது மகளிர் அணியும் காதுவளையம். - குண்டலமும் கூந்தல் அழகும் கொண்டவள் குண்டலகேசி - குண்டலகேசி என்பவளின் வரலாற்றை கூறும் நூல்.

வளையாபதி - வளையல் அணிந்த பெண் வளையாபதி - வளையாபதியின் வரலாறு கூறும் நூல்.

சீவகசிந்தாமணி - சிந்தாமணி என்பது அரசன் முடியில் (கிரீடத்தில்) பதிக்கப்படும் மணிக்கல். - சீவகனை மணிமுடியாக்கி எழுதப்பட்ட வரலாறு

சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரம் சேர நாட்டவரான இளங்கோ அடிகளால், கி.பி. இரண்டாம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டது. சோழ நாட்டின் தலை நகரமாக விளங்கிய பூம்புகாரைச் சேர்ந்த கோவலன் என்னும் வணிகன் மற்றும், அவனது மனைவியாகிய கண்ணகி ஆகியோரது கதையைக் கூறுவதே இக்காப்பியமாகும். கோவலனுடன் தொடர்பு கொள்கின்ற நடன மாதான மாதவி, இன்னொரு முக்கிய கதாபாத்திரம் ஆகும்.

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆவதூஉம்,

உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்,

ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூஉம்,

சூழ் வினைச் சிலம்பு காரணமாக,

சிலப்பதிகாரம் என்னும் பெயரால்

நாட்டுதும் யாம் ஓர் பாட்டு உடைச் செய்யுள்

என்கிற பதிக வரிகளில், முழுக் காப்பியத்தின் முக்கியச் செய்திகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

மணிமேகலை

மணிமேகலை, ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்று. இதனை இயற்றியவர் சீத்தலைச் சாத்தனார்.மணிமேகலையின் கதைக்களன், கதை மாந்தர், கதை நடக்கும் காலம் ஆகியவை சிலப்பதிகாரத்தை ஒத்து இருப்பதால், மணிமேகலையும் சிலப்பதிகாரமும் இரட்டைக் காப்பியங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இக்காப்பியத்தின் நாயகி மணிமேகலை, சிலப்பதிகாரத்தில் வரும் மாதவியின் மகளாவாள். கோவலன் மற்றும் கண்ணகியின் சோக மறைவிற்குப் பிறகு, மாதவி பொது வாழ்விலிருந்தும் கலைப் பணியிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொண்டாள். தான் கடந்த காலத்தில் வாழ்ந்த முறையையும் நினைவுகளையும்

மாற்ற நினைத்த மாதவி, அவற்றின் சுவடுகளும், உலக சுகங்களும் இன்றி மணிமேகலையை வளர்க்க எண்ணி, புத்த சமய மடம் ஒன்றில், அவளைச் சேர்த்து வளர்த்தாள்.

அவள் வாழ்ந்து வந்த நாட்டு இளவரசன், மணிமேகலையின் மேல் காதல் கொள்ளவே, அவனிடமிருந்து விடுபட்டு மணிபல்லவத் தீவுக்குச் சென்று புத்த சமயத் துறவியானாள். அங்கு அவளுக்கு, பசிப்பிணி போக்கும் "அட்சய பாத்திரம்" கிடைத்தது. அன்று முதல் மக்களின் பசியைப் போக்குவதையே தன் கடமையாகக் கொண்டு வாழ்ந்த மணிமேகலை, அவள் மறைவிற்கு பின் தெய்வமாகப் போற்றப்பட்டாள்.

இக்காப்பியத்தில் இருந்து சில வரிகள்:

அறமெனப் படுவது யாதெனக்கேட்பின்

மறவாது இதுகேள் மன்னுயிர்க்கு எல்லாம்

உண்டியும் உடையும் உறையுளும் அல்லது

கண்ட தில்லை.

குண்டலகேசி

தமிழின் ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்ற குண்டலகேசி என்னும் நூல், ஒரு பௌத்தம் சார்ந்த நூலாகும். பல்வேறு தமிழ் நூல்களுக்கு உரை எழுதிய ஆசிரியர்கள் தங்கள் உரைகளிலே குண்டலகேசிப் பாடல்களை எடுத்தாண்டுள்ளார்கள். இந்நூலிலிருந்து கிடைத்துள்ள பாடல்கள் அனைத்தும் வேறு நூல்களிலிருந்து கிடைத்தவையே. பத்தொன்பது முழுமையான பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன.

தன்னைக் கொல்ல முயன்ற கணவனைக் கொன்றுவிட்டு, பௌத்த துறவியாகி, அச்சமயத்தின் பெருமையைப் பரப்புவதில் ஈடுபட்ட குண்டலகேசி என்னும் வணிகர் குலப் பெண்ணொருத்தியின் கதையே, இக்காப்பியத்தின் கருப்பொருளாகும்.ஆசிரியர் நாத குத்தனார்.

வளையாபதி

வளையாபதி தமிழில் ஐம்பெருங் காப்பியங்கள் என அழைக்கப்படும் ஐந்து நூல்களுள் ஒன்றாக விளங்குவது வளையாபதி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் இது, சமண சமயம் சார்ந்த ஒரு நூல். இதனை எழுதியவர் யாரென்பதும் அறியப்படவில்லை. இந்நூல் தற்காலத்தில் முழுமையாகக் கிடைக்கவில்லை. இந்நூலுக்குரிய 72 பாடல்கள் மட்டுமே கண்டெடுக்கப்பட்டுப் புதிப்பிக்கப் பட்டுள்ளன. இக்காப்பியத்தின் கதைப் பொருள் பற்றி ஊகங்கள் நிலவினாலும், கிடைத்துள்ள பாடல்களைக் கொண்டு இக்காப்பியத்தின் கதை இன்னதுதான் எனக் கூறமுடியாதுள்ளது.

கிடைத்துள்ள பாடல்களைக் கொண்டு, இக்காப்பியம் இலக்கியச் சுவையும் பொருட் செறிவும் கொண்ட பாடல்களால் அமைந்தது என்பதைக் கூறமுடியும். திருக்குறள், குறுந்தொகை போன்ற சங்க இலக்கியங்களிலிருந்து, கருத்துகளை மட்டுமன்றிச் சொற்றொடர்களையும் கூட வளையாபதி ஆசிரியர் எடுத்துப் பயன்படுத்தியுள்ளமை, கிடைக்கும் பாடல்களை அவதானிக்கும் போது தெரிகின்றது.

சீவக சிந்தாமணி

சீவக சிந்தாமணி திருத்தக்க தேவர் என்ற சமணப் புலவர் இயற்றியுள்ள "சீவக சிந்தாமணி", தமிழ் இலக்கியத்திலுள்ள மகா காப்பியங்களுள் - ஐம்பெரும் காப்பியங்களுள் தலை சிறந்ததாக மதிக்கப்படுகிறது. இது வாதீபசிம்பனின், "சத்திர சூடாமணி"யைப் பின்பற்றியது அந்த மூல நூலோ, கி.பி. 898 இல் குணபத்திரன் எழுதிய "உத்தரபுராண"த்தை அடிப்படையாகக் கொண்டது. எனவே, சீவக சிந்தாமணி பத்தாம் நூற்றாண்டில்

இயற்றப்பட்டிருக்க வேண்டும். சிந்தாமணியைத் தந்த ஆசிரியர், சோழ வம்சத்தில் பிறந்தவர் என்று நச்சினார்க்கினியர் சொல்கிறார். சமண புராணங்களில் தொன்று தொட்டு நிலவிவரும் கதைகளை சனரஞ்சகமாகவும், இனக்கவர்ச்சியுடனும், கற்பனையுடனும் தமிழில் எழுத, திருத்தக்க தேவர் விரும்பினார் அம்முயற்சியில் அவர் வெற்றிகண்டார் என்பதும் உண்மை.

நமக்கு இப்போது கிடைத்திருக்கும் சீவக சிந்தாமணி செய்யுட்கள் ஒவ்வொன்றும், நான்கு வரிகள் கொண்ட 3,141 செய்யுட்கள் உடையன. ஆசிரியர், 2,700 செய்யுட்களையே செய்தார் என்று அறியப்படுகிறது. ஏனைய 445 செய்யுட்களில், சில, அவருடைய குருவாலும், வேறு சில, வேறு யாரோ ஒருவராலும் எழுதப்பட்டவை. இரண்டு செய்யுட்களை, "இவை குருவால் எழுதப்பட்டவை" என்று உரையாசிரியர் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஏனைய செய்யுட்களை யார் எழுதியது என்ற விவரம் இல்லை. பெரிய புராணம் எழுதப்பட, சீவக சிந்தாமணி நேரடியாகக் காரணமாக இல்லை ஆனாலும், சீவக சிந்தாமணி, அதற்கு தூண்டுகோலாக இருந்திருக்கும் என்று அறியப்படுகிறது.

ஐஞ்சிறு காப்பியங்கள்

பழந்தமிழ் இலக்கியங்களின் தொகுப்பில் ஐம்பெருங் காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள் என்கிற முக்கியப் பிரிவும் உண்டு. அறம், பொருள், இன்பம் , வீடு என்னும் நால்வகை உறுதிப் பொருள்களில் ஒன்றோ பலவோ குறைந்து காணப்படும் காப்பியங்கள் 'சிறுகாப்பியம்' எனப்பட்டன.

உதயண குமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி ஆகிய ஐந்தும் ஐஞ்சிறு காப்பியங்கள் என்கிற பிரிவின் கீழ் வருவன.

உதயணகுமார காவியம்

வத்தவ நாட்டரசன் சதானிகனுக்கும் அவன் மனைவி மிருகாவதிக்கும் பிறந்த உதயணனின் கதையைக் கூறுவது இக்காவியம். 6 காண்டங்களில், 367 (தமிழண்ணல்) விருத்தப்பாக்களால் ஆன இந்நூல் கந்தியார் (சமணப் பெண்துறவி) ஒருவரால் இயற்றப்பட்டது.

இந்நூலில் உதயணன் நான்கு மனைவியரை மணந்து இறுதியில் துறவு நிலையை மேற்கொண்டதை அறிய முடிகிறது. கதையமைப்பு சிக்கலானதாகவும், இரு கதைத் தலைவர்களைக் கொண்டும் உள்ளது. பெயர் தான் காவியமே தவிர காவிய இயல்போ ஏற்றமோ நடை நலமோ சிறிதும் இல்லாதது . பெருங்கதை என்கிற நூலின் சுருக்கம் என்று கூட இதனைச் சொல்லலாம். இதன் காலம் கி.பி.15-ஆம் நூற்றாண்டு .

நாககுமார காவியம்

நாககுமார காவியம் இதன் ஆசிரியரும் ஒரு சமணப் பெண்துறவியே. பெயர் அறியக் கிடைக்கவில்லை. 5 சருக்கங்களில் 170 விருத்தப்பாக்களில் நாகபஞ்சமியின் கதையை உரைக்கும் சிறுகாப்பியமாகும் இது. முழுக்க முழுக்க மணத்தையும் போகத்தையும் மட்டுமே பேசுகிறது. 519 பெண்களைக் கதையின் நாயகன் மணக்கிறான். காவிய அமைதியோ கவி நயமோ எத்துணையும் இல்லாத சொத்தை நூல் இது என மது.ச.விமலானந்தம் குறிப்பிடுவார். காலம் கி.பி.16-ஆம் நூற்றாண்டு.

அழிந்து போன நூல் என்று கருதப்பட்ட இதனை சமண அறிஞர் ஜீவபந்து ஸ்ரீபால் அவர்களின் உதவியால் மு.சண்முகம் பிள்ளை பதிப்பித்துள்ளார்.

யசோதர காவியம்

யசோதர காவியம் 5 சருக்கங்களில் 320 விருத்தப்பாக்களால் ஆன இதன் ஆசிரியர் பெயரும் தெரியவில்லை. இராசமாபுரத்து அரசன் மாரிதத்தன் உயிர்களைப் பலியிட்டு வந்தான். அவனுக்கு உயிர்க்கொலை தீது என்று உணர்த்துவதற்காக எழுதப்பட்ட காப்பியம் இது. மறுபிறவிகள், சிற்றின்பத்தின் சிறுமை, பேரின்பத்தின் பெருமை, ஒழுக்கத்தின் உயர்வு

போன்றவற்றை விவரிப்பது இந்நூல். இ.ந்து ஒரு வடமொழி நூலின் தழுவல். எளிய நடையும் நயமான பாக்களும் உடைய நூல் இது. காலம் 13-ஆம் நூற்றாண்டு. இசை காமத்தைத் தூண்டும் என்பதையும், கர்மத்தின் விளைவுகளையும் எடுத்தியம்பும் இக்கதை உத்தரபுராணத்தில் இருந்து எடுக்கப்பட்டது என்றும் புட்பந்தர் கதையின் தமிழ் வடிவம் என்றும் இதன் ஆசிரியர் வெண்ணாவலுடையார் வேள் என்றும் கூறுவோர் உண்டு.

நூலின் எளிமைக்கு உதாரணமாக ஒரு பாடல்:

ஆக்குவ தேதெனில் அறத்தை ஆக்குக

போக்குவ தேதெனில் வெகுளி போக்குக

நோக்குவ தேதெனில் ஞானம் நோக்குக

காக்குவ தேதெனில் விரதம் காக்கவே.

சூளாமணி

சூளாமணி இதன் ஆசிரியர் வர்த்தமான தேவர் எனப்படும். தோலாமொழித் தேவர் 12 சருக்கங்களில் 2131 விருத்தப்பாக்களால் இயற்றப்பட்டது இந்நூல். ஆருகத மகாபுராணத்தைத் தழுவியது. பாகவதத்தில் வரும் பலராமன், கண்ணன் போன்று இக்காப்பியத்திலும் திவிட்டன், விசயன் என்னும் இரு வடநாட்டு வேந்தர்களின் வரலாறாக இந்நூல் உள்ளது. பாகவதமும் சூளாமணியும் கதை நிகழ்ச்சிகளில் ஓரளவு ஒத்து உள்ளன. சிரவணபெல்கோலா கல்வெட்டில் இந்நூல் பற்றிய குறிப்பு உள்ளது.

இந்நூலின் பாயிரம் தரும் குறிப்பின்படி, கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த அவனி சூளாமணி மாறவர்மன் என்னும் பாண்டியன் அவைக்களத்தில் அரங்கேறியது என்று தெரிகிறது. இது சிறுகாப்பிய வகையில் இருந்தாலும் பெருங்காப்பியப் பண்புகள் மிகுந்த நூலாகக் கருதப்படுகிறது.

நீலகேசி

முதன்மைக் கட்டுரை: நீலகேசி

நீலகேசித் திரட்டு என்றும் வழங்கப்படும் நீலகேசி காவியம், குண்டலகேசி என்னும் பௌத்த காவியத்துக்கு எதிரான சமண காப்பியமாகும். ஆசிரியர் பெயர் அறியக் கிடைக்கவில்லை. 10 சருக்கங்களில் 894 பாக்களால் ஆனது. கி.பி.பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. காப்பியத் தலைவி நீலி. பழையனூரில் பேயுருவில் இருந்து முனிச்சந்திரர் என்கிற சமண முனிவரால் பேய்மை நீங்கி அவருக்கே மாணவியாகவும் சமணத் துறவியாகவும் ஆகி பௌத்தர்களை வாதில் வென்ற கதையே இக்காப்பியம்.

பெருங்காப்பியம், சிறுகாப்பியம் இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகள்

பெருங்காப்பியம் அளவில் பெரியது சிறுகாப்பியம் அளவில் சிறியது. பெருங்காப்பியம் அறம், பொருள், இன்பம், வீடு பற்றிப் பேச வேண்டும் சிறுகாப்பியத்தில் இவற்றில் சில குறையும், பெருங்காப்பியம் உயரிய நோக்கம் கொண்டது சிறுகாப்பியம் அத்தகைய நோக்கம் கொண்டதல்ல. ஒரு கதையின் விரிவான வெளியீடு பெருங்காப்பியம் அதன் சுருக்கம் சிறுகாப்பியம்.

பெரியபுராணம்

பெரியபுராணம் (நசலைய ீரசயயெஅ) அல்லது திருத்தொண்டர் புராணம் (வுசைரவாவாழவெயசிரசயயெஅ) என்பது சேக்கிழார் அவர்களால் பெருங்காப்பிய இலக்கணங்கள் பலவும் கொண்டதாக இயற்றப்பெற்ற சைவ காப்பியமாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருத்தொண்டத் தொகை எனும் நூலை முதல் நூலாகக் கொண்டும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் காப்பிய தலைவராகக் கொண்டும், அவர் போற்றிய சைவ அடியார்களின் வாழ்க்கை வரலாற்றினையும் இந்நூலில் சேக்கிழார் விவரிக்கிறார்.

சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த 11 பாடல்களைக் கொண்ட திருத்தொண்டத் தொகை, நம்பியாண்டார் நம்பி எழுதிய 90 பாடல்களைக் கொண்ட திருத்தொண்டர் திருவந்தாதி ஆகியவற்றை மூலநூல்களாகக் கொண்டும், இரண்டாம் குலோத்துங்க சோழனிடம் அமைச்சராக இருந்த சேக்கிழார் பல ஊர்களுக்கும் சென்று திரட்டிய தகவல்களைக் கொண்டும் பெரியபுராணம் எழுதப் பெற்றுள்ளது. இரண்டாம் குலோத்துங்க சோழனின் ஆணையின்படி தில்லைக்குச் சென்றவர், அங்கிருக்கும் இறைவனான நடராசர் உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுக்க சேக்கிழார் உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன் எனப் பெரியபுராணத்தினைத் தொடங்கியதாக நம்பப்படுகிறது.

இடைக்கால இலக்கியத்தில் மக்களின் வாழ்க்கை பற்றி வரலாற்றுப் போக்கில் அறிவதற்கு இந்நூல் உதவுகிறது.

பெரிய புராணம் செயற்கு அரிய செய்வர் பெரியர் என்னும் குறள் வரிக்கேற்ப அறுபத்து மூன்று நாயன்மார்கள் புரிந்த இறைப் பக்தியையும், தொண்டு நெறியையும் வரலாற்று முறையில் கூறும் நூலே பெரிய புராணம் (பெரியர் புராணம்) ஆகும். இந்நூல் பல்வேறு நாடு, ஊர், சாதி, தொழில் கொண்ட நாயன்மார்களுடைய வாழ்க்கையை விவரிக்கிறது. அக்காலச் சமுதாய வரலாற்றையும் எளிய, இனிய நடையில் எடுத்து சொல்கிறது. தில்லை அம்பலத்தே ஆடும் சிவபெருமான் உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுக்கச் சேக்கிழார், பக்தி வளமும், இறையருட் திறமும் குறைவிலாது சிறக்குமாறு இலக்கியப் பெருங்களஞ்சியமாக, பெரிய புராணத்தை இயற்றி அருளினார்.

காப்பிய அமைப்பு

பெரிய புராணம் என்னும் பெருங்காப்பியம் தமிழகச் சூழலையும், 63 அடியார் பெருமக்களையும் மையமாகக் கொண்டு திகழ்கின்றது. இந்நூல் பெரும் பிரிவாக இரண்டு காண்டங்களையும், உட்பிரிவாக 13 சருக்கங்களையும் உடையது. 4286 விருத்தப் பாக்களையுடைய ஒரு பெரு நூலாகும்.

சுந்தரரின் சிறப்பு, அடியார்களின் சிறப்பு, சிவபெருமானின் அருட்திறம், குரு (ஆசிரியன்), இலிங்கம் (இறைவன் திருமேனி), சங்கமம் (அடியார்) ஆகிய முறைகளில் சிவனை வழிபட்ட நிலைகள், தொண்டின் திறம், சாதி, மத, இன வேறுபாடில்லாமல் அடியார் நோக்கில் கண்டு வழிபட்டு முத்தி பெற்ற தன்மைகள், சிவன் அடியார்களை ஆட்கொண்ட விதம் முதலான பல செய்திகளைக் கொண்டதாக இந்நூல் விளங்குகின்றது. அடியார்களின் வரலாறும். அவர்கள் கடைப்பிடித்த தொண்டு நெறியும், இறைவன் அவர்களை ஆட்கொண்ட விதமும் இந்நூல் முழுதும் எடுத்துக் கூறப்படுவதால் சேக்கிழார், திருத்தொண்டர் மாக்கதை என்று பெயரிட்டார். செயற்கரிய செயல் புரிந்த அடியார்களின் (பெரியார்களின்) சிறப்பினை உரைப்பதால் இதனைச் சான்றோர்கள் பெரியர் புராணம் என்று கூற, காலப் போக்கில் பெரிய புராணம் என்று வழங்கப்பட்டது.

காப்பிய நோக்கம்

கி.பி.11, 12-ஆம் நூற்றாண்டில் சோழநாட்டை ஆட்சி செய்த மன்னன் இரண்டாம் குலோத்துங்க சோழனாவான் (அநபாய சோழன்). அம்மன்னனின் அவையில் முதல் அமைச்சராகப் பணி புரிந்தவர் சேக்கிழார். சோழ மன்னனின் வேண்டுகோளுக்கு இணங்க, சிவனடியார்களின் உயர்ந்த வாழ்க்கையைக் கதைப் பின்னலாகக் கொண்டு பெரிய புராணத்தைப் பாடினார் சேக்கிழார்.

சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையை முதல் நூலாகவும், நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியை வழிநூலாகவும் கொண்டு பெரிய புராணத்தைச் சார்பு நூலாகப் படைத்தார் சேக்கிழார்.

சிவனை முதன்மைப்படுத்தி வழிபடும் சமயமாகிய சைவத்தையும், அடியார்களது வரலாறு, தொண்டு நிறைந்த வாழ்வு, முத்தி பெற்ற நிலை ஆகியவற்றையும் விரிவாகவும் தெளிவாகவும் புலப்படுத்துவதே பெரிய புராணத்தின் நோக்கம் ஆகும்.

காப்பியச் சிறப்பு

அறுபத்து மூன்று நாயன்மார்களின் புகழ் மிக்க வரலாற்றினை உலகறிய, பக்திச் சுவையோடு விரிவாக எழுதிய பெருமைக்கு உரியவர் சேக்கிழார் ஆவார். அவர் சோழ நாட்டு அமைச்சராக இருந்தமையால் நாட்டின் பல பகுதிகளுக்கும், நாயன்மார்கள் வாழ்ந்த ஊர்களுக்கும் நேரில் சென்று, அவ்விடத்தில் செவிவழி மரபாக வழங்கும் வரலாற்றுச் செய்திகளையும் தொகுத்து இந்நூலை அமைத்தார் என்பர்.

பிற மொழிக் கதைகளைத் தழுவாமல், தமிழ் மக்களையும், தமிழகச் சூழலையும் மையமாகக் கொண்டு இயற்றப்பட்ட சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களைப் போலவே பெரியபுராணம் என்னும் நூல் சிறப்புற்றுத் திகழ்கின்றது. ஆண் பெண் வேறுபாடின்றிப் பல இனங்களையும், தொழில் பிரிவுகளையும் சார்ந்த சிவனடியார்களைப் பற்றிய நூலாக அமைந்துள்ளதால் இந்நூலைத் தேசிய இலக்கியம் என்று சான்றோர்கள் பாராட்டுவர்.

நூலாசிரியர்

சென்னைக்கு அருகிலுள்ள குன்றத்தூர் என்னும் ஊரில் வேளாளர் மரபில் பிறந்தவர் அருண்மொழித் தேவர். இப்பெயரே அவருக்குப் பெற்றோர் இட்டு வழங்கியதாகும். சேக்கிழார் என்பது இவரது குடிப்பெயராகும். இவர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியதால், இரண்டாம் குலோத்துங்க சோழன் அவையில் முதலமைச்சராகப் பணிபுரிந்தார். அம்மன்னனின் வேண்டுகோளை ஏற்று, அடியார்களின் பெருமையை வரலாறாக எழுதினார். இந்நூலின் பெருமையை உணர்ந்த மன்னன், அவரைப் பட்டத்து யானையின் மீதேற்றி நகர்வலம் செய்து உத்தம சோழப் பல்லவராயன் என்னும் பட்டம் தந்து சிறப்பித்தான். இவருடைய காலம் கி.பி. 12 -ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். சிவத் தொண்டர்களின் வரலாற்றைச் சிறப்பித்த காரணத்தால் இவருக்குத் தொண்டர் சீர் பரவுவார் என்னும் சிறப்புப் பெயரும் உண்டு. கல்வெட்டுகள் இவரை மாதேவடிகள் என்றும், இராமதேவர் என்றும் சிறப்பிக்கின்றன. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ என்று இவரைப் பாராட்டுகின்றார்.

கண்ணப்ப நாயனார் புராணம்

பெரிய புராணம் என்னும் காப்பியத்துள் 63 நாயன்மார்கள் வரலாற்றில் கண்ணப்பநாயனார் வரலாறு இலைமலிந்த சருக்கத்தில் 10-ஆவது புராணமாக (காதையாக) இடம் பெற்றுள்ளது. இந்நாயனார் வரலாற்றைச் சேக்கிழார், 186 விருத்தப் பாக்களினால் பாடியுள்ளார். திண்ணனார் சிவலிங்கத் திருவுருவத்தின் கண்ணிலிருந்து இரத்தம் கசிந்ததைக் கண்டு, தன் கண்ணைத் தோண்டி அப்ப இறைவனால் கண்ணப்பன் என்று அழைக்கப்பட்ட செய்தியினை இக்கதை விளக்குகின்றது. இக்கதை நிகழ்ந்த இடம் இன்று காளத்தி என வழங்கும் திருக்காளத்தி மலையாகும் (பொத்தப்பி நாடு).

சுந்தரமூர்த்தி சுவாமிகளால் கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர் என்றும், பட்டினத்தாரால் நாளாறில் கண்ணிடந்து அப்ப வல்லேன் அல்லன் என்றும், திருநாவுக்கரசரால் திண்ணன், கண்ணப்பன், வேடன் என்றும் பலவாறாகச் சான்றோர்கள் பலரால் கண்ணப்பர் பாராட்டப்படுகிறார்.

கதைச் சுருக்கம்

பொத்தப்பி என்னும் நாட்டில் உடுப்பூர் என்னும் ஊரில் நாகன் என்பவன் வேடர்குலத் தலைவனாக இருந்து மக்களைக் காத்து வருபவன். தத்தை, அவன் மனைவியாவாள். நீண்ட காலமாகப் பிள்ளைப் பேறில்லாமல் இருக்கவே, முருகனை வேண்டி விழா எடுத்தனர். அவர்களின் வேண்டுதலை ஏற்றுக் கொண்ட முருகன் அருள் புரிந்தான். அவர்களுக்கு அழகான வலிமை மிக்க ஆண்குழந்தை பிறந்தது.

நாகன் அக்குழந்தையைத் தன் கைகளால் தூக்கும்போது திண் என்று இருந்தமையால் திண்ணன் என்று பெயரிட்டான். திண்ணன் வளர்ந்து குல மரபிற்கேற்ப வில், அம்பு,ஈட்டி, வாள் முதலான போர்ப் பயிற்சிகளைக் கற்றுச் சிறப்படைந்தான். நாகன் முதுமை காரணமாகத் தன் பதவியினைத் தன் மகனாகிய திண்ணனிடம் தந்து நாடாளும்படி பட்டம் சூட்டினான். இதனைக் கண்டு, தேவராட்டியும் வந்து, நலம் சிறக்க என வாழ்த்திச் சென்றாள். ஒரு நாள் திண்ணன் நாணன், காடன் ஆகிய நண்பர்களோடு வேட்டையாடச் சென்றார்.

வேட்டைக்காக விரித்த வலைகளை அறுத்துக்கொண்டு ஒரு பன்றி மட்டும் ஓடியது. விடாது துரத்திச் சென்று, புதருள் மறைந்த அந்தப்பன்றியைத் திண்ணன் தம் குறுவாளால் வெட்டி வீழ்த்தினார். இதனைக் கண்ட நண்பர்கள் வியந்து, திண்ணனின் வலிமையைப் பாராட்டினார்கள். அருகே ஓடும் பொன்முகலி ஆற்றையும் வானாளாவ நிற்கும் காளத்தி மலையையும் கண்டு வியந்தார் திண்ணன். இதனைக் கண்ணுற்ற நாணன். இம் மலையின் மீது குடுமித் தேவர் இருக்கிறார். அவரைக் கும்பிடலாம் வா என்றான். மலை ஏறும்போது திண்ணனுக்கு மட்டும் புதுவிதமான இன்பமும் உணர்வும் ஏற்பட்டன.

குடுமித் தேவருக்கு, சிவ கோசரியார் என்பவர் ஆகம விதிமுறைப்படி பூசை செய்வதனை நாணன் மூலம் அறிந்தார். மலையேறிய திண்ணன், குடுமித் தேவரைக் கண்டவுடன் அவரை வணங்கியும், கட்டித் தழுவியும் ஆடினார் பாடினார். நண்பன் காடன் ஆற்றங்கரையில் தீயில் இட்டுப் பக்குவப்படுத்திய இறைச்சியைத் தன்னுடைய ஒரு கையில் எடுத்துக் கொண்டார், மறு கையில் வில் இருந்ததால் வாய் நிறைய ஆற்று நீரையும், அருகில் இருந்த மரத்தின் மலர்களைத் தலையில் செருகியும் கொண்டு வந்தார். குடுமித் தேவருக்குத் திருமஞ்சனமாகத் தன் வாய் நீரையும், அமுதமாகப் பன்றி இறைச்சியினையும் தலையில் சூடிய மலரை வழிபாட்டு மலராகவும் இட்டு மகிழ்ந்தார் திண்ணனார். பின் இரவு முழுவதும் வில்லேந்திக் காவல் புரிந்தார். காலையில் குடுமித் தேவருக்குத் திருவமுது தேடி வரப் புறப்பட்டார்.

வழக்கம் போல, பூசை புரிய வந்த சிவ கோசரியார் இறைவன் மீதிருந்த இறைச்சி முதலானவற்றைக் கண்டு வருந்தினார், புலம்பினார். பின் அவற்றை நீக்கித் தூய்மை செய்து பூசனை புரிந்து சென்றார். அடுத்து, திண்ணனாரும் வந்து இறைச்சி முதலானவற்றை வைத்து வழிபட்டார். மறுநாளும் இறைச்சி முதலானவை இருப்பது கண்டு வருந்திச் சிவ கோசரியார் இறைவனிடம் முறையிட்டு வீட்டிற்குச் சென்று உறங்கினார். அவரது கனவில் சிவபிரான் தோன்றித் திண்ணனாரின் அன்பு வழிபாட்டை நாளை மரத்தின் மறைவில் நின்று பார்ப்பாயாக என்று கூறி மறைந்தருளினார். ஆறாம் நாள் திருக்காளத்தி நாதர் திண்ணனாரின் அன்பின் பெருமையைக் காட்ட, வலக் கண்ணில் இருந்து உதிரம் பெருகும்படிச் செய்தார். அதனைக் கண்ட திண்ணனார், செய்வதறியாமல் திகைத்தார். பின் தம் கைகளால் துடைத்தாலும் பச்சிலை இட்டாலும் நிற்கவில்லையே என வருந்தி நின்றபோது ஊனுக்கு ஊன் என்ற பழமொழி அவரது நினைவுக்கு வந்தது.

உடனே தம் வலக்கண்ணை அம்பினால் அகழ்ந்து எடுத்து அப்பினார். உதிரம் நின்றுவிட்டது. இதைக் கண்டு மகிழ்ந்து ஆடினார். சிவபிரான் இடக்கண்ணிலும் உதிரம் பெருகும்படிச் செய்தார். தம் இடக்கண்ணையும் பெயர்த்து எடுத்து அப்பினால் உதிரம் நின்றுவிடும் என்று உணர்ந்தார். தம் மறு கண்ணையும் பெயர்த்துவிட்டால் இறைவனின் இடக்கண்ணைச் சரியாகக் கண்டறிய முடியாது என்பதால், அடையாளத்துக்காகத் தம் காலின்

பெருவிரலை இறைவனின் உதிரம் பெருக்கும் கண் மீது ஊன்றிக் கொண்டார். அம்பினால் தம் இடக்கண்ணைப் பெயர்க்கத் தொடங்கினார். உடனே காளத்தி நாதர் நில்லு கண்ணப்ப என்று மூன்று முறை கூறித் திண்ணனாரைத் தடுத்தருளினார். இதனைக் கண்ட சிவ கோசரியார் தம்மை மறந்து சிவன் அருளில் மூழ்கித் திளைத்தார். அன்று முதல் இறைவனுக்கே தம் கண்ணைப் பிடுங்கி அப்பியதால் திண்ணனார் கண்ணப்பர் என்று அழைக்கப்பட்டார்.

குறிப்பு :

பொத்தப்பி நாடு : ஆந்திர மாநிலத்தின் இப்போதைய கடப்பை மாவட்டத்தில் புல்லம் பேட்டை வட்டத்தில் உள்ள ஒரு சிற்றூராகும்.

உடுப்பூர் : இவ்வூர் குண்டக்கல் -அரக்கோணம் ரயில் பாதையில் உள்ள இராசம்பேட்டைக்கு அருகில் உள்ளது. உடுக்கூர் என இன்று வழங்கப்படுகிறது.

- கதைமாந்தர்

கண்ணப்ப நாயனார் வரலாற்றில் இடம்பெறும் கதை மாந்தர்கள். நாகன், தத்தை, திண்ணன், நாணன், காடன், வேடுவர்கள், தேவராட்டி, குடுமித் தேவர், சிவ கோசரியார்.

இடம் பெறும் நிகழ்ச்சிகள் நாயனாரின் வாழ்க்கையையும் அதில் ஏற்பட்ட மாற்றத்தையும் விரிவாகக் காணலாம்.

திண்ணனார்

பொத்தப்பி எனும் மலைநாட்டில் உள்ள உடுப்பூர் என்னும் ஊரினை வேடர் குலத் தலைவன் நாகன் என்பான் ஆட்சி செய்து வந்தான். அவன் மனைவி தத்தையாவாள். அவர்களுக்கு நீண்ட காலமாகப் பிள்ளைப் பேறு இல்லாமல் இருக்கவே, முருகனுக்கு விழா எடுத்தனர். அம்முருகனின் அருளால் பிறந்தவனே திண்ணன். திண் என்று இருந்த காரணத்தால் தன் மகனுக்குத் தந்தையாகிய நாகன் திண்ணன் என்று பெயரிட்டான். வேடுவர் குல மரபிற்கு ஏற்ப வில், வேல்,ஈட்டி, முதலான ஆயுதங்களைக் கற்றுத் தேர்ந்து கையில் ஏந்தியவன், திண்ணன், அவன் கரிய நிறமுடையவன். உரத்த குரலுடையவன். தலை மயிரைத் தூக்கிக் கட்டியவன். தலையிலே மயிற்பீலி அணிந்தவன். சங்கு மணிகளும், பன்றிக் கொம்புகளும் கோத்த மாலையும், புலித் தோலினால் செய்யப்பட்ட தட்டை வடிவமான வெற்றி மாலையினையும் மார்பிலே அணிந்தவன். இடையிலே புலித் தோல் ஆடையணிந்தவன், குறுவாளையும் வைத்திருப்பவன். கால்களில் வீரக் கழல் பூண்டு, தோல் செருப்பு அணிந்தவன். வேட்டையாடுவதற்கு நாயினைத் துணையாகக் கொண்டவன்.

குடுமித் தேவரைக் காணல்

தந்தை நாகனுக்கு வயது முதிர்ந்தது. அதனால் நாட்டுக்கு இடையூறு விளைவிக்கும் விலங்குகளை வேட்டையாட வேண்டி, தன் மகனை வேடர் தலைவனாக்கினான் நாகன். இதனைக் கண்ட தேவராட்டியும் நலம் சிறக்க எனக் கூறித் திண்ணனாரைப் பாராட்டி வாழ்த்திச் சென்றாள். ஒருநாள் நாணன், காடன் என்னும் இரு நண்பர்களோடு வேட்டைக்குச் சென்றார் திண்ணனார். காட்டில் திரிந்த வலிய பன்றியைத் தம் குறுவாளால் வீழ்த்தினார். அருகில் ஓடும் பொன்முகலி ஆற்றினையும் வானளாவி நிற்கும் காளத்தி மலையையும் கண்டு வியந்தார். நண்பர்கள், "இம்மலையில், குடுமித் தேவர் இருக்கிறார். அவரைக் கும்பிடலாம் வா" என்றார்கள். திண்ணனாருக்கு மலையேறும் போதே புதுவிதமான இன்பமும், உணர்வும் உண்டாயின.

வழிபடல்

மலையேறிய திண்ணனார் பேருவகை கொண்டு ஓடிச் சென்று, காளத்தி நாதரைக் கட்டித் தழுவினார். ஆனந்தக் கண்ணீர் பெருக்கினார். மேலும் கன்றை ஈன்ற பசுவைப் போலப் பிரிய

மனமின்றிச் சுழன்று சுழன்று இறைவனிடமே நின்றார். பின்பு பொன் முகலியாற்றங் கரையினருகில் காடன், தீயில் இட்டு பக்குவப்படுத்திய பன்றி இறைச்சியினைத் தம் வாயினால், சுவையும் பதமும் பார்த்துப் பின் ஒருகையில் அதனை எடுத்துக்கொண்டு, மற்றொரு கையில் வில்லம்பு ஏந்தினார்.

இறைவனது திருமஞ்சனத்திற்காகப் பொன்முகலியாற்று நீரை வாயில் நிறைத்துக்கொண்டு, பூசனைக்காகப் பூங்கொத்துகளைத் தம் தலையில் செருகிக் கொண்டு, மலையுச்சிக்கு வந்தார். குடுமித் தேவரின் மேல் இருந்த சருகுகளைச் செருப்பணிந்த தம் பாதங்களால் விருப்பமுடன் தள்ளினார். தம் வாயிலிருந்த நீரால் திருமஞ்சனம் செய்தார். தம் தலையில் இருந்த மலர்களைத் திருமுடி மீது சார்த்தி, பன்றி இறைச்சியினைத் திருவமுதாகப் படைத்து மகிழ்ந்தார். குடுமித் தேவருக்கு இரவில் துணை யாருமில்லை என்று எண்ணி, இரவு முழுவதும் அவரே கையில் வில்லேந்திக் காவல் புரிந்தார். காலை புலர்ந்தது. திண்ணனார், காளத்தி நாதருக்குத் திருவமுது தேடிவரப் புறப்பட்டார்.

சிவபிரானின் அருள் வாக்குப் பெறல்

திண்ணனார் சென்றவுடன் வழக்கம் போல் சிவ கோசரியார் பூசை செய்ய வந்தார். மேலுள்ள இறைச்சி முதலானவற்றை நீக்கி ஆகம முறைப்படி பூசை செய்துவிட்டுச் சென்றார். திண்ணனார் முன் போலவே வேட்டையாடி விலங்குகளைத் தீயில் சுட்டு அமுதாக்கிப் படைத்திட வந்தார். தொடர்ந்து, சிவ கோசரியார் வழிபட்டுச் சென்றவுடன், திண்ணனார் வந்து அவற்றை நீக்கி வழிபடுவதும் தொடர்ந்தது. தினமும் சிவன் திருமேனி மீது இறைச்சி இருப்பது கண்டு சிவ கோசரியார் வருந்தினார். மனம் கசிந்து இறைவனிடம் முறையிட்டு வீட்டிற்குச் சென்று உறங்கினார். அவரது கனவில் சிவபிரான், நீ கூறும் மறைமொழிகள் அவன் அன்பு மொழிகளுக்கு ஈடாகாது, நீ வேள்வியில் தரும் அவியுணவைக் காட்டிலும் அவன் தரும் ஊனமுது இனியது என்றும் இந்நிகழ்ச்சியினை மரத்தின் மறைவில் நின்று பார்ப்பாயாக என்றும் கூறினார்.

அவனுடைய வடிவுஎல்லாம் நம்பக்கல் அன்புஎன்றும் அவனுடைய அறிவுஎல்லாம் நமை அறியும் அறிவு என்றும் அவனுடைய செயல் எல்லாம் நமக்கு இனிய வாம் என்றும் அவனுடைய நிலை இவ்வாறு அறிநீஎன்று அருள்செய்தார்.

(பெரி: க.பு.:157)

என்றும் திண்ணனாரின் பக்திச் சிறப்பைச் சிவபிரான் கூறினார்.

கண்ணப்பன் ஆதல்

ஆறாம் நாள், திருக்காளத்திப் பெருமான் திண்ணனார் தம் மீது கொண்டுள்ள அன்பின் பெருமையைக் காட்ட, தமது வலக்கண்ணில் இருந்து உதிரம் பெருகச் செய்தார். இதனைக் கண்ட திண்ணனார் தாம் செய்வதறியாமல் திகைத்தார். பூசைக்காகக் கொண்டு வந்த பொருள்கள் சிதறின. தம் கையால் இரத்தம் கசிவதைத் துடைத்தாலும் நிற்கவில்லை. உடனே பச்சிலைகளைத் தேடிக் கொண்டுவந்து தடுத்துப் பார்த்தார். நிற்கவில்லை. இந்த நிலையில் திண்ணனார் அடைந்த துயரத்தையும், தவிப்புகளையும் சேக்கிழார் உணர்ச்சி மிக்க கவிதையாய் வடித்திருக்கிறார்.

பாவியேன் கண்ட வண்ணம்

பரமனார்க்கு அடுத்தது என்னோ

ஆவியின் இனிய எங்கள்

அத்தனார்க்கு அடுத்தது என்னோ

மேவினார் பிரிய மாட்டா

விமலனார்க்கு அடுத்தது என்னோ

ஆவது ஒன்று அறிகி லேன்யான்

என்செய்வேன் என்று பின்னும்... (க.புராணம் :174)

(பரமனார், அத்தனார், விமலனார் ஸ்ரீ சிவபிரானின் சிறப்புப் பெயர்கள் மேவினார் பிரிய மாட்டாஸ்ரீ சேர்ந்தவர்கள் பிரிய இயலாத பேரன்பு கொண்ட)

இனி என்ன செய்வது என்று சிந்தித்து நின்றார். அப்பொழுது ஊனுக்கு ஊன் என்ற பழமொழி அவரது நினைவுக்கு வந்தது. உடனே அம்பினால் தமது வலக்கண்ணை அகழ்ந்தெடுத்து, ஐயன் திருக்கண்ணில் அப்பினார். இரத்தம் நின்றுவிட்டது. இதைக் கண்டு மகிழ்ந்து ஆடினார். அடுத்து, சிவபிரான் தமது இடக்கண்ணிலும் உதிரம் பெருகச் செய்தார். அதைக் கண்ட திண்ணனார், "இதற்கு யான் அஞ்சேன், முன்பே மருந்து கண்டுபிடித்துள்ளேன். அதனை இப்பொழுதும் பயன்படுத்துவேன். எனது இன்னொரு கண்ணையும் அகழ்ந்தெடுத்து அப்பி ஐயன் நோயைத் தீர்ப்பேன்" என்று எண்ணினார். அடையாளத்தின் பொருட்டு, காளத்தி நாதர் திருக்கண்ணில் தமது இடக்காலை ஊன்றிக் கொண்டு, மனம் நிறைந்த விருப்புடன் தமது இடது கண்ணைத் தோண்டுவதற்கென அம்பை ஊன்றினார்.

குடுமித் தேவர் நில்லு கண்ணப்ப! என்று மூன்று முறை கூறித் திண்ணனாரைத் தடுத்தருளினார். மேலும், என்றும் என் வலப்பக்கம் இருக்கக் கடவாய் என்று பேரருள் புரிந்தார். இதனைக் கண்ட சிவ கோசரியார் தம்மை மறந்து சிவனருளில் மூழ்கித் திளைத்தார். இறைவனுக்கே தம் கண்ணைப் பிடுங்கி அப்பியதால் அன்று முதல் திண்ணனார் கண்ணப்பர் என்று அழைக்கப்பட்டார்.

காப்பியப் பகுப்பு

பெரியபுராணம் முதல் காண்டம், இரண்டாம் காண்டமென இரு காண்டமாகவும், முதல் காண்டத்தில் ஐந்து சருக்கங்களையும், இரண்டாம் காண்டத்தில் எட்டுச் சருக்கங்களையும் உடையதாக அமைக்கப்பெற்றுள்ளது. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருத்தொண்டத் தொகையில் இடம்பெற்றுள்ள பாடல்களின் முதல் வரியே சருக்கங்களின் பெயர்களாக உள்ளது.

காப்பிய கதையானது கயிலாயத்தில் தொடங்கப்பெற்றுச் சைவ அடியார்களின் வாழ்க்கையை விவரித்து, இறுதியாகக் கயிலாயத்தில் முடிகிறது.

முதற் காண்டத்தில்,

1. திருமலைச் சருக்கம்,
2. தில்லை வாழ் அந்தணர் சருக்கம்,
3. இலை மலிந்த சருக்கம்,
4. மும்மையால் உலகாண்ட சருக்கம்,
5. திருநின்ற சருக்கம்

என்ற ஐந்து சருக்கங்களும்,

இரண்டாம் காண்டத்தில்,

1. வம்பறா வரிவண்டுச் சருக்கம்,
2. வார்கொண்ட வனமுலையாள் சருக்கம்,
3. பொய்யடிமையில்லாத புலவர் சருக்கம்,
4. கறைக்கண்டன் சருக்கம்,

5. கடல்சூழ்ந்த சருக்கம்,

6. பத்தராய்ப் பணிவார் சருக்கம்,

7. மன்னிய சீர்ச் சருக்கம்,

8.வெள்ளானைச் சருக்கம்.

என்னும் 8 சருக்கங்களும் அமைந்துள்ளன.

13 சருக்கங்களிலும் உள்ள பாடல்களின் எண்ணிக்கையும் அவற்றில் பேசப்படும்

பழமொழி

நான்காயிரத்து இருநூற்று எண்பத்து ஆறு (4286) செய்யுள்களைக் கொண்ட இப்புராணத்தில் ஆளுடையபிள்ளை எனப்படும் திருஞானசம்பந்தரின் வரலாறு மட்டும் 1256 செய்யுட்களால் விரிவாகக் கூறப்பட்டுள்ளதால் "பிள்ளை பாதி புராணம் பாதி" என்கிற பழமொழி ஏற்பட்டது.

பெரிய புராண ஆராய்ச்சி

இராசமாணிக்கனார் எழுதிய பெரியபுராண ஆராய்ச்சி எனும் நூல் பெரியபுராணத்தைப் பற்றிய குறிப்பிடத்தக்க நாட்டுடைமையாக்கப்பட்ட நூல். சருக்கம்

என்னும் 8 சருக்கங்களும் அமைந்துள்ளன.

13 சருக்கங்களிலும் உள்ள பாடல்களின் எண்ணிக்கையும் அவற்றில் பேசப்படும்.

பழமொழி

நான்காயிரத்து இருநூற்று எண்பத்து ஆறு (4286) செய்யுள்களைக் கொண்ட இப்புராணத்தில் ஆளுடையபிள்ளை எனப்படும் திருஞானசம்பந்தரின் வரலாறு மட்டும் 1256 செய்யுட்களால் விரிவாகக் கூறப்பட்டுள்ளதால் "பிள்ளை பாதி புராணம் பாதி" என்கிற பழமொழி ஏற்பட்டது.

பெரிய புராண ஆராய்ச்சி

இராசமாணிக்கனார் எழுதிய பெரியபுராண ஆராய்ச்சி எனும் நூல் பெரியபுராணத்தைப் பற்றிய குறிப்பிடத்தக்க நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்.

வில்லிபாரதம்

பாரதம் என்னும் சொல்லுக்கு - பரதனது வம்சத்தவரைப் பற்றிய நூல் என்று பொருள். இந்தப் பரதன் சந்திரவம்சத்தில் துஷ்யந்த மகாராசனுக்குச் சகுந்தலையினிடந்தோன்றிப் புகழ் பெற்ற குறவர்வில்லிஅரசன். பரத வம்சத்தைச் சேர்ந்த பாண்டவர், துரியோதனன் ஆகியோரைப் பற்றியும் அவர்களைச் சார்ந்தவர்களைப் பற்றியும் உணர்த்தும் நூல் பாரதம் எனப்பட்டது. நான்கு வேதங்களுக்குச் சமமாக ஐந்தாம் வேதம் என இந்நூல் போற்றப்பட்டது. அனைவராலும் வழிபடத்தக்க மேம்பாட்டை உடையதாயிருத்தலால், இந்த இதிகாசம், "மகா" எனும் அடைமொழி கொடுக்கப்பட்டு, மகாபாரதம் எனவும் வழங்கும். இந்நூலை முதலில் செய்த வேத வியாசமுனிவரால் வைக்கப்பட்ட "பாரதம்" என்கிற பெயரே, வழிநூலாகிய இத்தமிழ் நூலுக்கும் பெயராயிற்று. எனவே வில்லிபாரதம் ஒரு வழிநூல்.

வில்லிபாரதத்தில் உலூகன் தூது, கிருட்டிணன் தூது, சஞ்சயன் தூது என்னும் மூன்று தூதுச்சருக்கங்கள் உள்ளன. இவற்றில் உலூகன் தூதும், கிருட்டிணன் தூதும் பாண்டவர் சார்பாக நூற்றுவர்பால் அனுப்பப் பெற்றவை. சஞ்சயன் தூது திருதராட்டிரனால் பாண்டவர்பால் விடுக்கப்பெற்றது. கிருட்டிணன் தூது 264 பாடல்களால் விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

காப்பியத்தின் உயிர்ப்பகுதியாகக் கிருட்டிணன் தூது அமைகிறது. முதலில் அண்ணன் தம்பி பூசலாக உருவானது பிறகு பாண்டவர், கௌரவர் மானப்பிரச்சினையாக ஆனது அதற்குப்பிறகு அரசியல் பிரச்சினையாக வளர்ந்தது. இவ்வாறு ஒரே காப்பியத்தின் கருவானது மூன்று நிலைகளில் நிற்பதால் தான், பாரதம் என்றென்றும் சுவை மிக்க காப்பியமாக விளங்கிவருகிறது.

பாரதத்தின் தொடக்கத்தில் கௌரவ, பாண்டவரின் முன்னோர் வரலாற்றையும் இன்றியமையாத மாந்தர்களின் பிறப்பு நிலையினைப் பற்றியும் விவரித்துப் பங்காளிகளின் பொறாமையே பாரதப் போருக்கான வித்தாகிறது என்பது கூறப்படுகிறது. பாண்டவர்க்கமைந்த நாட்டினைக் கௌரவர் கைக்கொள்ள நினைக்கும் எண்ணமே அந்தப் பொறாமை வளர்வதற்கு உரமாக அமைகிறது. தலைவன் துரியோதனன், பாண்டவரின் வலிமை மிக்க வீமனை அழிக்க முடிவுசெய்தல், அரக்கு மாளிகையில் அனைவரையும் அழிக்க முயலுதல், இராஜசூய யாகத்தின் மூலமாகக் கண்ணனுக்குப் பெருமை சேர்த்து, கௌரவர்களைப் பாண்டவர் பழித்தல், மோதல் இல்லாமல் சூது போரால் நூற்றுவர் வெற்றிகொள்ளல், பாஞ்சாலி துகிலுரிதல் - அப்போது கண்ணன் திரௌபதிக்கு உதவுதல், அரசிழந்த பாண்டவர்களின் நிலை எனக் கதை நீண்டு செல்லும் போக்கினைத் தொடர்ந்து, பகையில் அழிவு நேராமல் இருக்க, பாண்டவர் விடுத்த தூதுச் செயல்கள், போர்ச்செயலை நோக்கி விரைவு படுத்தவே உதவுகின்றன.

கண்ணன் தூது சென்று ஆற்றிய செயல்கள் கௌரவர்களின் முழு வலிமையைக் குலைத்தன. இறுதியில் போர் மூண்டு துரியோதனன் வீழ்த்தப் பட்டான். தருமன் அரசனானான். கண்ணன் தூது மேற்கொண்டதும், அப்பணியை எவ்வாறு திறம்பட முடித்தான் என்பதும் இப்பாடப் பகுதியில் விளக்கப் பெறுகின்றன.

வில்லிபாரதம்

தமிழில் அதிகமான வடசொற்களைக் கலந்து வரும் நூலாக வில்லிபாரதம் காணப்படுகிறது. சுருங்கச்சொல்லல், விளங்கவைத்தல், ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல் முதலிய நூலழகுகள் இந்நூலில் அமைந்துள்ளன. ஆழ்வார்களுடைய சொற்களும், பொருள் கருத்துகளும் சிற்சில இடங்களில் எடுத்தாளப்பட்டுள்ளன.

கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வில்லிபுத்தூரார் இயற்றிய பெருங்காப்பியம் வில்லிபாரதம். வியாசரை முதல் நூலாசிரியராகக் கொண்ட வில்லிபுத்தூரார் தமக்குமுன் வழங்கிய சங்க இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், பாரத வெண்பா, வடமொழியிலமைந்த பாலபாரதம், மக்களிடையே வழங்கிய பாரதம், கிளைக்கதைகள், நாட்டுப் பாடல்கள், பழமொழிகள் ஆகியவற்றை மனத்தில் கொண்டு தமது நூலைப் பாடினார்.

நல்லாப்பிள்ளை பாரதம்

வில்லிபுத்தூரார் பாடிய பாரதத்திலே சுருக்கமாகக் கதையைத் தொகுத்துக் கூறும் 300, 400 பாடல்கள் தவிர, மற்றைய நாலாயிரஞ் செய்யுட்களை எடுத்துக்கொண்டு, பிற்காலத்தில் நல்லாப்பிள்ளை என்பவர், புதிதாகத் தாம் 11 ஆயிரம் பாடல்கள் பாடி, இடையிடையிற்கோத்தும் இறுதியில் சேர்த்தும் பாரதம் 18 பருவங்களையும் பூர்த்தி செய்தார் அது நல்லாப்பிள்ளை பாரதம் என வழங்கப்படுகிறது.

சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல், ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல் முதலிய நூலழகுகள் இந்நூலில் அமைந்துள்ளன. ஆழ்வார்களுடைய சொற்களும், பொருள் கருத்துகளும் சிற்சில இடங்களில் எடுத்தாளப்பட்டுள்ளன.

பொ.ஊ. 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வில்லிபுத்தூரார் இயற்றிய பெருங்காப்பியம் வில்லி பாரதம். வியாசரை முதல் நூலாசிரியராகக் கொண்ட குறவர்வில்லிபுத்தூரார் தமக்குமுன் வழங்கிய சங்க இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், பாரத வெண்பா, மக்களிடையே

வழங்கிய பாரதம், கிளைக்கதைகள், நாட்டுப் பாடல்கள், பழமொழிகள் ஆகியவற்றை மனத்தில் கொண்டு தமது நூலைப் பாடினார்.

நூலாசிரியர்

வில்லிபுத்தூரார் திருமுனைப் பாடி நாட்டில் சனியூரில் வீரராகவாச்சாரியாருக்கு மகனாக அவதரித்தவர், வைணவ மதம் சார்ந்த அந்தணர் என்னும் செய்திகள் நூலின் சிறப்புப் பாயிரத்தின் மூலம் அறியமுடிகிறது. தன்னை ஆதரித்த வரபதியாட்கொண்டானை இந்நூலின் இடையிடையே புகழ்ந்து பேசியுள்ளார். இவர் மகாபாரதம் தவிர வேறு நூல் எதுவும் பாடியிருப்பதாகத் தெரியவில்லை. பிற்காலத்தவர் இவரை "குறவர்வில்லிபுத்தூராழ்வார்" என்றே குறிப்பிட்டனர். இவருடைய காலம் ஏறக்குறைய 16ஆம் நூற்றாண்டு ஆகும். திருவண்ணாமலையில் வாழ்ந்த அருணகிரிநாதருடைய சம காலத்தவர் குறவர்வில்லிபுத்தூரார் என்றும் கூறப்படுகிறது.

நூலாசிரியர் பற்றிய கதை

வில்லிபுத்தூரார்க்கும் இவர் தம்பியர்க்கும் தாய் பாகத்தைப் (பரம்பரைச் சொத்துரிமை) பற்றி விவாதமுண்டாக, அவ்விஷயத்தை அவர்கள் அரசனிடம் கொண்டு சென்றனர் குறிஞ்சி அரசன் இவரது கல்வித் திறத்தை கேள்வியுற்று அறிந்தவனாதலால், "இவ்வளவு கற்றறிந்தவர்க்கும் உண்மையறிவு உண்டாகவில்லையே! என்று வருத்தமடைந்து அவ்வுண்மையறிவை இவர்க்கு உண்டாக்குவதற்கு ஏற்ற உபாயம் மகாபாரத நூலைப் பயிலும் படி செய்வதே" என்று உறுதிசெய்து, "மகாபாரதத்தை நீர் தமிழில் பாடவேண்டும் பாடின பின்பு தான் உங்கள் வழக்குத் தீர்க்கப்படும்" என்று கட்டளையிட்டான் உடனே இவர் அவ்வாறே அப்பாரதத்தைப் பாடி, அந்நூலின் நீதியின் கருத்தூன்றியவராய், பின்பு தாமே தம் பங்கை தம்பியர்க்கே கொடுத்துவிட்டார் என்றும் இவரைப் பற்றி ஒரு கதை வழங்குகிறது.

காப்பிய அமைப்பு

வட மொழி மகாபாரதத்தில் மொத்தம் 18 பருவங்கள் உள்ளன. வில்லியார், முதல் 10 பருவங்களை மட்டுமே பாடியுள்ளார்.

1. ஆதி பருவம்
2. சபா பருவம்
3. ஆரணிய பருவம்
4. விராட பருவம்
5. உத்தியோக பருவம்
6. வீட்டும பருவம்
7. துரோண பருவம்
8. கன்ன பருவம்
9. சல்லிய பருவம்
10. சௌப்திக பருவம்

ஆகியவை. மொத்தம் - 4337 பாடல்கள். நமக்குப் பாடமாக வந்துள்ள 'கிருட்டிணன் தூதுச் சருக்கம்'- உத்தியோக பருவத்தில் அமைந்துள்ளது.

13 ஆண்டுகள் காட்டிலும் மறைந்தும் வாழ்ந்த பிறகு, பாண்டவர்கள் தங்களுக்கு உரிய அரசினைக் கேட்கவே, பாண்டவர் சார்பாகக் கிருட்டிணன் தூது சென்ற வரலாற்றை உணர்த்தும்பகுதி, இது.

இதர விவரங்கள்

வில்லிபாரதம், வியாசர் எழுதிய மகாபாரத நூலைத் தழுவியது. எனினும்,பாரதத்தின் முற்பகுதியை மட்டுமே குறவர்வில்லிபுத்தூரார் தமிழில் எழுதியுள்ளார். மிகப் பெரிய நூலான மகாபாரதத்தைச் சுருக்கிப் பத்து பருவங்களில் 4351 பாடல்களில் தந்துள்ளார். வியாச பாரதத்தில் முக்கிய உறுப்புகளில் ஒன்றான பகவத்கீதை வில்லிபாரதத்தில் உள்ளடக்கப்படவில்லை. வில்லிபாரதம் பெருமளவு சமஸ்கிருதக் கலப்புக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

காப்பியச் சிறப்பு

பல கிளைக் கதைகளும், அணிநலன்களும் வருணனைகளும் காப்பியத்தின் சிறப்பாக அமைந்துள்ளன.

கிளைக் கதைகள்

வில்லிபாரதத்திலும், அந்தக் காலத்து மக்களுக்கு விருப்பமான கதைகள் எடுத்துப் பயன்படுத்தப்பட்டுள்ளன. கண்ணன், சிவன், ராமன் பற்றிய கதைகளைத் தொடர் வடிவில் சுருக்கமாகச் சுட்டுவதும், பிற்காலத்தில் வழங்கிய சம்பந்தர் கதையைக் குறிப்பிடுவதும், நளாயினி கதை, சிவபெருமான் மூங்கிலில் பிறந்தது, முப்புரம் எரித்தது போன்ற கதைகளும் வில்லிபாரதத்தில் காணமுடிகிறது. கிருட்டிணன் தூதுச் சருக்கத்தில், இந்திரன் கோபத்தால் இடையர்க்கும், இடைச்சியர்க்கும் தீங்கு தரும்படி கல்மழையைப் பெய்வித்த பொழுது கண்ணன் கோவர்த்தன மலையை எடுத்துக் குடையாகப் பிடித்து மழையைத் தடுத்தது. (பாடல்-27) பூதகி நஞ்சு தீற்றிய முலைப்பாலைக் கொடுத்துக் கண்ணனைக் கொல்ல வந்த கதை (பாடல்-32) ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன.

நளகூபரன், மணிக்கிரீவன் என்னும் குபேர புத்திரர்கள் - நாரதர் சாபத்தால் மருதமரமாய் ஆனவர்கள், யசோதையால் கயிற்றில் கட்டப்பட்ட கண்ணன் மருதமரத்தில் குறுக்காக வர, மரங்கள் முறிந்து விழவும், குபேரபுத்திரர்கள் உயிர் பெற்று வந்தனர். (பாடல்-27)

மகாபலிச் சக்கரவர்த்தியின் செருக்கினை அடக்க, திருமால் வாமன அவதாரம் எடுத்துத் திரிவிக்கிரமனாக உலகம் அளந்த கதை (பாடல்-37).

பாணாசுரனைத் தனது சுதர்சனம் எனும் சக்கரத்தைப் பிரயோகித்து, அவனது ஆயிரந்தோள்களையும், தாரை தாரையாய் உதிரமொழுக அறுத்து, அவனுயிரையும் சிதைக்க இருக்கும் போது சிவபெருமான் வேண்டியதால், நான்கு கரங்களுடன் அவனை உயிருடன் விட்டார் திருமால் (பாடல்-4). இவ்வாறு பல கிளைக்கதைகள் கிருட்டிணன் தூதுச்சருக்கத்தில் காணப்படுகின்றன.

அணி நலன்கள்

துரியோதனனை அழிக்க வேண்டும் என்று வீமன் கண்ணனிடம் சொல்லும் போது, தருமன் சொல்வதாக ஒரு பாடல் அமைந்துள்ளது. எனது அவயவங்களில் ஒன்றில் மற்றொன்று அஜாக்கிரதையினால் பட்டு அதற்கு வருத்தத்தை உண்டாக்கினால், அதற்காக அந்த வருத்தும் உறுப்பைக் கோபித்துக் களைபவரில்லாமை போல, ஒரு குடும்பத்தவருள் மற்றொரு வருக்குச் சோர்வினால் தீங்கிழைத்தால், அதற்கு அவரை அழிப்பது தகுதியன்று என்று கூறும் தருமனின் கருத்தை மிக அழகாக அமைத்துள்ளார் புலவர். (பாடல் 8)

கிருட்டிணன் தூது சென்ற அத்தினாபுரத்தில் நகரத்தினை அடுத்துள்ள சோலைகளின் தன்மையைக் குறிப்பிடும்போது, பாக்குமரப் பழுத்த குலைகளுக்குப் பவழத் திரளும், பச்சை இலைகள், பச்சைக் குலைகளுக்கு மரகதமும், தொங்கும் வெள்ளிய பாலைக்கு முத்துக் கோவையும் உவமையாக வருகின்றன. (பாடல் 56)

அத்தினாபுரத்தையும், அந்நகர மாளிகையையும் அந்நகரத்தில் எழும் பலவகை ஒலிகளையும் பற்றிக் குறிக்கும் பாடல்களில் சொற்பொருட் பின்வருநிலையணி பயின்று வந்துள்ளது. (பாடல்-67) இவ்வாறு வில்லிபாரதத்தில் அணி இலக்கணங்களின் பயன்பாட்டினை அறிய முடிகிறது.

வருணனை

வாழ்வின் கூறுகளை உள்ளத்தில் பதியும்படி பல திறன்கள் கொண்ட வருணனைகளை வில்லிபுத்தூராழ்வார் கையாளுகின்றார். யானைப்படையைப் பற்றி அதிகமாக வருணித்துள்ளார்.

கண்ணன் விதுரன் வீட்டில் விருந்துண்டு மகிழ்ந்திருக்கிறான். அந்த மாலைப் பொழுது - சூரியன் அஸ்தமான நிகழ்வை வில்லியார் வருணிக்கிறார். கண்ணபிரான் விருந்துண்டு வீற்றிருந்த சமயத்தில், சூரியனும் மகாமேரு மலைக்கு அந்தப்புறத்தில் சென்று தேவாமிருதத்தை உண்ணுதற்கு அஸ்தமித்தான் என்று வருணிக்கிறார். (பாடல்-85) அதுபோலவே, மாலை நேரத்துச் செவ்வானத்தின் தோற்றமானது, பிராமணர்கள் எல்லாரும் தாம் கழிக்கவேண்டிய கடமைகளை எண்ணி, வேதமந்திரமாகிய கொடிய வில்லின் மேலே, நீராகிய பாணத்தைக் கையால் வைத்து, சூரியனது பெரிய பகைவர்களான அசுரர்களின் மேலே பிரயோகித்தலால் பரவிய இரத்தம் போல நினைக்கும்படி மேற்குத் திசை சிவந்தது என்று வருணிக்கிறார். (பாடல்-86)

மேலும்,

மாலைக்காலத்தில் குவிந்த தாமரைத் தொகுதிகள், பகல் பொழுது முழுவதிலும், உக்கிரமாக எழும் சூரியனொளி, நீரில் வாழும் தெய்வமகளிர் மேல் படாதபடி பரப்பப்பட்டிருந்து, அந்தப் பகல்பொழுது ஒடுங்கிவிட்டது என்கிற காரணத்தால், வரிசையாக மடக்கப்பட்ட, அழகிய மென்மையான பட்டுக்குடைகளைப் போல இருந்தன என்று வருணிக்கிறார். (பாடல் 88) அந்திக் காலத்தில் அத்தினாபுர நகரத்தின் தோற்றத்தினை,

கலந்து மங்கல முழவு வெண்சங் கொடுகறங்க

மிலைந்த பூங்குழல்வனிதையர் மெய்விளக்கெடுப்பக்

கலந்த தாமரைத் தடமெலாங் குவிந்தது கண்டு

மலர்ந்த தாமரை வாவி போன்றது நகர் வட்டம் (பாடல்-89)

எனும் பாடலில் வருணிக்கும் திறன் வெளிப்படுவதைக் காணலாம். அதாவது, மங்கலமான பேரிகைகள், வெண்ணிறமான மங்கலச் சங்குகளுடனே கூடி ஒலிக்கவும், மலர்களைச் சூடிய கூந்தலையுடைய மகளிர் தீபங்களை ஏந்தவும், அத்தினாபுரி நகரமானது, தாமரை மலர்களையுடைய தடாகங்களெல்லாம் குவியப் பெற்றதைப் பார்த்துத் தானும் மலர்ந்ததொரு தாமரைத் தடாகத்தைப் போலிருந்தது என்று வருணித்துள்ளார்.

நளவெண்பா

மகாபாரதத்தின் துணைக் கதைகளுள் ஒன்றான, நிடத நாட்டை ஆண்ட நளன் என்னும் மன்னனின் கதையைத் தமிழில் கூற எழுந்ததே நளவெண்பா ஆகும். இதனை எழுதியவர் 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழேந்திப் புலவர் என்பவராவார். இதன் பெயர் சுட்டுவது போல்,

இந்நூல் வெண்பாக்களால் அமைந்தது. இது 12ஆம் நூற்றாண்டில் வட மொழியில் ஸ்ரீஹர்ஷர் இயற்றிய நைடதம் எனும் நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும்.

அமைப்பு

மகாபாரதத்திலே கௌரவர்களுடன் சூதாடித் தோற்ற பாண்டவர்கள் தங்கள் நாட்டை விட்டுக் காட்டிலே வாழ்கின்றனர். அவர்களைப் பிரகதசுவர் என்னும் முனிவர் சென்று காண்கிறார். தமக்கு நிகழ்ந்தவற்றையிட்டுக் கவலையுடன் இருந்த தருமரைத் தேற்றுமுகமாக முனிவர் அவருக்குக் கூறியதாக இந்நூல் அமைந்துள்ளது.

நிடத நாட்டின் மன்னன் நளன். அவனது மனைவி தமயந்தி நளனை விரும்பி சுயம்வரத்தில் அவனைத் தேர்ந்தெடுத்து மணந்ததை இந்திரன் மூலம் கேட்டு, தமயந்தியின் சுயம்வரத்தில் கலந்து கொள்ள வந்துகொண்டிருந்த கலிபுருஷன் நளனைப் பழிவாங்க முடிவு செய்வதும், அதன் பின்னர் நடக்கும் சூதாட்டத்தில் நளன் நாடிழந்து, மனைவி குழந்தைகளைப் பிரிந்து சிரமப்பட்டுப் பின்னர் இழந்த அனைத்தையும் திரும்பப்பெறுவதைக் கூறும் கதை.ஜ1ஸ

சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்கு காண்டம் என மூன்று காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்நூலில், 427 வெண்பாக்கள் உள்ளன. இவற்றுள் 7 வெண்பாக்கள், பாயிரம், நூல்வரலாறு என்பனவாகும். சுயம்வர காண்டத்தில் 171 வெண்பாக்களும், கலிதொடர் காண்டத்தில் 155 வெண்பாக்களும், கலிநீங்கு காண்டத்தில் 94 வெண்பாக்களும் (7,171,155,94ஸ்ரீ 427) உள்ளன.

ஆசிரியர்

நளவெண்பாவின் ஆசிரியர் பனிரெண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழேந்திப் புலவர் என்று கருதப்படுகிறது. இதே பெயரில் இருந்த 13-ம் நூற்றாண்டுப் புலவர் ஒருவர் மகாபாரதம் தொடர்பான அம்மானைப் பாடல்கள் பாடியுள்ளார் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இத்தகவல் பற்றிய பல ஊகங்களும் தொடர்விவாதங்களும் உள்ளன.

நூல் அமைப்பு

மகாபாரத காவியத்தில் கௌரவர்களுடன் சூதாட்டத்தில் தோற்று நாட்டை இழந்த பாண்டவர்கள் திரௌபதியுடன் காட்டில் வாழ்கின்றனர். அவர்களை பிரகதசுவர் என்னும் முனிவர் சென்று காண்கிறார். தங்களுக்கு நிகழ்ந்தவற்றால் கவலையுடன் இருந்த தருமரைத் தேற்றும் விதமாக முனிவர் அவருக்கு நளனின் கதையைக் கூறுவதாக இந்நூல் அமைந்துள்ளது. மூன்று காண்டங்களில் 427 வெண்பாக்களைக் கொண்டது.

. பாயிரம் , நூல்வரலாறு-(7 பாட்ல்கள்)

. சுயம்வர காண்டம் (171 பாடல்கள்)

. கலித்தொடர் காண்டம் (155 பாடல்கள்)

. கலிநீங்கு காண்டம் (94 பாடல்கள்)

பாத்திரங்கள்

. நளன்

. தமயந்தி

. வீமன் (தமயந்தியின் தந்தை)

. இந்திரன்

. கலி

. கார்கோடகன் (நாகம்)

. இருதுபன்னன் (அயோத்தி மன்னன்)

. புட்கரன்

. இவர்களுடன் அன்னப் பறவை ஒன்றும் முதன்மைப் பாத்திரமாக உள்ளது.

கதைச் சுருக்கம்

நிடத நாட்டு மன்னாகிய நளன் அறநெறி தவறாமல் சிறந்த முறையில் ஆட்சி நடத்தி வந்தான். அவன் வேனில் காலத்தில் ஒருநாள் இளைப்பாறுவதற்கு ஒரு பூஞ்சோலைக்குச் சென்றான். அங்குள்ள குளத்தில் அன்னப் பறவையொன்றைக் கண்டான். அந்த அன்னம், நளனிடம் தமயந்தி என்னும் அழகிய மங்கையைப் பற்றி கூறி, அவன் மணம் புரிய ஏற்றவள் என்றும் சொல்லிற்று. அன்னம் கூறிய சொற்களால் தமயந்தியிடம் காதல் வயப்பட்ட நளன் அந்த அன்னத்தை தமயந்தியிடம் தூதாக அனுப்பினான். அது தமயந்தியிடம் சென்று நளனைப் பற்றி தெரிவித்தது. பின் அவளது காதலை நளனிடம் வந்து தெரிவித்தது.

தமயந்தியின் தந்தையான விதர்ப்ப நாட்டரசன் வீமன் தன் மகளது சுயம்வரத்துக்கு ஏற்பாடு செய்தான். இந்திரன் முதலிய தேவர்களும் நளன் உருவத்திற்கு மாறி அந்தச் சுயம்வர மண்டபத்தில் இருந்தனர். மன்னர்கள் பலரும் திரண்டு அங்கு வந்திருந்தனர். ஆயினும், தமயந்தி மெய்யான நளனுக்கே மாலை சூட்டி மணவாளனாகக் கொண்டாள்.

சுயம்வரத்திலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த தேவர்கள் வழியில் கலியைக் கண்டனர் அவனிடம் திருமண நிகழ்ச்சியைப் பற்றி உரைத்தனர். தமயந்தியை மணம்கொள்ளும் விருப்பத்துடன் வந்த கலி அதைக் கேட்டு பெருங்கோபம் கொண்டு, தான் நளனைக் கீழ்மைப்படுத்தப் போவதாகவும், நளனையும் தமயந்தியையும் பிரித்துவிடப் போவதாகவும் சபதம் செய்தான்.

சபதத்தை நிறைவேற்ற சரியான காலத்தை எதிர் நோக்கியிருந்த கலி நளனுடன் சூதாட புட்கரன் என்னும் மன்னனை அனுப்பினான். அவனுடன் சூதாடிய நளன் தன் நாட்டையும், அனைத்து செல்வங்களையும் இழந்தான். பின்னர் தன் மகன்கள் இருவரையும் தன் மாமன் வீமனின் நாட்டுக்கு அனுப்பிவிட்டு தன் மனைவி தமயந்தியுடன் காட்டில் வசித்துவந்தான்.

ஒரு நாள் காட்டில் நள்ளிரவு நேரத்தில் ஒரு பாழடைந்த மண்டபத்தில் நளனும் தமயந்தியும் உறங்கினர். அப்போது விழித்தெழுந்த நளன் கலியின் சூழ்ச்சியினால் அந்தக் காட்டில் தமயந்தியைத் தன்னந்தனியாக விட்டுவிட்டு நீங்கினான். உறக்கம் நீங்கி எழுந்த தமயந்தி நளனைக் காணாமல் பதறி, வணிகன் ஒருவனின் துணையுடன் தன் தந்தையின் விதர்ப்ப நாட்டுக்குச் சென்றாள். தன் தந்தை வீமனிடம் நளனைத் தேடிக் கண்டுபிடிக்கும்படி வேண்டினாள். அதே நேரத்தில், அவளைப் பிரிந்து சென்ற நளன், கார்க்கோடகன் என்னும் நாகத்தை காட்டுத்தீயிலிருந்து காப்பாற்றும்போது அந்த நாகத்தினால் கடிபட்டு தன் மேனி கறுத்தான். தன் பழைய உருவத்தை மீண்டும் பெற நினைத்தால் உடுத்திக் கொள்ளும்படி அந்த நாகம் இரண்டு ஆடைகளை நளனுக்குக் கொடுத்தது. அந்த ஆடைகளைப் பெற்றுக்கொண்ட நளன் அயோத்தி நகர் சென்றான். அந்த நாட்டு மன்னன் இருதுபன்னனிடம் வாகுகன் என்னும் பெயரில் பணிக்குச் சேர்ந்து சமையல்காரனாகவும் தேரோட்டியாகவும் பணிபுரிந்து வந்தான்.

நளனைத் தேடுவதற்காக தமயந்தியின் தந்தை வீமனால் நியமிக்கப்பட்ட அந்தணன் ஒருவன் அயோத்தியில் நளன் இருப்பதை அறிந்து வந்து தமயந்தியிடம் தெரிவித்தான். அவள் சொற்படி, தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரம் நிகழ்வதாக அந்த அந்தணன் இருதுபன்னனுக்கு மணவோலை கொடுத்து அழைப்பு விடுத்தான். இருதுபன்னனும், வாகுகனாக இருந்த நளன் தேரை ஓட்ட, வீமனின் தலை நகரமான குண்டினபுரத்தை அடைந்தான்.

இந்த இருவரும் தேரில் வருவதைக் கண்ட தமயந்தி, தேரோட்டி உண்மையில் நளன் தானா என்பதைக் கண்டறிய தன் மகன்களை வாகுகனிடம் அனுப்பி, அங்கு நிகழ்ந்ததை தோழியின் மூலம் அறிந்து தேரோட்டி நளனே என்பதைத் தெளிந்தாள். தன் தந்தையுடன்

வாகுகனிடம் சென்று அவனுடைய உண்மையான உருவத்தைக் காட்டும்படிக் கேட்டுக் கொண்டாள். வாகுகன் உருவம் மாறி நளனாகத் தோன்றினான்

அதன் பின்னர் நளமன்னன் தன் மனைவி மக்களுடன் தன் நாடான நிடத நாட்டுக்குச் சென்று, புட்கரனுடன் மறுபடியும் சூதாடி, வெற்றி பெற்று, தன் நாடு நகரமெல்லாம் மீண்டும் கைப்பற்றி, முடிசூடி, நல்லாட்சி செய்து இனிது வாழ்ந்தான்.

இலக்கிய இடம்

நளவெண்பா இலக்கியச் சுவைக்காகவும் உவமை நயத்துக்காகவும் விரும்பிப் பயிலப்படுகிறது. "நளவெண்பா, தமிழ் நயத்தோடு மனவமைதியையும் தருவது. தமிழ்ப் பயிற்சிக்கு ஒரு தெளிந்த ஊற்றுக்கால் போன்றது. கற்கக் கற்கத் தமிழ் நயத்திலே திளைத்து மகிழ்கின்ற ஓர் களிப்பை ஊட்டுவது. காலத்தை வென்று நிற்பது. கவிஞராக விரும்புவோர் இந்நூலை மனப்பாடம் செய்துவிட்டாலே போதும். கவிதை ஊற்றெடுத்துப் பொங்கிப் பெருகி வருவதைக் காண்பார்கள்" என்று புலியூர்க் கேசிகன் குறிப்பிடுகிறார்.

பாடல் நடை

மாலைக்காட்சி

வையம் பகல்இழப்ப வானம் ஒளிஇழப்ப

பொய்கையும் நீள்கழியும் புள்இழப்பப் - பையவே

செவ்வாய் அன்றில் துணைஇழப்பச் சென்றடைந்தான்

வெளவாய் விரிகதிரோன் வெற்பு (நளவெண்பா 104)

மாலையில் பகற்பொழுதும் வானத்து ஒளியை இழக்க, பொய்கை கடற்கரை உப்பங்கழிகள் பறவைகளை இழக்க(அவை கூடடைந்ததால்) அன்றில் பறவைகள் பிரிவை இழக்கக்(தத்தம் துணையோடு கூட்டினை அடைய) காரணமாய் இருந்த சூரியன், தன் கதிர்களை மறைத்து மேற்கு மலையை அடைந்து மறைந்தான்

நளனின் தேரோட்டும் திறன்

மேலாடை வீழ்ந்த தெடுவென்றான் அவ்வளவில்

நாலாறு காதம் நடந்ததே - தோலாமை

மேல்கொண்டான் ஏறிவர வெம்மைக் கலிச்சூதின்

மால்கொண்டான் கோல்கொண்ட மா.

வெற்றி மிக்கவனான இருதுபன்னன் ஏறிவருவதற்கு, கொடுமை பொருந்திய கலியின் வஞ்சமுள்ள சூதாட்டத்தின்மீது, மயக்கங் கொண்டவாகுகனாகிய நளன் முட்கோல் கொண்டு முடுக்கி ஓட்டிய குதிரைகள், (இருதுபன்னன்) தன் மேலாடை கீழே விழுந்துவிட்டது அதனை எடுவென்று வாகுகனை நோக்கிக் கூறினான், அது சொல்லி முடிப்பதற்குள், தேர் பத்துக்காத தூரம் பறந்து சென்றது.

உசாத்துணை

நளவெண்பா, தமிழ் இணையப் பல்கலைக்கழகம்

நளவெண்பா-கதையும், கருத்தும்

நளவெண்பா மூலமும், செ.ரெ.இராமசாமிபிள்ளை உரையும், தமிழ் இணையப் பல்கலைக்கழகம்

நைடதம்

முற்காலத்தில் தமிழ் கற்கப் புகுவோர் முதன்மையாகக் கற்பது நைடதம் ஆகும். வடமொழியில் ஸ்ரீஹர்ஷர் என்பவர் பாடிய நூல் நைஷதம். தமிழில் 'வெண்பாவிற் புகழேந்தி' என்று பாராட்டப்படுகின்ற புகழேந்திப் புலவர் நளவெண்பா என்ற நூலைப் பாடியிருக்கிறார். இவற்றையெல்லாம் ஆதாரமாகக் கொண்டு அதிவீரராமர் நைடதத்தைப் பாடினார். 1172 விருத்தப் பாடல் கொண்ட இந்நூலினை

நைடதம் புலவர்க்கு ஔடதம்

என்று கூறிப் போற்றுவர்.

அதிவீரராம பாண்டியர் நைடதம் தவிரக் காசிக் கண்டம், கூர்ம புராணம், இலிங்கபுராணம், திருக்கருவைப் பதிற்றுப்பத்தாந்தி என்னும் பல நூல்களைச் செய்துள்ளார்.

வடமொழி நூலை (நைஷதம்) மூலமாகக் கொண்டு அதிவீரராமபாண்டியன் இயற்றிய தமிழ்க் காப்பியம் ய ிழநஅ ை வுயஅடை டில யுனஎைசையசயஅயிâனெலையஎ, யனயிவநன கசழஅ ளுசஎ ர்யசளாய'ள யேளையனாய.

ஜநிடதம் → நைடதம்.ஸ

நைடதம் ஒரு தமிழ்க் காப்பியம். நிடதநாட்டு மன்னன் நளனுடைய கதையைக் கூறுவதால் நைடதம் எனப் பெயர் பெற்றது. நளனைப் பற்றியக் குறிப்பு, சிலப்பதிகாரத்தில் காணப்படுவதால் நளன்கதை தமிழ்நாட்டில் நீண்டநாட்களாக வழங்கி வந்தமை புலனாகும்.

நைடதம், வடமொழியில் கர்ச புலவர் இயற்றிய 'நைசவு)தம் என்னும் வனப்பின் (காப்பியத்தின்) மொழி பெயர்ப்பு. வடமொழி நூலின் சுவை குன்றாமல் அதிவீரராம பாண்டியர் மொழி பெயர்த்துள்ளார் என்று இருமொழியிலும் இந்த நூல்களைக் கற்றோர் கூறுகின்றனர். இந்நூலின் முதலில் நிடத நாட்டின் வளமும் மாவிந்த நகரத்தின் சிறப்பும் நாட்டுப்படலம், நகரப்படலம் என்ற படலங்களிற் கூறப் பெற்றுப் பின்னர் அன்னத்தைக் கண்ணுற்ற படலம் முதலாக அரசாட்சிப் படலம் ஈறாக இருப்பதாறு படலங்களால்

1173 செய்யுட்களில் நளன்கதை கூறப்பெறுகிறது. 'நைடதம் புலவர்க்கவுடதம் என்று வழங்கும் சிறப்புரைக் கேற்ப, இந்நூல் புலவர்களின் அறிவுக்கு விருந்தாய்க் கற்பனைக் கருவூலமாக விளங்குகிறது. இந்நூலில் சீவக சிந்தாமணி, கம்பராமாயணம் மணிமேகலை முதலிய பழைய தமிழ் நூல்களின் கருத்துக்களும் சொற்றொடர்களும் விரவியுள்ளன.

இந்நூலின் தனிச்சிறப்பு, அன்னம் தமயந்தியிடம் நளனுக்காகத் துது சென்ற பகுதியைக் கூறுவது. இதை அன்னத்தைத் தூதுவிட்ட படலத்திற் காணலாம். தூதரின் இலக்கணத்திற்கு இலக்சியமாக அன்னம் விளங்கும்படி இந்நூலாசிரியர் அமைத்திருப்பது பாராட்டத் தக்கது. இந்நூலில் தமி ழ்ப் பண்பாட்டுக்கு மாறாகப் பெண்பாற் கைக்கிளை வந்துள்ளது.

"அமிழ்தினை முனிந்து சாரல் அருவிதழ் மலயமின்ற தமிழினம் இனிய தீஞ்சொற் றையல் (சுயம்வரப்படலம்.140) எனக் கலைமகள் தமயந்தியை விளக்குங் கூற்றாக கூறியிருப்பதைக் கொண்டு இந்நூலாசிரியர் தமிழின் சுவையிலே ஊறியவ ரென்பதை அறியலாம்.

இந்நூல் காதலின் சிறப்பையும் சூதின் கெடுதியையும் நன்கு விளக்குகிறது. இந்நூலிலுள்ள செய்யுட்கள் மிக்க கடுமையும், மிக்க எளிமையுமி ன்றிச் செம்பாகமான நடையையுடையன.

இந்நூலை இயற்றியவர், பாண்டிய மன்னர்களில் ஒருவரான அதிவீரராம பாண்டியர். இவர் சிவனிடம் மிகுந்த அன்பு கொண்டவர். காசிக்காண்டம், திருக் கருவையந்தாதி முதலிய நூல்களையும் இவர் இயற்றியுள்ளார்.

நறுந்தொகை அல்லது வெற்றிவேற்கை என்னும் குழந்தை இலக்கியமும் படைத்துள்ளார்.

“கற்கை நன்றே, கற்கை நன்றே

பிச்சை புகினும் கற்கை நன்றே.”

என்பது அந்நூலில் வரும் பொன்வரி.

பிற்கால காப்பியங்கள்

பிற்கால காப்பியங்கள் என்பது ஐம்பெருங்காப்பியங்கள் மற்றும் பிற்காலத்தில் தோன்றிய பிற காப்பியங்கள் ஆகும்.

ஐம்பெருங்காப்பியங்களில் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, மற்றும் குண்டலகேசி ஆகியவை அடங்கும். இவை தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தன.

ஐம்பெருங்காப்பியங்கள்

சிலப்பதிகாரம்: தமிழில் முதல் காப்பியம் எனப் போற்றப்படுகிறது.

மணிமேகலை: சிலப்பதிகாரத்துடன் இணைந்து இரட்டைக் காப்பியமாக கருதப்படுகிறது.

சீவக சிந்தாமணி: இது ஒரு பெருங்காப்பியம் எனப் பெரும்பாலும் கருதப்படுகிறது.

வளையாபதி: ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

குண்டலகேசி: ஐம்பெருங்காப்பியங்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

பிற்கால காப்பியங்கள்

ஒரு நாட்டின் சமுதாய ஒழுகலாறுகளை, பண்பாட்டு அசைவுகளை, கலாச்சாரத் தோற்றங்களைத் தன்னுள் கொண்டதாய் ஒவ்வொரு இலக்கிய வடிவமும் திகழ்கிறது. அத்தகைய இலக்கிய வகைமைகளுள் காப்பியமே இவை அனைத்திற்கும் இடமளிப்பதாகக் காணப்படுகின்றது. தனிப்பட்ட மனித வாழ்க்கையினை மையமாகக் கொண்டு இயற்றப்பட்டாலும் சமூக வாழ்வியலைத் தெளிவுபடுத்துவதாகக் காப்பியங்கள் அமைகின்றன. இக்காப்பியங்கள் தமிழ் இலக்கியங்களில் மட்டுமல்லாமல் உலக இலக்கியங்கள் அனைத்திலும் காணப்படுகின்றன. காலந்தோறும் இக்காப்பியங்கள் வடிவம், பாவிகம், கதைக் களன், அமைப்பு முறை ஆகியவற்றால் மாறுபட்டுத் திகழ்கின்றன.

வளர்ச்சிக் காப்பியம்

இக்காலத்தில் இலக்கியத் திறனாய்வாளர்கள் காப்பியங்களை இருவகைப் பிரிவுகளாகப் பாகுபடுத்தியுள்ளனர். ஒன்று வளர்ச்சிக் காப்பியம், இரண்டு கலைக் காப்பியம்.

வளர்ச்சிக் காப்பியம் (வளர்நிலைக் காப்பியம்) என்பது பழங்கதை நிகழ்ச்சிகள் வாய்மொழியாகப் பரவிப் பல கிளைக் கதைகளைத் தன்னுள் கொண்டு உருப்பெறுவது ஓர் இனம் அல்லது மக்கள் கூட்டத்தால் உருவாக்கம் பெற்ற கவிஞரால் இலக்கிய வடிவமாகப் படைக்கப்பெறுவது.

பிற முதன்மையான காப்பியங்கள்

பெருங்காப்பிய இலக்கணத்தோடு பொருந்திய கம்பராமாயணம், பெரிய புராணம் போன்றனவும், வில்லிபுத்தூரார் பாரதம், சீறாப்புராணம், தேம்பாவணி போன்றனவும்

முதன்மையான காப்பியங்களுள் அடங்கும். இவற்றைத் தவிர வேறு சில காப்பியங்களும் தமிழில் காணப்படுகின்றன. 20ஆம் நூற்றாண்டில் இரட்சணிய யாத்திரிகம், பாரதசக்தி மகா காவியம், இராவண காவியம், பூங்கொடி போன்ற காப்பியங்களும் மிகச் சிறந்த காப்பியங்களாகத் திகழ்கின்றன. சான்றாக,

மகாபாரதம், இராமாயணம், ஹோமரின் இலியதம் போன்ற காப்பியங்களைக் குறிப்பிடலாம்.

கலைக் காப்பியம்

கலைக் காப்பியம் என்பது கவிஞர் தம் கற்பனையில் விளைவது. கற்பனைக்கு ஏற்றவாறு கதாபாத்திரங்களையும் அவற்றின் அடிப்படையில் நிகழ்ச்சிகளையும் கொண்டு இலக்கிய வடிவமாக வடிவெடுப்பது. இதற்குச் சான்றாக, 20ஆம் நூற்றாண்டில் உருப்பெற்ற காவியங்களான பாரத சக்தி மகா காவியம், இராவண காவியம் போன்ற காப்பியங்களைக் குறிப்பிடலாம்.

காப்பியப் பண்புகள்

காப்பியத்திற்கென ஒருசில தனித்த பண்புகள் உண்டென அறிஞர்கள் கருதுகின்றனர். காப்பியம் வீரப்பண்பு உடையதாகவும் நாடகத் தன்மை உடையதாகவும் இருக்கும். சமுதாயக் குரல் ஆங்காங்கே காப்பியத்துள் அமைந்து இருக்கும். தேசியப் பண்பு இருக்க வேண்டும். அவ்வக்கால இடச்சூழல், அறக்கருத்து, கதையமைப்பு, பாத்திரப் படைப்பு, கிளைக் கதை ஆகியன அமைந்து இருக்க வேண்டும். இத்தகைய காப்பியப் பண்புகளை உலக மொழிகள் அனைத்திலும் காணலாம். ஹோமரது இலியட், ஒடிசி போன்ற பழம்பெரும் காப்பியங்கள் தொடங்கி, உலக மொழிகளில் தோன்றியுள்ள பிற காப்பியங்களிலும் இத்தகைய பண்புகள் இருப்பதைக் காண முடிகின்றது.

காப்பியங்களின் பொதுவியல்புகள்

தமிழில் தோன்றியுள்ள காப்பியங்களை நோக்கும்போது முதல்நூல், வழிநூல், சார்புநூல், எதிர்நூல் என நான்கு வகையாகத் திகழ்வதைக் காணலாம். தமிழில் காணப்பெறும் காப்பியங்கள் குறித்து ஓர் அறிஞர் எடுத்துரைக்கையில், காப்பியத்தின் தொடர்ச்சியாக மற்றொரு காப்பியம் அமைவது ஒரு காப்பியத்தின் எதிராகப் பிறிதொரு காப்பியம் உருவாவது ஒரு காப்பிய ஆக்கத்தில் ஓராசிரியருக்கு மேல் ஈடுபடுவது ஒரு காப்பியக் கூறு பிறிதொரு காப்பியம் ஆவது எனக் காப்பியங்கள் உருவாவதைப் பல வகையாகக் குறிப்பிட்டுள்ளார்.

பெருங்காப்பிய, சிறு காப்பியப் போக்குகள்

பெருங்காப்பியங்களுள் முதல் நூலாகத் திகழும் சிலப்பதிகாரம் மூல நூலாகத் திகழ்கிறது. அரசனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொள்ளாது சாதாரணக் குடிமக்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அமைந்துள்ளது. சமணத் துறவியாகிய இளங்கோவடிகளால் இயற்றப்பட்டிருப்பினும் அக்காலச் சூழலில் காணப்பட்ட பிற சமயங்களையும் இடையிடையே போற்றிப் பாடுகிறது. மூன்று கோட்பாடுகளை முன்னிறுத்தி அக்கோட்பாடுகளை ஊடுபாவாகக் கொண்டு அமைந்துள்ளது. இதனைத் தொடர்ந்து எழுந்த மணிமேகலை, சீத்தலைச் சாத்தனாரால் இயற்றப்பட்டது. மணிமேகலை உயர்ந்த சிந்தனைகளைத் தன்னுள் கொண்டு அச்சிந்தனைகளைக் காப்பியம் முழுமையும் செலுத்தி நிற்கிறது. சமயம் சார்ந்த பல கருத்துகள் புகுத்தப்படினும், சமூகப் புரட்சிக்குரிய சில சிந்தனைகளையும் முன் வைத்துச் செல்கிறது.

பின்வந்த சீவகசிந்தாமணி வடமொழி நூலைத் தழுவி எழுந்த காப்பியமாகத் திகழ்கிறது. சாதாரணக் குடிமகன் பாட்டுடைத் தலைவனாக நிறுவப்பட்ட நிலையிலிருந்து மாறி,

அரசன் பாட்டுடைத் தலைவனாகப் பாடப்பட்ட தன்மையைக் கொண்டுள்ளது. சமணக் கருத்துகள் பலவற்றை வலியுறுத்திக் கூறுகிறது.

பின்வந்த குண்டலகேசி, வளையாபதி இரண்டிலும் சாதாரணக் குடிமக்கள் தலைமைப் பாத்திரப் படைப்புகளாக இடம் பெறுகின்றனர். இவ்விரு நூல்களும், சமண, பௌத்த சமயங்களைச் சார்ந்தனவாகக் கருதப்படுகின்றன. இவ்விரு காப்பியங்களும் முழுமையாகக் கிடைக்கவில்லை.

சிறு காப்பியங்களில் பழையனூர் நீலி கதையில் இடம்பெறும் கதாபாத்திரம் கொண்டு தமிழில் எழுந்த சமண நூலாக நீலகேசி திகழ்கிறது. இக்காப்பியம் பௌத்த நூலாகிய குண்டலகேசிக்கு எதிராக எழுந்ததாக அறிஞர்கள் கூறுவர். பிற காப்பியங்களான யசோதர காவியம், உதயணகுமார காவியம், நாககுமார காவியம் போன்றன பிறமொழிக் காப்பியங்களைத் தழுவி எழுதப் பெற்றனவாகக் காணப் பெறுகின்றன.

தமிழில் மூல நூல்களாகத் திகழும் சிலப்பதிகாரம், மணிமேகலை, நீலகேசி போன்றன சாதாரண மக்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டுள்ளன. முதற் காப்பியம் பிற சமயக் கடவுளர்களையும் காட்சிப்படுத்த, பின் எழுந்த காப்பியங்கள் குறிப்பிட்ட சமயம் குறித்தும் கடவுள் குறித்தும் படைக்கப்பட்டுள்ளன. இம்மூன்று காப்பியங்களுள்ளும் பெண்களே தலைமை மாந்தர்களாகக் காட்டப்பெற்றுள்ளனர். சிலப்பதிகாரத்தில் இல்லறத்தின் சிறப்பும், பெருமையும் எடுத்துரைக்கப் படுகின்றன. பின் இரு காப்பியங்களிலும் துறவு சிறந்ததாகக் காட்டப்பெறுகிறது.

தமிழில் தோன்றிய பிற காப்பியங்கள் அரசர்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டனவாகவும், அந்தந்த வழிபடு கடவுளைப் போற்றும் தன்மையனவாகவும் திகழ்கின்றன. புறச் சமயக் காழ்ப்பு உடையனவாகத் திகழ்கின்றன. இவை மட்டுமின்றி, பின்வரும் கம்பராமாயணம், பெரிய புராணம், வில்லிபுத்தூரார் பாரதம், திருவிளையாடற் புராணம் போன்றன சமயச் சார்பும் இறைசார்பும் உடையனவாகத் தோற்றமளிக்கின்றன.

இருபதாம் நூற்றாண்டில் மலர்ந்த காப்பியங்கள்

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய இரட்சணிய யாத்திரிகம் ஒரு கிறித்தவத் தமிழ்க் காப்பியம். இக் காப்பியம் ஜான்பன்யன் என்பவரால் எழுதப்பட்ட புண்ணியப் பயணியின் முன்னேற்றம் (வுாந ீடைபசஅை’ள ீசழபசநளள) என்ற ஆங்கில நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு. இந்நூலின் ஆசிரியர் ஹென்றி ஆல்பிரடு கிருட்டிணப் பிள்ளை.

1948ஆம் ஆண்டில் வெளியான பாரத சக்தி மகா காவியம் சுத்தானந்த பாரதியாரால் இயற்றப்பட்டது. ”சுத்தானந்தன் தமது வாழ்வையே உருக்கி இக்காவியத்தை வார்த்திருக்கிறார்” என வ.வே.சு.ஐயர் குறிப்பிட்டுள்ளார்.

1979இல் வெளிவந்த அரங்க.சீனிவாசனின் மனித தெய்வம் காந்தி காதை மற்றொரு சிறந்த பெருங்காப்பியமாகக் கருதத்தக்கது. கம்பராமாயணம், பெரிய புராணம் போன்ற காப்பியமாக இதனையும் கருதலாம்.

1946இல் பதிப்பிக்கப்பட்டு 23 ஆண்டுகள் தமிழக அரசால் தடை செய்யப்பட்டு 1971இல் இரண்டாம் பதிப்பாக இராவண காவியம் வெளிவந்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் புலவர் குழந்தை. ”தமிழ் இலக்கியத்தில் அணிகலனாய் இருக்கத் தகுந்த அருமையான காவியம்” என்று இதனை நாரண. துரைகண்ணன் புகழ்கின்றார்.

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய மற்றொரு காப்பியம் பூங்கொடி. இந்நூலின் ஆசிரியர் முடியரசன். இரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய மணிமேகலையை அடியொற்றித் தோன்றியது பூங்கொடி.

இக்காப்பியங்களைத் தவிர, வேறு பல காப்பியங்களும் தமிழில் வெளிவந்துள்ளன. பெருங்காப்பியங்களில் சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி ஆகிய நூல்களை அடிப்படையாகக் கொண்டு பல காப்பியங்கள் உருவாகி உள்ளன.

கண்ணகி புரட்சிக் காப்பியம் (பாவேந்தர் பாரதிதாசன்), கண்ணகி வெண்பா (மு.இரா. கந்தசாமிக் கவிராயர்), விதியோ வீணையோ (கவிஞர் தமிழ்ஒளி), மாதவி காப்பியம் (கவிஞர் தமிழ்ஒளி), சிலம்பின் சிறுநகை (சாலை இளந்திரையன்), மணிமேகலை வெண்பா (பாவேந்தர் பாரதிதாசன்), குண்டலகேசி (இரா.குமரன்), சாலி மைந்தன் (ஆ.பழனி), மாதவ மேகலை (நா.மீனவன்) போன்ற வழி நூல்கள் உருவாகியுள்ளன.

சங்க இலக்கியப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு பாரி காதை (ரா.ராகவையங்கார்), சான்றாண்மை (புலவர் அடிகளாசிரியர்), மாங்கனி (கண்ணதாசன்) ஆகிய சிறு சிறு வழிநூல்கள் எழுந்தன.

நாட்டிற்கு உழைத்த நற்பெரும் தலைவர்களைக் காப்பிய நாயகர்களாகக் கொண்டு இயேசு காவியம் (கண்ணதாசன்), காந்தி புராணம் (பண்டித அசலாம்பிகை அம்மையார்), மனித தெய்வம் காந்தி காதை (அரங்க. சீனிவாசன்), மகாத்மா காந்தி காவியம் (இராமானுஜக் கவிராயர்), நேரு காவியம் (கோ.செல்வம்), நேதாஜி காவியம் (புலவர் வாய்மைநாதன்), பெரியார் காவியம் (பா.நாராயணன்), அண்ணா காவியம் (கவிஞர் ஆனந்தன்), கலைஞர் காவியம் (கபிலன்) எனப் பல காப்பியங்கள் தோன்றியுள்ளன.

இருபதாம் நூற்றாண்டுக் காப்பியங்களின் போக்கு

உயர்குடி மக்களையும் அரசர்களையும் தலைமை மாந்தர்களாகக் கொண்டு இயற்றப்பட்ட காப்பியங்களிலிருந்து மாறுபட்டதாக 20ஆம் நூற்றாண்டுக் காப்பியங்கள் இயற்றப்பட்டுள்ளன எனலாம்.

இரட்சணிய யாத்திரிகம்

சாதாரண குடிமகன் ஒருவன் தன் பாவத்திலிருந்து விடுதலை பெற விரும்பி இரட்சிப்பினை நோக்கிச் செல்வதாகப் படைக்கப்பட்டுள்ளது. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கினுள் வீடுபேற்றைக் குறித்துப் பேசுவதாக இந்நூல் உள்ளது. இல்லறம், துறவறம் என்ற இரண்டினையும் சுட்டிக்காட்டி, வீடுபேறு சிறந்ததென முந்தைய காப்பியங்கள் பேச, இந்நூல் வீடுபேற்றைக் குறித்துப் பேசுவதாக அமைந்துள்ளது எனலாம்.

இரட்சணிய யாத்திரிகம் 5 பருவங்களையும், 47 படலங்களையும் கொண்டுள்ளது. ஆதி பருவம் 19 படலங்களையும், குமாரபருவம் 4 படலங்களையும், நிதான பருவம் 11 படலங்களையும், ஆரணிய பருவம் 10 படலங்களையும் கொண்டுள்ளன. மொத்தம் 3622 பாடல்களையும் தேவாரம் என்னும் தலைப்பில் இறை வணக்கப் பகுதிகளையும் இந்த நூலில் காணலாம்.

பாரதசக்தி மகாகாவியம்

பிற காப்பியங்களிலிருந்து ஒரு சில கோணங்களில் மாறுபட்டதாய் அமைந்துள்ளது. சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டும் கடவுள் வாழ்த்தைப் பெறவில்லை. சூளாமணியும் சிந்தாமணியும், கம்பராமாயணமும் வாழ்த்து என்னும் உறுப்பைப் பெற்றுள்ளன. இந்த இடைக்காலக் காப்பியங்களின் மரபைப் பின்பற்றிச் சுத்தானந்தர் கடவுள் வாழ்த்தைத் தன் நூலில் அமைத்துள்ளார். ஒவ்வொரு காண்டத்திலும் தொடக்கத்தில் மட்டுமன்றி, பல்வேறு இடங்களிலும் கடவுள் வாழ்த்தை அமைத்துள்ளார்.

கடவுள் வாழ்த்து இடம் பெற்று உள்ளதாயினும் இந்நூலை இயற்ற, இதன் சிறப்புகள் விளங்க, இது நிலைத்து நிற்க அருளிட வேண்டும் என்னும் நோக்கில் வெளிப்படையாக இடம் பெறவில்லை.

பாரத சக்தி மகா காவியத்தில் கவி சுத்தானந்த பாரதி அரசர்களையும் அவதாரப் பிறப்புகளையும் சமயச் சான்றோர்களையும் குறிப்பிட்டு, பின்னர் ஜராதுஷ்டிரன், கிறிஸ்து, முகம்மது ஆகியோரையும் குறிப்பிட்டு நானகன், இராமதாஸ், இராமமோஹன், தயானந்தன், பரமஹம்சர் ஆகியோரையும் குறிப்பிட்டு, பின்னர் 20ஆம் நூற்றாண்டில் கதை தொடங்குவதாகப் படைத்துள்ளார். இவ்வாறு கால மயக்கம், இட மயக்கம் கொண்டதாகத் தமிழ்க் காப்பியங்கள் வேறு ஏதும் காணப்பெறவில்லை.

இப்பெருங் காப்பியம் சித்தி காண்டம், கௌரி காண்டம், சாதன காண்டம், தானவ காண்டம், சுத்த சக்தி காண்டம் என்னும் 5 காண்டங்களையும் 136 படலங்களையும் கொண்டதாய் அமைந்துள்ளது. கலிவிருத்தம், கலித்துறை, ஆசிரிய விருத்தம், நேரிசை, இன்னிசை, ஆசிரியப்பா, குறள்வெண்பா ஆகிய யாப்பு அமைதிகளைப் பெற்றுக் கலவை வடிவமாகக் காணப்பெறுகின்றது. முந்தைய காப்பியங்களில் இத்தகைய யாப்பு வடிவங்களைக் காணவியலவில்லை எனலாம்.

இரட்சணிய யாத்திரிகத்தைப் போன்று, சுத்தானந்தரின் பாரதசக்தி மகாகாவியமும், தத்துவக் கருத்துகள் உள்ளிட்ட ஒரு தொடர் உருவகக் காப்பியம் ஆகும். இத்தகைய உருவக அமைப்புகளைச் செவ்விலக்கிய மரபில் காண இயலவில்லை. இடைக்காலத்தில் எழுந்த சில நூல்களிலும் சிந்தாமணியிலும் அத்தகைய கருத்தோட்டம் காணப்படினும் தமிழ்க் காப்பிய மரபில் இத்தகைய மரபைக் காண இயலவில்லை.

மனித தெய்வம் காந்தி

அரங்க.சீனிவாசன் எழுதிய மனித தெய்வம் காந்தி காதை என்னும் காப்பிய நூல் 5 காண்டங்கள், 77 படலங்கள், 5183 விருத்தப் பாக்கள் கொண்டு அமைந்துள்ளது. சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம் போன்ற காப்பியங்களைப் போன்றே இந்நூலிலும் கிளைக் கதைகள் இடம் பெற்றுள்ளன.

காந்தியடிகள் சிரவணன் கதையைப் படித்தார், அரிச்சந்திரன் நாடகம் பார்த்தார் எனக் கூறும் வகையில், சிரவணன் கதை 47 பாடல்களிலும் அரிச்சந்திரன் கதை 126 பாடல்களிலுமாக இவ்விரு கிளைக் கதைகள் இடம் பெற்றுள்ளன.

பெருங்காப்பியங்களிலும் சிறு காப்பியங்களிலும் காப்பியத் தலைமகனைக் குழந்தையாகப் பாவித்துப் பாடல் புனையும் மரபு காணப்பெறவில்லை எனலாம். ஆனால் மனித தெய்வம் காந்தி காதை காந்தியின் பிள்ளைமைப் பருவத்தைக் குறித்துப் பாடியுள்ளது. பரத கண்டத்தில் கால்பதித்த அயலாரின் மனக்கோட்டையைத் தகர்த்து எறியும் விதத்தில் சிற்றில் சிதைத்தது எனப் பாடியுள்ளது. இதனைக் கீழ்வரும் பாடல் உணர்த்துகின்றது.

இந்நெடும் பரதகண்டம் எம் அடிப் படுதலாலே

பன்னெடுங் காலம் ஆள்வோம் பார்மின்” என்று

அயலார் கட்டும்

அந்நெடு மனத்தின் கோட்டை அடித்தளம்

அழிந்ததென்ன

நன்னெடு மறுகில் சிற்றில் சிதைத்தனள்

நளினத் தாளால்!

சிற்றிலக்கியத் தாக்கத்தின் காரணத்தால் இக்கவிஞர் பிள்ளைத் தமிழ் என்னும் இலக்கிய வகைமையைத் தன் சிறு காப்பிய நூலில் பயன்படுத்தியிருக்கலாம். காப்பிய வளர்ச்சியில் காணப்பெறும் மற்றுமொரு பரிமாணமாக இதனைக் கருதலாம்.

இராவண காவியம்

புலவர் குழந்தை இயற்றிய இராவண காவியம் தமிழ்க் காண்டம், இலங்கைக் காண்டம், விந்தக் காண்டம். பழிபுரி காண்டம், போர்க் காண்டம் என ஐந்து காண்டங்களைக் கொண்டதாய் அமைந்துள்ளது. 57 படலங்களையும் 3100 பாடல்களையும் கொண்டுள்ளது. காப்பியப் பாகுபாடு வருமாறு:

முதல் நூல், வழி நூல், சார்பு நூல், எதிர் நூல் என்னும் நால்வகையுள் எதிர்நூல் வழி தோன்றியதாகும். கம்பராமாயணத்திற்கு எதிராக எழுந்த எதிர் நூல் இராவண காவியம். எதிர்நூல் எழுவது தமிழ் இலக்கிய உலகில் புதிதல்ல. நீலகேசிக்கு எதிராக முன்னரே குண்டலகேசி தோன்றியுள்ளதைச் சான்றாகக் கூறலாம்.

இராவண காவியம் பாடப்பட்ட முறையில் பல்வேறு நிலைகளில் மாறுபட்ட தன்மையதாய்த் திகழ்கின்றது. நீலகேசி, குண்டலகேசி இரண்டும் எதிரெதிராகத் தோன்றிய நூல்களாயினும் வெவ்வேறு கதை மாந்தர்கள் காவிய முதன்மை மாந்தர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். கம்பராமாயணத்தில் எதிர்முகத் தலைவனாகப் பாடப்பட்ட இராவணனை இராவண காவியம் காவிய நாயகனாகப் படைத்துள்ளது. இத்தகைய போக்கினைத் தமிழ் இலக்கிய உலகில் எங்கும் காணவியலாது எனலாம்.

காப்பிய நாயகனை, உயர்த்திக் காட்டுவது காப்பிய மரபுதான். ஆயினும் இராவண காவியத்தில் ஆசிரியர் ஏன் இந்நூலை இயற்றினார் என்பதற்குக் காரணம் கூறுகின்றார். ஆரியப் பண்பாட்டைத் திராவிடப் பண்பாட்டில் ஏற்றி மொழி, நாடு, மக்கள் என அனைவரின் பெருமையையும் மாற்றிக் காட்டிய தன்மையினை எடுத்துக்காட்டி அதனை மாற்றி, தமிழ்மொழி, தமிழ்நாடு, தமிழ் மக்கள் ஆகியோரின் பெருமையை உயர்த்த இந்நூலை இயற்றியதாக இக்கவிஞர் குறிப்பிட்டுள்ளார்.

பொய்மையை மெய்ம்மை என நம்பி வாழும் தமிழ் மக்கள் உண்மையை உணர்ந்துகொள்ளப் பாடியதாகக் குறிப்பிட்டுள்ளார். இப்பொருள் உணர்த்தும் அப்பாடல் வருமாறு:

கரும்பை வேம்பென வேம்பைக் கரும்பென

விரும்பி வாழுமெய் யாமை வெருவுற

அரும்பி யுண்மை யருந்தமிழ் மக்கள்முன்

திரும்பி வாழ்ந்திடச் செய்யுமிக் காவியம்.

இவ்வாறு இக்காப்பியக் கவிஞர் நூல் எழுதுவதற்கான காரணத்தை எடுத்துரைத்துள்ளதைப் போல, பிற காப்பியக் கவிஞர் எவரும் எடுத்துரைத்துள்ளதாகத் தெரியவில்லை. காவியம் எழுந்த காலத்தின் சமூகச் சூழல் கவிஞர் இவ்வாறு கூறக் காரணமாக அமைந்திருக்கலாம்.

இந்நூல் திருவள்ளுவர் ஆண்டு 2023இல் எழுதப்பட்டதென்றும், கிறித்தவ ஆண்டு 1946இல் இயற்றப்பட்டதாகவும் இந்நூலில் புலவர் குழந்தை குறிப்பிட்டுள்ளார். அது மட்டுமல்லாது, நூற்பயனை இந்நூலாசிரியர் கூறுவதும் புதுமையாகக் காணப்படுகின்றது.

வாழ்வியல் அறங்களை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு நூலும் இயற்றப்பட்டு, அதன் ஊடாகத் தலைவன் வாழ்வினைப் புகுத்தி, தான் கூறும் அறங்களை வெளிப்படுத்திக் கவிஞர் பாடுவர். தமிழர்களது அடிமை வாழ்வை வீழ்த்தி, இழந்த உரிமையை மீண்டும் பெறும்படி காவியம் படிப்போரை உணரச் செய்வதே காப்பிய நூற்பயனாக இந்நூலாசிரியர் குறிப்பிடுகின்றார். இதைப் போலவே காப்பியம் நிறைவுறும் தறுவாயில் வாழ்த்துப் பாடி

முடிப்பது தமிழ்க் காப்பிய மரபில் காணவியலாத ஒன்று. ஆனால் இந்நூலில் தமிழ்மொழி, தமிழினம், தமிழர்கள் வாழுமாறு வாழ்த்து நிறைவுறும் பாங்கு காணப்பெறுகின்றது.

இவ்வாறு ஒருசில நிலைகளில் இராவண காவியம் வேறுபட்டு அமைந்துள்ளது. பிற காப்பிய ஆசிரியர்கள் அவையடக்கம் பாடுவது போலவே இந்நூலிலும் அவையடக்கப் பாடல் காணப்படுகிறது. பெருங்காப்பியம் போன்றே நாட்டு வருணனை, நகர வருணனை, நாயகன் தோற்றம் எனப் பலவற்றைத் தன்னுள் கொண்டதாக இந்நூல் அமைந்துள்ளது.

காவியத்தின் வடிவமைப்பில் ஆசிரியர் கலிவிருத்தம், வஞ்சி விருத்தம் விரவி வர யாப்பினைப் பயன்படுத்தியுள்ளார். செவ்வியல் இலக்கியங்களைப் போன்று இந்நூலுள் நாடகத் தன்மை மிகுந்து அமைந்துள்ளது.

பூங்கொடி

இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலையின் நகலாக, பூங்கொடிக் காப்பியம் அமைந்துள்ளது. மணிமேகலை பௌத்தம் பரவக் காரணமாகத் திகழ, பூங்கொடிக் காப்பியத் தலைவி பூங்கொடி, தமிழ்மொழி வளரத் தொண்டு செய்வதாகப் படைக்கப்பட்டுள்ளாள். மணிமேகலையில் காணப்பெறும் காட்சிகள், கதாபாத்திரங்கள் போன்று இந்நூலிலும் படைக்கப்பட்டுள்ளன.

மணிமேகலையில் பளிக்கறையில் மணிமேகலை நுழைந்தபோது தொடர்ந்து வந்த உதய குமரன் உள் நுழையாது வெளியில் காத்திருந்தது போல் பூங்கொடிக் காப்பியத்தில் கோமகன் என்னும் கதைத் தலைவன் பூங்கொடியைத் தொடர்ந்து சென்றான். அவள் நூலகத்தில் நுழைந்ததால், அவ்விடத்தில் தன் விருப்பத்தைக் கூறாது விலகினான் என அமைக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம்.

மணிமேகலையில் இடம் பெற்றுள்ள கதை மாந்தர்கள் போன்றே பூங்கொடியில் கதை மாந்தர்கள் இடம் பெற்றுள்ளமைக்குக் கீழ்வருவன சான்றுகளாகும்:

மணிமேகலை

மாதவி

வயந்த மால

காய சண்டிகை

உதயகுமரன்

பூங்கொடி

அல்லி

வஞ்ச

சண்டிலி

மறைமலையடிகள

கோமகன்

மணிமேகலை 30 காதைகளில் அமைய, பூங்கொடி 31 காதைகளில் அமைந்துள்ளது. பூங்கொடிக் காப்பியத்தின் காதைப் பெயர்கள் மணிமேகலை காப்பியத்தின் காதைப் பெயர்களோடு ஒத்துக் காணப்படுகின்றன.

மணிமேகலை

விழாவறை காதை

மலர்வனம் புக்க காதை

பளிக்கறை புக்க காதை

மணிமேகலா தெய்வம் வந்து

தோன்றிய காதை

பாத்திரம் பெற்ற காதை

சிறை செய் காதை

சிறை விடு காதை

பூங்கொடி

விழாவயர் காதை

பூங்கா புக்க காதை

படிப்பகம் புக்க காதை

தாமரைக்கண்ணி தோன்றிய

காதை

ஏடு பெற்ற காதை

சிறை படு காதை

சிறை விடு காதை

இவ்வாறு பலநிலைகளில் செவ்விலக்கியத்தோடு ஒத்துப் போகும் இக்காப்பியம் தான் தோன்றிய காலச் சூழலுக்கு ஏற்றவாறு மாறுபட்டுத் தோன்றுகிறது. இந்நூலாசிரியர் முடியரசன் திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர். ஆதலால் பூங்கொடிக் காப்பியத்தில் மொழிப் போராட்டம், ஆலயங்களில் தமிழ்ப் போராட்டம், தமிழிசைப் போராட்டம் என இருபதாம் நூற்றாண்டின் பின்னணியில் தம் காப்பியத்தைப் படைத்துள்ளார். தமிழ்மொழிக்கு ஒவ்வொரு கட்டத்திலும் ஏற்பட்ட எதிர்ப்பை முன்வைத்துப் படைத்துள்ளதால் இக்காப்பியத்தில் சிலர் மொழிப் போராட்ட வீரர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர்.

பிறகாப்பியங்கள்

1. மகாபாரதம்

இந்து மதத்தின் மிகப்பெரிய காவியம்

மகாபாரதம் (ஆயாயடிாயசயவய) பாரதத்தின் இரண்டு இதிகாசங்களுள் ஒன்றாகும். மற்றது இராமாயணம் ஆகும். வியாச முனிவர் சொல்ல விநாயகர் எழுதியதாக மகாபாரதம் கூறுகிறது. இது சமசுகிருதத்தில் இயற்றப்பட்டுள்ளது. இந்தியத் துணைக்கண்டப் பண்பாட்டைப் பொறுத்தவரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த இதிகாசம் இந்து சமயத்தின் முக்கியமான நூல்களில் ஒன்று.

அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்னும் மனிதனுடைய நால்வகை நோக்கங்களையும், சமூகத்துடனும், உலகத்துடனும் தனிப்பட்டவருக்கு உரிய உறவுகளையும், பழவினைகள் பற்றியும் இது விளக்க முற்படுகின்றது. இது 74,000க்கு மேற்பட்ட பாடல் அடிகளையும், நீளமான உரைநடைப் பத்திகளையும் கொண்டு விளங்கும் இந்த ஆக்கத்தில் 18 இலட்சம் சொற்கள் காணப்படுகின்றன. இதனால் இது உலகின் மிக நீண்ட இதிகாசமாகவும் இதுவரை

இயற்றப்பட்ட செய்யுட்களிலேயே மிகப் பெரியதாகவும் கருதப்படுகிறது. இதன் முழு அளவில் 100,000-க்கும் மேற்பட்ட சுலோகங்களும் (ஒவ்வொரு சுலோகங்களும் இரு வரிகள் கொண்டவையாக) 200,000-க்கும் மேற்பட்ட வரிகளும் உள்ளன. இது இலியட், ஒடிசி ஆகிய இரண்டு இதிகாசங்களும் சேர்ந்த அளவிலும் 10 மடங்கு பெரியது. தாந்தே எழுதிய தெய்வீக நகைச்சுவை (னுஎைநெ ஊழஅநனல) என்னும் நூலிலும் ஐந்து மடங்கும், இராமாயணத்திலும் நான்கு மடங்கும் இது நீளமானது.

நவீன இந்து சமயத்தின் முக்கிய நூல்களிலொன்றான பகவத் கீதையும் இந்த இதிகாசத்தின் ஒரு பகுதியே. பாண்டு, திருதராட்டிரன் என்னும் இரு சகோதரர்களின் பிள்ளைகளிடையே இடம் பெற்ற பெரிய போரை மையமாக வைத்து உருவாக்கப்பட்டதே இந்தக் காப்பியமாகும்.

இதனைத் தமிழில் "வில்லிபாரதம்" என்ற இலக்கியமாகப் படைத்தவர் வில்லிபுத்தூரார் ஆவார். பாரதியார் மகாபாரதத்தின் ஒரு பகுதியை பாஞ்சாலி சபதம் எனும் பெயரில் இயற்றினார். வியாசர் விருந்து என்ற பெயரில் இராசகோபாலாச்சாரி அவர்கள் மகாபாரதத்தினை உரைநடையாக இயற்றியுள்ளார்.

தோற்றம்

இதன் முற்பட்ட பகுதிகள் வேதகாலத்தின் இறுதிப் பகுதியைச் (பொ.ஊ.மு. 5ஆம் நூற்றாண்டு) சேர்ந்தவையாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. பொ.ஊ. நான்காம் நூற்றாண்டில் தொடங்கிய குப்தர் காலத்தில் இது இதன் முழு வடிவத்தைப் பெற்றிருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது. நீண்ட காலமாகப் படிப்படியாக வளர்ச்சியடைந்தே இது இதன் முழு நீளத்தை அடைந்ததாகச் சொல்கிறார்கள். முறையான பாரதம் எனக் கூறப்படும் இதன் மூலப் பகுதி 24,000 அடிகளைக் கொண்டது என மகாபாரதத்திலேயே அடையாளம் காணப்பட்டுள்ளது. வியாசரால் இயற்றப்பட்ட பாரதத்தின் மூலப் பகுதி 8,000 அடிகளைக் கொண்டிருந்தது என மகாபாரதத்தின் ஆதி பருவம் கூறுகிறது இது செயம் என அழைக்கப்பட்டுள்ளது. பின்னர் வைசம்பாயனரால் ஓதப்பட்டபோது இது 24,000 அடிகளைக் கொண்டிருந்தது. உக்கிராஸ்ரவ சௌதி ஓதியபடி இது 90,000 அடிகளை உடையதாக இருந்தது.

இவ்விதிகாசத்தை எழுதியவராக மரபுவழியாக நம்பப்படும் வியாசர் இதில் ஒரு கதை மாந்தராகவும் உள்ளார். வியாசரின் வேண்டுகோளுக்கு இணங்கி, அவர் பாடல்களைச் சொல்ல, இந்துக் கடவுளான பிள்ளையாரே ஏட்டில் எழுதினார் என மகாபாரதத்தின் முதல் பகுதியில் கூறப்பட்டுள்ளது. இடையில் நிறுத்தாமல் தொடர்ச்சியாகப் பாடல்களைச் சொல்லிவரவேண்டும் எனப் பிள்ளையார் நிபந்தனை விதித்தாராம். வியாசரும் எழுதுமுன் தன் பாடல் வரிகளைப் பிள்ளையார் புரிந்து கொண்டு எழுதினால் அந் நிபந்தனைக்கு உடன்படுவதாகக் கூறினாராம்.

"மகாபாரதம்" என்னும் நூல் தலைப்பு, "பரத வம்சத்தின் பெருங்கதை" என்னும் பொருள் தருவது. தொடக்கத்தில் இது, 24,000 அடிகளைக் கொண்டிருந்தபோது அது வெறுமனே "பாரதம்" எனப்பட்டது. பின்னர் இது மேலும் விரிவடைந்தபோது "மகாபாரதம்" என அழைக்கப்பட்டது.

உள்ளடக்கம்

இது, குருச்சேத்திரப் போர் எனப்படும், பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் இடையிலான பெரும் போரை மையப்படுத்திய கதையாக இருந்தபோதிலும், இதில், பிரம்மம், ஆன்மா என்பன தொடர்பானமெய்யியல் உள்ளடக்கங்களும் பெருமளவில் உள்ளன. பகவத் கீதை, மனித வாழ்வின் நால்வகை நோக்கங்கள் தொடர்பான விளக்கங்கள் போன்றவை இவற்றுள் அடக்கம்.

மகாபாரதம் எல்லாவற்றையும் தன்னுள் அடக்கியிருப்பதாகக் கூறுகிறது. இதன் முதலாம் பர்வம், "இதில் காணப்படுபவை வேறிடங்களிலும் காணப்படலாம். இதில் காணப்படாதவை

வேறெங்கும் காணப்படா" என்கிறது. இவ்விதிகாசத்தினுள் அடங்கியுள்ள முக்கிய ஆக்கங்களும் கதைகளும் கீழே பட்டியலிடப்படுகின்றன.

பகவத் கீதை: பகவத் கீதை, மகாபாரதத்தின் ஆறாவது பர்வமான பீசுமபர்வத்தில் அடங்கியுள்ளது. குருச்சேத்திரப் போரின் தொடக்கத்தில், அப்போர் தேவைதானா என அருச்சுனனுக்கு ஏற்பட்ட ஐயத்தையும், தொய்வையும் நீக்குவதற்காகக் கண்ணன் கூறிய அறிவுரைகளை உள்ளடக்கியது இது.

விதுர நீதி: இது ஐந்தாம் பருவமான உத்யோக பருவத்தில் வருகிறது. திருதராட்டிரனுக்கு, விதுரன் ஓர் இரவு முழுவதும், மனிதன் எப்படி இருக்க வேண்டும் எப்படி இருக்கக் கூடாது என்னென்ன செய்ய வேண்டும் என்னென்ன செய்யக் கூடாது என்கிற வாழ்வியல் நீதிநெறிகளை விளக்கிக் கூறும் பகுதி இது.

நளன், தமயந்தி கதை: இதிகாசத்தின் மூன்றாம் பர்வமான ஆரண்யகபர்வத்தில் காணப்படுகின்றது. இது நளன் என்னும் அரசனும், தமயந்தி என்னும் இளவரசியும் காதலித்து மணம்புரிந்து கொள்வதையும், பின்னர் நளன் சனியால் பிடிக்கப்பட்டு நாடிழந்து பல ஆண்டுகள் அல்லலுற்று மீண்டும் இழந்த அரசுரிமையைப் பெறுவதையும் கூறும் கதை.

இராமாயணத்தின் சுருக்கம்: மூன்றாம் பர்வமான ஆரண்யகபர்வத்தில் உள்ளது.

மேலும் தேவயானி – கசன், யயாதி, நகுசன், சாரங்கக் குஞ்சுகளின் கதை, அகத்தியரின் கதை, யவக்ரீவன் கதை, தருமவியாதன் என்னும் கசாப்புக் கடைக்காரனின் கதை, சத்தியவான் சாவித்திரி கதை, துசுயந்தன் – சகுந்தலை கதை, நளாயினி கதை, அரிச்சந்திரன், கந்த பெருமான், பரசுராமர் மற்றும் கலைக்கோட்டு முனிவர் வரலாறுகள் என்று பலவும் ஆரண்யக பருவத்தில் உள்ளன. ஒவ்வொன்றும் ஒரு வித வாழ்வியல் நீதி அல்லது நியதியை மையப்படுத்திய அற்புதக் கதைகள் ஆகும். இவை தம்மளவில் தனி ஆக்கங்களாகவும் கருதப்படத் தக்கவை.

வரலாறும் அமைப்பும்

இவ்விதிகாசம் கதைக்குள் கதை சொல்லும் அமைப்பை உடையது. இவ்வமைப்பு, பழங்கால இந்தியாவின் ஆக்கங்களில் பரவலாகக் காணப்படுவதாகும். வியாசரால் எழுதப்பட்ட இது பின்னர் பல ஆண்டுகளுக்குப் பின்னர் அவருடைய சீடரான வைசம்பாயனர் என்பவரால், அருச்சுனனின் கொள்ளுப்பேரனான சனமேசயன் என்னும் அரசனுக்குச் சொல்லப்பட்டது. இது மேலும் பல ஆண்டுகள் கடந்த பின்னர் கதைசொல்லியான உக்கிரசிரவசு என்பவரால் நைமிசாரண்யம் எனும் காட்டில் வாழும் முனிவர்கள் குழுவொன்றுக்குச் சொல்லப்பட்டது.

மகாபாரதத்தின் பல்வேறு பகுதிகளின் காலத்தை அறிந்துகொள்ளும் முயற்சியில் பல அறிஞர்கள் நீண்ட காலத்தைச் செலவு செய்துள்ளனர்.

20 ஆம் நூற்றாண்டின் இந்தியவிலாளர் பலர், இது குழப்பமாகவும், ஒழுங்கற்ற முறையிலும் அமைந்துள்ளதாகக் கூறுகின்றனர். மகாபாரதம் தொடர்பான மிக முற்பட்ட குறிப்புகள், கிமு நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் பாணினியின் அட்டாத்தியாயி என்னும் இலக்கண நூலிலும், அசுவலாயன கிருகசூத்திரம் என்னும் நூலிலும் காணப்படுகின்றன. இதனை அடிப்படையாகக் கொண்டு 24,000 அடிகளுடன் கூடிய பாரதமும், விரிவாக்கப்பட்ட மகாபாரதத்தின் தொடக்க வடிவங்களும், கிமு நான்காம் நூற்றாண்டளவில் இருந்திருக்கக்கூடும் என அறிஞர்கள் கூறுகின்றனர். இதன், 8,800 அடிகளைக் கொண்ட மூல வடிவம் கிமு 9-8 நூற்றாண்டுகளிலேயே தோன்றியிருக்கக் கூடும் என்பது சிலரது கருத்து.

வியாச பாரதத்தின் அமைப்பு

மொத்தம் 18 பெரும் பருவங்கள் கொண்ட வியாச பாரதம் நான்கு பாகங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

ஆத்ய பஞ்சகம்: ஆதி, சபா, ஆர்ண்ய, விராட மற்றும் உத்யோக ஆகிய 5

பர்வங்கள்

யுத்த பஞ்சகம்: பீசும, துரோண, கர்ண, சல்ய மற்றும் சௌப்திக ஆகிய போர் நிகழ்ச்சிகளை விவரிக்கும் 5 பர்வங்கள்

சாந்தி த்ரையம்: சுதிரீ, சாந்தி மற்றும் அனுசாசன் ஆகிய அமைதி திரும்பியதை விவரிக்கும் 3 பர்வங்கள்

அந்த்ய பஞ்சகம்: அசுவமேதிக, ஆச்ரமவாஸிக, மௌசல, மகாப்ரசுதானிக மற்றும் சுவர்க்காரோகண ஆகிய இறுதி நிகழ்ச்சிகளை விவரிக்கும் 5 பர்வங்கள்

18 பர்வங்கள்

மகாபாரதத்தின் 18 பர்வங்கள் பின்வருமாறு:

ஆதி பருவம்: 19 துணைப் பருவங்களைக் (1-19) கொண்டது. நைமிசக் காட்டில் முனிவர்களுக்கு சௌதி மகாபாரதத்தைச் சொல்லியது பற்றியும், வைசம்பாயனரால் முன்னர் இக்கதை சனமேசயனுக்குச் சொல்லப்பட்டது பற்றியும் இப் பருவத்தில் விளக்கப்படுகிறது. பரத இனத்தின் வரலாறு பற்றி விளக்கமாகக் கூறும் இப்பருவம், பிருகு இனத்தின் வரலாற்றையும் கூறுகிறது. குரு இளவரசர்களின் பிறப்பு, அவர்களது இளமைக்காலம் என்பனவும் இப் பருவத்தில் எடுத்தாளப்படுகின்றன.

சபா பருவம்: 20 – 28 வரையான 9 துணைப் பருவங்கள் இதில் உள்ளன. இந்திரப்பிரஸ்தத்தில் மயன் மாளிகை அமைத்தல், அரண்மனை வாழ்க்கை, தருமன் இராசசூய யாகம் செய்தல் என்பன இப் பருவத்தில் சொல்லப்படுகின்றன. அத்துடன், தருமன் சூதுவிளையாட்டில் ஈடுபட்டு இறுதியில் நாடிழந்து காட்டில் வாழச் செல்வதும் இப் பருவத்தில் அடங்குகின்றன.

ஆரண்யக பருவம்: 29 – 44 வரையான 16 துணைப் பருவங்கள் இதில் அடங்குகின்றன. இது பாண்டவர்களின் 12 ஆண்டுக்காலக் காட்டு வாழ்க்கை பற்றிய விபரங்களைத் தருகிறது.

விராட பருவம்: 45 – 48 வரையான 4 துணைப் பருவங்களைக் கொண்ட இப் பருவம், பாண்டவர்கள், மறைந்து விராட நாட்டில் வாழ்ந்த ஓராண்டு கால நிகழ்வுகளைக் கூறுவது.

உத்யோக பருவம்: 49 – 59 வரையான 11 துணைப் பருவங்களைக் கொண்டது இது. கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையே அமைதி ஏற்படுத்த எடுத்த முயற்சிகளையும், அம்முயற்சிகள் தோல்வியுற்ற பின்னர் இடம்பெற்ற போருக்கான நடவடிக்கைகள் பற்றியும் எடுத்தாள்கிறது.

பீசும பருவம்: இது 60 – 64 வரையான 5 துணைப் பர்வங்களைக் கொண்டுள்ளது. இப்பருவத்தில் தான் பகவத் கீதை கிருட்டிணரால் அருச்சுனனுக்கு அருளப்பட்டது. பீசுமர் கௌரவர்களின் தளபதியாக இருந்து நடத்திய போரின் முதற்பகுதியையும், அவர் அம்புப் படுக்கையில் விழுவதையும் இது விவரிக்கிறது.

துரோண பருவம்: 65 – 72 வரையான 8 துணைப் பர்வங்களில், துரோணரின் தலைமையில் போர் தொடர்வதை இப் பர்வம் விவரிக்கின்றது. போரைப் பொறுத்தவரை இதுவே முக்கியமான பர்வமாகும். இரு பக்கங்களையும் சேர்ந்த பெரிய வீரர்கள் பலர் இப் பர்வத்தின் முடிவில் இறந்துவிடுகின்றனர்.

கர்ண பருவம்: 73 ஆம் துணைப் பர்வத்தை மட்டும் கொண்ட இப் பர்வத்தில் கர்ணனைத் தளபதியாகக் கொண்டு போர் தொடர்வது விவரிக்கப்படுகின்றது.

சல்லிய பருவம்: 74 – 77 வரையான 4 துணைப் பர்வங்களைக் கொண்டுள்ளது. சல்லியனைத் தளபதியாகக் கொண்டு இடம் பெற்ற இறுதிநாள் போர் இப் பர்வத்தில் கூறப்படுகின்றது. இதில் சரசுவதி நதிக்கரையில் பலராமனின் யாத்திரையையும், போரில் துரியோதனனுக்கும், வீமனுக்கும் இடையில் நடைபெற்ற இறுதிப் போரும் விளக்கப்படுகின்றது. வீமன் தனது கதாயுதத்தால் துரியோதனனின் தொடையில் அடித்து அவனைக் கொன்றான்.

சௌப்திக பருவம்: 78 – 80 வரையான 3 துணைப் பர்வங்களை இது அடக்குகிறது. அசுவத்தாமனும், கிருபனும், கிருதவர்மனும், போரில் எஞ்சிய பாண்டவப் படைகளில் பலரை அவர்கள் தூக்கத்தில் இருந்தபோது கொன்றது பற்றி இப் பர்வத்தில் கூறப்பட்டுள்ளது. பாண்டவர் பக்கத்தில் எழுவரும், கௌரவர் பக்கத்தில் மூவரும் மட்டுமே போரின் இறுதியில் எஞ்சினர்.

சுதிரீ பருவம்: 81 – 85 வரையான 5 துணைப் பர்வங்கள் இதில் அடங்குகின்றன. இப் பர்வத்தில் காந்தாரி, குந்தி முதலிய குரு மற்றும் பாண்டவர் பக்கங்களைச் சேர்ந்த பெண்கள் துயரப் படுவது கூறப்படுகின்றது.

சாந்தி பருவம்: 86 – 88 வரையான மூன்று துணைப் பர்வங்களை அடக்கியது இப் பர்வம். அத்தினாபுரத்தின் அரசனாகத் தருமருக்கு முடிசூட்டுவதும், புதிய அரசனுக்கு சமூகம், பொருளியல், அரசியல் ஆகியவை தொடர்பில் பீசுமர் வழங்கிய அறிவுரைகளும் இப் பர்வத்தில் அடங்கியுள்ளன. மகாபாரதத்தின் மிகவும் நீளமான பர்வம் இது.

அனுசாசன பருவம்: 89, 90 ஆகிய இரண்டு துணைப் பர்வங்களை அடக்கியது. பீசுமரின் இறுதி அறிவுரைகள்.

அசுவமேத பருவம்: தருமர் அசுவமேத யாகம் செய்வதையும், அருச்சுனன் உலகைக் கைப்பற்றுவதையும் இது உள்ளடக்குகிறது. கண்ணனால் அருச்சுனனுக்குச் சொல்லப்பட்ட கீதையும் இதில் அடங்குகிறது.

ஆசிரமவாசிக பருவம்: 93 – 95 வரையான 3 துணைப் பர்வங்கள் இதில் உள்ளன. திருதராட்டிரன், காந்தாரி, குந்திமற்றும் விதுரன் ஆகியோர் இமயமலையில் வனப்பிரசுதம் ஆச்சிரமத்தில் வாழ்ந்தபோது காட்டுத் தீக்கு இரையானது இப் பர்வத்தில் கூறப்படுகின்றது.

மௌசல பருவம்: 96 ஆவது துணைப் பர்வம். யாதவர்கள் தங்களுக்குள் நிகழ்த்திய சண்டையில் அவர்கள் அழிந்துபோனதை இப் பர்வம் கூறுகிறது.

மகாபிரசுதானிக பருவம்: 97 ஆவது பர்வம்: தருமரும் அவரது உடன்பிறந்தோரும் நாடு முழுதும் பயணம் செய்து இறுதியில் இமயமலைக்குச் சென்றது, அங்கே தருமர் தவிர்த்த ஏனையோர் இறந்து வீழ்வது ஆகிய நிகழ்ச்சிகள் இப் பர்வத்தில் இடம்பெறுகின்றன.

சுவர்க்க ஆரோகன பருவம்: 98 ஆவது துணைப் பர்வம். தருமரின் இறுதிப் பரீட்சையும், பாண்டவர்கள் சுவர்க்கம் செல்வதும் இதில் சொல்லப்படுகின்றன.

99, 100 ஆகிய துணைப் பருவங்களை உள்ளடக்கிய அரிவம்ச பருவம் எனப்படும் பருவம் முற் கூறிய 18 பர்வங்களுள் அடங்குவதில்லை. இதில் முன் பர்வங்களில் கூறப்படாத, கண்ணனின் வாழ்க்கை நிகழ்வுகள் கூறப்படுகின்றன.

வரலாற்றுச் சூழல்

வரலாற்று நோக்கில் குருச்சேத்திரப் போர் பற்றித் தெளிவு இல்லை. இப்படி ஒரு போர் நிகழ்ந்திருப்பின் அது பொ.ஊ.மு. 10 ஆம் நூற்றாண்டளவில் இரும்புக் காலத்தில் நடைபெற்று

இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. பொ.ஊ.மு. 1200–800 காலப்பகுதியில், குரு இராச்சியம் அரசியல் அதிகார மையமாக இருந்திருக்கலாம். இக்காலத்தில் இடம்பெற்ற வம்சம் சார்ந்த பிணக்கு ஒன்று தொடக்ககால பாரதம் எழுதுவதற்குத் தூண்டுகோலாக இருந்திருக்கக் கூடும். புராண இலக்கியங்கள் மகாபாரதத்துடன் தொடர்புடைய மரபுகளின் பட்டியல்களைத் தருகின்றன.

தொல்வானியல் முறைகளைப் பயன்படுத்தி நிகழ்வுகளின் காலத்தைக் கணிக்க எடுத்த முயற்சிகள் போர்க் காலத்தை கிமு நான்காம் ஆயிரவாண்டு முதல் கிமு இரண்டாவது ஆயிரவாண்டின் நடுப்பகுதிவரை குறிக்கின்றன.ஆனாலும் இதில் தவறு இருக்கலாம் என்ற சந்தேகமும் உள்ளது ஆரியர்களின் காலம் கி.மு 1300 க்கு பிறகே வருவதாலும் ,அதற்கு பிறகே நடந்திருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது.

கதைச் சுருக்கம்

மகாபாரதத்தின் அடிப்படைக் கதை குரு குலத்தவரால் ஆளப்பட்டு வந்த அத்தினாபுரத்தின் ஆட்சி உரிமை குறித்து பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் இடையே உண்டான பிணக்கு ஆகும். திருதராட்டிரன் மற்றும் பாண்டு ஆகிய சகோதரர்களின் வழிவந்தவர்களான கௌரவர்களுக்கும், பாண்டவர்களுக்கும் இடையிலேயே இப் பிணக்கு நிகழ்ந்தது. கௌரவர்களே இவர்களுள் மூத்த மரபினராக இருந்தாலும், கௌரவர்களில் மூத்தோனாகிய துரியோதனன், பாண்டவர்களில் மூத்தோனாகிய தருமனிலும் இளையவனாக இருந்தான். இதனால் துரியோதனன், தருமன் இருவருமே ஆட்சியுரிமையை வேண்டி நின்றனர். இப்பிணக்கு இறுதியில் குருச்சேத்திரப் போராக வெடித்தது. இதில் பாண்டவர்களுக்கு வெற்றி கிடைத்தது.ஐ5ஸ இப்போர் உறவுமுறை, நட்பு போன்றவை தொடர்பான சிக்கலான நிலைமைகளை ஏற்படுத்தியது.

மகாபாரதம் கர்ணனின் இறப்புடனும் தொடர்ந்த அவருடைய மரபின் முடிவுடனும், பாண்டவர்கள் சுவர்க்கம் செல்வதுடனும் நிறைவடைகிறது. அத்துடன் இதன் முடிவுடன் கலியுகம் தொடங்குகிறது.

தமிழில் மகாபாரத

பாரதம் பாடிய பெருந்தேவனார் சங்ககாலப் புலவர் அல்லர்.வியாச பாரதத்தை வெண்பாவும் அகவலும் உரைநடையும் விரவிவரப் பாடி வெளியிட்டமையால் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்று அழைக்கப்பெற்றார். இவர் பிறந்தது தொண்டை நாடு எனத் தொண்டை மண்டலம் குறிப்பிடுகின்றது. சங்கநூல்கள் தொகுக்கப்பட்ட காலத்தவர். எட்டுத்தொகை நூல்களைத் தொகுத்தவர். இவரது கடவுள் வாழ்த்துப் பாடல்களை நூலுக்குத் தொடக்கப் பாடலாக இணைத்துள்ளார்.

இவரது பாடல்கள் அகநானூறு, ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு. ஆகிய ஐந்து நூல்களுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடல்களாக அமைந்துள்ளன.

காலம்

இவரது காலம் கி.பி. 700-க்கு முன்பாகும்.

ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தார் என்பர்.

பாரதம் பாடிய பெருந்தேவனார் எட்டுத்தொகை நூல்கள் தொகுக்கப்பட்ட காலத்தில் பாரதத்தை தமிழ்ப்படுத்தினார். இவரின் காலமும் உறுதியாகத் தெரியவில்லை. இவர் தமிழ் மொழிப்படுத்திய பாரதமும் கிடைக்கவில்லை.

பின்னர் தொண்டைமண்டலத்து திருமுனைப்பாடி நாட்டு சனியூரைச் சேர்ந்த வில்லிப்புத்தூரார் தனது புரவலரான வக்கபாகை வரபதியாட்கொண்டான் வேண்டிக்கொண்டதற்கு இணங்க பாரதத்தைப் பாடினார். வில்லிப்புத்தூரார் இயற்றிய

பாரதத்தில் பத்துப் பருவங்களே (மொத்தப்பாடல்கள் 4350) இருக்கின்றன. மகாபாரதத்தின் பதினெட்டாம் நாள் போரின் இறுதியுடன் தருமன் முடி சூட்டுதல், பாண்டவர் அரசாட்சி என்று முடித்து விடுகிறார். 14ஆம் நூற்றாண்டில் வில்லிபுத்தூராரால் உருவாக்கப்பட்ட வில்லிபாரதமும் 18ஆம் நூற்றாண்டில் நல்லாப்பிள்ளையால் உருவாக்கப்பட்ட நல்லாப்பிள்ளை பாரதமும் மட்டுமே முழுமையாகக் கிடைத்த பிரதிகள்.

இதன் பின்னர் மகாபாரதத்தை வேறு சிலரும் உரைநடையில் மொழியாக்கம் செய்துள்ளனர். அவற்றுள் முழுமையானதாக திருத்தமிகு பதிப்பாகக் கருதப்படுவது, 1903 இலிருந்து இருபத்தைந்து ஆண்டு காலம், ம. வீ. இராமானுஜாச்சாரியார் தலைமையில் பல வடமொழி தமிழ் மொழி வித்வான்களால் மொழிபெயர்க்கப் பட்ட மகாபாரதப் (கும்பகோண) பதிப்பாகும். 9000 பக்கங்களைக் கொண்ட இந்நூல் 1930களிலும் 1950களிலும் 2008இலும் பதிப்பிக்கப்பட்டது.

அதைத் தவிர குறிப்பிடத்தக்கவர் இராசாசி. அவருடையது ”வியாசர் விருந்து” குறிப்பிடத் தகுந்தது.

அ. லெ. நடராசன் ”வியாசர் அருளிய மகாபாரதம்” என்ற பெயரில் நான்கு பாகங்களாக எழுதி வெளியிட்டுள்ளார்.

பத்திரிக்கையாளர் சோ ”மகாபாரதம் பேசுகிறது” என்ற பெயரில் வியாச பாரதத்தை இரு பாகங்களாக எழுதியுள்ளார்.

இராமகிருஷ்ண தபோவனத்தின் நிறுவனர் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் வியாசரைத் தழுவி எழுதிய மகாபாரதம் குறிப்பிடத்தகுந்தது. 2013ஆம் ஆண்டு வெளியான பத்தொன்பதாம் பதிப்பு வரை 2,35,000 பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளன.

ஜெயமோகன் மகாபாரதத்தை வெண்முரசு என்ற பெயரில் நாவல் வடிவில் எழுதிருக்கிறார். அவரது இணையதளத்தில்ஜ6ஸ 2014 ஜனவரி 1 ஆம் தேதிமுதல் 2020 ஜூலை 16 வரை தொடராகப் பதிவேற்றப்பட்டது. மொத்தம் பத்து தொகுதிகளாக வெளியிடத் திட்டமிட்டு, 26 நாவல்களும் 25000 பக்கங்களும் அது விரிவடைந்து வெளியிடப்பட்டுள்ளது.

இராமாயணம்

வால்மிகி எழுதியக் காப்பியம்

இராமாயணம் (சுயஅயலயயெஅ ஒலிப்பு ⓘ) வால்மீகி என்னும் முனிவரால் சமசுக்கிருத மொழியில் இயற்றப்பட்ட மிகப் பழைய இதிகாசமாகும்.ஜ1ஸ இது பொ.ஊ.மு. 5 ஆம் நூற்றாண்டுக்கும் பொ.ஊ. 2 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் இயற்றப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இது இந்து சமயத்தின் முக்கியமான நூல்களுள் ஒன்று. மூல நூலான வால்மீகியின் இராமாயணத்தைத் தழுவிப் பல இந்திய மொழிகளிலும், பிற நாடுகளின் மொழிகளிலும் இராமாயணம் இயற்றப்பட்டுள்ளது. கம்பர் என்னும் புலவர் புலவர்களுக்கே உண்டான பாணியில் பல கற்பனைகளை இனைத்து இதனைத் தமிழில் எழுதினார். இது கம்ப இராமாயணம் எனப்படுகின்றது. கெமர் மொழியில் உள்ள ரீம்கெர், தாய் மொழியில் உள்ள ராமகியெ, லாவோ மொழியில் எழுதப்பட்ட ப்ரா லாக் ப்ரா லாம், மலாய் மொழியின் இக்காயத் சேரி ராமா போன்றவை வால்மீகியின் இராமாயணத்தைத் தழுவியவை ஆகும். கோசல நாட்டின் தலை நகரமான அயோத்தியை சேர்ந்த ரகு வம்ச இளவரசரான ராமர், அவர் மனைவி சீதை ஆகியோரின் வாழ்க்கையை விவரிக்கும் இந்த இதிகாசம், உறவுகளுக்கு இடையேயான கடமைகளை எடுத்துக் காட்டுகின்றது. சிறந்த வேலையாள், சிறந்த தம்பி, சிறந்த மனைவி, சிறந்த அரசன் போன்றோர் எப்படி இருக்கவேண்டும் என்பது இதன் கதை மாந்தர்கள் மூலம்

விளக்கப்படுகின்றது. யாழ்பாணம் சரசாலை எனும் ஊரில் இராமர் தனது பரிபாலனங்களுடன் வந்தமை இதிகாசங்களில் கூறப்படுகிறது.

நூலாசிரியர் - வால்மீகி

மொழி - சமஸ்கிருதம்

காலம் -,திரேதா யுகம் பொ.ஊ.மு. 5301

பகுதிகள் - 500 சர்காக்கள் 7 காண்டங்கள்

வரிகள் - 24,000.

சொற்பிறப்பியல்

இராமாயணம் என்னும் பெயர் இராமன், அயனம் என்னும் சொற்களின் கூட்டாகும். காவியத்தின் மையப் பாத்திரத்தின் பெயரான இராம, இரண்டு சூழ்நிலை அர்த்தங்களைக் கொண்டுள்ளது. அதர்வவேதத்தில், இது "அடர், அடர் நிறம், கருப்பு" என்று பொருள்படும் மற்றும் "இரவின் இருள் அல்லது அமைதி" என்று பொருள்படும் இராத்திரி என்ற வார்த்தையுடன் தொடர்புடையது. மகாபாரதத்தில் காணக்கூடிய மற்றொரு பொருள், "மகிழ்ச்சியானது, இனிமையானது, வசீகரமானது, அழகானது, அழகானது" என்பதாகும். அயனம் என்னும் சொல் சமசுக்கிருதத்தில் பயணம் என்னும் பொருளுடையது. இதனால், இராமாயணம் என்பது "இராமனின் பயணம்" என்று பொருள்படும், அக சாந்தியின் சமஸ்கிருத இலக்கண விதியின் காரணமாக அயனா அயனாவாக மாற்றப்பட்டது.

காலம் மதிப்பீடு

ஜோதிட கணக்கீடுகளின்படி, ராமாயணத்தின் விவரிப்பு பொ.ஊ.மு. 5301 இல் திரேதா யுகம் காலகட்டத்தில் நடந்தது.ஜ7ஸ

ராபர்ட் பி. கோல்ட்மேனின் கூற்றுப்படி ராமாயணத்தின் பழமையான பகுதிகள் பொ.ஊ.மு. 7-ம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்கும் பொ.ஊ.மு. 6 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்கு இடைப்பட்டவை. பௌத்தம் அல்லது மகத ராஜ்ஜியத்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடாத கதையே இதற்குக் காரணம். சாகேதா அல்லது ஷ்ரவஸ்தியின் வாரிசு தலைநகர் என்பதற்குப் பதிலாக, அயோத்தியை கோசலத்தின் தலைநகர் என்றும் உரை குறிப்பிடுகிறது. கதை காலத்தின் அடிப்படையில், ராமாயணம் மகாபாரதத்திற்கு முந்தையது என்பது வெளிப்படையானது. பொ.ஊ.மு. 7 முதல் 4 ஆம் நூற்றாண்டுகள் வரை கிடைக்கக்கூடிய உரையின் ஆரம்ப கட்டத்திற்கான அறிஞர்களின் மதிப்பீடுகள்.

இந்திய மொழிகளில் இராமாயணம்

தமிழில் கம்பரும், வடமொழியில் வால்மீகியும், இந்தியில் துளசி தாசரும், மலையாளத்தில் எழுத்தச்சனும், அசாமியில் மாதவ் கங்குனியும், ஒரியாவில் பலராம்தாசுவும் இயற்றியுள்ளனர்.

வடமொழி இராமாயண நூல்கள்

. யோக வாசிஷ்டம் (அல்லது) வாசிஷ்ட இராமாயணம் (பொ.ஊ. 8 அல்லது 12 ஆம் நூற்றாண்டு)

. அத்யாத்ம இராமாயணம் (பொ.ஊ. 13 ஆம் நூற்றாண்டு, இராமசர்மர் எழுதியது)

. அற்புத இராமாயணம் (முந்தையதற்குப் பிற்பட்ட காலகட்டம்)

. ஆனந்த இராமாயணம் (பொ.ஊ. 15 ஆம் நூற்றாண்டு) வால்மீகி பெயரால் வழங்கப்படுவது.

இராமசரிதமானஸ் - அவதி மொழி, துளசிதாசர், 16ஆம் நூற்றாண்டு.

வால்மீகி இராமாயணத்தின் அமைப்பு

இராமாயணத்தின் கதை பல மட்டங்களில் தொழிற்படுகின்றது. ஒரு மட்டத்தில் இது அக்காலத்துச் சமூகத்தை விவரிக்கின்றது. பரந்த பேரரசுகள், அடுத்த அரசர்களாக வரவிருக்கும் இளவரசர்களின் வாழ்க்கை, தாய்மாருக்கும் மாற்றாந் தாய்களுக்கும் இடையிலான போட்டி, உடன்பிறந்தோருக்கு இடையிலான அன்புப் பிணைப்பும் விசுவாசமும், இளவரசிகளை மணம் முடிப்பதற்கான போட்டிகள் போன்றவை இவற்றுள் அடக்கம். இன்னொரு மட்டத்தில் இது, நெறிமுறைகளைக் கடைப்பிடிக்கும் ஒரு மனிதன், ஒரு தலைவனாக எவ்வாறு நடந்துகொள்கிறான் என்பதையும், நிலைமைகளை ஒன்றுபோல எதிர்கொண்டு, சமயத்துக்குத் தக்கபடி நடந்து, தனது சொந்தத் துன்பங்கள் முதலியனவற்றுக்கும் அப்பால் குடிமக்களை எவ்வாறு வழிநடத்துகிறான் என்பதையும் காட்டுகிறது. வேறொரு மட்டத்தில் இது, தீமையை ஒழித்து நீதியை நிலை நாட்டுவதற்காக மனிதனாகத் தனது ஏழாவது அவதாரத்தை எடுத்த விஷ்ணுவின் கதையும் ஆகும்.

வால்மீகி இராமாயணம் 24,000 பாடல்களைக் கொண்டது. இவை மொத்தம் ஏழு காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவை இராமரின் பிறப்பில் இருந்து இறப்பு வரை விளக்குகின்றன. அவை:

1. பால காண்டம்: இராமனினதும் உடன்பிறந்தோரினதும் பிறப்பு, கல்வி, திருமணம் என்பவை பற்றிய கதைப் பகுதி.

2. அயோத்தி காண்டம்: இராமன் சீதையை மணந்து கொண்ட பின்னர் இளவரசனாக அயோத்தியில் வாழ்ந்த காலத்துக் கதைப் பகுதி.

3. ஆரண்ய காண்டம்: இராமன் காட்டுக்குச் சென்றதும் அங்கு வாழ்ந்ததும்.

4. கிஷ்கிந்தா காண்டம்: கடத்திச் செல்லப்பட்ட சீதையைத் தேடிச் செல்லும்போது வானரர் நாட்டில் இராமனது வாழ்க்கை.

5. சுந்தர காண்டம்: சீதையைத் தேடி அனுமன் இலங்கைக்குச் சென்றது, அங்கே சீதையைக் கண்டது ஆகியவற்றை உள்ளடக்கிய கதைப் பகுதி.

6. யுத்த காண்டம்: இராமனுக்கும் இராவணனுக்கும் இடையிலான போரை உள்ளடக்கிய கதைப் பகுதி.

7. உத்தர காண்டம்: இராமன் அயோத்திக்கு திரும்ப வந்து அரசனானதையும் சீதை மீண்டும் காட்டுக்கு அனுப்பப்பட்டதையும் உள்ளடக்கிய கதைப் பகுதி.

இந்த இராமாயணத்தில் காணப்படும் முதல் காண்டமும் இறுதிக் காண்டமும் வால்மீகியால் எழுதப்பட்டதா என்பதில் சில ஐயப்பாடுகளும் நிலவுகின்றன. இவ்விரு பகுதிகளினதும் மொழி நடை ஏனைய பகுதிகளிலிருந்து வேறுபடுவதும் அவற்றின் உள்ளடக்கங்களில் முரண்பாடுகள் காணப்படுவதும் இத்தகைய ஐயப்பாடுகளுக்குக் காரணமாகும். எனினும் பலர் இவ்வேழு காண்டங்களும் வால்மீகியால் எழுதப்பட்டதாகவே நம்புகின்றனர்.

வால்மீகி இராமாயணத்தின் கதைச் சுருக்கம்

பால காண்டம்

அயோத்தியை ஆண்டு வந்த தசரத மன்னனுக்கு நீண்ட நாட்களாக குழந்தைகள் இல்லாமல் இருந்து வந்தார். அதனால் தன் மந்திரி சுமந்தரர் மற்றும் தன் குலகுருவான வசிட்டரின் அறிவுரைப்படி புத்திர-காமேஷ்டி யாகம் நடத்தினார். அப்போது மகா விஷ்ணு தோன்றி, ஓர் தங்கத்திலான பாத்திரத்தை தசரதனிடம் கொடுத்து அதிலிருக்கும் புனிதமான

தேனைத் தசரதனின் மனைவியரை பருகும்படி கேட்டு கொண்டார். அதன்படி தசரதரும் தன் மனைவியரான கௌசல்யா, சுமித்திரை மற்றும் கைகேயியிடம் அந்த தேனை பகிர்ந்தளிதார். விரைவிலேயே கௌசல்யாவுக்கு இராமனும், கைகேயிக்கு பரதனும், சுமித்திரைக்கு இரட்டையரான இலக்குவன் மற்றும் சத்ருகனன் ஆகியோர் பிறந்தனர்.

சிறிது காலத்திற்கு பின்பு நால்வரும் வசிட்டரிடம் சீடர்களாக சேர்ந்து பல்வேறு கலைகளை கற்று கொள்ள ஆரம்பித்தனர். இந்நிலையில் விசுவாமித்திர முனிவர், அயோத்தியை அடைந்து தசரதரிடம் தன் யாகங்களுக்கு சில ராட்சகர்களால் இடையூறு ஏற்படுவதால் அவர்களை அழிக்க இராமனை தன்னுடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டார். முதலில் தயங்கினாலும் பிறகு இராமனையும், லட்சுமணனனையும் அவருடன் அனுப்பி வைத்தார். சகோதரர்கள் வந்த வேலையை செவ்வனே செய்த்தால், விசுவாமித்திரர் அவர்களுக்கு சில அஸ்திரங்களை அருளி ஆசிர்வதித்தார்.

அயோத்தி காண்டம்

விசுவாமித்திரர் இராமனையும், இலட்சுமணனையும் ஜனகன் என்னும் அரசன் ஆட்சி செய்த விதேக நாட்டின் தலைநகரமான மிதிலைக்கு அழைத்துச் சென்றார். ஜனகனுடைய மகள் சீதை. இவளுக்குத் திருமணம் செய்வதற்காக அரசர் போட்டியொன்றை ஒழுங்கு செய்திருந்தார். பல இளவரசர்கள் கலந்து கொண்ட அப்போட்டியில் வென்ற இராமன், சீதையை திருமணம் செய்து கொண்டு அயோத்திக்கு மீண்டான். இராமனுக்கும், சீதைக்கும் திருமணமாகி பன்னிரண்டு ஆண்டுகள் ஆனதும், வயதான தசரதர், இராமருக்கு மகுடம் சூட்ட விருப்பம் தெரிவிக்கிறார், அதற்கு கோசல அரசவையும் குடிமக்களும் தங்கள் ஆதரவை வெளிப்படுத்துகிறார்கள். மாபெரும் நிகழ்வின் முந்திய நாளில், மந்தரை என்கிற பொல்லாத வேலைக்காரியால் கைகேயியின் பொறாமை தூண்டப்படுகிறது. தசரதன் நீண்ட காலத்திற்கு முன்பு தனக்கு வழங்கிய இரண்டு வரங்களை நினைவு கூறுகிறார். இராமரை பதினான்கு ஆண்டுகள் காட்டிற்குள் அனுப்புமாறும், தனது மகன் பரதன் நாடாள வேண்டுமென்றும் தசரதனிடம் கைகேயி கோருகிறார். இதனால் மனம் உடைந்த அரசன், கொடுக்கப்பட்ட வரத்தின் காரணமாக கட்டுப்படுத்தப்பட்டு, கைகேயியின் கோரிக்கைகளுக்கு இணங்குகிறார். இராமர் தனது தந்தையின் ஆணையை முழுமையான சமர்ப்பிப்பு மற்றும் அமைதியான சுய கட்டுப்பாட்டுடன் ஏற்றுக்கொள்கிறார். இது கதை முழுவதும் அவரை வகைப்படுத்துகிறது.

இவருடன் சீதாவும் லட்சுமணனும் இணைந்து காடு செல்கின்றனர்.

அவரைப் பின்தொடர வேண்டாம் என்று அவர் சீதாவிடம் கூறும்போது, "நீங்கள் வசிக்கும் காடு எனக்கு அயோத்தி, நீங்கள் இல்லாமல் அயோத்தி என்பது எனக்கு ஒரு உண்மையான நரகமாகும்" என்று கூறுகிறாள். ராமர் வெளியேறிய பிறகு, தசரத மன்னர், துக்கத்தை தாங்க முடியாமல் காலமாகிறார். இதற்கிடையில், தனது நாட்டிற்குத் திரும்பிய பரதன், அயோத்தியில் நடந்த நிகழ்வுகளைப் பற்றி அறிந்து கொள்கிறார். பரதன் தனது தாயின் பொல்லாத சூழ்ச்சியினால் அரியணை ஏற மறுத்து, காட்டில் ராமரை சந்திக்கிறான். பரதன் ராமரிடம் திரும்பி வந்து ஆட்சி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறார். ஆனால் தனது தந்தையின் கட்டளைகளை நிறைவேற்ற தீர்மானித்த ராமர், நாடு திரும்ப மறுக்கிறார்.

ஆரண்ய காண்டம்

சில காலத்தின் பின் தனது மூத்த மகனான இராமனுக்கு முடிசூட்டத் தசரதர் எண்ணினார். அரச குடும்பத்தினரும் மக்களும் இது குறித்து மிகவும் மகிழ்ந்தனர். ஆனால், கைகேயியின் பணிப்பெண்களில் ஒருத்தியான கூனி என்பாள் இராமன் மீது வெறுப்புற்றிருந்தாள். இராமன் அரசனாவதை அவள் விரும்பவில்லை. அதனால், கைகேயியைத் தூண்டி விட்டு இராமன் அரசனாவதைத் தடுக்க எண்ணினாள். கைகேயியும் கூனியின் வலையில் விழுந்துவிட்டாள். முன்னொருபோது தசரதனின் உயிரைக் கைகேயி காத்தமைக்காக இரண்டு வரங்கள் தருவதாகத் தசரதன் வாக்களித்திருந்தான். அவ்விரு வரங்களையும் கேட்டு வாங்கும்படி கூனி கைகேயிக்கு ஆலோசனை கூறினாள். தனது மகனான

பரதன் அரசனாக வேண்டும், இராமன் பதினான்கு ஆண்டுகள் காட்டில் வாழவேண்டும் என்னும் இரண்டு வரங்களைக் கைகேயி தசரதரிடம் கேட்டாள். மனதை மாற்றிக்கொள்ளும்படி தசரதர் வேண்டியும் கைகேயி பிடிவாதமாக மறுத்துவிட்டதனால், தான் சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதற்காக வேறு வழியின்றி அவளுடைய கோரிக்கைக்குத் தசரதன் இணங்க வேண்டியதாயிற்று. தசரதரின் முடிவைக் கேள்வியுற்ற இராமன் உடனடியாகவே காட்டுக்குக் கிளம்பினான். அவன் தடுத்தும் கேளாமல் சீதையும், இலட்சுமணனும் இராமனுடன் காட்டுக்குக் கிளம்பினர். இராமன் காட்டுக்குப் போய்விட்டான் என்பதைக் கேள்வியுற்ற தசரதர் கவலை தாங்காமல் உடனேயே இறந்துவிட்டார். அவ்வேளையில் பரதனும், சத்துருக்கனும் நாட்டுக்கு வெளியே இருந்தனர். தந்தையின் இறப்புச் செய்தி கேள்வியுற்ற அவர்கள் உடனடியாக நாடு திரும்பி நடந்ததை அறிந்து கொண்டனர்.

நடந்தவை அனைத்துக்கும் தனது தாயே காரணம் என்பதை அறிந்த பரதன் கோபம் கொண்டான். முடி சூட்டிக்கொள்ள மறுத்த அவன் இராமனைத் திரும்பவும் கூட்டி வருவதற்காகக் காட்டுக்குச் சென்றான். தந்தையின் சொல்லைக் காப்பாற்றுவதற்காக அயோத்திக்கு வர இராமன் மறுக்கவே, பரதன் இராமனின் காலணிகளை கேட்டுப் பெற்றுக்கொண்டு அயோத்திக்குச் சென்றான். அங்கே இராமனின் பாதுகைகளை அரியணையில் வைத்து இராமன் காட்டிலிருந்து மீளும் வரை அவனுக்காகப் பரதன் ஆட்சியை நடத்தினான்.

இராமனும், சீதையும், இலட்சுமணனும் காட்டில் வாழ்ந்து வந்தபோது அரக்கர் குலத்தைச் சேர்ந்த இலங்கை அரசன் இராவணனின் தங்கையான சூர்ப்பனகை என்பவள் இராமன் மீது ஆசை கொண்டாள். இலட்சுமணன் அவளது மூக்கை வெட்டித் துரத்திவிட்டான். இதனால் கோபமடைந்த அவள் தனது அண்ணனிடம் முறையிட்டாள். தனது தங்கைக்கு நேர்ந்த நிலையையிட்டுச் சினம் கொண்ட இராவணன் இராமனைப் பழிவாங்க எண்ணிச் சீதையைக் கவர்ந்து கொண்டு வந்து இலங்கையில், அசோகவனத்தில் சிறை வைத்தான். சீதையில் அழகில் மயங்கிய அவன், தன்னை மணந்து கொள்ளுமாறும் அவளை வற்புறுத்தினான்.

கிஷ்கிந்தா காண்டம்

கிஷ்கிந்தா காண்டம், (முளாமனொய முயனெய) வால்மீகி எழுதிய இராமாயணத்தின் ஆரண்ய காண்டத்திற்குப் பின் அமைந்த நான்காவது காண்டமாகும்.

இக்காண்டத்தில் இராவணால் கடத்தப்பட்ட சீதையைத் தேடி, காட்டில் இராம-இலக்குமணர்கள் தேடுதல், வாலிக்குப் பயந்து, மதங்க மகரிஷி தங்கியிருந்த மதங்க மலையில் ஜாம்பவனுடன் பதுங்கிக் கொண்டிருந்த சுக்கிரீவனுக்கு சொல்லின் செல்வன் அனுமான் மூலம் இராமருக்கு சுக்கிரீவனின் நட்பு கிடைத்தல், சீதையை மீட்க சுக்கிரீவன் வாக்கு தருதல், அதன் பிரதிபலனாக சுக்கிரீவனை கிட்கிந்தையின் மன்னராக முடிசூட்ட இராமர் உறுதியளித்தல், கிட்கிந்தையில் சுக்கிரீவனுக்கும் – வாலிக்கும் நடந்த போரில், இராமர் மறைந்து நின்று வாலியை கூரிய அம்பால் வீழ்த்துதல், பின்னர் கிட்கிந்தையின் மன்னராக சுக்கிரீவனுக்கும், பட்டத்து இளவரசராக அங்கதனுக்கும் இலக்குமணன் முடிசூட்டுதல், மழைக் காலத்திற்குப் பின் சுக்கிரீவன், சீதையைத் தேடி வானர வீரர்களை நான்கு திசைகளில் அனுப்புதல், அங்கதன் ஜாம்பவான், மற்றும் அனுமான் தலைமையிலான வானரப் படைகள் பரத கண்டத்தின் தெற்குப் பகுதிகளில் சீதையைத் தேடுவதற்கு புறப்படும் முன், இராமர் தனது கணையாழி மோதிரத்தை அனுமாரிடம் கொடுத்தல், கழுகரசன் ஜடாயுவின் அண்ணன் வயது முதிர்ந்த சம்பாதியை காண்பது, அங்கதன் சம்பாதியிடம் இராவணன் கடத்திச் சென்ற சீதையை தேடி அலைவதாகக் கூறல், இராவணன் சீதையை வானில் இலங்கைக்கு கடத்திச் சென்றதைப் பார்த்ததாக சம்பாதி கூறல், கடல் மீது பறந்து சென்று இலங்கையை அடையும் வல்லமை அனுமார் ஒருவருக்கும் மட்டுமே உண்டு என ஜாம்பவான் கூறல், அனுமார் இலங்கைச் சென்று சீதையை கண்டு வர ஒப்புக்கொள்தல், அனுமார் மகேந்திரமலை மீது ஏறி நின்று இலங்கை நோக்கி வானில் கடந்து செல்லுதலுடன் கிஷ்கிந்தா காண்டம் நிறைவு பெறுகிறது.

கிட்கிந்தா காண்டத்திற்குப் பின் வரும் சுந்தர காண்டத்தில் இராமதூதன் ஆக இலங்கைக்குச் சென்ற அனுமார், சீதையப் பார்த்துப் பேசுதல், இலங்கை நகரை அழித்தல், பின் மீண்டும் கிஷ்கிந்தைக்கு வந்து, இராமரிடம் கண்டேன் சீதையைக் கூறி இராமரின் மனதை மகிழ்வுறச் செய்வது குறித்து விளக்கப்படுகிறது.

சீதையைத் தேடி அலைந்த இராமனுக்கும், இலட்சுமணனுக்கும் வானரர்களின் அரசனான சுக்கிரீவனின் நட்புக் கிடைத்தது. சுக்கிரீவனின் அமைச்சனும், காற்றுக் கடவுளின் மகனுமான அனுமன் இராமனிடம் பெரும் பக்தி கொண்டிருந்தான். சுக்கிரீவனின் ஆணைப்படி வானரப் படைகள் பல திசைகளிலும் சென்று சீதையைத் தேடின. அனுமன் கடலைத் தாண்டி இலங்கைக்குச் சென்றான். அங்கே அசோக வனத்தில் சிறையிருந்த சீதையைக் கண்டான்.

அனுமன் மூலம் சீதை இருக்கும் இடத்தை அறிந்து கொண்ட இராமன், வானரப் படைகளின் உதவியோடு இலங்கைக்குச் சென்றான். இராவணனின் தம்பியான விபீடணன், சீதையை விட்டுவிடுமாறு இராவணனுக்கு ஆலோசனை கூறியும் அவன் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டான். நியாயத்துக்கு எதிராக இராவணனுக்கு உதவ விரும்பாத விபீடணன் இராமனை அடைந்து அவனுக்கு உதவினான். இடம்பெற்ற போரில் இராவணனும், அவனது கூட்டத்தினரும் மாண்டனர். இராமன் விபீடணனை இலங்கை அரசனாக முடி சூட்டினான். இராமன் சீதையை மீட்டான். எனினும், சீதையின் தூய்மையை நிரூபிப்பதற்காக சீதை தீக்குள் புகுந்து வெளிவர வேண்டியதாயிற்று. இவ்வேளையில் இராமனுக்கு விதிக்கப்பட்ட நாடுகடந்த வாழ்க்கைக் காலமான பதினான்கு ஆண்டுகள் முடிவடைந்தன. இராமன், சீதை, இலட்சுமணன் ஆகியோர் அயோத்திக்கு மீண்டனர். இராமன் அரசனாக முடிசூட்டிக் கொண்டான்.

ஒருநாள் அயோத்தியின் குடிமக்களில் ஒருவன், சீதை இராவணனால் கடத்திச் செல்லப்பட்டதைக் குறித்து ஐயுற்றுப் பேசியதை அறிந்த இராமன் சீதையைக் காட்டுக்கு அனுப்பினான். அப்போது சீதை கருவுற்றிருந்தாள். காட்டில் சீதை வால்மீகி முனிவரின் ஆதரவில் வாழ்ந்து வந்தாள். அவளுக்கு லவன், குசன் என இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்தனர். அவர்கள் வால்மீகியின் ஆசிரமத்திலேயே வளர்ந்தனர்.

அக்காலத்தில் இராமன் தனது பேரரசை மேலும் பெருப்பிக்கும் நோக்குடன் அசுவமேத யாகம் எனப்பட்ட யாகத்தை ஒழுங்கு செய்தான். இந்த யாகத்தைச் செய்யும் ஒரு மன்னன் ஒரு குதிரையைப் பெரும் படையோடு அண்டை நாடுகளுக்கு அனுப்புவான். அவனுடன் போரிடமுடியாமல் அடிபணிய விரும்பும் அரசர்கள் அக் குதிரையைத் தமது நாட்டில் உலவ விடுவர். அப்படியின்றி அவ்வரசன் அடிபணிய விரும்பாவிட்டால் குதிரையைப் பிடித்துக் கட்டிவிடுவான். குதிரையை அனுப்பிய அரசன் போர் புரிந்து குறிப்பிட்ட நாட்டைத் தோற்கடிக்கவேண்டும். இராமன் அனுப்பிய குதிரை அவனது பிள்ளைகளான லவனும், குசனும் வாழ்ந்த காட்டில் உலவியபோது அவர்கள் அதனைப் பிடித்துக் கட்டியதுடன், அதனுடன் வந்த படையினருடன் மோதி அவர்களைத் தோற்கடித்தனர். இதைக் கேள்வியுற்ற இராமன் காட்டுக்கு வந்து தனது பிள்ளைகளையும், சீதையையும் கண்டான். சில காலத்தின் பின் புவியில் தனது காலம் முடிவுக்கு வருவதை சீதை உணர்ந்து தன்னை ஏற்றுக்கொள்ளும்படி புவியன்னையை வேண்டினாள். சீதையின் வேண்டுகோளுக்கு இணங்கிப் புவி பிளந்து அவளை ஏற்றுக்கொண்டது. லவனும், குசனும் அயோத்திக்குச் சென்று தந்தையுடன் வாழ்ந்தனர்.

சுந்தர காண்டம்

சுந்தர காண்டம் வால்மீகி ராமாயணத்தின் இதயமாகவும், அனுமனின் சாகசங்களைப் பற்றிய விரிவான, தெளிவான கதையயும் கொண்டுள்ளது. சீதையைப்பற்றி அறிந்த பிறகு, அனுமன் ஒரு அழகிய வடிவத்தை எடுத்துக் கொண்டு, கடலுக்கு குறுக்கே இலங்கைக்கு பறந்து செல்கிறார். வழியில் அவர் தனது திறன்களை சோதிக்க ஒரு பேய் வடிவத்தில் வரும் ஒரு கந்தர்வ கன்னியை எதிர்கொள்வது போன்ற பல சவால்களை சந்திக்கிறார். அவர் மைனாகுடு என்ற மலையை எதிர்கொள்கிறார். அவர் அனுமனுக்கு ஓய்வு அளித்து அவருக்கு

உதவுகிறார். சீதாவைத் தேடுவதற்கு இன்னும் சிறிது காலமே மீதமுள்ளதால் அனுமன் அவருடைய உதவியை மறுக்கிறார்.

இலங்கைக்குள் நுழைந்த பிறகு, இலங்கை முழுவதையும் பாதுகாக்கும் லங்கினி என்ற அரக்கியை காண்கிறார் அனுமன் அவளுடன் சண்டையிட்டு இலங்கைக்குள் செல்வதற்காக அவளை அடிபணியச் செய்கிறார். இந்த செயல்பாட்டில், லங்கினியை தோற்கடித்தால் இலங்கையின் முடிவு நெருங்குகிறது என்று அர்த்தமாகும் என்று கடவுளர்களிடமிருந்து பெற்ற எச்சரிக்கையை லங்கினி எடுத்துரைக்கிறாள். இங்கே, அனுமன் அரக்கர்களின் நாட்டை ஆராய்ந்து இராவணனை வேவு பார்க்கிறார். அவர் சீதையை அசோக வனத்தில் காண்கிறார். அங்கு சீதையை தன்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு ராவணன் அச்சுறுத்துகிறான்.

நம்பிக்கையின் அடையாளமாக ராமரின் மோதிரத்தை கொடுத்து அனுமன் சீதாவுக்கு உறுதியளிக்கிறார். அவர் சீதையை மீண்டும் ராமரிடம் கொண்டு செல்ல முன்வருகிறார் இருப்பினும், அவள் மறுத்து, அது தர்மம் அல்ல என்று கூறி, அனுமன் அவளை ராமரிடம் அழைத்துச் சென்றால் ராமாயணத்திற்கு முக்கியத்துவம் இருக்காது என்று கூறுகிறாள் - ”ராமர் இல்லாதபோது ராவணன் சீதையை வலுக்கட்டாயமாக சுமந்து சென்றான். ராவணன் இல்லாதபோது, அனுமன் சீதையை மீண்டும் ராமனிடம் கொண்டு சென்றான் ” என்ற அவப்பெயர் வராதிருக்கவும் தான் கடத்தப்பட்ட அவமானத்திற்கு பழிவாங்கவும் இராமரே வர வேண்டும் என்று சீதை கூறுகிறாள்.

அனுமன் பின்னர் இலங்கையில் மரங்களையும் கட்டிடங்களையும் அழித்து இராவணனின் வீரர்களைக் கொல்வதன் மூலம் அழிவை ஏற்படுத்துகிறார். ராவணனின் வீரர்கள் தன்னைப் பிடித்து ராவணனிடம் அழைத்துச் செல்ல அனுமதிக்கிறார். சீதையை விடுவிக்க ராவணனுக்கு தைரியமான சொற்பொழிவு செய்கிறார். ராவணனால் அவரது வால் தீ வைக்கப்பட்டுள்ளது, ஆனால் அவர் பிணைப்புகளில் இருந்து தப்பித்து கூரையிலிருந்து கூரைக்குத் தாவுகிறார். ராவணனின் கோட்டைக்கு தீ வைத்து விட்டு தீவில் இருந்து பறந்து செல்கிறார். மகிழ்ச்சியான செய்திகளுடன் கிஷ்கிந்தாவுக்குத் திரும்புகிறார்.

உத்தர காண்டம்

கம்ப இராமாயணத்தின் இறுதிக் காண்டமாக உத்தர காண்டம், ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்டது.

கம்பர் தம் இராமாயணத்தைப் பால காண்டம் முதல் யுத்த காண்டம் முடிய உள்ள ஆறு காண்டங்களில் நிறைவு செய்துள்ளார். யுத்த காண்டத்தின் நிறைவில், விடைகொடுத்த படலம் என்றொரு படலம் உள்ளது. அதில் சுக்ரீவன், அனுமன், வீடணன் மற்றும் வானரர் முதலியோர்க்கு பரிசில்கள் கொடுத்து இராமன் விடை தந்து அனுப்பிய செய்தி கூறப்பட்டுள்ளது.

அதன் பின்பு இராமர் பல்லாண்டு மனுநெறி தவறாமல் ஆட்சி செய்ததை விளக்கி, இராமாயணத்தைக் கம்பர் நிறைவு செய்து விட்டார். அதன்பின் நிகழ்வுகளாக, சீதை தொடர்பான வதந்தியினை குடிமகன் மூலம் கேட்ட இராமர், ஐந்து மாத கர்ப்பிணியான சீதையை, இலக்குமணனைக் கொண்டு காட்டில் விட்டுவிடுதல், காட்டில் சீதைக்கு வால்மீகி ஆசிரமத்தில் லவன் மற்றும் குசன் எனும் இரட்டைக் குழந்தைகள் பிறப்பதும், இராமர் செய்த அசுவமேத யாகக் குதிரைகளை லவ-குசர்கள் கட்டி வைத்தல், சத்துருக்கனன், பரதன் மற்றும் இலக்குமணராலும் வெல்ல முடியாத இலவ-குசர்களை, இராமரே நேரில் வந்து பார்த்து போரிடுவதும், பின்னர் லவ-குசர்களை அயோத்திக்கு அழைத்து செல்லுதலும், பூமி பிளந்து சீதை பூமாதேவியுடன் சேர்தல் போன்ற செய்திகளை, தான் எழுதிய உத்தர காண்டம் மூலம் ஒட்டக்கூத்தர் வடிவம் கொடுத்துள்ளார்.

இறையியல் முக்கியத்துவம்

இராமாயணத்தின் முக்கிய கதை மாந்தனான இராமன், இந்துக்களின் முதன்மைக் கடவுளரில் ஒருவர். மும்மூர்த்திகளுள் ஒருவரான திருமாலின் 10 அவதாரங்களுள் ஒருவராகப் போற்றி வழிபடப்படுபவர். உலகில் தீமையை ஒழித்து அறத்தை நிலைநாட்டுவதற்காக திருமால் இப் புவியில் தோன்றியதாக இந்துக்கள் நம்புகின்றனர். ஆண்டு தோறும் பலர் இராமர் பயணம் செய்த பாதையைப் பின்பற்றி யாத்திரை செய்கின்றனர். இந்த இதிகாசம், ஒரு இலக்கியமாக மட்டுமன்றி, இந்து சமயத்துடன் இரண்டறக் கலந்துள்ளது. இதனைப் படிப்பவர்களதும், படிக்கக் கேட்பவர்களதும் பாவங்கள் நீங்கி, இறைவன் அருள் கிட்டும் என்பது இந்துக்களின் நம்பிக்கை.

மகாபாரதத்தில் இராமாயாணம்

மகாபாரத காவியத்தின் வன பருவத்தில் இராமாயண நிகழ்வுகளை மார்க்கண்டேய முனிவர் தருமனுக்கு எடுத்துரைத்தார்.

தமிழ் இலக்கியங்களில் இராமாயணம் பற்றிய குறிப்பு

பொ.ஊ. 12 ஆம் நூற்றாண்டில் கம்பர், கம்பராமாயணத்தை தமிழில் எழுதுவதற்கு முன்பே, இராமாயணக் கதையைப் பற்றிய பல பழங்கால குறிப்புகள் தமிழ் இலக்கியங்களில் உள்ளது.ஜ13ஸ இது பொது சகாப்தத்திற்கு முன்பே தமிழ் நிலங்களில் நன்கு அறியப்பட்ட கதை என்பதைக் குறிக்கிறது. இக்கதை பற்றிய குறிப்புகள் அகநானூறு (பொ.ஊ.மு. 1ஆம் நூற்றாண்டு)ஜ14ஸ மற்றும் புறநானூறு (பொ.ஊ.மு. 300 தேதியிட்டது),ஜ15ஸஜ15ஸ சிலப்பதிகாரத்தின் இரட்டைக் காப்பியங்கள் (பொ.ஊ. 2ஆம் நூற்றாண்டு) மற்றும் மணிமேகலை (காண்டோஸ் 5, 17 மற்றும் 18), மற்றும் குலசேகர ஆழ்வார், திருமங்கை ஆழ்வார், ஆண்டாள் மற்றும் நம்மாழ்வார் ஆகியோரின் ஆழ்வார் இலக்கியங்கள் (பொ.ஊ. 5 மற்றும் 10 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்டவை) ஆகியவற்றில் காணப்படுகின்றன. நாயன்மார்களின் பாடல்களில் கூட இராவணன் மற்றும் சிவபெருமான் மீது அவன் கொண்ட பக்தி பற்றிய குறிப்புகள் உள்ளன.

தமிழில் இராமாயணம்

இராமாயண நூல்களின் பட்டியல்

. கம்ப இராமாயணம்

. தக்கை இராமாயணம்

. குயில் இராமாயணம்

. இராமாயண அகவல்

. கோகில இராமாயணம்

. அமிர்த இராமாயணம்

. இராமாயண கீர்த்தனைகள்

. பால இராமாயணம்

ஆழ்வார்கள்

ஆழ்வார்கள் (யுடஎயசள) இந்து சமய தெய்வமாகிய திருமாலைப் போற்றித் தமிழ்ச் செய்யுட்களால் பாடியவர்கள் ஆவர். தென்மொழியாம் தமிழ் மொழியில் வைணவ இலக்கியங்களை வளர்த்தவர்கள் பரம்பரையில், நாலாயிர திவ்வியப் பிரபந்தம் (அல்லது) ஆழ்வார் அருளிச்செயல் என்னும் தொகுப்பு நூலில் இடம் பெற்றுள்ள பாடல்களைப் பாடிய ஆழ்வார்கள் 12 பேர்.

அவர்களுள், இறைவனை இறைவனாகக் காணாது, இறைவனோடு உறவுமுறையில் வாழ்ந்ததால் ஆண்டாளையும், இறைவனைப் பாடாது ஆசானைப் பாடினார் என்பதால் மதுரகவியாழ்வாரையும் வேறு வரிசையில் தொகுத்து, ஆழ்வார்கள் பதின்மர் 10 பேர் மட்டுமே எனக் காட்டுவாரும் உண்டு.

இவர்கள் பொ.ஊ. 5 முதல் 9 நூற்றாண்டுக் கால அளவில் வாழ்ந்தவர்கள்.

சொற்பொருள்

மரபுப்படி இறைவனின் குணங்களில் ஆழ்ந்து ஈடுபடுபவர்களை ஆழ்வார்கள் என்று சொற்பொருள் கூறுவர். ஆயினும் இந்தச் சொல் ஆள்வார் என்றும் வழங்கினதாகவும் பிறகு ஆழ்வார் என்று ஆனதாகவும் எஸ். பழனியப்பன் என்ற இந்தியவியல்∴மொழியியல் ஆய்வாளர் பதிப்பித்துள்ளார்.

வரலாறு

பொ.ஊ. 5-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வைணவம் புத்துயிர் பெறத் தொடங்கியது. திருமால் அழகிலும் குணத்திலும் ஆழ்ந்து நெஞ்சுருக ஆழ்வார்கள் பாடிய ‘4000 பாடல்களையும் (பாசுரங்கள்) 10-ஆம் நூற்றாண்டில் நாதமுனி என்பவர் திவ்விய பிரபந்தம் (அ) அருளிச்செயல் என்னும் பெயரில் நூலாகத் தொகுத்தார்.

பன்னிரு ஆழ்வார்களின் நூல்களே வைணவப் பக்தி இலக்கியங்களாகும். நம்மாழ்வாரின் திருவாய்மொழி, தமிழ் வேதம்∴ திராவிட வேதம் என்றும் போற்றப்படுகின்றது. திருவாய்மொழிக்கு உருகாதார் ஒருவாய்மொழிக்கும் உருகார் என்ற சிறப்பும் உண்டு.

பன்னிரு ஆழ்வார்கள்

1. பொய்கையாழ்வார்
2. பூதத்தாழ்வார்
3. பேயாழ்வார்
4. திருமழிசையாழ்வார்
5. நம்மாழ்வார்
6. மதுரகவி ஆழ்வார்
7. குலசேகர ஆழ்வார்
8. பெரியாழ்வார்
9. ஆண்டாள்
10. தொண்டரடிப்பொடியாழ்வார்
11. திருப்பாணாழ்வார்
12. திருமங்கையாழ்வார்

நாடு

சேர நாடு—குலசேகர ஆழ்வார்

சோழ நாடு—திருமங்கை ஆழ்வார், திருப்பாணாழ்வார், தொண்டரடிப்பொடி ஆழ்வார்

பாண்டிய நாடு—நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், மதுரகவி ஆழ்வார்

தொண்டை நாடு—பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை ஆழ்வார்.

பொய்கையாழ்வார்

வைணவ பன்னிரு ஆழ்வார்களுள் முதல் ஆழ்வார்

பொய்கையாழ்வார் என்பவர் வைணவ நெறியைப் பின்பற்றிப் பக்தியில் சிறந்து விளங்கிய பன்னிரு ஆழ்வார்களுள் முதலாழ்வார் ஆவார். இவரால் அந்தாதியாகப் பாடப்பட்ட நூறு பாடல்கள் முதல் திருவந்தாதி எனப்படுகின்றது. முதன்முதலில் விஷ்ணுவின் பத்து அவதாரங்களையும் பாடியவர்.

பிறப்பு

இவர் காஞ்சிபுரத்தில் ஐப்பசி மாதம் திருவோணம் நட்சத்திரத்தில் திருவெக்கா எனும் பகுதியிலுள்ள சொன்னவண்ணம் செய்த பெருமாள் கோவிலில் உள்ள பொய்கையில் பிறந்தார். காஞ்சிபுரத்தில் பொற்றாமரைப் பொய்கையில் தோன்றியதால் பொய்கையாழ்வார் எனப் பெயர் பெற்றார். சில ஆழ்வார்கள் திருமாலின் கையில் உள்ள ஆறு ஆயுதங்களில் ஒன்றின் அம்சமாகப் பிறந்தவர்கள் என்பது வைணவ நம்பிக்கை. இதன்படி பொய்கையாழ்வார் பாஞ்சசன்யம் எனப்படும் புனித சங்கின் அம்சம் ஆவார்.

முதலாழ்வார்கள்

இவர் பேயாழ்வார், பூதத்தாழ்வார் எனும் ஆழ்வார்களுடன் ஒரே காலத்தில் வாழ்ந்தவராவார். இவர்கள் மூவரும் ஞான, பக்தி, வைராக்கியங்கள் மிக்க துறவறம் பூண்டு, ஆண்டவனின் நினைவிலேயே உருகி உள்ளம் கனியப் பாடியவர்கள். உண்டியே உடையே என உகந்தோடும் மக்களோடு கலவாமல் ஒரு நாள் இருந்த இடத்தில் ஒரு நாள் ஒருவரை ஒருவர் அறியாமல் தனித்தனியே சஞ்சரித்துக்கொண்டிருந்தனர்.

இறைவனின் நாடகம்

வைணவ இலக்கியங்களின்படி, திருக்கோவலூரில், ஒரு வீட்டின் இடைகழியில் மழை பெய்யும் ஒரு நாள் இரவில் ஒருங்கிணைத்தான். எவ்வாறெனில், தனித்தனியாகத் தலயாத்திரை மேற்கொண்ட மூன்று ஆழ்வார்களும் திருக்கோவலூரில் ஒரே சமயத்தில் நுழைய பெருமழை உண்டானது. மழைக்கு ஒதுங்கும் பொருட்டு ஒரு குடிசையை நெருங்க அவ்விடம் ”ஒருவர் படுக்கலாம், இருவர் அமரலாம், மூவர் நிற்கலாம்” எனும் அளவில் இருக்க இம்மூவரும் அங்குச் சிறிது நின்றுகொண்டிருக்க நான்காமவராக இருந்து இருளில் நெருக்கத்தை உண்டுபண்ணினான் இறைவன்.

நெருக்கத்தின் காரணத்தை அறிய வேறு விளக்கின்மையால், பொய்கையார் பூமியாகிற தகழியில் (அகல்) கடல்நீரை நெய்யாகக் கொண்டு சூரியனை விளக்காக ஏற்றினார். பூதத்தார் அன்பாகிய தகழியில் (அகல்) ஆர்வத்தை நெய்யாகக் கொண்டு சிந்தையாகிய திரியில் ஞானவிளக்கை ஏற்றினார். இவ்விரண்டின் ஒளியால் இருள் அகல, நெருக்கத்திற்குக் காரணமான இறைப்பொருளைக் கண்டார். பின் மூவரும் அப்பொருளின் சொரூபத்தை அறிந்து அனுபவித்து ஆனந்தம் எய்தினர்.இவ்வரலாற்றின் உட்பொருள் யாதெனில் பொய்கையாரின் செயல் புற இருள் நீக்கியது, பூதத்தார் செயல் அக இருளை நீக்கியது. அக இருள், புற

இருள் இவ்விரண்டும் நீங்கினால் பரமனைக் காணலாம். ஆக முதல் இரண்டு ஆழ்வார்கள் செயல்கள் அக, புற இருள் நீக்க பேயாழ்வார் இறைவனின் வடிவழகை அன்பெனும் வெளிச்சத்தில் கண்டார் என்பதாம்.

மூன்று திருவந்தாதிகள்

அவ்வானந்தம் உள்ளடங்காமல் மேலே வழிந்து செய்யுள் வடிவமாக வெளி வரலாயிற்று. அச்செய்யுள் தொகுதியே முறையே முதல் திருவந்தாதி (பொய்கையாருடையது),

இரண்டாம் திருவந்தாதி (பூதத்தாருடையது),

மூன்றாம் திருவந்தாதி (பேயாருடையது) எனப்பெயர் பெற்றன. இறைவனின் நாடகம் உண்மையில் நடந்தது என்று இந்து சமயத்தார் நம்புவதற்கு இம்மூன்று திருவந்தாதிகளிலுள்ள பாடல்களே முக்கிய சான்றுகளாகின்றன.

பூதத்தாழ்வார்

பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர்

பூதத்தாழ்வார் வைணவ நெறியைப் பின்பற்றிப் பக்தியில் சிறந்து விளங்கிய பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர்.ஜ1ஸஜ2ஸ முதல் ஆழ்வார்கள் எனப் போற்றப்பட்ட மூன்று ஆழ்வார்களுள் ஒருவராக விளங்கினார். மாமல்லபுரத்தில் பிறந்த இவர் வைணவ நூல்களின் தொகுப்பான நாலாயிர திவ்வியப் பிரபந்தங்களில் உள்ள இரண்டாம் திருவந்தாதியைப் பாடியுள்ளார். இது நூறு வெண்பாக்களால் ஆனது.

பிறப்பு - மாமல்லபுரம், தமிழ்நாடு

தத்துவம் - விசிஷ்டாத்வைதம்

குரு - சேனை முதலியார்

இலக்கிய பணிகள் - இரண்டாம் திருவந்தாதி

பூதத்தாழ்வார் மாமல்லபுரத்தில் பிறந்த இடமாகக் கருதப்படும் இடத்துக்கு அண்மையில் உள்ள தலசயனப் பெருமாள் கோயில். இது குறித்து அறிவித்தல் பலகையில் எழுதப்பட்டிருப்பதைக் காண்க.

அவதாரத்தலம்

மாமல்லபுரத்திலுள்ள தலசயனப் பெருமாள் கோயிலை அண்டிய பகுதியிலேயே இவர் பிறந்ததாகக் கருதப்படுகிறது. இக் கோயிலின் முன்பு இதைக் குறித்த மண்டபம் ஒன்றும் இருந்ததாகத் தெரிகிறது. இக் கோயிலின் வெளிச் சுவரிலே அதனைப் பூதத்தாழ்வாரின் அவதாரத்தலம் எனக் குறிப்பிடும் அறிவிப்புப் பலகை ஒன்று பொருத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

கௌமோதகி அம்சம்

திருமாலின் கையில் உள்ள ஐந்து ஆயுதங்களில் ஒன்றான கௌமோதகி என்னும் பெயருடைய கதாயுதத்தின் அம்சமாக இவர் பிறந்தார் என வைணவம் நம்புகின்றது. திருமாலின் மீது இவர் கொண்ட பக்தியைக் காட்டும் இவரது பாடல்களிலே இவருடைய தமிழ்ப் பற்றும் புலப்படுகின்றது.

முதலாழ்வார்கள்

இவர் பொய்கையாழ்வார், பேயாழ்வார் எனும் ஆழ்வார்களுடன் ஒரே காலத்தில் வாழ்ந்தவராவார்.இவர்கள் மூவரும் ஞான, பக்தி, வைராக்கியங்கள் மிக்க துறவறம் பூண்டு,

ஆண்டவனின் நினைவிலேயே உருகி உள்ளம் கனியப் பாடியவர்கள். உண்டியே உடையே என உகந்தோடும் மக்களோடு கலவாமல் ஒரு நாள் இருந்த இடத்தில் ஒரு நாள் இராமல் ஒருவரை ஒருவர் அறியாமல் தனித்தனியே சஞ்சரித்துக்கொண்டிருந்தனர்.

இறைவனின் நாடகம்

இந்து சமயத்தாரால், குறிப்பாக வைணவப் பிரிவினரால், நம்பிக்கையுடன் போற்றப்படும் இவ்வரலாறு சுவை மிகுந்தது. இறைவன், இவர்களால் உலகை உய்விக்க கருதித் திருக்கோவலூரில், ஒரு வீட்டின் இடைகழியில் மழை பெய்யும் ஒரு நாள் இரவில் ஒருங்கிணைத்தான். எவ்வாறெனில், தனித்தனியாகத் தலயாத்திரை மேற்கொண்ட மூன்று ஆழ்வார்களும் திருக்கோவலூரில் ஒரே சமயத்தில் நுழைய பெருமழை உண்டானது. மழைக்கு ஒதுங்கும் பொருட்டு ஒரு குடிசையை நெருங்க அவ்விடம் ஒருவர் படுக்கலாம், இருவர் அமரலாம், மூவர் நிற்கலாம் எனும் அளவில் இருக்க இம்மூவரும் அங்குச் சிறிது நின்றுகொண்டிருக்க நான்காமவராக இருந்து இருளில் நெருக்கத்தை உண்டுபண்ணினான் இறைவன்.

நெருக்கத்தின் காரணத்தை அறிய வேறு விளக்கின்மையால், பொய்கையார் பூமியாகிற தகழியில் (அகல் விளக்கு) கடல்நீரை நெய்யாகக் கொண்டு சூரியனை விளக்காக ஏற்றினார். பூதத்தார் அன்பாகிய தகழியில் (அகல் விளக்கு) ஆர்வத்தை நெய்யாகக் கொண்டு சிந்தையாகிய திரியில் ஞானவிளக்கை ஏற்றினார். இவ்விரண்டின் ஒளியால் இருள் அகல, நெருக்கத்திற்குக் காரணமான இறைப்பொருளைக் கண்டார். பின் மூவரும் அப்பொருளின் சொரூபத்தை அறிந்து அனுபவித்து ஆனந்தம் எய்தினர். இவ்வரலாற்றின் உட்பொருள் யாதெனில் பொய்கையாரின் செயல் புற இருள் நீக்கியது, பூதத்தார் செயல் அக இருளை நீக்கியது. அக இருள், புற இருள் இவ்விரண்டும் நீங்கினால் பரமனைக் காணலாம். ஆக முதல் இரண்டு ஆழ்வார்கள் செயல்கள் அக, புற இருள் நீக்க பேயாழ்வார் இறைவனின் வடிவழகை அன்பெனும் வெளிச்சத்தில் கண்டார் என்பதாம்.

மூன்று திருவந்தாதிகள்

அவ்வானந்தம் உள்ளடங்காமல் மேலே வழிந்து செய்யுள் வடிவமாக வெளி வரலாயிற்று. அச்செய்யுள் தொகுதியே முறையே முதல் திருவந்தாதி (பொய்கையாருடையது), இரண்டாம் திருவந்தாதி (பூதத்தாருடையது), மூன்றாம் திருவந்தாதி (பேயாருடையது) எனப்பெயர் பெற்றன. இறைவனின் நாடகம் உண்மையில் நடந்தது என்று இந்து சமயத்தார் நம்புவதற்கு இம்மூன்று திருவந்தாதிகளிலுள்ள பாடல்களே முக்கிய சான்றுகளாகின்றன.

ஆழ்வார் மங்களாசாசனம் செய்த திருக்கோவில்கள்

13 திருக்கோவில்களே நாலாயிர திவ்வியப் பிரபந்தில் 30 பாசுரங்களில் பாடிய உள்ளர்·

பேயாழ்வார்

பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர்

பேயாழ்வார் வைணவ நெறியைப் பின்பற்றிப் பக்தியில் சிறந்து விளங்கிய பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர். முதல் ஆழ்வார்கள் எனப்படும் மூன்று ஆழ்வார்களுள் ஒருவர். திருமயிலை என வழங்கிய மயிலாப்பூரைச் சேர்ந்தவர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்கள் எனப்படும் வைணவ நூல்களின் தொகுப்பில் உள்ள மூன்றாம் திருவந்தாதியைப் பாடியவர் இவராவார், இது நூறு வெண்பாக்களைக் கொண்டது.

பிறப்பு - திருமயிலை, சென்னை, தமிழ்நாடு

குரு - சேனை முதலியார்

அம்சம்

சில ஆழ்வார்கள் திருமாலின் கையில் உள்ள ஐந்து ஆயுதங்களில் ஒன்றின் அம்சமாகப் பிறந்தவர்கள் என்று வைணவம் நம்புகின்றது. இதன்படி பேயாழ்வார் நந்தகம் எனப்படும் வாளின் அம்சம் கொண்டவர் என்கின்றனர்.

முதலாழ்வார்கள்

இவர் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் எனும் ஆழ்வார்களுடன் ஒரே காலத்தில் வாழ்ந்தவராவார்.இவர்கள் மூவரும் ஞான, பக்தி, வைராக்கியங்கள் மிக்க துறவறம் பூண்டு, ஆண்டவனின் நினைவிலேயே உருகி உள்ளம் கனியப் பாடியவர்கள். உண்டியே உடையே என உகந்தோடும் மக்களோடு கலவாமல் ஒரு நாள் இருந்த இடத்தில் ஒரு நாள் இராமல் ஒருவரை ஒருவர் அறியாமல் தனித்தனியே சஞ்சரித்துக்கொண்டிருந்தனர்.

இறைவனின் நாடகம்

இந்து சமயத்தாரால், குறிப்பாக வைணவப்பிரிவினரால், நம்பிக்கையுடன் போற்றப்படும் இவ்வரலாறு சுவை மிகுந்தது. இறைவன், இவர்களால் உலகை உய்விக்க கருதித் திருக்கோவலூரில், ஒரு வீட்டின் இடைகழியில் மழை பெய்யும் ஒரு நாள் இரவில் ஒருங்கிணைத்தான். எவ்வாறெனில், தனித்தனியாகத் தலயாத்திரை மேற்கொண்ட மூன்று ஆழ்வார்களும் திருக்கோவலூரில் ஒரே சமயத்தில் நுழைய பெருமழை உண்டானது. மழைக்கு ஒதுங்கும் பொருட்டு ஒரு குடிசையை நெருங்க அவ்விடம் ஒருவர் படுக்கலாம், இருவர் அமரலாம், மூவர் நிற்கலாம் எனும் அளவில் இருக்க இம்மூவரும் அங்குச் சிறிது நின்றுகொண்டிருக்க நான்காமவராக இருந்து இருளில் நெருக்கத்தை உண்டுபண்ணினான் இறைவன்.

நெருக்கத்தின் காரணத்தை அறிய வேறு விளக்கின்மையால், பொய்கையார் பூமியாகிற தகழியில்(அகல்) கடல்நீரை நெய்யாகக் கொண்டு சூரியனை விளக்காக ஏற்றினார். பூதத்தார் அன்பாகிய தகழியில்(அகல்) ஆர்வத்தை நெய்யாகக் கொண்டு சிந்தையாகிய திரியில் ஞானவிளக்கை ஏற்றினார். இவ்விரண்டின் ஒளியால் இருள் அகல, நெருக்கத்திற்குக் காரணமான இறைப்பொருளைக் கண்டார். பின் மூவரும் அப்பொருளின் சொரூபத்தை அறிந்து அனுபவித்து ஆனந்தம் எய்தினர்.இவ்வரலாற்றின் உட்பொருள் யாதெனில் பொய்கையாரின் செயல் புற இருள் நீக்கியது, பூதத்தார் செயல் அக இருளை நீக்கியது. அக இருள், புற இருள் இவ்விரண்டும் நீங்கினால் பரமனைக் காணலாம். ஆக முதல் இரண்டு ஆழ்வார்கள் செயல்கள் அக, புற இருள் நீக்க பேயாழ்வார் இறைவனின் வடிவழகை அன்பெனும் வெளிச்சத்தில் கண்டார் என்பதாம்.

மூன்று திருவந்தாதிகள்

அவ்வானந்தம் உள்ளடங்காமல் மேலே வழிந்து செய்யுள் வடிவமாக வெளி வரலாயிற்று. அச்செய்யுள் தொகுதியே முறையே முதல் திருவந்தாதி (பொய்கையாருடையது), இரண்டாம் திருவந்தாதி (பூதத்தாருடையது), மூன்றாம் திருவந்தாதி (பேயாருடையது) எனப்பெயர் பெற்றன. இறைவனின் நாடகம் உண்மையில் நடந்தது என்று இந்து சமயத்தார் நம்புவதற்கு இம்மூன்று திருவந்தாதிகளிலுள்ள பாடல்களே முக்கிய சான்றுகளாகின்றன.

ஆழ்வார் மங்களாசாசனம் செய்த திருக்கோவில்கள்

1. திருப்பதி
2. திருப்பாற்கடல்

3. திருவேளுக்கை

4. திருவரங்கம்

5. கும்பகோணம் சாரங்கபாணி சுவாமி கோயில்

6. உப்பிலியப்பன் கோயில்

7. திருப்பரமபதம்

8. திருக்கோஷ்டியூர் சௌமியநாராயணப் 9. பெருமாள் கோயில்

10 கள்ளழகர் கோயில், மதுரை

11. காஞ்சி வரதராஜ பெருமாள் கோயில்

12. திருப்பாடகம் பாண்டவதூதப் பெருமாள் திருக்கோயில்

13. திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில்

14. சோளிங்கர் யோகநரசிம்ம பெருமாள் கோவில்

15. அட்டபுயக்கரம் ஆதிகேசவப் பெருமாள் கோயில்.

சைவமும் வைணவமும்

இந்து சமயத்தின் பிரிவுகளான சைவம், வைணவம் என்பவற்றுக்கிடையே போட்டி நிலவிய கால கட்டத்தில், இவ்விரு சமயப் பிரிவுகளிடையே ஒற்றுமை காண விழைந்தவர் பேயாழ்வார் எனக் கருதப்படுகிறார். இவர் பாடிய பாசுரங்களிலே இதற்குச் சான்றுகள் உள்ளன.

எடுத்துக்காட்டாக ஒரு பாசுரம்:

தாழ் சடையும் நீள் முடியும் ஒண் மழுவும் சக்கரமும்,

சூழ் அரவும் பொன் நாணும்தோன்றுமால் --சூழும்

திரண்டு அருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு,

இரண்டு உருவும் ஒன்றாய் இசைந்து.

திருமழிசையாழ்வார்

பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர்

திருமழிசையாழ்வார் வைணவ நெறியைப் பின்பற்றிப் பக்தியில் சிறந்து விளங்கிய பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர். தை மாதம் மக நட்சத்திரத்தில் திருமாலின் ஆயுதங்களுள் ஒன்றான சக்கரத்தின் அம்சமாகத் திருமழிசை என்னும் ஊரில் பிறந்தவர்.

பிறப்பு - திருமழிசை

தத்துவம் - வைணவம்

குரு - சேனை முதலியார்

இலக்கிய பணிகள் - நான்முகன் திருவந்தாதி - குறிப்பிடத்தக்க சீடர்(கள்)

கனிக்கண்ணன்

பிற பெயர்கள்

. பக்திசாரர்

. உறையில் இடாதவர் - வாளினை

. உறையில் இடாத வீரன் எனும் பொருள்பட (இங்கு ஆழ்வாரின் நா வாள் எனப்படுகிறது)

. குடமூக்கிற் பகவர் - என யாப்பருங்கல விருத்திகாரர் குறிப்பது இவரையே என்றும் சொல்லப்படுகிறது.

. திருமழிசையார்

. திருமழிசைபிரான்

பிறப்பின் அற்புதம்

பார்க்கவர் என்னும் முனிவர் திருமழிசையில் யாகம் புரிகையில் அவர் மனைவியார் கருவுற்று பன்னிரண்டு திங்கள் கழித்து, கை, கால், முதலிய உறுப்புகள் இல்லாத ஒரு பிண்டத்தைப் பெற்றெடுத்தார். தம்பதியர் மனம் தளர்ந்து அதனைப் பிரம்புத்தூற்றின் கீழ் விட்டுச் சென்றுவிட்டார்கள். ஆண்டவன் அருளால் அப்பிண்டம் எல்லா உறுப்புகளும் அமையப்பெற்ற ஓர் அழகிய ஆண்குழந்தையாகி அழத் தொடங்கியது. அக்கணம் அவ்வழியே வந்த மகப்பேறு இல்லாத தம்பதிகளான பிரம்புத் தொழில் புரியும் திருவாளன், பங்கயச்செல்வி என்பவர்கள் குழந்தையைக் கண்டெடுத்து வளர்க்க தீர்மானித்தனர். என்ன விந்தை! அக்குழந்தையை அவளே பெற்றாள் என்னும்படி அவள் மார்பில் பால் சுரந்தது. ஆயினும் அப்பாலைக் குழந்தை குடிக்க மறுத்தது. பலநாள் வரை பால் உண்ணாமல் இருந்தும் உடல் சிறிதும் வாடவில்லை.

இவரின் புகழைக் கேள்வியுற்று அருகில் உள்ள சிற்றூரில் இருந்துவந்த வயதான தம்பதியர் அன்புமிக கொடுத்த பாலை உண்ண ஆரம்பித்தார். சிறிதுகாலம் இவ்வாறு செல்கையில் தமக்குப் பால் கொண்டுவந்து தரும் இத்தம்பதிக்கு ஏதேனும் கைமாறு செய்யும் பொருட்டு ஒருநாள் தனக்குக் கொடுத்த பாலில் மீதத்தை அவர்கள் சரிபாதி உண்ணுமாறு செய்தார். இதன் மூலம் இளமை மீண்ட அத்தம்பதிகளுக்குப் பிறந்த ஆண்மகவே பின்னாளில் கணிகண்ணன் எனும் பெயரில் திருமழிசையாருக்கு அணுக்க சீடரானார்.

இவரது பிரபந்தங்கள்

நான்முகன் திருவந்தாதி என்னும் நூறு வெண்பாக்கள் கொண்ட நூலையும் திருச்சந்த விருத்தம் என்னும் 120 விருத்தங்களைக் கொண்ட நூலையும் இயற்றியுள்ளார். இவை இவர் கும்பகோணத்தில் யோகத்தில் ஆழ்ந்திருக்கும் காலத்தில் யோகத்தின் பயனாக வெளிவந்தன. இவை நாலாயிரத்திவ்ய பிரபந்தத்தில் முறையே மூன்றாவதாயிரத்திலும், முதலாயிரத்திலும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவருடைய பிரபந்தங்கள் தான் முதன்முதலில் வேறு தெய்வங்களுக்கு மேலாகத் திருமாலை உயர்வாகச்சொல்லியவை. இவருக்கு முன்தோன்றிய முதலாழ்வார்கள் சமரசப்பான்மையுடன் சிவனையும் உயர்வாகச் சொல்லியவர்கள்.

பரமயோகி

இளமையிலேயே பரஞான முதிர்ச்சி பெற்றுப் பரமயோகியாக விளங்கியவர். உண்மைத் தத்துவம் என்னவென்று அறிய முயன்று சாக்கியம், சமணம், சைவம், நாத்திகம்(வேத மறுப்பு) உட்பட ஒவ்வொரு சமயமாகப் புகுந்து ஆராய்ந்தார். சைவசமயத்தைச் சார்ந்திருக்கும்போதுதான் திருமயிலையில் பேயாழ்வாரை ஆசிரியராகப் பெற்றார். பக்தியில் தலை சிறந்தவராக இவர் விளங்கியதால் பக்திசாரர் என பெயர் பெற்றவராவார்.

சொன்னவண்ணம் செய்த பெருமாள்

திருவெ.ஃகா தலத்தில்(காஞ்சிபுரம்) கணிகண்ணனோடு திருமழிசையார் சிறிதுகாலம் தங்கித் திருவெ.ஃகாவில் குடிகொண்டுள்ள இறையாகிய யதோத்காரிக்குக் கைங்கரியம் செய்துவரலானார்கள். அவ்வாறிருக்கையில் அவர்களின் குடிலைத் தினமும் தூய்மைசெய்துவரும் கைம்மாறு கருதாத வயது முதிர்ந்த பெண்ணையழைத்து ஆசியளிக்க விரும்பினார் ஆழ்வார். "வேண்டுவன கேள் !" என ஆழ்வார் கேட்க, வயது முதிர்வால் ஏற்பட்ட இயலாமையையும் அதனால் தன்னுடைய சேவை முழுமையடையாமல் இருப்பதையும் கூற என்றும் இளமையாக இருக்கும்படி வரம் நல்கினார் ஆழ்வார். என்றும் யவனமும்,ஈடில்லா எழிலும் பெற்ற அப்பெண்ணைக் கச்சிப்பதியில் அரசுபுரிந்த பல்லவராயன் எனும் அரசன் விரும்பி மணம்புரிந்தான்.

பன்னாட்கள் கழிந்தும் மாறாத தன் மனையாளின் யவனத்தின் காரணம் வினவ, அப்பெண் ஆழ்வாரின் புகழை எடுத்துரைத்தாள். அரசன் ஆழ்வாரின் சீடரான கணிகண்ணனிடம் தன் விருப்பத்தைச் சொல்ல, ஆழ்வார் ஒருநாளும் அரசனின் இவ்வற்ப ஆசைக்கு அருளமாட்டார் என்று பதிலளிக்க, குறைந்தபட்சம் தன்னை ஏற்றிக் கவிதையாவது பாடுமாறு கணிகண்ணனை வேண்ட "அவர் நாராயணனையன்றி எந்த நரனையும் பாடேன்" எனக் கூறித் திருமாலைப் பாடினார். கோபமுற்ற அரசன் கணிகண்ணனை நகரைவிட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டான். யாவும் கேள்வியுற்ற அவருடைய குரவர் திருமழிசைப்பிரான், "உம்முடன் நானும் வருவேன்" என்று சொன்னதோடு மட்டுமல்லாமல் கச்சிப்பதிக்கோவிலுக்குச்சென்று ஆண்டவனை நோக்கி,

கணிகண்ணன் போகின்றான் காமருபூங்கச்சி

மணிவண்ணா நீ கிடக்கவேண்டா - துணிவுடைய

செந்நாப்புலவனும் போகின்றேன் நீயுமுன்றன்

பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்

என்று விண்ணப்பம் செய்தார். அப்பெருமானும் அப்படியே செய்து திருமழிசைப்பிரானைத் தொடர்ந்து சென்றார். இதை மறுநாள் அறிந்த அரசன் வருத்தமுற்றுக் கணிகண்ணனைத் தேடிச்சென்று அவரையும் அவர் குரவரையும் கச்சிப்பதிக்குத் திரும்பும்படி வேண்டிக் கொண்டனர்.

கணிகண்ணன் திருமழிசைப் பிரானை வேண்ட அவரும் ஆண்டவனை நோக்கி,

கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங்கச்சி

மணிவண்ணா நீ கிடக்கவேண்டும் - துணிவுடைய

செந்நாப்புலவனும் போக்கொழிந்தேன் நீயுமுன்றன்

பைந்நாகப் பாய்படுத்துக் கொள்.

என்று வேண்ட திருமகள்நாதனும் அவ்வண்ணமே செய்தான் என்பது வரலாறு.அவ்வாறு அவர்கள் ஒருநாள் தங்கியிருந்த இடம் "ஓர் இரவு இருக்கை" என்று அழைக்கப்பட்டு இன்று மருவி "ஓரிக்கை" என அழைக்கப்பட்டுவருகிறது.

நம்மாழ்வார் (ஆழ்வார்)

ஆழ்வார்களின் தலைவர்

நம்மாழ்வார் (ஆங்கிலம்: யேஅஅயடஎயச) வைணவ நெறியைப் பின்பற்றிப் பக்தியில் சிறந்து விளங்கிய பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர். இவர் "மாறன் சடகோபன்" என்ற பெயரில் தமிழ்நாட்டில், தூத்துக்குடி மாவட்டம் ஆழ்வார் திருநகரியில் பிறந்தார். நான்கு வேதங்களையே தீந்தமிழில் பாடியதால் "வேதம் தமிழ் செய்த மாறன்" என்றே புகழப்படுகிறார். கம்பர் இயற்றிய "சடகோபர் அந்தாதி" எனும் நூலின் தலைவனும் இச்சடகோபனே ஆவார்.

பிறப்பு - வைகாசி விசாகம்

ஆழ்வார் திருநகரி

தத்துவம் - விசிஷ்டாத்வைதம்

குரு - சேனை முதலியார்

இலக்கிய பணிகள் - திருவிருத்தம், திருவாசிரியம்,

பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி

குறிப்பிடத்தக்க சீடர்(கள்) - மதுரகவியாழ்வார், நாதமுனி

வரலாறு

திருநெல்வேலி சீமையில் தாமிரபரணி கரையிலுள்ள திருக்குருகூர் என்னும் ஊரில் மாறன்காரியார் மற்றும் சேர நாட்டு திருவெண்பரிசாரத்தை ஆண்ட மன்னனின் மகளான உடைய நங்கைக்கு மகனாராக நம்மாழ்வார் கலி பிறந்த 43-ஆவது நாளில் பிறந்தார்.ஜ4ஸ இவர் பாண்டிய மரபினர் ஆதலால் மாறன் (இயற்கைக்கு மாறுபட்டவன்) என்ற இயற்பெயரையும் மாயையை உருவாக்கும் ”சட” எனும் நாடியை விஷ்வக்சேனரின் அம்சமாகப் பிறந்த இவர் வென்றதால் ”சடகோபன்” என்றும் மாறன் சடகோபன் என அழைக்கப்பட்டார்.

யானையை அடக்கும் அங்குசம் போலப் பரன் ஆகிய திருமாலைத் தன் அன்பினால் கட்டியமையால் ”பராங்குசன்” என்றும், தலைவியாகத் தன்னை வரித்துக் கொண்டு பாடும்போது ”பராங்குசநாயகி” என்றும் அழைக்கப்படுகிறார்.

பதினாறு ஆண்டுகள் திருக்குருகூர் நம்பி கோவிலின் புளிய மரத்தின் அடியில் எவ்வித சலனமும் இல்லாமல் தவம் செய்து வந்தார். வடதிசை யாத்திரை மேற்கொண்டிருந்த மதுரகவி என்பவர் அயோத்தியில் இருந்தபோது தெற்குத் திசையில் ஓர் ஒளி தெரிவதைக் கண்டு அதனை அடைய தென்திசை நோக்கிப் பயணித்தார். மாறனிடமிருந்தே அவ்வொளி வருவதை அறிந்து அவரைச் சிறு கல் கொண்டு எறிந்து விழிக்க வைத்தார். சடகோபனின் ஞானத்தாலும், பக்தியாலும் கவரப்பெற்று அவருக்கே அடிமை செய்தார் என்பது வரலாறு. மாறன் கண்விழித்த உடன் மதுரகவி ஆழ்வார் கேட்ட ”செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?” கேள்விக்கு ”அத்தைத் தின்று அங்கே கிடக்கும்” என்று பதில் அளித்தார் நம்மாழ்வார்.

நூல்கள்

நம்மாழ்வார் இயற்றிய பாசுர நூல்கள் நான்கு: திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி திருவாய்மொழி இவை ரிக், யசுர், அதர்வண மற்றும் சாம வேதத்தின் சாரமாக அமைந்திருப்பதாகப் பெரியோர்கள் சொல்வார்கள். இந்தத் திருவாய்மொழியில் 1102 பாசுரங்களும், திருவிருத்தம் நூலில் 100 பாசுரங்களும், திருவாசிரியம் நூலில் 8 பாசுரங்களும் பெரிய திருவந்தாதி நூலில் 87 பாசுரங்களும் என நான்கு பிரபந்தங்களில் ஆயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்றாறு பாசுரங்களை இசைத்துள்ளார்.

பிறபெயர்கள்

கீழ்கண்ட 35 பெயர்கள் அனைத்தும் நம்மாழ்வாரின் பிறபெயர்களாகும்

சடகோபன்

மாறன்

காரிமாறன்

பராங்குசன்

வேதம் தமிழ் செய்த மாறன்

வகுளாபரணன்

குருகைப்பிரான்

குருகூர் நம்பி

திருவாய்மொழி பெருமாள்

பெருநல்துறைவன்

குமரி துறைவன்

பவரோக பண்டிதன்

முனி வேந்து

பரப்ரம்ம யோகி

நாவலன் பெருமாள்

ஞான தேசிகன்

ஞான பிரான்

தொண்டர் பிரான்

நாவீரர்

திருநாவீறு உடையபிரான்

உதய பாஸ்கரர்

வகுள பூஷண பாஸ்கரர்

ஞானத் தமிழுக்கு அரசு

ஞானத் தமிழ் கடல்

மெய் ஞானக் கவி

தெய்வ ஞானக் கவி

தெய்வ ஞான செம்மல்

நாவலர் பெருமாள்

பாவலர் தம்பிரான்

வினவாது உணர்ந்த விரகர்

குழந்தை முனி

ஸ்ரீவைணவக் குலபதி

பிரபன்ன ஜன கூடஸ்தர்

மணிவல்லி

பெரியன்

கண்ணிநுண்சிறுத்தாம்பு

கண்ணிநுண்சிறுத்தாம்பு, வைணவ சமயத்தில் நம்மாழ்வாரைப் போற்றி மதுரகவியாழ்வாரால் இயற்றப்பட்ட நூலாகும். இந்நூல் 11 பாசுரங்களைக் கொண்டது. மதுரகவியாழ்வாரால் நம்மாழ்வாரை வணங்கிப் பாடப்பட்ட இந்நூல் நாலாயிர திவ்யபிரபந்தம் தொகுப்பில் முதலாயிரம் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

நம்மாழ்வார் (ஆழ்வார்)

ஆழ்வார்களின் தலைவர்

நம்மாழ்வார் வைணவ நெறியைப் பின்பற்றிப் பக்தியில் சிறந்து விளங்கிய பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர். இவர் “மாறன் சடகோபன்“ என்ற பெயரில் தமிழ்நாட்டில், தூத்துக்குடி மாவட்டம் ஆழ்வார் திருநகரியில் பிறந்தார். நான்கு வேதங்களையே தீந்தமிழில் பாடியதால் ”வேதம் தமிழ் செய்த மாறன்” என்றே புகழப்படுகிறார். கம்பர் இயற்றிய ”சடகோபர் அந்தாதி” எனும் நூலின் தலைவனும் இச்சடகோபனே ஆவார்.

பிறப்பு - வைகாசி விசாகம்

ஆழ்வார் திருநகரி

தத்துவம் - விசிஷ்டாத்வைதம்

குரு - சேனை முதலியார்

இலக்கிய பணிகள் - திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி

குறிப்பிடத்தக்க சீடர்(கள்) - மதுரகவியாழ்வார், நாதமுனி.

வரலாறு

நம்மாழ்வார்

திருநெல்வேலி சீமையில் தாமிரபரணி கரையிலுள்ள திருக்குருகூர் என்னும் ஊரில் மாறன்காரியார் மற்றும் சேர நாட்டு திருவெண்பரிசாரத்தை ஆண்ட மன்னனின் மகளான உடைய நங்கைக்கு மகனாராக நம்மாழ்வார் கலி பிறந்த 43-ஆவது நாளில் பிறந்தார்.ஜ4ஸ இவர் பாண்டிய மரபினர் ஆதலால் மாறன் (இயற்கைக்கு மாறுபட்டவன்) என்ற இயற்பெயரையும் மாயையை உருவாக்கும் ”சட” எனும் நாடியை விஷ்வக்சேனரின் அம்சமாகப் பிறந்த இவர் வென்றதால் ”சடகோபன்” என்றும் மாறன் சடகோபன் என அழைக்கப்பட்டார். யானையை அடக்கும் அங்குசம் போலப் பரன் ஆகிய திருமாலைத் தன் அன்பினால் கட்டியமையால் ”பராங்குசன்” என்றும், தலைவியாகத் தன்னை வரித்துக் கொண்டு பாடும்போது ”பராங்குசநாயகி” என்றும் அழைக்கப்படுகிறார்.

பதினாறு ஆண்டுகள் திருக்குருகூர் நம்பி கோவிலின் புளிய மரத்தின் அடியில் எவ்வித சலனமும் இல்லாமல் தவம் செய்து வந்தார். வடதிசை யாத்திரை மேற்கொண்டிருந்த மதுரகவி என்பவர் அயோத்தியில் இருந்தபோது தெற்குத் திசையில் ஓர் ஒளி தெரிவதைக் கண்டு அதனை அடைய தென்திசை நோக்கிப் பயணித்தார். மாறனிடமிருந்தே அவ்வொளி வருவதை அறிந்து அவரைச் சிறு கல் கொண்டு எறிந்து விழிக்க வைத்தார். சடகோபனின் ஞானத்தாலும், பக்தியாலும் கவரப்பெற்று அவருக்கே அடிமை செய்தார் என்பது வரலாறு. மாறன் கண்விழித்த உடன் மதுரகவி ஆழ்வார் கேட்ட ”செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று

எங்கே கிடக்கும்?" கேள்விக்கு "அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" என்று பதில் அளித்தார் நம்மாழ்வார்.

நூல்கள்

நம்மாழ்வார் இயற்றிய பாசுர நூல்கள் நான்கு: திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி திருவாய்மொழி இவை ரிக், யசுர், அதர்வண மற்றும் சாம வேதத்தின் சாரமாக அமைந்திருப்பதாகப் பெரியோர்கள் சொல்வார்கள். இந்தத் திருவாய்மொழியில் 1102 பாசுரங்களும், திருவிருத்தம் நூலில் 100 பாசுரங்களும், திருவாசிரியம் நூலில் 8 பாசுரங்களும் பெரிய திருவந்தாதி நூலில் 87 பாசுரங்களும் என நான்கு பிரபந்தங்களில் ஆயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்றாறு பாசுரங்களை இசைத்துள்ளார்.

பிறபெயர்கள்

கீழ்கண்ட 35 பெயர்கள் அனைத்தும் நம்மாழ்வாரின் பிறபெயர்களாகும்

சடகோபன்

மாறன்

காரிமாறன்

பராங்குசன்

வேதம் தமிழ் செய்த மாறன்

வகுளாபரணன்

குருகைப்பிரான்

குருகூர் நம்பி

திருவாய்மொழி பெருமாள்

பெருநல்துறைவன்

குமரி துறைவன்

பவரோக பண்டிதன்

முனி வேந்து

பரப்ரம்ம யோகி

நாவலன் பெருமாள்

ஞான தேசிகன்

ஞான பிரான்

தொண்டர் பிரான்

நாவீரர்

திருநாவீறு உடையபிரான்

உதய பாஸ்கரர்

வகுள பூஷண பாஸ்கரர்

ஞானத் தமிழுக்கு அரசு

ஞானத் தமிழ் கடல்

மெய் ஞானக் கவி

தெய்வ ஞானக் கவி

தெய்வ ஞான செம்மல்

நாவலர் பெருமாள்

பாவலர் தம்பிரான்

வினவாது உணர்ந்த விரகர்

குழந்தை முனி

ஸ்ரீவைணவக் குலபதி

பிரபன்ன ஜன கூடஸ்தர்

மணிவல்லி

பெரியன்

கண்ணிநுண்சிறுத்தாம்பு

கண்ணிநுண்சிறுத்தாம்பு, வைணவ சமயத்தில் நம்மாழ்வாரைப் போற்றி மதுரகவியாழ்வாரால் இயற்றப்பட்ட நூலாகும். இந்நூல் 11 பாசுரங்களைக் கொண்டது. மதுரகவியாழ்வாரால் நம்மாழ்வாரை வணங்கிப் பாடப்பட்ட இந்நூல் நாலாயிர திவ்யபிரபந்தம் தொகுப்பில் முதலாயிரம் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

மதுரகவி ஆழ்வார்

பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர்

மதுரகவி ஆழ்வார் (ஆயனாரசயமயஎை யுடஎயச) வைணவ நெறியைப் பின்பற்றி பக்தியில் சிறந்து விளங்கிய பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர்.ஜ1ஸஜ2ஸ பாண்டிய நாட்டில் திருக்குருகூர் என்னும் ஆழ்வார்திருநகரிக்கு அருகில் மூன்று கிலோ மீட்டர் தொலைவில் திருக்கோளூரில் ஈச்வர வருசம் சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தார். நம்மாழ்வார் பிறந்த பொ.ஊ. 798-இக்குச் சற்று முன் பிறந்தவர். நம்மாழ்வார்க்குப் பிறகும் வாழ்ந்தவர். இவர் பெருமானைத் தன் பாசுரங்களால் பாடாமல் தன் ஆசாரியனான நம்மாழ்வாரையே சிறந்த தெய்வமாக எண்ணி அவரைப் போற்றியே பதினோரு பாசுரங்களைப் பாடியுள்ளார்.

பிறப்பு - திருக்கோளூர்

சமயம் - வைணவம்

தத்துவம் - வைணவம் பக்தி

குரு - நம்மாழ்வார்

பெயர்க்காரணம்

சிறுவயதிலிருந்தே செவிக்கினிய செந்தமிழில் நற்கவிதைகளைப் பாடிய காரணம் பற்றி இவருக்கு இச்சிறப்புப் பெயர் வந்தது.

இளமைக்காலம்

இவர் வேத சாத்திரங்களை நன்கு பயின்றார். ஒரு காலகட்டத்தில் உலக விஷயங்களில் பற்று நீங்கி அயோத்தி, மதுரா, முதலிய வடநாட்டு திவ்ய தேசங்களைச் சேவிக்கச் சென்றார்.

ஆசார்யனைக் கண்டுகொள்ளல்

அயோத்தியில் தங்கியிருந்தபோது ஒரு நாளிரவில் வெளியே வந்தபோது தெற்கே ஒரு பேரொளியைக் காணுற்று வியப்படைந்தார். மறுநாளிரவிலும் அதே ஒளி அவ்வாறே தோன்றிற்று. உடனே மதுரகவிகள் "தெற்கே ஓர் அதிசயம் நிகழ்ந்துள்ளது அதைச் சென்று காணவேண்டும்" என்று தீர்மானித்துத் தெற்கு நோக்கிப் புறப்பட்டார். அவ்வொளி தோன்றிய இடமாகிய திருக்குருகூரை அடைந்தார். புளியமரத்தின் கீழ் எழுந்தருளியிருந்த அவ்வொளியாகிய நம்மாழ்வாரைச் சமாதியிலிருக்கக் கண்டார். முதலில் ஒரு பெரிய கல்லைக் கீழே போட்டு அந்தசத்தத்தினால் அவர் சமாதியைக் கலைத்தார். மேலும் அவர் நிலையை அறிய விரும்பி

"செத்ததன் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத்தின்று எங்கே கிடக்கும்?"

என்று வினவினார்.

"அத்தைத் தின்று அங்கே கிடக்கும்"

என்று விடை வந்தது. இந்த வினா, விடை இரண்டிலும் தத்துவம் புதைந்துள்ளது. "சூட்சுமமாயிருக்கும் ஜீவன் பிறப்பெடுத்தால் அதன் வாழ்வு எப்படி இருக்கும்?" என்பது கேள்வி. "தன் புண்யபாவங்களின் பயன்களை நுகர்வதே அதன் வாழ்க்கையாக இருக்கும்" என்பதே விடை.

மதுரகவிகள் அக்கணமே அவரை தன் ஆசாரியராக வரித்தார். நம்மாழ்வாரும் இவரை அடிமை கொண்டு, மூவகைத் தத்துவங்களின் இயல்பையும் மற்றும் அறியவேண்டிய யோக இரகசிய உண்மைகளையும் சீடனுக்கு உபதேசித்தார்.

திருமந்திரம்

ஓம் நமோ நாராயணாய என்பது திருமந்திரம். அதில் ஓம் என்பது முதல் பதம். நமோ என்பது மையப்பதம். நாராயணாய என்பது மூன்றாவது பதம். இதில் ஓம் என்பது பகவானுக்கு அடிமைப் பட்டிருப்பதைச் சொல்கிறது. இரண்டாவது பதம் ஆச்சாரியனுக்குத் தொண்டு செய்வதை வலியுறுத்துகிறது. மதுரகவியின் பாசுரங்கள் திருமந்திரத்தின் மத்திய பதமாக எண்ணி அதைப் பிரபந்ததின் நடுவே வைத்துள்ளார்கள்.

கண்ணி நுண் சிறுத்தாம்பு

நாலாயிரத்திவ்ய பிரபந்தத்தினுள் மதுரகவி ஆழ்வார் அருளிச்செய்தது கண்ணி நுண் சிறுத்தாம்பு என்ற ஒரே பதிகம் தான். அதனிலுள்ள பதினொரு பாடல்களும் திருக்குருகூர் நம்பி நம்மாழ்வாரை ஏத்திப்பாடுவதே. அதனில் இரண்டாவது பாடல்:

நாவினால் நவிற்று இன்பம் எய்தினேன்,

மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே

தேவு மற்று அறியேன் குருகூர் நம்பி

பாவின் இன்னிசை பாடித்திரிவனே.

குலசேகர ஆழ்வார்

பன்னிரு ஆழ்வார்களில் ஒருவர்

குலசேகர ஆழ்வார் (முரடயளநமாயசய யுடஎயச) பன்னிரு ஆழ்வார்களில் ஒருவர். இவரைக் குலசேகரப் பெருமாள் என்றும் அழைக்கின்றனர்.

பிறப்பு - திருவஞ்சிக்களம்

குரு - சேனை முதலியார்

இலக்கிய பணிகள் - பெருமாள் திருமொழி

பிறப்பு

இவர் பிறந்த ஊர் கொல்லிநகரான கருவூர் திருவஞ்சிக்களம். ஸ்ரீராமபக்தர். பாரம்பரிய ஸ்ரீ வைஷ்ணவம், இவரது ஊரை "கொல்லிநகர்" அதாவது கருவூர் (கரூர்) என்கிறது. இவரது ஜ3ஸ ஜென்ம நட்சத்திரம் மாசி மாத புனர்பூசம். இவர் திருமாலின் மார்பில்இருக்கும் மணி (கௌஸ்துப) அம்சம் பொருந்தியவர். இவரும், மகளான சேரகுலவல்லி தாயாரும் அரங்கனையும், ராமனையுமே அடிபணிந்துவந்தனர். நாடு: கொங்கு நாடு ஊர்: கரூர் வஞ்சி மலை: கொல்லிமலை.

குலசேகர ஆழ்வாரும் குலசேகர வர்மாவும்

ஸ்ரீவைஷ்ணவத்தின் தலைமை பீடங்களான ஜீயர்கள், "ஆழ்வார்களும் வைணவமும்" என்ற புத்தகத்தில், கிருஷ்ண பக்தனான குலசேகர வர்மா என்ற திருவிதாங்கூர் கேரள வர்மாவையும் சங்க கால சேரர்களது மன்னான சர்கராம பக்தர் குலசேகர ஆழ்வாரையும் குழப்பிக்கொள்கின்றனர் என்று கூறியுள்ளனர். முன்னையவர் ராமானுசருக்குப் பிற்பட்டவர். ஆழ்வாரோ மிக முற்பட்டவர். ஆழ்வார் தமிழில் மட்டுமே ஸ்ரீராமரைப் பாடியுள்ளார். வர்மாவோ சமஸ்கிருதத்தில் மட்டுமே "முகுந்தமாலா" என்று கிருஷ்ணரைப் பாடியுள்ளார். இருவரும் ஒருவரல்லர். மேலும் குலசேகர பாண்டியன், குலசேகர சோழன் என்றெல்லாம் அரசர்கள் உண்டு. குலசேகர என்றால் 'தமது குலத்தின் சிகரமான' என்று பொருள். பெயரை மட்டும் வைத்துக்கொண்டு இரு நபர்களை ஒன்றாக்கியுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளனர்.

மணவாள மாமுநிகளுடைய முகுந்தமாலை உரையில் எங்கும் அவர் "இது பெருமாள் திருமொழி பாடிய ஆழ்வார் குலசேகரர் எழுதியது" என்று குறிப்பிட்டதாக இல்லை. ஆழ்வார் சரிதம் பற்றிய நூலான "திவ்ய சூரி சரிதம்" முதலியவற்றில் முகுந்தமாலை பற்றிக் குறிப்பிடப்படவில்லை என்பதும் நோக்கத்தக்கது. முகுந்தமாலை செய்த குலசேகர வர்மா பிறந்தது கேரளத்தில் கொடுங்களூருக்குத் தெற்கில் மூன்று கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. அவ்வூருக்குத் தற்காலத்திய பெயர் "திருக்குலசேகரபுரம்". அதற்கு வெகு அருகாமையில் கேரளப்பாணியில் கட்டப்பட்ட ஸ்ரீகிருஷ்ணர் கோவில் ஒன்று உள்ளது. அதை குலசேகர வர்மாதான் கட்டியிருப்பார் என்பது அவ்வூரார் நம்பிக்கை.

அரசமரபும் துறவும்

கொங்கர் கோமான் குலசேகரன் என்ற அடியின்மூலம், இவர் சங்க காலச் சேரர்கள் (கரூர்) மரபினர் என்று தெரிகிறது. இவரது தந்தையார் சந்திர குலத்து அரசரான திடவிரதர் என்பவராவார். குலசேகர ஆழ்வார் நால்வகைப் படை கொண்டு பகைவர்களை வென்று நீதிநெறி பிறழாமல் செங்கோல் செலுத்திக் கொல்லி நகரை அரசாண்டு வந்தார். தனதாட்சிக்குட்பட்ட கொடுந்தமிழ் மண்டலங்களான வேணாடு (திருவிதாங்கூர் பகுதி), குட்டநாடு (மலபார்), தென்பாண்டிநாடு (நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி பகுதிகள்) ஆகியவற்றின் தலங்களைத் தரிசித்துள்ளார். இவருக்கு இறைவன் காட்சி தந்தமையால் இன்பமும், செல்வமும், அரசாட்சியும் தமக்கு வேண்டாமென்று துறவினை மேற்கொண்டார். இவர் பெரிய பெருமாளாகிய ராமபிரானிடத்தில் அன்பு பூண்டவரானதால் இவருக்கும் "குலசேகரப் பெருமாள்" என்றே பெயர் வழங்கலாயிற்று.

பெருமாள்திருமொழி

திருவரங்கம் சென்று திருவரங்கப் பெருமானை வாயார வாழ்த்தி நின்று தம் அனுபவத்தைப் பாடியருளினார். இவருடைய பாடல்கள் பெருமாள் திருமொழி

என்றழைக்கப்படும். இதனில் 31 பாசுரங்கள் திருவரங்கப் பெருமானைப் பற்றியது. இவர் திருவேங்கடம், திருக்கண்ணபுரம் முதலான திருத்தலங்களையும் பாடியுள்ளார்.

பெருமாள் திருமொழியில் பத்து பாசுரங்கள் ராமபிரானுக்காகப் பாடப்படும் தாலாட்டுப் பாடல்களாக அமைந்துள்ளன.

இதனிலுள்ள முதற்பாடல் தெய்வபக்தி உள்ள அத்தனை தமிழ்த்தாய்மார்களும் தங்கள் சேய்களுக்காகப் டபாடியிருக்கக்கூடிய பாடல்:

மன்னு புகழ் கோசலைதன் மணிவயிறு வாய்த்தவனே

தென்னிலங்கைக் கோன் முடிகள் சிந்துவித்தாய் செம்பொன்சேர்

கன்னி நன் மா மதில் புடைசூழ் கணபுரத்து என் கருமணியே!

என்னுடைய இன்னமுதே இராகவனே! தாலேலோ!

புண்டரிக மலரதன்மேல் புவனியெல்லாம் படைத்தவனே திண்டிரலால் தாடகைதன் உரமுருவ சிலைவளைத்தாய் கண்டவர் தம் மனம்வழங்கும் கணபுரத்தென் கருமணியே எண்டிசையு மாலுடயாய் இராகவனே தாலேலோ

கொங்குமலி கருங்குழலாள் கோசலைதன் குலமதலாய் தங்குபெரும் புகழ் ஜனகன் திருமருகா தாசரதீ கங்கையிலும் தீர்த்தமலி கணபுரத்தென் கருமணியே எங்கள்குல தின்னமுதே இராகவனே தாலேலோ

தாமரைமேல் அயனவனைப் படைத்தவனே - தசரதன்றன் மாமதலாய் மைதிலிதன் மணவாளா - வண்டினங்கள் காமரங்கல் இசைபாடும் கணபுரத்தென் கருமணியே ஏமருவும் சிலைவலவா இராகவனே தாலேலோ

பாராளும் படர்செல்வம் பரதனம்பிக் கேயருளி ஆராவன் பிளையவனோ தருஞான மடைந்தவனே சீராளும் வரைமார்பா திருக்கண்ண புரத்தஅரசே தாராலும் நீன்முடிஎன் தாசரதீ தாலேலே

சுற்றமெல்லாம் பின்தொடராத் தொல்கான மடைந்தவனே அற்றவர்கட் கருமருந்தே அயோத்தினகர்க் கதிபதியே கற்றவர்கள் தாம்வாழும் கணபுரத்தென் கருமணியே சிற்றவைதன் சொல்கொண்ட ஸ்ரீராமா தாலேலோ

ஆளிநிலைப் பாலகனா யன்ருலக முன்டவனே வாளியைகொன் ரரசிலைய வானரத்துக் களித்தவனே காலின்மணி கரையலைக்கும் கணபுரத்தென் கருமணியே ஆளினகர்க் கதிபதியே அயோத்திமனே தாலேலோ

மலையதனா லனைகட்டி மதிளிலங்கை யழித்தவனே அலைகடலைக் கடைந்தமரார்க் கமுதருளிச் செய்தவனே கலைவளவர் தாம்வாழும் கணபுரத்தென் கருமணியே சிலைவலவா சேவகனே ஸ்ரீராமா தாலேலோ

தளையவிழும் நறுங்குன்சித் தயரதன்றன் குலமதலாய் வளையவொரு சிலையதனால் மதிளிலங்கை யழித்தவனே களைகழுநீர் மருங்கலரும் கணபுரத்தென் கருமணியே இளையவர்கட் கருளுடையாய் இராகவனே தாலேலோ

தேவரையும் அசுரரையும் திசைகளையும் படைத்தவனே யாவரும்வன் தடிவனங்க அரங்கநகர்த் துயின்றவனே காவிரிநல் நதிபாயும் கணபுரத்தென் கருமணியே எவரிவேனி சிலைவலவா இராகவனே தாலேலோ

கன்னிநன்மா மதில்புடைசூழ் கணபுரத்தென் காகுத்தன் தன்னடிமேல் தாலேலோ என்றுரைத்த தமிழ்மாலை கொள்னவிலும் வேல்வலவன் குடைக்குலசே கரன்சொன்ன பன்னியநூல் பத்தும்வல்லார் பாங்காய பத்தர்களே.

குலசேகரப் படி

திருமலை ஆண்டவன் சன்னிதியில் ஆண்டவனின் பவளவாயை எக்காலும் பார்த்துக்கொண்டே இருக்கவேண்டுமென்றும், அதற்காகத் தன்னை அவர் கோயில் வாசற்படியாகவே வைத்துக்கொள்ளவேண்டுமென்றும் குலசேகரர் மனமுருக வேண்டிக்கொண்ட

பாசுரம்:

செடியாய வல்வினைகள் தீர்க்குந்திருமாலே

நெடியானே வேங்கடவா ! நின் கோயிலின் வாசல்

அடியாரும் வானவருமரம்பையரும் கிடந்தியங்கும்

படியாய்க்கிடந்துன் பவளவாய் காண்பேனே.

இதனால் இன்றும் வெங்கடேசப் பெருமாளின் வாசற்படிக்குக் குலசேகரப் படி என்ற பெயர் வழங்குகிறது.

இவர் திருவேங்கடவனிடம் இவ்வாறு வேண்டிநின்றாலும் ஆண்டவன் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவன் என்ற காரணத்தால் ஸ்ரீரங்கநாதன் கோயிலிலும் கர்ப்பகிருகம் முன்னிருக்கும் படி குலசேகரன் படி என்று அழைக்கப்படுவதைப் பார்க்கலாம்.

திருவரங்கத்திற்குச் செய்த பணி

திருவரங்கம் பெரிய கோயிலில் மூன்றாவதாக இருக்கும் திருச்சுற்றிலே சேனைவென்றான் திருமண்டபம் என்பதைக் கட்டினார். இத்திருச்சுற்றையும் செப்பம் செய்தார். இதனாலேயே இம்மூன்றாவது சுற்றுக்கு இவரது பெயர் இன்றும் வழங்குகிறது. குலசேகராழ்வாரால்தான் ”பவித்ரோற்சவ மண்டபம்” கட்டப்பட்டது. இந்த மண்டபம் உள்ள பிராகாரத்தைத் திருப்பணி செய்தவரும் இவரே!.

பெரியாழ்வார்

பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர் மற்றும் ஆண்டாளின் தந்தைபெரியாழ்வார் வைணவ நெறியைப் பின்பற்றிப் பக்தியில் சிறந்து விளங்கிய பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர். திருவில்லிபுத்தூரில் ஆனிமாதம் சுவாதி நட்சத்திரத்தில் கருடன் அம்சமாக ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிறந்தவர். “விஷ்ணு சித்தர்“ என்பது இயற்பெயர். திருவில்லிபுத்தூரில் கோயில்கொண்டுள்ள வடபத்திரசாயி பெருமாளுக்கு அன்றலர்ந்த மலர்களைப் பறித்துப் பூமாலையாகச் சாற்றுவதைக் கைங்கர்யமாகக் கொண்டிருந்தார். ஆழ்வார்களில் ஒரே பெண் ஆழ்வாரான ஆண்டாளின் வளர்ப்பு தந்தையானவர். ஆண்டாளைத் திருவரங்கம் உறையும் அரங்கனுக்கு மணம்முடித்துக் கொடுத்ததன் மூலம் அரங்கனுக்கே மாமனார் ஆனார்.

பிறப்பு - பொ.ஊ. 6-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்

திருவில்லிபுத்தூர், தமிழ்நாடு

இயற்பெயர் - விஷ்ணு சித்தர்

குரு - சேனை முதலியார்

இலக்கிய பணிகள் - திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி.

திருப்பல்லாண்டு பிறந்த கதை

வல்லபதேவ பாண்டியனுக்கு எழுந்த ஐயம் தீர்க்கும் பொருட்டு மதுரையில் நடைபெற்ற சமயவாதத்தில் வென்ற பெரியாழ்வார், அரசனால் அளிக்கப்பட்ட பட்டத்துயானை மீது வரும்பொழுது திருமால் திருமகளோடு வானத்தில் கருடவாகனத்தில் எழுந்தருளியிருக்கக் கண்டு இறைவனின் வடிவழகில் மயங்கி எங்கே இறைவனுக்குக் கண்ணேறு (கண்திருஷ்டி) விழுந்துவிடுமோ என்றஞ்சிப் பாடியதே திருப்பல்லாண்டு.

பெரியாழ்வார் பெயர்க்காரணம்

இறைவனுக்கே கண்ணேறு கழிக்க முயன்றதால் இவரை ஆழ்வார்களில் பெரியவர் எனும் பொருள்பட "பெரியாழ்வார்" என அரங்கன் அழைக்க, பின்னர் இதுவே இவர் பெயராகிப்போனது.

திருப்பல்லாண்டின் மேன்மை

இறைவனுக்கே கண்ணேறு கழிக்க முயன்ற இவரது பக்தி மேன்மையைக் கண்ட, பின் வந்த வைணவப் பெரியோர்கள் ஆழ்வார்கள் வரிசைக்கிரமத்தில் ஏழாமவராக வரும் பெரியாழ்வாரின் பாடல்களை நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் முதற்பாடல்களாகத் தொகுத்தனர்.

இன்றும் சாற்றுமறை எனும் வைணவ தினசரி வழிபாட்டின் தொடக்கத்திலும் முடிவிலும், வைணவக் கோயில்களின் திருவிழாக்களில் சுவாமி புறப்பாட்டின்போதும் புறப்பாடு முடிந்து திருக்கோயில் திரும்பும்போதும், பெரியாழ்வாரின் திருப்பல்லாண்டு பாடப்பட்ட பின்னரே சுவாமியைத் திருக்கோயிலுக்குள் எழுந்தருள செய்கின்றனர். இவ்வழக்கம் தமிழ்நாட்டில் மட்டுமல்லாது இராமானுசர் கொள்கைகளைப் பின்பற்றும் பிறபகுதி வைணவக் கோயில்களிலும் அனுசரிக்கப்பட்டுவருகிறது.

வடமொழி வேதங்களுக்கு "ஓம்" ஆதாரமாக இருந்து தொடக்கமும் முடிவும் ஆவதுபோல் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்திற்கு இந்தத் "திருப்பல்லாண்டு" விளங்குகிறது.

பாண்டியனின் ஐயம் தீர்த்து பொற்கிழி அறுத்த பெரியாழ்வார் மதுரையை அடுத்த இருந்தையூர்க் கூடலழகர் கோயிலில் குடிகொண்டுள்ள இரண்டு கோலங்களைப் பார்த்தே திருப்பல்லாண்டு பாடினார் என அறியக்கிடக்கிறது.

இலக்கியப் பணி

இவரது பாடல்கள் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் முதலாயிரத்தில் 1 தொடக்கம் 12 வரை திருப்பல்லாண்டு பரணிடப்பட்டது 2012-01-11 யவ வாந வந்தவழி இயந்திரம் (12 பாசுரங்கள்), 13 தொடக்கம் 473 வரை பெரியாழ்வார் திருமொழி (461 பாசுரங்கள்) ஆகிய இரு நூல்களில் அடங்கியுள்ளன.

கண்ணனைப் பிள்ளையாகப் பாவித்து இவர் பாடிய பாடல்கள் பிற்காலத்தில் பிள்ளைத்தமிழ் என்னும் சிற்றிலக்கியம் தோன்ற முன்னோடியாக அமைந்தன.

ஆண்டாள்

7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வைணவ ஆழ்வார்களுள் ஒருவர்.

ஆண்டாள் தமிழகத்தில் பொ.ஊ. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வைணவ ஆழ்வார்களுள் ஒருவர்.ஜ4ஸஜ5ஸ வைணவம் போற்றும் 12 ஆழ்வார்களில் இவர் ஒருவரே பெண்ணாவார். ஆண்டாள், திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்னும் இரண்டு பாடற் தொகுதிகளை இயற்றியுள்ளார். வைணவ சமய நூல்கள் கூறும் இவரது வரலாறு இறைவன் மீது இவர் கொண்டிருந்த காதலை நமக்கு எடுத்துரைக்கிறது. மேலும், ஆண்டாள் பூமிப் பிராட்டியின் அவதாரமாகக் கருதப்படுகிறார்.

பிறப்பு - பொ.ஊ. 7 அல்லது 8-வது நூற்றாண்டு - ஸ்ரீவில்லிபுத்தூர்

இறப்பு - ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி

இயற்பெயர் - கோதை

சமயம் - இந்து மதம்

தத்துவம் - ஸ்ரீ வைணவம்

ஆண்டாளின் தோற்றமும் வாழ்க்கையும்

மதுரைக்கு அண்மையிலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் என்னும் ஊரில் வசித்துவந்த விஷ்ணுசித்தர் (பெரியாழ்வார்) என்னும் அந்தணர் ஒருவரால் ஒரு குழந்தையாகத் துளசிச் செடியின் கீழ் கிடந்தபோது, ஆண்டாள் கண்டெடுக்கப்பட்டாள். இந்த அந்தணர் திருவில்லிபுத்தூர் ஆண்டாள் சமேத அரங்கநாதர் கோவிலுக்கு மலர்கள் கொய்து கொடுப்பதைத் தமது கடமையாகக் கொண்டவர். தனக்கெனக் குடும்பம் எதுவும் இல்லாதிருந்த நிலையிலும், கண்டெடுத்த குழந்தையைத் தனக்கு இறைவனால் வழங்கப்பட்ட கொடை எனக் கருதி வளர்த்து வரலானார். ஆயர் குல பெருமை அறிந்த பெரியாழ்வார் அக்குழந்தைக்கு இட்ட பெயர் கோதை என்பதாகும்.

இளம் வயதிலேயே, தனக்குத் தெரிந்த சமயம் சார்ந்த கருத்துகள் மற்றும் தமிழ்மொழி போன்ற அனைத்தையுமே விஷ்ணுசித்தர் கோதைக்குச் சொல்லிக் கொடுத்தார். இதனால் கோதை இளம் வயதிலேயே கண்ணன் மீது மிகுந்த பக்தியுணர்வு கொண்டவராயும் தமிழில் நல்ல திறமை கொண்டவராகவும் இருந்தார்.

சிறு வயதிலேயே கண்ணன் மீதிருந்த அளவற்ற அன்பு காரணமாக அவனையே மணம் செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்தையும் வளர்த்துக்கொண்டார். தன்னைக் கண்ணனின் மணப்பெண்ணாக நினைத்துப் பாவனை செய்துவந்தார். கோயிலில் இறைவனுக்கு அணிவிப்பதற்காக விஷ்ணுசித்தர் தொடுத்து வைத்திருக்கும் மாலைகளை ஒவ்வொரு நாளும் அவருக்குத் தெரியாமல் தான் அணிந்து கண்ணனுக்கு ஏற்றவளாகத் தானிருக்கிறோமா என்று கண்ணாடியில் பார்த்து மகிழ்ந்து பின்னர்த் திரும்பவும் கொண்டுபோய் வைத்துவந்தார். இதனால் கோதை சூடிய மாலைகளே இறைவனுக்கும் சூடப்பட்டன.

ஒருநாள் இதனை அறிந்து கொண்ட விஷ்ணுசித்தர் கோதையைக் கடிந்துகொண்டார். அவள் சூடிய மாலையை ஒதுக்கிவிட்டுப் புதிய மாலை தொடுத்து இறைவனுக்கு அணிவித்தார். அன்றிரவு இறைவன் அவரது கனவில் தோன்றிக் கோதை அணிந்த மாலைகளே தனக்கு உகப்பானவை எனவும் அவற்றையே தனக்குச் சூடவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். இதனாலேயே "சூடிக்கொடுத்த சுடர்க்கொடி" என்றும் "இறைவனையே ஆண்டவள்" என்ற பொருளில் ஆண்டாள் என்றும் போற்றப்படுகிறார்.

கோதை மண வயதடைந்த பின்னர் அவளுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட திருமண ஏற்பாடுகளை மறுத்து, திருவரங்கம் (ஸ்ரீரங்கம்) கோயிலில் உறையும் இறைவனையே மணப்பதென்று பிடிவாதமாக இருந்தார். என்ன செய்வதென்று அறியாது கவலையுடனிருந்த விஷ்ணுசித்தருடைய கனவில் தோன்றிய இறைவன், கோதையை மணப்பெண்ணாக அலங்கரித்து திருவரங்கம் கோயிலுக்கு அழைத்துவருமாறு பணித்தார்.

குறித்த நாளன்று கோயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்ட கோதை, கோயில் கருவறைக்குள் சென்று இறைவனுடன் கலந்துவிட்டாள் என்பது ஆண்டாள் வரலாறு.

ஆண்டாளின் பக்தி

வட இந்தியாவில் ராதாவின் பக்தி பிரபலமாகப் போற்றப்படுகிறது. பெண் பக்தியாளர்களில் மீராபாய் கண்ணனிடம் கொண்ட அர்பணிப்புடன் கூடிய பக்தியைப் போலத் தமிழகத்தில் ஆண்டாளின் பக்தி போற்றப்படுகிறது. இவரது முதல் படைப்பான திருப்பாவை 30

பாடல்களைக் கொண்டுள்ளது. இத்தொகுப்பு, ஆண்டாள் தன்னை ஆயர்பாடியில் வாழும் கோபிகையாக நினைத்துக் கொண்டு, கண்ணனின் திருவடியை அடைதலையே தன் வாழ்வின் இலட்சியமாக எண்ணிப் பாடியுள்ளதைக் குறிப்பதாக உள்ளது.

ஆண்டாளின் மலர் மாலைகளும் திருப்பதி வெங்கடேச பெருமாளும்

திருவில்லிபுத்தூர் ஆண்டாள் சூடிய மலர் மாலைகள் ஆந்திர மாநிலத்தில் உள்ள திருப்பதி பெருமாளுக்குச் சார்த்துவதற்காக வருடந்தோறும் அனுப்பப்படுகிறது. இவ் வைபவம், தமிழ் மாதமான புரட்டாசியில், திருப்பதி பிரம்மோற்சவம் விழாவில், குறிப்பாகக் கருட சேவை அன்று நடைபெறுகிறது. ஆண்டாள் சூடிய மலர் மாலையைப் பெருமாள் சூடிக்கொண்டு பவனி வருகிறார். இந்த மலர்மாலை, துளசி, செவ்வந்தி மற்றும் சம்பங்கி பூக்களால் தொடுக்கப்பட்டதாக உள்ளது.ஜ8ஸ மேலும், திருப்பதி பெருமாளின் மலர்மாலை, வருடந்தோறும் நடைபெறும் திருவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கல்யாண உற்சவத்திற்காக அனுப்பப்படுகிறது.

கள்ளழகர்

மதுரையில் நடைபெறும் பிரசித்தமான சித்திரைத் திருவிழாவின் போது, ஆண்டாளின் மலர்மாலை கள்ளழகருக்கு அணிவிப்பதற்காகத் திருவில்லிப்புத்தூரிலிருந்து கொண்டு செல்லப்படுகிறது.

ஆண்டாள் சிகையலங்காரம்

ஆண்டாள் கொண்டை தமிழ்நாட்டில் பிரசித்தி பெற்றது. இந்தச் சிகையலங்காரம், கேரள மாநில நம்பூதிரிகளின் சிகை அலங்காரத்திற்கு ஒத்ததாக உள்ளது.

ஆண்டாளின் கிளி

திருவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோவிலில் ஆண்டாளின் இடக்கையில் கிளி இருக்கிறது. இது தினமும் புதியதாக இன்றளவும் செய்யப்படுகிறது. இந்தக் கிளியைச் செய்வதற்குத் தோராயமாக நான்கிலிருந்து நாலரை மணி நேரம் எடுத்துக்கொள்ளப்படுகிறது. இக் கிளியைச் செய்வதற்கு, மாதுளம் மரத்தின் பூக்கள் கிளியின் அலகு மற்றும் வாய்ப்பகுதி செய்வதற்கும், மூங்கில் குச்சிகள் கிளியின் கால் பகுதிக்கும், வாழை மரத்தின் இலைகள் மற்றும் நந்தியாவட்டை மரத்தின் இலைகள் உடல் பகுதி செய்வதற்கும் பயன்படுத்தப் படுகின்றன.

திருவிழாக்கள்

திருவில்லிப்புத்தூர் திருத்தலம் இரண்டு கோவில்களை உள்ளடக்கியதாக உள்ளது. ஒன்று ஆண்டாள் கோவில். பொதுவாக அனைத்து வைணவக் கோவில்களில் ஆண்டாளுக்குத் தனிச் சன்னிதி அமைந்துள்ளது. நிறைய திருவிழாக்கள் ஆண்டாள் நினைவாகத் தமிழகத்தில் கொண்டாடப்படுகின்றன. அவற்றில் முக்கியமானது "பாவை நோன்பு" ஆகும். இது தமிழ் மாதம் மார்கழி ஒன்றாம் தேதியிலிருந்து முப்பதாம் தேதி வரை கொண்டாடப்படுகிறது. பங்குனி மாதத்தில் "ஆண்டாள் திருக்கல்யாணம்", பகல்பத்து, இராப்பத்து, மற்றும் ஆடிப் பூரம், ஆடித் திருவிழா போன்றவை சில முக்கிய விழாக்களாகும். பன்னிரண்டு ஆழ்வார்களில், ஒருவராக ஆண்டாள் இருந்தாலும், தமிழகத்தில் ஆண்டாள் ஒரு பெண் தெய்வமாகவே வழிபடப்படுகிறார். ஆடிப் பூரத் திருவிழா, திருவில்லிப்புத்தூரில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. வருடந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் இவ் விழாவில் பங்கேற்கின்றனர்.

ஆண்டாள் இயற்றிய பாடல்கள்

ஆண்டாள் தனது 15ஆம் வயதில் இறைவனுடன் இரண்டறக் கலப்பதற்கு முன் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்னும் இரண்டு நூல்களை இயற்றியுள்ளார். இவ்விரு நூல்களும் அதன் இலக்கிய செழுமை, தத்துவம், பக்தி ஆகியவற்றிக்காக அனைவராலும் போற்றப்படுகின்றது. இவரது முதல் படைப்பான திருப்பாவை 30 பாடல்களைக் கொண்டுள்ளது. இத் திருப்பாவை ஆண்டாள் தன்னை ஆயர்பாடியில் வாழும் கோபிகையாக நினைத்துக் கொண்டு பாடப்பெற்ற பாட்டுகளின் தொகுப்பாகும்.

இவரது இரண்டாவது படைப்பான நாச்சியார் திருமொழி 143 பாடல்களைக் கொண்டுள்ளது. இறைவனை நினைத்துருகிப்பாடும் காதல்ரசம் மிகு பாடல்களின் தொகுப்பாகக் காணப்படுகின்றது. இது வடமொழியில் எழுதப்பட்ட ஜெயதேவரின் கீத கோவிந்தம் எனும் நூலினை ஒத்ததன்மை உடையதாகக் காணப்படுகின்றது. கண்ணனை மணமுடிப்பதாக ஆண்டாள் பாடியுள்ள நாச்சியார் திருமொழியில் உள்ள 'வாரணமாயிரம்' பாடல் தொகுப்பு புகழ் பெற்றது.

இது சில தமிழ்த் திரைப்படங்களில் பாடல் காட்சியாக எடுத்தாளப்பட்டுள்ளது. ஆண்டாளின் இவ்விரு படைப்புகளும் குறிப்பாகத் திருப்பாவை நாட்டின் (தென்கலை மற்றும் வடகலை பின்பற்றும்) அனைத்து வைணவதலங்களிலும் வைணவர்களின் இல்லங்களிலும் தினந்தோறும் ஓதப்பட்டு வருகின்றது. மேலும் வைணவதலங்களில் நடைபெறும் முக்கிய விழாக்களிலும் வைணவர்களின் இல்ல விழாவிலும் வடமொழி மறைகளுக்கு நிகராகத் தவறாமல் ஓதப்படுகின்றது.

கோதை மண்டலி

கோதை மண்டலி என்னும் அமைப்பு 1970-இல் தொடங்கப்பட்டு, 1982-இல் பதிவு செய்யப்பட்ட அமைப்பாக விளங்குகிறது. இதன் முக்கிய நோக்கம் ஆண்டாள் இயற்றிய பாடல்களைத் தொலைக்காட்சியிலும் வானொலி நிகழ்ச்சிகளிலும் பரப்புவதே ஆகும்.

தொண்டரடிப்பொடியாழ்வார்

பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர்

தொண்டரடிப்பொடியாழ்வார் (வுாழனெயசயனனீழனை யுடஎயச) அல்லது விப்ரநாராயணன் வைணவ நெறியைப் பின்பற்றிப் பக்தியில் சிறந்து விளங்கிய பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர் ஆவார். ஆழ்வார் வரிசைக் கிரமத்தில் பத்தாவதாக வரும் இவருக்கு "விப்ர நாராயணர்" என்பது இயற்பெயர் ஆகும். திருவரங்கத்திலேயே வாழ்ந்திருந்து அத்தல இறைவனாகிய அரங்கநாதனுக்கு பாமாலை மற்றும் பூமாலை சாற்றும் சேவையைத் தன் வாழ்நாள் முழுதும் சிரமேற்கொண்டு செய்து வந்தார்.

பிறப்பு - திருமந்தன்குடி

குரு - சேனை முதலியார்

இலக்கிய பணிகள் - திருப்பள்ளி எழுச்சி, திருமாலை

ஆழ்வார்களின் வசனங்கள் நாலாயிர திவ்ய பிரபந்தம் என்று போற்றப்படுகிறது. இந்தப் பிரபந்தம் ஓதப்படும் 108 வைணவ கோயில்கள் திவ்ய தேசம் என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவரது படைப்புகளில் திருப்பள்ளி எழுச்சி பத்து வசனங்களைக் கொண்டதாகவும், திருமாலை நாற்பது வசனங்களைக் கொண்டதாகவும் உள்ளது. இவை இரண்டும் நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் உள்ள 4000 சரணங்களில் கணக்கிடப்பட்டுள்ளன. தொண்டரடிப்பொடி மற்றும் பிற ஆழ்வார்களின் படைப்புகள் வைணவத்தின் தத்துவ மற்றும் இறையியல் கருத்துகளுக்குப் பங்களித்தன. மூன்று சைவ நாயன்மர்களுடன் சேர்ந்து, அவர்கள் தென்னிந்திய பிராந்தியத்தின் ஆளும் பல்லவ மன்னர்களைப் பாதித்தனர். இதன்

விளைவாகத் தென்னிந்தியாவில் பௌத்தம் மற்றும் சமண மதத்தை வளரவிடாமல் தடுத்தனர் என்பது வரலாறாக உள்ளது. மேலும், இந்து மதத்தின் இரு பிரிவுகளான சைவம் மற்றும் வைணவம் தோன்றக் காரணமாக விளங்கினர்.

தென்னிந்திய விஷ்ணு கோயில்களில், தொண்டரடிப்பொடி ஆழ்வாரின் தொடர்புடைய படங்களும் பண்டிகைகளும் உள்ளன. வசந்த உத்ஸவம் திருவிழா ஸ்ரீரங்கத்தில் கொண்டாடப்படுகிறது. மேலும் அவர் பராமரித்ததாக நம்பப்படும் தோட்டத்தில் ஒன்பது நாட்கள் தொண்டரடிப்பொடி மற்றும் பிற ஆழ்வார்களின் வசனங்கள் தினசரி பிரார்த்தனையின் ஒரு பகுதியாகவும், தென்னிந்தியாவின் பெரும்பாலான விஷ்ணு கோவில்களில் பண்டிகை சந்தர்ப்பங்களிலும் ஓதப்படுகின்றன.

இயற்றிய நூல்கள்

திருப்பள்ளியெழுச்சி

திருமாலை என இரண்டு நூல்களை இவர் எழுதியுள்ளார்.

பிறப்பு மற்றும் இளமைப்பருவம்

தொண்டரடிப்பொடி ஆழ்வார் சோழ நாட்டில் திருமண்டங்குடி என்னும் ஊரில் பிரபவ வருடம், மார்கழி மாதம், கிருஷ்ண சதுர்த்தி, கேட்டை நட்சத்திரத்தில் செவ்வாய்கிழமை அன்று பிறந்தார். இவரின் தந்தை “வேத விசாரதர்“ ”குடுமி சோழிய பிராமணர்” வகுப்பைச் சார்ந்தவர். மேலும் இப் பிரிவினர் கடவுள் விஷ்ணுவைப் புகழ்ந்து பாடுவதைத் தொழிலாக வைத்திருப்பதால் இவர்கள் ”விப்ரா மக்கள்” என அழைக்கப்படுகிறார்கள். தொண்டரடிப்பொடி ஆழ்வார் பிறந்த 12-ஆவது நாளில் ”விப்ர நாராயணர்” என்கிற பெயர் வைக்கப்பட்டது. சிறு வயதிலிருந்தே, ஸ்ரீ விஷ்ணுவை நோக்கிய பக்தி அவருக்குக் கற்பிக்கப்பட்டது.

அவர் நன்கு ஆளுமையுடன் வளர்ந்தார். மேலும் அவர் வயது முதிர்ந்த நபர்களையும், அவருக்கு இளையவர்களையும் ஒரே மாதிரியாகக் கருதி அவர்களுக்குச் சரியான மரியாதை கொடுப்பவராக இருந்தார் என்று கூறப்படுகிறது.

இந்து புராணத்தின்படி, தேவதேவி என்ற சோழநாட்டு கணிகையின் பால் விருப்பம் கொண்டு தன்னையே மறந்தார். கணிகையால் தன் செல்வம் யாவும் இழந்த இவருக்காக அரங்கன் தன் கோயில் வட்டிலைக் கொடுத்து உதவினார். அதைக் களவாடிய பழி இவர் மீது வீழ்ந்து, அரசன் முன் இவரை இட்டுச்சென்றது. முடிவில் அரங்கனால் உலகத்திற்கு உண்மை அறிவிக்கப்பட்டதோடு, இவரையும் ஆட்கொண்டது. மீண்டு வந்த இவர் தன் இறுதிவரை அரங்கனுக்கே அடிமைப்பூண்டார்.

அரங்கன் அவருக்குப் பணம் தேவைப்பட்டபோது, அவரை மீட்டு வந்து தங்கத்தைப் பொழிந்தார் என்பதால் அவர் அரங்கநாத சுவாமி கோயிலின் அதிபதியான அரங்கநாதரின் தீவிர பக்தரானார். திருவரங்கத்தில் ஒரு பெரிய நந்தவனம் (மலர் பூங்கா) கட்டினார், அங்குப் பல்வேறு அழகான மற்றும் மணம் கொண்ட மலர் தாவரங்கள் வளர்க்கப்படுகின்றன. அவர் ஸ்ரீ விஷ்ணுவின் அனைத்துப் பக்தர்களையும் வழிபட்டு, அவர்களின் காலடியில் காணப்படும் மண்துகள்களைத் (சிறிய சிறிய தூசி துகள்கள்) தனது தலையில் வைத்துக்கொண்டு,அரங்கநாதரைப் புகழ்ந்து பாடல்களைப் பாடினார். அப்போதிலிருந்து, அவர் ”தொண்டரடிப்பொடி ஆழ்வார்” என்று அழைக்கப்பட்டார்.

பெயர்க்காரணம்

தான் எனும் ஆணவத்தைத் தவிர்க்கும் பொருட்டுத் தன்னைச் சிறுமைப்படுத்திக் கொள்வது ஞானிகளுக்கு இயற்கை. மேலும் பரமனுக்கு அடிமை என்பதினும் அவன் தன் உத்தம அடியார்க்கு அடிமை என்பதைப் பெரிதாக எண்ணுவது வைணவ மரபு. அதனாலேயே அரங்கனுடைய தொண்டர்களின் அடியாகிய திருவடியின் தூசி எனும் பொருள்பட

”தொண்டரடிப்பொடி” என்றும், அரங்கனின் பக்தியில் ஆழ்ந்துபோனவரை ஆழ்வார் என்று அழைப்பதற்கிணங்க தொண்டரடிப்பொடியாழ்வார் ஆனார்.

இலக்கியப் பணிகள்

அவர் 45 பாசுரங்களை உள்ளடக்கிய திருமாலை மற்றும் 10 பாசுரங்களை உள்ளடக்கிய திருப்பள்ளி எழுச்சி போன்ற நூல்களை எழுதியுள்ளார். திருப்பள்ளி எழுச்சியின் பாசுரங்கள் ரங்கநாதரைத் துயில் எழுப்புவதற்காகப் பாடப்பட்டுள்ளன. அவரது பாசுரங்கள் அனைத்தும் திருவரங்கம் அரங்கநாதசுவாமி கோயிலின் பிரதான தெய்வமான அரங்கநாதரைப் புகழ்ந்து பேசுகின்றன.

தொண்டரடிப்பொடி தனது காலத்தில் நிலவிய சாதி முறையைக் கடுமையாக எதிர்க்கிறார், மேலும் விஷ்ணுவை அடைய இறுதி வழி அவருக்கும் அவரது பக்தர்களுக்கும் சேவை செய்வதாகும் என்று குறிப்பிடுகிறார். அரங்கநாதர் கிருஷ்ணரைத் தவிர வேறு யாருமல்ல என்று அவர் நம்பினார், மேலும் அவர் தனது 38-ஆவது பாசுரத்தில் விஷ்ணுவின் பக்தர்கள் தங்கள் உடலை பூமியில் விட்டுவிட்டு, ஆனால் அவர்களின் ஆன்மாவைக் கடவுளுடன் இணைத்தனர் என்று கூறியுள்ளார்.

”பச்சைமாமலை போல் மேனி” என்று தொடங்கும் அவரது பாசுரம் மிகவும் பிரபலமான பாசுரமாக உள்ளது. பொதுவாக அனைத்து விஷ்ணு கோவில்களிலும், அன்றாட வழிபாட்டிலும், பண்டிகைகளிலும் இப்பாசுரம் ஓதப்படுகிறது.ஜ8ஸ திருப்பள்ளி எழுச்சியின் பாசுரங்கள் முதன்முதலில் திருவரங்கம் கோவிலில் பாடப்பட்டன. இந்த ஆழ்வார் பாடிய திருப்பள்ளி எழுச்சி ஓதப்படும் அதிகாலையில் அரங்கநாதர் எழுந்திருப்பதைக் காணப் பூமித்தாயின் மக்கள் வருகின்றனர்.

முன்னோடி

தொண்டரடிப்பொடியாழ்வார் தமிழில் இயற்றிய அரங்கநாதன் மீது பாடப்பட்ட திருப்பள்ளியெழுச்சியே பள்ளியெழுச்சிவகை படைப்புகளுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது. மார்கழியில் மட்டும் திருமலை உட்பட அனைத்து வைணவ ஆலயங்களிலும் தொண்டரடிப்பொடியாழ்வார் தமிழில் இயற்றிய அரங்கநாதன் மீது பாடப்பட்ட திருப்பள்ளியெழுச்சியே பாடப்பெற்று வருகிறது.

சிறப்பு

”திருமாலை அறியாதர் திருமாலையே அறியாதர்” எனும் வழக்கு இவரின் படைப்புகளுள் ஒன்றான திருமாலையின் உயர்வைச் செப்புகிறது. இதன் பொருள் யாதெனில் ஆழ்வார் இயற்றிய திருமாலை எனும் நூலை அறிந்திடாதவர் பரமனாகிய திருமாலையே அறிந்திடாதவர்கள் ஆவார் என்பதாம். அல்லது பரமனாகிய திருமாலை அறிய விரும்புவோர் ஆழ்வாரின் திருமாலை எனும் நூலை படித்தால் போதுமென்பதாம்.

திருப்பள்ளியெழுச்சியின் முதல்துளி

காலைப்பொழுது விடிவதை வெகு இயல்பாக நம் கண்முன் காட்சிப்படுத்தும் இப்பாடல்களில் முதல்பாடல் இதோ:

கதிரவன் குணதிசைச் சிகரம் வந்து அணைந்தான்!

கனைஇருள் அகன்றது, காலை அம் பொழுதாய்,

மது விரிந்து ஒழுகின மாமலர் எல்லாம்,

வானவர், அரசர்கள் வந்து வந்து ஈண்டி

எதிர்த்திசை நிறைந்தனர், இவரொடும் புகுந்த

இரும் களிற்று ஈட்டமும் பிடியொடு முரசும்

அதிர்தலில் அலைகடல் போன்று உளது எங்கும்,

அரங்கத்து அம்மா, பள்ளி எழுந்தருளாயே!

திருப்பாணாழ்வார்

பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர்

திருப்பாணாழ்வார் வைணவ நெறியைப் பின்பற்றி பக்தியில் சிறந்து விளங்கிய பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர். சோழ நாட்டின் உறையூரில் கார்த்திகை மாதம் ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தவர்.ஜ1ஸஜ2ஸ இறைவன் முன் எல்லோரும் ஒன்றே என்ற இராமானுசரின் கோட்பாட்டிற்கு திருப்பாணாழ்வர் வரலாறே மிகுந்த ஊக்கமாகவும் பலமாகவும் இருந்தது எனலாம்.

திருப்பாணாழ்வார்

பிறப்பு - உறையூர், திருச்சி, தமிழ்நாடு

இறப்பு - திருவரங்கம், தமிழ்நாடு

இயற்பெயர் - பாணர்

இலக்கிய பணிகள் - அமலனாதிபிரான்

வாழ்க்கைக் குறிப்பு

இசைக்குப் பெயர்பெற்ற பாணர் குலம் காலக்கிரமத்தில் தீண்டாக்குலமானது. அக்குலத்தில் பாண் பெருமாள் எனும் பெயரோடு ஆழ்வார்கள் வரிசைக் கிரமத்தில் பதினோராம் ஆழ்வாராக பிறந்த இவர் திருமால் மீது மிகுந்த பக்தி கொண்டிருந்தார். எனினும், தன் குலத்தின் பொருட்டு திருவரங்கத்தின் உள்ளே நுழைவதற்கும் அம்மண்ணை மிதிப்பதற்கும் அஞ்சி காவிரியின் மறுகரையில் இருந்தவாறே பண் இசைத்துத் திருவரங்கனைப் பாடிவந்தார். காவிரியிலிருந்து தண்ணீர் குடத்தோடு அரங்கனுக்குத் திருமஞ்சனம் செய்யும் பொருட்டு விரைந்து வந்த லோகசாரங்கர் எனும் கோயில் பட்டர், வழியில் தன்னிலை மறந்து நின்றுகொண்டிருந்த பாணரைப் பலமுறை அழைத்தும் செவிமடுக்காததால் பாணர் விலகும் பொருட்டு ஒரு கல் கொண்டு எறிந்தார்.

அக்கல் அவரின் தலையில்பட்டு குருதிபெருக, அதைக்கவனியாது லோகசாரங்கர் தண்ணீரோடு அரங்கன் முன் சென்றார். பாணரின் பக்தியையும் உயர்வையும் உணர்த்த விரும்பிய இறைவன் இரத்தம் வடிந்த முகத்தினராய் லோகசாரங்கருக்குக் காட்சி கொடுத்ததோடு, சாரங்கரரைப், பாணரான திருப்பாணாழ்வாரைத் தனது தோளில் சுமந்து திருவரங்கத்துள் கொணர்ந்து தன் திருமுன் நிறுத்தும்படியும் ஆணையிட அவ்வாறே செய்தார். அதன் பொருட்டு பாணருக்கு ”முனிவாகனன்” என்றும் ”யோகிவாகனன்” என்றும் பெயர் ஏற்பட்டது.

அமலனாதிபிரான்

திருவரங்கத் திருவான அரங்கன் முன் சென்று அவன் வடிவழகில் மயங்கி திருமுடி முதல் திருவடி வரை பாடியவர் ”என்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினை காணாவே” என்று பாடிய படி தன் பூத உடலோடு ஆண்டாள் போல அரங்கனோடு இரண்டறக்கலந்தார். இவர் பாடிய பத்துப்பாடல்கள் ”அமலனாதிபிரான்” எனும் தலைப்போடு நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

இவர் அரங்கன் மீது பாடிய பத்துப் பாடல்களும் அரங்கனின் திருவடியில் தொடங்கி தலை வரை உள்ள உறுப்புக்களான, பாதம், ஆடை, உந்தி, உதரபந்தனம், மார்பு, கழுத்து, வாய்,

கண்கள், உடல், தலை ஆகியவற்றின் வடிவழகையும் குணவழகையும் அற்புதமாகக் காட்சிப்படுத்துகிறது.

பிற பெயர்கள்

1. பாணர்
2. முனிவாகனர்
3. யோகிவாகனர்
4. கவீசுவரர்

ஒரு துளி

திருப்பாணாழ்வாரின் அமலனாதிபிரான் எனப்படும் பத்துப் பாடல்களிலிருந்து, திருமாலின் மார்பைப் பற்றிப் பாடிய ஒரு பாடல்:

பாரமாய பழவினை பற்றறுத்து

என்னைத்தன்

வாரமாக்கி வைத்தான் வைத்ததன்றி

யென்னுள் புகுந்தான்

கோர மாதவம் செய்தானென்கொ

லறியே னரங்கத் தம்மான்திரு

வார மார்பதன் றோஅடி

யேனை யாட்கோண்டதே.

திருமங்கையாழ்வார்

பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர் மற்றும் இறுதி அழ்வார் ' கள்ளர் குலத்தில் பிறந்தவர்.

திருமங்கையாழ்வார் என்பவர் வைணவ நெறியைப் பின்பற்றிப் பக்தியில் சிறந்து விளங்கிய பன்னிரு ஆழ்வார்களுள் இளையவர் மற்றும் இறுதியானவர். சோழ நாட்டில் உள்ள திருவாலிதிருநகரி என்னும் ஊருக்கு அருகில் உள்ள திருக்குரையலூரில் கள்ளர் குடியில் கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரத்தில் திருமாலின் சாரங்க வில்லின் அம்சமாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் கலியன் ஆகும். ஆதியில் இவர் சோழமன்னனுக்குப் படைத்தலைவனாக இருந்தார். ஒருமுறை போர்க்களத்தில் இவருடைய வீரத்தைக் கண்ட அரசன் இவரைச் சோழதேசத்தின் "திருமங்கை" நாட்டின் மன்னனாக்கினான். அன்று முதல் இவர் "திருமங்கை மன்னன்" என அழைக்கப்பட்டார்.

திருமங்கை ஆழ்வார்

பிறப்பு - திருக்குறையலூர், சீர்காழி, தமிழ்நாடு

இயற்பெயர் - கலியன்

குரு - சேனை முதலியார், நறையூர் நம்பி, திருக்கண்ணபுரம் சவுரிப் பெருமாள்

இலக்கிய பணிகள் -

பெரிய திருமொழி திருக்குறுந்தாண்டகம் திருநெடுந்தாண்டகம் திருஎழுகூற்றிருக்கை சிறிய திருமடல் பெரிய திருமடல்

வைணவக் காதல்

திருமங்கையாழ்வார் சோழ நாட்டில் உள்ள திருக்குரையலூரில் கள்ளர் குடியில் பிறந்தார். குமுதவல்லி எனும் மங்கை மீது கொண்ட காதலினால் வைணவம் அனுசரிக்க ஆரம்பித்தவர், அவளின் விருப்பத்தின்படி திருமால் அடியார்களுக்குத் தினமும் அன்னம் இடுவதையும், திருக்கோயில் கைங்கரியங்களில் ஈடுபடுவதையும் செய்துவரலானார். காலப்பொழுதில் தன்னை முழுமையாக இதில் ஈடுபடுத்திக் கொண்டு தன் செல்வங்களையும், அரசு செல்வங்களையும் முழுக்க இழந்தவரானார். கடமையை நிறைவேற்ற யாசகமும் கை கொடுக்காதப்படியால் களவாடியாவது அடியார்களுக்குத் தினமும் அன்னம் இடுவதையும், திருவரங்கத் திருக்கோயிலின் கைங்கரியங்களையும் செய்துவந்தார். இச்செயலை மெச்சி, இறைவனே இவர் களவாடும் பாதையில் வந்து, இவரை ஆட்கொண்டதோடு வேண்டிய செல்வங்களையும் கொடுத்தருளினார்.

இலக்கியப் பணி

இவர் 1137 பாடல்கள் பாடியுள்ளார். அவைகளாவன

1. திருவெழுக்கூற்றிருக்கை (ஒரு பாடல் - 47 அடிகள்)
2. சிறிய திருமடல் (ஒரு பாடல் - 155 அடிகள்)
3. பெரிய திருமடல் (ஒரு பாடல் - 297 அடிகள்)
4. திருநெடுந்தாண்டகம் (30 பாடல்கள்)
5. திருக்குறுந் தாண்டகம் (20 பாடல்கள்)
6. பெரிய திருமொழி (1084 பாடல்கள்)

அலகு 3

சிற்றிலக்கியங்களும் உரைகளும்

தமிழிலக்கிய வரலாற்றில் சிற்றிலியக்கியங்கள் தனித்தன்மை வாய்ந்ததாக விளங்குகின்றது. இலக்கியம் மனித வாழ்க்கையை மையமாகக் கொண்டு மனிதனின் சிந்தனைக்கும், உணார்வுக்கும், கற்ர்பனைக்கும் விருந்தாக அமையும். மனித மொழியோடு தொடார்பு கொண்டு சொற் கோலமாகவும், ஒரு குறிப்பிட்ட வடிவினை செய்யுளாலோ உரைநடையாலோ கொண்டு விளங்கும். கற்பவருடைய எண்ணத்தில் எழுச்சியையும், மலார்ச்சியையும் உண்டாக்கும் ஆற்றல் வாயந்தது. இலக்கியம் இன்புறுவதோடு இல்லாமல் அறிவுறுத்தும் ஆற்றல் வாய்ததாகவும் விளங்குகிறது.

சிற்றிலக்கியங்கள் பொருளமைதியால் மாறுபட்டவையாயிருப்பினும் சுவை தருவதில் வேறுபட்டவையல்ல. சிற்றிலக்கயங்கள் தரும் சுவை பாலொடு

தேன் கலந்ததுப் போன்று இனிக்கும். இந்நுல் கற்போர்க்கு கழிப்பேருவகைதருமர்

சிற்றிலக்கியங்கள்

தொல்காப்பியார் காலத்தில் வித்திடப்பெற்ற இச்சிற்றிலக்கியங்கள் நூற்றாண்டுத்தோறும் சீராக வளார்ந்து, கி.பி.5-ஆம் நூற்றாண்டில் அந்தாதியாக அரும்பி, கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் கோவையாகவும், கிர்.பி. 9-ஆம் நூற்றாண்டில் கலம்பகமாகவும், கி.பி.11-ஆம் நூற்றாண்டில் சதகமாகவும், கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் துரிதாகவும் மலர்ந்தது. அன்று முதல் இன்று வரை எண்ணிலடங்கா கிளைகள் விட்டு சிற்றிலக்கியப் பெருமரம் சிறந்து விளங்குகின்றது. தமிழில் உள்ள சிற்றிலக்கியங்களைப் படித்தால் அவை ஒவ்வொன்றும் ஒவ்வொருவகையில் இன்பம் தருவதாக அமையும். இச்சிற்றிலக்கியங்களை தொல்காப்பியார்,

விருந்தே தானும்

புதுவது கிளந்த யாப்பின் மேற்றே (தொ.நூா.239).

என்று விளக்குவார். இந்நூற்பா பல்வேறு வகையான இலக்கியங்களின் தோற்றத்தை எதிர்நோக்கி அமைந்துள்ளது. இதற்கு பொருள் கூறும் இளம்பூரணார், விருந்தாவது முன்புள்ளார்சொன்ன நெறிப்போய் புதிதாகச் சொன்ன யாப்பின் மேலது என்றவாறு. புதிதாக புனைதலாவது ஒருவன் சொன்ன நிழல் வழியின்றித் தானே தோற்றிவித்தல். இது பெருபான்மையும் ஆசிரியப்பாவை குறித்து வருவதாகச் சொல்லுகின்றார். இதற்குப் பேராசிரியார் புதிதாகத் தாம் வேண்டியவாற்றார்பல செய்யுளுந் தொடார்ந்து வரச் செய்வது என்பார். இலக்கண நெறியைப் போன்று பள்ளு, குறம், தூது, உலா, கலம்பகம் போன்றச் செய்யுள்களும் புதுவது கிளந்த யாப்பின் மேற்று என்ற அடிப்படையின் கீழ் அமைவதாகும். நச்சினார்க்கினியாரும் தம் உரையில் இத்தகைய கருத்தினையே பதிவு செய்துள்ளார்.

சிற்றிலக்கியத்தின் இலக்கணம்

பிரபந்தம் என்னும் வடமொழிச் சொல்லே இன்று சிற்றிலக்கியம் என்ற பொருளில் வழங்கப்படுகின்றன. பிரபந்தம் என்பதற்கு தொண்ணுற்றாறு வகைப்பட்ட நூல், இசையுறு கட்டுரை எனப் பொருள் கூறுகிறது தமிழ்ப் பேரகராதி. சிற்றிலக்கிய வகைகளை கூறுவதில் பாட்டியல் நூலாரிடையே ஒரு சீர்மையினைக் காணமுடியவில்லை. எனவே முதலில் தோன்றியதாகக் கருதப்படும் பன்னிருபாட்டியல் 65 சிற்றிலக்களுக்கு இலக்கணம் உரைக்க பின்னார் எழுந்த வெண்பா பாட்டியல் 54 சிற்றிலக்கியங்களுக்கும,ர் நவநீதப் பாட்டியல் 63 சிற்றிலக்கியங்களுக்கும், சிதம்பரப் பாட்டியல் 62 சிற்றிலக்கியங்களுக்கும், பிரபந்தத்தீபிகை 80 சிற்றிலக்கியங்களுக்கும் விளக்கம் உரைக்கின்றன.

16-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுந்ததாகக் கருதப்படும் பிரபந்த மரபியலில் தொண்ணுற்றாறு என்னும் எண் வரையறைக் கொடுக்கப்பட்டுள்ளது. 17-ஆம் நூற்றாண்டில் வீரமாமுனிவரால் இயற்றப்பட்ட தொன்னூல் விளக்கத்தில் 89 சிற்றிலக்கியங்களின் பெயர்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. 18-ஆம் நூற்றாண்டில் எழுந்த சதுரகராதியில் 96 சிற்றிலக்கியங்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. இவற்றில் அக்காலத்தில் எழுந்த குறவஞ்சி, பள்ளு ஆகிய இலக்கியங்களை அவ்வவ் பெயர்களில் வழங்காது பன்னிருப் பாட்டியல் குறிப்பிடுவது போல் குறத்திப்பாட்டு, உழத்திப்பாட்டு என்றே வழங்கப்பட்டுள்ளது. ஆயினும், குறவஞ்சி, பள்ளு ஆகிய நூல்களில் இடம் பெற்றுள்ள நிகழ்ச்சிகள் அனைத்தும் அவற்றின் இலக்கணமாகச் சதுரகராதியில் குறிப்பட்டுள்ளதை அறியலாம். இவற்றுள் தனிச் சிற்றிலக்கிய வகைகளான ஆற்றுப்படை, உலா, பிள்ளைத்தமிழ், கோவை, தூது, பரணி, கலப்பகம், பள்ளு, குறவஞ்சி முதலானவையாகும். இங்கு முக்கூடற்பள்ளு, குற்றாலக் குறவஞ்சி, நந்திக்கலம்பகம் இவைகளின் உரை வரைவுகளைக் காணலாம்.

பள்ளு இலக்கிய வகைகள்

கி.பி 1650-ல் தான் முதல் பள்ளு நூல் இயற்றப்பட்டது என்றும், அதனைத் தொடார்ந்து கி.பி 1900 வரை பல பள்ளு நூல் இயற்றப்பட்டன. இவ்வகையில் 70-80 நூல்களே தற்போது கிடைக்கப் பெறுகின்றன. பள்ளு நூல்கள் அனைத்தும் ஒரே கதையமைப்பைபேய கொண்டிருக்கும். அவ்வாறு இயற்றப்படும் நூல்களின் இடம், காலம், கதை நாயக-நாயகியார்களும், பாட்டுடை கடவுளும், பாடும் புலவனும், புரவலனும் வேறுபடுவர். இதனோடு பாடப்படும் தலம்(இடம்) இவற்றையும் சோர்த்துப் பள்ளு இலக்கியத்தின் பெயர்கள் அமைகின்றன. அவை

1.திருவாரூர்ப்பள்ளு

2.முக்கூடற் பள்ளு

3.செங்கோட்டுப் பள்ளு

4.பொய்கைப் பள்ளு

5.செண்பகராமன் பள்ளு

6.மாந்தைப் பள்ளு

7.திருமலை முருகன் பள்ளு

8.திருவேட்டைநல்லூர்அய்யனார்பள்ளு

9.தண்டிகைக் கனகராயன் பள்ளு

10.சீர்காழிப் பள்ளு. முதலியனவாகும்.

முக்கூடற்பள்ளு

முக்கூடற்பள்ளுவில் பாடலுக்கு முன்பு இயலைப் பற்றிய ஒரு சிறிய விளக்கம் தரப்பட்டுள்ளது சிறப்பு. இதனைத் தொடர்ந்து பாடல் அதற்கான பொழிப்புரை மற்றும் சில இடங்களில் நயவுரை, விளக்கவுரை முதலானவை இடம் பெற்றுள்ளன.

இந்நுல் இயல் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு இயலிலும் உட்தலைப்பிட்டு எழுதப்பட்டுள்ளதும் கவனிக்கத்தக்க ஒன்றாகும். பண்ணையார் வருகையின் வர்ணிப்பில் எதுகை, மோனை, உருவகம் போன்ற இலக்கண நெறிமுறைகள் சுட்டப்பெற்றுள்ளன. மேலும் அந்தந்த பகுதியில் பயன்படுத்தப்பட்டு வரும் வட்டார வழக்குச் சொற்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. அவை சொக்காரி-சொந்தக்காரி, இலாப

நட்டத்திற்குப் பாத்தியம் உடையவள், வக்கனை-வாய்சாலப் பேச்சு, கச்சற்காய்-கழற்சிர்க்காய் என்பனவாகும்.

சிற்றிலக்கியங்களில் பொதுவாக புராணச் செய்திகள் இடம் பெறும். அந்தவகையில் முக்கூடற்பள்ளு இலக்கியத்திலும் புராணச் செய்தி குறிப்பிடத்தக்க அளவில் இடம் பெற்றுள்ளன. நம்நாட்டில் வேளாண்தொழிலுக்கென்று ஒரு தனிச் சிறப்பானதோர்இடம் உண்டு அதைக் கூறுமிடத்து தாம் பயன்படுத்திய நெல்லு வகையான மணல்வாரி, பூம்பாளை, மங்கையாழ்வான், மச்சுமுறித்தான், பெருவெளர்ளை, மறுவல்லி, நீலம், வில்லூான்றி, பாரக்கடுக்கன், இராசவாணன் முதலானவற்றையும், விவசாயத் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்ட மாட்டு வகைகளையும் குறிப்பிட்டுள்ளனர்.

திருக்குற்றாலக்குறவஞ்சி

திருக்குற்றாலக்குறவஞ்சிர் குறும்பலா மரத்தினடியில் எழுந்தருளியிருக்கும் சிவ பெருமானைப் பாடுவதாக தலப் புராணவரலாறு குறிப்பிடுகிறது. இந்நூல் இனிய சந்த அமைப்புகளோடு, எளிய சொற்களால் எழுதப்பட்ட அரிய நூல். இதில் வரும் கண்ணிகள் முதலியன கருத்தை உருக்கும் மோனை, எதுகை நயங்களோடு நுண்ணிய பொருட் செறிவு கொண்டு விளங்குகின்றன. கற்பனை, உயார்வு நவிற்ச்சி, தற்குறிப்பேற்றம் இவைகளை அமைப்பதில் ஆசிரியார் மிகச் சிறந்து விளங்கியுள்ளார். சொற்கள் தட்டு தடையின்றிப் பாடல்களில் அமைத்துள்ளார்.ர் இந்நூலில் உள்ள பாடல்களுக்கு அமைந்துள்ள உரை இயல்புகளைக் கீழ் வருமாறு காணலாம்.

1.பொழிப்புரை

2.விளக்கவுரை

3.நயவுரை

4.வடமொழி சொல்லுக்கு தமிழ் விளக்கம் தருதல்

5.மக்கள் வழக்குச் சொற்களை உரைக்குள் வருவித்தல்

6.புராண விளக்கம் தருதல்

7.தருவித்து உரை கூறுதல்

8. பொருள்கோடலில் முறண்பாடு

9.மேற்கோள் பாடல் காட்டுதல்

10.பாடவேறுபாடு காட்டுதல்

11.கருத்துச் செறிவுகள்

12.உவமை நயங்கள்

13.ஓசை நயங்கள்

14.சேரி மொழிச்சிறப்புகள்

15.இறைவனைப் பற்றியக் கருத்துக்கள்

பொழிப்புரையில் பாடல்களுக்குரிய பொதுவான விளக்கமும், விளக்கவுரையில் சொல்லுக்குச் சொல் பொருள் கொடுக்கப்பட்டுள்ளதும், நயவுரையில் பாடல் முழுவதுக்கும் தொகுத்துப் பொருள் தருவது சாலச் சிறந்ததாகும்.

வடமொழிச் சொல்லுக்கு தமிழ் விளக்கம் தருவதைப்பாடல் தோறும் காணமுடிகின்றது. (எ-கா). சநு- என்ற வட சொல்லுக்கு உதவி என்றும், வங்காரம்-பொன் என்றும், பூஷணம்-அணி என்றும், திலதம்-பொட்டு என்றும், சிங்காரம்-அழகு என்பன போன்ற வட சொல் பாடல் தோறும் பயின்று வர அதற்கு தமிழ் விளக்கம் கொடுத்துள்ளனார்.

மக்கள் வழக்குச் சொற்களை உரைக்குள் வருவித்தல் ஒரு பாடலில் வித்து என்பதற்கு விதை என்றும் மக்கள் வழக்குச் சொல்லான கொட்டை என்பதையும் பயன்படுத்தியிருப்பதை அறியலாம். உவமை நயங்கள் மடவார்கண்போல் ஈட்டி கொண்டு என்பன போன்று உவமை நயங்களும் கக்கத்தில் இடுக்குவாயோ வெட்கத்தை அம்மே, தரிகொண்டு தில்லை நரி கொண்டுப் போச்சு, அதுக்குக் கிடந்து கொதிக்குதென் பேய்மனம் என்பன போன்ற உவமை நயங்களை நிறம்பக் காணலாம்.

இறைவனைப் பற்றிய கருத்துக்களில் குறும்பலவின் முளைத்தொழுந்த சிவக் கொழுந்து என்றும் நித்தார்திரி கூடலிங்கார், நன்நகார்ப் பொருமான், ஒரு பெண் முடியில் வைத்தார்போன்ற சொற்கள் இறைவனைப்பற்றிய கருத்தாக அமைந்துள்ளது. மேலும் இவை போன்ற ஏராளமான கருத்துப் பெட்டகமாக திருக்குற்றாலக் குறவஞ்சி விளங்குகின்றன.

நந்திக்கலம்பகம்

கலம்பகங்களுள் காலத்தால் முற்பட்டது நந்திக்கலம்பகமேயாகும். இந்நூல் கி.பி 9-ஆம் நூற்றாண்டின் இடையில் பாடப்பட்டதாகும். இக் கலம்பகம் நந்தி மன்னனது போர், வெற்றி, வீரம், காதல், கொடை, கல்வி, ஆகியவற்றை புகழ்ந்துப் பாடப்பட்டுள்ளது. இந்நூல் சரித்திர ஆராய்ச்சிக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நந்திக்கலம்பகத்தில் பல வரலாற்று சிறப்பு மிக்கச் செய்திகள் பொதிந்திருக்கின்றன. மேலும் புராணச் செய்திகளான சிவன் திரிபுரம் எரித்தது, கங்கையை தன் தலைசடை முடியில் அணிந்தது, சக்திக்கு உடம்பில் செம்பாதியை கொடுத்தது, சிவபொருமான் மன்மதனை எரித்த வரலாறு, இராவணன் கைலையை பெயர்த்தது, சிவன் நஞ்சுண்ட வரலாறு, எமனை உதைத்தது போன்ற புராண வரலாற்றுச் செய்திகள் படிக்கும் வாசகருக்கு புரியும் படி விளக்கப்பட்டுள்ளன.

நந்திக்கலம்பகப் பாடல்களில் இலக்கணக் குறிப்புகளை இடம் பெறச் செய்வதில் இதன் ஆசிரியார் தனிக்கவனம் செலுத்தியிருப்பர் போல,ர் ஏனெனில் பாடல் தோறும் இலக்கணக் குறிப்பும் அதற்கு உரையாசிரியார் முழுமையான இலக்கணம் விளக்கம் கொடுத்திருப்பதும் விரிவாகக் காணமுடிகிறது. (எ-கா) பரடு-இடக்கார் அடக்கல், தொண்டை-ஆகுபெயர், மெல்லியர்-பண்புத்தொகை போன்றவற்றைக் காணமுடிகிறது.

பாடல்களில் வடசொல் இடம்பெற்றிருப்பதும் அதற்கு உரையாசிரியார் விளக்கம் தருதல் படிப்பவர் எவ்வித ஐய்யமும் இன்றிப் பொருள் விளங்கிக் கொள்ளமுடிகிறது. இதனைத் தொடர்ந்து சில ஊர்களின் பெயர்களுக்கு விளக்கம் தரப்பட்டுள்ளது சிறப்பானதொரு அம்சமாகும். நந்திவர்மனின் வரலாற்றைக் கூறும் இந்நூலின் உரையாசிரியர் போல் கழக உரையாசிரியர்கள் பொழிப்புரை, தெளிவுரை என்ற இரண்டு நிலைகளிலும் சொல்லுக்குச் சொல் பொருள் தரும் விதமும் போற்றுதற்குரியது. இந்நூலில் சில பாடல்களுக்கு பாடபேதமும,ர் எடுத்துக்காட்டு பால்களுடன் விளக்கப்பட்டு உள்ளதும் கூடுதல் தகவல்களை தெரிந்துகொள்வதற்கு ஒரு நல் வாய்ப்பாக அமைந்துள்ளது.

உரைகள் தோன்றக் காரணம்

உரைகள் தோன்றியதற்குக் காரணங்களாக ஆய்வாளர்கள் விளக்குவன இவண் சுட்டத்தக்கன. குறிப்பிட்ட ஒரு காலத்தில் வாழும் மக்களிடையே அறிவுப்பசி தலையெடுக்கின்ற பொழுது, பழம்பெரும் நூல்களுக்கு அக்கால வாழ்க்கைச் சூழலுக்கேற்ப விளக்கம் தர அறிஞர்கள் முயன்றுள்ளனர். அவர்களுடைய உள்ளத்தில் ஆராய்ச்சி மனப்பான்மை மேலோங்கி நிற்கின்ற பொழுதும், பழமையில் புதியன காணவேண்டும் என்ற உணர்ச்சித் துடிப்பு உண்டாகின்ற பொழுதும் பழைய நூல்களுக்கு உரையெழுதி வந்துள்ளனர் என்பார் கி.ஆதிநாராயணன் (உரையாசிரியர்களும் திறனாய்வுக் கோட்பாடுகளும்,

ப.33). தமிழ் இலக்கண இலக்கியங்களின் பொருள் வளத்தையும் மொழி நுட்பத்தையம் அறிந்து கொள்வதற்கு உரைக்கல்வி மிகவும் இன்றியமையாதது. உரையாசிரியர்கள் மூலநூலை ஆராய்ந்து அதனுல் பொதிந்து கிடக்கும் நயத்தையும் சிறப்புக் கூறுகளையும் சொல்லாட்சித்திறனையும் புலப்படுத்தினர். ஒரு இலக்கிய படைப்பின் கண் இலக்கியச் சிறப்புக்களையொல்லாம் கலை நுணுக்கத்தின் உதவியால் வெளிப்படுத்துவதே சிறந்த உரையாகக் கருதுவர். பண்டைய உரையசிரியர்களும் தாம் உரை எழுதிய இலக்கியங்களின் பல்வேறு சிறப்புக் கூறுகளையும் தம் உரைமூலம் வெளிக்கொணர்ந்து புலப்படுத்தினர். வளம் நிறைந்த வற்றாத இலக்கிய மரபும் புலமை மரபும் கொண்டு இலக்கண இலக்கியங்களைக் கூர்ந்து ஆராய்ந்து தெளிவுறுத்தினர். சிற்றிலக்கியங்கள் காலம் தோறும் படிப்பவர் மனத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் வண்ணமாக அதற்கு உரை வகுத்த உரையாசிரிகள் வாசிப்பவரின் உள்ளக்கிடக்கையின் வெளிப்படாக தம் உரைகளை வகுத்துரைத்திருப்பது அவ்விலக்கியங்களின் சிறப்பிற்கு மேலும் சிறப்பு சேர்ப்பதாக அமைந்துள்ளன.

சிற்றிலக்கியங்கள்

சிற்றிலக்கியங்கள் : (பிரபந்தங்கள்) தமிழில் சங்க காலத்திலேயே தோன்றி படிப்படியாக வளர்ந்து பொ.யு. ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பின் தனி வடிவமாக இலக்கணம் அமைக்கப்பட்ட ஓர் இலக்கிய வகை. வடிவ அடிப்படையில் அடையாளம் காணப்படும் பலவகையான நூல்களின் தொகுப்புப் பெயரே சிற்றிலக்கியம். அந்த இலக்கணம் முழுமையானதோ, திட்டவட்டமானதோ அல்ல. காலந்தோறும் அது வளர்ந்து மாற்றமடைகிறது. பெருங்காப்பியங்கள், சிறுகாப்பியங்கள், புராணங்கள் ஆகியவை அல்லாத சிறியவகை நூல்களை இவை குறிக்கின்றன. இவற்றுக்கான இலக்கணங்களை குறிக்கும் நூல்கள் பாட்டியல் என்று கூறப்படுகின்றன. அவற்றில் பழைய பாட்டியல் நூல் பன்னிரு பாட்டியல். அது முந்தைய பாட்டியல் நூல்களில் இரு உருவாக்கப்பட்ட தொகுப்பு.

சிற்றிலக்கியம் எனும் சொல்

சிற்றிலக்கியம் என்னும் பெயர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் உருவானது. அதற்கு முன்பிருந்த பெயர் பிரபந்தங்கள். மு.அருணாச்சலம் 'பிரபந்தம் என்ற சொல் வடமொழி. செம்மையாக்கப்பட்டது என்பது இதன் பொருள். இக்காலத்தில் இதைச் சிற்றிலக்கியம் என்று சொல்கிறோம். காப்பியங்களை பேரிலக்கியங்கள் என்று சொல்லி இதனால் பிரபந்தத்தை சிற்றிலக்கியம் என்று சொல்கின்ற மரபு புதிதாகப் படைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.'

சிற்றிலக்கிய இலக்கணம்

சிற்றிலக்கியங்களை வகைப்படுத்தி இலக்கணம் வகுக்கும் நூல்கள் பல உள்ளன. அவை பொதுவாக பாட்டியல் நூல்கள் எனப்படுகின்றன. பன்னிரு பாட்டியல் அவற்றில் தொன்மையானது. பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை இலக்கண நூல்கள் வந்துகொண்டிருந்தன. இவை பொதுவாக ஒவ்வொரு நூல்களின் அமைப்பையும் வரையறை செய்கின்றன. பிள்ளைத்தமிழ் தான் பெரும்பாலானவற்றில் முதலில் சொல்லப்படுகிறது. கலம்பகமும் தெளிவான இலக்கண வடிவமைப்பு கொண்டது. உலா, தூது, மாலை, அந்தாதி போன்ற பிறவகைகள் பொதுவான இலக்கண வரையறை கொண்டவை. சிற்றிலக்கியங்கள் அனைத்துக்கும் பொதுவானதாக ஒரு வரையறை இல்லை. இன்று கிடைக்கும் நூல்களைக் கொண்டு அவற்றை கீழ்க்கண்டவாறு வகுக்கலாம்

சிற்றிலக்கியங்கள் குறிப்பிடத்தக்க நூலமைப்பு, பேசு பொருள் கொண்டவையாக இருக்கும். உதாரணமாக பிள்ளைத் தமிழ் பாட்டுடைத்தலைவனை குழந்தையாக உருவகித்து பாடுவது. பத்து பருவங்கள் கொண்டது.

சிற்றிலக்கியங்கள் கதைசொல்லும் இயல்பு கொண்டவை அல்ல. ஒரு குறிப்பிட்ட கோணத்தில் அமைந்த தனிப்பாடல்களின் தொகுதிகள் அவை. உதாரணம் உலா என்னும் வடிவம் பாட்டுடைத் தலைவனின் ஊர்க்கோலம் கண்டு வெவ்வேறு பெண்கள் கொள்ளும் வியப்பு, காதல் முதலிய மெய்ப்பாடுகளை விவரிப்பவை

சிற்றிலக்கியங்கள் காப்பியங்களைப் போல அடிப்படையான தத்துவப்பார்வையையோ அறநோக்கையோ முன்வைப்பவை அல்ல. உதாரணம், சிலப்பதிகாரம் அந்நூலின் பேசுபொருள் என "அரசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்று ஆவதூஉம் உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும் ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்' அந்நூல் வலியுறுத்தும் கருத்து என்கிறது. அப்படி ஒரு மையத்தரிசனம் சொல்லப்படாவிடினும் பெருநூல்களில் இருக்கும். சிற்றிலக்கியங்களில் அப்படி ஒரு தத்துவமோ மெய்யியல் வெளிப்பாடோ இருக்காது

காப்பியங்கள் அறம் பொருள் இன்பம் வீடு என நான்கு மானுடநிலைகளைச் சொல்லுவது, ஐந்து நிலங்களை விவரிப்பது, நகரங்கள் ஆறுகள் போர்கள் முதலியவற்றை விவரிப்பது என ஒரு தொகுப்புத்தன்மை கொண்டிருக்கும். சிற்றிலக்கியங்களில் அவை இருப்பதில்லை.

எண்ணிக்கை

பிரபந்தங்கள் 96 என்பது பிற்காலத்துக் கணக்கு. 'தொண்ணூற்றாறு கோல பிரபந்தங்கள் கொண்ட பிரான்' என படிக்காசுப்புலவர் தன்னை ஆதரித்த சிவந்தெழுந்த பல்லவராயன் என்னும் சிற்றரசனைப்பற்றி பொயு 1686 -ல் பாடிய உலாவில் குறிப்பிட்டிருப்பதை உ.வே.சாமிநாதய்யர் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஆனால் அதற்கு முந்தைய சிற்றிலக்கிய இலக்கணங்களை வகுக்கும் தொன்மையான பாட்டியல் நூல்களில் அவ்வெண்ணிக்கை இல்லை என மு.அருணாசலம் சொல்கிறார். மிகப்பழைய பாட்டியல் நூலான பன்னிரு பாட்டியலில் சொல்லப்படும் நூல்வகை 81 தான். பின்னர் வந்த பாட்டியல்நூல்கள் சொல்லும் நூல்வகைகள் பின்னர் உருவானவை.

வீரமாமுனிவர் எழுதிய சதுரகராதி (பொ.யு. 1732) யில் தான் 96 பிரபந்தங்களின் எண்ணிக்கையும் பட்டியலும் வருகிறது. ஆனால் சதுரகராதி சொல்லும் சில பிரபந்த வகைகள் பிற்காலத்தைய பாட்டியல் நூல்களில் இல்லை. அவற்றில் வேறு நூல்வகைகள் குறிப்பிடப்படுகின்றன

என்று 16-ம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனப்படும் பிரபந்த மரபியல் 96 என்னும் எண்ணிக்கையைக் குறிப்பிடுகிறது. இந்நூல் முழுமையும் சிதைந்த நிலையில் கிடைக்கின்றது

96 என்ற எண் சாத்திரங்களின் எண்ணிக்கையாக பொதுவாகச் சொல்லப்பட்டு வந்தது என்று மு.அருணாசலம் சொல்கிறார். மணிமேகலையில் பாசண்ட சாத்தன் "பண்ணாற் திறத்திற் பழுதின்றி மேம்பட்ட தொண்ணூற்றாறு வகை கோவையும் வல்லவன்" என்று சொல்கிறான். 96 என்னும் எண் முக்கியமாதலால் எழுதப்பட்ட எல்லாவகை பாடல் வகைகளையும் இணைத்து அந்த பட்டியல் உருவாக்கப்பட்டிருக்கலாம் என்பது மு.அருணாசலம் கூற்று.

சிற்றிலக்கியங்களின் காலம்

சங்க காலம்

சிற்றிலக்கியம் என பிற்காலகட்டத்தில் அடையாளப்படுத்தப்பட்ட இலக்கிய வகைமையின் வடிவங்கள் சங்க காலத்திலேயே தோன்றிவிட்டன. சங்க இலக்கியத்தை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனப் பிரிப்பதுண்டு. இவற்றுள், பத்துப்பாட்டில் 10 நூல்கள் உள்ளன. அவற்றுள் 5 நூல்கள் ஆற்றுப்படை என்ற சிற்றிலக்கிய வகையைச் சேர்ந்தவை. ஒரு வள்ளலை நோக்கி செல்லும்படி புலவன் பிற புலவர்களை அழைப்பது ஆற்றுப்படை என்னும் வடிவம். சங்க காலத்துப் பாடல்கள் தனிப்பாடல்களே. பின்னாளில் அவை தொகுக்கப்பட்டன. ஆற்றுப்படை நூல்கள் சங்க காலத்தின் இறுதியில் தோன்றியவை. இவை தொடர்செய்யுள்கள். காவியம் என்பதன் தொடக்க கால வடிவங்கள். இவற்றுக்கு நிலையான ஒரு வடிவம் உள்ளது. இதுவே சிற்றிலக்கியம் என பின்னர் வளர்ந்த வடிவமுறை.

திருமுருகாற்றுப்படை - நக்கீரர்

பொருநர் ஆற்றுப்படை - முடத்தாமக் கண்ணியார்

சிறுபாணாற்றுப்படை - நத்தத்தனார்

பெரும்பாணாற்றுப்படை - கடியலூர் உருத்திரங் கண்ணனார்

கூத்தராற்றுப்படை - இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்

சங்கம் மருவிய காலம்

சங்கம் மருவிய காலத்து நூல்களின் தொகுப்பான பதினெண் கீழ்க்கணக்கில் மேலும் சில சிறு நூல்வடிவங்கள் காணப்படுகின்றன. நாநூறு,நாற்பது என நூல்களை தொகுப்பது சமணர்களின் வழிமுறை. அவ்வகையில் அவர்களால் பொதுவான பேசுமுறை, பொதுவான கருத்துநிலை ஆகியவற்றுடன் நிலையான எண்ணிக்கையில் உருவாக்கப்பட்ட நூல்கள் இை

இனியவை நாற்பது - மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ் சேந்தனார்

இன்னா நாற்பது - கபிலர்

கார் நாற்பது - கண்ணங் கூத்தனார்

களவழி நாற்பது – பொய்கையார்

பக்தி காலகட்டம்

பக்தி இலக்கியக் காலத்தில் நாயன்மார்கள் இயற்றிய திருமுறைகள், பன்னிரு ஆழ்வார்கள் இயற்றிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ஆகியவற்றுள் பல்வேறு சிற்றிலக்கியங்கள் காணப்படுகின்றன.

திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் - காரைக்கால் அம்மையார்

திருத்தாண்டகம் - திருநாவுக்கரசர்

திருத்தசாங்கம் - மாணிக்கவாசகர்

திருக்கோவையார் - மாணிக்கவாசகர்

திருக்குறுந்தாண்டகம் - திருமங்கை ஆழ்வார்

திருநெடுந்தாண்டகம் - திருமங்கை ஆழ்வார்.

சிற்றிலக்கியக் காலம்

பல்வேறு சிற்றிலக்கிய வகைகள் உருவாகிக்கொண்டே இருந்தாலும் கி.பி. 15-ம் நூற்றாண்டு முதல் 19-ம் நூற்றாண்டு வரை சிற்றிலக்கிய வகைகள் மேலோங்கி நின்றன. இக்காலத்தைச் சிற்றிலக்கியக் காலம் என்று அழைக்கின்றனர்.

சிற்றிலக்கியங்கள் பல வகைப்படும். கோவை, உலா, அந்தாதி, கலம்பகம், தூது, மாலை, பரணி, மடல், பள்ளு, குறம் முதலாகிய பலவகைச் சிற்றிலக்கியங்கள் தமிழில் உள்ளன. கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து சிற்றிலக்கியங்கள் தோன்றியுள்ளன. காரைக்கால் அம்மையார் அற்புதத் திருவந்தாதி, இரட்டை மணிமாலை ஆகியவற்றைப் பாடியுள்ளார். இவை காலத்தால் மிகவும் பழமையானவை.

- தெய்வங்கள், குறுநில மன்னர்கள், வள்ளல்கள் ஆகியோரைப் பாடுதல்.
- சிலேடை என்ற இருபொருள் அமையப் பாடுதல்.

- பலரையும் கவரவேண்டும் என்ற கருத்தில் பெண்களை வருணித்தல்.
- தம் புலமையை வெளிக்காட்டும் எண்ணத்தோடு பாடுதல்.

ஆகியன சிற்றிலக்கியங்கள் படைத்தோரின் நோக்கங்களாக இருந்தன.

சிற்றிலக்கியங்களின் பண்புகள்

சமயம், சாதி, இன, குலப்பிரிவுகள் போன்றவை தமிழரிடையே ஆதிக்கம் செய்யத் தொடங்கிவிட்டமையினைப் பிற்காலப் பாண்டியர் கால, நாயக்கர் காலத் தமிழகம் காட்டுகின்றது. பேரிலக்கியங்கள் தோன்றுகின்ற காலச்சூழல் மறைந்து, அந்தாதி, உலா, கலம்பகம், பிள்ளைத் தமிழ், தூது, பரணி, கோவை, மாலை போன்ற சிற்றிலக்கியங்கள் பெருகத் தோன்றும் காலம் மலர்ந்தது. சமயத் தலைவர்களையும், கொடையாளிகளையும், தெய்வங்களையும், குறுநில மன்னர்களையும், புலவர்கள் புனைந்து பாடத் தொடங்கினர். அளவுக்கு மீறிய புகழ்ச்சி, மீண்டும் மீண்டும் பல நூல்களில் இடம்பெறும். அலுப்பூட்டக்கூடிய, செயற்கையான வருணனைகள், பிறமொழி கற்பித்த உத்திகள், அணிகள், பிறமொழிச் சொற்கள் ஆகியன இக்காலத்து இலக்கியங்களின் பண்புகளாக அமைந்தன.

தமிழில் சிற்றிலக்கியங்கள்

தொண்ணூற்றாறு வகை சிற்றிலக்கியங்கள்

தமிழ் இலக்கியத்தில் சிற்றிலக்கியம் என்பது தெய்வங்களையும், தமிழ்ப் பெரியோர்களையும் குழந்தையாகக் கருதி, அவர்களைப் புகழ்ந்து பாடுவதாகும்.

சிற்றிலக்கியத்தின் இலக்கணம்:

சிற்றிலக்கியம் பாடல் எண்ணிக்கை அல்லது அடிகளின் எண்ணிக்கை அளவில் சுருங்கியதாக அமைவது.

அகப்பொருள், அல்லது புறப்பொருளில் ஏதேனும் ஒரு துறையைப் பற்றியதாக அமையும். கோவை போன்ற சில சிற்றிலக்கியங்கள் பல துறைகளைக் கொண்டு அமைவதும் உண்டு.

பாடப்பெறும் கடவுள் அல்லது மன்னன் அல்லது வள்ளல் ஆகியோருடைய வாழ்வின் ஒரு சிறு கூறு மட்டுமே விளக்கப்பட்டிருக்கும். எடுத்துக்காட்டாக: உலா இலக்கியம் தலைவன் உலாவரும் காட்சியை மட்டுமே சிறப்பித்துப் பாடப்படுவது.

அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு உறுதிப் பொருள்களுள் ஏதேனும் ஒன்றைத் தருவதாக அமைவது சிற்றிலக்கியம்.

இவ்வகையில் பள்ளு, தூது, உலா, பிள்ளைத்தமிழ், கலம்பகம், கோவை, குறவஞ்சி, பரணி, அந்தாதி, மடல் போன்ற பலவகை இலக்கியங்கள் சிற்றிலக்கியம் என்ற வகைமையுள் அடங்கும். சிற்றிலக்கியங்கள் வடமொழியில் பிரபந்தங்கள் எனப்படுகின்றன. பிரபந்தம் என்பது இலக்கிய வகைகள் பலவற்றைக் குறிக்கும் ஒரு பொதுப்பெயர் ஆகும். சமக்கிருதத்தில் பிரபந்தம் என்னும் சொல், "கட்டப்பட்டது" எனப் பொருள்படும்.

சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கை

சிற்றிலக்கியவகைகளின் எண்ணிக்கை தொண்ணூற்றாறு என மரபாக கூறப்படுகிறது. இந்த தொண்ணூற்றாறு வகைகளையும் தாண்டி பலவகை சிற்றிலக்கியங்கள் வளர்ந்தும் விரிந்தும் தொண்ணூற்றாறு என்ற எண்ணிக்கைக் கடந்து பிற்காலத்தில் கூடிவிட்டது. இதன் எண்ணிக்கை குறித்து அறிஞர்களிடையே கருத்து மாறுபாடு உள்ளது. இந்த எண்ணிக்கையானது குறைந்தபட்சம் 186 என்றும் அதிகப்பட்சமாக 417 என்றும் கூறப்படுகிறது.

சிற்றிலக்கிய வகைகள்

அகப்பொருட்கோவை

அங்கமாலை

அட்டமங்கலம்

அரசன்விருத்தம்

அலங்காரபஞ்சகம்

அனுராகமாலை

ஆற்றுப்படை

இணைமணி மாலை

இயன்மொழி வாழ்த்து

இரட்டைமணிமாலை

இருபா இருபது

உலா

பவனிக்காதல்

உலாமடல்

உழத்திப்பாட்டு

உழிஞைமாலை

உற்பவமாலை

உளசல்

உளர் நேரிசை

உளர்வெண்பா

உளரின்னிசை

எண்செய்யுள்

ஐந்திணைச் செய்யுள்,

ஒருபா ஒருபது

ஒலியந்தாதி

கடைநிலை

கண்படைநிலை

கலம்பகம்

காஞ்சிமாலை

காப்புமாலை

குழமகன்

குறத்திப்பாட்டு

கேசாதிபாதம்

கைக்கிளை

கையறுநிலை

சதகம்

சாதகம்

சிறுகாப்பியம்

சின்னப்பூ

செருக்களவஞ்சி

செவியறிவுறூஉ

தசாங்கத்தயல்

தசாங்கப்பத்து

தண்டகமாலை

தாண்டகம்

தாரகைமாலை

தானைமாலை

எழுகூற்றிருக்கை

தும்பைமாலை

துயிலெடை நிலை

தூது

தொகைநிலைச்செய்யுள்

நயனப்பத்து

நவமணிமாலை

நாமமாலை

நாழிகைவெண்பா

நான்மணிமாலை

நானாற்பது

நூற்றந்தாதி

நொச்சிமாலை

பதிகம்

பதிற்றந்தாதி

பரணி

பல்சந்தமாலை

பன்மணிமாலை

பாதாதிகேசம்

பிள்ளைக்கவி

புகழ்ச்சி மாலை

புறநிலை

புறநிலைவாழ்த்து

பெயர் நேரிசை

பெயரின்னிசை

பெருங்காப்பியம்

பெருமகிழ்ச்சிமாலை

பெருமங்கலம்

போர்க்கெழுவஞ்சி

மங்கலவள்ளை

மணிமாலை

முதுகாஞ்சி

மும்மணிக்கோவை

மும்மணிமாலை

முலைப்பத்து

மெய்க்கீர்த்திமாலை

வசந்தமாலை

வரலாற்று வஞ்சி

வருக்கக் கோவை

வருக்கமாலை

வளமடல்

வாகைமாலை

வாதோரணமஞ்சரி

வாயுறைவாழ்த்து

விருத்தவிலக்கணம்

விளக்குநிலை

வீரவெட்சிமாலை

வெட்சிக்கரந்தைமஞ்சரி

வேனில் மாலை

மற்றும்

வண்ணம்

போன்றனவும் உண்டு.

நிகண்டுகள்

தமிழில் தோன்றிய கருவி நூல்களாகிய நிகண்டுகள் என்பவையே, அகரமுதலி(அகராதி)களுக்கு ஆதார நூல்களாக அமைந்தன. தமிழ் நிகண்டுகளில், சில அச்சாகாமற் போக, அச்சிடப்பட்டவற்றுள்ளும், சில எங்கும் கிடைக்காத அளவிற்கு அருகிப் போய்விட்டன. சில நிகண்டுகள் மட்டுமே பலமுறை பதிப்பிக்கப் பெறுதற்குரிய பேறு பெற்றன. இந்திய மொழிகள் சிலவற்றுள் அகராதி வடிவில் செய்யப்பெற்ற நூல்களும் நிகண்டுகள் எனும் பெயர் பெற்றுள்ளன. எனினும் செய்யுள் வடிவில் இயற்றப் பெற்றனவே தமிழில் மொழி நோக்கிலன்றி, மருத்துவம், சோதிடம் போன்ற துறைகளிலும் நிகண்டுகள் தோன்றியுள்ளன. மொழிசார்ந்த நிலையில் 25 நிகண்டுகள் பதிப்பிக்கப் பெற்றன. இப்பணி 1819 முதல் இன்றுவரை நடைபெற்று வருகிறது. இத்துறையில் சேந்தன் திவாகரம், பிங்கலந்தை, உரிச்சொல் நிகண்டு, சூடாமணி நிகண்டு ஆகியன மட்டும் பல பதிப்புகளைப் பெற்றன. பெரும்பாலானவை ஒருமுறை மட்டும் பதிப்பிக்கப்பெற்றன. நிகண்டு பதிப்பித்தோருள் வையாபுரிப்பிள்ளை முதலிய மிகச் சிலரே சரியான பதிப்பு நியதிகளைப் பின்பற்றியுள்ளனர். மிகப் பெரும்பாலோர் தம் மனம்போனபோக்கில் நிகண்டுகளைப் பதிப்பித்துள்ளதால் நிகண்டுப் பதிப்புகளில் பலவகைப் பிழைகள் நேர்ந்துள்ளன. இப்பிழைகளைக் கண்டறிந்து நீக்குவது முதன்மைத் தேவையாகும்.

அகராதி நிகண்டு - உ.வே.சா. நூல் நிலையம் 1983இல் வெளியிட்ட இந்நிகண்டே, அகராதி வடிவில் அமைந்துள்ளது.

கந்தசுவாமியம் - 19ஆம் நூற்றாண்டில் ஒருமுறை மட்டுமே அச்சானது.

சிந்தாமணி நிகண்டு - 19ஆம் நூற்றாண்டில் ஒருமுறை மட்டுமே அச்சானது. காண்க: விக்சனரியின் சிந்தாமணி நிகண்டின் சொற்கள்

நேர்ச்சொல் நிகண்டு - 19ஆம் நூற்றாண்டில் ஒருமுறை மட்டுமே அச்சானது.

நவமணிக்காரிகை - 19ஆம் நூற்றாண்டில் ஒருமுறை மட்டுமே அச்சானது.

அபிதான தனிச் செய்யுள் நிகண்டு - 19ஆம் நூற்றாண்டில் ஒருமுறை மட்டுமே அச்சானது.

சேந்தன் திவாகரம் - பதிப்பாசிரியர்களால் நேர்ந்த பிழைகள் உள்ளவை

பிங்கலந்தை என்னும் பிங்கல நிகண்டு - பதிப்பாசிரியர்களால் நேர்ந்த பிழைகள் உள்ளவை

சூடாமணி நிகண்டு - பதிப்பாசிரியர்களால் நேர்ந்த பிழைகள் உள்ளவை (வீரைமண்டலவன் நிகண்டுஸ்ரீவேதகிரியார் சூடாமணி) காண்க: விக்சனரியின் சூடாமணி நிகண்டின் சொற்கள்

பொருட்டொகை நிகண்டு - 1920ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பாக வெளிவந்தது. அதன் பதிப்பாசிரியர் சே.ரா. சுப்பிரமணிய கவிராயர் என்பார் ஆவார்.

வட மலை நிகண்டு 1983 உ.வே.சா. நூல் நிலைய வெளியீடாக,. இரா. நாகசாமி அவர்கள் அதனைப் பதிப்பித்தார்.

பொதிகை நிகண்டு

நிகண்டு நூல்கள்

நிகண்டுக்குத் தோற்றுவாய் தொல்காப்பியச் சொல் அதிகாரத்தின் உரியியல் ஆகும். அதில் உள்ள 100 நூற்பாக்களும் நிகண்டின் பொருளையே கூறுவன. சிறுபகுதி இதற்கு முந்திய இடையியலிலும், பொருளதிகார மரபியலிலும் காணப்படும். இவ்விடங்களில் தாம் விளக்க வேண்டும் என்று கருதிய சொற்களை மட்டுமே தொல்காப்பியர் விளக்கி உரைத்தார். எல்லாச் சொற்களையும் சொல்ல அவர் எண்ணவில்லை. உரியியல், 'உரிச்சொல் கிளவி விரிக்கும் காலை" என்று தொடங்குகிறது. நிகண்டு என்ற சொல் 15ஆம் நூற்றாண்டு வரை வழக்கத்திற்கு வரவில்லை.

கூட்டம் எனினும் நிகண்டு எனினும் ஒக்கும்

என்பது சங்கர நமசிவாயர் நன்னூலில் (சூத்திரம் 460க்கான உரை) எழுதியிருக்கும் குறிப்பு. 'இவ்விலக்கணம் அறிவதற்கு முன் நிகண்டறிக" என்றாம், அறியும் முறை அதுவாகலான்" என்றும் அவர் எழுதுகிறார். திண்ணைப் பள்ளிக்கூடங்களில் சிறுபிள்ளைகள் - ஏழு எட்டுக்கு உட்பட்ட வயதில் - நிகண்டினை நெட்டுருச் செய்து வந்தார்கள்.

முதன்முதலாக 16வது நூற்றாண்டில் தான், 'மண்டல புருடர்" தம் நூலை, 'நிகண்டு சூடாமணி என்று ஒன்று சொல்வேன்" என்கிறார். அதற்கு முன்பு வரை நிகண்டுகள் உரிச்சொல் என்ற பெயராலேயே வழங்கின. சொல்லுக்குப் பொருள் விளக்கம் தரும் அகராதிகளாக நிகண்டுகள் இலங்கின.

திவாகர நிகண்டு

'நிகண்டு" எனும் பிரிவில் திவாகரம் முதலில் தோன்றிய நூல் ஆகும். இதன் காலம் கி.பி.9ஆம் நூற்றாண்டு ஆகும். பண்டைக்காலத்தில் வாழ்க்கையின் எத்துறையிலும் முக்கியமான பொருளை நினைவில் இருத்த வேண்டும் என்றால் அதைப் பாட்டாகவே எழுதி வைத்தார்கள். அதே நிலை இடைக்காலத்திலும் தொடர்ந்தது. இலக்கணமும் பாட்டாகவே எழுதி வைக்கப்பட்டிருத்தலைக் காணலாம். நிகண்டுகள் முதலியன இன்றுவரை பாட்டாகவே இருப்பதை இதற்கு உதாரணமாகச் சொல்லாம்.

தமிழின் ஆதி நிகண்டு திவாகரம் ஆகும். திவாகரத்தைச் செய்தவர் திவாகரர் ஆவார். 'திவாகரர்", 'திவாகரன்" என்ற சொற்களுக்கு, 'பகலைச் செய்பவன், சூரியன்" என்று பொருள். படைக்கலங்கள் பற்றி இவர் விரிவாகவும், விளக்கமாகவும் கூறி உள்ளார். எனவே இவர் ஒரு போர் வீரராக இருத்தல் வேண்டும் என்று பேராசிரியர் அருணாசலம் கூறுவார்.

"அம்பர் காவலன் சேந்தன் அம்பிகை மீது அந்தாதி பாடினான்" என்று சொல்ல வந்த திவாகரர், அம்பிகையைப் புகழ்வதால் இவர், சைவர் என்று கூறுவர். அம்பிகையைப் புகழ்வது கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். முனிவர் என்ற பெயரை வைத்துச் சமணர் என்பது தவறு என்கிறார் பேராசியர் அருணாசலம். 880இல் திவாகரர் நிகண்டு செய்தார்.

திவாகரம் 12 பிரிவுகளைக் கொண்டது. அவை,

(1) தெய்வப் பெயர்த் தொகுதி

(2) மக்கள் பெயர்த் தொகுதி

(3) விலங்கின் பெயர்த் தொகுதி - மக்கள், தேவர், தாவரம் அல்லாத பிற யாவும்

(4) மரப் பெயர்த் தொகுதி - தேவதாரு முதல் மூங்கில் வரை 79 மரங்கள்.

(5) இடப் பெயர்த் தொகுதி - உலகு, திசை, கடல், மலை, ஆறு முதலியன.

(6) பல்பொருள் பெயர்த் தொகுதி - பிற தொகுதிகளில் சொல்லாதன - உலோகம், மணி போன்றவை.

முதலியவை ஆகும்.

பதினோராம் பகுதியாகிய ஒரு சொல் பலபொருள் பெயர்த் தொகுதியில் - ‘அரி“ என்ற ஒரு சொல்லை எடுத்து அதற்கு 23 பொருள் தந்து இதில் 15 தமிழ்ப் பொருள் ˙ 8 வடமொழியில் இருந்து வந்த பொருள் என்கிறார்.

12ஆம் பகுதி பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி ஆகும். இது பிற்காலத்தில், ‘தொகை அகராதி“ எனப்பட்டது (தொகை - தொகுதியாக, கூட்டமாக உள்ள பொருள்கள்)

கூறியது கூறினும் குற்றமில்லை

வேறொரு பொருளை விளக்குமாயின்

என்ற முன்னுரையோடு ஒன்றில் தொடங்கி 83 வரையில் தொகைப் பொருளைக் கூறுகிறார்.

ஆங்கிலத்தில் உள்ள, ‘னுஉைவழையெசல“, ‘வாநளயரசயள“ என்ற இரண்டும் நிகண்டை ஒத்தவை. சொல்லுக்குப் பொருள் தருவது அகராதி. திவாகர நிகண்டின் பதினொராம் பகுதி அகராதி போன்றது. ஒத்த கருத்துடைய சொற்களை ஓரிடத்தில் சேர்த்துக் கொடுப்பது, ‘வாநளயரசயள“ ஆகும். நிகண்டின் முதல் பத்துத் தொகுதிகளும் இவ்வமைப்பினது. ஆங்கில மொழியில் ரோஜட் என்பவர் 19வது நூற்றாண்டில் முதன்முதலாக இப்படி ஒரு தொகுதி செய்து வெளியிட்டார். தமிழில் ஒன்பதாவது நூற்றாண்டிலேயே செய்யுள் வடிவத்தில் திவாகரரால் செய்யப்பட்டு, அதைத் தழுவிப் பின்னர் இருபதாம் நூற்றாண்டு வரை சுமார் இருபது நிகண்டுகள் வந்திருப்பது தமிழின் சிறப்பாகும்.

தமிழ் நிகண்டுகள் பட்டியல்

தமிழில் அகராதிகளுக்கு முன்னோடியாக இருந்தவை நிகண்டுகள். நிகண்டு என்பதற்கு சொல் தொகை, சொல் தொகுப்பு, சொல் கூட்டம் என்பது பொருள். நிகண்டுகள் பலபொருள் குறித்த ஒரு சொல் எனவும், ஒரு பொருள் குறிக்கும் பல சொற்கள் எனவும் இருவகைப்படும்.

நிகண்டுகளின் தோற்றம்

‘நிகண்டு’ என்பது வடமொழிச் சொல். வடமொழியில் வேதத்திற்கு அங்கமாய், வைதீகச் சொற்களின் பொருட்களை உணர்த்தும் நூல்களுக்கு ‘நிகண்டு’ என்ற பெயர் வழங்கப்பட்டது. கால மாற்றத்தில் சொற் பொருள் உணர்த்தும் அனைத்து விளக்க நூல்களும் ’நிகண்டு’ என்ற பெயரில் அழைக்கப்பட்டன. அகராதிகள் போல முற்காலத்தில் நிகண்டுகள் பயன்பட்டன.

அச்சு நூல்கள் தோன்றாத கால கட்டத்தில், எளிதில் நினைவில் வைத்துக் கொள்வதற்காக, செய்யுள் வகையில் சொற்களையும் அவற்றின் பொருள்களையும் வரிசைப்படுத்தி, நிகண்டுகள் இயற்றப்பட்டன. முதன்முதலில் நிகண்டுகளைத் தமிழுக்கு அளித்தவர்கள் சமணர்கள்.

நிகண்டுகளின் அமைப்பு

நிகண்டுகள் செய்யுள் வடிவில் அமைந்தவை. அவற்றில் ஒருபொருட் பல்பெயர், ஒருசொற் பல்பொருள், தொகைப் பெயர் என மூன்று பிரிவுகள் உண்டு. பாடல்கள் இலக்கண நூற்பா வகைமையில் அமைந்துள்ளன. வெண்பா, ஆசிரியப்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம் போன்ற வகைகளினால் அமைந்த நிகண்டுகளும் உள்ளன.

தமிழில் சூடாமணி நிகண்டு, பிங்கல நிகண்டு, திவாகர நிகண்டு, கயாதர நிகண்டு, உரிச்சொல் நிகண்டு எனப் பல வகை நிகண்டு நூல்கள் உள்ளன. திவாகர நிகண்டே தமிழில் முதலில் தோன்றிய நிகண்டு நூலாகக் கருதப்படுகிறது.

நிகண்டு நூல்களின் பட்டியல்

நிகண்டின் பெயர்

ஆசிரியர்

திவாகரம்

திவாகரர்

பிங்கலந்தை

பிங்கலர்

சூடாமணி நிகண்டு

மண்டலபுருடர்

அகராதி நிகண்டு

சிதம்பர ரேவணசித்தர்

உரிச்சொல் நிகண்டு

காங்கேயர்

கயாதரம்

கயாதரர்

பல்பொருள் சூடாமணி நிகண்டு

ஈசுரபாரதியார்

வடமலை நிகண்டு

ஈசுரபாரதியார்

கைலாச நிகண்டு சூடாமணி

கைலாசர்

பாரதிதீபம்

திருவேங்கட பாரதி

ஆசிரிய நிகண்டு

ஆண்டிப் புலவர்

அரும்பொருள் விளக்க நிகண்டு

அருமருந்தைய தேசிகர்

தொகை நிகண்டு

சுப்பிரமணியக் கவிராயர்

பொருள்தொகை நிகண்டு

சுப்பிரமணிய பாரதி

பொதிகை நிகண்டு

சாமிநாதக் கவிராயர்

நாமதீப நிகண்டு

சிவசுப்பிரமணியக் கவிராயர்

வேதகிரியார் சூடாமணி நிகண்டு

வேதகிரி முதலியார்

கந்தசுவாமியம்

சுப்பிரமணிய தேசிகர்

இலக்கத் திறவுகோல்

ஆசிரியர் பெயர் தெரியவில்லை

நாநார்த்த தீபிகை

முத்துசுவாமிப் பிள்ளை

சிந்தாமணி நிகண்டு

வைத்தியலிங்கம் பிள்ளை

அபிதானத் தனிச்செய்யுள் நிகண்டு

கோபாலசாமி நாயகர்

விரிவு நிகண்டு

அருணாசல நாவலர்

அபிதான மணிமாலை

திருவம்பலத்தின்னமுதம் பிள்ளை

அகராதி மோனைக் ககராதி எதுகை

ஆசிரியர் பெயர் தெரியவில்லை

சொற்சேர்வை பொருட்சேர்வை

ஆசிரியர் பெயர் தெரியவில்லை

அகராதி நிகண்டு

ஆசிரியர் பெயர் தெரியவில்லை

மஞ்சிகன் ஐந்திணைச் சிறுநிகண்டு

மஞ்சிகன்

நவமணிக் காரிகை நிகண்டு

அரசஞ் சண்முகனார்

நீரரர் நிகண்டு

ஈழத்துப் பூராடனார்

தமிழ் உரிச்சொற் பனுவல்

இராமசுப்பிரமணிய நாவலர்.

முதன்முதலில் நிகண்டுகளைத் தமிழுக்கு அளித்தவர்கள் சமணர் ஆவர். சொற்பொருளை விளக்குவது நிகண்டுகள். நிகண்டு, சொற்களை அடுக்கிக் கூறுவது. இவை பலபொருள் குறித்த ஒரு சொல் எனவும், ஒரு பொருள் குறிக்கும் பல சொற்கள் எனவும் இருவகைப்படும். எடுத்துக் காட்டாக, 'பகவனே ஈசன் மாயோன், பங்கயன், சினனே புத்தன்' (சூடாமணி நிகண்டு) பகவன் என்னும் சொல், சிவன், திருமால், பிரமன், அருகன், புத்தர் ஆகிய பொருள்களைத் தரும். 'வழுதி கூடற்கிறைவன், மீனவன், பஞ்சவன், மாறன், வேம்பின் கண்ணியன், மதிகுலன், கைதவன், கௌரியன், தமிழ் நாடன், வண்புனற் குமரி சேர்ப்பன், செழியன், வைகைத் துறைவன், மீனம் உயர் கொடியினன், தென்னவன், பொதியவெற்பன், செப்புமீரெட்டுமே பாண்டியன் பெயராம்' (ஆசிரிய நிகண்டு) பாண்டிய மன்னனைக் குறிக்க இத்தனைச் சொற்கள் உள்ளன. அகராதி முறைப்படி இச்சொற்கள் அகரவரிசையில் அமைக்கப்படவில்லை.

சிறப்புக் கூறுகள்

நிகண்டு, மொழிக்கல்விக்குப் பெரிதும் துணைபுரிவதாகும். மொழியின் பரந்துபட்ட சொற்கூட்டத்தைப் பயில்பவனுக்கு அகராதி பயன்படுகிறது. அகராதி போல ஒரு காலகட்டத்தில் நிகண்டுகள் பயன்பட்டன.

அகராதிகள் ஒரு மொழியின் வளமையைக் காட்டி நிற்கும். தமிழில் உள்ள நிகண்டுகள் ஒருவிதத்தில் அகராதிகள் எனலாம். ஆனால் இன்றைய அகராதிகள் போல் அவை இல்லை. ஆயினும் அகராதியின் பயனை அவை ஓரளவு தந்தன என்பதை மறுப்பதற்கில்லை.

நிகண்டுகள் தோன்றக் காரணம்

மேலைநாடுகளில் அகராதியை இயற்றும் முயற்சி 18-ஆம் நூற்றாண்டில் தான் துவங்கியது.

தொல்காப்பியம் அகராதிக் கலைக்கான மூலக்கூறுகளை உரியியலில் எடுத்துக் கூறுகிறது.

அச்சுக்கலை தோன்றாத கால கட்டத்தில் எளிதில் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய செய்யுள் வகையில் சொற்களையும் அவற்றின் பொருள்களையும் வரிசைப்படுத்தி நிகண்டுகள் இயற்றப்பட்டன.

பள்ளிகளை ஆங்காங்கே அமைத்துக் கல்வியைப் பரப்பிய சமணர்கள் நிகண்டுகளைப் படைப்பதில் ஆர்வம் கொண்டதில் வியப்பேதுமில்லை. ஏனென்றால் மொழி பயிலவும் பயிற்றுவிக்கவும் அவை பெரிதும் பயன்பட்டிருக்க வேண்டும்.

நிகண்டிற்குக் கடைகாலிட்டுக் (அடிப்படை அமைத்து) கோட்டை கட்டியவரெல்லாம் சமணர்களே ஆவர். மேனாட்டார் அகராதி தொடங்கு முன் சமணரின் நிகண்டு முயற்சியே சிறந்திருந்தது. தொல்காப்பிய உரியியலில் தொல்காப்பியர் சொற்களுக்குப் (313) பொருள் விளக்கம் தருகிறார். அகராதிக் கலைக்கு வேண்டிய மூலக்கூறுகளை உரியியலில் கண்டறிந்த சமணச் சான்றோர்க்கு நிகண்டுகளைத் தோற்றுவிக்க அதுவே காரணமாகவும் அமைந்திருக்கலாம்.

திவாகரம்

நிகண்டுகளில் முதன்மையானது திவாகரம். ஆதிதிவாகரம் என்று இதனை அழைப்பர். திவாகர முனிவரால் இயற்றப்பட்டது. திவாகரத்தில் 9500 சொற்களும் 384 ஒருபொருட்பன்மொழிச் சொற்களும் இடம்பெற்றுள்ளன. இதனைச் சேந்தன் திவாகரம் என்றும் வழங்குவர். நிகண்டுகளில் பழமையானதும் இதுவே. இந்நூலாசிரியர் சமணர். இவரைச் சைவர் என்று கூறுவாரும் உண்டு.

பிங்கலந்தை

திவாகர நிகண்டிற்குப் பிந்தியது பிங்கலந்தை. இதன் ஆசிரியர் பிங்கலர். 12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய நன்னூல் இவரைச் சுட்டுவதால் அதற்கும் முந்தியதாக இருக்க வேண்டும். இதில் முதல் ஒன்பது பகுதிகளில் மட்டும் 14700 சொற்கள் உள்ளன. பத்தாம்

பகுதியில் பலபொருள் குறிக்கும் ஒரு சொல் என்ற முறையில் அமைந்த 1091 சொற்கள் உள்ளன.

இவர், தம் நூலை உரிச்சொற்கிளவி என்று சுட்டியதாகக் கூறுவர். இந்நூலைத் தம் நன்னூலில் சுட்டும் பவணந்தி உரிச்சொல் என்றே சுட்டிக் காட்டினர்.

சூடாமணி நிகண்டு

சூடாமணி ஆசிரியர்தான் முதன் முதலில் நிகண்டு என்ற சொல்லைப் பயன்படுத்தியதாகக் கூறுவர். இதனை இயற்றியவர் மண்டல புருடர். பிங்கல நிகண்டிற்குப் பின்னர்த் தோன்றிப் பரவலாகத் தமிழ்நாடு எங்கும் பயன்படுத்தப்பட்ட நூலாகும். கிருஷ்ணதேவராயர் காலத்தில் இவர் வாழ்ந்திருக்க வேண்டும் என்பதற்கான சான்றுகள் கிடைப்பதால் இவர் 16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்ததாகக் கொள்ளலாம். 'முக்குடை நிழற்ற மின்னு பூம்பிண்டி நிழல் வீற்றிருந்தான்' என்றும் (மூன்று குடைகளின் கீழ் மின்னுகின்ற அசோகமரத்தின் நிழலில் வீற்றிருந்தான்) 'பூமலி அசோகின் நிழல் பொலிந்த எம் அடியார்'என்றும் அருகனைத் துதிக்கிறார். அதனால் இவர் சமணர் என்பது தெளிவாகிறது.

இல்லக்கண நூல்கள்

தமிழ், இலக்கிய வளமும் இலக்கண வளமும் உடைய மொழி. பல நூற்றாண்டுகளாகவே தமிழில் இலக்கியம் நன்கு செழித்து வளர்ந்துள்ளது. இலக்கியங்களைப் போலவே இலக்கண நூல்களும் மிகுதியாகத் தமிழில் தோன்றியுள்ளன. இலக்கியம் மொழியை அடிப்படையாகக் கொண்டது. மொழி அமைப்பை விளங்கிக்கொள்ள இலக்கணம் உதவியாக இருக்கிறது. இந்தப் பாடத்தில் தமிழ்மொழியில் உள்ள எழுத்து இலக்கணமும், சொல் இலக்கணமும் எளிய முறையில் அறிமுகம் செய்து வைக்கப்படுகின்றன.

இலக்கணத்தின் வகைகள்

தமிழ் இலக்கணம் ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. எனவே ஐந்திலக்கணம் என்ற சொல்மரபு வழங்கி வருகிறது. அவை, எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகியவை ஆகும். இவற்றில் எழுத்து, சொல் இலக்கணங்கள் மொழிக்கு இலக்கணம் கூறுபவை ஆகும். பொருள் இலக்கணம் மொழியில் எழுதப்படும் இலக்கியத்தின் உள்ளடக்கத்திற்கு இலக்கணம் கூறுவது ஆகும். யாப்பிலக்கணம் என்பது இலக்கியம் எழுதப்படும் செய்யுளின் இலக்கணம் கூறுவதாகும். யாப்பிலக்கணத்தின் ஒரு வளர்ச்சியாகப் பாட்டியல் இலக்கணம் தோன்றியது. பாட்டியல் இலக்கணம் இலக்கிய வடிவங்களினது இலக்கணத்தைக் கூறுகிறது. பிள்ளைத்தமிழ், உலா, தூது போன்ற இலக்கியங்களின் இலக்கணம் பாட்டியல் நூல்களில் இடம்பெற்றுள்ளது. அணி இலக்கணம் செய்யுளில் அமையும் உவமை, உருவகம் முதலிய அணிகளின் இலக்கணத்தைக் கூறுகிறது. இந்தப் பாடத்தில் எழுத்து, சொல் ஆகிய இலக்கணங்களின் அமைப்பும், வரும் பாடத்தில் பொருள், யாப்பு, அணி, பாட்டியல் இலக்கணங்களின் அமைப்பும் அறிமுகம் செய்யப்படும்.

எழுத்து இலக்கணத்தில், எழுத்துகளின் வகைகள், அவை ஒலிக்கும் கால அளவு, எழுத்துகள் பிறக்கும் முறை ஆகியனவும் சந்தி இலக்கணமும் இடம்பெற்றுள்ளன. சந்தி இலக்கணம் என்பது இரண்டு சொற்கள் சேரும்போது முதல் சொல்லின் கடைசி எழுத்திலும் இரண்டாம் சொல்லின் முதல் எழுத்திலும் ஏற்படும் மாற்றங்களைச் சொல்லுவது ஆகும்.

சொல் இலக்கணத்தில், சொல்லின் வகைகளான பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் ஆகியனவும் திணை, பால், எண், இடம், காலம் முதலியனவும் தொகை (எழுத்துகள் மறைந்து வருதல்), வேற்றுமை ஆகியனவும் சொல்லப்பட்டிருக்கும்.

பொருள் இலக்கணம் என்பது தமிழ் மொழிக்கே சிறப்பாக உரிய இலக்கணம் ஆகும். தமிழ் மொழியில் எழுதப்பட்ட இலக்கியங்களின் பாடுபொருளுக்கு எழுதப்பட்ட இலக்கணமே பொருள் இலக்கணம் ஆகும். பழங்காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட சங்க இலக்கியம் என்ற இலக்கியத் தொகுப்புக்கு எழுதப்பட்டதே பொருள் இலக்கணம் ஆகும். ஓர் ஆணும் ஒரு பெண்ணும் கொள்ளும் காதல் அகப்பொருள் எனப்பட்டது. போர், வீரம், இரக்கம், நிலையாமை, கொடை, கல்வி முதலியவை எல்லாம் புறப்பொருள் எனப்பட்டன.

தமிழ் இலக்கியங்கள் பெரும்பாலும் செய்யுளில் இயற்றப் பட்டவையே. செய்யுள்களின் அமைப்பு, ஓசை, பாக்களின் வகைகள் முதலியவற்றைச் சொல்லுவதே யாப்பு இலக்கணம் ஆகும்.

சங்க காலத்திற்குப்பின் பக்தி இலக்கியக் காலத்திலும் அதற்குப் பின்பும் பல வகைச் சிறிய இலக்கிய வடிவங்கள் தோன்றின. தூது, உலா, அந்தாதி, மாலை, பிள்ளைத்தமிழ் முதலியவை இவ்வகையான இலக்கியங்களாகும். இவற்றுக்கு இலக்கணம் சொல்லுவது பாட்டியல் இலக்கணம் ஆகும்.

இலக்கியங்களில் அழகுக்காகவும் பொருள் விளங்குவதற்காகவும் உவமைகளைப் பயன்படுத்துவது கவிஞர்களின் இயல்பு. அவ்வாறு இடம்பெறும் உவமை, உருவகம் முதலியவற்றுக்கு அணி என்று பெயரிட்டு அவற்றின் இலக்கணத்தைச் சொல்லுவது அணி இலக்கணம் ஆகும்.

தமிழ் இலக்கண நூல்கள்

தமிழ் இலக்கியத்தின் வரலாறு இரண்டாயிரம் ஆண்டுகள் கொண்டது. இரண்டாயிரம் ஆண்டுகளில் ஏராளமான இலக்கியங்கள் தோன்றி, மொழியை வளப்படுத்தியுள்ளன. இலக்கியங்களைப் போலவே இலக்கண நூல்களும் தமிழில் மிகுதியாகத் தோன்றியுள்ளன. நீண்ட வரலாற்றில் அரசாட்சி, பிறமொழிகளின் தாக்கம், சமூக மாற்றம், பண்பாடு, நாகரிகம் முதலியவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக மொழியும் இலக்கியமும் மாறின. எனவே இந்த மாற்றங்களை உள்வாங்கிப் புதிய இலக்கண நூல்கள் தோன்ற வேண்டியதும் அவசியம் ஆனது. இந்தத் தேவையைக் கருத்தில் கொண்டு காலம் தோறும் புதிய இலக்கண நூல்கள் தோன்றி வந்தன. எனவே தமிழில் இலக்கண வளம் மிகுதியாக உள்ளது என்று கூறலாம். தமிழில் உள்ள சில இலக்கண நூல்கள் பற்றிச் சிறு குறிப்பு இங்கே தரப்படுகிறது.

தொல்காப்பியம்

தமிழில் மிகவும் பழைய இலக்கண நூலாக விளங்குவது தொல்காப்பியம் ஆகும். இது கி.மு. நான்காம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இதை இயற்றியவர் தொல்காப்பியர் ஆவார். இந்த நூலில் எழுத்து அதிகாரம், சொல் அதிகாரம், பொருள் அதிகாரம் என்ற மூன்று அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வோர் அதிகாரத்திலும் ஒன்பது இயலாக இருபத்து ஏழு இயல்கள் உள்ளன. தமிழில் உள்ள இலக்கண நூல்களிலேயே மிகவும் பெரியது தொல்காப்பியம் ஆகும். பொருள் அதிகாரத்தில் தமிழின் பொருள் இலக்கணமும், யாப்பு இலக்கணமும் சொல்லப்பட்டுள்ளன. தொல்காப்பியப் பொருள் அதிகாரத்தில் உள்ள உவமை இயலில் அணி இலக்கணம் சொல்லப்பட்டுள்ளது. இன்று தமிழில் உள்ள ஐந்திலக்கணங்களுக்கும் தோற்றுவாயாகத் தொல்காப்பியம் திகழ்கிறது.

தொல்காப்பியத்திற்குப் பனம்பாரனார் என்னும் அறிஞர் பாயிரம் எழுதியுள்ளார். இவர் தொல்காப்பியருடன் பயின்றவர் என்று அறிய முடிகிறது. பாயிரம் என்பது தற்காலத்தில் எழுதப்படும் முன்னுரை போன்றது. நிலந்தரு திருவின் பாண்டிய மன்னனின் அவையில் அதங்கோட்டாசான் தலைமையில் தொல்காப்பியம் அரங்கேறியது என்று பாயிரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொல்காப்பியம் இலக்கணத்தை மிகவும் விரிவாகக் கூறுகிறது. சூத்திரங்கள் இலக்கண அமைப்பை விளக்கும் முறையில் அமைந்துள்ளன. சிறு இலக்கண விதிகளைக்கூட விட்டுவிடாமல் மிகவும் நுட்பமாகத் தொல்காப்பியம் கூறுகிறது. தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், தெய்வச்சிலையார், கல்லாடர், பேராசிரியர் ஆகியோர் உரை எழுதியுள்ளனர்.

நன்னூல்

பவணந்தி முனிவர் என்ற சமண சமய முனிவரால் இயற்றப்பட்டது நன்னூல் என்ற இலக்கண நூல். இது, எழுத்து இலக்கணம், சொல் இலக்கணம் ஆகிய இரண்டு இலக்கணங்களையும் கூறுகிறது. நன்னூல் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் தோன்றியது. நன்னூல், இலக்கணத்தைச் சுருக்கமாகக் கூறும் நூல் ஆகும். நன்னூலில் முதலில் பாயிரம் என்று ஒரு பகுதி உள்ளது. இதில் ஐம்பத்தைந்து சூத்திரங்கள் உள்ளன. பாயிரப் பகுதியில் நூலின் இலக்கணம், நூலைக் கற்றுத்தரும் ஆசிரியர் இலக்கணம், கற்றுத்தரும் முறை, மாணவர்களின் குணங்கள், மாணவர்கள் கற்கும் முறை ஆகியவை இடம் பெற்றிருக்கும். எழுத்து அதிகாரத்தில் ஐந்து இயல்கள் உள்ளன 202 சூத்திரங்கள் உள்ளன. சொல்லதிகாரத்தில் ஐந்து இயல்கள் உள்ளன் 205 சூத்திரங்கள் உள்ளன.

அருங்கலை விநோதன் என்ற பட்டப் பெயர் பெற்ற சீயகங்கன் என்ற அரசனின் வேண்டுகோளின்படி நன்னூல் இயற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. தொல்காப்பியம் தோன்றிப் பல நூற்றாண்டுகள் சென்றுவிட்டதால் அதில் உள்ள மரபுகள் மாறிவிட்டன. மேலும் தொல்காப்பியம் கடல் போலப் பரந்துவிரிந்த நூல் ஆகும். எனவே நன்னூல் தோன்றிய பின்பு பரவலாக அனைவரும் நன்னூலையே கற்கத் தொடங்கினர். எனவே நன்னூலுக்குப் பல உரைகள் தோன்றின. மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர், கூழங்கைத் தம்பிரான், விசாகப் பெருமாளையர், இராமானுச கவிராயர், ஆறுமுக நாவலர் முதலிய பலர் நன்னூலுக்கு உரை எழுதியுள்ளனர். நன்னூல் தோன்றியபிறகு எழுத்து, சொல் இலக்கணங்களைக் கற்போர் நன்னூலையே விரும்பிப் படித்து வருகின்றனர்.

தமிழில் நாற்பதுக்கும் மேற்பட்ட இலக்கண நூல்கள் உள்ளன. முக்கியமான இலக்கண நூல்களின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

தமிழ் இலக்கண நூல்கள்

தொல்காப்பியத்தை முதல்நூலாகக் கொண்டு தமிழில் பல வழிநூல்கள் தோன்றின. அவற்றை ஓரளவு காலநிரல் செய்தும் பொருள்நோக்கில் தொகுத்தும் அறிஞர்கள் நெறிப்படுத்தியுள்ளனர். அதே வரிசையில் தமிழ் இலக்கண நூல்களின் பெயர்களும் அவற்றைப் பற்றிய செய்திகளும் இங்குத் தரப்படுகின்றன. தொல்காப்பியத்துக்கு முதல்நூல் அகத்தியம் என்பது இறையனார் அகப்பொருள் உரையால் உணரப்பட்டாலும், அகத்தியம் நூல் கிடைக்கவில்லை.

தமிழ் இலக்கண நூல்கள்

அகத்தியம்

தொல்காப்பியம்

இறையனார் களவியல்∴இறையனார் அகப்பொருள்

புறப்பொருள் வெண்பாமாலை

அவிநயம்

காக்கை பாடினியம்

சங்க யாப்பு

சிறுகாக்கை பாடினியம்

நற்றத்தம்

பல்காயம்

பன்னிரு படலம்

மயேச்சுவரம்

புறப்பொருள் வெண்பா மாலை

இந்திரகாளியம்

யாப்பருங்கலம்

யாப்பருங்கலக் காரிகை

அமுதசாகரம்

வீரசோழியம்

இந்திரகாளியம்

தமிழ்நெறி விளக்கம்

நேமிநாதம்

சின்னூல்

வெண்பாப் பாட்டியல்

தண்டியலங்காரம்

அகப்பொருள் விளக்கம்

நன்னூல்

நம்பி அகப்பொருள்

களவியற் காரிகை

பன்னிரு பாட்டியல்

நவநீதப் பாட்டியல்

வரையறுத்த பாட்டியல்

சிதம்பரப் பாட்டியல்

மாறனலங்காரம்

மாறன் அகப்பொருள்

பாப்பாவினம்

பிரபந்த மரபியல்

சிதம்பரச் செய்யுட்கோவை

பிரயோக விவேகம்

இலக்கண விளக்கம்

இலக்கண விளக்கச் சூறாவளி

இலக்கண கொத்து

தொன்னூல் விளக்கம்

பிரபந்த தீபிகை

பிரபந்த தீபம்

பிரபந்தத் திரட்டு

இரத்தினச் சுருக்கம்

உவமான சங்கிரகம்

முத்து வீரியம்

சாமிநாதம்

சந்திரா லோகம்

குவலயானந்தம் (மாணிக்கவாசகர்)

குவலயானந்தம் (அப்பைய தீட்சிதர்)

அறுவகை இலக்கணம் - ஏழாம் இலக்கணம்

வண்ணத்தியல்பு

பொருத்த விளக்கம்

யாப்பொளி

திருவலங்கல் திரட்டு

காக்கைபாடினியம்

இலக்கண தீபம்

விருத்தப் பாவியல்

மறைந்துபோன தமிழ் இலக்கண நூல்கள்

வச்சனந்திமாலை

தத்துவ நூல்கள்

பதினைந்தாம் நூற்றாண்டில் சைவ இலக்கியங்கள் பெருகின. சில தத்துவ நூல்கள் உருவாயின. 50க்கும் மேற்பட்ட புலவர்கள் தோன்றி இலக்கியப் பணி செய்தனர். இவர்களில் அருணகிரிநாதர், காளமேகப் புலவர் போன்றோர் உட்பட்ட சிலரே பலமுறை விவாதிக்கப்படும் ஆசிரியர்கள் ஆவர். ஏனையோரைப் பற்றி இலக்கிய வரலாறுகளில் காண்பது மிகவும் அரிதாகும். வள்ளல் பரம்பரையினர் சிலருடைய பங்களிப்பும் இக்காலத்தில் இருந்தது. ஒப்புநோக்கும்போது இக்காலப் பகுதியில் சித்தர்களின் இலக்கியப் பணி மிகுதி எனலாம்.

விசயநகர ஆட்சி சிறப்பான நிலையில் இருந்தது. கோயில், சிற்பம் போன்ற கலைகளுடன் இலக்கிய வளர்ச்சியும் காணப்பட்டது. உரைகள் மிகுதியாகத் தோன்றின. இக்காலத்திற்குச் சற்று முன்னதாகச் சித்தர்கள் தோன்றினர். முகமதியருடைய தாக்குதலால் தமிழ்நாட்டின் சமயக் கட்டமைப்பும் பண்பாடும் சீர்குலைந்தன. விசயநகர மன்னரது ஆதரவு இவற்றை மாற்றி அமைத்தது. இம்மன்னர்களது காலத்தில் தோன்றிய பல கலைகளும், இலக்கியங்களும் மக்களின் விழிப்புணர்ச்சியின்மை, ஒற்றுமையின்மை காரணமாக நெடுநாள் நிலைத்து நிற்காமல் வீழ்ச்சியடைந்தன. அடுத்த இரு நூற்றாண்டுகளில் வெள்ளையர் வரவின் விளைவாகக் கிறித்தவ சமயம் பரவவும், அதன் வழியாக மேலை நாட்டு நாகரிகமும் ஆதிக்கமும் நிலைக்கவும் வழியேற்பட்டது.

இக்காலத்தில் 50க்கும் மேற்பட்ட புலவர்கள் தோன்றினர். இருப்பினும் குறிப்பிடத்தக்க புலவர்கள் என்ற நிலையில் காளமேகப்புலவர், அருணகிரிநாதர், கயாதரர், கல்லாடர், ஞானவரோதயர், சத்தியஞானப் பண்டாரம், களந்தை ஞானப்பிரகாசர், மணவாள மாமுனிகள், உதீசித்தேவர் போன்றோரைக் கூறலாம். இவை பற்றிய செய்திகளை இப்பாடம் குறிப்பிடுகிறது.

தத்துவ நூல்களில் குறிப்பிடத்தக்கவை தச காரியம், அட்டாங்க யோகக்குறள், ஒழிவிலொடுக்கம், பேரானந்த சித்தியார், பிராசாத தீபம் போன்றவையாகும். திரட்டுகள் என்ற நிலையில் பெருந்திரட்டு, குறுந்திரட்டு போன்றவற்றைக் கூறலாம்.

தத்துவம்

இக்காலக் கட்டத்தில், தசகாரியம், அட்டாங்க யோகக்குறள், ஒழிவில் ஒடுக்கம் முதலிய தத்துவ நூல்கள் வெளிவந்தன.

தச காரியம்

இது, களந்தை ஞானப்பிரகாசரால் எழுதப்பட்டது. தேச, கால, பாத்திர இலக்கணம் (வழிபாடு செய்யும் முறைகளைக் கற்க முற்படுவோர் கருத்தில் கொள்ள வேண்டியவை, தகுந்த இடம், தகுந்த நேரம், தகுந்த ஆசிரியர் முதலியனவாகும்), சற்குரு (குருவாக இருப்பதற்கு உரியவர்) இலக்கணம், அசற்குரு (சற்குரு அல்லாதவர்) இலக்கணம், தீட்சை (ஒருவர் இறைவழிபாடு செய்ய விரும்பினால், தக்க குருமூலமாகப் பயிற்சி பெற வேண்டும். இதையே தீட்சை என்று ஆகமங்கள் கூறும்.) என்பன இந்நூலில் குறிப்பிடத்தக்கவையாகும். தச காரிய நூல்கள் பல இருந்தாலும் இதுவே அளவால் பெரியது. 302 பாடல்களைக் கொண்டது.

அட்டாங்க யோகக்குறள்

65 குறட்பாக்களை உடையது. அட்டாங்க யோகம் என்பது எட்டு அங்கங்களை (உறுப்புகள்) உடைய யோகம். எட்டும் எட்டுப் படிகளைப் போன்றவையாகும். இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்ற எட்டு உறுப்புகளைப் பற்றிக் கூறுகிறது.

ஒழிவில் ஒடுக்கம்

ஒழிவில் ஒடுக்கம் 253 வெண்பாக்களைக் கொண்டது. இதனை இயற்றியவர் கண்ணுடைய வள்ளல். இந்நூலை அக்கறையோடு ஓதி உணர்பவர் உலக வாழ்வில் ஈடுபாடு கொள்ளமாட்டார். புதுமையான தொடர்களும், சொற்களும் இதில் உள்ளன. இதன் பாடல்களில் வழக்குச் சொற்களும், வழக்கிலுள்ள உவமைகளும், பல்வகைத் தொழிற்பெயர்களும் காணப்படுவதால், ஆசிரியர் ஓரளவு பாமர மக்களும் உணரும் வகையில் இந்நூலை இயற்றியதாகக் கொள்ளலாம். இந்நூலில் புதிய சொற்கள் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளன. உதாரணத்திற்குச் சிலவற்றைக் காண்போம்.

சன்னை - சைகை

கிஞ்சு - சிறிது

கிடீர் - அறிவீர்

பிராசாத தீபம்

பிராசாத தீபம் என்னும் நூல் ஒரு வகையான யோக நெறியைப் பற்றிக் கூறுகிறது. சிவஞானத்தின் பயனாகிய முக்தியைக் கொடுப்பது பிராசாதம். இது ஒரு யோக நெறி. சிவஞான சித்தியாரில் குறிப்பாகவும், தத்துவப் பிரகாசத்தில் விளக்கமாகவும் இது சொல்லப்பட்டுள்ளது. இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்த நூல் தமிழில் மிகவும் விரிவான பிராசாத சாத்திரமாகும்.

இந்தியத் தத்துவ நூல்களும் ஆசிரியர்களும்

இந்திய மெய்யியலுக்கு ஆறு முதன்மையான தர்சனங்கள் அல்லது தத்துவங்கள் உள்ளது. அதில் நியாயம் (தர்க்கம்) தத்துவத்தை நிறுவியவர் கௌதமர். வைசேசிகம் எனும் பட்டறிவு தத்துவத்தின் ஆசிரியர் கணாதர். சாங்கியம் எனும் தத்துவத்தின் ஆசிரியர் கபிலர் (சாங்கியம்), யோகம் என்ற தத்துவதிற்கு ஆசிரியர் பதஞ்சலிஆவர். மீமாம்சம் எனும் தத்துவத்துவதிற்கு ஆசிரியர் ஜைமினிஆவர், மற்றும் வேதாந்தம் எனும் உபநிடதங்கள் என ஆறு தத்துவங்கள் அல்லது ஆறு தர்சனங்கள் உள்ளது. இதில் முதல் ஐந்தில் பிரம்மம் எனும் இறையியலைப் (பிரம்மம்) பற்றி பேசுவதில்லை. வேதாந்தம் ஒன்றுதான் மூலப்பரம்பொருள் எனும் பிரம்மத்தைப் பற்றி விரிவாக எடுத்துரைக்கிறது.

இந்தியத் தத்துவ இயலுக்கு இறைமறுப்பு கொள்கையை கடைப்பிடிக்கும், சார்வகம் மற்றும் லோகாயதம் எனும் பொருள்முதல்வாதிகள், ஆசீவகம், பௌத்தம், மற்றும் சமண சமயம் போன்ற கருத்தியல் ஆசிரியர்களும் இந்தியத் தத்துவ வளர்ச்சிக்கு மிக அதிகமாக பங்களித்துள்ளனர். இந்திய இறையியல், கருத்தியல், மெய்யியல், அறிவாய்வியல், தர்க்கம் மற்றும் பொருள்முதல்வாதம் குறித்து அறிஞர்கள் படைத்த தத்துவ நூல்களின் விவரம்.

இந்தியத் தத்துவ இயல் நூல்கள் மற்றும் ஆசிரியர்கள் விவரம்

அபிதம்ம கோசம் : சர்வாஸ்திவாதிய பௌத்த கொள்கைகளை விளக்கும் அடிப்படை நூல். எழுதியவர் வசுபந்து.

அபிதம்ம கோச வியாக்யா : யசோமித்திரர் எழுதியது. அபிதம்ம கோசம் எனும் நூலின் விளக்க உரை நூல்.

அபிதம்ம பீடகா : மூன்றாவதும் இறுதியானதுமான புத்த பீடக நூல். நுண்புலப் பொருளியல் (ஆநவய ீலளஉைள) பிரச்சனைகள் பற்றி எழுதப்பட்டது என கருதப்படுவது.

அபிதம்ம விபாசா : காத்தியாயனரின் 'ஞானப்ரஸ்தானா'பற்றிய விமர்சனம். மன்னர் கனிஷ்கர் ஆதரவின் கீழ் நடைபெற்ற நான்காம் புத்த மாநாடு குழுவால் எழுதப்பட்டதாக கருதப்படுகிறது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

அசிந்த-பேதாபேத-வாதம் : இருமை (னுரயடளைஅ) எனும் துவைதம் மற்றும் இருமைப் மறுப்புக் கொள்கை (ழேஎ-னுரயடளைஅ) வங்காள வைஷ்ணவியத்தை நிறுவியவர் என்று அறியப்பட்ட சைதன்ய வேதாந்த கருத்தியலின் தத்துவகோட்பாடு.

அத்வைத-பிரம்ம-சித்தி : 18வது நூற்றாண்டில் வாழ்ந்த சதானந்த யதி எழுதியது. அத்வைத சித்தாந்தம் பற்றியது.

அத்வைத வேதாந்தம் : பரிசுத்தமான தன்னுணர்வே மெய்ம்மை (பிரம்மம்) என்ற வேதாந்த கருத்தியல். ஆதிசங்கரர் எனும்அத்வைத வேதாந்தியால் முன் வைக்கப்பட்டது. சங்கரர் கி.பி. 8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

அஜிதகேசகம்பிளி : கௌதம புத்தர் காலத்தில் வாழ்ந்த பொருள்முதல்வாதி.

அகலங்கர் : கி. பி.750இல் வாழ்ந்த சமண தத்துவவாதி. தர்க்கவியல் குறித்த அடிப்படை சமண விளக்கங்களுக்கு முதன்முதலில் இறுதி வடிவம் தந்தவர்.

அக்சபாதர் : கௌதமரின் மறு பெயர். நியாய தத்துவ (தர்க்கம்) அமைப்பினை நிறுவியர்.

ஆலம்பன பரீக்சா : திக்நாகர் என்பவர் எழுதியது. யோகசாரம் கருத்தியற்கோட்பாட்டிற்கு ஆதரவான ஆய்வுக்கட்டுரை நூல்.

அனிருத்தர் : கி. பி. 15ம் நூற்றாண்டைச் சேர்ந்த சாங்கிய சூத்ரங்களுக்கு விளக்கம் எழுதியவர்.

அனாகா : சமணர்களின்

புனித இலக்கியங்களில் ஒருவகை.

அன்னம பட்டர் : 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நியாயம் - வைசேடிக தத்துவவாதி. தர்க்க சங்கிரஹா எனும் புகழ் பெற்ற நூலை எழுதியவர்.

ஆபாதேவர் : 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த, மீமாம்ச தத்துவவாதி

ஆரண்யகா : வேதத்தை சேர்ந்த இலக்கிய வகை. மாயாவாதம், போன்ற முன்மாதிரி தத்துவம் பற்றிய கேள்விகளை இது ஆய்கிறது.

அரியேதா : கி பி. 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புத்த தத்துவவாதி. தர்மகீர்த்தி என்பவர் எழுதிய ஹேது-பிந்து நூலைப் பற்றிய விளக்கம் அளித்தவர்.

அர்த்தசாஸ்திரம் : கௌடில்யர் எனும் சாணக்கியர் எழுதிய பழமையான சமுக அரசியல் நூல்.

ஆரியதேவர் : கி பி.320இல் வாழ்ந்தவர். மத்தியமிகம் பௌத்த தத்துவத்தின் திறனாய்வாளர்.

ஆர்யசூரா : கி.பி.4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். ஜாதக மாலா எனும் நூலை எழுதி புகழ் பெற்றவர்.

அசங்கர் : கி.பி.450-ஆம் ஆண்டைச் சேர்ந்தவர். யோகாகார புத்த த்த்துவத்தை தொடக்க காலத்தில் முறையாக செய்தவர்.

ஆசுரி : பண்டைய சாங்கிய தத்துவ ஆசிரியர்.

அஸ்வகோசர் : கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த புத்த தத்துவவாதி, கவிஞர், நாடக ஆசிரியர்.

அதர்வ வேதம் : பண்டைய நான்கு வேதங்களில் இறுதியானது. இது மந்திர தந்திரங்களை மையமாக கொண்டது.

இதனை தொகுத்தவர் பைலர் எனும் ரிஷி.

ஆத்ம தத்துவ விவேகம் : உதயணாவின் ஒப்பீட்டு இலக்கியம், சுயம் பற்றி புத்தம் கூறும் கருத்துக்கு மறுப்பு தெரிவிக்கும் நியாய வைசேசிக தத்துவ ஆய்வு நூல்.

பாதராயணர் : பிரம்ம சூத்திரம் எனும் புகழ்பெற்ற வேதாந்த நூலை எழுதியவர்.

பவதாயணா : கி.பி. 300ஆம் ஆண்டைச் சேர்ந்தவர். சட்டம் பற்றி எழுதிய முன்னோடி.

பகவத் கீதை : கர்ம யோகம், பக்தி யோகம் மற்றும் ஞான யோகம் போன்ற தத்துவங்களை, ஸ்ரீகிருஷ்ணர், அருச்சுனனுக்கு உபதேசம் செய்த நூல். இது மகாபாரதத்தின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது. பிரஸ்தானத்ரயம் எனும் மூன்று உயர்ந்த வேதாந்த நூல்களான உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம் ஆகியவற்றில் பகவத் கீதையும் ஒன்று. பகவத் கீதைக்கு,

ஆதிசங்கரர், இராமானுசர் மற்றும் மத்வர் ஆகியோர் எழுதிய விளக்க உரைகள் குறிப்பிடத்தக்கது.

வாசஸ்பதி மிஸ்ரர்: தத்துவபிந்து மற்றும் பிரம்ம சூத்திரம் பற்றிய ஆதிசங்கரரின் விளக்க உரைகளுக்கு விரிவுரை எழுதி பாமதி எனும் தன் மனைவியின் பெயரில் வெளியிட்டவர்.

பாஸ்கரர் : பிரம்ம சூத்திரம் பற்றி விளக்கமளித்தவர். ஆதிசங்கரர் மற்றும் இராமானுஜர் இருவருக்கும் இடைப்பட்ட காலத்தவர்.

பாட்ட தீபிகா : கச்சதேவரின் மீமாம்ச தத்துவ கட்டுரைகள் எழுதியவர்.

பாட்ட மீமாம்சம் : குமரிலபட்டர் எழுதிய மீமாம்ச கருத்தியல் நூல்.

பாவவிவேகா : கி. பி. 5ஆம் நூற்றாண்டின் வாழ்ந்த மாத்யமக பிரிவு புத்த தத்துவ நிபுணர்.

பிரஸ்தானத்திரயம் : பிரம்மத்தை விளக்கும் உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம் மற்றும் பகவத் கீதை ஆகிய மூன்று முதன்மையான வேதாந்த நூல்களை பிரஸ்தானத்திரயம் என்பர்.

பேதாபேத-வாதம் : பாஸ்கரரின் இருமை மற்றும் இருமையின்மை கொள்கை விளக்கம் நூல்.

போதிகார்யவாதாரா : சாந்தி தேவர் எழுதியது. மகாயான புத்தமத தத்துவத்தை போற்றும் கவிதைகள்.

பிராமணம் : வேத சடங்குமுறைகளை ஆய்வு செய்யும் வேத இலக்கியம்.

பிரம்ம சூத்திரம் அல்லது வேதாந்த சூத்திரம் : உபநிடதங்களில் காணப்படும் முரணான கருத்துக்களை, பிரம்ம சூத்திரம் எனும் நூல் மூலம் பாதராயணர் களைந்து விளக்கி எழுதியதாக கூறப்படுகிறது. இந்நூலுக்கு பாஷ்யம் எழுதியவர்களில் சிறப்பானவர்கள், ஆதிசங்கரர், இராமானுசர் மற்றும் மத்வர்.

பிரகதி : மீமாம்ச சூத்திரம் பற்றிய சபரரின் கருத்துக்கள் மீது பிரபாகரர் எழுதிய விளக்கங்கள்.

கௌதம புத்தர் : புத்த தத்துவத்தை தோற்றுவித்தவர். கி. மு. 483ஆம் ஆண்டில் இறந்தார்.

புத்தசரிதா : புத்தரின் வரலாற்றை கவிதை வடிவில் அஸ்வகோசர் எழுதியது.

புத்தபாலிதா : கி. பி. 5ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மத்தியமிகம் புத்த தத்துவ நிபுணர்.

சைதன்யர் : கி. பி. 485வது ஆண்டில் பிறந்தவர். வங்காள வைணவ தத்துவம் என பொதுவாக அறியப்பட்ட மத இயக்கத்தை தோற்றுவித்தவர்.

சந்திரகீர்த்தி : கி. பி. 6வது நூற்றாண்டில் வாழ்ந்த மாத்யமிக புத்த தத்துவ நிபுணர் நாகார்ஜுனரின் கருத்துக்களுக்கு விமர்சனம் எழுதியதால் புகழ் பெற்றார்.

சரக சம்ஹிதை : கி. பி. இரண்டாவது நூற்றாண்டில் வாழ்ந்த சரகர் என்பவர் இந்த மருத்துவ நூலை எழுதியவர்.

சார்வகம்: சார்வகம் எனில் லோகாயவாதம் எனும் பொருள்முதல்வாதம் எனப்படும். சார்வாகர்என்ற பகுத்தறிவுவாதி 'சார்வகம்' எனும் தத்துவத்தை நிறுவியவர்.

சாது சதகம் : மாத்யமக புத்த தத்துவ அறிஞரான ஆரியதேவர் எழுதியது.

சித்சுகர்: கி. பி. 1220களில் வாழ்ந்தவர். அத்வைதி. பட்டறிவு சார்ந்த உள்ளமைவியல் (ழுவெழடழபல) மற்றும் அறிவாராய்ச்சியியல் (நுிளைவநஅழடழபல) பற்றிய எதிர்மறையான வாதத்தை முன்வைத்து புகழ் பெற்றவர்.

தர்மகீர்த்தி : கி. பி. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். திக்நாகருக்கு பின்வந்த புகழ்பெற்ற புத்த தத்துவவாதி.

தத்துவ - சங்கிரஹம் : கி. பி. 8வது நூற்றாண்டில் வாழ்ந்த சாந்தராட்சிதா என்பவர் எழுதிய புத்தவியல் தர்க்கநூல் ஆகும்.

தர்மோத்தரர் : கி. பி. 840களில் வாழ்ந்தவர். தர்மகீர்த்தியின் கருத்துகளுக்கு விளக்கம் அளித்தவர்.

திண்ணாகர்: கி. பி. 500களில் வாழ்ந்தவர். புத்த தர்க்கவியல் கருத்தியலை நிறுவியவர்.

திபாஷிகா : சாலிகநாதர் எழுதியது. பிரபாகர மீமாம்சம் பற்றிய ஒரு நூல்.

துர்வேகர் : புத்த தத்துவவாதிகளான தர்மோத்தரர் மற்றும் அர்க்கடர் ஆகியவர்களை விமர்சனம் செய்தவர்.

துவைதாத்வைத வாதம்: நிம்பர்க்கர் என்பவர் பேதாபேதம் வேதாந்த கருத்தியலின் இருமை (துவைதம்)மற்றும் இருமையின்மை (அத்வைதம்) தத்துவ கோட்பாட்டை விளக்கியவர்.

துவைதவாதம்: இத்த்துவத்தின் ஆசிரியர் மத்வர். இருமை எனும் துவைதம் எனும் தத்துவக் கொள்கையை (இறைவனும் சீவனும் வேறு) கடைப்பிடிப்பவர்கள்.

சுதாதரர் : கி. பி. 13வது நூற்றாண்டில் வாழ்ந்தவர். நியாயம் தத்துவ நிபுணர்.

கங்கேசர்: கி. பி. 13வது நூற்றாண்டில் வாழ்ந்த நியாயம் தத்துவ அறிஞர்.

கௌடபாதர்: கி. பி. 800களில்

வாழ்ந்தவர். ஆதிசங்கரரின் குருவின் குரு. மாண்டூக்ய காரிகை நூலின் ஆசிரியர். அத்வைத வேதாந்தி.

குணரத்ன : கி. பி. 15வது நூற்றாண்டில் வாழ்ந்த சமண தத்துவவாதி. தர்க்க-ரகசிய-தீபிகா என்ற விமர்சன நூலை எழுதியவர். இந்நூல் ஹரிபத்ரரின் இந்திய தத்துவ விளக்கத் தொகுப்பான சத் தர்சன சமுக்காயம் என்ற நூலின் விமர்சனம் ஆகும்.

ஹரிபத்ரர் : கி. பி. 8வது நூற்றாண்டில் வாழ்ந்த சமண தத்துவவாதி. இந்திய தத்துவ விளக்கத் தொகுப்பான சத் தர்சன சமுக்காயம் என்ற நூலை எழுதியவர்.

ஹேமச்சந்திரர் : இவரது காலம் கி. பி. 1018 - 1172. புகழ்பெற்ற சமண சமய தத்துவ அறிஞர். தத்துவம் மற்றும் தர்க்க நூல்களை எழுதியவர்.

ஹேது - பிந்து : தர்மகீர்த்தி என்பவர் எழுதிய புத்த தர்க்கவியல் நூல்.

ஹீனயானம் : தமது முன்னோர்களை (மட்டமாக) குறிக்க, மகாயானம் பிரிவு புத்த சமயத்தவர் பயன் படுத்திய சொல். (ஹீனயானம் எனில் தாழ்வான வழி அல்லது குறைந்த வழி என்று பொருள்).

ஜகதீசா : கி. பி. 17வது நூற்றாண்டில் வாழ்ந்தவர். நவ நியாய தத்துவ அறிஞர்.

ஜைமினி : பூர்வ மீமாம்சக சூத்திரம் எழுதியவர்.

ஜாதகா : புத்தரின் 'முந்தைய பிறப்புகளை' பற்றிய கதைகள் கூறுவது.

ஜெயந்த பட்டர் : கி. பி. 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். நியாய மஞ்சரி எழுதியவர். நியாய - வைசேஷிக தத்துவ அறிஞர்.

ஜெயராசி பட்டர் : கி. பி. 8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அன்றைய காலத் தத்துவங்களை ஏற்றுக் கொள்ள மறுத்தவர். இவரை ஒரு பொருள்முதல்வாதி என்று தவறாக எண்ணினார்கள்.

ஞானப்பிரஸ்தானா : இந்நூலை காத்தியாயனர் எழுதியது. வைபாசிக புத்த தத்துவவாதிகளின் விளக்கமான மஹாவிபாச என்ற நூல் ஞானப்ரஸ்தானாவின் விமர்சனமாக எழுதப்பட்டது.

கமலசீலா : கி. பி. 750-இல் வாழ்ந்தவர். புத்த தர்க்கவியல்வாதி. சாந்தராக்சிதாவின் தத்துவ சங்கிரா என்ற நூலுக்கு விளக்கம் எழுதியவர்.

கணாதன் : வைசேசிகம் எனும் தத்துவத்தை (தர்சனம்) நிறுவியவர்.

கபிலர் (சாங்கியம்) : சாங்கியம் எனும் தத்துவத்தை நிறுவியவர்.

காத்தியாயனர் : கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முந்தியவர். ஞானப்ரஸ்தானம் எனும் நூலை எழுதியவர்.

கௌடில்யர் : இவரை சாணக்கியர் என்றும் அழைப்பர். கி. மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அர்த்தசாஸ்திரம் எனும் அரசியல் மற்றும் சமூகம் தொடர்பாக நூலை எழுதி புகழ்பெற்றவர்.

கந்ததேவா : கி. பி. 17வது நூற்றாண்டில் வாழ்ந்த மீமாம்ச தத்துவவாதி.

காந்தன-காந்த-காத்யம் : கி. பி. 1150இல் வாழ்ந்த ஸ்ரீஹர்சர் என்பவர் எழுதியது. அத்வைத வேதாந்த கருத்தியல் பற்றி, பட்டறிவு சார்ந்த உள்ளமையியல் (ழுவெழடழபல) மற்றும் அறிவாராய்ச்சியியல் (நுிளைவநஅழடழபல) மீதான முதல் விரிவான விமர்சனம் செய்தவர்.

கிராணவளி : வைசேஷிகம் தத்துவம் பற்றிய பிரசஸ்தபாதரின் விளக்கம் மீதான விமர்சனம். உதயணர்என்பவர் எழுதியது.

குல்லுக பட்டர் : மத்திய காலத்தின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். மனுதரும சாத்திரம் (மனு ஸ்மிருதி) எனும் நூலுக்கு விளக்கம் அளித்தவர்.

குமாரிலபட்டர் : கி. பி. 8வது நூற்றாண்டில் வாழ்ந்தவர். மீமாம்ச தத்துவத்தை நிறுவியவர். பாட்டா மீமாம்சா பள்ளியை (டீாயவவய ளுஉழழட ழக ஆஅயளய) நிறுவியவர்.

லக்வி : மீமாம்ச சூத்ரம் பற்றி சபரர் எழுதிய விளக்கத்திற்கு சுருக்கமான விளக்கம் எழுதியவர்.

லலித விஸ்தாரா : மகாயான புத்த சிந்தனைகளின் அடிப்படையில் எழுதப்பட்ட புத்தரின் வாழ்க்கை வரலாறு.

லங்காவதார சூத்திரம் : மகாயான பௌத்த மத சூத்திரங்களில் முக்கியமான ஒன்று.

லோகாயாதம் : பொருள்முதல்வாதம் (ஆயவநசயைடளைஅ) எனும் தத்துவத்தை நிறுவியவர் சார்வாகர். இதனை சார்வகம் என்றும் அழைப்பர்.

மாதவர் : கி. பி. 14வது நூற்றாண்டில் வாழ்ந்த அத்வைத வேதாந்தி. சர்வ தரிசன சங்கிரஹ என்ற இந்திய தத்துவவியல் தொகுப்பை எழுதிப் புகழ் பெற்றவர்.

மதுசூதன சரஸ்வதி : காலம் 1565-1650. அத்வைத சித்தி என்ற நூலை எழுதிய அத்வைத வேதாந்தி.

மத்வர் : கி. பி. 13வது நூற்றாண்டில் வாழ்ந்த துவைதம் எனும் இருமை கருத்தியலை நிறுவிய மாத்வ சம்பிராயத வைணவ குரு.

மத்தியமிகம் : மகாயான பௌத்த சமயத்தின் கருத்தியல் பிரிவு. இதனை நிறுவியது நாகார்ஜுனர். யதார்த்தம் (உண்மை) என்பது 'வெறுமையே' என்பது இவர்கள் பார்வை.

மாத்யமிக காரிகை : இதன் ஆசிரியர் நாகார்ஜுனர்.

மகாபாரதம் : இந்தியாவின் புகழ்பெற்ற இரு இதிகாசங்களில் ஒன்றான இதை எழுதியவர் வியாசர். இப்போது நாம் பார்க்கின்ற வடிவம் கி. மு. 400க்கும் கி. பி. 400க்கும் இடைப்பட்ட காலத்தில் உருவாகியது.

மகாசாங்கிகர்கள் : பழமைவாத புத்த சங்கத்திலிருந்து முதன்முதலில் வெளியேற்றப்பட்டவர்கள். பின் இவர்கள் தங்களுக்கு என தனியாக ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொண்டவர்கள்.

மகாவிபாசா : அபிதம்ம விபாசாவும் இதுவும் ஒன்றே.

மகாவீரர் : சமண சமய தத்துவத்தை நிறுவியவர். கௌதம புத்தர் காலத்தில் வாழ்ந்தவர்.

மகாயானம் : ' உயர்ந்த பாதை ' என்று பொருள். பிற்கால புத்தவியல்வாதிகள் உருவாக்கிய புத்தமதப் பிரிவு. இவர்கள் தங்களின் எதிர்தரப்பை ஹீனயானம் (குறுகிய பாதை)என்பர்.

மகாயான சூத்திரங்கள் : மகாயான புத்தமத இறையியல் தத்துவபாடல்கள் அடங்கிய நூல்.

மைத்ரேயநாதர் : புத்தவியல் அடிப்படையிலான யோககார கருத்தியலை உருவாக்கியவர். கி. பி. 400இல் வாழ்ந்தவர்.

மந்தன மிஸ்ரர் : கி. பி. 9வது நூற்றாண்டில் வாழ்ந்த முக்கிய பாட்டா மீமாம்ச தத்துவ அறிஞர்.

மாண்டூக்ய காரிகை : கி. பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த கௌடபாதர் எழுதியது.

மனு : இவர் மனுதரும சாத்திரம் எனும் மனுஸ்மிர்தியின் ஆசிரியர். இந்திய சட்டங்கள் பற்றி கூறும் முதல் நூல். இப்போது நாம் பார்க்கின்ற வடிவம் கி. மு. 200க்கு முன்பு இருந்ததாகும்.

மாயாவாதம் : பிரம்மம் தவிர படைக்கப்பட்ட அனைத்துப் பிரபஞ்சங்களும் சீவராசிகளும் மித்யா(பொய்மையானது) எனக்கூறும் அத்வைத வேதாந்தக் கொள்கை.

மிலிந்த பன்ஹா : புத்தவியல் குறித்த நாகசேனர் எழுதிய பழங்கால பாலி மொழி நூல்.

பூர்வ மீமாம்சம்: ஜைமினி என்பவர் இதனை தொகுத்தவர். இப்பகுதியில் வேதத்தின் சடங்குகள் குறித்த விளக்கங்கள் கொண்ட மிகப் பழங்கால நூல்.

உத்தர மீமாம்சம் : இப்பகுதியில் வேதத்தின் இறுதி பகுதிகளான உபநிடதங்கள் அமைந்துள்ளது.

மீமாம்ச சூத்ரா : மீமாம்சம் தத்துவம் பற்றிய மூல நூல்.

நாகார்ஜுனர் : கி. பி. 200இல் வாழ்ந்தவர். புத்தவியல் தத்துவத்தின் மாத்யமிக கருத்தியலை உருவாக்கியவர்

நிம்பர்க்கர் : கி. பி. 12ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பிரம்ம சூத்திரம் பற்றி விளக்கம் கொடுத்தவர்.

நவ்ய நியாயா : நவ நியாயம் (இந்து தத்துவம்). காங்கேசர் போதித்த நியாய தத்துவவியலின் இறுதிக் கட்டம்.

நியாயம் (இந்து தத்துவம்) (தர்க்கம்) : இத்ததுவத்தை நிறுவியவர் கௌதமர். அறிவாய்வியல் மற்றும் தர்க்கம் குறித்த கேள்விகள் மீது கவனம் செலுத்தும் தத்தவ நூல்.

நியாய - பிந்து : புத்த தர்க்கவியல் நூல். தர்மகீர்த்தி எழுதியது.

நியாய - பிந்து - திகா : 'நியாய - பிந்து' நூலைப் பற்றி தர்மோத்தரா எழுதிய விமர்சன நூல்.

நியாய - கந்தழி : வைசேடிக தத்துவ முறை பற்றி பிரசஸ்தபாதர் கூறியதன் மீதான விமர்சன நூல்.

நியாய - கணிகா : மீமாம்சம் பற்றி வாசஸ்பதி மிஸ்ரர் எழுதியது. இது மந்தன மிஸ்ரர் எழுதிய 'விதி விவேகா' என்ற நூலின் மீதான விமர்சன நூல்.

நியாய - குசுமாஞ்சலி : இந்நூலை உதயணர் எழுதியது. கடவுள் இருப்பதை நிரூபிக்கும் நியாய வைசேஷிக உரைகள் கொண்டது.

நியாய-மஞ்சரி : நியாயம் (இந்து தத்துவம்)- வைசேஷிகம் முறை குறித்து ஜெயந்த பட்டர் எழுதிய முக்கியமான நூல்.

நியாய-சூத்ரம் : நியாய முறைப் பற்றிய மூல நூல். கோதமர் அல்லது அக்சபாதர்எழுதியதாக கூறப்படுகிறது.

நியாய-வைசேஷிகம் : நியாயம் மற்றும் வைசேஷிக தத்துவங்கள் ஒருங்கிணைந்த போது உருவான பெயர்.

நியாய-வார்த்திகா : உத்யோதகாரர் எழுதியது. நியாய சூத்திரம் மீதான வாத்ச்யாயணரின் நூல் பற்றி எழுதப்பட்டு இன்றும் இருக்கின்ற நூல்களில் இதுவே மிகப் பழமையானது.

நியாய-வார்த்திகா-தாத்பரிய-பரிசுத்தி : உதயணர் எழுதியது. நியாய-வார்த்திகா-தாத்பர்ய-திகா பற்றி எழுதப்பட்ட நியாய வைசேஷிக விளக்க நூல்.

நியாய வார்த்திகா-தாத்பரிய-திகா : வாசஸ்பதி மிஸ்ர்ர் எழுதியது இது நியாய-வைசேஷிக விளக்க நூல்.

பதார்த்த-தர்ம-சங்கிரஹா : வைசேடிகம் தத்துவம் பற்றி இன்றும் உள்ள நூல் எழுதியது ப்ரசஸ்பாதர்.

பத்மபாதர் : ஆதிசங்கரரின் சீடர். அத்வைத வேதாந்தி.

பங்காசிகர் : தொடக்க கால சாங்கிய ஆசிரியர்.

பாணினி : கி. மு. 300க்கு முற்பட்டவர். சிறந்த சமஸ்கிருத மொழி இலக்கண ஆசிரியர்.

பார்த்தசாரதி மிஸ்ரர் : பாட்ட மீமாம்ச தத்துவ ஆசிரியர்களில் முக்கியமானவர். காலம் 16வது நூற்றாண்டு.

பதஞ்சலி : பதஞ்சலி யோகசூத்திரம் எனும் நூலின் ஆசிரியர்

பயாசி : புத்தருக்குப் பின் வந்த பொருள்முதல்வாதி.

திரிபிடகம் : தொடக்க கால புத்த தத்துவ நெறிமுறை இலக்கியத் தொகுப்புகள்.

பிரபாசந்திரர் : கி. பி. 9வது நூற்றாண்டில் வாழ்ந்த சமண சமய தர்க்கவாதி.

பிரபாகர மீமாம்சம் : கி. பி. 7வது நூற்றாண்டில் வாழ்ந்தவர் பிரபாகரர்.

மீமாம்சம்எனும் தத்துவவியல் கொள்கையை பரப்பியவர்.

பிரக்ஞபாரமிதா சூத்ரம் : மகாயான புத்தமத சூத்ரங்களில் ஒன்று.

பிரக்ஞ - ப்ரதீபா : பாவவிவேகர் என்பார் எழுதியது. மாத்யமக புத்த தத்துவம் பற்றியது.

பிரகரண - பஞ்சிகம் : சாலிகநாதர் எழுதியது. பிரபாகரரின் கருத்துகளுக்கு முக்கிய விளக்க நூல்.

பிரமாண சமுக்காயம் : திக்நாகர் எழுதியது. புத்தமத தர்க்கவியல் பற்றிய அடிப்படை நூல்.

பிரமாண - வார்த்திகா : தர்மகீர்த்தி எழுதியது.

பிரசன்ன - பாதா : சந்திரகீர்த்தி எழுதியது. மாத்யமிக காரிகை பற்றிய முக்கியமான விளக்க நூல்களில் ஒன்று.

பதார்த்த - தர்ம - சங்கிரகம் : கி. பி. 5வது நூற்றாண்டில் வாழ்ந்த பிரசஸ்தபாதா என்பவர் எழுதியது.

புரந்தரர் : லோகாயத தத்துவவாதி. (பொருள்முதல்வாதி)

பூர்வங்கள் : தொடக்க கால சமணர்களின் புனித இலக்கியம்.

ரகுநாத சிரோமணி : கங்கேசரின் தத்துவங்களை விமர்சித்தவர். 16வது நூற்றாண்டினர்.

ராஜசேகர சூரி : சமண சமய தத்துவ ஆசிரியர். கி. பி. 1340ல் வாழ்ந்தவர்.

ராமாயணம் : இந்தியாவின் புகழ்பெற்ற இரண்டு இதிகாசங்களில் ஒன்று. கி. மு. 3வது நூற்றாண்டில் உருவானது. இப்போது நாம் பார்க்கின்ற வடிவம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் உருவானது.

இராமானுசர் : கி. பி. 11வது நூற்றாண்டில் வாழ்ந்த விசிட்டாத்துவைதம் எனும் தத்துவத்தை நிறுவிய வைணவ சமயப் பெரியார். பிரம்ம சூத்திரம் பற்றி ஸ்ரீபாஷ்யம் எனும் ஆத்திக அடிப்படையிலான விளக்கங்கள் எழுதியவர்களில் மிக முக்கியமானவர்.

இராவண-பாஷ்யம்: தொடக்க கால வைசேடிகம் நூல்களில் ஒன்று.

ரமணர் : காலம் 1879-1950, அத்வைத வேதாந்தி. “உள்ளவை நாற்பது” போன்ற அத்வைத வேதாந்த நூல்களை எழுதியவர்.

ருக் வேதம் : வேத நூல்களில் மிகப்பழமையானதும் முக்கியமானதும் ஆகும். இதன் காலம் கி. மு. 1500 - 1100 ஆகும்.

ரிஜ்விமாலா : சாலிகநாதர் என்பவர் எழுதியது. பிரபாகரின் பிரஹதி என்ற நூல் பற்றிய விளக்க நூல்.

சபரர் : கி.பி. 400ல் வாழ்ந்தவர். மீமாம்சம் பற்றிய விளக்க நூல். இன்றும் நம்மிடையே உள்ள மிகப் பழமையான இந்நூலை எழுதியவர் சபரர்.

சபர பாஷ்யம் : மீமாம்சம் குறித்து விளக்க நூலை எழுதியவர் சபரர்.

சத்-தர்சன-சமுக்காயம் : இந்தியத் தத்துவங்களின் தொகுதி. ஹரிபத்ரர் எழுதியது.

சத்தர்ம-புண்டரீகம் : மகாயான பௌத்த சமய சூத்திர நூல்.

சாலிகநாதர் : கி. பி. 7 அல்லது 8-வது நூற்றாண்டை ஒட்டி வாழ்ந்தவர். பிரபாகரரின் தத்துவங்கள் பற்றி எழுதப்பட்ட விளக்கங்களில் சாலிகநாதரின் விளக்கங்கள் புகழ் பெற்றது.

சமாதிராஜா : மகாயான பௌத்த சமய சூத்திர நூல்.

சமந்தபத்ரா : முற்காலத்திய சமண சமய தத்துவவாதி.

சாம வேதம் : நான்கு வேதங்களில் மூன்றாவது. சடங்குகளின் போது பாடப்படும் பாடல்கள் கொண்டது. இதனை தொகுத்தவர் ஜைமினி ரிஷி.

சங்கரர் : கி. பி.788 - 820இல் வாழ்ந்த அத்வைத வேதாந்திகளில் மிக முக்கியமானவர். இவர் தத்வ போதம், விவேக சூடாமணி, பஜ கோவிந்தம், ஆத்ம போதம், முதலிய நூல்கள் இயற்றியவர். மேலும் முக்கிய பத்து உபநிடதங்களுக்கும் மற்றும் பிரம்ம சூத்திரம் ஆகியவற்றுக்கும் பாஷ்யம் (விளக்க உரை) எழுதியவர்.

சாங்கியம் : மிகப் பழமையான இந்திய தத்துவப் பிரிவுகளில் ஒன்று. சாங்கியம் இத்தத்துவத்தை நிறுவியவர்.

சாங்கிய-காரிகா : ஈஸ்வர கிருஷ்ணர் எழுதியது. சாங்கியம் பற்றி இன்றும் நம்மிடையே உள்ள மிகப் பழமையான நூல் இதுவே.

சாங்கிய-ப்ரவசன-பாஷ்யா : விஞ்ஞான பிட்சு என்பவர் எழுதியது. சாங்கிய சூத்திரம் பற்றிய விளக்க நூல்.

சாங்கிய-சூத்திரம் : மத்திய காலத்தின் இறுதிப் பகுதியில் எழுதப்பட்ட சாங்கியம் பற்றிய நூல்.

சாங்கிய-தத்துவ-கவ்முதி : வாசஸ்பதி மிஸ்ரர் எழுதியது. சாங்கிய காரிகா எனும் நூலின் விளக்க உரை நூல் இது.

சங்கபத்ரா : வசுபந்துவுக்கு பிறகு வைபாடிகம் பௌத்தப் பிரிவின் தத்துவவாதி.

சஞ்சய பெலத்திட்டா : புத்தர் காலாத்தில் வாழ்ந்த கடவுள் மறுப்புவாதி.

சாந்திதேவா : கி. பி. 7வது நூற்றாண்டில் வாழ்ந்த மகாயான புத்தவியலை பரப்பியவர்.

சாரீரக - பாஷ்யம் : சங்கரரின் பிரம்ம சூத்திரம் நூலின் பாஷ்யத்திற்கு விரிவான விளக்க நூல்.

சர்வ-தர்சன-சங்கிரகம் : மாதவர் எழுதிய இந்திய தத்துவவியல்கள் பற்றிய மிகப் புகழ் பெற்ற தொகுப்பு.

சர்வாஸ்தி-வாதம் : “எல்லாமும் எப்போதும் உயிருடன் உள்ளது” என்ற புத்தவியல் கருத்தியல் கொள்கையை விளக்கும் நூல்.

சௌத்திராந்திகம் : புத்தமத தத்துவவியல் மற்றும் கருத்தியல் கொள்கைகளை விளக்கும் பௌத்தப் பிரிவின் தத்துவம்.

சாயனர் : கி. பி. 14ஆம் நூற்றாண்டில் விசயநகரப் பேரரசில், முதலாவது புக்கா ராயன் காலத்தில் வாழ்ந்தவர். நான்கு வேதங்களைப் பற்றி விரிவான விளக்க நூல்கள் எழுதியவர். இன்று நாம் படிப்பது இவரது வேத விளக்க நூல்களே.

சித்தசேனர் : தொடக்ககால சமண சமய தத்துவவாதி.

சிக்ஷா சமுக்காயம் : சாந்தி தேவர் எழுதிய மகாயான பௌத்த சமயத்தை பரப்ப உதவிய கவிதை நூல்.

சுலோக வார்த்திகா : குமரிலபட்டர் எழுதிய முக்கிய தத்துவவியல் நூல்.

ஸ்புதார்த்த-அபிதம்ம-கோசாம்-வியாக்யா : யசோமித்ரர் எழுதியது. அபிதம்ம கோசம் பற்றிய விளக்க நூல்.

ஸ்தவீரவாதிகள் : புத்தவியல் கருத்தியலை பின்பற்றிய மிகப்பழமையான தொண்டர்கள்.

சுவேதாம்பரர் : சமண சமயத்தின் ஒரு பெரும் பிரிவினர்.

ஸ்ரீகந்தா : பிரம்ம சூத்திரம் எனும் வேதாந்த நூலுக்கு விளக்கம் எழுதியவர்.

சூன்யவாதம் : மாத்யமிக புத்தவியலாளர்களின் தத்துவக்கொள்கை. அதாவது " உண்மை என்பது வெற்றிடமே ".

சுரேஷ்வரர் : ஆதிசங்கரரின் காலத்தில் வாழ்ந்தவர். சங்கரரின் சீடர். சங்கர அத்வைத வேதாந்திகளில் வேதாந்தங்களைப் பற்றி விளக்கம் எழுதியவர்களில் முதன்மையானவர்.

சுத்த பீடகம் : தொடக்க கால புத்த நெறிமுறை இலக்கியத் தொகுப்புகள் அடங்கிய மூன்று நூல்களில் ஒன்று.

தந்திர-வார்த்திகா : மீமாம்ச தத்துவம் பற்றி குமரிலபட்டர் எழுதியது.

தர்க்க-ரகஸ்ய-தீபிகா : சத்-தர்சண-சமுக்காயம் எனும் நூல் பற்றி குணரத்னா என்பவர் எழுதிய விளக்க நூல்.

தர்க்க-சங்கிரஹா : அன்னம பட்டர் என்பவர் நியாய-வைசேஷிகம் தத்துவம் பற்றி எழுதிய பிரபலமான நூல்.

தத்துவார்த்த அதிகாம சூத்திரம் : உமாஸ்வாதி எழுதியது. சமண சமயம் பற்றி தொடக்க காலத்தில் எழுதப்பட்ட முறையான விளக்க நூல்.

தத்துவ சிந்தாமணி : கங்கேசர் எழுதியது. புதிய நியாயா தத்துவத்தின் மூல நூல்.

தத்துவ சங்கிரகம் : சந்திராக்சிதா என்பவர் எழுதிய புத்த தத்துவ நூல்.

தத்துவ வைசாரதி : வாசஸ்பதி மிஸ்ரர் என்பவர் பிரம்ம சூத்திரம் எனும் வேதாந்த நூலுக்கு எழுதிய விரிவான விளக்க நூல்.

தத்வோபப்ளவசிம்மம் : ஜெயராசி பட்டர் எழுதிய நூல். யதார்த்த நிலை மீது ஏற்படும் தீவிர சந்தேகம் பற்றிய நூல். பொருள்வாதிகள் எழுதியதாக தவறாக கருதப்படுவது இந்நூல்.

துப்திகா : குமாரில பட்டர் எழுதிய மீமாம்ச தத்துவ நூல்.

உதயணா : கி. பி. 10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். நியாய - வைவேஷிக தத்துவத்தின் பழைய வடிவம் பற்றி போதித்தவர்களில் இறுதியானவர்.

உத்யோதகாரர் : வாத்சாயனர் எழுதிய நியாய சூத்ரம் எனும் நூலுக்கு விளக்கம் எழுதியவர். கி. பி. 6 அல்லது 7வது நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

உபநிஷத்துக்கள் : நான்கு வேதங்களின் இறுதியில் வரும் இறையியல் அல்லது மெய்யியல் தொடர்பான தத்துவ நூல்கள் என்பதால் இதனை வேதாந்தம் என்றும் உத்தர மீமாம்சம் என்றும் அழைப்பர். இவைகள் பிரம்மத்தைபற்றியும், பிரபஞ்சம் பற்றியும், பிரபஞ்சம் மித்யா எனும் நிலையாமை என்றும், சீவ-பிரம்ம ஐக்கிய தத்துவத்தையும் வலியுறுத்தும் நூல்கள். ஆதிசங்கரர் பத்து முதன்மையான உபநிஷத்துகளுக்கு பாஷ்யம் (விளக்கம்) எழுதியுள்ளார். சங்கரருக்குப் பின் வந்தவர்களில் இராமானுசர் மற்றும் மத்வர் ஆகியோர் பாஷ்யம் எழுதியுள்ளனர்.

உமாஸ்வாதி : கி. பி. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். சமண சமயத்திற்கு தொடக்க காலத்தில் முறையான வடிவம் கொடுத்தவர்.

வாசஸ்பதி மிஸ்ரர் : கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். சாங்கியம், யோகம், நியாயம், மீமாம்சம், அத்வைத வேதாந்தம் போன்ற பலதரப்பட்ட தத்துவங்களுக்கு இவர் எழுதிய விளக்கங்கள் மிக முக்கியமானவை.

வைபாடிகம் : புத்தவியல் கருத்தியல் அடங்கிய நூல்.

வைசேஷிகம் : பட்டறிவின் அடிப்படையிலான உள்ளமைவியல் குறித்த இந்தியத் தத்துவம்.

வைசேசிக சூத்ரம் : வைசேசிக தத்துவத்தின் நிறுவனரான கணாதர் என்பவரால் எழுதப்பட்ட வைசேசிக தத்துவத்தின் அடிப்படை நூல்.

வல்லபர் : 15வது நூற்றாண்டில் வாழ்ந்தவர். பிரம்ம சூத்திரத்திற்கு ஆத்திக அடிப்படையில் விளக்கம் அளித்தவர்.

வாசுதேவ சார்வபா உமா : கி. பி. 15 மற்றும் 16வது நூற்றாண்டிற்கு இடைப்பட்டவர். நவ நியாயம் எனும் தத்துவத்தை வங்காளத்தில் அறிமுகம் செய்தவர்.

வசுபந்து : கி. பி. 5ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பௌத்த அறிஞர். சௌத்திராந்திக யோகசாரம் எனும் பௌத்த தத்துவத்தை நிறுவியவர்.

வாத்சாயனர் : கி. பி. 4-வது நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் எழுதிய பழமையான நியாய சூத்திரம் எனும் நூல் இன்னும் நம்மிடையே உள்ளது.

வேதம் : இந்துசமயத்தின் புனித நூல். மிக விரிவான இலக்கியத் தொகுப்பு. இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் மிகப்பழமையானது. இதனை ருக் வேதம், யசுர்வேதம், சாம வேதம் மற்றும் அதர்வண வேதம் என்று நான்காக தொகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வேதத்தின் இறுதியில் அமைந்துள்ள பகுதிகளுக்கு வேதாந்தம் அல்லது உபநிசத்துக்கள் என்பர்.

வேதாந்தம் : வேதத்தின் இறுதிப் பகுதியில் அமைந்துள்ளதால் இதனை உத்தர மீமாம்சம் என்பர்.

வேதாந்த சூத்திரம் : இதனையே பிரம்ம சூத்திரம் என்றும் பிட்சு சூத்திரம் என்றும் அழைப்பர்.

வேதாந்த சாரம் (நூல்) : 18-வது நூற்றாண்டில் வாழ்ந்த சதானந்தர் என்பவர் உபநிடதங்களின் சாரத்தை இந்நூலில் எளிமையாக விளக்கியுள்ளார்.

விபாசா : இதனையே அபிதம்ம விபாசம் என்பர்.

விதி-விவேகா : மந்தன மிஸ்ரர் எழுதியது. பாட்ட மீமாம்சம் பற்றிய நூல்.

வித்யானந்தா : சமண சமய தர்க்கவியல்வாதி.

வித்யாரண்யர் : விசயநகரப் பேரரசு தோண்றக் காராணமானவர். உபநிடதங்களின் தெளிவுரையாக இவர் எழுதிய பஞ்ச தசீ எனும் அத்வைத வேதாந்த விளக்க நூல் மிகவும் பிரபலமானது. மேலும் சிருங்கேரி மடாதிபதியாகவும் திகழ்ந்தவர். சிறந்த அத்வைத வேதாந்தி.

விஞ்ஞான பிட்சு : கி. பி. 16வது நூற்றாண்டில் வாழ்ந்தவர். சாங்கிய தத்துவத்தை பின்பற்றிய ஆன்மிகவாதி.

விஞ்ஞான-வாதம் : அகநிலைக் கருத்துக் கொள்கை. புத்தவியலின் யோககார கருத்தியலின் தத்துவக் கொள்கை.

விஞ்ஞாப்திமாத்ரா சித்தி : வசுபந்து எழுதியது. விஞ்ஞான வாதத்திற்கு ஆதரவான தத்துவக் கொள்கை கொண்ட நூல்.

விநயபிடகம் : தொடக்க கால புத்த சமய மூன்று நூல்களில் ஒன்று. புத்த துறவற நெறிகள் விளக்குவது.

விசிட்டாத்துவைதம் : முழுமுதற் கொள்கை. இராமானுஜரின் வேதாந்த கருத்தியலின் தத்துவப் பார்வை கொண்டது.

விருத்திகாரர் : மீமாம்ச சூத்திரம் பற்றி தொடக்க காலத்தில் விளக்கியவர்களில் ஒருவர் எனச் சபரர் சுட்டுகிறார்.

விவேகசூடாமணி (நூல்): ஆதிசங்கரர் எழுதியது.

யோகா சூத்ரம் : மனிதனுக்கும் அப்பாற்பட்ட சக்திகளை அடைய மேற்கொள்ளப்படும் ஒரு பண்டைய பயிற்சி முறை. பதஞ்சலி முனிவர் இதனை அறிமுகப்படுத்தியவர்.

யோகாசாரம் : மைத்ரேயநாதர் மற்றும் அசங்கர் ஆகியோர் நிறுவிய மகாயான புத்த தத்துவ கருத்தியல் எண்ணங்களே உண்மை என்பது இவர்கள் கொள்கை.

யோகாசார-பூமி-சாஸ்த்ரா : அசங்கர் எழுதியது. யோகாசார புத்தவியல் பற்றிய அடிப்படை நூல்.

பதஞ்சலி யோக சூத்திரம் : பதஞ்சலி முனிவர் இத்தத்துவத்திற்கு ஆசிரியர். இவரின் பதஞ்சலியோக சூத்திரம் எனும் நூல் உலகளவில் பெருமை பெற்றது.

யாக்யவல்க்கியர் : உபநிடதங்கள் பற்றி போதித்த முக்கிய தத்துவவாதி. இவரது மனைவி மைத்ரேயி கூட ஒரு வேதாந்தி ஆவர்.

யாக்ஞயவல்கிய ஸ்மிருதி : கி. மு. 100க்கும் 300வது ஆண்டுகளுக்கு இடைப்பட்டது.

யசுர்வேதம் : பண்டைய நான்கு வேதங்களில் மூன்றாவதாகும். வேத சடங்குகள் பற்றிய விளக்க நூல். இதனை தொகுத்தவர் வைசம்பாயனர்.

யசோமித்ரா : வசுபந்துவின் அபிதம்ம கோசம் நூலுக்கான விளக்க நூல் எழுதியவர்.

யசோவிஜயா : சமண சமய தர்க்கவியல்வாதி.

ஆதார நூல்கள்

இந்த்தியத் தத்துவ இயல், ஓர் எளிய அறிமுகம், நூலாசிரியர், தேவிபிரசாத் சட்டோபாத்தியாயா, தமிழில் வி. என். இராகவன், அலைகள் வெளீட்டகம், சென்னை 600024.

இந்தியத் தத்துவக் களஞ்சியம், சோ.ந. கந்தசாமி, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

குறிப்புதவி நூல்கள்

இந்தியத் தத்துவ இயல், சர்வபள்ளி. சர். வீ. இராதாகிருட்டிணன், முன்னாள் இந்தியக் குடியரசு முன்னாள் தலைவர்.

இந்தியத் தத்துவ இயலின் வரலாறு, எஸ். என். தாஸ்குப்தா, கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகப் பதிப்பகம்

இந்திய தர்க்க இயலின் ஆரம்பப் பாடநூல், கே. சாஸ்திரி, 1951, சென்னை.

தர்சனா-திக்தர்சனா மற்றும் இந்திய தர்க்க இயலும் அணுகொள்கையும், ராகுல சாங்கிருத்யாயன்

இந்தியத் தத்துவ இயலின் சுருக்கம், எம். ஹரியண்ணா.

இந்தியத் தத்துவ இயலின் சுருக்கம், பி. டாய்சன், பெர்லின், 1907.

இந்தியா என்றதொரு அதிசயம், ஏ. எல். பாஷ்யம்.

லோகாயதா, டி. சட்டோபாத்தியா, புதுதில்லி,1959

இந்திய தர்க்க இயலும் அணுக்கொள்கையும், ஏ. பி. கீத், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம்,1921

நியாய - வைசேஷிக தத்துவ இயலின்படி பொருள் பற்றிய கோட்பாடு, யூ. மிஸ்ரா, 1936, அலகாபாத்.

தர்க்க அலங்காரம், சந்திரகாந்தா,

இந்திய தத்துவ இயல்களின் முன் ஊகங்கள், பிராண்டிஸ் ஹால், ஐஎ., 1963

கிழக்கின் புனித நூல்கள், ஜி. திபோ.

பௌத்த காலத்திற்கு முந்தைய தத்துவ இயலின் வரலாறு, கல்கத்தா,1921.

வேதங்கள் மற்றும் உபநிஷத்துக்களில் மதமும் தத்துவமும், ஏ. பி. கீத், ஹார்வார்டு ஓரியண்டல் சீரிஸ், 1925.

பதிமூன்று முக்கிய உபநிஷத்துக்கள், ஆர். ஈ. ஹியூம், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகப் பதிப்பு, 1951.இந்திய இலக்கியத்தின் வரலாறு, எம். விண்ட்ர் நீட்ஸ்.

வேதகால புராண இலக்கியம், ஏ. ஏ. மக்டோனல், ஸ்ட்ராஸ்பர்க், 1897

தர்மசாஸ்திரங்களின் வரலாறு, பி. வி. கானே, பாகம் 2. புனே, 1941.

உரையாசிரியர்கள்

உரையாசிரியர்கள் என்பவர்கள், தமிழ் இலக்கண மற்றும் இலக்கிய நூல்களுக்கு விளக்கவுரைகளை எழுதியவர்கள் ஆவர். இவர்கள், நூல்களின் பொருளைப் பொதுமக்களுக்கு எளிதாகப் புரியவைப்பதற்காக உரைநூல்களை உருவாக்கியுள்ளனர். நக்கீரர், இளம்பூரணர், பேராசிரியர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர் போன்றவர்கள் புகழ்பெற்ற உரையாசிரியர்கள்.

உரையாசிரியர்களின் முக்கிய வகைகள்:

இலக்கண உரையாசிரியர்கள்:

தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கண நூல்களுக்கு உரை எழுதியவர்கள். இவர்களில் நக்கீரர், இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், சேனாவரையர் ஆகியோர் முக்கியமானவர்கள்.

இலக்கிய உரையாசிரியர்கள்: சங்க இலக்கியம், அற இலக்கியம், காப்பியம் போன்ற இலக்கிய நூல்களுக்கு உரை எழுதியவர்கள். இவர்களில் அடியார்க்கு நல்லார், தெய்வச்சிலையார், மணக்குடவர், பரிமேலழகர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

உரையாசிரியர்களின் முக்கியத்துவம்:

பண்டைய தமிழ் நூல்களைப் புரிந்துகொள்ள உதவுகிறார்கள்.

நூல்களின் ஆழமான பொருளையும், நுட்பமான கருத்துகளையும் விளக்குகிறார்கள்.

தமிழ் இலக்கிய வரலாறு மற்றும் இலக்கண வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றியுள்ளனர்.

காலம் கடந்தும் தமிழ் மொழியின் தொன்மைக்கும், சிறப்பிற்கும் உரையாசிரியர்களின் உரைநூல்கள் உதவுகின்றன.

உரையாசிரியர்கள்

ஒரு காலத்துத் தோன்றிய நூலைப் பிற்காலத்து மக்கள் புரிந்துகொள்ளும் வண்ணம் தக்க எடுத்துக்காட்டுகளுடன் உரை எழுதியவர்கள் உரையாசிரியர்கள். இலக்கியங்கட்கும் இலக்கணங்கட்கும் உரை எழுதியவர்கள் பெயர்களைத் தமிழ் இலக்கிய உலகில் விரிவாகக் காணுகிறோம். உரையாசிரியர்கள் உரைகளே தனி நூல்கள் போல் சிறப்புடன் விளங்குகின்றன.

- சேனாவரையர்

தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரை எழுதியவர் சேனாவரையர். 'வடநூல் கடலை நிலைகண்டு உணர்ந்தவர்' என்றும், 'ஆனாமரபின் சேனாவரையர்' என்றும் புகழப்பட்டவர். 'புவனேக சுந்தரநல்லூர் அரையன் ஆண்டானான சேனாவரையன்' எனக் கல்வெட்டில் அவர் பெயரைக் காணுகின்றோம். இக்கல்வெட்டு கி.பி. 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

- நச்சினார்க்கினியர்

நச்சினார்க்கினியர், தொல்காப்பியத்தில் உள்ள எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களுக்கும் உரை எழுதியவர். 'கண்டியதேவரான நச்சினார்க்கினியன்' என்ற கல்வெட்டுத் தொடரைக் காணுகின்றோம். கோவை மாவட்டம் அன்னூரில் உள்ள இக்கல்வெட்டு கி.பி. 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

- தெய்வச்சிலையார்

தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய மற்றொரு ஆசிரியர் தெய்வச்சிலையார். அவரும் சேனாவரையர்போல, சொல் அதிகாரத்திற்கு மட்டும் உரை எழுதியுள்ளார். கல்வெட்டுக்களில் 'தெய்வச்சிலை பட்டன்', 'அரையன் தெய்வச்சிலையான் எடுத்தகை அழகியான்' என்பன போன்ற தொடர்கள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகள் 13, 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.

- பரிமேலழகர்

திருக்குறளுக்குப் பலர் உரை எழுதியிருப்பினும் பரிமேலழகர் உரையே மிகச் சிறந்தது என்பர். காஞ்சிபுரம் வரதராசப்பெருமாள் என வழங்கும் அருளாளப் பெருமாள் கோயில் கல்வெட்டில் 'வண்டுவரைப் பெருமாளான பரிமேலழகிய பெருமாள் தாதன்' என்ற பெயர் காணப்படுகிறது. இக் கல்வெட்டு கி.பி. 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

- சாமுண்டிதேவர்

புறப்பொருள் வெண்பாமாலை என்னும் நூலை இயற்றியவர் ஐயன் ஆரிதனார் என்பவர். அதற்கு உரை எழுதியவர் மாகறல் சாமுண்டிதேவர் என்பவர். சீவைகுண்டம் பெருமாள் கோயில் கல்வெட்டில் 'மாகறல் திருமேற்கோயில் பெருமாளுக்கு இவ்வூர் ஊரங்கிழான் சாமுண்டிதேவன் திருவேகம்பம் உடையான் விளக்கு ஏற்ற ஒரு கழஞ்சு பொன்' கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது.

தமிழ் உரைநூல் ஆசிரியர்கள்

பல ஆண்டுகளுக்கு முன் பாடல் வடிவில் எழுதப்பட்ட தமிழ் நூல்களின் பொருளை உரைவடிவில் விரித்து எழுதியவர்கள் தமிழ் உரைநூல் ஆசிரியர்கள் ஆவர்.

மொழிகள் காலப் போக்கில் மாற்றம் அடைகின்றன. பழைய சொற்கள் வழக்கிழப்பதும், புதிய சொற்கள் தோன்றுவதும் இயல்பு. இவற்றைவிட இலக்கண மாற்றங்களும் ஏற்படுவதுண்டு. இதனால் ஒரு காலத்தில் ஆக்கப்பட்ட நூல்களைப் பல நூற்றாண்டுகளுக்குப் பின் வருவோர்

புரிந்து கொள்ள முடியாமல் போய்விடுகிறது. இது மட்டுமன்றி குறிப்பிட்ட ஒரு காலத்தில் நூல்களை ஆக்குவதற்குப் பயன்பட்ட இலக்கிய வடிவம் பரவலாகப் புரிந்து கொள்வதற்கு ஏற்றதாக இல்லாமலும் போகக் கூடும்.

இந்த அடிப்படையில் சுமார் 2000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை கொண்ட இலக்கியத்தைக் கொண்ட தமிழும் இதற்கு விதி விலக்கு அல்ல. சங்க காலத்திலும், அதன் பின்னர் சங்கம் மருவிய காலத்திலும் எழுதப்பட்ட நூல்கள் மொழியில் ஏற்பட்ட மாறுதல்களால் புரிந்து கொள்ளப்படாமல் போனது ஒரு புறம் இருக்கப் பா வடிவில் சுருக்கமாகச் சொல்லப்பட்ட விடயங்களை விரிவாக விளக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டதனால் பிற்காலங்களில் இவற்றுக்குப் பல உரை நூல்கள் எழுந்தன

இதனால் காலத்துக்குக் காலம் இத்தகைய நூல்களுக்கு மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் உரைகள் எழுதப்படுவதும், மேலும் காலம் செல்ல அந்த உரைகளே புரிந்து கொள்ளப்படாது போகப் புதிய உரைகள் எழுதப்படுவது வழக்கமாக நிகழ்வதே. பொ.ஊ. 9-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலம் உரைகள் மேலோங்கிய காலம் எனலாம். இவ்வாறு வளர்ந்த இவ்வுரைகள் எழுதிய உரையாசிரியர்களின் காலம் பொ.ஊ. 12 முதல் 18-ஆம் நூற்றாண்டு எனக் கூறப்படுகிறது.

உரையாசிரியர்கள் கையாண்ட உத்திகள்

உரையாசிரியர்கள் வெறும் சொற்பொருள் விளக்கம் தருவதோடு நின்று விடாமல் இலக்கணக் குறிப்புத் தருதல், எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குதல், திறனாய்வு முறையில் விளக்குதல், வினாவிடை முறையில் விளக்குதல், எதனையும் வரிசை முறைப்படியும் ஒழுங்கு முறையிலும் எழுதுதல் என்று பல்வேறு உத்திகளைக் கையாண்டு விளக்கம் செய்வர். இவ்வுரையாசிரியர்களின் நடை "விளக்க நடை" என்று கூறப்படுகின்றது. சிலபோழ்துகளில் மூல நூலை விட உரைநூல் சிறப்பாக அமைவதும் உண்டு.

இவ்வாறான உரை நூல்களை எழுதிய உரை ஆசிரியர்களை

இலக்கண உரையாசிரியர்கள்

இலக்கிய உரையாசிரியர்கள்

வைணவ உரையாசிரியர்கள்

சைவ சித்தாந்த உரையாசிரியர்கள் எனப் பகுத்துக் காண்பர்.

இலக்கண உரையாசிரியர்கள்

இலக்கண நூல்களுக்கு உரை எழுதியோர் இலக்கண உரையாசிரியர்கள் ஆவர்.

நக்கீரர்

இளம்பூரணர்

பேராசிரியர்

நச்சினார்க்கினியர்

சேனாவரையர்

குணசாகரர்

கல்லாடர்

மயிலைநாதர்

ஆறுமுக நாவலர்

இலக்கிய உரையாசிரியர்கள்

அடியார்க்கு நல்லார்

அரும்பத உரையாசிரியர்

தெய்வச் சிலையார்

மணக்குடவர்

பரிதி

பரிமேலழகர்

பரிப்பெருமாள்

காலிங்கர்

வைணவ உரையாசிரியர்கள்

நஞ்சீயர்

அழகிய மணவாளர்

திருக்குருகைப் பிள்ளைப் பிரான்

பெரியவாச்சான்பிள்ளை

வடக்குதிருவீதிப் பிள்ளை

வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார்

சி. ஜெகன்னாதாசாரியர்

சைவ சித்தாந்த உரையாசிரியர்கள்

சிவஞான முனிவர்

உமாபதி சிவாச்சாரியார்

உரையாசிரியர் உரை எழுதிய நூல்கள்

இளம்பூரணர் - தொல்காப்பியம்

சேனாவரையர் - தொல்காப்பியம்

தெய்வச் சிலையார் - தொல்காப்பியம்

நச்சினார்க்கினியர் - தொல்காப்பியம்,கலித்தொகை, குறுந்தொகை, பத்துப்பாட்டு, சீவக சிந்தாமணி

மணக்குடவர்- திருக்குறள்

பரிதி - திருக்குறள்

பரிமேலழகர் - திருக்குறள்

பரிப்பெருமாள் - காலிங்கர்

காலிங்கர் - திருக்குறள்

அரும்பத உரையாசிரியர் - சிலப்பதிகாரம்

அடியார்க்கு நல்லார் - சிலப்பதிகாரம்

மயிலைநாதர் - நன்னூல்

சங்கர நமச்சிவாயர் - நன்னூல்

சிவஞான முனிவர் - நன்னூல்

ஆறுமுக நாவலர் - நன்னூல்

குணசாகரர் - யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை

பண்டைய தமிழ் இலக்கண நூல்கள் நூற்பாக்களாகவும், இலக்கிய நூல்கள் பாடல்களாகவும் அமைந்திருந்தன. இவை சுருக்கம், மனத்தில் பதியும் எளிமை முதலான பாங்குகளுடன் எழுதப்பட்டவை. உரைநடைப் பாங்கில் பேசும் மக்களுக்குப் புரிவதற்காக அந்த இலக்கண, இலக்கிய நூல்களுக்கு உரைநூல்கள் தோன்றின.

இத்தகைய உரைநூல்களை எழுதிய பல ஆசிரியர்களின் காலநிரல் எளிய ஒப்பு நோக்குக்காக இங்கு தரப்படுகிறது.

எட்டாம் நூற்றாண்டுக்கு முன்னர் எந்த உரைநூலும் எழவில்லை. நக்கீரர் இறையனார் அகப்பொருள் உரை இக்காலத்தில் தோன்றியது.

9 ஆம் நூற்றாண்டு

தமிழ்நெறி விளக்கம் என்னும் இலக்கண நூலுக்கு நூலாசிரியரே உரையும் எழுதியுள்ளார்.

10 ஆம் நூற்றாண்டு

மணக்குடவர் திருக்குறளுக்கு உரை எழுதினார். இவர் சைவர்

நீலகண்டனார் என்னும் சைவர் நக்கீரரின் இறையனார் களவியல் உரையை எழுதிவைத்தார்.

ஆத்திரையன் பேராசிரியன் என்னும் சைவர் தொல்காப்பியம் பொதுப்பாயிரம் பகுதிக்கு உரை எழுதினார்.

11 ஆம் நூற்றாண்டு

இலக்கிய உரைகள்

சிலப்பதிகாரம் அரும்பத உரையாசிரியர்

பரிப்பெருமாள் திருக்குறள் உரை. இவர் சைவர்

இலக்கண உரைகள்

யாப்பருங்கல உரையாசிரியர். இவர் சைனம்

குணசாகரர் - யாப்பருங்கலக் காரிகை உரையாசிரியர். இவர் சைனர்.

இளம்பூரணர் - தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியவர். இவர் சைனர்.

12 ஆம் நூற்றாண்டு

இலக்கிய உரைகள்

புறநானூறு 266 பாடல்களுக்கு உரை எழுதிய “பழைய உரை“ ஆசிரியர்.

அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரை (சைவம்)

திருக்கோவையார் “பழைய உரை“ எழுதியவர்

இலக்கண உரை

பெருந்தேவனார் (வீரசோழிய உரையாசிரியர்)

13 ஆம் நூற்றாண்டு

இலக்கிய உரை

காலிங்கர் - திருக்குறள் உரை

பரிமேலழகர் - திருக்குறள் உரை, பரிபாடல் உரை - வைணவர்

பழைய உரையாசிரியர்கள்

திருமுருகாற்றுப்படை பழைய உரை

ஐங்குறுநூறு பழைய உரை

அகநானூறு பழைய உரை

பதிற்றுப்பத்து பழைய உரை

பதுமனார் - நாலடியார் உரை (சைவம்)

தருமனார் - நாலடியார் உரை (சைவம்)

நாலடியார் விளக்கவுரை ஆசிரியர்

பேராசிரியர் (திருக்கோவையார் உரையாசிரியர்)(சைவம்)

பலர் - பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் உரையாசிரியர்கள்

இலக்கண உரை

வச்சணந்திமாலை உரையாசிரியர் (சைனம்)

பேராசிரியர் - தொல்காப்பியம் பொருளதிகார உரை (சைவம்)

இராசபவித்திர பல்லவதரையர் - அவிநயம் நூலும் உரையும் (சைனம்) (இப்போது கிடைக்கவில்லை)

சேனாவரையர் - தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரை (சைவம்)

நாற்கவிராச நம்பி - நம்பியகப்பொருள் நூலும் உரையும் (சேனம்)

14 ஆம் நூற்றாண்டு

இலக்கிய உரை

நச்சினார்க்கினியர் - பத்துப்பாட்டு உரை, கலித்தொகை உரை, சிந்தாமணி உரை (சைவம்)

சமய திவாகர முனிவர் - நீலகேசி உரை (சைனம்)

இலக்கண உரைகள்

மயிலைநாதர் - நன்னூல் உரை (சைனம்)

களவியற்காரிகை உரையாசிரியர் (சைவம்)

நச்சினார்க்கினியர் - தொல்காப்பிய உரை (முழுமைக்கும்) (சைவம்)

15 ஆம் நூற்றாண்டு

இலக்கிய உரை

தக்கயாகப்பரணி உரையாசிரியர் (சைவம்)

பரிதியார் - திருக்குறள் உரை (சைவம்)

இலக்கண உரை

தொல்காப்பியம் சொல்லதிகாரம் பழைய உரையாசிரியர் (சைவம்)

கல்லாடர் - தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரை (சைவம்)

தெய்வச்சிலையார் - தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரை (சைவம்)

சாமுண்டிதேவ நாயகர் - புறப்பொருள் வெண்பாமாலை உரை (சைவம்)

நேமிநாத உரையாசிரியர் (சைனம்).

இடைக்கால உரையாசிரியர்கள்

கி.பி.10ஆம் நூற்றாண்டு முதல் உரையாசிரியர்களின் உரைகள் தொடர்ந்து வெளிவரலாயின. தமிழ்உரைநடை உரைகளால் சிறப்பாக வளர்ச்சியுற்றது. உரைநடை தெளிவாகவும் தருக்கமுறையாகவும் வளரக் கூடிய வகையில் செய்யுள் வடிவிலானவற்றுக்கு உரை எழுதி விளக்கும் சூழல் உருவானது. இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர், சேனாவரையர், அடியார்க்கு நல்லார் முதலான உரையாசிரியர்கள் உரைநடையை வளர்த்தனர்.

உரையாசிரியர்களின் உரைப் பணி

சங்க காலத்தில் தமிழைக் காக்கும் பொறுப்பை மன்னர்கள் பெற்றிருந்தனர். பின் பல்லவர் காலத்தில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் தமிழ்ப்பணியை மேற்கொண்டனர். பிற்காலச் சோழர் காலத்தில்தான் பல உரையாசிரியர்கள் தோன்றித் தமிழின் காவலராய் விளங்கினர். உரையாசிரியர்களின் இடைவிடாத முயற்சியாலும் தொடர்பணியாலும் பழந்தமிழ் இலக்கியங்கள் வருங்கால சந்ததியினருக்கு உதவுகின்றன. தமிழ் நூல்களை,

(1) இலக்கியம்

(2) இலக்கணம்

(3) தத்துவம்

(4) கலை

என்ற நான்கு பிரிவிற்குள் அடக்கலாம். இலக்கியம், இலக்கணம் ஆகியவற்றின் உரைகள் மிகுதியாகத் தோன்றியுள்ளன. தத்துவம், கலை ஆகிய பிரிவுகளில் தேவையான அளவு உரைகள் தோன்றவில்லை. இருட்டறையிலுள்ள எழில்மிக்க ஓவியத்தைக் காணக் கண்கள் மட்டும் இருந்தால் பயனில்லை. இருளைப் போக்கும் ஒளிவேண்டும். இனி, பலாப்பழத்தைச் சுவைத்து மகிழ அதனை முறையாக அறுத்துச் சுளை எடுத்துத் தருபவரின் உதவி வேண்டும். இவ்வாறே பழம்பெரும் இலக்கண, இலக்கியச் செல்வங்களைக் கற்று மகிழ்வதற்கு, தக்க உரையாசிரியர்கள் வேண்டும்.

யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்

என்ற உயர்ந்த நோக்கத்தோடு உரையாசிரியர்கள் பணியாற்றியுள்ளனர். கல்விக் கோயிலின் பெருவாயிலைத் திறந்துவிட்ட சான்றோர்கள்தான் உரையாசிரியர்கள்.

“இந்திய நாட்டிலுள்ள பௌத்த சமய நூல்கள் இக்காலத்தவர் படித்து இன்புறுவதற்கு ஏற்ற உரை விளக்கங்கள் இல்லாத காரணத்தால் விளங்காமல் இருக்கின்றன” என்று ஆங்கில ஆராய்ச்சியாளர் ரைஸ் டேவிட் (சுாலள னுயஎனை) கூறியுள்ளார்.

“நூலாசிரியரின் அரிய கருத்துகளையெல்லாம் உரையாசிரியர் உதவியாலேயே உலகம் உணர்ந்து இன்புறுகின்றது. பேருபகாரிகளாகிய உரையாசிரியர்கள் உதவி இல்லையெனில் பண்டைய உயர்நூல்களாம் கருவூலங்களில் தொகுத்து வைத்த விலை வரம்பு இல்லாப் பொருள்மணிக் குவியல்களை யாம் எங்ஙனம் பெறுதல் கூடும்” என்று பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் கூறியுள்ளார்.

இலக்கிய வரலாற்றில் உரைகளுக்கு மிகுந்த உயர் இடம் உண்டு. தமிழ்மொழி வளர்ச்சிக்கும், இலக்கிய இலக்கணப் பயிற்சிக்கும் உரைகள் உதவி செய்கின்றன. உரைகள் இல்லாது இருக்குமேயானால் பழந்தமிழ் இலக்கிய இலக்கணங்கள் நமக்கு விளங்காமல் போயிருக்கும். நமக்குக் கிடைத்துள்ள உரைகள் யாவும் புதையல் போன்றவையாகும்.

உரைகள்

உரை என்பது ஒரு வார்த்தையின் ஒரு பகுதி ஆகும், இது அதைப் படிக்கும் நபருக்கு அர்த்தங்களின் தொகுப்பை வெளிப்படுத்துகிறது. இது பல்வேறு வடிவங்கள் மற்றும் கட்டமைப்புகளில் எழுதப்பட்ட படைப்பின் ஒரு பகுதியாகும், இது எழுதப்பட்ட படைப்பின் ஒரு பகுதியை ஒன்றாக இணைக்கும் சொற்கள், சொற்றொடர்கள் மற்றும் வாக்கியங்களாக இருக்கலாம்.

உரைகள்” என்பது ஒரு உரைநடையில் எழுதப்பட்ட விளக்கம் அல்லது செய்யுளின் விளக்க உரையைக் குறிக்கிறது, இது மூல உரைக்கு பொருள் மற்றும் தெளிவை சேர்க்கிறது. உரையாசிரியர்கள் மூல உரையின் சொற்களையும், அதன் பொருளையும் விளக்குகிறார்கள். தமிழ் இலக்கியத்தில், இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் போன்ற பல இலக்கண உரையாசிரியர்கள் உள்ளனர்.

உரையின் வகைகள்

விளக்க உரை: ஒரு செய்யுளுக்கு விளக்கம் அளிப்பது.

இலக்கண உரை: இலக்கண நூல்களுக்கு (எ.கா., தொல்காப்பியம்) கொடுக்கப்படும் உரை.

மாநாட்டு உரைகள்: மாநாடுகளில் நிகழ்த்தப்படும் உரைகள்.

உரையின் பயன்கள்

பொருள் விளக்கம்: மூல உரையின் சொற்களையும், அவற்றின் பொருளையும் விளக்குகிறது.

தெளிவு: மூல உரையில் உள்ள கருத்துக்களைப் புரிந்துகொள்ள உதவுகிறது.

வளர்ச்சி: உரைநடை வளர்வதற்கும், செய்யுள் நடையில் உள்ள நூல்களைப் புரிந்து கொள்வதற்கும் உதவுகிறது.

பிற்காலப் பகுதியில் சிலப்பதிகாரம், திருக்குறள் முதலியவற்றிற்கு உரைகள் எழுந்தன. பிற உரை நூல்களாக யாப்பருங்கல விருத்தியுரை, யாப்பருங்கலக் காரிகையுரை, தொல்காப்பிய உரை போன்றவற்றையும் சுட்டலாம்.

சிலப்பதிகார அரும்பதவுரை

சிலப்பதிகார அரும்பதவுரையின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்த உரையானது நூல் முழுமைக்கும் உள்ளது.

இவ்வுரையாசிரியர் தாம் அறிந்த வரையில் இசை, நாடகம் ஆகிய பகுதிகளில் பல மேற்கோள்களையும், மரபுகளையும் உணர்த்தியுள்ளார். பொதுவாக மிகவும் சுருக்கமாக உரை எழுதும் இவர், அரங்கேற்றுகாதை, கானல் வரி முதலிய இடங்களில் மிக விரிவாக எழுத, இவ்வுணர்வினைக் காரணமாகக் கூறலாம். இவர் மேற்கோளாகக் காட்டியுள்ள நூல்களுள் தெரிந்தவை கலித்தொகை, புறநானூறு, திருமுருகாற்றுப்படை, திருக்குறள், புறப்பொருள் வெண்பாமாலை, திவாகரம் போன்றவை ஆகும். இவர் பெயர் குறிப்பிடுகின்ற மேற்கோள் நூல்கள் நற்றிணை, மதுரைக்காஞ்சி, சிந்தாமணி போன்றவையாகும். பெயர் தெரிந்தும் கிடைக்காத நூல்களாக ஆசிரிய மாலை, வளையாபதி போன்றவற்றைச் சுட்டலாம்.

சில சொற்களுக்கு இவர் கூறும் விளக்கம் சுவையாக உள்ளது. உதாரணத்திற்குச் சிலவற்றைக் காண்போம்.

ஒழியா விளக்கு - விடி விளக்கு

பரதவர் - கடலோடிகள்

வெண்குன்றம் - சுவாமிமலை

இந்த உரையாசிரியர் சிறந்த வடமொழி வல்லுநர். இவர் கையாண்டுள்ள சில வடமொழிச் சொற்களைக் காண்போம் :

கருணை மறவ - கிருபா வீரனே

வானவர் போற்றும் வழி -?மோட்ச மார்க்கம்

திருக்குறள் உரை

மேற்குறிப்பிட்ட காலப் பகுதியில் திருக்குறள் உரை பரிப்பெருமாளால் எழுதப்பட்டது. கால முறைப்படி கூறும்போது மணக்குடவர்,

பரிப்பெருமாள், காளிங்கர், பரிமேலழகர், பரிதியார் போன்ற ஐவரைக் கூறலாம். (தொண்டை மண்டல சதகம் 41ஆம் பாடல் உரையின் மேற்கோளாகக் காணப்படும் வெண்பாவிலிருந்து இத்தகவல் கிடைக்கிறது.) பரிப்பெருமாள் குறித்து எவ்விதச் சிறப்பான செய்தியும் இல்லை. இவர் மணக்குடவர் உரையை அப்படியே பின்பற்றி, தேவையான இடத்தில் திருத்தியும், மாற்றியும் எழுதியுள்ளார். பரிப்பெருமாள் தருக்க ரீதியாகவும், மறுப்புகளோடும் எழுதும் திறம் பெற்றவர். அலங்காரம் செய்யும் பழக்கம் இவரிடம் இல்லை. இவர் உரை பல இடங்களில் பொருளுரையும், நயமும் கொண்டதாக உள்ளது.

பிற மதங்களையும், கொள்கைகளையும் பல இடங்களில் சுட்டுகிறார்.

எடுத்துக்காட்டாகக் கீழ்க் காண்பவற்றைக் கூறலாம்:

சுக்கிர மதம் (503)

துரோணாசாரியார் மதம் (504)

கௌடில்யர் மதம் (505)

உரையின் சிறப்பு

பழமொழி போல உலகியற் கருத்துகளை இவர் தெரிவிப்பதும் மிகவும் அழகாக அமைந்துள்ளது. பொதுவாகக் கூறுமிடத்து, இவர் உரை சுவை தருவதாயும், நேரே பொருளை உணர்த்துவதாயும் உள்ளது.

பிற உரை நூல்கள்

பிற உரை நூல்களாக யாப்பருங்கல விருத்தியுரை, யாப்பருங்கலக் காரிகையுரை, தொல்காப்பிய உரை போன்றவற்றைக் கூறலாம்.

யாப்பருங்கல விருத்தியுரை

எழுதியவர் பெயர் தெரியவில்லை. இவர் மேற்கோள் காட்டியுள்ள பாடல்களில் மிகப் பல அருகன் துதியாக உள்ளன. இவருடைய ஆசிரியர் (அமிதசாகரர்) சமணராக இருப்பதால், இவரும் சமணராக இருக்கலாம். பிற சமயங்களையும் இவர் போற்றுகின்றார். முந்தையோர் கருத்துகளைக் கூறும் போது இவர் கீழ்க்காணும் முறைகளைப் பயன்படுத்துகின்றார்:

1) இவை ஒருசார் ஆசிரியர் கொள்கை

2) ஒருசார் வட நூல் வழித் தமிழாசிரியர் இவ்வாறு கூறுகிறார்.

3) மாபெரும் புலவர்

4) புராணக் கவிஞர்

இவ்வுரைக்காரர் பல நூல்களைச் சுட்டுகிறார். உதாரணத்திற்குச் சிலவற்றை இங்கே காண்போம் :

கேசி - காலகேசி, குண்டலகேசி, நீலகேசி

ஊசிமுற - இடைக்காடனார் பாடியது

மாலை - அணிநந்த மாலை, தேசிக மாலை, பன்மணி மாலை

யாப்பருங்கலக் காரிகையுரை

இது இக்காலப் பகுதியில் தோன்றிய மற்றொரு உரை. இதன் ஆசிரியர் குணசாகரர். இவர் அமிதசாகரரின் மாணாக்கர். பெரும்பாலும் யாப்பருங்கல உரையில் வரும் மேற்கோள்களையே தருகின்றார். மறைந்து போன நூல்களையும், இப்போதுள்ள சில நூல்களையும் சுட்டுகிறார். அதிகமாகச் சுட்டுபவை சூளாமணியும், திருக்குறளும் ஆகும். இவர் காலத்திலேயே இந்நூலைப் பயில்வோர் அதிகமாயினர். அவர்களுக்கு உதவ இவர் இந்நூலுக்கு உரை வகுத்தார். சமயத்தால் சமணராயினும், பிற சமயங்களையும் போற்றியுள்ளார். இந்நூல் யாப்பருங்கலத்துக்கு அங்கமாய் (பகுதியாய்) அலங்காரம் உடையதாகச் செய்யப்பட்டது என்பது இதன் சிறப்பாகும்.

தொல்காப்பிய உரை

இக்காலத்தில் தோன்றிய மற்றொரு உரை தொல்காப்பிய உரையாகும். தொல்காப்பியத்துக்குப் பலர் உரை செய்துள்ளனர். முதல் உரையாகிய இதனைச் செய்தவர் இளம்பூரணர். தாமாகவே முனைந்து இவர் தொல்காப்பியத்தைக் கற்றார் எனலாம். இவ்வுரையைத் தவிர இவர் வேறு எந்த நூலும் எழுதவில்லை. சோழ நாட்டைச் சேர்ந்த இவர், சமண சமயத்தவர். அனைத்துச் சமயங்களையும் போற்றும் பாங்கும் இவரிடம் இருந்தது. 'ஆசீவகப்பள்ளி' என்று சமணர் பள்ளியைக் கூறுமிடத்து, குமரக்கோட்டம் பிரமக்கோட்டம் என்பவற்றையும் குறிப்பிடுகிறார். இதன் பின் வேற்றுமையுணர்வின்றி முறையாகக் கீழ்வரும் கடவுளர் மீதான வணக்கப் பாடல்களை எடுத்துக் காட்டுகிறார்:

அருகன்

திருமால்

சிவபிரான்

ஆதிநாதர்

விநாயகர் (359 ஆம் சூத்திரவுரை)

உரையின் சிறப்பு

'தமிழ் நூல் ஒன்றே வல்ல உரையாசிரியர்', என இவரைப் பற்றி, சிவஞான முனிவர் குறிப்பிடுகின்றார். இவருடைய உரை, தமிழ்ப் பண்பாட்டைப் போற்றிக் கூறுவதாகும். எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் ஆகிய அனைத்திற்கும் இவர் உரை எழுதியுள்ளார். தெளிவாகவும், சுருக்கமாகவும் நடுநிலைமையோடும் இவர் எழுதியுள்ளார்.

ஆங்காங்கு இவர் சுவையான சொற் பொருள்கள் பலவற்றைக் கூறுகின்றார்.

இங்குச் சிலவற்றைக் காண்போம்:

செறிவு - அடக்கம்

நிறைவு - அமைதி

செப்பு - சொல்லுதல்

இவரைப் பற்றி மு. இராகவையங்கார்

கூறும் பாராட்டைக் காண்போம்:

பாராட்டுகள்

'பிறர் உட்புகுந்து காணமுடியா வண்ணம் இருண்டு கிடந்த தொல்காப்பியம் எனும் சரக்கறையுள் தம் அறிவென்னும் அணையா விளக்கைக் கொண்டு துருவி ஆங்கே குவிந்து கிடந்த அரதனக் குவியல்களை (இரத்தினக் குவியல்) உலகிற்கு முதலில் விளக்கிக் காட்டிய பெருந்தகையார் இவரே' 'பேச்சு நடையை ஒட்டியே எழுத்து நடையும் சென்றால்தான் மொழி வளர்ச்சியுண்டு எனப்படும் கருத்திற்கேற்ப இவ்வியல்பை ஓரளவு இவருடைய உரையில் காணலாம்' என்கிறார் மு. அருணாசலம்.

உரையின் பயன்கள்

உரையாசிரியர்கள் தாம் கற்றுத் தேர்ந்த புலமைச் செல்வத்தை எல்லாம் தம் உரைகளில் கொட்டி எழுதுவதால் நாம் எளிதாகக் கருத்துகளைப் புரிந்து கொள்கின்றோம்.

சில பாடல்களுக்கு உரையாசிரியர்கள் மிக விரிவான உரையும், நயமிக்க விளக்கமும் எழுதி இருப்பதால், அவை இலக்கியப் பயிற்சிக்கு வழிகாட்டியாய் அமைகின்றன.

தமிழ்மொழியின் அமைப்பு காலந்தோறும் எவ்வாறு மாறுதல் அடைந்து வந்துள்ளது என்பதையும், தமிழ் மக்களின் வாழ்க்கை நிலை, அரசியல் மாறுதல், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றையும் உரைகள் நமக்கு உணர்த்துகின்றன.

மறைந்து போன தமிழ்நூல்களின் பெயர், அந்த நூல்களின் சில பகுதிகள் ஆகியவற்றைப் பேணிப் பாதுகாத்து வருபவை உரைகளே ஆகும். இவ்வாறு பல உதவிகள் செய்யும் உரை நூல்களைத் தந்த உரையாசிரியர்களை நாம் என்றென்றும் போற்ற வேண்டும். தமிழ் மொழியின் வளர்ச்சி என்பது உரையின் வளர்ச்சியே யாகும். தமிழ் இலக்கியத்தில் உரைநடை தோன்றிய வரலாற்றைக் காலந்தோறும் விரிவாகக் கண்டறிய வேண்டும்.

இலக்கண உரைகள்

தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய சான்றோர்கள் வாழ்ந்த காலத்தை உரையாசிரியர்கள் காலம் என்கிறோம். இதனை, கி.பி. 10ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 15ஆம் நூற்றாண்டு வரை எனலாம். இதன் பின்னரும் இலக்கண இலக்கியங்களுக்கு உரை வகுத்த பலர் இருந்திருக்கிறார்கள். தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர், பேராசிரியர் போன்றோர் உரை எழுதியுள்ளனர். இன்று நமக்குக் கிடைத்துள்ள தமிழ் இலக்கண நூல்களுள் காலத்தால் முற்பட்டது தொல்காப்பியம். தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களுக்கும் இளம்பூரணரும், சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையரும், பொருளதிகாரம் உட்பட மூன்றுக்கும் நச்சினார்க்கினியரும் உரை எழுதிப் புகழ் பெற்றனர்.

இளம்பூரணர் உரை

பழம்பெரும் இலக்கண நூலான தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதி அதனைத் "தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு" நன்கு புலப்படுத்தினார். மற்றவர்கள் உள்ளே புகுந்து காணமுடியாத வண்ணம் இருண்டு கிடந்த தொல்காப்பியம் என்ற மாளிகைக்குள் தன் அறிவு என்ற விளக்கைக் கொண்டு தேடி அங்குக் குவிந்து கிடந்த இரத்தினக் குவியல்களை உலகிற்கு முதன்முதலில் விளக்கிக் காட்டிய பெருந்தகை இளம்பூரணர்.

தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய ஆசிரியர்களுள் காலத்தால் முற்பட்டவர் இளம்பூரணர். இவர் தொல்காப்பியத்திற்கு முதன் முதலில் உரை எழுதியவர். மேலும் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியவர். இதனால் உரையாசிரியர் என்ற பொதுப்பெயர் இவருக்கே உரிய சிறப்புப் பெயராக மாறிற்று. இவரை உரையாசிரியர் அல்லது உரை முதல்வர் என்று அழைத்தனர்.

ஊரெனப்படுவது உறையூர், நாடெனப்படுவது சோணாடு என்று இவர் கூறும் சான்றுகளைக் கொண்டு இவர் சோழநாட்டைச் சேர்ந்தவர் எனப் புலனாகிறது. இவர் தன் உரையின் பல இடங்களில் அவனுக்குச் சோறிடுக, உழுது வரும் சாத்தன், கூழ் உண்டான் என்பது போன்ற உழவுத் தொழில் பற்றிய சான்றுகளைத் தருகிறார். சமண சமயத்தைச் சார்ந்தவராக இருப்பினும் மற்ற சமயங்களை வெறுக்கும் பண்பு இவரிடம் இல்லை. பெருந்தன்மையோடு பிற சமயக் கடவுளர்களையும் ஆங்காங்கே சுட்டிக் காட்டுகின்றார். எனவே இவர் சமயப்பொறை மிக்கவர் என்பதை அறியலாம். "இவர் உரை தெளிந்தநீரோடை போன்றது. பற்றற்ற துறவி தூய்மையான வாழ்வு நடத்திமூத்து முதிர்ந்து காவி உடையுடன் அருள் பழுத்த நெஞ்சத்துடன் முகமலர்ந்து நம்மிடம் இன்சொல் பேசுவது போன்ற இன்ப உணர்வை இவர் உரை உண்டாக்குகிறது" என்று மு.வை.அரவிந்தன் பாராட்டியுள்ளார். காலப்போக்கில் பல உரைகளும் உரை ஆசிரியர்களும் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணமாக விளங்கியவர் இளம்பூரணர் எனலாம். இவர் தனக்குப் பின்னால் வருபவர்கள் பின்பற்றத்தக்க உரைமரபுகள் பலவற்றைத் தோற்றுவித்தார். எனவே இவரை உரை முன்னோடி எனலாம். இளம்பூரணர் மூல நூலாசிரியரிடத்துப் பெருமதிப்பு வைத்து எழுதுதல், பிறமொழிப் பயிற்சியோடு உரை எழுதுதல், வினாவிடைப் பாங்கு, சொற்பொருள் தருதல், பலதுறை அறிவோடு உரை எழுதுதல், பல நூல்களிலிருந்து மேற்கோள் காட்டுதல், தம் கால வாழ்வியல் நெறிகளைப் புலப்படுத்துதல் போன்ற உரை மரபுகள் பலவற்றைக் கையாண்டு உரை எழுதியுள்ளார். புகழ்பெற்ற வடமொழி இலக்கண நூலான பாணினீயத்தை இரண்டு முறை இளம்பூரணர் தம் உரையில் பயன்படுத்தியுள்ளார்.

சொற்பொருள் தருதல்

இளம்பூரணர் பல இடங்களில் சொற்களின் பொருளை நன்கு விளக்கிச் சொல்கிறார். மாணாமை என்ற சொல்லிற்கு மிகாமை என்ற பொருள் கூறுகின்றார். உயர்வு என்ற சொல்லிற்கு விளக்கமாகப் பின்வருமாறு கூறுகின்றார் : "உயர்வு தாம் பல, குலத்தால் உயர்தலும், தவத்தால் உயர்தலும், நிலையால் உயர்தலும், உபகாரத்தால் உயர்தலும்" என

விளக்குகின்றார். எழில் என்பதற்கு அழகு என்றுபொருள் கூறுகின்றார். சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு போன்ற நூல்களிலிருந்து பல பாடல்களை மேற்கோள் காட்டுகின்றார்.

செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்

அறிவும் அருமையும் பெண்பாலான - (பொருளதிகாரம், 206)

என்ற நூற்பாவிற்கு உரை எழுதுங்கால்,

செறிவு என்பது அடக்கம்

நிறைவு என்பது அமைதி

செம்மை என்பது மனம்கோடாமை

செப்பு என்பது சொல்லுதல்

அறிவு என்பது நன்மை, தீமை பயப்பனவும் அறிதல்

அருமை என்பது உள்ளக்கருத்தினை அறிதல்

இவையெல்லாம் மகளிர்க்கு உரித்தானவை என இளம்பூரணர் விளக்கம் தருகின்றார். எனவே இளம்பூரணர்க்கு உரை முதல்வர் என்ற பெயர் முற்றிலும் பொருத்தம் ஆகும்.

சேனாவரையர் உரை

தொன்மை இலக்கண நூலாம் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரை வகுத்தவர்கள் ஐந்து பேர். இந்த ஐந்து பேரின் உரையுள் சேனாவரையரின் உரையே மிகச் சிறந்தது. சேனாவரையர் என்ற பெயருக்குப் படைத்தலைவர் என்பது பொருள். பண்டைய தமிழ் வேந்தர்கள் படைத் தலைவர்களைச் சேனாவரையர் என அழைத்தனர். இவ்வாறு அமைந்த சிறப்புப் பெயரே பிற்காலத்தில் இயற்பெயராக வழங்கி விட்டது. இவருடைய உரை, திட்பமும் நுட்பமும் வாய்ந்தது.

சேனாவரையரின் புலமைப் பெருமிதமும், ஆராய்ச்சி வன்மையும், கருத்துத் தெளிவும், உரை முழுமையும் காணலாம். கற்கண்டை வாயிலிட்டு மெல்ல மெல்லச் சுவைத்து இன்புறுவதுபோல் இவர் உரையை நாள்தோறும் பயின்று மெல்ல மெல்ல உணர்ந்து மகிழ வேண்டும். தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு எழுந்த இவருடைய உரை சேனாவரையம் என்றே குறிக்கப்படும் பான்மை இவருடைய உரைச் சிறப்பினை உணர்த்தும். 'வடநூற் கடலை நிலை கண்டுணர்ந்த சேனாவரையர்' என்று இவர் வழங்கப்படுவதற்குத் தகுந்தாற் போன்று வடநூற் கருத்துகளை யொட்டிச் சில இடங்களில் தமிழிலக்கணம் கூறுகிறார். இவர் காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பர். பாண்டிய நாட்டுக் கொற்கைத் துறைமுகத்திற்கு அருகே உள்ள ஆற்றூர் என்பது இவரது சொந்த ஊர். சேனாவரையர் வாழ்ந்த போது அரசாண்ட மன்னர் குலசேகர பாண்டியன். சொல்லதிகார உரையின் தொடக்கத்தில் இவர் விநாயகர், சிவன், கலைமகள், முருகன், அகத்தியர் ஆகியவர்களை வணங்குகின்றார். எனவே இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும். இவர் ஆசிரியர் பணியை மேற்கொண்டு இருந்தார்.

தொல்காப்பியர் வகுத்துள்ள இலக்கண விதிகளையும் சூத்திரங்களையும் சேனாவரையர் தம் நுட்பமான அறிவால் உணர்ந்து நுணுகி நோக்கி, நூலாசிரியர் ஒவ்வொரு சொல்லையும், பொருள் ஆழத்துடன் அமைத்திருக்கின்றார் என்று கூறியுள்ளார். சேனாவரையர் எது சரி, எது பிழை என ஆராய்ந்து, தம் முடிவினை ஆதாரத்தோடு எடுத்துக் காட்டுகின்றார். "வடநூற் கடலை நிலை கண்டு உணர்ந்த சேனாவரையர்" என, சிவஞான முனிவர் பாராட்டியுள்ளார்.

இலக்கண விதிகளை விளக்கும் இடத்து நன்னூல் கருத்துகளை விளக்குகின்றார்.

பழையன கழிதலும் புதியன புகுதலும்

என்ற நூற்பாவை மேற்கோள் காட்டியுள்ளார். மேலும் திருவள்ளுவரைத் தெய்வப் புலவன் என்றே அழைக்கின்றார். சேனாவரையர் உரை செறிவும், சுருங்கச் சொல்லி உய்த்துணரவைக்கும் இயல்பும் உடையது. இதைக் கற்கும் போது சிங்க நோக்காக நூலின் முன்னும் பின்னும் நோக்கி அவற்றை நன்கு நினைவில் கொண்டு கற்க வேண்டிய பகுதிகள் பல இருப்பதை உணரலாம்.

நச்சினார்க்கினியர் உரை

"உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர்" என்ற புகழுரையே இவர் உரையின் சிறப்பை விளக்கப் போதிய சான்றாகும். இவர் நடை, அழகும் சற்றுக் கடினமும் பொருந்தியது. சங்க இலக்கியப் பாக்களின் ஆழ்ந்த பொருள்களை உய்த்தறியும் பேராற்றல் இவரிடம் இருந்தது. இவர் கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் இருந்தவர் எனலாம். இவருடைய உரைநடையில் ஒரு பகுதியைப் பார்ப்போம்.

"ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய் யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருளாதலின், அதனை அகம் என்றார். எனவே, அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு அகமென்றது ஓர் ஆகுபெயராம்."

பொருளதிகாரம்

நச்சினார்க்கினியர் பத்துப்பாட்டிற்கு உரை எழுதவில்லை யெனில், இருளில் மூழ்கி இருக்கும் வண்ண ஓவியமாய்ப் பார்த்துக் களிப்பாரின்றிப் போய் இருக்கும். பழந்தமிழ் இலக்கியங்களை மரபறிந்து, பொருள் தெளிவுடன் சுவையாக எடுத்து விளக்கிய பெருமை நச்சினார்க்கினியருக்கு உண்டு. இவர் நுண்ணறிவு உடையவர். இவர் தொல்காப்பியத்துக்கும் உரை எழுதியுள்ளார் என்பதை முன்பே பார்த்தோம்.

தெய்வச்சிலையார் உரை

இவர் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரை இயற்றியுள்ளார். இவர் உரை உயிரோட்டமுடையதாய், எளிதாய் உள்ளது. இவரது உரையின் ஒரு பகுதியில்,

காலம் என்பது முன்னும் பின்னும் நடுவும்

ஆகி உள்ளதோர் பொருள்

என்று கூறுகின்றார். பல இடங்களில் நெசவுத் தொழில் பற்றி உதாரணம் காட்டி இருப்பதால் இவர் வாழ்ந்த ஊரில் நெசவுமிகுதியாக இருந்திருக்கும் என்பர்.

கல்லாடர் உரை

ஊரின் பெயர் கல்லாடம் ஆதலால் இவருடைய பெயரும் கல்லாடர் ஆயிற்று. இவரும் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரை இயற்றிய ஆசிரியர் ஆவார்.

பேராசிரியர் உரை

உரையாசிரியர்களுள் பேராசிரியர் என்ற சிறப்புப் பெயர் அமைந்திருப்பது இவருடைய உரையின் பெருமையினைப் புலப்படுத்தும். இவர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியிருக்கிறார் என்று தெரிகிறது. ஆனால் பொருளதிகாரத்தில் மெய்ப்பாட்டியல்,

உவமையியல், செய்யுளியல், மரபியல் ஆகியநான்கு இயல்களுக்கு மட்டுமே இவரின் உரை கிடைத்துள்ளது.

நன்னூல் உரைகள

தொல்காப்பியத்திற்குப் பின் தோன்றிய இலக்கண நூல்களுள் பவணந்தியார் இயற்றிய நன்னூலே உயர்வும் சிறப்பும் பெற்றுவிளங்குகிறது. சங்கர நமச்சிவாயர், ஆண்டிப் புலவர், ஆறுமுகநாவலர், சடகோப ராமநுஜாசாரியார், முகவை இராமாநுச கவிராயர் ஆகியோர் உரை எழுதியுள்ளனர்.

பிற

அமிதசாகரர் இயற்றிய யாப்பருங்கல விருத்திக்கும் யாப்பருங்கலக் காரிகைக்கும் உரை எழுதியவர் குணசாகரர். புத்தமித்திரர் இயற்றிய வீரசோழியத்திற்குப் பெருந்தேவனார் உரை எழுதியுள்ளார்.

சிவஞான முனிவர் உரை

சைவமும் தமிழும் தழைத்தோங்க அருள்மழை பொழிந்த கார்முகில் சிவஞான முனிவர் என்று இவரைப் போற்றுவர். இவரைப் புலவர் பெருமக்கள் சிவஞான யோகி, சிவஞான சுவாமி, மாதவச் செல்வர் என்று புகழ்ந்து கொண்டாடுவர். தமிழில் உரைநடை வேந்தர்களுள் தலை சிறந்தவர் இவரே ஆதலின் இவரை உரை மன்னர் என்பர். பெற்றோர் இட்ட பெயர் முக்களாலிங்கர். தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தி, நன்னூலின் விருத்தி போன்ற உரைகளை எழுதியுள்ளார். நன்னூலுக்குச் சங்கர நமச்சிவாயர் எழுதிய விருத்தியுரையைச் சிவஞான முனிவர் செப்பனிட்டு விரிவாக்கி எழுதியுள்ளார்.

இலக்கிய உரைகள்

நச்சினார்க்கினியர் உரை

நச்சினார்க்கினியர் உரை எழுதியிருக்கிற வேறு நூல்களாவன :

(1) பத்துப்பாட்டு

(2) கலித்தொகை

(3) சீவக சிந்தாமணி

இந்த உரைகள், பிற்காலத்தவர் சங்க இலக்கியங்களுக்கு உரைகாணுவதற்குப் பெரிதும் பயன்பட்டன.

திருக்குறள் உரைகள்

தமிழில் தோன்றிய நூல்களில் திருக்குறளுக்குப் பல வகையான சிறப்புகள் உண்டு. ஒரு நூலுக்குக் காலம் தோறும் உரைகள் தோன்றிவருவது அந்த நூலின் சிறப்பினையே குறிக்கும். திருக்குறளுக்கு எண்ணற்ற உரைகள் தோன்றியுள்ளன. இதற்கு நேரடியாக உரை எழுதியோர் மட்டுமல்லாமல் இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனார், சேக்கிழார், கம்பர் போன்ற எண்ணற்ற புலவர்கள் தத்தம் நூல்களில் திருக்குறளை எடுத்தாண்டு விளக்கமும் எழுதியுள்ளனர். நீதிநூல்களை எழுதிய அனைத்துச் சான்றோர்களும் திருக்குறளுக்கு உரை வகுத்துள்ளனர் என்றே கூறலாம். திருக்குறளைப் பயின்றவர்கள் இதன் சுவையில் ஈடுபட்டுப் புகழ்ந்தும் பாடியுள்ளனர். மிகப்பலர் திருக்குறளுக்கு உரை எழுதி இருந்தாலும் பரிமேலழகர் எழுதிய உரையே சிறப்பானதாகக் கருதப்படுகிறது. இவருக்கு முன்னால் ஒன்பது உரைகள் தோன்றியுள்ளன. பத்தாவது உரையாகப் பரிமேலழகர் உரை தோன்றியுள்ளது.

பரிமேலழகர் பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பர்.

‘அற்றது பற்றெனில் உற்றது வீடு’ - (திருவாய்மொழி)

‘திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே என்னும்’ - (நம்மாழ்வார்)

இவ்வாறு இவர் எடுத்துக்காட்டாய்க் கூறும் தன்மையை வைத்து, இவர் வைணவ சமயத்தைச் சார்ந்தவரென்பர்.

பாலெல்லாம் நல்ஆவின் பாலாமோ பாரிலுள்ள

நூலெல்லாம் வள்ளுவர்செய் நூல்ஆமோ? - நூலிற்

பரித்தவுரை யெல்லாம் பரிமேலழகர்

தெரித்த வுரையாமோ தெளி

என்ற தொண்டை மண்டல சதகச் செய்யுளால் இவரது உரையின் பெருமையை அறியலாம்.

சங்கத் தொகை நூலாம் பரிபாடலுக்கு இவர் ஓர் அரிய உரையை வகுத்துள்ளார். பத்துப்பாட்டு நூலான திருமுருகாற்றுப்படைக்கும் இவர் உரை எழுதியுள்ளார்.

உலக மக்களிடையே நன்கு பழகி அவர்களின் பேச்சு, பழக்க வழக்கம் ஆகியவற்றை அப்படியே குறிப்பிடுகின்றார். ஓரிடத்தில் “குற்றமே இல்லாதவர் உலகத்து இன்மையில்” என்று கூறுவதிலிருந்து இவரது உலகியல் அறிவை அறியலாம். மானம் என்ற அதிகாரத்திற்கு உரை எழுதும் போது உடலின் நிலையின்மையும், மானத்தின் நிலை பேற்றையும் வலியுறுத்திக் கூறியுள்ளார். மக்கள் பதடி என்னும் குறளுக்கு (196) “அறிவு என்னும் உள்ளீடு இன்மையின் பதடி என்றார்” என்பதாக விளக்குகிறார்.

“வேண்டாத அடைமொழிகளுக்கு இடம் தராமல் நேரிய முறையில் உரிய பொருளை விளக்கும் அளவிற்கே சொற்களை அளந்து பயன்படுத்துவார். செறிவு, நேர்மை ஆகிய பண்புகள் அமையத் தமிழ் உரைநடையைக் கையாண்டவர் இவர்.”

என்று மு.வரதராசனார் பாராட்டியுள்ளார். பொருட்பாலிலுள்ள ஒவ்வொரு அதிகாரத்திலும் பரிமேலழகரின் அரசியலறிவு வெளிப்படுகிறது. இசைப் புலமை, மருத்துவ அறிவு. யோக நூலறிவு, திட்பநுட்ப அறிவு, இலக்கண அறிவு, இலக்கிய அறிவு, சுருங்கச்சொல்லி விளங்க வைத்தல் ஆகிய இவையனைத்தும் ஒருங்கேபெற்றவர் பரிமேலழகர்.

பேராசிரியர் உரை

இவர் குறுந்தொகைக்கும் உரைஎழுதியிருக்கிறார் என்பர். கோவை நூல்களில் சிறப்புடையதாய், இராசாக் கோவை என்று கூறப்படும் மணிவாசகப் பெருமான் அருளிச் செய்த திருக்கோவையாருக்கு இவர் அழகியதோர் உரையினைச் செய்துள்ளார். இதனால் இவரைச் சைவர் என்பர். இவர் வறுமை என்பதற்குப் “போகம் துய்க்கப் பெறாதபற்றுள்ளம்” என்று உரையெழுதிய பான்மை சிறப்புடையதாகும்.

அடியார்க்கு நல்லார் உரை

சிலப்பதிகாரம் முழுமைக்கும் அடியார்க்கு நல்லார் உரை எழுதியுள்ளார். எனினும் 18 காதைகளுக்கான உரையே கிடைத்துள்ளது வடமொழியிலும், தமிழிலும் புலமை மிக்கவர் இவர். அக்காலத்திலிருந்த இசைத் தமிழ், நாடகத் தமிழ் நூல்களைப் பற்றிய கருத்துகளை யெல்லாம் இவரது உரையில்தான் காண்கிறோம். இவரது உரைநடை சில இடங்களில் பாட்டிற்குரிய ஓசையுடன் காணப்படுகிறது இவரது நடை எதுகை மோனையுடன் செய்யுளுக்குரிய ஓசையுடன் அமைந்துள்ளது. மேலைநாட்டுத் திறனாய்வாளரைப் போல அடியார்க்கு நல்லார் சிலம்பினைப் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்துள்ளார். தமது உரையுள் முந்நீர் என்பதற்கு, முச்செயலைக் கொண்ட முந்நீர் என்று விளக்கம் தருகின்றார். மூன்று செய்கையாவன மண்ணைப் படைத்தலும், மண்ணைக் காத்தலும், மண்ணை அழித்தலும்

ஆகும் என்று கூறுமிடம் நயம்மிக்கதாகும். பருந்தும் நிழலுமெனப் பாவும் உரையும் பொருந்த எல்லாப் பொருளும் தெரிந்து நல்அமிர்தம் போன்ற உரையை வகுத்துள்ளார் என்பர். தமிழிசை மறுமலர்ச்சிக்கு உதவியது இவரது அரங்கேற்று காதை உரையேயாகும். காப்பிய அமைப்பு, நிகழ்ச்சி ஒருமைப்பாடு, காப்பிய மாந்தர் பண்புகள், செயல் நிகழும் கால எல்லை, இடம், கவியுள்ளம் இவற்றையெல்லாம் நுணுகி ஆராய்ந்து புலப்படுத்தியுள்ளார். இவற்றால் அடியார்க்கு நல்லார் சிறந்த திறனாய்வாளராகத் திகழ்கிறார்.

சிவஞான முனிவர் உரை

சிவஞான பாடியம், சிவஞானபோதச் சிற்றுரை, சிவஞான சித்தியார் சுபக்கம் உரை, கம்பராமாயண முதற்செய்யுள் விருத்தி போன்ற உரைகளையும் எழுதியுள்ளார்.

சைவ சித்தாந்த உரைகள்

இலக்கிய, இலக்கணங்களுக்கு உரை வகுத்த பலரைப் பற்றி அறிந்து கொண்டோம். இனி, சமய இலக்கியங்களைப் பார்க்கலாம். சைவத் திருமுறைகள் பன்னிரண்டு என்பது உங்களுக்குத் தெரியும். திருமுறைகளுக்கு உரை எழுதுவது பாவம் என்ற கருத்தால், அவற்றுக்கு உரை வகுக்க யாரும் முற்படவில்லை. சைவத்தின் தத்துவம் சைவ சித்தாந்தம் ஆகும். மெய்கண்டார் முதலிய அருளாளர்கள் தமது நூல்களில் சைவ சித்தாந்தத்தை விளக்கியிருக்கிறார்கள். சைவ சித்தாந்த நூல்கள் பதினான்காகும். பதினான்கு சைவ சித்தாந்த நூல்களில் சிவஞான போதம் தலைமை வாய்ந்தது. பன்னிரண்டு சூத்திரங்களையும் எண்பத்தோர் எடுத்துக்காட்டு வெண்பாக்களையும் இந்நூல் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நூலுக்குப் பலர் உரை வகுத்துள்ளனர். எனினும் சிவஞானமுனிவர் எழுதிய மாபாடியம் தலைசிறந்தது. இந்த நூல்கள் பதினான்கனுக்கும் பலர் உரை எழுதியுள்ளனர். சைவ மடங்களிலேயே இவை கற்பிக்கப்பட்டு வந்ததால் உரையாசிரியர்களில் பலர்துறவிகளாவர். சிவஞானசித்தியார், பரபக்கம், சுபக்கம் என இரு பகுதிகளைக் கொண்டது. சுபக்கத்துக்கு உரை தந்தவர்கள் ஆறு அறிஞர்கள். இவர்களின் உரைகளை இணைத்து அறுவர் உரை என்றே குறிப்பிடுவார்கள்.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்த உரைகள்

கடைச்சங்க இலக்கியங்களில் வடசொல் கலப்பு ஒரு விழுக்காடு இருந்தது. ஏழு, எட்டு நூற்றாண்டுகளில் ஐந்து விழுக்காடு வரைவடசொற்கள் காணப்பட்டன. இந்த மணிப்பிரவாள நடை சமணர்களால் தோற்றுவிக்கப்பட்டு வைணவ உரையாசிரியர்களால் வளர்க்கப்பட்டது. மணியும் முத்தும் கோத்த ஆரம்போலவடசொல்லும், தமிழ்ச் சொல்லும் கலந்து வர, தமிழ் வாக்கியஅமைப்பில் அமைந்த நடையே மணிப்பிரவாள நடை எனப்படும்.

ஆழ்வார்கள் எழுதிய பக்திப் பாசுரங்கள் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என அழைக்கப்படும். இப்பாடல்களுக்கு 14, 15ஆம் நூற்றாண்டுகளில் இவ்வுரைகள் எழுந்தன. இவையாவும் வடமொழிச் சொற்கள் மிகுதியாகவும், தமிழ்ச் சொற்களைக் குறைவாகவும் கொண்ட மணிப்பிரவாள நடையில் அமைந்தன. இதனால் தமிழின் தூய தனித்தன்மை பாதிக்கப்பட்டது. இப்போக்கினால் தமிழ் மொழியில் ஏராளமான வடசொற்கள் புகத் தொடங்கின.

இந்நூற்றாண்டுகளில் தோன்றிய வில்லிபாரதம், திருப்புகழ் முதலிய நூல்களில் வடசொற்கள் மிகுதியாக உள்ளமைக்கு இப்போக்கே ஒரு காரணம்.

தமிழிலக்கிய உலகத்தில் இடைக்காலத்தில் செந்தமிழை வளர்த்து செழிக்கச் செய்த பெருமை ஆழ்வார்களுக்கும் உரியது. இலக்கியச் சுவை முதிர்ந்த வளமான கவிதைக் கனிகளை நல்கித் தமிழ் இலக்கியத்தில் அளப்பருந் தொண்டுகளை அவர்கள் செய்திருக்கிறார்கள். ஆழ்வார்கள் பன்னிருவரும் திருமாலை வணங்கி வாழ்த்தி அவரது பெருமைகளைப் புகழ்ந்து பாடிய பாடல்களின் தொகுப்பு நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்

எனப்பட்டது. ஆழ்வார்களின் பாடல்களை நாதமுனி என்பார் கி.பி 9ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தொகுத்தார் என்பர். ஆழ்வார்களின் பாடலுக்கு உரை இயற்றிய வைணவப் பெரியோர் தாம் கற்ற கலைகள் அனைத்தையும் தம் உரைகளில் வழங்கிச் சென்றுள்ளனர். மிக நயம்படப் புலப்படுத்தி எழுதியுள்ளனர். வைணவ உரையாசிரியர்கள் தாம் செய்த விளக்க உரையை வியாக்கியானம் என்று குறிப்பிட்டுள்ளனர். வைணவர்களின் வேத நூலாகிய இந்த நாலாயிரத் திவ்வியப் பிரபந்த உரையாசிரியர்களின் சிறப்பை உ.வே.சாமிநாத ஐயர், "ஆழ்வார்களுடைய உரையில் ஒரு பாடலுக்கு உரை கேட்டுவிட்டால் மனம் வேறு ஒன்றில் செல்லாது" என்று கூறி, அதன் பெருமையை வெளிப்படுத்துகின்றார்.

ஆறாயிரப்படியே முதன் முதலில் எழுத்து வடிவில் தோன்றிய திருவாய்மொழி வியாக்கியானம் ஆகும். இதுவே பிற்கால வைணவ உரைகளுக்கு ஆரம்பமாகும். இதை எழுதியவர் இராமானுஜரின் மாணாக்கர் பிள்ளான் ஆவார். இவர் எழுதிய வியாக்கியானத்தைக் கண்டு மகிழ்ந்த இராமானுஜர் இவருக்குத் திருக்குருகைப் பிரான் என்று பெயரிட்டார்.

பெரியவாச்சான் பிள்ளை நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் முழுமைக்கும் மிகச் சிறப்பாக வியாக்கியானம் எழுதி வியாக்கியானச் சக்ரவர்த்தி என்ற சிறப்புப் பெயர் பெற்றார். தற்கால உரைநடையின் முந்தைய நிலையினை இவ்உரையாசிரியர் நடையில் காணலாம்.

வைணவப் பிரபந்த உரையாசிரியர்கள் மணிப்பிரவாள நடையில் எழுதினர் அவர்கள் காலத்தோடு இந்நடை மறையலாயிற்று.

அலகு 4

பிற்கால அருள் நூலார் (தாயுமாணவர் அருணகிரிநாதர் வள்ளலார்)

தாயுமானவர், அருணகிரிநாதர், வள்ளலார் ஆகியோர் பிற்கால ஆன்மீகச் சான்றோர்கள் ஆவர். அருணகிரிநாதர் முருகனைப் போற்றிப் பல நூல்களை இயற்றினார். தாயுமானவர் திருப்பாடல் திரட்டு போன்ற பாடல்களை இயற்றி, சமரச சன்மார்க்க நெறியைப் பரப்பினார். வள்ளலார் ஜீவகாருண்யத்தைப் போதித்து, மரணமில்லா வாழ்வு பற்றிப் பேசியவர்.

அருணகிரிநாதர்

காலம்: 15ஆம் நூற்றாண்டு

நூல்கள்: திருப்புகழ், கந்தர் அந்தாதி, கந்தரனுபூதி, கந்தரலங்காரம், திருவகுப்பு, வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம்

சிறப்பு: முருகப்பெருமான் மீது பற்று கொண்டவர்

தாயுமானவர்

காலம்: 18ஆம் நூற்றாண்டு

நூல்கள்: தாயுமானவர் திருப்பாடற்றிரட்டு (56 பிரிவுகளில் 1452 பாடல்கள்)

சிறப்பு: தமிழ் மொழியின் உபநிடதம் என அழைக்கப்படும் பாடல்களை இயற்றியவர் சமரச சன்மார்க்க நெறியைப் பரப்பியவர்

வள்ளலார்

காலம்: 19ஆம் நூற்றாண்டு (1823–1874)

சிறப்பு: ஜீவகாருண்யம் (உயிர்களிடம் கருணை) மற்றும் சமரச சுத்த சன்மார்க்க நெறி, மரணமில்லா வாழ்வு போன்ற கருத்துக்களைப் பரப்பியவர்

நூல்: திருவருட்பா

தாயுமானவர்

தாயுமானவர் (1705–1742) தமிழில் மெய்ப்பொருள் பற்றிப் புகழ்பெற்ற பாடல்களை இயற்றியவர்.

வாழ்க்கைக் குறிப்பு

இவர் தமிழ்நாட்டில், நாகப்பட்டினம் மாவட்டத்தில், திருமறைக்காடு என்று அழைக்கப்படும் வேதாரண்யத்தில் சைவ வேளாளர் குலத்தில் பிறந்தார். இவர் தந்தையார் கேடிலியப்ப பிள்ளை மற்றும் தாயார் கேசவள்ளி அம்மையார் ஆவார்கள். இவர் தமிழ் மொழி, வடமொழி ஆகிய இருமொழிகளிலும் புலமை பெற்றவர்.ஜ3ஸ

தாயுமானவர், ராணி மங்கம்மாளின் பேரனான திருச்சிராப்பள்ளியை ஆட்சிபுரிந்த விசயரகுநாத சொக்கலிங்கரிடம் அரசக் கணக்கராகப் பணிபுரிந்தார், அப்போது முக்கியமான ஆவணம் ஒன்றை அரசவையில் இவர் கையால் கசக்கிப் போட, இவர் தன்னிலை மறந்து இறைவியுடன் ஒன்றிப்போய் இந்தக் காரியம் செய்வதை அறியாத சபையினர் அரசனுக்கும், அரசிக்கும் அவமரியாதை என அவதூறு பேசினார்கள். ஆனால் அதே சமயம் திருவானைக்கா அகிலாண்டேசுவரி கோயிலில், அம்பாளின் ஆடையில் நெருப்புப் பற்றியதைச் சிவாச்சாரியார்கள் கவனிப்பதற்குள் தாயுமானவர் நுழைந்து தம் கையால் கசக்கி அந்த

நெருப்பை அணைத்ததைச் சிவாச்சாரியார்கள் கண்டனர். அவர்கள் உடனே ஓடோடி வந்து நடந்ததைக் கூறத் தாயுமானவரின் சக்தியைப் புரிந்து கொண்டு வியந்தனர் என்பார்கள்.

தம் எளிய பாடல்கள் மூலம் தமிழ்ச்சமயக் கவிதைக்கு ஒரு தூணாக இருந்தவர் தாயுமானவர். வள்ளலாரும், பாரதியாரும் இத்தகைய எளிய கவிதைகள் பாட இவர் முன்னோடியாகத் திகழ்ந்தார் என்றும் சொல்லுவதுண்டு. பின்னர் அப்பதவியைத் துறந்து திருமூலர் மரபில் வந்த, திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த மௌன குரு என்பவரிடம் உபதேசம் பெற்றுத் துறவு பூண்டார்.

தவநெறியில் சிறந்து விளங்கிய தாயுமானவர், பல்வேறு திருத்தலங்களுக்கும் சென்று இறைவனைப்பாடி வழிபட்டார். இறுதியில் இராமநாதபுரம் மாவட்டம் இலட்சுமிபுரம் என்னும் ஊரில் சமாதி அடைந்தார்.

தாயுமானவரின் பாடல்

தாயுமான சுவாமிகள் திருப்பாடல் திரட்டு என்னும் நூலில் 56 தலைப்புகளில் 1452 பாடல்கள் உள்ளன. அவற்றில் 771 பாடல்கள் கண்ணிகளாகவும், 83 பாடல்கள் வெண்பாக்களாகவும் உள்ளன. இவருடைய "பராபரக்கண்ணி" மிகவும் புகழுடையது. இதில் 389 கண்ணிகள் இடம்பெற்றுள்ளன. பராபரக்கண்ணியில்,

" ""அண்டகோடி புகழ்காவை வாழும் அகிலாண்ட நாயகி என் அம்மையே!"

என்று தாயுமானவர் அம்பாளைப் பாடியுள்ளார். 1736-ஆம் ஆண்டு துறவு பூண்ட தாயுமானவரை ஒரு சித்தர் என்பார்கள். அவர் சமரச சன்மார்க்க நெறியைப் பரப்பினார். இவர் பாடல்கள் "தாயுமானவ சுவாமிகள் திருப்பாடற்றிரட்டு" என வழங்கப்படுகிறது. தமிழ் மொழியின் உபநிடதம் என அழைக்கப்படும். இதில் 56 பிரிவுகளில் 1452 பாடல்கள் உள்ளன. மேலும், இவரின் பாடல்களில் உவமைகளும், பழமொழிகளும் மிகுந்துள்ளன.

" "சினம் அடங்கக் கற்றாலும் சித்தியெலாம் பெற்றாலும்

மனம் அடங்கக் கல்லார்க்கு "வாயேன்" பராபரமே"

"(இருபொருள்: வாய்க்க மாட்டேன், வாய் ஏன்)

" எல்லாரும் இன்புற்று இருக்கா நினைப்பதுவே

அல்லாமல் வேறொன்றும அறியேன் பராபரமே!"

என்னும் இவருடைய வரிகள் (பராபரக்கண்ணி 221) புகழ் பெற்றவை. இவர் செய்யும் இறைவழிபாட்டை " நெஞ்சமே கோவில் நினைவே சுகந்தம் அன்பே, மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே" என்று 151-ஆவது பராபரக்கண்ணியில் எடுத்துரைத்துள்ளார்.

தாயுமானவரின் பணி

இவரின் தந்தையான கேடிலியப்பர் திருச்சிராப்பள்ளியை ஆண்ட விசயரகுநாத சொக்கலிங்கரிடம் அரச கணக்கராகப் பணிபுரிந்து வந்தார். அவர் மறைவுக்குப் பின்னர்த் தாயுமானவர் அப்பணியை ஏற்றார். விசயரகுநாத சொக்கலிங்கர் ஆட்சியிலும், அவர் மனைவி இராணி மீனாட்சி ஆட்சியிலும் கணக்கராகப் பணியாற்றினார்.

துறவு வாழ்க்கை

மட்டுவார்குழலி என்னும் மங்கையை மணந்து கனகசபாபதி என்ற மகவையும் பெற்று வாழ்ந்தார். பின்னர்த் துறவு வாழ்க்கையில் நாட்டங்கொண்டு துறவு பூண்டார். திருமூலர் மரபில் வந்த மௌனகுரு என்பாரின் அருளும், ஆசியும் பெற்றுச் சிறந்து விளங்கினார். அவர் 1742-ஆம் ஆண்டு தை மாதம் விசாகம் நட்சத்திரம் கூடிய நாளில் முக்தி பெற்ற இடம் இராமநாதபுரத்தில் உள்ள இலட்சுமிபுரமாகும்.

வள்ளலார்

தமிழகத்தில் அருட்பிரகாச வள்ளலார், அடிகளார் என நன்கு அறியப்பட்டவர் சி. இராமலிங்கம்பிள்ளை (1823 - 1874). இவர் மரபான சைவக்குடும்பத்தில் பிறந்து, சைவ மதவாதியாக, பக்தராக வளர்ந்து, சித்தர் நெறியில் யோகத்தில் கனிந்தவர். "ஜீவகாருண்யம்" என்னும் உயிர் இரக்கத்தால் சாதி சமய மத சாத்திரத் தடைகளை எல்லாம் கடந்து மரணமில்லத வாழ்க்கையை மாந்தர் முயன்றால் வாழலாம் என்ற உயரிய சிந்தனையை உலகுக்கு வழங்கியவர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓர் அபூர்வ மனிதராகவே இராமலிங்கர் வாழ்ந்துள்ளார். அக்கால கட்டத்தில் உருவான சமுதாய மாற்றங்கள் இராமலிங்கர் போன்ற ஆன்மீகப் புரட்சியாளர் தோன்றுவதற்கான பின்புலங்கள வழங்கியது. "பசியிலிருந்து விடுதலை" என்பது அவரது தாரக மந்திரமாகவே இருந்தது. இது வெறும் சொல்லாக மட்டுமன்றிச் செயல் பூர்வமான தன்மையையும் கொண்டிருந்தது. சமயப் பண்பாட்டுத் தளத்தில் சீர்திருத்தவாதியாகவே இராமலிங்கர் தொழிற்பட்டுள்ளார்.

இராமலிங்கர் வாழையடி வாழையாக வந்த சைவ அடியார்களின் மரபில் முகிழ்த்தவர்தான். ஆனால் அந்த மரபில் இருந்து விலகி வித்தியாசமான சிந்தனையும் செயற்பாடும் மிக்கவராக திகழ்ந்தார். தமிழின் பக்தி இலக்கிய மரபுச் செழுமையில் தோய்ந்து தனக்கான பக்தி மரபையும், இலக்கியச் சுவையையும் இரண்டறக் கலந்து வெளிப்படுத்தி உள்ளார்.

இராமலிங்கர் முறையான முழுமையான கல்வி கற்றவர் அல்ல. ஆனால் அக்காலகட்டத்தில் வாழ்ந்த புலமையாளர்களுடன் எந்தவிதத்திலும் குறைத்து மதிப்பிடக்கூடியவர் அல்ல. அந்த அளவிற்கு ஆழ்ந்த புலமையும் தத்துவ விசாரணையில் ஈடுபடக்கூடிய பக்குவமும் வாய்க்கப் பெற்றவராக இருந்துள்ளார்.

இவரது ஆளுமை உருவாக்கம் ஒரே நேர்கோட்டுப் பாதையிலான மேல் நோக்கிய நகர்வு எனக் கணிக்க முடியாது.

தான் ஆரம்பத்தில் நம்பி ஏற்றுக் கொண்ட, புகழ்ந்த சைவ சமயத்தையும், வேதத்தையும், ஆகமத்தையும், புராண - இதிகாசங்களையும் மற்றும் கோயில் வழிபாட்டையும் 1869க்குப் பிறகு தூக்கி எறிந்தார். அவற்றைப் பொய் என்றார். பக்தி, இறைநம்பிக்கை, ஆத்ம விசாரணை மீதான புதிய விளக்கங்கள் வேண்டி நின்றார்.

மாணிக்கவாசகர், திருமூலர், அருணகிரிநாதர், பட்டினத்தார், தாயுமானவர் உள்ளிட்ட மரபுகளின் ஆளுமைகளின் தொடர்ச்சியில் தான் இராமலிங்கர் என்பவரது ஆளுமை உருவாக்கம் நிகழ்ந்துள்ளது. மேற்குறித்த மூலவர்களின் சிந்தனை வழிவந்த பாடல்களில் காணப்படுகின்ற சில பொதுக்கூறுகள் இராமலிங்கர் பாடல்களில் விரவியுள்ளது. குறிப்பாக இவர் புலப்படுத்திய "சித்தர் கொள்கை" திருமூலர், பட்டினத்தார், தாயுமானவர் பாடல்களில் காணப்படுகின்றன.

பொதுவாக சைவசமயவாதிகளைப் போல் அல்லாமல் சித்தர் கொள்கை போற்றுகிறவர் களுக்கு சாதி சமயம் மதம் பற்றி மாறுபட்ட கருத்துக்கள் இருப்பது இயல்பானது. அதனால்தான் இராமலிங்கரின் பாடல்களிலும் உரைநடையிலும் இது துல்லியமாகவே வெளிப்பட்டுள்ளது.

இறைவனை சோதியாகவும், கருணையாகவும், வெளியாகவும் வழிபட்டது. சாதி மத சமய விகற்பங்கள் வெறுத்தது, உடலைப் பேணி யோக நெறியில் நிற்கச் சொன்னது. இறைவனின் அருளுக்காக ஏங்கிய அவரது ஆன்ம உருக்கம், வேத-ஆகம, வேதாந்த-சித்தாந்த சமரசம் கண்டது. இறுதியில் இவற்றை நிராகரித்தது.

ஏகான்மவாதத்தை மறுத்தது, ஜீவகாருண்ய ஒழுக்க்ததை முதன்மைப்படுத்தியது. செத்தாரைப் புதைக்கச் சொன்னது போன்ற பல்வேறு கருத்துகளில் ஒரு நெடிய தொடர்ச்சி இருக்கிறது. அந்தத் தொடர்ச்சியின் புரிதலில் தான் இராமலிங்கர் பற்றிய மதிப்பீடு சாத்தியமாகும். மேலும் இந்தத் தொடர் வரிசையை உடைத்து புதிய தடத்தை ஏன் உருவாக்கினார்? அவ்வாறு உருவாக்குவதற்கான உந்துதல் யாது? சமூக, அரசியல் பொருளியல் பண்பாட்டு, கருத்து நிலைக் காரணங்கள் என்ன? இது போன்ற கேள்விகளுக்கான பதில்களில் தான் வள்ளலார் என்னும் ஆன்மீகப் புரட்சியாளரைப் புரிந்து கொள்ள முடியும்.

இராமலிங்கர் தனது முப்பத்து நான்காவது வயதில் சிதம்பரம் சென்றார். சென்னை வாழ்வு நின்று திில்லை வாழ்வுக்கும் வடலூர் வாழ்வுக்கும் அவர் மாறிய போது புரட்சி பொருந்திய ஒரு பெரும் மாற்றம் அவரிடம் ஏற்பட்டது. ஒளிவழிபாடு, உயிர்ப் பலி மறுப்பு, சாதி சமய எதிர்ப்பு போன்ற கோட்பாடுகள் தீவிரமுற்றன. அதுகாறும் அறிந்து கொண்ட ஆன்மீகப் பயணத்தில் இராமலிங்கரின் சிந்தனையும் செயலும் புதுப்பாதை கண்டது. குறிப்பாக வெகுசன மக்கள் திரளுடன் நெருக்கமான உறவு கொண்டு வெகுசன இயக்கம் சார்ந்த சமூகச் செயல்பாடுகளில் மிகுந்த ஆர்வம் கொண்டார்.

சமரச சுத்த சன்மார்க்க சங்கம், சத்திய தருமச் சாலை, சத்திய ஞான சபை, சித்தி வளாகம் உள்ளிட்ட அமைப்புகளை உருவாக்கியும் மற்றும் சன்மார்க்க போதினி (1867), சமரச வேத பாடசாலை (1872) உள்ளிட்ட கல்வி நிலையங்களையும் நிறுவினார். தொடர்ந்து சன்மார்க்க விகேவிருத்தி என்னும் மாத இதழையும் தோற்றுவித்தார்.

ஆக இராமலிங்கரின் பணிகளும் சிந்தனை களும் மக்கள் சார்ந்த வெகுசனத் தன்மை மிகுந்தவையாய்ப் புலப்பட்டன.

இது இவருக்கு முன்னர் தென்பட்ட ஆன்மீகப் பயணங்களில் இருந்து மாறுபட்டது. வேறானது. சனசந்தடி நெருக்கம் உள்ளிட்ட சூழலை இராமலிங்கர் விரும்பாமல் தனிமையை நாடியவராக உள்நகர்வில் இருந்தாலும் அவரது நோக்கம் வெளிப்படையானது.

இராமலிங்கர் 1825 முதல் 1858 வரை சென்னை நகரத்திலும் அதன்பின் 1867 வரை கருங்குழி கிராமத்திலும் 1874 ஜனவரி 31 வரை வடலூர் மேட்டுக் குப்பத்திலும் வாழ்ந்தவர். இவர் வாழ்ந்த காலத்தில் பஞ்சம் பட்டினி பரவலாக தமிழகத்தில் காணப்பட்டது.

சென்னை இராஜதானியில் 18ம் நூற்றாண்டின் நடுப்பகுதி தொடங்கி 19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி வரை தொடர்ச்சியாகப் பஞ்சம் விட்டுவிட்டு நிலவியது. 1729-33, 1781, 1802, 1807, 1833-34, 1854, 1856, 1878 ஆகிய ஆண்டுகளில் கடுமையான பஞ்சம் நிலவியது. இந்தக் காலப்பகுதியில் அதாவது இராமலிங்கரின் பத்து வயது தொடங்கி, அவர் மறைவதற்குள் மூன்று முறை கடும் பஞ்சம் தமிழ்நாட்டில் நிலவியது. இதன் கொடுமைகளை நேரில் கண்டார். இதனால் தான் பசிக் கொடுமை தீர்ப்பதற்கு சத்திய தருமச் சாலைகளை உருவாக்கத் திட்டமிட்டார். ஆக மக்கள் பசியால் சாவதை நேரடியாகக் கண்டதன் தாக்கம்தான் அவரது தத்துவார்த்த நிலைப்பாடுகளை உருவாக்கியது.

இராமலிங்கர் எழுதிய “மனுமுறை கண்ட வாசகம்“ மற்றும் “ஜீவகாருண்ய ஒழுக்கம்“ உள்ளிட்ட உரைநடை நூல்கள் அவர் இயங்கிய, அவரை இயக்கிய சமூக இயங்கு தளத்தைச் சுட்டுகிறது. தொடர்ந்து பசித்துன்பத்தின் பிடியிலிருந்து விடுதலை பெற வேண்டியததன் அவசியத்தை உணர்ந்து செயற்பட்டுள்ளார். தனக்குத் தெரிந்த வகையில் தீர்வு காண முற்பட்டுள்ளார்.

தமிழகத்தின் வரலாற்றிலே முதன் முதலில் தோன்றிய சமய சமூக சீர்திருத்த அமைப்பு வள்ளலார் துவங்கிய சமரச சன்மார்க்க சங்கமே ஆகும். அதாவது ”பிற மதங்களைப் போலத் தானும் ஒரு மதமாகச் சங்கம் தோன்றவில்லை. மதங்களற்ற சன்மார்க்க சமுதாயத்தை தோற்றுவிப்பதற்கான சேவா சங்கமாகவே தோன்றியது““ என்று ம.பொ.சி. கணித்துக் கூறுவது

மிகத் தெளிவாக உள்ளது. இராமலிங்கரின் சுத்த சன்மார்க்க இயக்கம் தமிழகச் சித்தர் பாரம்பரியத்திலிருந்து பெறப்பட்ட அகிம்சை, ஆன்மாக்களின் ஒருமைப்பாடு, ஒத்த உரிமை ஆகியவை பற்றிய அவரது புரிதலால் ஏற்பட்டது.

படித்த அறிவாளிகள் என அன்று இனங்காணப்பட்டோரில் பெரும்பாலோர் மேற்கத்திய தாக்கத்தால் "சமூக சீர்திருத்தம்" பற்றிய புரிதலுக்கு உட்பட்டனர். ஆனால் இராமலிங்கர் சித்தர் மரபிலிருந்தும் பக்தி மரபிலிருந்தும் சமத்துவக் கருத்தியலை உணர்ந்து கொண்டார். அதன்படி ஆன்மீகத் தளத்தில் தனக்கான தனித்தன்மை அதன் மிகுந்த பாதையை உருவாக்கினார்.

தமிழகத்தில் சாதி மத சமய விகற்பங்களை சித்தர் மரபில் சாராம்சத்தைக் கொண்டு கடந்து செல்ல மார்க்கம் கண்ட முன்னோடி இராமலிங்கர் என்பதை வரலாறு தெளிவுபடுத்துகிறது. சமுதாயம் தன் சீர்கேடுகளில் இருந்து விலகிப் புத்துயிர்ப்புக் கொள்ள வேண்டுமென விரும்பியவர். இதனால் சமுதாயத்தைப் பிடித்திருக்கும் தீராத சாபமான சாதியமைப்பைத் தகர்க்கவும் சித்தர் வழி நின்று

""வரையில் உயர் குலமென்றும்

தாழ்ந்த குலமென்றும்

வகுக்கின்றீர் இருகுலமும்

மாண்டிடக் காண்கின்றீர்""

"சாதியும் மதமும் சமயமும் பொய்யென

ஆதியில் உணர்த்திய அருட் பெருஞ் ஜோதி""

எனத் தெளிவுப்படுத்துகின்றார்.

""நூல் வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா

நவின்ற கலைச் சரிதமெலாம் பிள்ளை விளையாட்டே""

என்பது சீர்திருத்த உலகுக்கு அவர் தந்த மறைமொழி.

மதங்களின் மீது வீண் பெருமை பாராட்டுவதைக் கடிந்து பேசுகிறார். "சமரசம்" என்று அவர் கருதியது சமயப் பொதுமைதான். ஆக இன்று மதத்தின் பெயரால் நடைபெறும் வன்முறையும் தாக்குதலும் மனித சமுதாயத்துக்கு ஏற்பட்டுள்ள பேராபத்து. இந்நிலையில் இராமலிங்கர் போன்றோரின் கருத்தும் வழிமுறையும் சமத்துவம் நோக்கிய நகர்வுக்கும் மனித நேயத்தின் பிடிமானத்துக்கும் தீர்க்கமானது வழிகாட்டி. இராமலிங்கரை ஒரு தெய்வ அவதாரமாக வழிபடுவதைவிட அவர் வலியுறுத்திய சாதி சமய மத சமத்துவத்தை நம் வாழ்க்கையில் அனுபவச் சாத்தியமாக்குவதே இராமலிங்கர் நமக்கு விட்டுச் சென்றுள்ள வழிமுறை. மேலும் அவர் விட்டுச் சென்றுள்ள "ஜீவகாருண்யம்" என்ற உயிர் இரக்கக் கொள்கையை நம் வாழ்வில் அனுபவ சாத்தியமாக்க வேண்டும்.

தமிழகம் தந்த சமத்துவக் குரல் ஆன்மீகத் தளத்திலும் உண்டு என்பதையே இராமலிங்கர் வாழ்க்கையும் வரலாறும் நமக்கு உணர்த்தி உள்ளது.

அருணகிரிநாதர் நூல்கள்

அருணகிரிநாதர்

தமிழ்க் கடவுள் முருகனின் அருளாளர் அருணகிரிநாதர் (யுசரயெபசையெவாயச) தென்னிந்திய மாநிலமான தமிழ் நாட்டில் பொ.ஊ. 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து முருகக்

கடவுள் மீது பாடல்கள் எழுதி புகழ் பெற்ற அருளாளர் ஆவார். இவர் திருவண்ணாமலையில் பிறந்தார். இவர் தமிழ் மொழி, வடமொழி ஆகிய இரு மொழிகளிலும் புலமை பெற்றவர். இவர் எழுதிய திருப்புகழில் 16000 இசைப்பாடல்கள் உள்ளன. இவற்றுள் 1088-இக்கும் மேற்பட்ட சந்த வேறுபாடுகள் உள்ளன என்று கணித்து இருக்கிறார்கள். இவரது பாடல்கள் சிக்கலான சந்த நயத்திற்கும், தாள அமைப்பிற்கும் பெயர் பெற்றவை. இவர் எழுதிய திருப்புகழில், இலக்கியமும் பக்தியும் இணக்கமாகக் கலக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.ஜ1ஸ மேலும், "திருப்புகழ்" இடைக்கால தமிழ் இலக்கியத்தின் முக்கிய படைப்புகளில் ஒன்றாக உள்ளது. இது கவிதை மற்றும் இசை நயத்திற்காகவும், அதன் மத, தார்மீக மற்றும் தத்துவ உள்ளடக்கங்களுக்காகவும் மக்களால் அறியப்படுகின்ற ஒரு நூலாக இருக்கிறது.

அருணகிரிநாதர் வரலாறு

அருணகிரிநாதர் பொ.ஊ. 1370-இல் தமிழ்நாட்டிலுள்ள திருவண்ணாமலையில் பிறந்தவர் கைக்கோள செங்குந்தர் மரபில் தோன்றியவர் ஆவார்.ஜ2ஸ இவரின் தந்தையார் பெயர் திருவெங்கட்டார் என்றும் தாயார் பெயர் முத்தம்மை என்றும் கருதப்படுகிறது. இவர் பிறந்து சில தினங்களிலேயே இவரின் தந்தை காலமாகிவிட்டார். இவருக்கு ஒரு மூத்த சகோதரி உண்டு. அருணகிரிநாதரின் தமக்கையார் அருணகிரிநாதரைச் சிறு வயதில் இருந்து மிகவும் செல்லம் கொடுத்து வளர்த்து வந்தார். அருணகிரி இளமையிலே நல்ல கல்வி கற்றுத் தமிழில் உள்ள இலக்கிய, இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்திருந்தார். உரிய வயதில் திருமணமும் நடந்தது. ஆனாலும், அருணகிரிநாதர் தீய பழக்கங்களின்பால் ஈர்க்கப்பட்டார் என்றும், தனது இளமைக்காலத்தை மோசமான வாழ்க்கையாகத் தொடர்ந்ததாகவும், அவரின் சகோதரி எப்போதுமே தனது சகோதரரை மகிழ்விக்க தான் சம்பாதித்த அனைத்தையும் கொடுத்தார் எனவும் புராணக்கதைகள் கூறுகின்றன.

எந்நேரமும் காமத்திலே மூழ்கித் திளைத்ததன் விளைவாய் சொத்தை இழந்ததோடு அல்லாமல், பெருநோயும் வந்து அவதிப்பட்டார். என்றாலும் அந்நிலையிலும் இவருக்குப் பெண்ணின் அண்மை தேவைப்பட்டதால், கட்டிய மனைவியைக் கட்டி அணைக்க முற்பட்டவரை மனைவி வெறுத்து ஒதுக்கினார். அதனால் இவரின் சகோதரி தன்னைப் பெண்டாளுமாறு கோபத்துடன் கடிந்து கொண்டபோது, தன் தீய செயல்களால் ஏற்பட்ட விளைவு தன் குடும்பத்தையே உருக்குலைத்ததை எண்ணி வெட்கப்பட்டு, வீட்டை விட்டே வெளியேறிக் கால் போன போக்கில் சென்றார். அப்போது ஒரு பெரியவர் இவரைக் கண்டு, அவருக்கு, "குன்றுதோறாடும் குமரக் கடவுளைப் பற்றிச் சொல்லி, அந்த ஆறெழுத்து மந்திரத்தையும், அதன் உட்பொருளையும், சரவணபவ என்னும் சொல்லின் தத்துவத்தையும் விளக்கி, குமரனைப் போற்றிப் பெருவாழ்வு வாழச் சொல்லி ஆசீர்வாதம் செய்தார். குழப்பத்திலும், கவலையிலும் செய்வதறியாது தவித்த அருணகிரி கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தார். திருவண்ணாமலைக் கோபுரத்தின் மேலே ஏறி அதிலிருந்து கீழே குதித்துத் தம் உயிரை விட முற்பட்டார். அவர் கீழே குதித்தபோது இரு கரங்கள் அவரைத் தாங்கி "அருணகிரி நில்!" என்று யாரோ சொல்வதைக் கேட்டார்.

அதனால் திகைத்த அருணகிரி தம்மைக் காப்பாற்றியது யார் எனப் பார்க்கும்போது, வடிவேலவன் தன் திருக்கோலத்தைக் காட்டி அருளினான். முருகன் அவரை, "அருணகிரிநாதரே! " என அழைத்துத் தம் வேலால் அவர் நாவிலே "சரவணபவ" என்னும் ஆறெழுத்து மந்திரத்தைப் பொறித்து, யோக மார்க்கங்களும், மெய்ஞ்ஞானமும் அவருக்குக் கைவரும்படியாக அருளினார். சித்தம் கலங்கிய நிலையில் இருந்த அருணகிரியாரின் சித்தம் தெளிந்தது. மேலும், முருகப் பெருமான், அவரது தொழுநோயைக் குணப்படுத்தினார், சீர்திருத்தம் மற்றும் பக்தியின் பாதையை அவருக்குக் காட்டினார், மனிதகுலத்தின் நலனுக்காக பக்தி பாடல்களை உருவாக்க"முத்தைத் தரு பத்தித் திருநகை" என பாடலின் முதல் அடியை எடுத்துக் கொடுத்துவிட்டு மறைந்தார் என அருணகிரிநாதரின் வரலாற்றைப் பற்றிப் புராண நூல்களில் குறிப்பு காணப்படுகிறது.

பாடல்கள்

அருணகிரிநாதர் தென்னிந்தியா முழுவதிலும் உள்ள கோயில்களுக்குச் சென்று 16,000 பாடல்களை இயற்றினார். அவற்றுள் சுமார் 2,000 பாடல்கள் மட்டும் இன்று வரை பாடப்படுகின்றன. அவரது பாடல்கள் நல்லொழுக்கம் மற்றும் நீதியுள்ள வாழ்க்கையை வாழ்வதற்கான வழியைக் காட்டுகின்றன. மேலும் ஒரு புதிய வழிபாட்டு முறையான இசை மூலம் வழிபடுவதை உலகிற்கு உணர்த்தும் விதமாக அவை உள்ளன.ஜ5ஸ

அருணகிரிநாதர் எழுதிய "திருப்புகழ்" தேவாரத்திற்கு இணையாகவும், "கந்தர் அலங்காரம்" திருவாசகத்திற்கு இணையாகவும், "கந்தர் அனுபூதி" திருமந்திரத்திற்கு இணையாகவும் முருக பக்தர்களால் போற்றப்படுகின்றன.

பாடல்கள் மீட்பு

இவர் எழுதிய திருப்புகழ் (அருணகிரிநாதர்) பாடல்கள் பல ஆண்டுகளாகச் சொற்பமே இங்கும் அங்கும் ஓலைச் சுவடிகளில் பிரதி இருந்தன. மன்னர்களும் புரவலர்களும் தமிழை ஆதரிக்காததால் பிற நூல்களைப் போல திருப்புகழ்ப் பாடல்களும் பாடுவாரின்றிக் கிடந்தன. வி.டி. சுப்பிரமணிய பிள்ளை மற்றும் அவரின் மகன் வி.எஸ். செங்கல்வராய பிள்ளை போன்றோர் அவற்றின் மதிப்பைப் புரிந்துகொண்டு அவற்றை மீட்டெடுத்து வெளியிட்டனர்.

1871-இல் வி.டி. சுப்ரமணிய பிள்ளை, ஒரு மாவட்ட அதிகாரியாகப் பணியாற்றியவர். அவர் சிதம்பரம் (நகரம்) சுற்றுப்பயணத்தில் இருந்தபோது ஒரு திருப்புகழ் பாடலின் வரிகளைக் கேட்கும் வாய்ப்பைப் பெற்றார். பாடலால் ஈர்க்கப்பட்ட அவர், திருப்புகழ் பாடல்களின் முழுத் தொகுப்பையும் தேடும் பணியை மேற்கொள்ள முடிவு செய்தார். அவர் தென்னிந்தியா முழுவதிலும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். எழுத்தோலை உள்ளிட்ட கையெழுத்துப் பிரதிகளைச் சேகரித்து, நூல்களைக் கூட்டி இரண்டு தொகுதிகளாக வெளியிட்டார், முதலாவது பதிப்பு, 1894 -இலும் மற்றும் இரண்டாவது பதிப்பு 1901-இல். அவரது மறைவுக்குப் பிறகு, அவரது மகன் செங்கல்வராய பிள்ளையால் புத்தகமாக வெளியிடப்பட்டது.

திரைப்படம்

1964ம் ஆண்டில் அருணகிரிநாதர் என்கிற தமிழ் திரைப்படம் வெளியானது. இதில் புகழ் பெற்ற பின்னணிப் பாடகர் டி. எம். சௌந்தரராஜன் முக்கிய வேடத்தில் நடித்துள்ளார்.

உருவ அமைப்பு

அருணகிரிநாதர் கைகளில் ஆறு விரல் இருந்தன. அதனால் முருகப் பெருமானின் ஆறு தலைகளையும், அவருக்குரிய "சரவணபவ" எனும் ஆறெழுத்து மந்திரத்தினையும் நினைவுறுத்துவது போல இருப்பதாகக் கூறுவர்.

அருணகிரிநாதரின் நூல்கள் (நவரத்தினங்கள்)

அருணகிரிநாதர் நூல்கள்

கந்தர் அந்தாதி (102 பாடல்கள்)

கந்தர் அலங்காரம் (108 பாடல்கள்)

கந்தரனுபூதி (52 பாடல்கள்)

திருப்புகழ் (1307 பாடல்கள்)

திருவகுப்பு (25 பாடல்கள்)

சேவல் விருத்தம் (11 பாடல்கள்)

மயில் விருத்தம் (11 பாடல்கள்)

வேல் விருத்தம் (11 பாடல்கள்)

திருவெழுகூற்றிருக்கை (27 வரிகள்)

அருணகிரிநாதர் 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப்புலவர்.

முருகப்பெருமான் மீது பற்றுக் கொண்டவர். இவரால் எழுதப்பட்ட நூல்கள்:

திருப்புகழ்

கந்தர் அந்தாதி

கந்தர் அலங்காரம்

கந்தரனுபூதி

திருவகுப்பு

வேல் விருத்தம்

மயில் விருத்தம்

சேவல் விருத்தம்

திருவெழுத்தம்

சேவல் விருத்தம்

திருவெழுகூற்றிருக்கை

அருள் முருகாற்றுப்படை

பொருள் முருகாற்றுப்படை

அணி முருகாற்றுப்படை

வருமுருகாற்றுப்படை

உடற்கூற்று வண்ணம்

முத்தி விநாயகர் அகவல்

உரைநடை இலக்கியங்கள்

உரைநடை இலக்கியங்கள் என்பவை இலக்கணக் கட்டுப்பாடுகளின்றி, பேச்சு வழக்குக்கு நெருக்கமாக, நேரடியாகக் கருத்துக்களைத் தெரிவிக்கும் எழுத்து வடிவங்களாகும். இவை புதினம், சிறுகதை, கட்டுரை, நாடகம் போன்ற பல வடிவங்களில் காணப்படுகின்றன. வீரமாமுனிவரின் "பரமார்த்த குரு கதை" தமிழ் உரைநடையின் முதல் நூலாகக் கருதப்படுகிறது, அதனைத் தொடர்ந்து "பிரதாப முதலியார் சரித்திரம்" போன்ற பல புதினங்கள் வெளிவந்தன.

உரைநடை இலக்கியங்களின் முக்கிய அம்சங்கள்:

எளிமை: கவிதை போன்ற அலங்காரங்கள் இன்றி, நேரடியாகப் பேசுவது போல எழுதப்படுகிறது.

தெளிவு: படிப்பவர்கள் எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் கருத்துக்களைத் தெளிவுபடுத்துகிறது.

வடிவங்கள்: புதினம், சிறுகதை, கட்டுரை, நாடகம், விமர்சனம், வரலாறு போன்ற பல்வேறு வடிவங்களில் இவை காணப்படுகின்றன.

நோக்கம்: தகவல்களை விளக்குவதற்கும், எண்ணங்களைப் பகிர்வதற்கும், கதைகளைச் சொல்வதற்கும் உதவுகிறது.

தொடக்கக் கால உரைநடை

தமிழ் உரைநடை தொன்மை வாய்ந்தது. தமிழ் மொழியில் எழுதப் பெற்ற முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் உரைநடை தொடர்பான குறிப்பு இடம் பெற்று உள்ளது. உரை வகை நடையே நான்கு என மொழிபடும்(பொருள் : 475 : 5) என்பது தொல்காப்பியச் சூத்திரம். உரைநடை இலக்கியம் நான்கு வகைப்படும் என்பது இதன் பொருள். என்றாலும், அந்தக் காலத்தைச் சேர்ந்த உரைநடை நூல்கள் இன்று கிடைக்கப் பெறவில்லை.

சங்க இலக்கியங்கள் பிற்காலத்தில் தொகுக்கப் பெற்றன. அத்தொகுப்பு நூல்களில் சிற்சில உரைக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. பாடல்களின் கீழே திணை, துறை தொடர்பான குறிப்புகள் உரை நடையில் எழுதப் பெற்று உள்ளன. பாடியவர், பாடப் பெற்றவர் பெயர், சூழல் தொடர்பான குறிப்புகளும் உரைநடையில் எழுதப் பெற்று உள்ளன. இக் குறிப்புகள் யாப்பு வடிவினவாக அமையவில்லை இதுபோன்றே உரைநடைத் தன்மைக்கு உரிய பேச்சு வடிவத்தையும் சார்ந்து இல்லை. சான்றாக ஒன்றைக் காணலாம்:

திணை: வாகை துறை: அரச வாகை: இயன்மொழியுமாம்.

பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனாற்

பிணியிருந்த யானைக் கட்சேய் மாந்தரஞ்சேர லிரும்பொறை

வலிதிற் போய்க் கட்டி லெய்தினானைக் குறுங்கோழியூர் கிழார் பாடியது

(புறநானூறு. 17)

இந்த நடை, சிலப்பதிகாரக் காலத்தில் மேலும் வளர்ந்து உள்ளது. சிலப்பதிகாரம் செய்யுள் வடிவில் அமைந்தது. அதில், செய்யுளுக்கு இடைப்பட்ட பகுதிகளில் உரைநடையில் சில குறிப்புகள் இடம் பெற்று உள்ளன. இதனால், சிலப்பதிகாரத்தை 'உரை இடை இட்ட பாட்டுடைச் செய்யுள்' என்று குறிப்பதும் உண்டு. பாடல் வரிகளுக்கு முன்பும் பின்பும் இடம் பெற்றுள்ள இந்த உரைநடைக்குச் சான்று வருமாறு :

மணமதுரையோடரசு கேடுற வல்வினைவந் துருத்தகாலைக்

கணவனையங் கிழந்துபோந்த கடுவினையேன் யானென்றாள்

என்றலு மிறைஞ்சியஞ்சி யிணைவளைக்கை யெதிர்கூப்பி

நின்ற வெல்லையுள் வானவரு நெடுமாரி மலர்பொழிந்து

குன்றவருங் கண்டு நிற்பக் கொழுநனொடு கொண்டு போயினார்

இவள்போலு நங்குலக்கோ ரிருந்தெய்வ மில்லை யாதலின்

(வஞ்சிக் காண்டம், குன்றக் குரவை, உரைப்பாட்டு மடை)

இதுவரை தொடக்கக் காலத் தமிழ் உரைநடைக்குச் சான்றுகள் இரண்டு வழங்கப் பெற்றன. இவற்றின் அடிப்படையில் அக்காலத் தமிழ் உரைநடையின் தன்மைகளாகக் கீழ் வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- செய்யுள் ஓசையில் இருந்து விடுபட்டவை.

- தமக்கெனத் தனி ஒரு வடிவ வரையறை இல்லாதவை.

இதனால், வடிவ நிலையில் எந்த விதமான இலக்கண வரையறைக்கும் உட்படாதவை.

- கூட்டுச் சொற்களால் ஆனவை.
- பேச்சு வழக்குச் சொற்கள் இல்லாதவை.
- இலக்கியம் கற்கத் துணை நிற்பவை.

உரையாசிரியர் கால உரைநடை

இலக்கியம், இலக்கணம், வைத்தியம், தத்துவம், சோதிடம் என எல்லாமே செய்யுள் அல்லது சூத்திர வடிவில் எழுதப் பெற்றன. இவற்றைக் கற்கும் அல்லது கற்பிக்கும் நோக்கில் விளக்கங்கள் உரைக்கப்பட்டன. இந்த விளக்கங்கள் உரைநடையில் அமைந்து இருந்தன. இவை தொடக்கக் காலத்தில் எழுத்து வடிவில் ஏட்டுச் சுவடிகளில் எழுதப் பெறவில்லை. தலைமுறை தலைமுறையாகக் 'கேட்டு-சொல்லி'ச் செவி வழியாகவே வந்தன.

இவ்வகை உரைநடை தமிழ்மொழியில் கி.பி. எட்டாம் நூற்றாண்டு முதல்தான் சுவடிகளில் எழுதப் பெற்று உள்ளது. சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம் முதலான காப்பியங்கள், தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்கள் ஆகியவற்றுக்கு உரிய உரைகள் கிடைத்துள்ளன.

தமிழ் மொழியில் முதன்முதலில் ஏட்டில் எழுதப் பெற்ற முதல் உரை இறையனார் அகப்பொருள் உரை ஆகும். இறையனார் அகப்பொருள் என்னும் பொருள் இலக்கண நூலுக்கு நக்கீரரால் சொல்லப்பட்டுப் பிற்காலத்தில் ஏட்டில் எழுதப் பெற்ற உரைதான் இது. இந்த உரையின்

ஒரு சிறு பகுதி வருமாறு:

"சந்தனமும், சண்பகமும், தேமாவும், தீம்பலவும், ஆசினியும், அசோகமும், கோங்கும், வேங்கையும், குரவமும் விரிந்து, நாகமும், திலகமும், நறவும், நந்தியும், மாதவியும், மல்லிகையும், மௌவலொடு மணங்கமழ்ந்து, பாதிரியும் பாவை ஞாழலும்..... வண்டு துவைப்பத் தண்தேன் துளிப்பதோர் வெறியுறு நறுமலர் வேங்கை கண்டாள்"

இந்த நடையில் ஓர் ஓசை ஒழுங்கு நிலவுகிறது. ஆனால் இது செய்யுளுக்கு உரிய ஓசை அல்ல. இது செய்யுளுக்கு உரிய சொற்களால் எழுதப் பெற்ற உரைநடைப் பகுதி. இதனால் ஓசை ஒழுங்கு இயற்கையாக அமைந்துவிட்டது. மேலும் இதில் நீண்ட தொடர் அமைப்பைக் காண முடிகின்றது. இதே நூலில் ஒரு பத்தியின் அளவு ஒரு பக்கத்திற்கு மேலாகவும் அமைந்து உள்ளது.

சிறு சிறு பத்திகள்

இது போன்ற பெரிய அளவினதாக அமையும் பத்தி அமைப்பு, காலப்போக்கில் மாற்றம் பெற்று உள்ளது. இளம்பூரணர் தொல்காப்பியத்திற்கு 11ஆம் நூற்றாண்டில் உரை எழுதி உள்ளார். அந்த உரையில் சிறு சிறு பத்திகள்தாம் மிகுதியாக உள்ளன. சான்று ஒன்று வருமாறு:

இத்தலைச்சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், சார்பின் தோற்றத்து

எழுத்துக்களிற் குற்றியலிகரத்தின் ஒரு மொழிக் குற்றியலிகரத்திற்கு

இடமும் பற்றுக்கோடும் உணர்த்துதல் நுதலிற்று

(தொல்.எழுத்.2:34. உரை)

இதே உரைப்போக்கு 13ஆம் நூற்றாண்டு வரை தொடர்கின்றது. 13ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர் நச்சினார்க்கினியர். இவர் எழுதி உள்ள உரையிலும் நீண்ட தொடர்கள் இடம் பெற்று உள்ளன. கூட்டுச் சொற்கள் இடம் பெற்று உள்ளன. பேச்சு வழக்குச் சொற்கள் தவிர்க்கப் பெற்று உள்ளன. சான்று ஒன்று வருமாறு :

ஆய்தமென்ற ஓசைதான் 'அடுப்புக் கூட்டுப் போல' மூன்று

புள்ளி வடிவிற்றென்பது உணர்த்தற்கு ஆய்தமென்ற முப்பாற் புள்ளியு'

மென்றார். அதனை இக்காலத்தார் நடுவு வாங்கியிட்டெழுதுப.

இதற்கு வடிவு கூறினார், ஏனையொற்றுக்கள் போல உயிரேறாது

ஓசைவிகாரமாய் நிற்பதொன்றாகலின்....

(தொல்.எழு.நூன்மரபு: 2, உரை)

வினாவிடை முறை

செய்யுள் அல்லது சூத்திர வடிவ நூல்களுக்கு உரைகள் வினாவிடை முறையில் எழுதப் பெற்று உள்ளன. விளக்கம் தரும் முறையில் வினா கேட்கப் பெறுகின்றது. அதன் பின்னர் அதற்கு உரிய விடை அளிக்கப் பெறுகின்றது. இந்தச் சூழலில் நீண்ட தொடர்கள் தவிர்க்கப் பெற்று உள்ளன. சிறு சிறு தொடர்கள் பயன்படுத்தப் பெற்று உள்ளன. என்றாலும் கூட்டுச் சொற்களையும், இலக்கிய வழக்குச் சொற்களையும் பயன்படுத்தும் முறையே தொடர்ந்து உள்ளது. சான்று ஒன்று வருமாறு:

நண்டிற்கு மூக்குண்டோவெனில், அ.்.து ஆசிரியன்

கூறலான் உண்டென்பது பெற்றாம்

(தொல்:பொருள்:மரபியல்:31, உரை)

கி.பி. 13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த பேராசிரியரின் உரை இ

மணிப்பிரவாள நடை

மணி தமிழ்ச் சொல்லைக் குறிக்கும். பிரவாளம் வடமொழிச் சொல்லைக் குறிக்கும். பிரவாளம் என்றால் பவளம்.்.பவழம் என்பது பொருள். மணியும் பவளமும் கலந்து தொடுக்கப் பெற்ற மாலை அழகாக அமையும். அதுபோலத் தமிழுடன் வடமொழிச் சொற்களை மிகுதியாகக் கலந்து உரை எழுதுவது அழகாகக் கருதப் பெற்றது. தமிழில் வைணவ பக்தி இலக்கியங்களுக்கு இவ்வகை உரைநடையில் தான் உரைகள் எழுதப் பெற்றன. சான்றாகத் திருவாய்மொழி ஈட்டு உரையில் ஒரு பகுதியைப் பாருங்கள்:

மாசு உண்ணாச் சுடர் உடம்பாய் - ஹேயப் பிரத்யநீகமாய்ச் சுத்த

சத்துவமாகையாலே நிரவதிக பேரொளி உருவமான திவ்விய விக்கிரகத்தை யுடையையாய்
(திருவாய்மொழி:பாட்டு 230, உரை)

தமிழ் உரைநடை இலக்கியத்தின் வளர்ச்சி:

தொடக்க காலம்: தொல்காப்பியம் போன்ற பழமையான நூல்களில் உரைநடை குறித்த குறிப்புகள் உள்ளன.

முதலாவது உரைநடை நூல்: வீரமாமுனிவர் எழுதிய "பரமார்த்த குரு கதை" தமிழ் உரைநடை இலக்கியத்தின் முதல் நூலாகக் கருதப்படுகிறது.

நவீன காலம்: 1887-ல் வெளிவந்த ”பிரதாப முதலியார் சரித்திரம்” முதல் புதினமாகும். பாரதியார் போன்றோர் உரைநடையின் வளர்ச்சிக்கு முக்கியப் பங்களித்துள்ளனர்.

ஐரோப்பிய காலம்: ஐரோப்பியர் வருகைக்குப் பிறகு, மொழிபெயர்ப்பு நூல்கள் மூலம் உரைநடையின் வளர்ச்சி மேலும் துரிதப்படுத்தப்பட்டது.

உரைநடை இலக்கியம்

இலக்கியம் எழுத உரைநடையை முதன் முதலில் பயன்படுத்தியவர் வீரமா முனிவர் என்பதை அறிவோம். இவர் எழுதிய பரமார்த்த குரு கதைக்கு அடுத்து இம்முயற்சி தொடரவில்லை. 1887இல் தமிழின் முதல் புதினமான ‘பிரதாப முதலியார் சரித்திரம்’ வெளிவந்தது. இதைத் தொடர்ந்து புதினங்கள் பல எழுதப் பெற்றன. இலக்கியம் எழுதும் முயற்சிக்குப் பெருமளவில் உரைநடையைப் பயன்படுத்தும் முறை வழக்குப் பெற்றது. இந்த உரைநடையிலும் மாற்றம் வேண்டும் என்பது பாரதியின் கருத்து. இதை உரைநடை வழியே பாரதி வெளிப்படுத்தி உள்ளார்.

“தமிழில் வசன நடை (உரைநடை) இப்போதுதான்

பிறந்தது. பல வருஷமாகவில்லை. தொட்டில் பழக்கம்

சுடுகாடு மட்டும். ஆதலால் இப்போதே நமது

வசனம் உலகத்தில் எந்தப் பாஷையைக் காட்டிலும்

தெளிவாக இருக்கும்படி முயற்சிகள் செய்ய வேண்டும்.

கூடியவரை பேசுவது போலவே எழுதுவதுதான்

உத்தமமென்பது என்னுடைய கட்சி. எந்த விஷயம்

எழுதினாலும் சரி, ஒரு கதை அல்லது தர்க்கம்,

ஒரு சாஸ்திரம், ஒரு பத்திரிகை விஷயம் எதை

எழுதினாலும் வார்த்தை சொல்லுகிற மாதிரியாகவே

அமைந்து விட்டால் நல்லது”

இது பாரதி வாழ்ந்த கால உரைநடை வளர்ச்சியை அறியப் போதுமான சான்று. பாரதி 1882இல் பிறந்து 1921இல் இயற்கை எய்தினார். இக்காலத்தில் பேசுவது போல் எழுத வேண்டும் என்பது ஒரு கட்சியாக இருந்து உள்ளது. இதற்கு மாற்றுக் கருத்து உடையவர் இருந்ததைப் பாரதியின் கருத்துத் தெளிவாக்குகின்றது.

பாரதிக்குப் பின்னர் உரைநடை வளர்ச்சியில் குறிப்பிடத் தக்கவர்கள் பலர் உள்ளனர். புதுமைப்பித்தன், திரு.வி.க, மறைமலை அடிகள் முதலானவர் தமக்கெனத் தனி உரைநடைப் பாணியை உருவாக்கி உள்ளனர்.

தமிழ் உரைநடையின் தோற்றமும் வளர்ச்சியும்.

கருத்துக்களை எளிதில் சொல்வதற்கேற்ற எழுத்து வடிவமே உரைநடையாகும். எந்த இலக்கண மரபுகளுமின்றி பேசுவதுபோல எழுதுவது இந்நடையின் தனிச்சிறப்பாகும். படிப்பவர்கள் எளிதில் புரிந்துகொள்ள உரைநடை பெரிதும் உதவுகிறது.

தமிழ் உரைநடை தொன்மை வாய்ந்தது. தமிழ் மொழியில் எழுதப் பெற்ற முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் உரைநடை தொடர்பான குறிப்பு இடம் பெற்று உள்ளது. உரை வகை நடையே நான்கு என மொழிபடும்(பொருள் : 475 : 5) என்பது தொல்காப்பியச் சூத்திரம். உரைநடை இலக்கியம் நான்கு வகைப்படும் என்பது இதன்

பொருள். என்றாலும், அந்தக் காலத்தைச் சேர்ந்த உரைநடை நூல்கள் இன்று கிடைக்கப் பெறவில்லை.

இளங்கோவின் உரைநடை

சிலப்பதிகாரக் காலத்தில் மேலும் வளர்ந்து உள்ளது. சிலப்பதிகாரம் செய்யுள் வடிவில் அமைந்தது. அதில், செய்யுளுக்கு இடைப்பட்ட பகுதிகளில் உரைநடையில் சில குறிப்புகள் இடம் பெற்று உள்ளன. இதனால், சிலப்பதிகாரத்தை 'உரை இடை இட்ட பாட்டுடைச் செய்யுள்' என்று குறிப்பதும் உண்டு..

நக்கீரர் உரைநடை

தமிழ் மொழியில் முதன்முதலில் ஏட்டில் எழுதப் பெற்ற முதல் உரை இறையனார் அகப்பொருள் உரை ஆகும். இறையனார் அகப்பொருள் என்னும் பொருள் இலக்கண நூலுக்கு நக்கீரரால் சொல்லப்பட்டுப் பிற்காலத்தில் ஏட்டில் எழுதப் பெற்ற உரைதான் இது.

தொல்காப்பிய உரைநடை

தொல்காப்பியம் என்ற தமிழிலக்கண நூலுக்கு பல்வேறு உரைகள் வந்துள்ளன. அவற்றுள் தொல்காப்பியம் முழுவதுக்குமான உரை இளம்பூரனரின் உரையாகும். மேலும் தெய்வச்சிலையார், கல்லாடர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் பேராசிரியர் போன்றோரும் தொல்காப்பியத்துக்கு உரை எழுதியுள்ளனர்.

இலக்கிய உரைநடைகள்

பத்துப்பாட்டுக்கும், சீவகசிந்தாமணிக்கும் நச்சினார்க்கினியர் உரைஎழுதியுள்ளார். சிலப்பதிகாரத்துக்கு அடியார்க்கு நல்லாரின் உரை செல்வாக்குப் பெற்றதாகும். திருக்குறளுக்கு பரிமேலழகரின் உரை புகழ்பெற்றதாகும். திருக்குறளுக்கு நிறையபேர் உரையெழுதியிருந்தாலும் மு.வரதராசனார் அவர்களின் எளிய உரையே மக்களிடம் பெரிய வரவேற்பைப் பெற்றது.

மணிப்பிரவாள நடை

மணி தமிழ்ச் சொல்லைக் குறிக்கும். பிரவாளம் வடமொழிச் சொல்லைக் குறிக்கும். பிரவாளம் என்றால் பவளம்.்.பவழம் என்பது பொருள். மணியும் பவளமும் கலந்து தொடுக்கப் பெற்ற மாலை அழகாக அமையும். அதுபோலத் தமிழுடன் வடமொழிச் சொற்களை மிகுதியாகக் கலந்து உரை எழுதுவது அழகாகக் கருதப் பெற்றது. தமிழில் வைணவ பக்தி இலக்கியங்களுக்கு இவ்வகை உரைநடையில் தான் உரைகள் எழுதப் பெற்றன..

ஐரோப்பியர் உரைநடை

தமிழ் இலக்கியங்கள் பெரிதும் கவிதைகளாகவே இருப்பதால் அவற்றை எளிதாகப் புரிந்துகொள்ளும்விதமாக இவர்கள் எளிய உரைநடையைக் கையாண்டனர். அவர்களுள் இராபர்ட் டி நொபிலி என்னும் தத்துவ போதகர் பத்துக்கும் மேற்பட்ட உரைநடை நூல்களை இயற்றினார் இதனால் இவரை உரைநடையின் தந்தை என அழைப்பர். இவரைத் தொடர்ந்து வீரமாமுனிவர் பரமார்த்தகுரு கதை உள்ளிட்ட பல உரைநூல்களைத் தந்தார். பிறகு ஜி.யு.போப் அவர்களும் நல்ல உரைநடை நூல்களைத் தந்தார்.

இருபதாம் நூற்றாண்டு உரைநடை

ஐரோப்பியரைத் தொடர்ந்து தமிழ்ப்புலவர்கள் பலரும் தமிழ் உரைநடையை வளர்த்தனர். ஆறுமுக நாவலர், சிவஞானமுனிவர், மறைமலையடிகள், தேவநேயப் பாவாணர், பெருஞ்சித்திரனார், சோம.இளவரசு, தெ.பொ.மீ, உ.வே.சா, திரு.வி.க, வையாபுரிப்பிள்ளை, மு.வ, ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். இராமலிங்க வள்ளலாரின் மனுமுறை கண்ட

வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் ஆகிய உரைநூல்களும், திரு.வி.க அவர்களின் மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும் என்ற உரையும் புகழ்பெற்ற உரைகளாகும்.

தமிழில் உரைநடை வளர்ச்சியின் காரணமாக அறிவியல், இலக்கியம், ஆன்மீகம், பொது அறிவு, வணிகம் எனப் பலதுறைகளிலும் பல அரிய நூல்கள் கிடைத்தன. உரையாசிரியர்களால் உரைநடை வளர்ந்தது செய்யுளைச் படிக்கும் பழக்கம் ஏற்பட்டது. பிற்காலத்தில் தமிழ் மேலும் பல துறைகளில் வளர உதவியது.

சித்தர் இலக்கியங்கள்

சித்தர்கள் என்போர் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி முதலிய எட்டு வகையான யோகாங்கம் முலம் எண் பெருஞ் சித்திகளைப் பெற்றவர்கள் ஆவர். ”சித்தர்” என்ற சொல்லுக்கு சித்தி பெற்றவர் என்பது பொருள்.

வகைப்பாடு

எட்டு வகையான யோகாங்கம் அல்லது அட்டாங்க யோகம்

இயமம் - கொல்லாமை, வாய்மை, கள்ளாமை, பிறர் பொருள் விரும்பாமை, புலன் அடக்கம் என்பனவாம்.

நியமம் - நியமமாவது நல்லனவற்றைச் செய்து ஒழுக்க நெறி நிற்றல்.

ஆசனம் - உடலைப் பல்வேறு கோணங்களில் நிறுத்தி, பயிற்சி செய்தல்.

பிராணாயாமம் - பிரணாயாமமாவது சுவாசத்தைக் கட்டுப்படுத்தல். அதாவது பிராண வாயுவைச் சீராப்படுத்தல், :வாயுவை உட்செலுத்துதல், வெளிச்செலுத்துதல்.

பிராத்தியாகாரம் - புலன்கள் வாயிலாக புறத்தே செல்லும் மனத்தை உள்ளே நிறுத்திப் பழகுதலே :பிரத்தியாகாரமாம்.

தாரணை - தாரணை என்பது பிரத்தியாகாரப் பயிற்சியால் உள்ளுக்கு இழுத்த மனத்தை நிலைபெறச் செய்தல்.

தியானம் - தியானம் என்பது மனதை ஒருமுகப்படுத்தி ஒரே சிந்தையில் ஆழ்தல்.

சமாதி - சமாதி என்பது மனதை கடவுளிடம் நிலைக்கச் செய்வது ஆகும்.

எண் பெருஞ் சித்திகள் அல்லது அட்டமா சித்திகள்

“அனி மாதி சித்திகளானவை கூறில்

அணுவில் அணுவின் பெருமையின் நேர்மை

இணுகாத வேகார் பரகாய மேவல்

அணுவத் தனையெங்குந் தானாத லென்றெட்டே”

திருமூலரின் திருமந்திரம், 668வது பாடல்

எண் பெருஞ் சித்திகளின் விளக்கம்

அணிமா - அணுவைப் போல் சிறிதான தேகத்தை அடைதல்.

மகிமா - மலையைப் போல் பெரிதாதல்.

இலகிமா - காற்றைப் போல் இலேசாய் இருத்தல்.

கரிமா - கனமாவது-மலைகளாலும், வாயுவினாலும் அசைக்க முடியாமல் பாரமாயிருத்தல்.

பிராப்தி - எல்லாப் பொருட்களையும் தன்வயப் படுத்துதல், மனத்தினால் நினைத்தவை யாவையும் அடைதல், அவற்றைப் பெறுதல்.

பிராகாமியம் - தன் உடலை விட்டு பிற உடலில் உட்புகுதல். (கூடு விட்டுக் கூடு பாய்தல்)

ஈசத்துவம் - நான்முகன் முதலான தேவர்களிடத்தும் தன் ஆணையைச் செலுத்தல்.

வசித்துவம் - அனைத்தையும் வசப்படுத்தல்.

இத்தகைய எண் பெருஞ் சித்திகளை எட்டு வகையான யோகாங்க பயிற்சியினால் சித்தர்கள் பெற்றனர்.

சித்தர்கள் இயல்பு

சித்தர்கள் பொது வாழ்க்கை நெறிக்கு உடன் படாதவர்களாகத் தங்களுக்கென்று தனி வாழ்வியல் வழி முறைகளை உருவாக்கி நாடு, நகரம், மொழி, இனம் என அனைத்தையும் கடந்த இயற்கையோடு இயற்கையான வாழ்க்கை வாழ்ந்தவர்கள் ஆவார். சித் - அறிவு, சித்தை உடையவர்கள் சித்தர்கள். நிலைத்திருக்கும் பேரறிவு படைத்தவர்கள் சித்தர்கள். சித்தர்கள் என்றால் நிறைமொழி மாந்தர் என்றும் அறிஞர்கள் என்றும் பொருள்படுவதாக பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. மருத்துவத்தோடு யோகம், சோதிடம், மந்திரம், இரசவாதம் போன்ற அரிய அறிவியலையும் தந்தவர்கள் சித்தர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

சித்தர்கள் இயற்கையைக் கடந்த (ளரிநசயெவரசயட) சக்திகள் உடையவர்கள் என்று சிலர் இயம்புவதுண்டு, எனினும் இவர்கள் உலகாயுத (அயவநசயைட) இயல்புகளை சிறப்பாக அறிந்து பயன்படுத்தினர் என்பதுவே தகும். இவர்களின் மருத்துவ, கணித, இரசவாத, தத்துவ, இலக்கிய, ஆத்மீக ஈடுபாடுகள் வெளிப்பாடுகள் இவர்களின் உலகாயுதப் பண்பை எடுத்தியம்புகின்றன. ஆயினும் இவர்கள் வெறும் பௌதிகவாதிகள் (அயவநசயைடளைவள) அல்லா. "மெய்ப்புலன் காண்பது அறிவு" என்பதிற்கிணங்க, உண்மை அல்லது மெய் நிலை அடைய முயன்றவர்கள் சித்தர்கள்.

"சாதி, சமயச் சடங்குகளைக் கடந்து, சமுகத்தில் பயனுடையவை எவை, என்பதைப் பிரித்தறிந்து அவற்றுள் புதுமைகளைப் புகுத்துகின்ற அறிஞர்களாகவும், சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை, சாதி சமய மத மாத்சரியங்களை மாற்றக் கருதிய சீர்த்திருத்தவாதிகளாகவும்" சித்தர்கள் வாழ்ந்தனர். "விந்தையான செயல்கள், பட்டறிவு தமிழ், சீரிய ஆராய்ச்சி" ஆகிய அம்சங்கள் சித்தர்களை வருணிப்பன எனலாம். அப்படிப்பட்ட மேலோட்டமான வருணிப்புக்களுக்கு மேலாக, சித்தர்கள் என்பவர்கள் சித்தி அடைந்தவர்கள். தங்கள் இருப்பை (நஒளைவநஒெந), உடம்பை, சிந்தையை, சுற்றத்தை, இவ்வுலகின் இயல்பை நோக்கி தெளிவான புரிதலை (ரனெநசளவயனெனைபெ), அறநிலை உணர்வை (நஒவநசயெட யறயசநநெளள), மெய்யடைதலை (யஉவரயடவைல) சித்தி எய்தல் எனலாம்.

சித்தர்களை புலவர்கள், பண்டாரங்கள், பண்டிதர்கள், சந்நியாசிகள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், ஓதுவார்கள், கலைஞர்கள், கவிஞர்கள், அரசர்கள், மறவர்கள், ஆக்கர்கள், புலமையாளர்கள், அறிவியலாளர்கள், பொது மக்கள் ஆகியோரிடம் இருந்து வேறுபடுத்தி அடையாளப்படுத்தலாம். சித்தர்களின் மரபை, கோயில் வழிபாடு, சாதிய அமைப்பை வலியுறுத்தும் சைவ மரபில் இருந்தும், உடலையும் வாழும்போது முக்தியையும் முன்நிறுத்தாமல் "ஆத்மன்", சம்சாரம் போன்ற எண்ணக் கருக்களை முன்நிறுத்தும் வேதாந்த மரபில் இருந்தும் வேறுபடுத்திப் பார்க்கலாம். இன்று, சித்தர் மரபு அறிவியல் வழிமுறைகளுடன் ஒத்து ஆராயப்படுகின்றது. எனினும், சித்தர் மரபை தனி அறிவியல் கண்ணோட்டத்தில் பார்ப்பது அதன் பரந்த வெளிப்படுத்தலை, அது வெளிப்படுத்திய சூழலை புறக்கணித்து குறுகிய ஆய்வுக்கு இட்டு செல்லும்.

தமிழ் வளர்த்த சித்த நூல்கள்:

சித்தர்கள் பல்வேறு துறைகளைச் சார்ந்த இலக்கியங்களை படைத்துள்ளனர். தமிழ் நாட்டிலே சித்தர்கள் இயற்றினவாக, இரசவாதம், வைத்தியம், மாந்திரிகம், சாமுத்திரிகாலட்சணம், கைரேகை சாத்திரம், வான சாத்திரம், புவியியல் நூல், தாவரயியல் நூல், சோதிட நூல், கணித நூல் முதலிய துறைகளைச் சார்ந்த நூல்கள் காணப்படுகின்றன.

சொல்லிலக்கணம்

சித்தம் என்பது மனமாகும். தன்னிச்சையாகத் திரியும் மனதினை அடக்கி, இறைவனிடம் செலுத்துகின்றவர்கள் சித்தர்கள் ஆவார்.

சித்தர்களின் கொள்கை

பரமாத்மா எங்கும் தனியாக இல்லை. நமது உடம்பு தான் பரமாத்மாவின் இடம் ஆதலால் கடவுளைத்தேடி எங்கும் அலைய வேண்டாம். உடம்பைப் பேணுவதே கடவுட்பணி, உடம்பினுள்ளேயே பரமாத்மாவைக் கண்டு மகிழ்ந்திரு என்பது சித்தர் கொள்கை.

உன்னுள்ளும் இருப்பான் என்னுள்ளும் இருப்பான்

உருவம் இல்லா உண்மை அவன்.

இதை உணர்ந்தார் இங்கே உலவுவதில்லை

தானும் அடைவார் அந்நிலை தன்னை.

பிரிவுகள்

சித்தர்கள் தாங்கள் பின்பற்றிய கொள்கைகளைப் பொறுத்து மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பெறுகின்றனர். அவையாவன,.

சன்மார்க்கச் சித்தர்கள் - திருமூலர், போகர்.

ஞானச் சித்தர்கள் - பட்டினத்தார், பத்திரகிரியார், சிவவாக்கியர், பாம்பாட்டிச் சித்தர், பேய்ச் சித்தர், குதம்பைச் சித்தர், அழுகண்ணர், இடைக்காட்டுச் சித்தர்.

காயச் சித்தர்கள் - கோரக்கர், கருவூர்ச் சித்தர், மச்சமுனி, சட்டமுனி, சுந்தரானந்தர், உரோமுனி.

சித்த வைத்தியம்

முதன்மைக் கட்டுரை: சித்த மருத்துவம்

சித்தர்களின் வைத்திய முறைகள் காலம் குறிப்பிடப்பட முடியாத பழமையானதாக இருக்கிறது. பண்டைத்தமிழரின் அறிவியல்அறிவின் சிகரமே சித்த வைத்தியமாகும். மனித குலத்தைக் காக்கும் பொருட்டு, அன்றைய கலாச்சாரத்திற்கேற்பவும், மனித வாழ்க்கை முறைக்குத் தேவையான, அனைத்து ஆரோக்கிய முறைகளையும் மிக எளிய வைத்திய முறைகளை, அனைவரும் செய்துகொள்ளும் பொருட்டு தந்தனர். அவ்வைத்திய முறைகளை, அவர்களின் இருப்பிடத்திலே அருகில் கிடைக்கும் மூலிகைகளைக் கொண்டு, மனித குலத்தைக் காத்து வந்தனர். சித்த வைத்தியர்கள் அல்லது சித்தர்கள், உடல்நலன் பாதிக்கப்பட்டு நோயுடன் வருபவர்களின் கையின் நாடித் துடிப்பின் தன்மைகளை அறிந்து கொண்டு, நோயினை நீக்குவர். மூலிகைச் செடிகளின் இலைகளைப் பொடியாக்கியும், தைலமாகவும் தருவர். இம்மருந்து உடலில் மெதுவாகக் கரைந்து, இரத்தத்துடன் கலந்தபின் நோய் முற்றிலும் குணமாகி விடும். இதனால் எந்த விதமான பின் விளைவும் இருக்காது. தீராத வியாதிகளையும், தீர்த்து வைத்திடும் வைத்தியம் சித்த வைத்தியம் ஆகும்.

மக்கள் அனைவரும், ஒழுக்கம் தவறாமல் வாழவேண்டும் என்றும், பொய், சூது, கொலை, குடி, விபச்சாரம், கூடா ஒழுக்கம் ஆகியவை உடல் நோயை உண்டாக்கும் என்றும் யோகப் பயிற்சியிலே வாழ்வில் வெற்றி பெறமுடியும் என்றும் உடல் வலிமையுடன் நீண்டநாள் வாழ முடியும் என்றும் சித்தர்கள் பல பாடல்கள் பாடியுள்ளனர்.

”உலகில் சாவாமைக்கு வழிகாண முடியும் என்ற உயரிய நோக்கம் கொண்ட மருத்துவ முறை சித்த மருத்துவமே.”

சித்தர்களின் இரசவாதம்

இரசவாதம் என்னும் சொல்லுக்கு இரசத்தை வேதித்தல் என பொருள். எளிய உலோகங்களுடன் சிலவகையான தாவர வகைகளைச் சேர்த்து தங்கம் தயார் செய்வது. இவற்றை சித்தர்கள் செய்தமைக்கு ஆதாரமான பாடல்கள் உண்டு. அதில் ஒன்றான திருமூலர் சொல்லும் செடியின் பெயர் பரிசனவேதி. அந்த பாடல் பின்வருமாறு:

பரிசன வேதி பரிசித்த தெல்லாம்

வரிசை தருவான் வகையாகு மாபோல்

குருபரி சித்த குவலய மெல்லாம்

திரிமலம் தீர்ந்து சிவகதி யாமே

இப்படி செய்து தங்கம் கிடைக்க வேண்டுமென்றால் தங்கத்தின் மீது ஆசை இருக்க கூடாது. இந்த வகையான முயற்சி கடந்த நூற்றாண்டுகளில் உலகெங்கிலும் நடந்திருக்கின்றது.” இன்றைய வேதியியல் அறிவின் படி இரும்பையோ அல்லது வேறு எந்த ஒரு தனிமத்தையோ பொன்னாக்க முடியாது. எனினும் அப்படிப்பட்ட முயற்சிகளே இன்றைய வேதியல் துறையின் முன்னோடி என்பது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றுதான்.

மருந்துகளில் ரசம் முதன்மையானது. இதன் மூலம் இரசபற்பம், ரசசெந்தூரம், ரசக்கட்டு, முதலிய மருந்துகள் தயாரிக்கப்பட்டன. தீராத பல கொடிய நோய்களுக்கு இம்மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. எனவே ரசவாதம் என்றால் ரசத்தின் மாறுதல்களை அறிவது என்று பொருள்.

சில சித்தர்கள் ஆன்மாவைப் பரிசுத்தப்படுத்தி இறைப்பொருளுடன் ஒன்றுவதை ஒருவிதமான ரசவாதமாகப் பயின்றனர். இதையே “தெய்வீக ரசவாதம்“ என்றும் “பேரின்ப ரசவாதம்“, “இன்ப ரசவாதம்“, என்றும் “ஞான ரசவாதம்“ என்றும் சொல்வார்கள்.

போகர் என்ற சித்தர் எழுதிய பாடல்கள் வேதியல் தொடர்பான பாடல்களில் முக்கியத்துவம் பெறுகின்றன. அவை தமிழில் அமைந்தாலும், அவர் ஒரு சீனர் என்ற ஒரு கருத்தும் இருக்கின்றது.

சித்தர்களின் நவீன அறிவியல் ஆராய்ச்சி

சித்தர்கள் கண்டறிந்த வாத வித்தையே சிறந்த விஞ்ஞான ஆராய்ச்சியாகும். உலோக வகைகள், உப்பு வகைகள், பாசாண வகைகள், வேர் வகைகள், பட்டை வகைகள், பிராணிகளின் உடம்பிலே உற்பத்தியாகும் கோரோசனை கத்தூரி, மூத்திரம், மலம் முதலியவைகளின் குணங்களை ஆராய்ந்து கண்டிருக்கின்றனர்.

காட்டிலும் மலையிலும் குகையிலும் வாழ்ந்த சித்தர்கள் தங்கள் ஆராய்ச்சிகளை நடத்தியிருக்கிறார்கள். இன்றிருப்பதைப்போல பரிசோதனை சாலைகள் அன்று இருக்கவில்லை. எனினும் அவர்களின் ஆராய்ச்சிகள் இன்றைய விஞ்ஞான ஆய்வுடன் ஒத்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

சித்தர்களின் ஞானம்

மதவாதிகள், ஆத்திகர்கள் உள்ளிட்டோர் "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்ற நம்பிக்கை உள்ளவர்கள். மக்கள் நூறாண்டுகள் தான் உயிர் வாழமுடியும் என்று நம்புகின்றனர். ஆனால் சித்தர்களின் நம்பிக்கை இதற்கு மாறானது. நூற்றுக் கணக்கான, ஆயிரக்கணக்கான ஆண்டுகள் உயிர் வாழமுடியும் என்பது சித்தர்களின் நம்பிக்கை. கற்பக மூலிகைகளினை முறையாக உட்கொள்ளுபவர் நோயின்றி ஆயிரக்கணக்கான ஆண்டுகள் உயிர் வாழமுடியும் என்பது சித்தர்களின் நம்பிக்கை.

தமிழ்ச் சித்தர்கள்

சித்தர்கள் பட்டியல் சித்தர் மரபை நோக்குங்கால், இதுவரை கண்டுள்ள எண்ணிக்கை கட்டுக்கடங்காதது. சித்தர்களில் 18 பேர் தலையாய சித்தர்கள் ஆவர்.

தலையாய சித்தர்கள்

முதன்மை சித்தராக சிவன் கருதப்படுகின்றார், மேலும் தமிழ் மரபின்படி 18 தலையாய சித்தர்கள் இருந்தனர், அவர்கள் பின்வருமாறு:ஜ8ஸஜ9ஸ

1 . திருமூலர்

2 . இராமதேவ சித்தர்

3 . அகத்தியர்

4 . இடைக்காடர்

5 . தன்வந்திரி

6 . வால்மீகி

7 . கமலமுனி

8 . போகர்

9 . மச்சமுனி

10 . கொங்கணர்

11 . பதஞ்சலி

12 . நந்தி தேவர்

13 . போதகுரு

14 . பாம்பாட்டி சித்தர்

15 . சட்டைமுனி

16 . சுந்தரானந்தர்

17 . குதம்பைச்சித்தர்

18 . கோரக்கர்

தமிழ் இலக்கியத்தில் சித்தர்களின் மாபெரும் பங்கு

தமிழ் இலக்கியம் பலவகைப்படும். அவை, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, ஐம்பெருங்காப்பியம், தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தம் என விரிவடைந்து இலக்கிய வகையின் எண்ணிக்கை நீண்டு கொண்டே போகும். இலக்கியம் கலை என்னும்

கோட்பாட்டினை உள்ளடக்கியது. தமிழ்ப் புலமை மிக்கோர் நெஞ்சில் இடம் புகுந்த கலை, வடிவ நிலையை அடைந்து கைத்தொழில் கைவினைத் திறத்தினால் உருவாகும் கட்டிடக் கலை போன்ற பயன் கலைகளும், புலன்களுக்கும் மனத்திற்கும் இன்பத்தைத் தருகின்ற சிற்பம், ஓவியம் போன்ற இன்பக் கலைகளும், மாந்தர் தம் உள்ளங்களில் சுவையுணர்வை எழுப்பி அழகையும் இன்பத்தையும் ஊட்டுகின்ற இசை, நாட்டியம், நாடகம், கூத்து என்னும் (குநெ யுசவள, ீநசகழசஅபெ யுசவள) நுண்கலைகளும், அறிவுக்கும் வாழ்க்கை நலத்துக்கும் தேவையாயிருக்கின்ற மருத்துவம், வானவியல் போன்ற (ளுஉநைஎந) அறிவியல் கலைகளும், வாழ்வியல் உண்மைகளை மொழிச் சுவை கலந்து படைக்கும் படைப்புகளாக–இலக்கியக் கலைகளாகப் படைக்கப்பட்டுள்ளன.

சித்தர் இலக்கியம் தமிழில் வழங்கி வரும் மருத்துவ நூல் ஆசிரியர் பெயர்கள் அனைத்தும் சித்தர்கள் பெயராலேயே வழங்கப்படுகின்றன. அகத்தியர்12000 திருமூலர்8000 போகர்7000 மச்சமுனி800 சட்டமுனி3000 கொங்கணர்3000 கோரக்கர் சந்திரரேகை என்றே குறிப்பிடப்படுகின்றன. இப்பெயர்கள் அனைத்தும் சித்தர் பெயராகவே இருப்பதனால், மருத்துவ இலக்கியம் அனைத்தும் 'சித்தர் இலக்கியம்' என்னும் பொதுப்பெயரால் வழங்கப்படுகின்றன.

சங்க இலக்கியத்தில் சித்தர்கள்

சித்தர் என்னும் சொல்லுக்கு உரிய விளக்கம், சித்தர்கள் எனப்படுவோர் யாவர்? .சித்தர்கள் என்றால் வீடுபேறு அடைந்தவர்கள் எனப்பொருள் கொள்வர் சிலர், ஒரு செயல் நிறைவேறிவிட்டதா என வினவுவார் காய சித்தி ஆயிற்றா என வினவுவது வழக்கம், சாயுச்சிய நிலை அடையப்பெற்றவரே சித்தர் என்பர். அட்டமா சித்தி முதலிய யோகசித்தி பெற்றவர்களையும் சித்தர்கள் என்று அழைப்பர்.சிலர் சித்துக்கும் சித்தத்ததுக்கும் தொடர்பு காட்டிச் சித்தத் தெளிவுடையாரே சித்தர் என விளக்கம் அளிப்பர்.மரணத்தை வெல்வது சித்தர் பண்பாடு. ஒரு பொருளை இன்னொரு பொருளாக மாற்றுவதும், உறுமாறுவதும் சித்தர் சாதனையில் முக்கியமானவையாகும்.சித்தர்கள் தங்கள் சாதனையை காய சாதனை (தேகத்தை மேம்படுத்துவது) என்றனர்.அதன் முலம் காயசித்தி (தேகத்தை பூரணத்துவம் அடையச் செய்வது) பெறுவது அவர்கள் நோக்கம்.

ஓம் என்ற பிரணவ ஒலி உலகத்தின் முல ஒலி ஆகும். அ. உ. ம். முன்றும் சேர்ந்து ஓம் என்பர்.

அ. சூரியன், உ. சந்திரன், ம். அக்கினி ஒளிமயமான அ நாதம், உ விந்து, ம் கலை, நாத விந்து கலைகளின் தொகுப்பே ஓம் என்றும் கூறுவர்.

அ. கிரியா சக்தி (பிராமி),

உ. இச்சா சக்தி (வைணவி),

ம்.ஞானசக்தி (ரௌத்ரி) என்பது சித்தர் கருத்து.சீக்கிரமே தருமம் செய் கொஞ்சம் திருப்பணிகளும் செய்.என்றார் சித்தர்.அறப்பணியும், இறைபணியும் இறந்தும் இறவாப் பெரு வாழ்வளிக்கும்.உன்னிடம் இல்லை என்று கேட்டு நிற்கும் எளியோரிடம் இருந்தும் இல்லை என்று சொல்லாதே. நாளை வா என்று தள்ளாதே. இருந்தால் அப்போதே கொடுத்துதவு.நலிவுற்றவரை நசித்து வாழ என்னாதே. வஞ்சனை செய்ய முயலாதே. உன்னைத்தஞ்சமென்று வந்தடைந்தவரையே கெடுப்பதற்கு துணியாதே. உன் கண்ணில் பட்டதையும், காதில் விழுந்ததையும் உண்மை என்று கொள்ளாதே.கற்புறைப் பெண்டிர் மீது காமசிந்தை வையாதே. கட்டியவளே என்றாலும் உற்றது சொல்லாதே.

பிள்ளைகளுக்கு அளவுக்கு மீறி இடம் கொடுத்து அவர்களுடைய அலட்சியத்துக்கு உள்ளாகாதே. கொலை, களவு, பொய் விலக்கு, தன்னை வியந்து கொள்கிறவனும் வலுச் சண்டைக்கு நிற்கிறவனும் காணாமல் போவான்.சிந்தித்தால் தெளிவு வரும். சித்தர்களது பாடல்களைப் படித்தால் சிந்தனையும், தெளிவும் சேர்ந்து வரும்.மனிதர்களுக்கு ஐம்புலன்களால் அறியப்படும் அறிவு ஐந்தும், ஆத்மா ஒன்றுமாக ஆறறிவு. மிருகங்களுக்கு

நான்கு அறிவுகளும், சீவனுமாக ஐந்து.பறவைகளுக்கு அறிவு முன்றே. மார்பினால் நகரும் பிராணிகளுக்கு இரண்டு அறிவு. தாவரங்களுக்கு அறிவு ஒன்று என்று ஆராய்ந்து பின் மனித உடலின் சிறப்பை நன்கு உணர்ந்து அதை உலகுக்கு எடுத்துக் காட்டியவர்கள் சித்தர்களே!.எப்பொருள் வடிவும் ஓம் ஆகும்.

“சிந்தையிலே களங்க மற்றார் சித்தன் ஆவான்” (அகத்தியர் நூறு 50)

“சிந்தை தெளிந் திருப்பவன் ஆர் அவனே சித்தன்” (வான்மீகர் சூத்திர ஞானம் 2)

செகமெலாம் சிவமென்றே அறிந்தோன் சித்தன் திறந்துமனத்தெளிவாகிச் சேர்ந்தோன் சித்தன்” (வான்மீகர் சூத்திர ஞானம் 3)

சித்தர்களின் இயல்பு சித்தர்கள் எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான அடிப்படை நெறிகளையே எடுத்துக்கூறியுள்ளனர். சாத்திரக் குப்பையிலும் கோத்திரச் சண்டையிலம் ஈடுபடாமல், மக்களை நன்னெறிப்படுத்த முயன்ற வடநாட்டு நவநாத சித்தர்கள் போலத் தமிழகச் சித்தர்களும் சீர்திருத்தத் கருத்தக்களை வலியுறுத்தி மக்களுக்கு நல்வழி காட்டியுள்ளனர். இராமலிங்க அடிகளர் தெவித்துள்ள மரணமிலாப் பெருவாழ்வு சித்தர்கள் கூறிய நெறியேயாகும். “கூற்றம் குதித்தலும் கைகூடும்” (269) என்னும் வள்ளுவர் கருத்தினை வாழ்க்கையில் நிலைநிறுத்திக் காட்டியவர்கள் இச்சித்தர்கள், இவர்கள் ஊழையும் வெல்லலாம் என்பதற்கான வழி முறைகளைத் தம் பாடல்களின் இயம்பியுள்ளனர்.வைத்தியம், இரசவாதம், ஞானம் மந்திரம் முதலியவை பற்றி எல்லாம் நூல்கள் எழுதியுள்ளனர். மேலும் வானநூல், கணிதம் முதலியவை பற்றிய புலமையையும் இவர்தம் நூல்களில் காணமுடிகிறது. சித்தர் பாடல்கள் பொதுமக்களும் பாடும் வண்ணம் எளிமையான நடையில் அமைந்தவை.

எனினும்அய கருத்துக்கள் அடங்கியவை . கல்லாதவர், கற்றவர் இரு சாராருமே கேட்டு மகிழும் வகையில் அப்பாடல்கள் விளங்குகின்றன. கடவுளரும் சித்தராகக் கருதப்பட்டனர். அவர்தம் செயல்களும் சித்துக்களாக மதிக்கப்பட்டன.

பழினியிலுள்ள முருகன் கோயில் சித்தன் வாழ்வு என அழைக்கப்பெற்றது. எல்லா ஆற்றலும் பெற்றிருப்பவன் ஆதலின் முருகனுக்குச் சித்தன் என்னும் பெயரும் உண்டு. சிவபெருமான் செய்த அருஞ்செயல்களைத் திருவிளையாடற் புராணம் சித்துக்களாகக் குறிப்பிடும். மக்களால் சித்தர்களும் கடவுளராகப் போற்றப்பட்டனர். மூச்சினை யடக்கி யோக ஆற்றலினால் உடலில் உள்ள மூலதாரம், கொப்பூழ், இதயம், இரைப்பையின் நடு, கழுத்து, தலைமுடி என்ற இவ் ஆறு இடங்களிலும் மனத்தை முறையாக நாட்டிக் குண்டலியை எழுப்பிப் பலபல அனுபவமும் வெற்றியும் கண்டு. அப்பாலிலுள்ள எல்லாம் ஆன பொருளில் நிலைத்துச் சித்தி பெறுபவரே சித்தர் என்ற வழக்கம் பரவுயுள்ளது எனப் பன்மொழிப்புலவர் தெ.பொ. மீனாட்சி சுத்தரனார் கலைக்களஞ்சியத்தில் குறிப்பிட்டுள்ளனர்.ஆகம மாகிய இந்த மனித உடம்பிலே தெய்வப் பக்தி கொண்டு இதனுள் அருட்சக்தியை வளர்த்து ஆன்ம பணாமத்தில் மக்களிடையே வானவர்களாகவும், மனித தெய்வங்களாகவும் உலவி அருவாழ்வு வாழ்ந்து அருளை வழங்கி வருகின்ற பெயோர்களே மகான்களே சித்தர்கள், என்று மீ.ப. சோமசுந்தரனார் தம் சித்தர் இலக்கியம் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார் (பகுதி 1 பக்கம் 14) இறையடியார்களுள் பக்தர், பகவர், முனிவர், சித்தர் எனப் பல வகையினர் இருந்தனர் என்பர்,

பெரியாழ்வார் தம் பாசுரத்தில்

மாங்காய்ப் பால்உண்டு மலைமேல் இருப்போருக்குத்

தேங்காய்ப்ப தால் ஏதுக்கடி-குதம்பாய்

தேங்காய்ப்பால் ஏதுக்கடி.

ஞானப் பாலுண்டு தலை உச்சியலே

சிந்தனை கூடி நிலைத்து நிற்கும் ஞானிகளுக்கு உலக இச்சையாகிய பிற இன்பங்கள் வேண்டியதில்லை எனக் குதம்பைச் சித்தன் விளக்கம் அளிக்கிறார்.மாங்காய் என்பது பிரமம், பால் என்பது அதன் அனுபவம், அதாவத ஞானப்பால், தேங்காய்ப்பால் உலக இச்சை, மலை என்பது மேலான சமாதி, இவ்வாறு உள்ளுறைப் பொருள் அமைத்துப் பாடும் பாடல்களைப் பிறிது மொழிதலணி என்று கூறுவர், சித்தர்கள் தம் கொள்கைகளை மறைவாக வைத்துக் கொள்ள குழுஉக் குறியினைப் படைத்துக் கொண்டனர். திருமந்திரத்திலுள்ள சூனிய சம்பாடணை (உரையாடல்) இதற்குச் சயான சான்றாகும்.

அவர்களின் மருத்துவ நூல்களும் இவ்வாறு குழுஉக் குறிகளைப் பயன்படுத்தியுள்ளன. சித்தர் இலக்கியம் சீர்திருத்தம் பேசினாலும் நாத்திகத்தன்மை யுடையதன்று சித்தர்கள் இறைப்பற்று மிகவும் உடையவர்கள். தஹ்நெறி, அட்டாங்கயோகம் முதலியவை கடினமாகத் தோன்றினாலும் அவர்கள் எடுத்துரைக்கும் நெறி சிறந்ததாகும். சயை, கியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நெறியினையும் சித்தர்கள் பின்பற்றியுள்ளனர். சமயப்பொது நோக்கு, சாதி வேறுபாடின்மை. மூடப் பழக்க வழக்கங்களைச் சாடுதல் முதலானவை அவர்தம் பாடல்களில் காணப்பெறும் சீர்திருத்தங்களாகும். மனிதனுக்கு அவனது உடம்பைக் கொண்டு செய்ய வேண்டிய ஞானச் செயலைக் கற்பிக்கும் அனுபவப் பேரறிவுப் பெருநூல் சித்தர் இலக்கியம் எனச் சிறப்பித்துப் பாராட்டுவர் மீ.ப. சோமு. மேலும் அவ்விலக்கியங்கள் அறக்கருத்துக்களை வலியுறுத்தும் என்றும் மனமாசின்றிக் காக்கவும் தீமைகளை நீக்கி நன்மைகளைச் செய்யவும் பல அறச் செய்திகளைக் கூறுகின்றன என்றும் மனிதனை மனிதனாக்குவதற்கு வேண்டிய மனப் பயிற்சி தந்து அவனை மனிதனாக்கிப் பின் வானவராக உயர்த்தும்உயய நோக்கங்கள் கொண்டவை என்றும் விளக்கியுரைத்துள்ளார்.

சித்தர்கள் வெளியில் சென்று கோயில் வழிபாடு செய்ய விரும்புவதில்லை. புறச் சடங்குகளையும் அவர்கள் ஏற்பதில்லை. மனக் கோயில் வழிபாடே அவர்கட்கு முதன்மையானதாகும். யோகமுறை மூச்சடக்கிப் பயிற்சி செய்தல் ஆகியவற்றையே அவர்தம் நூல்கள் வித்துரைக்கின்றன. மன்பதைக்கு வேண்டிய சீர்திருத்தக் கருத்துக்களும் அவர்களுடைய பாடல்களில் மிகுதியாக உள்ளன.

மணிமேகலைத் தொடர்களும் சில சித்துக்களைத் தெவிக்கின்றன. சித்தர்களின் வகையினர், தாயுமானவர், பாம்பாட்டி சித்தர், இராமலிங்க அடிகள் முதலானோர் பாடல்களில் காணப்பெறும் சித்து விளையாடல்கள் பற்றிய செய்திகள், சித்தர் பாடல்கள்வழி அறியப்பெறும் சீர்திருத்தங்கள், சித்தர் பாடல்களில் அமைந்துள்ள யாப்பு வகைகள் முதலானவை பற்றிய செய்திகள் இப்பாடத்தில் விளக்கப்படுகின்றன. சித்தர் என்னும் சொல் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் ஆகியவற்றில் பேசப் பெறாவிடினும், அவரைப்பற்றிய குறிப்புக்கள் இலை மறை காய்போல அவற்றில் காணப்படுகின்றன.தாயுமானவர், பாம்பாட்டிச் சித்தர், இராமலிங்க அடிகள் முதலானோர் தத்தம் பாடல்களில் சித்து விளையாடல்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர்.

தாயுமானவர் மதயானையை அடக்குதல், கரடி புலிகளின் வாயைக் கட்டுதல், சிங்கத்தை முதுகின் மேல் ஏற்றுதல், பாம்பைப் பிடித்தாட்டுதல், ஐந்து உலோகப் பொருள்களையும் விலையுயர்ந்த பொருளாக மாற்றுதல் பிறர் கண்ணிற் படாமல் உலாவுதல், தேவரை அடிமை கொள்ளல், எப்பொழுதும் இளமையோடிருத்தல், பிறர் உடலிற் புகுதல், நீர்மேல் நடத்தல், நெருப்பில் அமர்தல், முதலிய சித்துக்களைத் தம் பாடலில் (தேசோ மயானந்தம் 8)குறிப்பிடுகின்றனர்.

தமிழ்ப்பெயர்கள்:

மாதங்களுக்கும்,நட்சத்திரங்களுக்கும்.

தமிழ்ப்பெயர்கள்: 12 மாதங்களுக்கும்,27 நட்சத்திரங்களுக்கும்

1.சித்திரை ஸ்ரீமேழம்

2.வைகாசி ஸ்ரீவிடை

3.ஆனி ஸ்ரீஆடவை

4.ஆடி ஸ்ரீகடகம்

5.ஆவணி ஸ்ரீமடங்கல்

6.புரட்டாசி ஸ்ரீகன்னி

7.ஐப்பசி ஸ்ரீதுலை

8.கார்த்திகை ஸ்ரீநளி

9.மார்கழி ஸ்ரீசிலை

10.தை ஸ்ரீசுறவம்

11.மாசி ஸ்ரீகும்பம்

12.பங்குனி ஸ்ரீமீனம்

1.அசுபதி - புரவி

2.பரணி - அடுப்பு

3.கார்த்திகை ஸ்ரீ ஆரல்

4.ரோகிணி ஸ்ரீ சகடு

5.மிருகசீரிடம்ஸ்ரீமான்றலை

6.திருவாதிரைஸ்ரீமுதிரை

7.புனர்பூசம் ஸ்ரீகழை

8.பூசம் ஸ்ரீகொடிறு

9.ஆயில்யம் ஸ்ரீஅரவு

10.மகம் ஸ்ரீகொடுநுகம்

11.பூரம் ஸ்ரீகணை

12.உத்திரம் ஸ்ரீஉத்தரம்

13.அஸ்தம் ஸ்ரீகை

14.சித்திரை ஸ்ரீஅனுபை

15.சுவாதி ஸ்ரீவிளக்கு

16.விசாகம் ஸ்ரீமுறம்

17.அனுஷம்ஸ்ரீபனை

18.கேட்டைஸ்ரீதுலங்கொலி

19.மூலம் ஸ்ரீகுருகு

20.பூராடம் ஸ்ரீமுற்குலம்

21.உத்திராடம்ஸ்ரீகடைக்குலம்

22.திருவோணம்ஸ்ரீமுக்கோல்

23.அவிட்டம் ஸ்ரீகாக்கை

24.சதயம் ஸ்ரீசெக்கு

25.பூரட்டாதி ஸ்ரீநாழி

26.உத்திரட்டாதிஸ்ரீமுரசு

27.ரேவதி ஸ்ரீதோணி

இவையனைத்தும் சித்தர்களால் உருவாக்கப்பட்ட பரிபாஷைச் சொற்களாகும்.

இசுலாமிய இல்லக்கியம்

இலக்கிய வரலாற்றை, பரப்பும் காலமும் நோக்கிப் பொருள் நோக்கிலோ கட்டமைப்பு நோக்கிலோ பாகுபாடு செய்து கொண்டு நோக்குவது மரபு. இத்தகைய மரபிற்கேற்ப இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் இக்கால இலக்கியங்கள் என்னும் பிரிவில் அடங்கும் இலக்கியம் பற்றிப் பயில இருக்கின்றோம்.

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் இக்காலத்திற்கு முற்பட்ட காலங்களைப் பற்றியும் அக்கால இலக்கியங்களைப் பற்றியும் சுருக்கமாகக் காண்போம்.

இசுலாமிய இலக்கியங்கள்

இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் பரப்பு ஒன்பது நூற்றாண்டுக் கால வரலாற்றினைக் கொண்டது. இந்நீண்ட நெடும்பரப்பில் காணக்கிடைக்கும் இலக்கியங்களைக் கால வகையில், மூவகையாகப் பாகுபாடு செய்கின்றனர். அவை:

அ) தொடக்கக் கால இலக்கியங்கள்

ஆ) இடைக்கால இலக்கியங்கள்

இ) இக்கால இலக்கியங்கள்

தொடக்கக் கால இலக்கியங்கள்

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் காணக் கிடைக்கும் முதல் நூல் பல்சந்தமாலையாகும். இதன் காலம் கி.பி 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். பல்சந்தமாலைக் காலம் முதல் சீறாப்புராணம் (கி.பி 1703) தாண்டி முப்பது அல்லது நாற்பது ஆண்டுகள் வரையுள்ள இலக்கியங்களைத் தொடக்க கால இலக்கியங்கள் என்பர். குறிப்பாக ஜவ்வாதுப் புலவரின் பிறப்பு (1745) வரை எனலாம். இக்காலத்தில் காப்பியங்களும், சிற்றிலக்கியங்களும், பள்ளு முதலான மக்கட் பிரபந்தங்களும் பல்கிப் பெருகியுள்ளன. இவ்வகை இலக்கியங்கள் யாவும் நபிகள் பெருமானாரையும் நபிக் குடும்பத்தவர்களையும் பாடுபொருளாகக் கொண்டுள்ளன. இஸ்லாமியப் பார்வையில் நபிபிரானும் நபிகளார் குடும்பமும் கண்ணியத்திற்கு உரியவர்கள் ஆவர்.

இடைக்கால இலக்கியங்கள்

கி.பி 17,18ஆம் நூற்றாண்டுகளில் வெளிவந்த இலக்கியங்களை இடைக்கால இலக்கியங்கள் என்பர். இஸ்லாம் சமயச் சான்றோர்களையும் பாடும் வகையில் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு ஒரு திருப்புமுனையைக் கண்டது. இத்திருப்புமுனையைக் காட்டியவர் முகியித்தீன் பிள்ளைத் தமிழ் படைத்த ஜவ்வாதுப் புலவர் ஆவார். இந்நூல் ஆர்க்காடு வாலாஜா முகம்மது அலிகான் (கி.பி 1723 - 1795) அவையில் அரங்கேறியது.

கி.பி 1807 - 1827 வரையுள்ள 20 ஆண்டுக் கால இடைவெளிக்குள் 9 காப்பியங்களை இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தந்துள்ளனர்.

இக்கால இலக்கியங்கள்

கி.பி 19ஆம் நூற்றாண்டு முதல் இன்றைய நாள் வரை வந்துள்ள இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் இக்கால இலக்கியங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன.

இக்காலம் என்பது நீண்ட நெடுங்காலக்கட்டத்தை உள்ளடக்கியது என்பதால், நம்நாடு தன்னாட்சி (1950) பெற்ற காலம் வரை வந்துள்ள இலக்கியங்களை ஐரோப்பியர் ஆட்சிக்கால இலக்கியங்கள் அல்லது விடுதலை வேள்விக் கால இலக்கியங்கள் என்றும் இதற்குப்பின் உள்ள காலங்களில் காணும் இலக்கியங்களை மறுமலர்ச்சிக் கால இலக்கியங்கள் என்றும் பாகுபாடு செய்து கொண்டு மிக நுணுக்கமாகவும் விரிவாகவும் காண்பர். இக்கால இலக்கியங்களைச் செய்யுள், உரைநடை, நாடகம் அறபுத்தமிழ் இலக்கியங்கள் எனப் பாகுபாடு செய்வர். பாட அளவு கருதி இங்குச் செய்யுள், உரைநடை இலக்கியங்கள் பற்றி மட்டும் காண்போம்.

இங்கு ஒரு கருத்தைத் தெளிவாக்க வேண்டும். முந்தைய காலப்பிரிவுகளில் இஸ்லாமியத் தமிழ்ப்புலவர்கள் தமிழுக்கும் இஸ்லாத்திற்கும் தொண்டு செய்யும் வகையில் நூல்களைப் படைத்தனர். இக்கால இஸ்லாமிய எழுத்தாளர்கள் இஸ்லாமிய இலக்கியம் மட்டுமன்றிப் பொதுவாகவும் எழுதி வருகின்றனர். ஆக, இஸ்லாமிய இலக்கியம் என்பதோடு இஸ்லாமியர் தமிழ் இலக்கியம் என்பதையும் சேர்த்தே இங்குப் பார்க்க விருக்கிறோம்.

இசுலாமிய சமயப் பின்புலம் கொண்டோர் இயற்றிய தமிழ் இலக்கியம் இசுலாமியத் தமிழ் இலக்கியம் எனப்படுகிறது. இசுலாமிய சமயம் தொடர்பான தமிழ் இலக்கியங்களே இவ்வாறு சிறப்பாக குறிப்பிடப்படுகின்றன.

தமிழரிடையே இசுலாம்

முதன்மைக் கட்டுரை: தமிழ் முஸ்லீம்கள்

தமிழ்நாட்டு மதுரையை தில்லி சுல்தான் படைகள் 1311 ஆம் ஆண்டு கைப்பெற்றின.ஐ1ஸ விஜயநகரப் பேரரசு இவர்களை 1371 ஆம் ஆண்டு தோற்கடித்தது.ஐ2ஸ தமிழ்நாட்டின் பல பகுதிகளை நவாப்புக்கள் 1690 - 1801 காலப்பகுதியில் ஆட்சி செய்தனர். தமிழ்நாட்டில் இசுலாம் பரவ இசுலாமிய ஆட்சி ஒரு முக்கிய காரணமாகும்.

தமிழ்நாடு, தமிழீழ வணிகர்களுக்கும் அரபிய, மாலாய் முசுலீம் வணிகர்களுக்கும் இடையே பல நூற்றாண்டுகளாக வணிகம் நடந்தது. இவ்வாறு வணிகம் செய்ய வந்த சில அரபிய மாலாய் வணிகர்கள் தமிழ்ப் பெண்களை மணந்து இங்கேயே தங்கினர். இறுகிய சாதிய அமைப்புக் கொண்ட இந்து சமயத்தில் இருந்து விலகி சகோதரத்துவத்தைக் கொள்கையாக கொண்ட இசுலாமிய சமயத்துக்கு குறிப்பிடத்தக்க தமிழர்கள் மதம் மாறினர். இப்படி பல வழிகளில் இசுலாம் தமிழரிடையே பரவியது.

இலக்கியம்

900

திருமெய்ஞானச் சர நூல் - தக்கலை பீர் முகம்மது அப்பா

ஞான மலை வளம் - தக்கலை பீர் முகம்மது அப்பா

ஞான ரத்தினக் குறவஞ்சி - தக்கலை பீர் முகம்மது அப்பா

ஞான மணி மாலை - தக்கலை பீர் முகம்மது அப்பா

ஞானப் புகழ்ச்சி - தக்கலை பீர் முகம்மது அப்பா

ஞானப்பால் - தக்கலை பீர் முகம்மது அப்பா

ஞானப்பூட்டு - தக்கலை பீர் முகம்மது அப்பா

ஞானக்குறம் - தக்கலை பீர் முகம்மது அப்பா

ஞான ஆனந்தகளிப்பு - தக்கலை பீர் முகம்மது அப்பா

ஞான நடனம் - தக்கலை பீர் முகம்மது அப்பா

ஞான மூச்சுடர் பதிகங்கள் - தக்கலை பீர் முகம்மது அப்பா

ஞான விகட சமர்த்து - தக்கலை பீர் முகம்மது அப்பா

ஞானத் திறவு கோல் - தக்கலை பீர் முகம்மது அப்பா

ஞான தித்தி - தக்கலை பீர் முகம்மது அப்பா

1100

பல்சந்த மாலை

1400

யாகோபுச் சித்தர் பாடல்கள் - கிபி 15 நூற்

1500

ஆயிரமசலா - 1572

மிகுராசு மாலை - 1590

1600

நீதம் - 1613

சக்கூன் படைப் போர் - 1686

கனகாபிடோகமாலை - 1648

சீறாப் புராணம்

1700

திருமணக் காட்சி

சின்னசீறா

1800

குத்பு நாயகம்ஸ

முகைதீன் புராணம்

மீதான் மாலை- செய்கு முஸ்தபா

திருமணிமாலை

புதுகுஷ்ஷாம்

தீர் விளக்கம்

நவமணிமாலை

திருக்காரணப்புராணம்

நாகூர்ப் புராணம்

ஆரிபு நாயகம்

இரவு கூகூல் படைப்போர்

சாதுவிநாயகம்

மூசா நபி

அசன்பே சரித்திரம்

1900

பக்திப் பாமாலை - ஜமாலிய்யா செய்யது யாசீன் மௌலான

மஹ்ஜபீன் காவியம் - ஜின்னாஹ் சரீபுத்தீன்

நாயகர் பன்னிரு பாடல். - ஜே.எஸ்.கே.ஏ.ஏ.எச். மௌலானா

அற்புத அகில நாதர் - ஜே.எஸ்.கே.ஏ.ஏ.எச். மௌலானா

இறையருட்பா - ஜே.எஸ்.கே.ஏ.ஏ.எச். மௌலானா

2000

நாயகம் ஒரு காவியம் - மு. மேத்தா

தாகிபிரமம் - ஜே.எஸ்.கே.ஏ.ஏ.எச். மௌலானா

காலம் ?

சேக் பீர்முகம்மது சாகிபு - 20 மேற்பட்ட இசுலாமியத் தமிழ் ஞான இலக்கியங்கள்

மச்சரேகைச் சித்தரின் பேரின்ப சதகம்

சாம் நைனா லெப்பை ஆலிம் - அதபுமாலை

ஆலிப்புலவர் - மிகுராசு மாலை

திருப்பாலைக்குடி செய் தக்காதிப் புலவர் அபூசகுமா மாலை

அனபியா சாகிபு - நபிகள் நாயகம் பிள்ளைத்தமிழ்

அபீபு முகமது லெப்பை - மக்காக் கலம்பகம்

கவிக்களஞ்சியப் புலவர் - நபியதவார அம்மானை

குலாம் காதிறு நாவலர் - குவாலீர் கலம்பகம்

குலாம் காதிறு நாவலர் - புலவராற்றுப்படை

செவத்த மரைக்காயார் - திருமக்காக் கோவை

பெண்புத்திமாலை

நெஞ்சில் நிறைந்த நபிமணி

குணங்குடியார் பாடல்கள்

சீறா கீர்த்தனைகள்

சைத்தூன் கிஸ்ஸா

காசிம் படைப் போர்

இறசூல் மாலை - சாம் சிகாபுத்தீன் வலீ

நூறு மசாலா

நசீகத்து நாமா

இராச மணிமாலை

சம்ஊன் கிஸ்ஸா

விறகு வெட்டியார் கிஸ்ஸா

நான்கு பக்கீர்சா கிஸ்ஸா

தமீமுல் அன்சாரி கிஸ்ஸா

பப்பரத்தி மாலை

தாரு மாலை

மீரான் மாலை

வெள்ளாட்டி மசாலா

முகையத்தீன் ஆண்டகை சத்துரு சங்காரம்

மஸ்தான் சாகிபு பாடல்

தரீக்குல் ஜன்னா

அலி பாத்துசா நாடகம்

இசுலாமிய தமிழ் இலக்கிய வடிவங்கள்

கிசா

முனாசாத்து

நாமா

படைப்போர்

மசாலா

மாலை

கண்ணி

திருமண வாழ்த்து

நொண்டி நாடகம்

புலவர்கள்

உமறுப் புலவர்

சதக்கத்துல்லா அப்பா

அப்துல் காதர் நயினார் லப்பை

பிச்சை இபுராகிம் புலவர்

முகம்மது கான்

அப்துல் மஜீது

முகமது உசேன்

கண்ணகுமது மகதூம் முகம்மது - நூல் பதிப்பாளர், 70 நூல்களுக்கு மேல்

தக்கலை பீர் முகமது அப்பா

கிறிஸ்தவ இலக்கியம்

கிறிஸ்தவ இலக்கியங்கள் என்பது கிறிஸ்தவ மதத்தின் நம்பிக்கைகள், வரலாறு மற்றும் தத்துவங்களைப் பற்றி எழுதப்பட்ட அனைத்து வகையான படைப்புகளையும் குறிக்கிறது. இவை வேத நூல்கள், பக்தி இலக்கியங்கள், கவிதைகள், புனைகதைகள் மற்றும் நாடகங்கள் என பல்வேறு வடிவங்களில் உள்ளன. தமிழ்நாட்டில், ஜி.யு.போப், வீரமாமுனிவர் போன்ற ஐரோப்பிய அறிஞர்கள் மற்றும் வேதநாயகம் பிள்ளை போன்ற தமிழர்கள் கிறிஸ்தவ இலக்கியங்கள் வளர்ச்சிக்கு பங்களித்துள்ளனர்.

கிறிஸ்தவ இலக்கியங்களின் வகைகள்

வேத இலக்கியங்கள்: கிறிஸ்தவத்தின் புனித நூலான பைபிள் மற்றும் அதன் விளக்கங்கள் இதில் அடங்கும்.

பக்தி இலக்கியங்கள்: கிறிஸ்தவ நம்பிக்கைகள், பக்தி, வரலாறு, தத்துவம் ஆகியவற்றைப் பற்றி எழுதப்பட்ட நூல்கள். இவை ஜெபம், தியானம் போன்றவற்றுக்கு உதவும் வகையில் அமைந்துள்ளன.

கவிதை: இயேசு பிரான் பிள்ளைத்தமிழ் போன்ற இயேசுவைப் பற்றி இயற்றப்பட்ட பாடல்கள் மற்றும் பக்திப் பாடல்கள் ஆகியவை இதில் அடங்கும்.

புனைகதை (குஉவழெ): கிறிஸ்தவக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட கதைகள் மற்றும் நாவல்கள் இதில் அடங்கும்.

நாடகம்: கிறிஸ்தவ நிகழ்வுகள், கதைகள் ஆகியவற்றைப் பின்னணியாகக் கொண்ட நாடகங்கள்.

முக்கிய தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்கள்

ஜி.யு.போப்: இவர் தமிழ் இலக்கியங்களுக்கு பல பங்களிப்புகளைச் செய்துள்ளார்.

வீரமாமுனிவர்: இவர் தமிழ் மொழியிலும், கிறிஸ்தவ இலக்கியங்களிலும் குறிப்பிடத்தக்க படைப்புகளை உருவாக்கியுள்ளார்.

வேதநாயகம் பிள்ளை: இவர் பல கிறிஸ்தவ இலக்கிய நூல்களை எழுதியுள்ளார்.

ஆர்.எஸ்.ஜேக்கப்: இவர் தமிழில் கிறிஸ்தவ இலக்கிய இயக்கத்தின் குறிப்பிடத்தக்க ஆளுமைகளில் ஒருவர்.

கிறிஸ்தவ இலக்கியங்களின் முக்கியத்துவம்

கிறிஸ்தவ நம்பிக்கைகளையும், தத்துவங்களையும் பரப்ப உதவுகின்றன.

கிறிஸ்தவ சமூகத்தின் வரலாற்றையும், வளர்ச்சியையும் ஆவணப்படுத்துகின்றன.

பல்வேறு இலக்கிய வடிவங்கள் மூலம் கிறிஸ்தவத்தை மக்களுக்கு எடுத்துரைக்க உதவுகின்றன.

கிறிஸ்துவ இலக்கியம் - மார்ச் 03, 2018

தமிழகம் சங்க காலத்திற்கும் முற்பட்ட காலத்திலிருந்தே யவனர் என்னும் ஐரோப்பபியய நாட்டவருடன் வாணிக உறவு கொண்டு விளங்கியதைச் சங்க இலக்கிகயங்கள் கூறுகின்றன. யவனரைத் தொடர்ந்து இஸ்லாமியர் அரபு நாடுகளிளலிருந்து வாணபம் மசெய்தனர். பிறகு போர்ச்சுகல், டச்சு, ஆங்கிலேயர், டேனிஷ் பிரான்னசு போன்ற பிற ஐரோப்பியய நாபட்டவரும் தமிழகத்திற்கு வந்தனர். வணகத் தொடர்போடு நில்லாமல் சமயயத்தையும் பரப்ப முற்பட்டனர். சமய பிரசாரத்திற்காகக் கிறிஸ்துவ பபாதிரிமமார்களையும்ம உடன் னஅழைத்து வந்தனர். பதிரிமார்கள் கிறிஸ்துவத்தைப் பரப்பும் தொண்டினைச் செய்தனர்.

சங்க காலத்தில் சிறந்திருந்த சைவ வைணவ சமயங்கள் சங்கம் மரவிய காலத்தில் களப்பிரர் வருகையால் சிறப்புக் குன்றிப் போக சமண பௌத்த சமயங்கள் செல்வாக்குப் பெற்றன. மீண்டும் பக்தி இயக்கத்தால் பல்லவர் காலேம்ம முதல் நாயக்கர் காலம் வரை சைவ வைணவ சமயங்களின் செல்வாக்கு மிகுந்திருந்தது. இஸ்லாமியர் ஆட்சியால் இஸ்லாமியம் பரவியது. அடுத்து ஐரோப்பியர் ஆட்சியால் அவர்களின் கிறிஸ்துவம் பரவியது. மதம் மற்றும் ஆட்சி காரணத்தால் நம் மொழியைக் கற்கத் தொடங்கினர். தமிழின் இனிமையில் தம்மை மறந்து தமிழுக்குத் தொண்டாற்றினர். தம்மை அறியாமல் தமிழுக்குத் தொண்டாற்றினர். ஆனனால் மதமாற்றம் செய்யப் பெற்ற கிறிஸ்தவர்கள் அறிந்தே தொண்டு செய்தனர். இவர்களுள் ஜி.யு.போப், ராபர்ட்-டி-நொபிலி, வீரமாமுனிவர், சீகன் பால்கு ஐயர், எல்லீஸ் துரை, கால்டுவெல் போன்ற மேல்நாட்டு கிறிஸ்துவர்களும் வேதநாயகம் பிள்ளை, வேதநாயக சாஸ்திரி, சாமுவேல்பிள்ளை, கிருட்டிணப்பிள்ளை போன்ற தமிழ்க் கிறிஸ்துவர்களும் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

டாக்டர் ஜி.யு.போப்

தமிழை முறையாகக் கற்ற போப் அவர்கள், 60 ஆண்டுகட்கும் மேலாகத் தமிழ்த்தொண்டு புரிந்தார். தனது கல்லறைமேல் நான் ஒரு தமிழ் மாணவன் என்று பொறிக்கப்பட வேண்டும் என விழைந்தவர். ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தமிழாசிரியராகப் பணிபுரிந்து தமிழை உலகறியச் செய்தவர். மேல்நாட்டு அறிவுத் துறைகளான உளநூல், தத்துவ நூல், கணிதம், அளவை நூல் (டுழபஉை) என்பவற்றை முதன் முதலில் தமிழில் கற்பித்தவர் இவரே. திருக்குறள், திருவாசகம், நாலடியார் ஆகியவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். புறநானூறு, புறப்பொருள் வெண்பா மாலை என்ற நூல்களின் சில பாடல்களையும்சிவஞான போதத்தையும் மொழி பெயர்த்தார். பல ஏடுகளில் தமிழ் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதினார். தோடர் மொழி, துளுமொழி கற்று அவற்றின் இலக்கணத்தை வெளியிட்டார். தமிழ் இலக்கணத்தை நுடநஅநவெயசல வுயஅடை புசயஅஅயச என 3 பாகமாக எழுதினார். தமிழ்ப் புலவர்களையும், தமிழ்த் துறவிகளையும் பற்றி ஆங்கிலத்தில் நூல்கள் எழுதினார்.

ராபர்ட் -டி-நொபிலி

இத்தாலி நாட்டில் பிறந்து, 1606இல் தமிழ்நாடு வந்து தமிழும் வடமொழியும் கற்றார் நொபிலி. காவியும் பூணூலும் அணிந்து மரக்கறி உணவுண்டு, தத்துவ போதகர் என்று தம் பெயரை மாற்றி, தம்மை இத்தாலியப் பிராமணர் என்று கூறிக் கொண்டார். நூற்றுக்கணக்கான உயர் சாதி இந்துக்களைக் கிறித்தவராக்கினார். திருமலை நாயக்கரின் நண்பரான பின், சில ஆண்டுகள் கழித்து இலங்கையும் சென்று வந்தார். 1647இல் மயிலாப்பூரில் மறைந்தார்.

‘முதல் உரைநடை நூலை’த் தமிழில் எழுதிய பெருமை இவரையே சாரும். சமயச் சார்புடைய, வடசொல் கலந்த மேனாட்டு மொழி கலந்த ஒரு கொச்சை மொழியில் பல நூல்கள் எழுதினார். அச்சேறாத காரணத்தால் அவை அழிந்தன. பிற மதங்களைக் கண்டிப்பது இவர் காலத்தில் நிலவியதை அறிகிறோம். ஞானோபதேச காண்டம், மந்திர மாலை, ஆத்தும நிர்ணயம், தூஷணதிக்காரம், சத்திய வேத இலட்சணம், சகுண நிவாரணம், பரமசூட்சும அபிப்ராயம், கடவுள் நிர்ணயம், புனர்ஜென்ம ஆட்சேபம், நித்ய ஜீவன சல்லாபம், தத்துவக் கண்ணாடி, ஏசுநாதர் சரித்திரம், தவசுச் சதகம், ஞானதீபிகை, நீதிச்சொல், அநித்திய நித்திய வித்யாசம், பிரபஞ்ச விரோத வித்யாசம் முதலிய 17 நூல்களை இயற்றியுள்ளார்.

வீரமாமுனிவர்

இவரின் இயற்பெயர் - கான்ஸ்டான்டின் ஜோசப் பெஸ்கி உழளெவயவெநெ துழளநிா டீநளஉா). இவர் இயேசு சபையைச் சேர்ந்த குரு ஆவார். கிறித்தவ மதத்தைப் பரப்பும் க்கில், 1709ஆம் ஆண்டு இயேசுசபைப் குருவானபின், 1710 ஆம் ஆண்டு தமிழகத்துக்கு வந்தார். இவர் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் சிறப்பான பணிகளைச் செய்துள்ளார். 23 நூல்களைத் தமிழில் எழுதியதுடன், இயேசுக் கிறித்துவின் வாழ்க்கை தொடர்பான நிகழ்ச்சிகளையும் இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகிய புனித யோசேப்பின் வரலாற்றையும் தமிழ்ப் பண்பாட்டுக்கேற்ப ”தேம்பாவணி” என்ற பெருங்காவியமாக இயற்றியது இவரின் தமிழ்ப் புலமைக்குச் சான்றாக உள்ளது.

சீகன் பால்கு

1682-ம் ஆண்டு ஜெர்மனி நாட்டில் பிறந்தவர் பார்த்தலோமியோஸ் சீகன்பால்கு. இவர் டென்மார்க் நாட்டில் உள்ள திருச்சபை சார்பில், கிறிஸ்தவ மத பிரசாரம் செய்து வந்தார் பொதுமக்கள் உதவியுடன் தமிழ் மொழியை 11 நாளில் கற்றுக் கொண்டார். பின்பு அவர் 17 ஆயிரம் சொற்களை கொண்ட தமிழ் அகராதியை விரைவில் உருவாக்கினார். பிறகு பைபிளின் புதிய ஏற்பாட்டை தமிழில் மொழி பெயர்த்தார்

1710-ம் ஆண்டு ஜெர்மனியிலிருந்து தமிழ் அச்சு இயந்திரம் கொண்டு வர ஏற்பாடு செய்தார். பொறையாறு அருகே ஓர் இடத்தில் காகித பட்டறை நிறுவி, மரக்கூழ் மூலம் காகிதம் செய்யும் தொழிற்சாலையை தொடங்கினார். இன்றும் இந்தப் பகுதி ”கடுதாசிப் பட்டறை” என்றே அழைக்கப்படுகிறது.

1715-ம் ஆண்டு தமிழ் மொழியில் புதிய ஏற்பாட்டை வெளியிட்டார். சீகன் பால்கு முயற்சியால் இந்தியாவில் முதன் முதலில் தமிழ் அச்சுகள் உருவானது, சிறப்பு அம்சமாகும்.

எல்லீஸ் துரை

தமிழ், வடமொழி இரண்டையும் முறையாகக் கற்ற இவர் எல்லீசர் என்றும் அழைக்கப் பெறுகிறார். சென்னையில் வருவாய் வாரியச் செயலராக இருந்து, காணியாட்சி முறையும் வேளாண் சீர்திருத்தமும் கண்டவர். முத்துச்சாமி பிள்ளை என்பவரைக் கொண்டு வீரமாமுனிவரின் நூல்களை எல்லாம் தேடச் செய்தார். வீரமாமுனிவர் வரலாற்றைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதினார். திருக்குறளின் முதல் 13 அதிகாரங்கட்கு முதன்முதலில் உரையெழுதினார். கால்டுவெல்லுக்கு முன்பே, திராவிட மொழிகளைக் கற்றுத் திராவிட மொழிகள் வடமொழியினின்றும் வேறானவை் கிளை மொழிகள் அல்ல் தனித்து இயங்குவன என்ற உண்மைக் கருத்துகளை வெளியிட்டார்.

தமிழ்க் கிறித்தவர்கள்

மேலை நாட்டுக் கிறித்தவர்கள் குறிப்பாக ஐரோப்பியர்கள் ஆற்றிய தமிழ்த் தொண்டைப் போல், தமிழ்நாட்டுக் கிறித்தவர்களும் தம் படைப்பால் தமிழ் இலக்கியத்தை வளப்படுத்தினர்.

- வேதநாயகம் பிள்ளை

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் தமிழ் கற்று மாயூரத்தில் முனிசீப்பாகப் பணியாற்றினார். நீதிச் சட்டங்களை முதன்முதலில் தமிழில் எழுதியவர் இவரே. பிரதாப முதலியார் சரித்திரம் என்ற முதல் தமிழ் நாவலையும் எழுதியவர் இவரே. பின் சுகுண சுந்தரி சரித்திரம் என்ற நாவலும் எழுதினார். கடிதம் எழுவதுபோல் சில தனிப்பாடல்கள் எழுதியுள்ளார். நலுங்குப்பாடல் வகையிலும் அங்கத இலக்கிய வகையிலும் பாடல் புனைந்துள்ளார். சாதிவேறுபாட்டை வெறுத்த இவர், பெண்கள் முன்னேற்றம், பெண்கல்வி என்பதிலும் செய்யுள், உரைநடை என்பதிலும் மகாகவி பாரதிக்கு முன்னோடியாகத் திகழ்கிறார். தாயுமானவரைப் போன்றே சமரசத்தை விரும்பி, சர்வசமயச் சமரசக் கீர்த்தனை பாடினார். நீதி நூல், பெண்மதி மாலை, தேவமாதா அந்தாதி, திருவருள் அந்தாதி, திருவருள் மாலை, பெரியநாயகி அம்மாள் பதிகம், சத்திய வேதக் கீர்த்தனை என்ற நூல்களைப் பாடினார். அக்காலத்தில், வழக்குகளில் அறத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற நேர்மையான எண்ணம் கொண்டவர். இலஞ்சம் வாங்கிப் பிழைப்பவர்களை, 'ஏதுக்கோ வாங்குகிறீர் இலஞ்சம் ....' என்ற பாட்டில் கடுமையாகச் சாடுகிறார். இவர் தம் பாடல்களில் வடமொழிச் சொற்கள் பல சர்வ சாதாரணமாய்க் கலந்து விளங்குகின்றன.

போதக யூரோப்பு மாதர்களைக்கண்டு

பொங்கிப் பொறாமை கொண்டோமே என்றும்

பேதம் இல்லா இந்தியா தனில்நாங்கள்

பிறந்தென்ன லாபம் கண்டோமா

நாதக் கல்விக்கு நகை எந்தமூலையே

நாங்கள் விரும்போம் நவரத்ன மாலையே

வேதநாயகன்செய் பெண்மதி மாலையே

வேண்டினோம் தாரும் விடோம் உங்கள் காலையே

(சர்வசமயச் சமரசக் கீர்த்தனைகள் - வேதநாயகம் பிள்ளை -கேளும் பூமான்களே என்ற 5 - ஆம் பாடல்)

என்று கல்வி வேண்டி ஒரு பெண் பாடுவதாக வேதநாயகம் பிள்ளை பாடியுள்ளார்.

- ர்.யு கிருஷ்ணப் பிள்ளை

வைணவ வேளாளர் மரபில் தோன்றிக் கிறித்துவராக மாறி, கிறித்தவக் கம்பன் என்று புகழப் பெறுபவர். ஜான்பன்யன் என்பவர் எழுதிய "டைபசஅைள "சழபசநளள என்ற நூலை இரட்சண்ய யாத்திரீகம் எனத் தமிழ்ப்படுத்தினார். இவர் பாடல்கள் ஆழ்வார், நாயன்மார் பாடல்கள் போல் உருக்கமாக அமைந்துள்ளன. கிறித்தவர்களின் தேவாரம்என்றழைக்கப் பெறும் இரட்சண்ய மனோகரம் என்ற நூலையும், இரட்சண்ய சமய நிர்ணயம், இரட்சண்யக் குறள், போற்றித் திருஅகவல் என்ற நூலையும் பாடினார். இலக்கணச் சூடாமணி, கிறித்தவரான வரலாறு என்ற உரைநடை நூல்களையும் காவிய தர்ம சங்கிரகம் என்ற தொகுப்பு நூலையும் எழுதினார். கால்டுவெல்லின்பரதகண்ட புராதனம் என்ற நூலையும் வேதமாணிக்க நாடாரின் வேதப் பொருள் அம்மானை என்ற நூலையும் பதிப்பித்தார். பெர்சிவல் பாதிரியாருக்குத் தமிழ் கற்பித்தார் தினவர்த்த மானியின் துணை ஆசிரியராகவும் திகழ்ந்தார்.

- வேதநாயகம் சாத்திரியார்

சரபோசி மன்னரின் ஆஸ்தான வித்துவானாக, அரசவைப் புலவராகத் திகழ்ந்த சாத்திரியார் கிறித்தவப் பாக்கள் பல்லாயிரம் இயற்றி, ஆஸ்தான வித்துவான் பட்டம் பெற்றவர்.

கிறித்தவப் பாடல்களைத் தமிழிசையுடன் இயைத்து இயற்றி முதன் முதலில் வழிகோலியவர் இவரே! வின்சுலோவுடன் இணைந்து குருட்டுவழி என்ற நூலையும், அக்காலத்திலே 100 வராகன் பரிசு பெற்ற நோவாவின் கப்பல் என்ற நூலையும் பாடினார். சரபோசி மன்னர் வேண்டியும் 'கிறித்துவைத் தவிரப் பாடேன்!' என்று கூறியவர். பெத்லகேம் குறவஞ்சி, சென்னைப் பட்டணப் பிரவேசம், ஞான ஏற்றப்பாட்டு, ஞானத்தச்சன் நாடகம், ஞானக் கும்மி, ஆதியானந்தம், பராபரன்மாலை, ஞானஉலா, ஞான அந்தாதி முதலான 52 நூல்களைப் பாடியுள்ளார். தமிழகப் பக்தி நெறிப்படி கர்த்தரை வழிபட வழிகாட்டியவர்.

கிறித்தவ தமிழ் இலக்கியம்

கிறித்தவம் தொடர்பான தமிழ் இலக்கியங்கள் கிறித்தவ தமிழ் இலக்கியங்கள் எனப்படும். கிறித்தவ சமய பின்புலம் கொண்டோர் ஆக்கிய இதர ஆக்கங்களும் கிறித்தவ தமிழ் இலக்கியமாக வகைப்படுத்தப்படுவதுண்டு. பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதி தொடங்கி கிறித்தவ அறிமுகம் தமிழ்நாட்டிலும்,ஈழத்திலும் நிகழ்கிறது. இதைத் தொடர்ந்து தமிழ்நாடும்,ஈழமும் கிறித்தவ ஐரோப்பியரின் குடியேற்றவாத ஆட்சிக்கு உட்படுகின்றன. இக்காலத்தில் சாதிக் கொடுமை, சலுகைகள், சமய ஈடுபாடு போன்ற பல காரணங்களால் தமிழர்கள் பலர் கிறித்தவ சமயத்துக்கு மதம் மாறினர்.

கிறித்தவ தமிழ் இலக்கியத்தில் ஒரு குறிப்பிடத்தக்க பகுதி ஐரோப்பியர்களின் தமிழ்ப் பணிகள் ஆகும். சமயத்தைப் பரப்ப அவர்கள் தமிழை கற்றனர். அச்சுப் பணி, அகராதித் தொகுப்பு, மொழிப் பெயர்ப்பு, பேச்சு இலக்கணத் தொகுப்பு, உரைநடை விருத்தி, இலக்கியப் பங்களிப்பு என பல வழிகளில் இவர்கள் பங்களிப்பைச் செய்துள்ளார்கள்.

தனிப்பாடல்கள்

தமிழ் இலக்கிய வரலாற்றில் தனிப்பாடலுக்குத் தனிச்சிறப்பு உண்டு. பல்வேறு புவலர்களால், பல்வேறு காலங்களில் பாடப்பட்ட பாடல்கள் தொகுக்கப்பட்டுத் தனிப்பாடல் திரட்டு என்று பெயர் பெற்றுள்ளது. தனிப்பாடல் திரட்டில் உள்ள சில புலவர்கள் குறித்துப் பின்வருமாறு காணலாம்.

தனிப்பாடல்கள் என்பவை ஒரு தனிப்பட்ட கவிஞரால் பாடப்பட்ட, குறிப்பிட்ட நிகழ்வு அல்லது கருத்தை மையமாகக் கொண்ட பாடல்களாகும். இவை பெரும்பாலும் தனிப்பாடல் திரட்டு என்ற தொகுப்பில் சேகரிக்கப்பட்டுள்ளன. ஔவையார், ஔவையார் மற்றும் பல கவிஞர்களின் பாடல்கள் இதில் அடங்கும்.

தனிப்பாடல்கள் பற்றி மேலும்

தனிப்பாடல் திரட்டு: இது பல்வேறு காலங்களில் பல்வேறு கவிஞர்களால் இயற்றப்பட்ட தனிப்பாடல்களின் தொகுப்பாகும். இந்தத் தொகுப்பில் பல நூறு பாடல்கள் உள்ளன.

கவிஞர்கள்: ஔவையார், இடைக்காடர், இராம கவிராயர், அம்பிகாபதி, ஔவையார் போன்ற பலர் தனிப்பாடல்கள் இயற்றியுள்ளனர்.

பின்னணி: பல தனிப்பாடல்களின் பின்னணியில் சுவாரஸ்யமான கதைகள் மற்றும் நிகழ்வுகள் உள்ளன. இது அப்பாடல்களைப் புரிந்துகொள்ளவும் ரசிக்கவும் உதவுகிறது.

பயன்பாடு: சங்ககாலப் பாடல்கள் கற்பதற்கும், அப்பாடல்களின் சொற்கள் மற்றும் கருத்துக்களைப் புரிந்துகொள்வதற்கும் தனிப்பாடல்கள் ஒரு நல்ல வழியாகும்.

உதாரணம்: சோழ மன்னன் தன் புலவர்களைக் கொண்டு, "நாளை பொழுது விடிவதற்குள் நாலு கோடி பாடல்கள் பாட வேண்டும்" என்று ஆணையிட்ட கதை, தனிப்பாடல்களுடன் தொடர்புடைய ஒரு சுவாரஸ்யமான நிகழ்வாகும்.

தமிழ் இலக்கியங்களில் ஔவையார் என்ற பெயரில் பல புலவர்கள் காணப்படுகின்றனர். சங்காலத்தில், இடைக்காலத்தில், பிற்காலத்தில் என ஔவையார் பெயரில் இலக்கியங்கள் இருக்கின்றன. தனிப்பாடல் திரட்டில் இவர் பாடியதாக எண்பது பாடல்கள் காணப்படுகின்றன.

காளமேகப் புலவர்

கும்பகோணத்தை அடுத்த நந்திபுரத்தில் பிறந்தவர். இயற்பெயர் வரதன். காலம் கி.பி. 15ஆம் நூற்றாண்டு. இறைவியின் அருளால் காளமேகம் போன்று கவிதைகள் வழங்கியதால் காளமேகப் புலவர் என்று அழைக்கப்படுகின்றார். ஆசு கவி பாடுவதில் (நினைத்தவுடன் பாடுவது) வல்லவர். வசை பாடுவதிலும் வல்லவர். அதனால், "ஆசு கவியால் அகில உலகெங்கும் வீசுபுகழ்க் காளமேகம்" என்று புகழப்பட்டவர். இவருடைய பாடல்கள் நகைச்சுவை மிகுந்தவை. இருநூறுக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். சரசுவதி மாலை, திருவானைக்கா உலா, சித்திர மடல் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

இரட்டைப் புலவர்கள்

இளஞ்சூரியர், முதுசூரியர் என்ற இரட்டையர்களே இரட்டைப் புலவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்களுள் ஒருவர் முடவர், மற்றொருவர் பார்வை அற்றவர். காலம் கி.பி15ஆம் நூற்றாண்டு. "கண்பாயக் கலம்பகத்திற்கு இரட்டையர்கள்" என்று போற்றப்படுகின்றனர். பார்வையற்றவரின் தோளில் முடவர் அமர்ந்து கொண்டு வழிகாட்ட இருவரும் பயணம் செய்வர். பாடல்களில் முதல் இரண்டு அடியை ஒருவர் பாடப் பின்னிரண்டடியை மற்றொருவர் பாடி முடிப்பது இவர்களின் வழக்கமாகும். தில்லைக் கலம்பகம், திருவாமாத்தூர்க் கலம்பகமும், ஏகாம்பரநாதர் உலா, கச்சிக் கலம்பகம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளனர்.

அந்தகக் கவி வீரராகவ முதலியார்

தொண்டை நாட்டில் பொன்விளைந்த களத்தூரில் பிறந்தவர். காலம் கி.பி17ஆம் நூற்றாண்டு. வசை பாடுவதில் வல்லவர். பார்வையற்றவர். சேயூர்க் கலம்பகம், திருக்கழுக்குன்ற மாலை, திருவாரூர் உலா ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

சத்தி முத்தப் புலவர்

கும்பகோணத்தை அடுத்த சத்திமுத்தம் என்ற ஊரில் பிறந்தவர். வறுமையில் வாடிய இப்புலவர் பாண்டிய மன்னன் மாறன் வழுதியிடம் பரிசில் பெறச் சென்றார். மழையில் மாட்டிக் கொண்டு ஒரு குட்டிச் சுவரின் அருகில் ஒதுங்கியிருக்கும்போது நாரை ஒன்று மேலே பறக்கக் கண்டார். தன் மனைவிக்கு நாரையைத் தூதாக அனுப்புவதுபோல் "நாராய் நாராய் செங்கால் நாராய்" என்ற பாடலைப் பாடினார். நகர சோதனையில் ஈடுபட்டிருந்த மாறன் வழுதி இப்பாடலின் உவமைக்கு மகிழ்ந்து, அப்புலவனின் வறுமை தீர்த்ததாகக் கூறப்படுகின்றது.

11வர் வுயுஆஜடு தனிப்பாடல்கள்தனிப்பாடல் என்பது குறிப்பிட்ட நூல் தொகுப்பில் வராமல், தனிப்பட்ட புலவர்களால் அவ்வப்போது இயற்றப்பட்ட பாடல்களாகும். இவற்றைத் திரட்டி, கி.பி. 1862-ல் சந்திரசேகர கவிராஜ பண்டிதர் என்பவர் "தனிப்பாடல் திரட்டு" என்ற நூலாகத் தொகுத்தார். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்ற இலக்கியத் தொகுப்புகளில் இல்லாத, ஆனால் தனித்தன்மையுடன் விளங்கும் பல பாடல்கள் இதில் அடங்கியுள்ளன.

தனிப்பாடல் என்றால் என்ன: தனிப்பட்ட புலவர்கள் குறிப்பிட்ட இலக்கியத் தொகுப்பின் பகுதியாக இல்லாமலும், தனியாகவும் இயற்றிய பாடல்கள் தனிப்பாடல்கள் எனப்படுகின்றன.

தனிப்பாடல் திரட்டு: தனிப்பாடல்களை வெவ்வேறு புலவர்களிடமிருந்து திரட்டி, செய்யுள் வரிசைப்படி தொகுத்து உருவாக்கப்பட்ட நூல் இது.

காலம்: கி.பி. 12 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் வாழ்ந்த புலவர்களின் பாடல்களையும் உள்ளடக்கியது இந்தத் திரட்டு.

தொகுத்தவர்: சந்திரசேகர கவிராஜ பண்டிதர் என்பவர் 1862-ல் இதை அச்சு நூலாக வெளியிட்டார்.

தனிப்பாடல்கள்

ஔவையார் பாடியதாகப் பல தனிப்பாடல்கள் உள்ளன. அவற்றுடன் தொடர்பு உடையவையாகப் பல நிகழ்ச்சிகள் தமிழ்நாட்டில் நிலவுகின்றன. அவை உண்மையா? என்ற ஐயம் ஒருபுறம் இருந்தாலும் அந்த நிகழ்ச்சிகள் சுவை உடையனவாகவும் அறிவுக்கு விருந்து தருவனவாகவும் அமைந்துள்ளன. அவற்றை இங்கே காண்போம்.

நாலு கோடி பாடல்

சோழ மன்னன் ஒருவன் தனது அவைக்களப் புலவர்களை அழைத்து, 'நாளை பொழுது விடிவதற்குள் நீங்கள் நாலு கோடி பாடல்கள் பாட வேண்டும்' என்று ஆணையிட்டான்.

ஓர் இரவுக்குள் நாலு கோடி பாடல்களை எப்படிப் பாடுவது என்று அவைக்களப் புலவர்கள் திகைத்தனர். அப்போது அங்கே ஔவையார் வந்தார் புலவர்களின் கவலைக்கான காரணத்தைக் கேட்டு அறிந்தார். உடனே அவர் புலவர்களைப் பார்த்து, 'இதற்காகவா திகைத்தீர்கள். கவலை வேண்டாம். இப்போதே நாலு கோடி பாடலைப் பாடுகிறேன் மன்னனிடம் சென்று அதைப் பாடுங்கள்' என்று கூறிவிட்டு ஒரே ஒரு பாடலை மட்டும் பாடினார். ஒரு பாடல் எப்படி நாலு கோடி பாடலுக்கு இணையானது ஆகும்? வியப்பாக இருக்கிறதா? இதோ அந்த நாலு கோடி பாடலைப் பாருங்கள்.

மதியாதார் முற்றம் மதித்தொரு கால்சென்று

மிதியாமை கோடி பெறும்

உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் தம்மனையில்

உண்ணாமை கோடி பெறும்

கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு

கூடுதல் கோடி பெறும்

கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைநாக்

கோடாமை கோடி பெறும். (ஔவையார் தனிப் பாடல்:42)

என்பதே அப்பாடல்.

இப்பாடலில் கோடி என்று ஒரு கோடி பொன் குறிப்பிடப் பட்டுள்ளது. இப்பாடலில் ஒவ்வொன்றும் ஒரு கோடி பொன்னுக்கு இணையானவை என்று நான்கு செயல்களை ஔவையார் குறிப்பிட்டுள்ளார்.

1. நல்ல பண்புகளை மதித்து நடக்காதவரை மதித்து அவரது வீட்டின் முன்பகுதியை மிதிக்காமல் இருப்பது, செல்லாமல் இருப்பது கோடி பொன்னுக்கு இணையானது ஆகும். (நம்மை மதிக்காதவரின் வீட்டுக்குச் செல்லாமல் இருப்பது கோடி பொன்னுக்கு இணையானது என்றும் பொருள் கூறுவார்கள்)

2. உண்ணுமாறு விரும்பிக் கேட்டுக் கொள்ளாதவரின் வீட்டில் உண்ணாமல் இருப்பது கோடி பொன்னுக்கு இணையானது ஆகும்.

3. கோடி பொன்னைக் கொடுத்தாவது நல்ல குடும்பத்தில் பிறந்தவர்களுடன் சேர்ந்து வாழ்வது கோடி பொன்னுக்கு இணையானது ஆகும்.

4. பலகோடி பொன் கிடைப்பதாக இருந்தாலும் சொன்ன சொல்லிலிருந்து தவறாமல் வாழ்வது கோடி பொன்னுக்கு இணையானது ஆகும். இப்பாடலில் முதல் இரண்டு கருத்துகளையும் எதிர்மறைப் பொருளில் பாடிய ஔவையார் இறுதி இரண்டு கருத்துகளையும் உடன்பாட்டுப் பொருளில் பாடியுள்ளார்.

நல்ல பண்புகளை மதிக்காதவர் வீட்டுக்குச் செல்லாதே!

விரும்பி உண்ணச் சொல்லாதவரின் வீட்டில் உண்ணாதே!

என்பவை எதிர்மறை ஆகும்.

நல்ல குடும்பத்தினருடன் சேர்ந்து வாழ்!

சொன்ன சொல் தவறாமல் வாழ்!

என்பவை உடன்பாடு ஆகும்.

சுட்ட பழமும் சுடாத பழமும்

ஒரே ஊரில் தொடர்ந்து தங்கி இருக்கும் இயல்பு ஔவையாருக்குக் கிடையாது. அவர் பல ஊர்களுக்குச் சென்று தமது புலமைத் திறத்தால் அறக்கருத்துகளைப் பரப்பி வந்தார்.

ஒருமுறை ஔவையார் ஓர் ஊரிலிருந்து வேறோர் ஊருக்குப் போய்க் கொண்டிருந்தார். அவ்வாறு சென்ற வழியில் ஒரு காடு இருந்தது.

அந்தக் காட்டில் வெயில் அதிகமாகக் காய்ந்து கொண்டிருந்தது. வெயிலில் நடந்து வந்த ஔவையாருக்கு மிகவும் களைப்பாக இருந்தது. அருகில் நின்ற நாவல் மர நிழலில் அவர் அமர்ந்தார்.

அந்த நாவல் மரத்தின் மேல் ஆடு, மாடு மேய்க்கும் சிறுவன் ஒருவன் இருந்தான். நாவல் மர நிழலில் களைப்புடன் இருந்த ஔவையாரை அவன் பார்த்தான்.

‘பாட்டீ....! நீங்கள் மிகவும் சோர்வாக இருக்கிறீர்கள்... நாவல் பழம் சாப்பிடுகிறீர்களா?’ என்று ஔவையாரைப் பார்த்துக் கேட்டான்.

ஆடு, மாடு மேய்க்கும் அந்தச் சிறுவனை ஔவையார் மிகவும் சாதாரணமாகக் கருதினார். எனவே, ‘சரி... அப்பா.... நாவல் பழங்களைப் பறித்துப் போடு!’ என்றார்.

ஔவையாரின் மன ஓட்டத்தைப் புரிந்து கொண்ட அந்தச் சிறுவன் ‘பாட்டீ.... உங்களுக்குச் சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?’ என்று கேட்டான்.

ஔவையாருக்கு ஒன்றும் புரியவில்லை. ‘நாவல் பழத்தில் சுட்ட பழம், சுடாத பழம் என்று எதுவும் கிடையாதே!’ என்று எண்ணினார். என்றாலும் இந்தச் சிறுவனிடம், சுட்ட பழத்திற்கும் சுடாத பழத்திற்கும் விளக்கம் கேட்பது தமது புலமைக்கு இழிவு என்று அவர் கருதினார்.

‘சுட்ட பழமாகவே நீ பறித்துப் போடப்பா.....’ என்று ஔவையார் கூறினார். மரத்தில் இருந்த சிறுவன் நன்கு பழுத்த நாவல் பழங்களைப் பறித்து மண்ணில் வேகமாகப் போட்டான்.

மண்ணில் கிடந்த நாவல் பழங்களை ஔவையார் ஒவ்வொன்றாகக் கையில் எடுத்தார். அவற்றில் நிறைய மண் ஒட்டி இருந்தது. அந்த மண்ணைத் துடைப்பதற்காக ஔவையார் '∴பூ..... ∴பூ' என்று ஊதினார்.

ஔவையார் பழத்தை ஊதுவதை மரத்தின் மேலிருந்த சிறுவன் கண்டான்.

'பாட்டி....! பழம் சுடுகிறதா? நன்றாக ஊதிச் சாப்பிடுங்கள்!' என்று கூறினான்.

அப்போதுதான் ஔவையாருக்குச் 'சுட்ட பழம் எது? சுடாத பழம் எது?' என்பது புரிந்தது. ஆடு மாடு மேய்க்கும் சிறுவன் ஒருவன், தன்னை வென்று விட்டானே என்று வெட்கப்பட்டார். தனது வெட்கத்தை நினைத்து வருந்திய ஔவையார் பின்வரும் பாடலைப் பாடினார்.

கருங்காலிக் கட்டைக்கு நாணாக் கோடாலி

இருங்கதலித் தண்டுக்கும் நாணும் - பெருங்கானில்

கார்எருமை மேய்க்கின்ற காளைக்குநான் தோற்றது

ஈரிரவு துஞ்சாது என்கண்

(கருங்காலிக் கட்டை ஸ்ரீ ஈட்டி மரக்கட்டை, நாணா ஸ்ரீ கலங்காத, கோடாலி ஸ்ரீ கோடரி, கதலித்தண்டு ஸ்ரீ வாழைத்தண்டு,ஈரிரவு ஸ்ரீ இரண்டு இரவு, துஞ்சாது ஸ்ரீ தூங்காது)

கருங்காலிக் கட்டை மிகவும் உறுதியானது. அதை எளிதில் பிளக்கக் கூடிய கோடரி, வாழைத்தண்டை வெட்டும்போது சறுக்கும். அதுபோல நானும் எருமை மாடு மேய்க்கின்ற சிறுவனிடம் தோற்றுவிட்டேன். எனவே இரண்டு இரவுகள் எனக்குத் தூக்கம் வராது என்று வருந்தினார்.

ஆடு, மாடு மேய்ப்பவனாக வேடம் தாங்கி அங்கே இருந்தவன் முருகன் ஆவான். ஔவையாரின் மனவருத்தத்தைப் போக்க அவன் கருதினான். எனவே, அவன் தனது உண்மை வடிவுடன் ஔவையாருக்குக் காட்சி அளித்தான்.

'முருகன்தான் ஆடு, மாடு மேய்ப்பவன் போல் வேடமிட்டு வந்து தனது கர்வத்தைப் போக்கினான்' என்பதை அறிந்த ஔவையார் மனம் தெளிந்தார். முருகனை வணங்கினார்.

கொடியது

முருகனை வணங்கிய ஔவையாரின் மனத்திலிருந்த புலமைக் கர்வம் அகன்றது நெஞ்சில் அமைதி குடி கொண்டது. ஔவையாரைப் பார்த்து முருகன், 'ஔவையே உமது அமுதத் தமிழைக் கேட்கவும் சில ஐயங்களுக்குத் தெளிவு பெறவுமே நான் வந்தேன். எனது ஐயங்களைத் தங்கள் அன்பு மொழியால் போக்குங்கள்' என்றான்.

'முருகா! நீ அறியாதது எதுவும் உண்டா? நீ சாமிநாதனாக இருந்து உன் தந்தைக்கே மந்திரம் சொன்னவன் அப்பா! உனது ஐயத்தைப் போக்கும் பெருமை என் தமிழுக்குக் கிடைக்கட்டும்' என்றார் ஔவையார். அப்போது முருகன் கொடியது, இனியது, பெரியது, அரியது எவை என்று கேட்டான். அதற்கு ஔவையார் விடையாக இந்தப் பாடல்களைப் பாடியுள்ளார்.

கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்

கொடிது கொடிது வறுமை கொடிது

அதனினும் கொடிது இளமையில் வறுமை

அதனினும் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்

அதனினும் கொடிது அன்புஇலாப் பெண்டிர்

அதனினும் கொடிது இன்புற

அவர்கையில் உண்பதுதானே (ஔவையார் தனிப் பாடல் : 54)

இந்த உலகில் மிகவும் கொடுமையானது எது என்றால் வறுமைதான். அந்த வறுமையும் இளமைப் பருவத்தில் வந்தால் மிக மிகக் கொடுமையானது. அத்தகைய வறுமையை விடக் கொடுமையானது தீராத கொடிய நோய் ஆகும்.

தீராத கொடிய நோயைவிடக் கொடுமையானது அன்பே இல்லாத பெண்ணுடன் வாழ்வது. அதைவிடக் கொடுமையானது அந்தப் பெண்ணிடம் உணவைப் பெற்று உண்பது ஆகும் என்று கொடுமையானவற்றுள் எல்லாம் மிகவும் கொடுமையானது அன்பு இல்லாத பெண் இடும் உணவை உண்பதுதான் என ஔவையார் குறிப்பிட்டுள்ளார்.

இனியது

இனியது கேட்கின் தனிநெடு வேலோய்!

இனிது இனிது ஏகாந்தம் இனிது

அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்

அதனினும் இனிது அறிவினர்ச் சேருதல்

அதனினும் இனிது அறிவுள்ளாரைக்

கனவினும் நனவினும் காண்பது தானே! (ஔவையார் தனிப் பாடல்:55)

இந்த உலகில் மிகவும் இனிமையானது எது என்றால், தனிமையில் இருப்பதுதான். அதைவிட இனிமையானது இறைவனை வணங்குவது.

இறைவனை வணங்குவதை விட அறிவு உடையவர்களைச் சேர்ந்து வாழ்வது இனிமையானது. அதைவிட இனிமையானது கனவிலும் நனவிலும் அறிவு உடையவர்களைப் பார்த்துக் கொண்டு இருப்பது ஆகும்.

இப்பாடலில் தனிமை, இறைவனை வணங்குதல் முதலியவற்றை இனிமையானது என்று ஔவையார் தெரிவித்துள்ளார். என்றாலும் இவற்றை விட இனிமையானதாக அறிவுடையாரைப் பார்ப்பதை ஔவையார் கூறியுள்ளார். இதிலிருந்து அறிவுக்கு இருக்கும் மதிப்பை நாம் அறிந்து கொள்ள முடியும்.

பெரியது

பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!

பெரிது பெரிது புவனம் பெரிது

புவனமோ நான்முகன் படைப்பு

நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்

கரிய மாலோ அலைகடல் துயின்றோன்

அலைகடல், குறுமுனி அங்கையில் அடக்கம்

குறுமுனியோ கலசத்தில் பிறந்தோன்

கலசமோ அரவினுக்கு ஒருதலைப் பாரம்

அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்

உமையோ இறைவர் பாகத்து ஒடுக்கம்

இறைவரோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்

தொண்டர் தம்பெருமை சொல்லவும் பெரிதே! (ஔவையார் தனிப் பாடல் : 56)

உலகில் மிகப்பெரியது எது என்று கேட்டால், இந்த உலகம்தான் பெரியது. ஆனால் இந்த உலகமோ நான்முகனால் படைக்கப்பட்டது. எனவே நான்முகன்தான் பெரியவன் என்றால் நான்முகனோ திருமாலின் உந்தியில் (தொப்புள்) தோன்றியவன். எனவே திருமால்தான் பெரியவன் என்றால் திருமாலோ அலைகடலில் தூங்குகிறவன். திருமாலைத் தாங்கும் கடல்தான் பெரியது என்றால், அந்தக் கடலும் அகத்தியனின் உள்ளங்கையில் அடங்கியது. எனவே அகத்தியர்தான் பெரியவர் என்றால், அந்த அகத்தியரும் கலயத்தில் (சிறு மண்குடம்) அடங்கி இருந்தவர். எனவே, கலயம் தான் பெரியது என்றால் அந்தக் கலயமோ இந்தப் பூமியில் உள்ள மண்ணால் செய்யப்பட்டது.

எனவே, பூமிதான் பெரியது என்றால், இந்தப் பூமியை ஆதிசேடன் என்னும் பாம்பு தனது ஒரு தலையில் தாங்கியிருக்கிறது. பூமியைத் தாங்கும் ஆதிசேடன் என்னும் பாம்புதான் பெரியது என்றால் அந்தப் பாம்பை, உமையவள் தனது விரலில் மோதிரமாக அணிந்துள்ளாள். எனவே உமையவள்தான் பெரியவள் என்றால், அந்த உமையவளோ சிவனது உடலின் ஒரு பாதியில் ஒடுங்கியிருக்கிறாள். எனவே சிவன்தான் பெரியவன் என்றால், அந்தச் சிவனோ அடியவர்களின் உள்ளத்தில் ஒடுங்கியிருக்கிறான். எனவே அடியவர்களின் பெருமைதான் உலகில் பெரியது என்று ஔவையார் பாடியுள்ளார்.

, மானிடராகப் பிறப்பது தான் அரியது. மானிடராகப் அரியது

அரியது கேட்கின் வரிவடி வேலோய்

அரிது அரிது மானிடர் ஆதல் அரிது

மானிடர் ஆயினும் கூன் குருடு செவிடு

பேடு நீங்கிப் பிறத்தல் அரிது.

பேடு நீங்கிப் பிறந்த காலையும்

ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது

ஞானமும் கல்வியும் நயந்த காலையும்

தானமும் தவமும் தான்செயல் அரிது

தானமும் தவமும் தான்செய்வராயின்

வானவர் நாடு வழி திறந்திடுமே (ஔவையார் தனிப் பாடல் : 57)

உலகில் மிகவும் அரியது எது என்றால்பிறந்தாலும் கூன், குருடு, செவிடு முதலிய குறைகள் இல்லாமல் பிறத்தல் அரியது. இந்தக் குறைகள் நீங்கிப் பிறந்தாலும் அறிவும் கல்வியும் விரும்பிக் கற்றவனாக ஆதல் அரியது. அறிவும் கல்வியும் பெற்றாலும் பிறருக்குக் கொடுக்கும் ஈகையும் நோன்பும் உடையவராய் இருத்தல் அரியது. ஈகையும் நோன்பும் உடையவராக வாழ்கின்றவர்களுக்கு வான்உலகப் பெருவாழ்வு கிடைக்கும் என்று ஔவையார் பாடியுள்ளார்.

மேலே நீங்கள் பார்த்த ஔவையாரின் நான்கு தனிப்பாடல்களிலும்

நெடிய வெவ்வேலோய்

தனிநெடு வேலோய்

எரிதவழ் வேலோய்

வரி வடிவேலோய்

என்னும் தொடர்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றில் வரும், “வேலோய்“ என்னும் சொல் வேலை உடையவனை அழைக்கும் சொல்லாய் அமைந்துள்ளது. வேலை உடையவன் வேலன். அவனது வேலின் தன்மையை இத்தொடர்கள் விளக்குகின்றன.

அலகு 5

புதினம்

புதினம் அல்லது நாவல் என்பது மக்களால் பரவலாக விரும்பப்படும் ஒரு இலக்கிய வடிவம் ஆகும். சிறுகதையைப்போன்று அல்லாமல் இது நீண்டதாக இருக்கும்.

இதில் வாழ்க்கையும், நிகழ்வுகளும் கற்பனையாக உரைநடையில் எழுதப்படுகின்றன. தற்காலப் பயன்பாட்டில் புதினம், நீளமாக இருத்தல், புனைகதையாக அமைதல், உரைநடையில் எழுதப்படல் போன்ற இயல்புகளால் ஏனைய இலக்கிய வடிவங்களிலிருந்து வேறுபடுத்தப்படுகின்றது. இது பொதுவாக நூல் வடிவில் வெளியிடப்படுகின்றது. எனினும் புதினங்கள் வார, மாத சஞ்சிகைகளில் தொடராக வெளிவருவதும் உண்டு.

நாவல் என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் இலக்கியவடிவம் உரைநடையில் அமைந்த நீள்கதை. இது புத்திலக்கியவகையாக ஐரோப்பாவில் பதினெட்டாம் நூற்றாண்டில் உருவானது. ஆனால் பத்தாம் நூற்றண்டிலேயே சீனாவில் நாவல்கள் இருந்துள்ளன. இது சீனப் பெருநாவல் மரபு எனப்படுகிறது. நாவல் என்பது தமிழில் திசைச்சொல்லாக அப்படியே கையாளப்படுகிறது. புதினம் என்றும் சொல்லப்படுகிறது.

தமிழில் எழுதப்பட்ட முதல் நாவல் 1876 ல் வெளிவந்த பிரதாப முதலியார் சரித்திரம். இது மாயூரம் வேதநாயகம் பிள்ளையால் எழுதப்பட்டதாகும். சில வருடங்களுக்குள் வெளிவந்த பிற இரு நாவல்களும் முன்னோடிகளாக கருதப்படுகின்றன. அவை ராஜம் அய்யர் எழுதிய கமலாம்பாள் சரித்திரம், அ. மாதவையா எழுதிய பத்மாவதி சரித்திரம். ஏறத்தாழ இக்காலத்தில் ஈழ இலக்கியத்தில் முதல் நாவல் உருவானது. சித்தி லெப்பை மரைக்காயர் எழுதிய அசன்பே சரித்திரம் ஈழத்தில் வெளிவந்த முதல் நாவலாகும். 1890 ல் எஸ். இன்னாசித்தம்பி அவர்களால் எழுதப்பட்ட "ஊசோன் பாலந்தை கதை"மற்றும் "மூர் என்பார் எழுதிய "காவலப்பன்" கதை என்பவற்றையே ஈழத்தவர்களின் முதல் நாவல்களாக விவாதிப்பவர்களும் உளர் . தமிழில் நாவல் கலை பெரும் வளர்ச்சியைக் கண்டுவருகிறது. தமிழ்நாவல்களின் வரலாற்றை சிட்டி, சிவபாதசுந்தரம் எழுதிய தமிழ்நாவல் வரலாறு என்ற நூலில் காணலாம்.

தமிழ்ப் புதினத்தின் தோற்றம்

மேனாட்டாரின் வருகைக்குப் பின்னர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழில் புதினம் பிறந்தது. ஆங்கிலக் கல்வியைக் கற்று, ஆங்கிலப் புதினங்களைக் கற்றவர்களே முதல் புதினங்களைப் படைத்தனர். ஆங்கிலக் கல்வி கற்று, நீதிபதியாகப் பணியாற்றிய மாயூரம். ச.வேதநாயகம் பிள்ளை அவர்களே 1889-இல் பிரதாப முதலியார் சரித்திரம் எனும் நாவலை எழுதினார். புதினத்திற்கு எழுதிய ஆங்கில முன்னுரையில்,

'தமிழில் இம்மாதிரி உரைநடை நவீனம், பொதுமக்களுக்கு இதுவரை அளிக்கப்படவில்லை. ஆகையால் இந்நூல் வாசகர்களுக்கு ரசமாகவும், போதனை நிறைந்ததாகவும் இருக்கலாம் எனப் பெருமை கொள்கிறேன்" - என்று குறிப்பிடுகின்றார். வேதநாயகம் பிள்ளையைத் தொடர்ந்து பலர் புதினங்கள் எழுதினர்.

வளர்ச்சிக் காலக் கட்டங்கள்

தமிழ் மொழியின் புதின வரலாற்றை மூன்று காலக் கட்டங்களாகப் பகுப்பர். அவை பின்வருமாறு.

முதற் காலக் கட்டம் (1910க்கு முன்)

மாயூரம் முனிசீப் வேதநாயகம் பிள்ளை, பண்டித எஸ். எம். நடேச சாஸ்திரி, பி. ஆர். ராஜமையர், சு.வை. குருசாமி சர்மா, அ.மாதவையா ஆகியோர் முதற் காலக்கட்டத் தமிழ் நாவல் படைப்பாளிகள் ஆவர்.

இரண்டாம் காலக் கட்டம் (1910-1940)

இக்காலக் கட்டத்தில் வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார், ஆரணி குப்புசாமி முதலியார், ஜே.ஆர். ரங்கராஜு, எஸ். ஜி. ராமானுஜலு நாயுடு, வை.மு. கோதைநாயகி அம்மாள் முதலியோர் நாவல்கள் படைத்தனர்.

மூன்றாம் காலக் கட்டம் (1940 முதல் இன்று வரை)

இக்காலக் கட்டம் கல்கியிலிருந்து தொடங்குகிறது. அகிலன், க. நா. சுப்பிரமணியம், தி. ஜானகிராமன், டாக்டர். மு.வ., அறிஞர் அண்ணா, நா.பார்த்தசாரதி, சுந்தரராமசாமி, ஜெயகாந்தன், கு.ராஜவேலு, லக்ஷ்மி, கலைஞர் கருணாநிதி, விக்கிரமன், இந்திரா பார்த்தசாரதி, நீல. பத்மநாபன், பாலகுமாரன், குமுதினி, அநுத்தமா, ராஜம் கிருஷ்ணன், வாஸந்தி, விமலாரமணி, சிவசங்கரி, இந்துமதி, கிருத்திகா, பாமா, அநுராதா ரமணன், சாண்டில்யன், கோவை. மணிசேகரன் முதலியோர் இக்காலக் கட்ட நாவலாசிரியர்கள் சிலர் ஆவர்.

முன்னோடிகள்

செய்யுள் நூல்களை எல்லாரும் படிக்க முடியாது என்பதை உணர்ந்து, உரைநடை வாயிலாக நல்ல கருத்துகளை உணர்த்த வேண்டும் என்று வேதநாயகம் பிள்ளை ஆர்வம் கொண்டார். அவர் நாவல்கள் வாயிலாகத் தாம் உணர்த்த விரும்பியவற்றைப் படைக்க முன் வந்தார். இவர் முதல் தமிழ் நாவலை எழுதிய பெருமைக்குரியவர் ஆவார்.

மாயூரம் முனிசீப் வேதநாயகம் பிள்ளை

இவர் தமிழ் நாவலின் தந்தை என அழைக்கப்படுபவர். இவர் தமிழின் முதல் புதினமான பிரதாப முதலியார் சரித்திரத்தையும், சுகுண சுந்தரி கதையையும் படைத்தவர். பிரதாப முதலியார் சரித்திரம் அற்புதச் சம்பவங்கள் நிறைந்த ஒன்று. சத்தியபுரி என்னும் கிராமத்திலுள்ள நிலமானியக் குடும்பங்கள் இரண்டின் இணைவு பற்றியது அதன் கதைக் கரு. சாதாரணக் குடும்பக் கதைதான் இது என்றாலும், இடம் பெறுகின்ற நிகழ்ச்சிகள், திடீர் சம்பவங்கள் போன்ற பல அம்சங்களால் துப்பறியும் கதை போலவும், தலைவி ஞானாம்பாள் மாறுவேடத்தில் சென்று அரசாளுதல் முதலியன செய்தலால் வரலாற்றுப் புதினம் போலவும், கிளைக்கதைகள் நீதிக் கருத்துகள் இடம்பெறுதலால் நீதிக்கதை போலவும் அமைந்துள்ளது.

சுகுணசுந்தரி கதை, கதைத்தலைவியை ஓர் அரசன் கவர்ந்து செல்கிறான். தலைவி வழியில் கன்னி மாடத்தில் புகுந்து கொள்கிறாள். அரசன் தேடிக் கண்டுபிடிக்கிறான். அதற்குள் அந்த அரசனுடைய ஆட்சியை அமைச்சன் கைப்பற்ற முயல்கிறான். போராட்டங்கள் வளர்கின்றன. இவரின் முதல் நாவல் சமூக நாவலுக்கு வித்திட்டது என்றால், இவரின் அடுத்த நாவலான சுகுண சுந்தரி கதை வரலாற்று நாவலுக்கு அடிகோலியது எனலாம்.

பண்டித எஸ்.எம். நடேச சாஸ்திரி

இவர், தானவன், தீனதயாளு, மதிகெட்ட மனைவி, திக்கற்ற இரு குழந்தைகள், மாமி கொலுவிருக்கை, தலையணை மந்திரோபதேசம் போன்ற நாவல்களைப் படைத்துள்ளார். இவரை மர்ம நாவலின் முன்னோடி எனலாம்.

பி.ஆர். இராஜம் ஐயர்

1896-ஆம் ஆண்டு இராஜம் ஐயர் கமலாம்பாள் சரித்திரத்தை வெளியிட்டார். இதுவே தமிழில் தோன்றிய முதல் தொடர் கதை. மதுரை மாவட்டம் சிறுகுளத்தில் வாழ்ந்த முத்துசாமி ஐயர் - கமலாம்பாள் தம்பதிகளின் வாழ்வை இது சித்திரிக்கிறது. நகர நாகரிகம் கிராம வாழ்க்கையைப் பாதிக்கும் முறை, கூட்டுக் குடும்பச் சிதைவு, பெண்ணுரிமை முதலிய செய்திகளை இந்த நாவல் உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது.

சுவை குருசாமி சர்மா

இவரது புதினம் பிரேமகலாவதீயம். இக்கதை பிராமணக் குடும்பச் சூழலில் படைக்கப் பெற்றுள்ளது. இப்புதினம் நாட்டுப்புற ஆடல் பாடல்களைப் பதிவு செய்வதாகவும் உள்ளது.

அ. மாதவையா

இவர் பஞ்சாமிர்தம் என்ற மாத இதழ் நடத்தி வந்தார். கோணக் கோபாலன் என்ற புனை பெயரில் கவிதை, கதை, கட்டுரை முதலியன எழுதியுள்ளார். இவரது பத்மாவதி சரித்திரத்தில் பல நிகழ்ச்சிகள் ஒன்றோடு ஒன்று பின்னிக் கிடக்கின்றன. பத்மாவதியின் மேல் அவளுடைய கணவனுக்கு ஏற்படும் ஐயமே நீண்ட சிக்கலாய் வளர்ந்து முடிகிறது. விஜயமார்த்தாண்டம் என்னும் கதையில் நாட்டுக் கோட்டைச் செட்டியார்களும், வழக்கறிஞர்களும், நீதிபதிகளும் பல கோணங்களில் காட்டப்படுகிறார்கள். முத்து மீனாட்சி என்னும் நாவல் அவற்றைவிடப் புதுமை மிகுந்தது புரட்சியானது. இளம் விதவை ஒருத்தி படும் துன்பங்களை அவளே எடுத்துரைக்கும் முறையில் இந்த நாவல் அமைந்துள்ளது.

இவர் கதைக் கருவிலும், கட்டமைப்பிலும் புரட்சி செய்தவர். இவரைக் கைலாசபதி தமிழ்நாட்டின் தாக்கரே எனப் பாராட்டுவார். (தாக்கரே - என்பவர் ஆங்கில நாவல் படைப்பாளர்களுள் குறிப்பிடத்தக்கவர்.)

புதினத்தின் தோற்றமும் வளர்ச்சியும

உரைநடையில் எழுதப்பட்ட நெடுங்கதையை ஆங்கிலேயர் நாவல் என்பர். நாவெல்லஸ் என்ற இலத்தின் சொல்லின் சிதைந்த வடிவமே நாவல் என்பதாகும். தமிழரும் முதலில் இதை நாவல் என்றே அழைத்தனர். பிறகு வடமொழிப்பெயரால் நவீனம் என்றும் அழைத்தனர். பிறகு புதினம் என்று தமிழ்ப்படுத்திக்கொண்டனர். தமிழ் இலக்கிய மரபில் புதினத்துக்கு என தனித்துவமான இடம் உண்டு அதை விரும்பிப் படித்த, படிக்கும் வாசகர்கள் உண்டு. தமிழ்ப்புதினத்தில் ஏற்பட்ட வளர்ச்சிகளை இக்கட்டுரையின் வழிக் காண்போம்.

நாவலின் கட்டமைப்பு

நாவலின் தாயகம் இத்தாலி ஆகும். கதை சூழ்ச்சி, பாத்திரங்கள், உரையாடல் என சிறந்த கட்டமைப்புடன் பொழுதுபோக்கிற்காக மட்டுமின்றி சிறந்த அறக்கருத்தையும் உணர்த்துவதே சிறந்த புதினத்தின் கட்டமைப்பாகும்.

சிறுகதைக்கும் நாவலுக்குமான வேறுபாடு

சிறுகதையே நாவலின் முதல் வளர்ச்சி நிலை என்றும் அதிலிருந்தே நாவல் வளர்ச்சி பெற்றிருக்கவேண்டும் என்றும் ஹட்சன் உரைக்கிறார். சிறுகதை ஒரு சிறிய வட்டத்துக்குள் சுழல்வது. ஆனால் நாவல் மிகப்பெரிய பரப்பளவைக் கொண்டு இயங்குவதாகும். புதினத்தில் நிறைய கதாபாத்திரங்கள், கற்பனைகள், வருணனைகள் வரலாம்.

முதற் காலக் கட்டம் (1910க்கு முன்)

மாயூரம் முனிசீப் வேதநாயகம் பிள்ளை, பண்டித எஸ்.எம்.நடேச சாஸ்திரி, பி.ஆர்.ராஜமையர், சு.வை.குருசாமி சர்மா, அ.மாதவையா ஆகியோர் முதற் காலக்கட்டத் தமிழ் நாவல் படைப்பாளிகள் ஆவர்

இரண்டாம் காலக் கட்டம் (1910-1940)

இக்காலக் கட்டத்தில் வடுவூர் கே.துரைசாமி ஐயங்கார், ஆரணி குப்புசாமி முதலியார், ஜே.ஆர்.ரங்கராஜு, எஸ்.ஜி.ராமானுஜலு நாயுடு, வை.மு.கோதைநாயகி அம்மாள் முதலியோர் நாவல்கள் படைத்தனர்.

மூன்றாம் காலக் கட்டம் (1940 முதல் இன்று வரை)

இக்காலக் கட்டம் கல்கியிலிருந்து தொடங்குகிறது. அகிலன், க.நா. சுப்பிரமணியம், தி.ஜானகிராமன், டாக்டர். மு.வ., அறிஞர்அண்ணா, நா.பார்த்தசாரதி, சுந்தரராமசாமி, ஜெயகாந்தன், கு.ராஜவேலு, லக்ஷ்மி, கலைஞர் கருணாநிதி, விக்கிரமன், இந்திரா பார்த்தசாரதி, நீல.பத்மநாபன், பாலகுமாரன், குமுதினி, அநுத்தமா, ராஜம் கிருஷ்ணன், வாஸந்தி, விமலாரமணி, சிவசங்கரி, இந்துமதி, கிருத்திகா, பாமா, அநுராதா ரமணன், சாண்டில்யன், கோவை. மணிசேகரன் முதலியோர் இக்காலக் கட்ட நாவலாசிரியர்கள் சிலர் ஆவர்.

முதல் மூன்று நாவல்கள்

1. வேதநாயகம் பிள்ளை எழுதிய "பிரதாப முதலியார் சரித்திரம்"

2. இராஜம் ஐயர் எழுதிய "கமலாம்பாள் சரித்திரம்"

3. மாதவையா எழுதிய "பத்மாவதி சரித்திரம்"

நாவல்களின் வகைப்பாடு

நாவல்களை, துப்பறியும் நாவல், சமூக நாவல், வரலாற்று நாவல், மொழிபெயர்ப்பு நாவல், தழுவல் நாவல், வட்டார நாவல் எனப்பல வகைப்படுத்தலாம்.

துப்பறியும் நாவல்

ஆவலைத் தூண்டுவதாகவும், எதிர்பார்ப்பை ஏற்படுத்தது்வதாகவும் இந்நாவல்கள் அமையும். ஆரணி குப்புசாமி முதலியார்,வடுவூர் துரைசாமி ஐயங்கார், தமிழ்வானன், பிடி.சாமி, சுஜாதா, பட்டுக்கோட்டை பிரபாகர், சுபா ஆகியோர் துப்பறியும் நாவல் எழுதிப் புகழ்பெற்றவர்களாவர். இவர்களுள் இராஜேஸ்குமார் அவர்களின் துப்பறியும் நாவல்களைத் தற்போது தொலைக்காட்சிகளில் குறும்படங்களாக எடுத்து ஒளிபரப்பி வருகிறார்கள்.

சமூக நாவல்

காலந்தோறும் மக்கள் எதிர்கொண்ட சிக்கல்களை எதிரொலிப்பன சமூகப் புதினங்களாகும். கொத்தமங்கலம் சுப்பு, ஜெயகாந்தன், நா.பார்த்தசாரதி, மு.வரதராசன், அகிலன் போன்றோர் சமூகப் புதினங்களால் மக்கள் மனதைக் கவர்ந்தவர்களாவர். கல்கியின் அலையோசை, தியாகபூமி, மகுடபதி ஆகிய நாவல்களும், மு.வரதராசன் அவர்களின் கயமை, அகல்விளக்கு, நெஞ்சில் ஒரு முள், கரித்துண்டு ஆகிய நாவல்களும் சமூக நாவல்களுக்குத் தக்க சான்

வரலாற்று நாவல்

நேற்றைய செய்தியே இன்றைய வரலாறு என்பர். தமிழக வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு தமிழ்வரலாற்று நாவல்கள் தோன்றின. கல்கி, சாண்டில்யன், விக்கிரமன், ஜெகசிற்பியன், மு.மேத்தா ஆகியோர் வரலாற்று நாவல்களால் புகழ்பெற்றோராவர். வரலாற்றுப் புதினத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் கல்கி ஆவார். கல்கி எழுதிப் புகழ்பெற்ற வரலாற்றுப் புதினங்களுள் பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன் ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும்

மொழிபெயர்ப்பு நாவல்

சிறந்த பிறமொழி நாவல்களைத் தமிழில் மொழிபெயர்ப்பதை மொழிபெயர்ப்பு நாவல் என அழைத்தனர். காண்டேகரின் மராட்டிய நாவலை கா.ஸ்ரீஸ்ரீ அவர்கள் மொழிபெயர்த்தார், ஒரிய மொழிக் கதைகளைத் தமிழில் மொழிபெயர்த்ததற்காக தமிழ்நாடன் சாகித்திய அகாதமி விருதுபெற்றுள்ளார்.

தழுவல் நாவல்

இவ்வகைப் நாவல்கள் தமிழில் பெரிய வரவேற்பைப் பெறவில்லை. டால்ஸ்டாயின் அன்னாகரினாவைத் தழுவி நாராயண துரைக்கண்ணன் சீமாட்டி கார்த்திகாயினி என்ற நாவலை எழுதினார். ரெயினால்சின் நாவலைத் தழுவி மறைமலையடிகள் குமுதவல்லி என்ற நாவலை எழுதினார்.

வட்டார நாவல்

அந்தந்த வட்டாரப் பேச்சுவழக்குகளையும், பழக்கவழக்கங்களையும் கொண்டு எழுதப்படுவன வட்டார நாவல்களாகும். சூரிய காந்தனின் மானாவாரி மனிதர்கள், தோப்பில் முகமது மீரானின் சாய்வு நாற்காலி ஆகிய நாவல்கள் தக்க சான்றுகளாகும்.

குறுநாவல்

மிக அதிகமான பாத்திரங்களோடு நிறையப் பக்கங்களோடு இல்லாமல் குறைவான பாத்திரங்களைக் கொண்டு, சிறுகதையை விடச் சற்றுப் பெரிதாக அமைந்து விளங்கும் நாவல் குறுநாவலாகும். எம்.வி.வெங்கட்ராமின் 'உயிரின் யாத்திரை', 'இருட்டு', ச.கலியாணராமனின் 'பஞ்சம் பிழைக்க'போன்றவை இதற்குச் சான்றாக அமையும்.

பெரு நாவல்கள்

அளவில் பெரியதாக, மிக அதிகமான பாத்திரங்களுடன் நிகழ்வுகள் அதிகமாக உள்ள நாவல் பெரு நாவலாகும். பெரு நாவல்கள் பல பாகங்களாகக் கூட வெளிவரலாம். தொடக்கக் காலத்தில் பெரிய நாவல்களைக் கல்கி தமிழில் எழுதினார். கல்கியினி பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம் போன்றவை சில பாகங்களாக வெளிவந்த பெருநாவல்களாகும்.

பெண் நாவலாசிரியர்கள்

பெண் நாவலாசிரியர்களுள் இராஜம் கிருஷ்ணன், சிவசங்கரி, இரமணி சந்திரன், இந்துமதி ஆகியோர் சிறந்த பெண் எழுத்தாளர்களாவர்.

இன்றைய சூழலில் நிறையவே பொழுதுபோக்குக் கருவிகள் வந்துவிட்டன. ஆனால் கடந்த காலத்தில் நாவல் வாசித்தல் என்பது மிகப்பெரிய பொழுதுபோக்காக இருந்தது. அந்த வழக்கம் இந்தக் காலத்திலும் தொடர்ந்து வருவது நாவலின் ஆதிக்கத்தை எடுத்தியம்பும்.

உலகின் முதல் புதினம்

உலகின் முதல் புதினம் எது என்பது குறித்து விவாதங்கள் இருந்தாலும், பெரும்பாலும் "தி டேல் ஆ.ஃப் ஜென்ஜி" (வுாந வுயடந ழக புநதெை) என்ற ஜப்பானிய நாவல் முதல் நாவலாகக் கருதப்படுகிறது. இது 11 ஆம் நூற்றாண்டில் முராசாகி ஷிகிபு என்ற பெண்ணால் எழுதப்பட்டது. மேற்கத்திய புதினத்தின் முதல் புத்தகமாக சாமுவேல் ரிச்சட்சனின் "பமிலா" (யஅநடய) என்ற நூல் கருதப்படுகிறது.

உலகின் முதல் புதினம்

"தி டேல் ஆ.ஃப் ஜென்ஜி" (வுாந வுயடந ழக புநதெை):

இது 11 ஆம் நூற்றாண்டில், முராசாகி ஷிகிபு என்ற ஜப்பானிய எழுத்தாளரால் எழுதப்பட்டது.

இது பொதுவாக உலகின் முதல் நாவலாகக் கருதப்படுகிறது.

மேற்கத்திய உலகின் முதல் புதினம்

”பமிலா” (யஅநடய):

இது 1741 இல் சாமுவேல் ரிச்சட்சன் என்பவரால் எழுதப்பட்டது.

இது மேற்கத்திய உலகின் முதல் புதினமாகக் கருதப்படுகிறது.

தமிழ் மொழியின் முதல் புதினம் ”பிரதாப முதலியார் சரித்திரம்”:

இது மாயூரம் வேதநாயகம் பிள்ளையால் 1857 இல் எழுதப்பட்டு 1879 இல் வெளியிடப்பட்டது. இது தமிழ் மொழியின் முதல் உரைநடைப் புதினம் ஆகும்.

வரலாற்றுப் புதினங்கள்

வரலாற்றுப் புதினம் என்பது வரலாற்றில் காணப்பெறும் மாந்தர்களையும், நிகழ்ச்சிகளையும், அதன் பின் புலத்தையும் பயன்படுத்தி ஓரளவு கற்பனை கலந்து படைக்கப்படும் புதின வகையாகும். மேலை நாட்டார் படைத்த வரலாற்று நாவல்களில் வால்டர் ஸ்காட்டு எழுதிய நாவல்களையே பலரும் முன்னோடியாகக் கொள்கின்றனர்.

வரலாற்றுப் புதினம் என்பது ஒரு குறிப்பிட்ட வரலாற்று காலகட்டத்தில் நடந்த நிகழ்வுகளையும், அந்த காலத்தில் வாழ்ந்த மனிதர்களையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்படும் கற்பனைக் கதையாகும். இது வரலாற்றையும் கற்பனையையும் இணைத்து வாசகர்களுக்கு ஒரு சுவாரஸ்யமான கதையை வழங்குகிறது.

வரையறை: வரலாறு உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் புதினம் என்பது கற்பனையான கதை என்பதால், வரலாற்றுப் புதினம் என்பது வரலாற்றை பின்னணியாகக் கொண்டு, கற்பனையான கதாபாத்திரங்கள் மற்றும் நிகழ்வுகளைக் கலந்து எழுதப்படும் கதை வடிவமாகும்.

முக்கியத்துவம்: தமிழ்நாட்டில் பல புகழ்பெற்ற எழுத்தாளர்கள் வரலாற்றுப் புதினங்களை எழுதியுள்ளனர். தமிழ் வரலாற்றுப் புதினங்கள், பெரும்பாலும் 20 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டவை.

உதாரணங்கள்:

கல்கியின் புதினங்கள்

சந்திலியன் எழுதிய புதினங்கள்

”ஜலதீபம்”

”சித்தரஞ்சனி”

”மாறவர்மன் காதலி”

”பராந்தகன் மகள்”

”வல்லத்து இளவரசி”

வரலாற்றுக் கற்பனை

கற்பனைப் படைப்பின் தாக்கம் மிகமிக வரலாற்றுக் கற்பனை நாவல்களே மிகுந்த அளவில் தோன்றியுள்ளன. வரலாற்று நாவல்கள் என்பன நடப்பு நிலையைத் தவிர்ப்பதில்லை. பழங்கால நிகழ்ச்சிகள் தற்கால நிகழ்ச்சிகளுடன் ஏதாவது ஒரு வகையில் தொடர்புடையனவாக இருக்கும். வரலாற்றுப் புதினங்களில் புனைநிலை மாந்தரே சிறப்பான இடம் பெறுவர்.

முன்னோடிகளும் பிறரும்

வரலாற்று நாவல்களில் மக்களுக்கு ஒரு பற்றை ஏற்படுத்தியவர் கல்கி. வரலாற்று நாவல்களைச் சிறப்பாக எழுதிப் பிற்காலச் சந்ததியினருக்கு முன்னோடியாகத் திகழ்ந்த இவரை வரலாற்று நாவல் துறையின் தந்தை எனலாம். பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன் என்பன இவரது படைப்புகள்.

சிவகாமியின் சபதம் பல்லவர் காலத்தின் பெருமையைப் பறை சாற்றும். இப்புதினத்தில் இடம் பெறும் சிவகாமி, வாசகர் நெஞ்சில் நிலையான இடத்தைப் பெற்றுவிட்ட கதாபாத்திரமாகும். இன்றும் மாமல்லபுரத்துச் சிற்பங்களைப் பார்க்கும் பொழுது ஆயனரும், அவர் மகள் சிவகாமியும் கண் முன் நடமாடி மகிழ்வூட்டக் காணலாம். அடுத்து இராசராச சோழனின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு பொன்னியின் செல்வன் என்ற புதினத்தை உருவாக்கினார். இதில் வரும் நந்தினி பாத்திரம் தனிச் சிறப்பு வாய்ந்தது.

சாண்டில்யன் குமுதம் பத்திரிகை மூலம் பல புதினங்கள் எழுதி எண்ணற்ற வாசகர்களையும் பெற்றார். இவரது மலைவாசல், ராஜமுத்திரை, யவனராணி, கடல் புறா ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவரின் ராபர்ட்கிளைவ் பற்றிக் கூறும் ராஜபேரிகை என்ற புதினம் வங்க மாநிலப் பரிசு பெற்றது.

கலைஞர் மு.கருணாநிதியின் ரோமாபுரிப்பாண்டியன், தென்பாண்டிச் சிங்கம் இரண்டும் குறிப்பிடத்தக்கவை. தமிழகத்தின் தொடக்கக் கால வரலாற்றை ரோம் நாட்டு அகஸ்டஸ் கால வரலாற்றோடு இணைக்கும் முயற்சியில் இவர் ரோமாபுரிப் பாண்டியனைப் படைத்துள்ளார். வணிகத் தொடர்பால் இரு நாட்டின் உறவு பெருகியதைப் பல இலக்கியச்சான்றுகள் தங்க நாணயங்கள், புதைபொருள் சான்றுகள் உறுதி செய்கின்றன. கி.மு. 20ஆம் ஆண்டினைத் தொடக்கமாகக் கொண்டு கதை தொடங்குகிறது. மேத்தாவின் சோழநிலா, பூவண்ணனின் காந்தளூர்ச்சாலை, கொல்லிமலைச் செல்வி அரு.ராமநாதனின் வீரபாண்டியன் மனைவி, நா.பார்த்தசாரதியின் பாண்டிமாதேவி, மணி பல்லவம் ஆகியவை சிறப்பு வாய்ந்த தரமான புதினங்களாகும்.

தமிழ் வரலாற்றுப் புதினங்களின் பட்டியல்

தமிழ் வரலாற்றுப் புதினங்களின் பட்டியல், தமிழில் எழுதப்பட்டு வெளிவந்த வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட புதினங்களின் பட்டியல் ஆகும். இவற்றுள் மிகப் பெரும்பாலானவை 20 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டவை. இப் பட்டியலில் புதினங்களின் தலைப்புக்களும், அவற்றை எழுதியோரின் பெயரும் தரப்பட்டுள்ளன. இது ஒரு முழுமையான பட்டியல் அல்ல.

வேதநாயகம் பிள்ளை

பிரதாப முதலியார் சரித்திரம் (1878)

அகிலன்

கயல்விழி

வெற்றித் திருநகர்

வேங்கையின் மைந்தன்

இ. பாலகிருஷ்ண நாயுடு

டணாயக்கன் கோட்டை - (1956)

கி. வா. ஜகந்நாதன்

கரிகால் வளவன்

த. சரவணமுத்துப்பிள்ளை

மோகனாங்கி - (1895)

நாகரத்தினம் கிருஷ்ணா

நீலக்கடல்

வி. ச. காண்டேகர்

யயாதி

வி. அசோக்குமார்

அமோகவர்ஷன்

அண்ணா

இரும்பாரம்

இரும்பு முள்வேலி

கலிங்க ராணி

கே. அண்ணாமலை

செஞ்சித் தளபதி

எம். அண்ணாமலை

குருதிச் சோறு

கருப்பூர் எம். அண்ணாமலை

பல்லவன் பாவை

அமுதா கணேசன்

தஞ்சை இளவரசி

பொன் மயிலின் கதை

அய்க்கண்

அதியமான் காதலி

இளவெயினி

ஊர்மிளை

கரிகாலன் கனவு

நெய்தலில் பூத்த குறிஞ்சி

நெல்லிக்கனி

அரசு

கோப்பெருஞ்சோழர்

அரசுமணி

பல்லவர் கதைகள்

அருண்

நீலமலை இளவரசி

அருளர்

லங்கா ராணி

அருளர் நம்பி

மன்னர்கள் வாழ்வில் சுவையான கதைகள்

மூன்றாம் நந்திவர்மன்

தி. நா. அறிவு ஒளி

கயல்விழி

அனுஷா வெங்கடேஷ்

காஞ்சித் தாரகை

காவிரி மைந்தன்

தில்லையில் ஒரு கொள்ளைக்காரன்

ஆர்.வி.

ஆதித்தனின் காதல்

செங்கமலவல்லி

இருளில் ஒரு தாரகை (களப்பிரர் பின்னணி)

ஆர்த்தி

பாரி வள்ளல்

ஆழியான்

இலங்கை வேந்தன் எல்லாளன்

கடல் கோட்டை

கந்தவேள் கோட்டம்

குவேனி

நந்திக்கடல்

நாகநாட்டு இளவரசி

ஆறுமுகம் சுப்பு

மகாராணியின் சபதம்

ஆனந்த் ஆதீஷ்

ஸ்வராஜ்யம் கண்ட அறுந்திறல் வீரன்

இடைப்பாடி அமுதன்

எழுகரை சூர்யகாங்கேயன்

இந்திரா சுப்பிரமணியம்

பாரசீக பேரழகி

மகுடம் கண்ட தென்னவன்

யாதவ ராணி

ராசசிம்மன்

வீரத்திருமகள்

இந்திரா சௌந்தரராஜன்

சேது நாட்டு வேங்கை

சேது நாட்டு வேங்கை

பாண்டிய நாயகி

துரை அரசி

விக்ரமா விக்ரமா

வைகை வனசுந்தரி

இந்து சுந்தரேசன்

இதய ரோஜா

இருபதாவது இல்லத்தரசி

இராதா மணாளன்

அரண்மனை அழகிகள்

இளவரசி

பாண்டியன் திருமேனி

மறவர் குலத்து மலர்க்கொடி

டி.என். இராமச்சந்திரன்

தென்னகப் பேரரசி

வெற்றிதிருநகரின் வீரசிற்பிகள்

இராஜப்ரியன்

காதல் முற்றுகை

இராஜா பாலசந்தர்

நந்திக்கொடி

இருகூரன்

அபரஞ்சி மகள்

எம்.இருதயராஜ்

மா மதுரை பேரரசி

வேள் பாரி

இலசை மணியன்

வம்ச மணி தீபிகை

இளங்காவின்

கடற்கரைக் காவியம்

சோழ மாதேவி

சோழர்குலச்செல்வி

விடுதலை வீரர் மருது பாண்டியர்கள்

வெற்றித்திருமகள்ஸ

இளவரசன்

கிரேக்க நாயகி

காவியக் கனவு

உதயணன்

ஆபுத்திரன்

கடல்கோட்டை

சமுத்திர கோஷம்

சிங்களப் புயல்

சோழ குலாந்தகன்

பரிமேளழகன்

பாண்டிய முரசு

மகாவம்சம்

மயில் கோட்டை

மயில்நிற மங்கை

மானவர்மன்

மௌரிய புயல்

விஷ்ணு பல்லவன்

வெற்றி வேந்தன்

வேள்வித்தூண்

ஸ்ரீ முகன்

எச். நெல்லையா

சந்திரவதனா அல்லது காதலின் வெற்றி - (1934-1935)

எழிலன்

ஆர்ய மலை

எஸ். கூடலிங்கப் பிள்ளை

மங்கம்மாள் - (1903)

எஸ்.எல்,.எஸ்.

புவனமோகினி

எஸ். எஸ். தென்னரசு

கோபுர கலசம்

எஸ். பாலசுப்ரமணியன்

சந்திரவதனா (நாவல் நான்கு பாகம்)

பொன் அந்தி (மருதநாயகம்)

வி. எஸ். கண்டேகர்

யயாதி

கண்ணதாசன்

ஆயிரம் தீவு அங்கயற்கண்ணி

ஊமையன் கோட்டை

கடல் கொண்ட தென்னாடு

சேரமான் காதலி

பாரி மலைக்கொடி

கண்ணன் எஸ் ∴ கண்ணபிரான்

கடல் சிலந்தி

மதுரையை மீட்ட சேதுபதி

மாயபண்டியன் மகள்

ரோமபுரி வணிகர்கள்

களப்பிறரை வென்ற காவலன்ஸ

கண்ணன் கிருஷ்ணன்

செப்பேடு தந்த செம்மல்கள்

சோழ வளநாட்டின் சூரியன்

கண்ணன் மகேஷ்

கந்தர்வா

நீலமதியின் காதல்

பி. சி. கணேசன்

நனவோடை புதினம்

நனவோடை புதினம் என்பது ஒரு இலக்கிய உத்தி ஆகும், இதில் கதைமாந்தர்களின் எண்ணங்கள், நினைவுகள், மற்றும் அடிமன ஓட்டங்கள் அவர்களின் கடந்தகால நிகழ்வுகளுடன் கலந்து, கால வரிசையை மாற்றி அமைக்கப்பட்டு சொல்லப்படுகின்றன. இந்த உத்தி, வாசகர்களை கதைமாந்தர்களின் மன உலகத்திற்குள் அழைத்துச் சென்று, அவர்களின் பண்புகளையும் அனுபவங்களையும் ஆழமாகப் புரிந்துகொள்ள உதவுகிறது.

நனவோடை புதினத்தின் அம்சங்கள்:

கால வரிசை மாற்றம்: கதை நிகழும் நேரத்தை மாற்றி, கடந்தகால நினைவுகளையும் எதிர்கால எண்ணங்களையும் கலந்து சொல்லும்.

கதைமாந்தர்களின் மன ஓட்டம்: கதாபாத்திரங்களின் எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் நினைவுகள் நேரடியாக வெளிப்படுத்தப்படும்.

உளவியல் சித்தரிப்பு: கதாபாத்திரங்களின் மன ஓட்டங்களின் மூலம் அவர்களின் உளவியல் நிலைகளை நுட்பமாக வெளிப்படுத்தும்.

நேரடி அனுபவம்: கதையைப் படிப்பவருக்கு, ஒரு கதாபாத்திரத்தின் அனுபவங்களை அப்படியே உணரும் தன்மையை அளிக்கும்.

இந்த உத்தியின் பயன்பாடு:

நனவோடை உத்தியை பல நவீனப் புதினங்களும் சிறுகதைகளும் பயன்படுத்துகின்றன.

இது கதாபாத்திரங்களை மேலும் யதார்த்தமாகவும், வாசகர்களுக்கு நெருக்கமாகவும் உணர வைக்கிறது.

இந்த உத்தியைக் கொண்டு, கதைமாந்தர்களின் செயல்களுக்கான காரணங்களையும், அவர்களின் உள்மனப் போராட்டங்களையும் வாசகர்கள் புரிந்துகொள்ள முடியும்.

உத்திகள்

வாசகன் புதினத்தைச் சுவைபடப் படித்து மகிழும் வகையில் பல உத்திகளைப் படைப்பாளன் கையாள்வான். அதில் குறிப்பிடத்தக்கது நனவோடை உத்தி.

நனவோடை உத்தி (ளுவசநயஅ ழக உழளெஉழைரளநெளள)

நனவோடை என்ற புதிய உத்தி மூலம் பாத்திரப் பண்புகள் சித்தரிக்கப்படுவதைப் புதினங்களில் காண முடிகிறது. உள்மனத்திலிருந்து, ஒன்றிலிருந்து ஒன்றும், அதிலிருந்து மற்றொன்றும் தொடர்ந்து எழுவதாக எண்ணங்களை அமைக்கும் முறையே நனவோடை முறையாகும். இவ்வெண்ணங்களிடையே பொருத்தம் இருக்காது. உள்மனத்தினின்று எண்ணங்களை அவை எழும் முறையிலேயே அமைப்பதே நனவோடைப் புதினத்தின் உத்தியாகும்.

இரண்டு வகையில் காலத்தையும், இடத்தையும் கடந்தவர்களாகப் பாத்திரத்தைப் படைக்க இந்த உத்தி பயன்படுகிறது. உடலின் உள்ளுறுப்புகளை எக்ஸ்ரே படம் புலப்படுத்துவது போல, மனத்தின் உள்நிலையை நனவோடைப் புதினங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

ஜேம்ஸ் ஜாய்ஸ் என்பவர் (துயஅநள துழலஉந) எழுதிய யூலிசெஸ் (ருடலளளநள) என்ற ஆங்கிலப் புதினம் மிகச் சிறந்த நனவோடைப் புதினமாகப் போற்றப் பெறுகிறது.

தமிழ் நாவல்களில் சி.சு. செல்லப்பாவின் ஜீவனாம்சம், லா. ச. ராவின் புத்ர, அபிதா, நீல. பத்மநாபனின் உறவுகள் போன்ற படைப்புகள் நனவோடை உத்தியில் அமைந்தவை.

க.நா.சுப்பிரமணியத்தின் அசுரகணம் விசித்திரப் பாங்கு நிறைந்த ஒருமனிதனின் மனப்பிரமையை அழகுறச் சொல்கிறது. ஹேமா என்ற பெண்ணின் தாயைக் காணும்போது, அவள் நிழலிலே சூர்ப்பனகை ஒளிந்திருப்பதாக நினைப்பதும், அவளைத் தானே தன் கையால் கொலை செய்து விட்டதாக அஞ்சுவதும் வேடிக்கையாக இருக்கிறது. சம்பவங்களோ, அவற்றின் நிழல்களோ கூடத் தெரியாமல் கதாநாயகனின் உள்ள நிழல்களை மட்டுமே வார்த்தைகளில் சொல்ல முயன்றுள்ளார் ஆசிரியர்.

ஜெயகாந்தனின் ரிஷி மூலம் என்ற குறுநாவல் ராஜாராமனுக்கு அவன் தாய் சாரதா மீது ஏற்பட்ட பால்கவர்ச்சியைப் பேசுகிறது. மனநோயாளியான ராஜாராமனின் அடிமனச் சலனங்களை ஜெயகாந்தன் திறம்படக் காட்டுகிறார்.

நாவல் எழுதும்போது பல்வேறு வகையான உத்திகளைக் கையாளுகின்றனர். அவற்றில் குறிப்பிடத்தக்கவை கதை கூறும் உத்தி, கடித உத்தி, நனவோடை உத்தி ஆகியன.

கதை கூறும் உத்தி

நாவலில் கதை சொல்லுதல் என்பது ஒரு கலையாகும். பழைய காலத்தில் கதை கூறுதல் என்பது 'ஒரே ஒரு ஊரிலே' என்று தொடங்கும். கதையில் வரும் நிகழ்ச்சியினை வரிசைப்படுத்தி, சுவைபடக் கூறுவது வழக்கம். இந்தக் கதை கூறும் முறை சில காலங்களுக்கு வெற்றிகரமாக நிகழ்ந்தது. பிறகு இந்த முறையில் சலிப்பு ஏற்பட்ட பொழுது புதிய முறைகளை எழுத்தாளர்கள் கையாளத் தொடங்கினர்.

கதை நல்ல முறையில் எழுதப்படவும், வாசகர்களைக் கதைக்குள் முழுமையாகக் கவர்ந்திழுக்கவும் சில உத்திகளை நாவலாசிரியர் பின்பற்றுவர். அந்த உத்திகளுக்குக் கதை கூறும் உத்தி என்று பெயர். இதனைக் கதை கூறும் முறை என்றும் கூறுவர்.

கதை கூறும் முறையை

1. ஆசிரியரே கதை கூறல்

2. கதை மாந்தர் கதை கூறல்

என்று பிரிக்கலாம்.

1. ஆசிரியரே கதை கூறல்

ஆசிரியரே கதை கூறும் முறையை எடுத்துரை உத்தி என்றும் கூறுவர். அதாவது ஆசிரியர் கதையைத் தானே எடுத்துரைக்கும் முறையில் கதை கூறுவது ஆகும். ஆசிரியர் தனியே படர்க்கை நிலையில் நின்று, தான் ஒவ்வொரு நிகழ்வையும் அருகே இருந்து பார்ப்பது போல் கதையைக் கூறிச் சொல்லும் முறை. கதையை ஒருவர் சொல்ல இன்னொருவர் கேட்பது போல இம்முறை இருக்கும். எழுத்தாளர் கதை கூறுபவர் வாசகர் கதையைக் கேட்பவர். தமிழில் பெரும்பாலான நாவல்கள் இம்முறையில் அமைந்தவை. இவ்வாறு கதையைக் கூறிச் செல்வதில் கல்கி மிகச் சிறந்தவர் ஆவார். கல்கியின் பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம் போன்ற நாவல்கள் இம்முறையில் புகழ் பெற்றவை. நாவல் எழுதும் படைப்பாளி இந்த முறையில் எழுதினால் தான் சொல்ல நினைக்கும் ஒவ்வொரு சிறு நிகழ்ச்சியையும் விடாமல் மிகச் சிறப்பாக வருணிக்கலாம்.

2. கதைமாந்தர் கதை கூறல்

நாவலில் வருகின்ற தலைமை மாந்தர்கள், இன்றியமையா மாந்தர்கள் ஆகியோர் தாம் அனுபவித்த, தாம் கண்ட நிகழ்வுகளை ஒரு செய்தியாகக் கூறி வருவர். பாத்திரத்தின் பெயரைத் தலைப்பாகக் கொண்டு அந்தந்த அத்தியாயம் தொடங்கும். தலைப்பாக இருக்கும் பாத்திரம் தானே தன்னை 'நான்' எனக் கூறிக்கொண்டு கதையைச் சொல்லத் தொடங்கும். அப்படிக் கூறுவதால் நாவலாசிரியனின் இடையீடு இருக்காது. நாவலின் சம்பவங்களைக் கூறும்போது கதை சொல்லும் பாத்திரம் தான் கண்ட, கேட்ட அனுபவித்த செய்திகளை மட்டும்தான் கூற முடியும். இன்னொரு பாத்திரம் தான் கண்ட, கேட்ட, அனுபவித்த செய்திகளைக் கூறும். இவற்றை இணைத்துக் கொண்டு கதை அமையும். இவ்வாறு, நாவல்களை எழுதிப் பார்த்தவர்களிலே மு.வரதராசனார் முக்கியமானவர்.

கதையில் வரும் ஒரு பாத்திரம் மட்டுமே கதை கூறுவதாக நிறைய நாவல்கள் வெளிவந்துள்ளன. தமிழில் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரம் நாவலில் கதைத் தலைவரான பிரதாப முதலியாரே கதையைக் கூறிச் செல்கிறார்.

மு.வரதராசனாரின் அகல்விளக்கு நாவலில் வேலன் என்ற ஒரு பாத்திரமே கதை முழுவதையும் சொல்கிறது. மு.வரதராசனாரின் மற்றுமொரு நாவலாகிய வாடாமலர் நாவலில் குழந்தைவேல் என்ற கதைத் தலைவனே கதை முழுவதையும் கூறுகிறான்.

இவ்வாறு, கதை மாந்தரே கதை கூறுவதால் கதை நிகழ்வுகளில் சில நேரங்களில் சலிப்பு ஏற்படுவதும் உண்டு.

1. கடிதம் மூலம் கதை கூறல்

கடிதம் மூலம் கதை கூறல் என்பது ஒரு வேறுபட்ட உத்தியாகும். இம்முறையில் பாத்திரங்கள் தமக்குள் எழுதும் கடிதங்கள் மூலம் கதை நகரத் தொடங்கும்.

தனித்தமிழ் இயக்க முன்னோடியான மறைமலையடிகள் இந்த உத்திமுறையில் கோகிலாம்பாள் கடிதங்கள் என்ற நாவலை எழுதினார். இந்நாவலில் பதினேழு கடிதங்கள் உள்ளன. மனித இயல்பை ஆசிரியர் பாத்திரங்களுக்கிடையே கடிதங்களின் மூலம் எழுதியுள்ளார்.

கோகிலாம்பாள் கடிதங்கள் எனும் நாவல், கோகிலாம்பாள் தன் தலைவனுக்கு எழுதிய கடிதங்கள் வாயிலாகக் கதை சொல்கிறது. தன்மை முறையில் கூறப்படும் நாவலைப் போல இம்முறையும் தன்மை முறையிலேயே அமையும்.

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை, ராஜி என்ற தம் நாவலில் கதைத் தலைவன் நாணு கதைத் தலைவி ராஜிக்கு எழுதும் கடிதங்களும் கடிதம் மூலம் கதை கூறும் உத்திக்குச் சான்றாகும்.

இம்முறை அண்மைக் காலங்களில் பெரும்பாலும் பயன்படுத்தப் படுவதில்லை.

2. நனவோடை உத்தி

நனவோடை உத்தி என்பது முன்னர் நடந்த நிகழ்ச்சிகளைப் பாத்திரங்கள் மீண்டும் எண்ணிப் பார்க்குமாறு கதையை எழுதுவதாகும். பாத்திரங்களின் அனுபவங்களை அப்பாத்திரங்களே எண்ணிப் பார்க்குமாறு அமைத்துக் கொள்வதாகும். மேலை நாட்டினரிடம் இருந்து கடன் வாங்கப்பட்ட இந்த உத்தி முறை தமிழில் மிகப் பெரும் எழுத்தாளர்களால் பயன்படுத்தப்பட்டது.

நனவோடை முறையில் கதையைக் கூறும் போது சில பிரச்சனைகளும் ஏற்படலாம். கதை நிகழ்வுகள் ஒன்றோடு ஒன்று தொடர்பின்றி இருப்பது போல் தோன்றும். மொழிநடையும் புதிதாகவும், புரியாததாகவும் இருக்கும்.

தமிழில் லா.சா.ராமாமிர்தம் தமது அபிதா எனும் நாவலில் இவ்வுத்தியைப் பயன்படுத்தியுள்ளார். நீல.பத்மநாபனின் உறவுகள் என்ற நாவலும் இவ்வுத்தியில் எழுதப்பட்டது.

இந்த முறையில் நாவல் எழுதத் தொடக்க கால எழுத்தாளர்கள் அளவுக்கதிகமான முயற்சி செய்ய வேண்டும். இம்முறை நாவல்கள் உரைநடைக் கவிதையாய் வளர்ந்து, முடியும் என்பார் எழில் முதல்வன். மேலும், அவர் கூறுகிறார்:

‘கடந்த காலம் என்பது முடிந்து போன ஒன்று. வருங்காலம் என்பது நம்மால் புரிந்து கொள்ள முடியாதது. எனவே நிஜமாக எஞ்சி நிற்பது நிகழ்பொழுது மட்டுமே. ஆதலின் நிகழ்கணத்தில் நித்தியத்தின் விஸ்வரூபத்தைத் தேடிக் காண்பதே வாழ்க்கையின் இலட்சியம் என நனவோடை

வினாக்கள்

1.புதினங்களின் வகைகளை எழுதுக.

2. தேவன் எழுதிய புதினங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

3. ரகுநாதனின் பஞ்சும் பசியும் நாவல் எந்தத் தொழிலாளர் பற்றியது?

4. தமிழ் நாட்டின் ஜேன் ஆஸ்டின் என்று போற்றப்படுபவர் யார்?

5. தமிழில் சரித்திர நாவலின் தந்தை எனப்படுபவர் யார்?

சிறுகதை

மக்களின் கதைகேட்கும் ஆர்வம் தொல்பழங் காலந்தொட்டே வேரூன்றியுள்ளது. அதன் பல்வேறு வெளிப்பாடுகள்தாம் தொடக்கம் முதல் இன்றுவரை இதிகாசங்கள், காப்பியங்கள், புதினங்கள், சிறுகதைகள், நாடகங்கள், கூத்துகள், காலட்சேபங்கள் எனப் பல்வேறு வடிவங்களைப் பெற்றுத் திகழ்கின்றன. பழங்காலத்தில் கதைகள் வாய்மொழி மூலமாகவே பரப்பப்பட்டுள்ளன. ஒருவர் கூறுவதைப் பலர் கூடியிருந்து கேட்டு மகிழ்ந்துள்ளனர். பின்பு கதை இலக்கியங்கள் கூத்து வடிவிலும், நாடக வடிவிலும் நடித்துக் காட்டப்பட்டன. தொழிற் புரட்சியாலும், அச்சு இயந்திரங்களின் வருகையாலும் கதை இலக்கியம் நாவல், சிறுகதை என்ற புதிய இலக்கிய வகைகளாக உருப்பெற்றது. இருபதாம் நூற்றாண்டு, கதை இலக்கியம் வளர்ச்சி பெற்ற காலமாகும். இதழ்களின் வருகையால், கதை இலக்கியம் பேருருவம் எடுத்தது. சிறுகதைகளும் புதினங்களும் இதழ் வெளியீட்டில் முக்கிய இடத்தைப் பெற்றன.

இன்றைய நிலையில் இலக்கிய உலகில் சிறுகதைகளுக்கென்றே ஒரு தனித்த இடம் உள்ளது. கல்வி அறிவின் வளர்ச்சியும், இதழ்களின் வளர்ச்சியும் மக்களிடையே படிக்கும் ஆர்வத்தை வளர்த்துள்ளன. வேகமாக இயங்கும் நவீன உலகிற்கு ஏற்ற வடிவமாகச் சிறுகதைகள் அமைந்துள்ளன. இரயிலிலோ, பேருந்திலோ பயணம் செய்யும் போது, அல்லது வேலைகளுக்கு நடுவே அவ்வப்போது கிடைக்கும் சிறிய இடைவேளைகளில் கூடப் படித்து முடித்துவிடக் கூடிய வகையில் சிறுகதைகள் சிறியவையாகவும் விறுவிறுப்பு உடையவையாகவும் அமைந்துள்ளன.

சிறுகதை என்பது சுருக்கமான, கதை கூறும் புனைவுவகை உரைநடை இலக்கியமாகும். இது பெரும்பாலும் ஒரு மையக் கருவினை அல்லது நிகழ்ச்சியின் அனுபவத்தை விவரிக்கும் இலக்கிய வகையாகும். சிறுகதை பொதுவாக குறும் புதினம் மற்றும் நாவலை விடச் சுருக்கமானதாகும்.

சிறுகதையின் சில அம்சங்கள்:

சுருக்கமானது: இது பொதுவாக ஒரு சில பக்கங்களில் அல்லது ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வரிகளுக்குள் முடிவடையும்.

மையக் கருத்து: ஒரு மையக் கருத்தை அல்லது ஒரு சம்பவத்தின் அனுபவத்தை விவரிக்கிறது.

கதை வடிவம்: இதில் நடப்பியல் நோக்கில் எழுதப்பட்ட கதைகள் இருக்கலாம், மேலும் சில கதைகள் முடிவில் திருப்பத்துடன் அமையலாம்.

சிறுகதைகளை எங்கு காணலாம்:

இணையதளங்கள்: சிறுகதைகள், சிறுகதைகள், மற்றும் ஆயமமயட முரசயட போன்ற வலைத்தளங்களில் பல சிறுகதைகள் கிடைக்கின்றன.

புத்தகங்கள்: கல்கி, புதுமைப்பித்தன், ஷோபாசக்தி போன்ற எழுத்தாளர்களின் சிறுகதைகளை புத்தகங்களாக வாங்கலாம்.

ீனுகு மற்றும் மின் புத்தகங்கள்: குசநந வுயஅடை நுடிழழமள போன்ற தளங்களில் ீனுகு வடிவிலும் மின் புத்தகங்களாகவும் சிறுகதைகளைப் பதிவிறக்கம் செய்யலாம்.

அறிமுகம்

முடிவில் திருப்பம் உடைய சிறிய கதை வடிவம். பெரும்பாலும் நடப்பியல் நோக்கில் எழுதப்படுவது. உலக இலக்கியத்தில் அமெரிக்க எழுத்தாளர்களான எட்கார் ஆல்லன் போ, ஓ ஹென்றி இருவரையும் சிறுகதையின் தொடக்கப் புள்ளிகளாகச் சொல்வது வழக்கம். ஆனால் சிறந்த வடிவம் கொண்ட சிறுகதைக்கு ஆண்டன் செக்காவ் தான் முன்னோடி என்பார்கள்.

தமிழில் சிறுகதை வடிவம் எவரால் முதலில் கொண்டுவரப்பட்டது என்பதுகுறித்து விவாதம் உள்ளது. பாரதியாரின் ரயில்வே ஸ்தானம் என்ற சிறுகதையே முக்கியமான முதல் சிறுகதை என்பார்கள்.ஜ1ஸ உண்மையில் பாரதியின் முதல் சிறுகதை 1905ல் தொடங்கி - அவர் ஆசிரியப் பொறுப்பில் இருந்த சக்கரவர்த்தினி என்ற இதழில்- பகுதிகளாக வெளியிடப்பட்ட “துளஸிபயி என்ற இரஜபுதனக் கன்னிகையின் சரித்திரம்“ என்பதாகும். ஆனால் சிறுகதை வடிவம் சரியாக அமைந்தது வ. வே. சு. ஐயர் எழுதிய மங்கையற்கரசியின் காதல் என்ற தொகுதியில் உள்ள குளத்தங்கரை அரசமரம் என்ற சிறுகதை என்பது பலரால் சொல்லப்பட்டுவரும் விவாதத்திற்குரிய கருத்தாகும். சிறுகதை என்ற புதிய இலக்கியவகை தமிழில் அறிமுகமானபோது - சிறுகதை என்பது என்ன?என்ற முடிவான, ஏற்றுக்கொள்ளத்தக்க

கருத்து ஏதும் உருப்பெற்று நிலைபெறாத அக்காலகட்டத்தில் (1900-1920), பாரதியார், மாதவையா,வ.வே.சு. ஐயர் ஆகியோர் தத்தமக்கு வாகான வகையாகச் சோதனை முயற்சிகளாக எழுதினர். வ.வே.சு ஐயரே பிற்காலத்தில் நெடிய சரித்திரக் கதைகள் எழுதக் "கைப்பழக்கமாகவே " சிறுகதைகள் எழுதி வருவதாகத் தன் நண்பரொருவருக்கு எழுதிய கடிதத்தில் வார்த்தைப்படுத்தியுள்ளார்.

தாம் சுயமாகச் சிறுகதைகள் எழுதும் முன்னரே தாகூரின் வங்கமொழிச் சிறுகதைகளை மூலமொழியறிந்திருந்த பாரதியார் சிறப்பாக மொழிபெயர்த்துள்ளாரென்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் நிலையில் பார்த்தால், பாரதியார் தமது சொந்தச் சிறுகதைகளைத் தாம் விரும்பிய-"சொல்புதிது, பொருள் புதிது" எனும் முற்போக்கு எண்ணப்படி வார்த்தளித்துள்ளாரென்ற ஏற்பே நியாயமானதாக இருக்கும்.

தற்காலத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றின் மூல மூவர்களான பாரதியார், மாதவையா, வ.வே.சு. ஐயர் ஆகிய மூவருமே 1925வாக்கில் இயற்கையடைந்துவிட்ட பின்னர் ஏற்பட்டிருந்த வெற்றிடக்காலம் நீண்டு தொடர்ந்து விடாமல் தமிழ்ச்சிறுகதையில் மலர்ச்சிக்கு களம் அமைத்தது மணிக்கொடி சிற்றிதழாகும். இது டி. எஸ். சொக்கலிங்கம், ஸ்டாலின் சீனிவாசன் ஆகியோரால் நடத்தப்பட்டது. பின்னர் இதை முழுக்கமுழுக்க சிறுகதை இதழாக பி. எஸ். ராமையா வெளியிட்டார். இதில் புதுமைப்பித்தன், கு. ப. ராஜகோபாலன், ந. பிச்சமூர்த்தி, மௌனி போன்றவர்கள் சிறந்த சிறுகதைகளை எழுதினார்கள். இவர்கள் மணிக்கொடி தலைமுறை என்று சொல்லப்படுகிறார்கள்.

தமிழின் சிறந்த சிறுகதைகளை எழுதியவர்கள் என்று க. நா. சுப்பிரமணியம் ஜதெய்வஜனனம்.ஸ சி. சு. செல்லப்பா ஜசரசாவின் பொம்மைஸ, லா. ச. ராமாமிர்தம் ஜபாற்கடல்ஸ, ஜெயகாந்தன் ஜநான் என்னசெய்யட்டும் சொல்லுங்கோஸ, சுந்தர ராமசாமி ஜவாழ்வும் வசந்தமும்ஸ, கு. அழகிரிசாமி ஜராஜா வந்திருக்கிறார்ஸ, தி. ஜானகிராமன் ஜபாயசம்ஸ, கி. ராஜநாராயணன் ஜபேதைஸ சுஜாதா போன்றோர்கள் குறிப்பிடப்படுகிறார்கள்.

தமிழில், அயல் நாட்டினர் எழுதிய சிறுகதைகள்

வீரமாமுனிவர், பாமரர் படிப்பதற்காக, பிரெஞ்சு மொழியிலிருந்து மொழிப்பெயர்த்து, 18 ஆம் நூற்றாண்டில் எழுதிய "பரமார்த்த குருவின் கதை".

இஸ்லாமிய மதத்தின் சூபிகள் என்பவர், சித்தர்களோடு ஒப்பிட்டுப் பேசப்படுபவர்கள். அவர்கள் கூறியக் கதைகளுள் ஒன்று. - "சூபிக் கதை"

இரசிய நாட்டின் மிகச்சிறந்த சிறுகதைகளாகக் கருதப்படும் பத்துக்கதைகளை இங்கு காணலாம்.

சிறுகதை இலக்கணம்

சிறுகதை இப்படி அமைய வேண்டும் என்று திட்டவட்டமாக வரையறுக்க இயலாது. ஏனெனில், அந்த வரையறையை மீறி ஏதாவது ஒரு சிறுகதை பிறந்து விடலாம். ஆனாலும் கூட கீழ்க்காணும் விளக்கங்கள் சிறுகதை என்றால் என்ன என்பதை ஓரளவு புரிய வைக்க உதவும்.

இலக்கணம்

சிறுகதை அளவில் சிறிதாக இருக்க வேண்டும். அது, ஒருமுறை உட்கார்ந்து படித்து முடித்துவிடக் கூடியதாக இருக்க வேண்டும். அதே சமயத்தில், நாவலின் சுருக்கம் சிறுகதை ஆகிவிடாது நாவலின் ஓர் அத்தியாயமாகவோ அல்லது நீண்ட கதையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட கிளைக் கதையாகவோ இருக்க முடியாது. சிறுகதை என்ற வடிவம் தன்னளவில் முழுமை பெற்ற ஒரு தனிப் பிண்டம். எந்த உணர்ச்சியை அல்லது கருத்தை அது தன்னகத்தே கொண்டிருக்கிறதோ, அதைப் படிப்பவரின் நெஞ்சில் மின்வெட்டைப் போல் பாய்ச்சும் ஆற்றல் சிறுகதைக்கு வேண்டும். கதைக்குப் பின்னேயுள்ள கதாசிரியரின்

கலையாற்றல், கற்பனைத் திறன், சொல்லாட்சி, அவர் சொல்ல விரும்பும் செய்தி இவ்வளவும் இலக்கண வரம்புகளை விடவும் மிகமிக முக்கியமானவை. சிறந்த சிறுகதை ஆசிரியர்கள் எந்த இலக்கணத்தையும் மனத்தில் நினைத்துக் கொண்டு எழுதுவதில்லை. அவர்கள் எழுத்துகள் தாமாகவே சிறுகதை வடிவம் பெற்றுவிடுகின்றன.

மேலைநாட்டு அறிஞர்களின் விளக்கம்

மேலை மற்றும் கீழை நாடுகளில் இலக்கியத் தரமுடைய சிறுகதைகள் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோற்றம் பெற்றன. அமெரிக்காவில் வாஷிங்டன் இர்விங், எட்கர் ஆலன்போ, நத்தானியல் ஹாதார்ன் போன்றவர்களும், ருஷ்யாவில் துர்கனேவ், செகாவ் போன்றவர்களும், பிரான்சில் மாப்பசானும் மிகச்சிறந்த சிறுகதைகளை எழுதியுள்ளனர். இவர்களும் இவர்களது படைப்புகளை ஆராய்ந்த திறனாய்வாளர்களும் கீழ்க்கண்ட வரையறைகளைச் சிறுகதைக்குத் தருகின்றனர்.

சிறுகதை என்பது சிறிய கதை என்ற பொருளில் இல்லாமல், ஒரு புதிய இலக்கிய வடிவத்தின் பெயரைக் குறிக்கும் தனிச்சொல் என்ற விளக்கத்தை பிராண்டர் மாத்யூ கொடுத்துள்ளார்.

சுருக்கமும் செறிவும் சிறுகதையின் முக்கியப் பண்புகள் என்று ஜேம்ஸ் கூப்பர் லாரன்ஸ் கருத்துரைத்துள்ளார்.

சிறுகதை அரைமணியிலிருந்து ஒருமணி அல்லது இரண்டு மணி அவகாசத்திற்குள், ஒரே மூச்சில் படித்து முடிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் ˙ தன்னளவில் முழுமை பெற்றிருக்க வேண்டும். அது தரும் விளைவு ஒரு தனி மெய்ப்பாடாக இருக்க வேண்டும். கதையைப் படித்து முடிப்பதற்குள் புறத்தேயிருந்து எவ்விதக் குறுக்கீடுகளும் பாதிக்காமல், வாசகனின் புலன் முழுவதும் கதாசிரியனின் ஆதிக்கத்தில் கட்டுப்பட்டதாக இருக்க வேண்டும் என்று எட்கர் ஆலன்போ சிறுகதையைப் பற்றிய தமது மதிப்பீட்டைத் தந்துள்ளார்.

சிறுகதை என்பது எடுத்த எடுப்பிலேயே படிப்போரின் கவனத்தை ஈர்த்துப் பிடித்தல் வேண்டும். நெகிழ்ச்சியின்றி இயங்கி உச்சநிலை முடியும் வரை வாசகரின் முழுக்கவனத்தையும் ஒருமுகப்படுத்தி, இடையீடோ, சோர்வோ நேரும் முன்பாகவே சிறுகதை முற்றுப் பெறுதல் வேண்டும் என்று ஹெச்.ஜி. வெல்ஸ் கூறியுள்ளார்.

சிறுகதை குதிரைப் பந்தயம்போல, தொடக்கமும் முடிவும் சுவை மிக்கதாக இருக்க வேண்டுமென்று எல்லரி செட்ஜ்விக் என்ற அறிஞர் குறிப்பிடுகிறார்.

சிறுகதைகள் எளிய கருப்பொருளைக் கருவாகக் கொள்ளுதலே சிறப்புடையது என்கிறார் சிறுகதை உலகின் தந்தை எனப் புகழப்படும் செகாவ்.

1901இல், பிராண்டர் மேத்யூ என்ற திறனாய்வாளர், சிறுகதை என்பது ஒரே ஒரு பாத்திரத்தின் நடவடிக்கைகளைப் பற்றியோ, ஒரு தனிச் சம்பவத்தைப்பற்றியோ, அல்லது ஒரு தனி உணர்ச்சி பற்றியோ எடுத்துக் கூறுவதாக அமைந்திருக்கும் என்று விளக்கியுள்ளார்.

ஹெச்.இ.பேட்ஸ் என்பவர், எழுதும் ஆசிரியரின் எண்ணத் துணிவு சிறுகதையில் எவ்வாறு வேண்டுமானாலும் வெளிப்படலாம் என்கிறார்.

இந்திய அறிஞர்களின் விளக்கம்

1917ஆம் ஆண்டிலேயே சிறுகதை பற்றி விமர்சித்த ரா. வாசுதேவன் என்பவர், சிறுகதை என்பது சிறு கால அளவுக்குள் படித்து முடிக்கப்பட வேண்டியது என்றும், அதன் உருவம் சிறியதாக அமைந்திருக்கும் என்றும் கூறுகிறார்.

சிறுகதை என்பது வாழ்க்கையின் சாளரம். சிறுகதை ஒரு தொடக்கம், மையச் சம்பவம், அதன் வளர்ச்சி அல்லது வீழ்ச்சி என்ற மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. சிறுகதை, வாழ்க்கையின் ஒரு பகுதியை, கவலையை மறந்து விட்டுக் கவனிப்பதாக உள்ளது. சிறுகதையின் வடிவம் கதை எழுதுபவரின் மனோதர்மத்தைப் பொறுத்தது என்று புதுமைப்பித்தன் சிறுகதையின் போக்கை விளக்கியுள்ளார்.

மனித உணர்ச்சிகளில் ஏதாவது ஒன்றைத் தொட்டு உலுக்குவதுதான் சிறுகதை என்று விந்தன் அதன் இலக்கணம் கூறுகிறார்.

பழங்காலத்தில் தன்னுணர்ச்சிப் பாடல்கள் பெற்றிருந்த இடத்தைத் தற்காலத்தில் சிறுகதை என்ற இலக்கிய வகை பெற்றுள்ளது என்று கூறியுள்ளார் மு.வ.

சிறுகதை என்பது ஒரு நிகழ்ச்சியாக இருக்கலாம் உள்ளப் போராட்டமாக இருக்கலாம். அது ஏதாவது ஒன்றாக இருக்கும் வகையில் சிறுகதை பிறக்கும். இரண்டாகவோ அல்லது அதற்கு அதிகமாகவோ இருந்தால் சிறுகதை பிறக்காது என்கிறார் க.நா.சுப்ரமணியன்.

சிறுகதைக்குள் அடங்கும் காலத்துக்கு எல்லை இல்லை. ஒருவரது பிறப்பு முதல் இறப்பு வரையில் சிறுகதையின் காலமாய் இருக்க முடியும் அல்லது ஒருவர் வாழ்க்கையில், ஒரே நாளில், ஒரு மணியில், சில வினாடிகளில் கூடக் கதை முடிந்துவிடலாம் என்று மணிக்கொடி எழுத்தாளரான பி.எம். கண்ணன் சிறுகதையை விளக்கியுள்ளார்.

புதினமும் சிறுகதையும்

இன்று மக்களால் அதிகம் விரும்பிப் படிக்கப்படும் இலக்கிய வகைகள் புதினமும் சிறுகதையும்தாம். இதழ்கள், இவ்விரண்டு வகைகளை மட்டும் நம்பி வெளிவந்த காலக் கட்டமும் உண்டு. இவ்விரண்டு வகைகளும் சில கருத்தோட்டங்களில் ஒத்தும், பல இடங்களில் வேறுபட்டும் காணப்படுகின்றன. எனவே இரண்டும் வேறு வேறு கலை வடிவங்கள் என்பது தெளிவாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

ஒற்றுமைகள்

நாவல் சிறுகதை என்ற இரண்டு வடிவங்களுமே மேலை நாட்டிலிருந்து தமிழுக்குக் கிடைத்த இலக்கியக் கொடைகளாகும்.

நாவல் சிறுகதை இரண்டுமே உரைநடை வடிவத்தைக் கொண்டவை.

இரண்டு வகைகளும் கதையை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றுள்ளன. அதனால் இரண்டையும் ஒன்றாக இணைத்துப் புனைகதை இலக்கியங்கள் என்று திறனாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

நாவல், சிறுகதை என்ற இரண்டும் ஏறத்தாழ ஒரே காலக் கட்டத்தில் தோன்றி ஒரு சேர வளர்ந்தவையாகும். தமிழ் மொழியைப் பொறுத்தவரை நாவல் 19ஆம் நூற்றாண்டு இறுதியிலும் சிறுகதை 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பிறந்தவைகளாகும்.

வேற்றுமைகள்

சிறுகதைக்கும் நாவலுக்கும் உள்ள வேறுபாட்டைச் சில உவமைகளாலும் சில விளக்கங்களாலும் திறனாய்வாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்.

தனிமரம் போன்றது சிறுகதை. பலவகை மரங்களும் செழித்தோங்கிய ஒரு தோப்புப் போன்றது நாவல். ஒன்றிரண்டு வண்ணங்களால் வரைந்த ஓவியம் போன்றது சிறுகதை. பல வகை வண்ணங்களைக் கொண்டு வரைந்த மாபெரும் ஓவியம் போன்றது நாவல். ஒரு பறவை மட்டும் தனித்துப் பறப்பது போன்றது சிறுகதை. பல பறவைகள் கூட்டமாகச் சேர்ந்து பறப்பது போன்றது நாவல். சிறுகதையை அழகிய நறுமணம் மிக்க ஒற்றைப் பூவாகக் கொள்ளலாம். நாவலை நாரால் கோக்கப்பட்ட பூமாலைக்கு ஒப்பிடலாம்.

சிறுகதை ஒரு பண்பையோ, ஒரு செயலையோ, வாழ்க்கையின் ஒரு நிகழ்ச்சியையோ மையமாகக் கொண்டு அமையும். நாவல் பல பண்புகளையும், நிகழ்ச்சிகளையும் உள்ளடக்கியது.

வாழ்க்கையின் பல்வேறு வளர்ச்சி நிலைகளைக் காட்டுவது புதினம் சிறுகதை வாழ்க்கையின் ஒரே ஒரு பரிமாணத்தை மட்டுமே காட்டி நிற்கும். நாவலில் கதை மாந்தர்களின் பண்புகள் படிப்படியாக வளர்ந்து செல்வதாகக் காட்டமுடியும். சிறுகதையில் அப்படிக் கூற இயலாது.

மொத்தத்தில் சிறுகதையின் அமைப்பும் போக்கும், நாவலின் அமைப்பும் போக்கும் வேறானவை ஆகும்.

சிறுகதை வரையறை

கதை ஆசிரியனின் சிந்தனையில் பிறந்து, வாசகர்களின் சிந்தனையில் நிறைவு பெறுவது சிறுகதையாகும். சிறுகதைக்கு, அது பேசக்கூடிய பொருளும் கால எல்லையும், ஒருமைப்பாடும் மிக முக்கியம். சிறுகதையின் பொருள் காலத்திற்குக் காலம், எழுத்தாளருக்கு எழுத்தாளர் மாறுபடலாம். ஆனாலும் அவை சமுதாயத்தை நுவல் பொருளாகக் கொண்டவை என்று பொதுமைப் படுத்திவிட முடியும்.

சிறுகதைப் பொருள்

சிறுகதை ஆசிரியர்கள் தாம் கண்டு கேட்டது மட்டுமன்றிக் காணாததையும் கற்பனையில் கண்டு, தங்கத்துக்குச் செம்பு சேர்ப்பது போல் சேர்த்து மெருகூட்டுகிறார்கள். பெரும்பாலும் இலக்கியங்கள் சமூகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியே. சிறுகதைகளும் இதற்கு விதி விலக்கல்ல. ஆசிரியர் தன்னைச் சுற்றி நடக்கும் நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனித்து அவற்றைக் கதைப்படுத்துகிறார். சிறுகதைகளில் பேசப்படும் கருப்பொருளை,

தனிமனிதச் சிக்கல்

குடும்பச் சிக்கல்

சமூகச் சிக்கல்

பொருளாதாரச் சிக்கல்

நாட்டு விடுதலை

என்று வகைப்படுத்தலாம். இவற்றைச் சில தமிழ்ச் சிறுகதைகளின் துணைகொண்டு விளக்கமாகக் காணலாம்.

தனிமனிதச் சிக்கல்

தனிமனிதச் சிக்கலை அடிப்படையாகக் கொண்ட கதைகளில், தனிமனிதனின் அக மனப் போராட்டம் முதன்மைப் படுத்தப்படுகின்றது. அகிலனின் பூச்சாண்டி, கு.ப.ரா வின் விடியுமா?, கா.நா.சு வின் மனோதத்துவம், லட்சுமியின் பரீட்சைக் காட்சிகள், புதுமைப் பித்தனின் மனநிழல், நீல பத்மநாபனின் திரிபுவன புரம் போன்றவை இத்தன்மையன.

நாரண துரைக்கண்ணனின் சந்தேகம் என்ற கதையில், மனைவி அஞ்சுகத்தின் தூய அன்புள்ளத்தைப் புரிந்து கொள்ளாமல், கணவன் குருநாதப் பிள்ளை அர்த்தமற்ற சந்தேகம் கொண்டு மன உளைச்சலில் அவதிப்படுகிறார். இது தனிமனிதச் சிக்கலைக் காட்டும் அருமையான கதையாகும்.

குடும்பச் சிக்கல்

குடும்ப வாழ்க்கையில், கணவன் மனைவிக்கு இடையேயும், சகோதர சகோதரிக்கிடையேயும், மாமியார் மருமகளுக்கு இடையேயும், நாத்தனார் அண்ணிக்கு இடையேயும் ஏற்படும் பிரச்சினைகளைப் பேசுகின்றன பல கதைகள். இத்தகைய குடும்பக் கதைகளைத் திறம்பட எழுதுவதில் பெண் எழுத்தாளர்கள் முன்னணி வகிக்கின்றனர். கல்யாணியின் இளமை, ஷ்யாமளாவின் பரிவும் பிரிவும், ஆர். சூடாமணியின் தொடர்ச்சி, எஸ்.ரெங்கநாயகியின் சூரிய அடுப்பு, அகிலனின் நினைப்பு, ஜெயகாந்தனின் பிணக்கு, ந. பிச்சமூர்த்தியின் ஒருநாள், கு.ப.ரா.வின் புரியும் கதை ஆகியவை குடும்பச் சிக்கல்களைப் பேசும் கதைகளாகும்.

சமூகச் சிக்கல்

குழந்தை மணம், விதவைக் கொடுமை, பொருந்தா மணம், வரதட்சணைக் கொடுமை, ஜாதிக் கொடுமை, தீண்டாமை, மூட நம்பிக்கைகள் இவற்றை அடிப்படையாகக் கொண்ட பல சமூகக் கதைகள் தோற்றம் பெற்றன. புதுமைப்பித்தன் ஆண்மை என்ற கதையில் குழந்தை மணத்தின் கொடுமையைக் கேலியாகச் சித்திரித்துள்ளார்.

“ஸ்ரீனிவாசனுக்குக் கலியாணம் ஆனது நினைவில் இல்லை. ஏனென்றால் அது பெப்பர்மிண்ட் கலியாணம். ஸ்ரீனிவாசனின் பெற்றோர்கள் பெரியவர்களாகியும், குழந்தைப் பருவம் நீங்காது பொம்மைக் கலியாணம் செய்ய ஆசைப்பட்டார்கள். வெறும் மரப்பொம்மையை விட, தங்கள் நாலுவயதுக் குழந்தை சீமாச்சு மேல் என்று பட்டது. பிறகு என்ன? பெண் கிடைக்காமலா போய்விடும்? ஆத்தூர்ப் பண்ணை ஐயர் மகள் ருக்மணிக்கு இரண்டு வயது. கலியாணம் ஏக தடபுடல். பெற்றோர் மடியிலிருந்தபடியே ஸ்ரீமான் ஸ்ரீனிவாசனுக்கும் ருக்மணி அம்மாளுக்கும் திருமணம் நடந்தது.”

என்று கதைக் காட்சி விரியும்.

இளம் விதவைகளுக்கு நிகழும் கொடுமைகளைப் பற்றிப் புதுமைப்பித்தனின் வாடாமல்லிகை, வழி, கு.ப.ரா.வின் உயிரின் அழைப்பு, தி.ஜ.ர.வின் ராஜத்தின் கூந்தல், அகிலனின் சாந்தி, பி.எஸ். ராமையாவின் மலரும் மணமும் ஆகிய கதைகள் பேசுகின்றன.

சாவு என்ற கதையில் விதவை ஜக்கம்மாவிற்குச் செய்யும் மூடச் சடங்குகளைக் கி.ராஜநாராயணன் கீழ்வருமாறு விவரிக்கின்றார்.

‘பதினோராவது நாள் சர்வ அலங்காரங்களும் பண்ணி ஜக்கம்மாவை வீட்டினுள்ளிருந்து முற்றத்துக்கு அழைத்துக் கொண்டு வருகிறார்கள். தரையில் வட்டமான பெரிய சொளகு. அதன் மேல் குவிக்கப்பட்டுள்ள கம்மம்புல் அம்பாரம். அதன்மேல் எருமைத் தோலினால் முறுக்கப்பட்ட உழவு வடங்கள் இரண்டு வைத்திருக்கிறது. அதன் மேல் ஜக்கம்மாவை ஏற்றி நிற்க வைக்கிறார்கள். கைகள் நிறையப் புது வளையல்கள். மஞ்சள் பூசிக் கழுவிய முகத்தின் நெற்றியில் துலாம்பரமாகத் தெரியும் சிவப்புக் குங்குமம். கண்களிலிருந்து மாலை மாலையாய்க் கண்ணீர் வழிந்து கொண்டே இருக்கிறது. அவளை எவ்வளவு அழகுபடுத்த முடியுமோ அவ்வளவும் செய்திருக்கிறார்கள். இது அவளுடைய சுமங்கலியின் கடைசிக் கோலம். விடை பெற்றுப் போகச் சுமங்கலியின் அதிதேவதையே வந்து நிற்கிறாள்”

இத்தகைய வர்ணனைகள் மூலம், விதவைகளுக்கு மறுவாழ்வு தேவை என்பதை மறைமுகமாக வற்புறுத்துகின்றனர் கதை ஆசிரியர்கள்.

சி.சு.செல்லப்பாவின் மஞ்சள் காணி, தேவனின் சுந்தரம்மாவின் ஆவி போன்ற கதைகள் வரதட்சணைப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட கதைகளாகும்.

வயது கடந்த முதியவர்கள் இளம்பெண்களை மணந்து கொள்ளும் வழக்கம் 20ஆம் நூற்றாண்டில் ஐம்பதுகள் வரை சர்வ சாதாரணமாக இருந்து வந்துள்ளது. இப்பிரச்சினையை அடிப்படையாக வைத்துக் கல்கி சர்மாவின் புனர்விவாகம், ஜெயகாந்தன் பேதைப் பருவம்,

கு.ப.ரா எவன் பிறக்கின்றானோ, புதுமைப்பித்தன் கல்யாணி, இராதா மணாளன் மண்ணாய்ப்போகவே என்ற கதைகளை எழுதியுள்ளனர்.

"மீசை நரைத்த கிழவன் ஒருவனுடைய கரத்தை மணக்கோலத்துடன் மனைவியாக நின்று கைப்பற்றி வழிநடந்து கொண்டிருந்தாள் அந்தப் பேதைச் சிறுமி. அவள் புதுப்புடவை கட்டியிருக்கிறாள்..... இல்லை அந்தச் சிறுமியைப் புடவையில் சுருட்டி வைத்திருக்கிறார்கள்".

என்று, பொருந்தா மணத்தின் கொடுமையை ஜெயகாந்தன் பேதைப் பருவம் என்ற கதையில் உணர்ச்சியோடு எடுத்துரைத்துள்ளார்.

மூடநம்பிக்கைகள், அறியாமை இவற்றினால் ஏற்படும் சீர்கேடுகளை ரா.கி. ரங்கராஜனின் கன்னி, கு.அழகிரிசாமியின் அக்கினிக் கவசம், ந. பிச்சமூர்த்தியின் வேப்பமரம், கோ.வி. மணிசேகரனின் ரேகை, ஜெயகாந்தனின் அபாயம், அகிலனின் சரசியின் ஜாதகம், அண்ணாதுரையின் பலாபலன் ஆகிய கதைகள் பேசுகின்றன.

ஜாதிக் கொடுமையைப் பற்றிச் சிற்பியின் கோவில் பூனை, புதுமைப்பித்தனின் புதிய நந்தன், அகிலனின் மயானத்து நிலவில், ராஜாஜியின் அறியாக் குழந்தை ஆகிய கதைகள் பேசுகின்றன.

பொருளாதாரச் சிக்கல்

இன்றைய சமுதாய வாழ்வில் அன்றாடப் பிரச்சினைகளாக உள்ள பொருளாதாரப் போராட்டத்தையும், வறுமையையும், பற்றாக்குறையையும் அதனால் மக்கள் படும் அவதியையும் பல கதைகள் பேசுகின்றன. அகிலனின் பசி, கோயில்விளக்கு, ஏழைப் பிள்ளையார், வ.சுப்ரமணியத்தின் எச்சில், ஆர். சூடாமணியின் மறுபுறம், ஜெயகாந்தனின் ஒருபிடிசோறு, புதுமைப் பித்தனின் தனி ஒருவனுக்கு, எம்.ஏ. அப்பாஸின் கஞ்சி முதலிய கதைகள் வறுமையின் கொடுமையைப் படம் பிடித்துள்ளன. பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் கதைப்படுத்துவதில் விந்தன் திறமையானவர். அவருக்குப் பின் ஜெயகாந்தன் பொருளாதாரச் சிக்கலை அதிகம் கதைப்படுத்தியுள்ளார்.

இந்திய நாட்டு விடுதலை

நாற்பது, ஐம்பதுகளில் நாட்டு விடுதலைப் போராட்டத்தை அடிப்படையாக வைத்துப் பலர் கதை எழுதியுள்ளனர். கள்ளுக் கடை மறியல், அந்நியத் துணி பகிஷ்காரம், உப்புச் சத்தியாகிரகம், 'வெள்ளையனே வெளியேறு' போன்ற போராட்டங்களை அடிப்படையாக வைத்து வை.மு. கோதை நாயகி அம்மாள், அகிலன், நா.பார்த்த சாரதி, ராஜம் கிருஷ்ணன் போன்றவர்கள் சிறு கதைகள் எழுதியுள்ளனர்.

நவீன காலத்தில் அறிவியல் கருத்துகளையும், பாலியல் வன்முறை, பெண்களைத் துன்புறுத்தல் (நுஎந வுநயளபெ), கருக்கொலை, பெண்சிசுக் கொலை, தண்ணீர்ப் பிரச்சினை என்ற தற்போதைய பிரச்சினைகளையும் அடிப்படையாகக் கொண்டு சிறு கதைகள் எழுதப்படுகின்றன.

கால எல்லை

"சிறுகதைக்குக் கால எல்லை இல்லை. ஒருவனுடைய பிறப்பு முதல் இறப்பு வரையில் சிறுகதையின் காலமாக இருக்க முடியும் அல்லது ஒருவன் வாழ்க்கையில் ஒருநாளில், ஒரு மணியில், ஒரு சில வினாடிகளில் நடக்கும் மன ஓட்டத்தில் கூடக் கதை எழுதப்படலாம்" என்கிறார் பி.எம். கண்ணன். கதை நடக்கும் காலத்தையும் இடத்தையும் தொடக்கத்திலே கூற வேண்டுமென்ற தேவையில்லை. கதையைக் கூறிச் செல்லும் போது, இடையிடையே

காலத்தையும் இடத்தையும் பற்றிய குறிப்புகளைக் கொடுக்கலாம். சிறுகதையில் கால வர்ணனை ஓரிரு தொடர்களில் குறிப்பாக அமைய வேண்டுமே தவிர விரிவாக இருத்தல் கூடாது. புராணக் காலம், சரித்திரக் காலம் இவற்றைக் கூடச் சிறுகதைக்குள் கொண்டுவர முடியும்.

ஒருமைப்பாடு

சிறுகதைகள், முழுக்க முழுக்க ஒருமுகப்பட்ட தன்மையோடு இயங்கி முற்றுப் பெறுதல் வேண்டும். கதையின் தொடக்கத்தில் எந்த உணர்வு காட்டப் படுகிறதோ அதே உணர்வு இடையிலும் முடிவிலும் வளர்ந்து முற்றுப் பெற வேண்டும். இதை உணர்ச்சி விளைவின் ஒருமைப்பாடு (ருவைல ழக ஐஅிசநளாளழை) என்று குறிப்பிடுவார்கள் திறனாய்வாளர்கள். அடுத்ததாக, சிறுகதையை ஆசிரியர் படைத்ததன் நோக்கம் ஒருமுகப்பட்டதாக இருத்தல் வேண்டும். வாசகர்களின் கவனத்தையும் ஆர்வத்தையும் சிறிதும் சிதறடிக்காமல், குறிப்பிட்ட இலக்கை நோக்கிக் கதை சென்று முடிதல் வேண்டும்.

சிறுகதை அமைப்பு

சிறுகதையின் அமைப்பு திட்டமாகவும் உறுதியாகவும் இருக்க வேண்டும். "திறமை வாய்ந்த இலக்கிய மேதை ஒருவன் சிறுகதையை எழுதும்போது, கதையின் நிகழ்ச்சிகளுக்காக அவன் கருத்துகளைப் புனைவதில்லை. குறித்த ஒரு முடிவுக்காக ஆழ்ந்த கவனத்துடன் நிகழ்ச்சிகளைக் கற்பனையில் கண்டு பிடிக்கிறான்" என்கிறார் எட்கர் ஆலன்போ.

சிறுகதைகள் தொடக்கம், உச்சக் கட்டம், முடிவு என்று ஒரே அமைப்பைப் பெற்றிருந்தாலும், தங்களுக்குள் நுட்பமான வேறுபாடு கொண்டிருக்கும் என்கிறார் பி.எஸ். ராமையா. சிறுகதை அமைப்பில் தலைப்பு, தொடக்கம், முடிவு என்பன இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளன.

சிறுகதையின் தலைப்பு

சிறுகதைக்கு நல்லதொரு பெயர் இன்றியமையாதது. பொருத்தமான பெயரும் அதன் கவர்ச்சியுமே வாசகர்களை ஈர்த்துப் படிக்கத் தூண்டுகின்றன. பெயரைத் தேடி வைப்பதில்தான் சிறுகதை ஆசிரியரின் தனித்திறமை அடங்கியிருக்கிறது. சிறுகதையின் சிறு தலைப்புகள் கதையின் பெரிய உட்கருத்தை உள்ளடக்கிய ஆலம் வித்துப் போன்று இருக்க வேண்டும். அடுத்தது காட்டும் சிறிய கண்ணாடி போலத் தலைப்புகள் அமைந்திருக்கலாம்.

திறனாய்வாளர்கள் சிறுகதையின் தலைப்பை நான்கு வகையாகப் பிரிப்பர். அவை,

1. கதையின் தொடக்கத்தை வைத்து அமையும் தலைப்பு

2. கூறும் பொருளை வைத்து அமையும் தலைப்பு

3. மையப் பாத்திரத்தின் பெயரை வைத்து அமையும் தலைப்பு

4. முடிவை வைத்து அமையும் தலைப்பு

என்பனவாகும்.

ஜெயகாந்தனின் போன வருசம் பொங்கலப்போ, கி. ராஜநாராயணனின் கதவு, கி.வா. ஜகந்நாதனின் மங்க் - கீ, சூடாமணியின் இரண்டாவது தந்தி, அகிலனின் ஏழைப்பிள்ளையார் போன்ற கதைகளில் தொடக்கமே தலைப்பாக அமைந்துள்ளது.

ஏதாவது சிக்கலை அடிப்படையாக வைத்துப் புனையப் பட்டிருக்கும் கதைகளுக்கு அவற்றின் பொருளை வைத்துப் பெயரமைவது உண்டு. விந்தனின் பசிப்பிரச்சினை, அகிலனின் படியரிசி, சுந்தர ராமசாமியின் பொறுக்கி வர்க்கம், ஜெகசிற்பியனின் இருட்டறையில் உள்ளதடா உலகம், ஜெயகாந்தனின் சாத்தான் வேதம் ஓதட்டும், தி.ஜ.ர.வின் மரத்தடிக்

கடவுள் என்ற கதைகள் இவ்வகையைச் சேர்ந்தன. இத்தலைப்புகளைப் பார்த்த உடனேயே கதையை ஓரளவு புரிந்து கொள்ள முடியும்.

சில கதைகள் மையப் பாத்திரத்தின் பெயரையோ பண்பையோ பெயராகக் கொண்டிருக்கும். புதுமைப்பித்தனின் திருக்குறள் குமரேசப் பிள்ளை, காஞ்சனை, வ.ரா. வின் மாட்டுத் தரகு மாணிக்கம், கு.ப.ரா.வின் நூருன்னிசா, லா.ச.ரா.வின் சாவித்திரி போன்றவை பாத்திரத்தின் பெயரையே தலைப்பாகக் கொண்டுள்ளன.

கதையின் முடிவை வைத்துச் சில சிறுகதைகளுக்குத் தலைப்புகள் இடப்பட்டுள்ளன. புதுமைப் பித்தனின் திண்ணைப் பேர்வழி, கு.ப.ரா.வின் படுத்த படுக்கையில், சோமுவின் மங்கலம் போன்ற கதைகள் முடிவை வைத்துப் பெயரிடப்பட்டுள்ளன.

சிறுகதையின் தொடக்கம்

சிறுகதையின் தொடக்கமே விறுவிறுப்பாக அமைந்து வாசகர்களைப் படிக்கத் தூண்டவேண்டும். 'ஒரே ஒரு ஊரிலே' என்ற பழைய முறையிலோ அல்லது பிறப்புத் தொடங்கி, வாழ்க்கை வரலாறு போன்றோ சொல்வதைக் காட்டிலும் ஒரு நிகழ்ச்சியின் இடையில் தொடங்குவதே சிறப்புடையதாகும் என்கிறார் இரா. தண்டாயுதம்.

'சிறுகதையின் தொடக்கம் திடுதிப்பென காலப் (புயடடழி) எடுத்த மாதிரி நம் மனதில் தென்பட வேண்டும்' என்று சி.சு.செல்லப்பா கூறுகிறார். "சிறுகதையின் தொடக்கம் ஆவலைத் தூண்டுவதாக அமைய வேண்டும் அவர்கள் சலிப்படையும் முன் அவர்களை ஒரு நிகழ்ச்சியின் மத்தியில் இழுத்துச் சென்றுவிட வேண்டும். அதற்குக் கதையின் தொடக்கத்திலேயே வாசகரின் கவனம் கவரப்பட வேண்டும். இல்லாவிட்டால் கதை சுவையாக இல்லை என்று ஒதுக்கி விடுவர்" என்று பி.கோதண்டராமன் கூறுகிறார். பொதுவாகக் கதைப் பொருளுக்கும் கதைக் கருவிற்கும் ஏற்ற தொடக்கம் அமையும்போது சிறுகதைகள் சிறக்கின்றன.

கு.ப.ரா.வின் விடியுமா? என்ற கதை, 'தந்தியைக் கண்டு எல்லோரும் இடிந்து போனோம்' என்று தொடங்குகிறது. தந்தியை யார் அனுப்பியது, அதன் பின் என்ன நிகழ்ந்தது என்பதை அறிய இத்தொடக்கம் ஆவலைத் தூண்டுகிறது. பரபரப்புடன் கதை முழுவதையும் ஒரே மூச்சில் படித்துவிட முடிகின்றது. இதுவே சிறந்த தொடக்கத்தின் இயல்பாகும்.

சிறுகதைகள் சுவையான உரையாடலுடன் தொடங்குதலும் உண்டு. ந. பிச்சமூர்த்தியின் வித்தியாசம் என்ற கதை இதற்குச் சரியான எடுத்துக் காட்டாகும்.

"மனுஷாளெல்லாம் குரங்கின் வம்சம் என்று மேல்நாட்டுப் புஸ்தகங்களில் படிக்கிறோமே அது பொய் என்று சில சமயம் தோணுது. நிஜமாக இருந்தால் நல்லதென்று சில சமயம் தோன்றுகிறது?"

"'குரங்கு' என்று என்னை இப்பொழுது வைவதற்காகவா?"

"அடி அசடு, அதெல்லாம் இல்லை. அந்த மாதிரி இருந்தால் சிவனே என்று ஒரு புளியமரத்தையோ ஆலமரத்தையோ புடித்துக் கொண்டுவிடலாம். வாடகையும் கிடையாது. மரங்களுக்கும் பஞ்சமில்லை."

"மனுஷனாகி விட்ட பிறகு அந்தப் பேச்சேது? இனிமேல் ஆகவும் முடியாது."

இப்படித் தொடக்கமே சுவையான உரையாடலாக அமைந்து மேன்மேலும் படிக்கத் தூண்டுகிறது கதை.

வ.வே.சு. ஐயரின் மங்கையர்க்கரசியின் காதல் என்ற கதை இயற்கை வர்ணனையுடன் தொடங்குகிறது.

“எங்கே பார்த்தாலும் இருள் காரிருள், கருத்த மேகங்கள் வானத்தில் இடைவிடாது சென்று கொண்டிருக்கின்றன் சந்திரன் சற்று நேரத்திற்குத் தோன்றுகிறான். உடனே முன்னிலும் கனமான மேகங்களுக்கிடையில் மறைந்து விடுகிறான். காற்று சீறிக்கொண்டு செல்கிறது. தூரத்தில் புலியும் கரடியும் உறுமிக் கொண்டிருக்கின்றன. பக்கத்துக் கொல்லைகளில் நரிகள் ஊளையிட்ட வண்ணமாக இருக்கின்றன. அதோ அந்த ஆலமரத்தின் மீதிலிருந்து ஒரு கோட்டான் பயங்கரமாகக் கத்துகிறது”. இத்தொடக்கம், கதையில் ஏதோ பயங்கர நிகழ்ச்சி நடக்கப் போகிறது என்பதை உணர்த்தி மேலே படிக்கத் தூண்டுகிறது.

கி.சந்திரசேகரின் சாருபாலா என்ற கதை, பாத்திர வர்ணனையுடன் தொடங்குகிறது. “நிலைக் கண்ணாடியின் முன் நின்று கொண்டிருந்தாள் சாருபாலா. அவளுக்கு 40 வயது முடிந்திருந்தும் கண்ணாடியில் தெரிந்த உருவம் இன்னும் 10 வருடங்கள் குறைவாகவே மதிப்பிடும்படி இருந்தது. தன் இடது கையை மடக்கி இடுப்பில் குத்திட்டும், வலது கரத்தைத் தொங்க விட்டும் அவள் நின்ற மாதிரி, நாட்டியக் கலையில் அவளுக்குள்ள ஈடுபாட்டைப் புலப்படுத்தியது. ஓர் இழை கூட வெளுக்காத அவள் கேசம், தைலமிட்டுப் படிய வாரப்பட்டு, கோடிட்ட வகிட்டின் இருபுறமும் கறுத்து மின்னியது.....’ இப்படித் தொடங்கி, சாருபாலாவைப் பற்றி மேலும் அறிய ஆவலைத் தூண்டிப் படிக்க வைக்கின்றது அக்கதை.

மேற்கூறியவாறு, சிறுகதைத் தொடக்கம், வாசகர்களைக் காந்தம் போலக் கவர்ந்து, அவர்கள் சிந்தனையைச் சிதறவிடாது மேலே படிக்கத் தூண்ட வேண்டும்.

சிறுகதையின் முடிவு

சிறுகதையின் முடிவு இன்பகரமாக இருக்க வேண்டும் எனச் சிறுகதை வளர்ச்சியின் தொடக்கக் காலத்தில் எதிர்பார்க்கப்பட்டது. “பல ஆசிரியர்களுக்குக் கதை முடிவில் சுபம் என்று போட்டால் தான் திருப்தி. ஆனால் அது ஒரு பலவீனம்” என்பது கி.ரா. வின் கருத்தாகும். வாழ்வு என்பது எப்போதும் மகிழ்ச்சியானது அல்ல் அழுகையும் உண்டு, ஆகவே, துன்பியல் முடிவுகளையும் ஒத்துக் கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டது.

பெயின் என்ற திறனாய்வாளர், ‘ஒரு கதை இன்பியல் முடிவினாலோ அல்லது துன்பியல் முடிவினாலோ அழகு பெற்று விடாது. இவற்றில் எது சரியான, பொருத்தமான முடிவாக உணரப்படுமோ அத்தகைய முடிவால்தான் அக்கதை வெற்றிபெற முடியும்’ என்கிறார்.

கதையின் உச்ச நிலையும் முடிவும் ஒன்றாகச் சில கதைகளில் அமைந்திருக்கும். அதாவது, கதையின் உள்ளீடு உச்ச நிலையிலேயே முழுத் தெளிவைப் பெற்று அத்துடன் கதை முடிந்துவிடும். ஒரே பாத்திரத்தைச் சுற்றி வரும் கதையில் உச்ச நிலையும் முடிவும் ஒன்றாகவே இருக்கும். பெரும்பாலும், கதை உச்சக் கட்டத்தை அடைந்த பிறகு ஓரிரு வாக்கியங்களில் சுருக்கமாக முடிந்து விட வேண்டும்.

சிறுகதை உத்திகள்

சிறுகதை சிறப்பாக அமைய நடைத் தெளிவு, சிறந்த பாத்திரப் படைப்பு, வடிவச் செம்மை போன்றவை முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும். ஒரு படைப்பாளியை, மற்றொரு படைப்பாளியிடமிருந்து தனித்து இனங்காட்டுபவை அவர்கள் கையாளும் படைப்பாக்க உத்திகளே ஆகும். படைப்பாக்கத்தில் மொழிநடை, பாத்திரப் பண்பு இரண்டும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

நடை

நடை என்பது கதை ஆசிரியருக்கே உரிய தனித்த வெளிப்பாடாகும். ”நடை ஓர் ஆசிரியரின் மேற்சட்டை போன்றது அன்று உடம்பின் தோல் போன்றது” என்று கூறுவார் கார்லைல்.

“நடை அழகு என்பது ஆசிரியரின் தனிச்சொத்து என்று கருதினாலும், ஆசிரியர் அவர் வாழ்ந்த காலத்தின் செல்வாக்குக்கு உட்பட்டிருப்பதை மறுக்க இயலாது. காலத்தின் சிந்தனைகள், எண்ணங்கள் அவற்றை வெளியிடும் பேச்சு மொழி, எழுத்து மொழி இவ்வளவையும் ஜீரணித்துக் கொண்டுதான் படைப்பாளரும் தம்முடைய சொந்த நடையில் படைப்பை வெளியிடுகின்றார். எனவே நடைக்கு ஆசிரியர் மட்டும் காரணமாவதில்லை. அவர் வாழும் காலமும் காரணமாகிறது” என்கிறார் அகிலன்.

“நல்ல நடையானது படிப்பவரைக் கடைசி வரை சலிப்பூட்டாமல் தன்னோடு இழுத்துச் செல்ல வேண்டும்,” என்கிறார் பிளாபர் என்ற மேனாட்டுப் படைப்பாளி.

தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களில் வ.வே.சு. ஐயர், வ.ரா, புதுமைப்பித்தன், கல்கி, ந. பிச்சமூர்த்தி, அகிலன், ஜெயகாந்தன், சுஜாதா போன்றோர் தங்களுக்கென்று தனித்துவ நடையைக் கையாண்டுள்ளனர்.

வ.வே.சு. ஐயரின் தமிழ்நடை கம்பீரமானது. புதுமைப்பித்தன் நடை கிண்டல், எள்ளல் நிரம்பியது. புதுமை, விறுவிறுப்பு, எளிமை என்ற மூன்றின் கூட்டுறவு வ.ரா.வின் நடை. கேலி, கிண்டல், நகைச்சுவை, கற்பனை அனைத்தும் கலந்த நடை கல்கியின் நடை. லா.ச.ரா.வின் நடை இலக்கியத் தமிழில் சொற்சிக்கலாகவும்,வார்த்தை அலங்காரங்களாகவும் அமைந்து புதுப்பாங்கில் அமைந்திருக்கும். அகிலனின் நடை ஆற்றொழுக்கான நடை. ஜெயகாந்தனின் நடை யதார்த்த நடை.

பாத்திரங்களின் பேச்சுத் தமிழைப் பிரதிபலிக்கும் நடை அது. சென்னைத் தமிழில் பல கதைகளை எழுதியவர் ஜெயகாந்தன். சுஜாதாவின் நடை சுருக்கமும், திட்பமும் அதே சமயத்தில் சோதனை முயற்சியும் வாய்ந்தது. நாஞ்சில் நாட்டுப் பேச்சுத் தமிழைக் கையாண்டு சிறப்பாக எழுதியவர்கள் சுந்தர ராமசாமியும் நீல பத்மநாபனும் ஆவர். தஞ்சை மாவட்டப் பேச்சு மொழியைக் கையாண்டு எழுதியவர் தி. ஜானகிராமன். கி. ராஜநாராயணன், பூமணி, பா.செயப்பிரகாசம் (சூரியதீபன்) வண்ணதாசன் போன்றோர் திருநெல்வேலி வட்டார மொழியைக் கையாண்டவர்கள்.

புதுமைப்பித்தனின் நாசகாரக் கும்பல் என்ற கதையில் அமைந்த நடை இது.

“வே ! ஒமக்கு என்னத்துக்கு இந்தப் பெரிய எடத்துப் பொல்லாப்பு? அது பெரிய எடத்துக் காரியம். மூக்கம் பய படுதப் பாட்டெப் பாக்கலியா ! பண்ணையார்வாள் தான் கண்லே வெரலெ விட்டு ஆட்ராகளே ! ஒரு வேளை அது மேலெ அவுகளுக்குக் கண்ணாருக்கும். சவத்தெ விட்டுத் தள்ளும் !”

திருநெல்வேலி வட்டார வழக்குக் கலந்த நடையில் கிண்டல் தொனி வெளிப்பட எழுதியுள்ளார் அவர்.

கல்கியின் கைலாசமய்யர் காபரா என்ற கதையில் காணப்படும் நடை இது.

“பிரசித்தி பெற்ற தமிழ் எழுத்தாளரும் பிரகஸ்பதிச் சுப்பன் என்ற புனைபெயரால் புகழ்பெற்றவருமான ஸ்ரீபிராணதர்த்தி ஹரன் இன்று காலை மரணமடைந்த செய்தியை மிகுந்த துக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். மயிலாப்பூரில் அவருடைய சொந்த ஜாகையில் திடீரென்று உயிர்போன காரணத்தினால் அவருடைய வருந்தத் தக்க மரணம் நேரிட்டது. அவருக்கு அந்திம ஊர்வலத்துக்கும் கணக்கற்ற ஜனங்கள் - சுமார் ஒன்பது பேர் இருக்கலாம் - வந்து கௌரவித்ததிலிருந்து இந்த எழுத்தாளர் தமிழ் வாசகர் உள்ளத்தில் எவ்வளவு மகத்தான இடத்தைப் பெற்றிருந்தார் என்பதை ஊகிக்கலாம். அவருடைய அருமையான ஆத்மா சாந்தியடைவதாக”.

இது, நகைச்சுவையும் எள்ளலும் கலந்த கல்கியின் நடையாகும்.

உணர்ச்சியும், சொல்வேகமும் நிறைந்த லா.ச.ரா. வின் நடையைக் கீழ்க்காணும் பகுதியில் காணலாம்.

"திடீரென்று இடியோடு இடிமோதி ஒரு மின்னல் வானத்தின் வயிற்றைக் கிழித்தது. இன்னமும் என் கண் முன் நிற்கிறது, அம்மின்னல் மறைய மனமில்லாமல் தயங்கிய வெளிச்சத்தில் நான் கண்ட காட்சி ! குழுமிய கருமேகங்களும் காற்றில் திரை போல எழும்பி, குளவியாகக் கொட்டும் மின்னலும், கோபக்கனல் போல் சமுத்திரத்தின் சிவப்பும், அலைகளின் சுழிப்பும், அடிபட்ட நாய்போல் காற்றின் ஊளையும், பிணத்தண்டைப் பெண்கள் போல, ஆடி, ஆடி, அலைந்து அலைந்து, மரங்கள் அழும் கோரமும்.!"

இவ்வாறு, நடையின் போக்கு கதாசிரியர்க்குக் கதாசிரியர் மாறுபட்டு அவர்களுக்கென்று ஒரு தனித்துவத்தை ஏற்படுத்தித் தருவதுடன், கதையில் வரும் உணர்ச்சிகளுக்கு ஏற்ப வளைந்து கொடுக்கும் இயல்பைப் பெற்றிருக்க வேண்டும் என்பது இன்றியமையாததாகும்.

நோக்கு நிலை

ஒரு சிறுகதை அதைக் கூறும் கோணத்திலும் சிறந்திருக்க வேண்டும். கதை கூறும் கோணத்தை நோக்கு நிலை உத்தி என்று குறிப்பிடுவர். குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியை ஆசிரியர் எந்தக் கோணத்திலிருந்து பார்க்கிறார் ˙ எந்த விதமான உள்ளீட்டுக்கு எந்தக் கோணத்தைத் தேர்ந்தெடுக்கிறார் என்பது முக்கியம்.

ஆசிரியர் நோக்கு, முக்கியப் பாத்திர நோக்கு, கடிதம் அல்லது நாட்குறிப்பு மூலம் கதை கூறல் என்று பலவாறான நோக்கு நிலைகளில் கதைகள் கூறப்படுவதுண்டு. ஆசிரியர் கதை கூறும்போது, தன்னை உணர்த்தாமல் ('நான்' என்று கதைசொல்லிச் செல்லாமல்), படர்க்கையில் கதை கூறுவது சிறந்த முறையாகும். பெரும்பாலான கதைகள் இவ்வகையைச் சார்ந்தன. ஆசிரியரும் ஒரு பாத்திரமாக நின்று கதை கூறுவதுண்டு. புதுமைப்பித்தனின் கோபாலபுரம், விபரீத ஆசை, கு.ப.ரா. வின் விடியுமா?, மாயாவியின் பனித்திரை, தி.ஜானகிராமனின் கோபுர விளக்கு, அகிலனின் கரும்பு தின்னக் கூலி, சூடாமணியின் படிகள் போன்ற கதைகளில் ஆசிரியரே ஒரு பாத்திரமாக நின்று கதையைக் கூறுகிறார்.

விலங்குகள், அ˙றிணைப் பொருட்கள் போன்றவை கதை கூறுவதாகவும் சில கதைகள் அமைந்துள்ளன. வ.வே.சு. ஐயரின் குளத்தங்கரை அரசமரம், புதுமைப்பித்தனின் கட்டில் பேசுகிறது, வேதாளம் சொன்ன கதை போன்றவை இதற்குச் சான்றுகளாகும்.

சி.சு. செல்லப்பாவின் வலி, மௌனியின் பிரபஞ்சகானம், பிரக்ஞை வெளியில், புதுமைப்பித்தனின் நினைவுப்பாதை, க.நா.சு. வின் வரவேற்பு போன்ற கதைகளில் மனம் பேசுவதாக, மனம் பின்னோக்கி எண்ணுவதாகக் கதைகள் அமைந்துள்ளன.

இவ்வாறு, கதை கூறும் முறைகள் பலவாறாக அமைந்திருந்தாலும், ஆசிரியர் படர்க்கைக் கூற்றில் கதை கூறும் முறையே பெரும்பான்மையான கதைகளில் அமைந்துள்ளன.

பாத்திரப்படைப்பு

ஒரு படைப்பு என்ற நிலையில் முன்னிடம் வகிப்பவை பாத்திரங்கள்தாம். சிறுகதை சிறியகதை என்பதால் அதில் அவசியமற்ற பாத்திரங்கள் தவிர்க்கப்பட்டுத் தேர்ந்தெடுத்த பாத்திரங்களே இடம் பெறுகின்றன.

அன்றாட வாழ்வில் நாம் காணும் மனிதர்கள்தாம் சிறுகதைப் பாத்திரங்கள். தொடக்கத்தில் கதாசிரியர்கள் இலட்சியங்களுடன் தேர்ந்தெடுத்துப் படைத்த பாத்திரங்களும்

உண்டு. ஆனால் இன்று 'வாழ்க்கையில் இலட்சியமில்லாதவனை, ஏமாற்றமடைந்தவனை, ஏமாற்றுபவனை' என்று அனைவரையும் படைத்து வருகின்றனர்.

சிறுகதை ஆசிரியர்கள் ஒரு கதையைச் சொல்லாமல் பாத்திரங்களை மட்டும் உருவாக்கி உலவ விட முடியும். ஆனால் பாத்திரங்கள் இல்லாத கதை இருக்க முடியாது. எனவே பாத்திரங்கள்தாம் சிறுகதையின் அடிப்படை.

சிறுகதை ஆசிரியர்கள் தங்கள் பாத்திரங்களை அறிமுகப் படுத்தச் சில முறைகளைக் கையாளுவர். ஆசிரியர் நேரடியாகப் பாத்திரத்தை அறிமுகப்படுத்துவது ஒரு முறையாகும். காட்டாகப் புதுமைப்பித்தனின் திருக்குறள் குமரேசப் பிள்ளை என்ற கதையில், குமரேசப் பிள்ளையை நயமாக அறிமுகம் செய்வதைக் காணலாம்.

"நீங்கள் பட்டணம் போனால் கட்டாயம் பார்க்க வேண்டியது என்று சொல்கிறார்களே, உயிர்க்காலேஜ் செத்த காலேஜ் என்று. சென்னையில் அவை இரண்டிற்கும் அதிகமான வித்தியாசம் ஒன்றுமில்லை. அதில் இரண்டாவதாக ஒரு காலேஜ் சொன்னேனே அதில் அவசியமாக இருக்க வேண்டிய பொருள் எங்களின் அதிர்ஷ்டத்தாலும், சென்னையின் துரதிர்ஷ்டத்தாலும், எங்களூரிலேயே இருக்கிறது. அதுதான் எங்களூர் திருக்குறள் குமரேசப் பிள்ளை".

ஆசிரியர்கள் பாத்திரங்களை எவ்வாறு, எங்கிருந்து பார்த்துப் படைக்கின்றனர் என்பதை அவர்கள் சொல்வதிலிருந்தே காணலாம்.

தி. ஜானகிராமனின் சிலிர்ப்பு என்ற கதையில் வரும் காமாக்ஷி என்ற சிறுமி அழியாத ஓவியமாகப் படைக்கப் பட்டுள்ளாள். அப்பாத்திரம் உருவான விதத்தைப் பற்றி, ஆசிரியரே சொல்கிறார்:

"ஒரு சமயம் மூன்றாம் வகுப்புப் பெட்டியொன்றில் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். வறுமை நிரம்பிய ஒரு சிறுமி தன் வாழ்வுக்காக வசதியுள்ள ஒரு குடும்பத்தவரோடு சென்று கொண்டிருந்தாள். அந்தக் குழந்தையை இன்னும் என்னால் மறக்க முடியவில்லை. அப்போது உலகம் சிறை போலிருந்தது எனக்கு. அந்த நடுக்கம், ஒரு அச்ச நிலை, என்னுடைய உள்ளத்தை ஆட்டி வைத்தது. இதை வைத்துத்தான் சிலிர்ப்பு என்ற கதையை எழுதினேன்."

பாத்திரங்களைப் படைக்கும் போது ஆசிரியர்கள் அனுபவிக்கும் அவஸ்தை நிலையை ஆசிரியர் சி.சு. செல்லப்பா அழகாகக் கூறியுள்ளார்:

"ஒரு கழுகின் பார்வையும் பாம்பின் செவியும் சேர்ந்து அவன் இருதயத்தைக் கொட்டிக் கொட்டி உணர்ச்சி நெறி ஏற்றிக் கொண்டே இருக்கின்றன. சதா கிண்டிக் கிளறிக் கொண்டே இருக்கும் மன உளைச்சல், சேறும் சகதியுமான மனக்குழப்பம். பொதுவாக அவஸ்தை நிலை. இந்த அவஸ்தை நிலைதான் எந்தச் சிருஷ்டிக்கும் மூலவித்து. பிரமனிடம் அவன் சிருஷ்டிக்கு மூலக்கருத்து எங்கே கிடைத்தது என்று கேட்டால் அங்கும் அவஸ்தையின் எதிரொலிப்புதான் கிளம்பும். பாற்கடலிலிருந்து அமிர்த வசுக்கள் தோன்றினதும் இந்தக் கொந்தளிப்பின் நடுவேதான், ஏன், உபாதை தாங்க முடியாமல்தானே அவதாரங்களே பிறந்தன."

தாம் வெவ்வேறு மனிதர்களிடத்தில் கண்டு மகிழ்ந்த பண்புகளை யெல்லாம் ஒரே மனிதனிடத்தில் புகுத்தித் தாமே ஒரு புதிய பாத்திரத்தை உருவாக்குவதும் ஆசிரியரின் திறமையாகும்.

மேற்கூறியவாறு சிறுகதைகளில் பாத்திரங்கள் உயிர்பெற்று, வாசகர்கள் மனத்தில் உலாவரும் விதத்தில் படைக்கப்பட்டுள்ளன. காலத்தால் அழியாத பாத்திரப் படைப்புகள் எழுத்தாளனின் எழுத்துக்குக் கிடைத்த வெற்றியாகும்.

சிறுகதை வகைகள்

சிறுகதைகளை மூன்றாக வகைப்படுத்துவார் ஸ்டீவன்சன் என்ற அறிஞர்.

(1) கருவால் வந்த கதை (வுாந ளுவழசல ழக ீடழவ)

(2) பாத்திரத்தால், அதன் குணநலன்களால் உருவான கதை (வுாந ளுவழசல ழக ஊாயசயஉவநச)

(3) பாத்திரங்களின் உணர்வுகளை மட்டும் முக்கியத்துவப்படுத்தும் கதை (வுாந ளுவழசல ழக ஐஅிசநளளழெ)

இவை தவிர, நிகழ்ச்சியால் சிறக்கும் கதை என்ற வகையையும் இணைத்துக் கொள்ளலாம்.

கருக்கதை

சிறந்த சிறுகதை ஆசிரியர்களான மாப்பசான், ஆண்டன் செகாவ், ஓ ஹென்றி போன்றவர்கள் கதைக்கருவினால் சிறந்த கதைகளைப் படைத்துள்ளனர். சின்னஞ் சிறிய கதைக்குள் ருசிகரமான கதைக்கருவைப் பதித்து இவர்கள் கதை சொல்கின்றனர். புதுமைப்பித்தன் கருவினால் சிறக்கும் பல கதைகளைப் படைத்துள்ளார். சங்குத் தேவனின் தர்மம் என்னும் கதை இதற்கு நல்ல சான்றாகும். முறுக்குப் பாட்டி முத்தாச்சி என்ற கிழவி தன் ஒரே மகளுக்குக் கல்யாணம் செய்வதற்காகத் தங்கத்தில் காதணி செய்து மடியில் கட்டிக் கொண்டு, காட்டில் தனிவழி நடந்து செல்கிறாள். சங்குத் தேவன் என்ற பெயர் பெற்ற வழிப்பறித் திருடனின் பயம் அவளை ஆட்டி வைக்கிறது. வழியில் அந்தத் திருடனே அவளோடு நடந்து வருகிறான். கிழவிக்கு அவனை யாரென்று தெரியவில்லை. வழித்துணை என்று நம்பி அவனிடமே சங்குத்தேவனைத் திட்டுகிறாள். தன் மடிக்கனத்தையும், மகள் கல்யாணத்தையும் சொல்லுகிறாள். திருடன் பத்திரமாக அவளை ஊர் எல்லை வரையில் கொண்டு வந்து விட்டு, அவளிடம் ஒரு பணப்பையைக் கொடுக்கிறான். கிழவி அவன் பெயரைக் கேட்கிறாள். சங்குத் தேவன் என்று பதில் வருகிறது.

இக்கதையில் ஓஹென்றியின் கதையில் வருவது போலக் கதையின் கடைசிப் பகுதியில் வாசகர்கள் வியக்கக்கூடிய ஒரு முடிவு வருகிறது. கெட்டவன் எல்லா நேரங்களிலும் கெட்டவனாக இருக்க மாட்டான் என்ற கதைக் கருவைக் கொண்டு உருவாக்கப்பட்ட இச்சிறுகதை வாசகர்களுக்குச் சுவைதரும் விதத்தில் படைக்கப்பட்டுள்ளது.

பாத்திரக் கதை

புதுமைப்பித்தனுடைய பொன்னகரம் என்ற கதை அம்மாளு என்ற பாத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட கதையாகும். அம்மாளு சாதாரண ஏழைக் கூலித் தொழிலாளி, அவள் கணவன் குதிரை வண்டி ஓட்டுபவன். அவன் அடிபட்டு மூச்சுப் பேச்சில்லாமல் கிடந்தபோது அவனுக்குப் பால் கஞ்சி ஊற்றுவதற்காக அவள் தன் கற்பை விலை பேசுகிறாள். கற்பு என்பது பாதுகாத்துப் போற்றக் கூடிய ஒன்று என்ற மேல்தட்டு வர்க்கத்தின் நம்பிக்கைகளை அறியாத அம்மாளு கணவனுக்காகச் செய்த காரியத்தைப் பற்றிப் பேசுவது பொன்னகரம் கதையாகும். மூன்று பக்கங்களில் அமைந்த இதில் அம்மாளு இல்லாவிட்டால் கதை இல்லை. அவளே, அவள் செய்கையே கதையை உருவாக்கியிருக்கிறது என்று பார்க்கும் போது இக்கதை பாத்திரத்தால் சிறந்த கதை என்றே கூற வேண்டும்.

கதைகளைப் படைக்கும் நெறிகளில் ஜெயகாந்தன் பாத்திர உருவாக்கத்திலேயே அதிகக் கவனம் செலுத்துகிறார். அவர் படைத்த பாத்திரங்கள் வாழ்க்கையில் நம் கண்முன்னால் காண்பவராவார்கள். ஜெயகாந்தனின் படைப்புகளில் அவர்கள் தாம் வாழும் சூழலிலிருந்து அப்படியே எழுந்து வந்து இயங்குகிறார்கள் உறவாடுகிறார்கள் பேசுகிறார்கள் சிந்திக்கிறார்கள் கோபப்படுகிறார்கள்சிரிக்கிறார்கள் அழுகிறார்கள். ஒரு தாயைப் போலத் தம் பாத்திரங்களோடு ஜெயகாந்தன் ஒன்றி நிற்கின்றார்.

ஜெயகாந்தனைப் போன்றுதான் தி.ஜானகிராமனும் பாத்திரங்களை உருவாக்குவதில் சிறந்து விளங்குகின்றார்.

நிகழ்ச்சிக் கதை

அமெரிக்க எழுத்தாளர் எட்கர் ஆலன்போ, ஹெமிங்வே, இங்கிலாந்தைச் சேர்ந்த ஜாக்கப்ஸ் போன்றவர்கள் கதையம்சம் இல்லாமல் சுவையான நிகழ்ச்சியை மட்டும் அடிப்படையாகக் கொண்டு கதைகள் படைத்துப் புகழ்பெற்றனர். புதுமைப்பித்தன் இவ்வகைக் கதையையும் படைத்துள்ளார். நினைவுப் பாதை என்ற கதையில் கதையம்சம் என்ற ஒன்று இல்லை. இழவு வீட்டில், இரண்டாவது நாள் விடிவெள்ளி கிளம்பும் நேரத்தில் தொடங்கி, சுமார் இரண்டே நாழிகைகளுக்குள் நடக்கும் நிகழ்ச்சிகளைச் சொல்லி, நான்கே பக்கங்களுக்குள் கதையை முடித்துவிடுகிறார் புதுமைப்பித்தன். மேலெழுந்தவாறு பார்த்தால் திடீரென்று தொடங்கித் திடீரென்று முடிவுபெற்ற கதைபோல் தோன்றும். ஆனால் ஆழ்ந்து நோக்கினால் படிப்பவரின் மனப்பக்குவத்திற்குத் தகுந்தாற்போல்,நிகழ்ச்சிகளுக்குப் பின்னே உள்ள மறைமுகமான கதை, படிப்பவரின் உள்ளத்தில் வளர்ந்து கொண்டே போகும். இக்கதையின் முழு உருவம் சிந்திக்கச் சிந்திக்கப் புலனாகும் விதத்தில் அமைந்துள்ளது. அதாவது தலையும் காலும் இல்லாத முண்டம் போன்ற ஓர் ஓவியத்தை வரைந்து, அதற்கு முன்னும் பின்னும் உள்ள அழகுகளைக் கற்பனையால் கண்டு மகிழச் செய்வதே இந்த வகைக் கதையின் நோக்கம்.

உணர்ச்சிக் கதை

காதல், பசி, கோபம், துக்கம், நகைச்சுவை, விரகதாபம் என்று ஏதாவது ஓர் உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு சில கதைகள் படைக்கப்படுகின்றன. புதுமைப்பித்தனின் கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் என்ற சிறுகதையில் நகைச்சுவை உணர்வு மேலோங்கி இருக்கின்றது. கல்கியின் பெரும்பான்மையான சிறுகதைகளில் நகைச்சுவையுணர்வே மேலோங்கி இருக்கும். புதுமைப்பித்தனின் வாடாமல்லி கதை, அதன் நாயகி சரசுவின் தன்னுணர்ச்சியை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. விரகதாபமா அல்லது சுய இரக்கமா அவ்வுணர்ச்சி எது என்பதை வாசகர்களின் கருத்திற்கே விட்டுவிடுகிறார்.

கல்யாணி என்ற கதையில், கல்யாணியின் விரகதாபத்தை மையப்படுத்திப் பேசியுள்ளார் புதுமைப்பித்தன். ஜெயகாந்தன் வாய்ச்சொற்கள் என்ற கதையில் கண்ணில்லாத இருவரின் காதல் உணர்ச்சியைக் கதைப்படுத்தியுள்ளார்.

“அந்த இரவு சம்பவத்திற்குப் பின் பகலும் இரவும் கண்ணப்பனைப் பற்றிய நினைவுகளிலேயே சஞ்சரித்துக் கொண்டிருந்தாள் ருக்குமணி. மானசீகமாய் அவன் குரலையும் பாட்டையும் கேட்டுக் கேட்டு மகிழ்ந்தாள். வாழ்க்கை முழுதும் அவன் பாடிக்கொண்டே இருக்க, பக்கத்தில் உட்கார்ந்து தான் கேட்டுக் கொண்டே இருப்பதைக் காட்டிலும் உலகத்தில் வேறு ஒரு இன்பம் இருப்பதாக அவளால் நம்ப முடியவில்லை”

கு.ப.ரா. வின் கதைகள் காம உணர்வின் உளவியல் பக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன.

இவ்வாறு, மனித உணர்வுகளை முக்கியத்துவப் படுத்தி எழுதித் தமக்கென்று முத்திரை பதித்த எழுத்தாளர்களும் உள்ளனர்.

இன்றைய இலக்கிய உலகில் சிறுகதைகளுக்கென்று ஒரு தனிஇடம் உண்டு. இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் கதை வாசிப்பில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி, வீடியோ போன்றவற்றின் வருகையால் கூட மக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் சற்றும் குறையவில்லை. அதற்குக் காரணம் நம் சிறுகதை ஆசிரியர்களின் படைப்புத் திறன் ஆகும். அத்துடன் ஓய்வு நேரத்தில் மட்டுமன்றிப் பயண

நேரத்திலும் படிக்க எளிதாக இருப்பதும் ஒரு காரணமாகும். இதே காரணத்தினால் தான் நாவலைக் காட்டிலும் சிறுகதை வாசிப்பு இன்று முன்பை விட அதிகரித்துள்ளது.

வினாக்கள்

1. எல்லரி செட்ஜ்விக் என்ற அறிஞர் சிறுகதைக்குத் தரும் விளக்கம் யாது?

2. புகழ்பெற்ற மேலை நாட்டுச் சிறுகதை ஆசிரியர் சிலரின் பெயரைக் குறிப்பிடுக.

3. சிறுகதைக்கும் நாவலுக்கும் உள்ள அடிப்படை ஒற்றுமை என்ன?

4. சிறுகதைக்கும் நாவலுக்கும் உள்ள வேறுபாடுகள் இரண்டைக் குறிப்பிடுக.

5. சிறுகதைகள் எவற்றைப் பொருளாக ∴ கருவாகக் கொண்டு எழுதப்படுகின்றன?

6.பாத்திரங்களின் பெயர்களைக் கொண்ட சிறுகதைகள் இரண்டினை எடுத்துக்காட்டுக.

7. எத்தகைய முடிவால் சிறுகதை வெற்றி பெறும் என்று பெயின் கூறுகின்றார்?

8. கல்கியின் நடை எவ்வாறு அமைந்துள்ளது?

9. வ.வே.சு. ஐயரின் குளத்தங்கரை அரசமரம் என்ற கதையில் அமைந்துள்ள நோக்கு நிலை யாது?

10. ஸ்டீவன்சன் கூறும் மூவகைக் கதைகள் யாவை?

கட்டுரை

கட்டுரை என்பது ஒரு குறிப்பிட்ட தலைப்பு பற்றி ஒரு எழுத்தாளர் தனது கண்ணோட்டத்தை வெளிப்படுத்தும் உரைநடை வடிவமாகும். இது முன்னுரை, பொருளுரை, முடிவுரை ஆகிய மூன்று முக்கிய பகுதிகளைக் கொண்டது. கட்டுரைகள் வருணனை, விளக்கம், நிகழ்ச்சி, விவாதம் போன்ற பல்வேறு வடிவங்களில் எழுதப்படுகின்றன.

கட்டுரையின் கூறுகள்.

முன்னுரை: கட்டுரையின் தொடக்கத்தில், தலைப்பைப் பற்றிய சுருக்கமான அறிமுகம் இடம்பெற வேண்டும்.

பொருளுரை: இது கட்டுரையின் முக்கிய பகுதியாகும். இதில் தலைப்பு தொடர்பான கருத்துக்கள், தகவல்கள் மற்றும் விளக்கங்கள் விரிவாக அளிக்கப்படும்.

முடிவுரை: கட்டுரையின் முடிவில், முக்கிய கருத்துக்களைத் தொகுத்து, ஒரு சுருக்கமான முடிவை வழங்க வேண்டும்.

கட்டுரையின் வகைகள்

வருணனைக் கட்டுரை: ஒரு பொருள், இடம் அல்லது ஆளைப் பற்றி விவரித்து எழுதுவது.

விளக்கக் கட்டுரை: ஒரு கருத்தை விளக்கி, அதைப் பற்றிய விரிவான தகவல்களை வழங்குவது.

நிகழ்ச்சிக் கட்டுரை: ஒரு நிகழ்வைப் பற்றி விவரித்து எழுதுவது.

விவாதக் கட்டுரை: ஒரு குறிப்பிட்ட தலைப்பைப் பற்றி விவாதித்து, தனது கருத்தை முன்வைப்பது.

கட்டுரைகள் பல்வேறு தலைப்புகளில் எழுதப்படுகின்றன. இந்தப் பக்கத்தில் உள்ள கட்டுரைகளைப் போல இவை "எனது செல்ல உயிரி", "கடமை", "உழவுத் தொழில்", "மழை நாள்", "பூகோள வெப்பமயமாதல்" போன்ற பல வகைகளில் இருக்கலாம்.

கட்டுரைகளை நடை மற்றும் நோக்கம்

ரீதியாக பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

தர்க்கக் கட்டுரை (யுசபரஅநவெயவளைந நுளளயல)

செய்திக் கட்டுரை (யுசவஉைடந)

விவரணக் கட்டுரை (னுநளஉசனிவளைந நுளளயல)

பகுத்தாய்வுக் கட்டுரை (யுயெடலவஉையட நுளளயல)

செயல்முறை விளக்கக் கட்டுரை (சழஉநளள யுயெடலளளை நுளளயல)

ஒத்தன்மை விளக்கக் கட்டுரை (யுயெடழபல டீயளநன நுளளயல)

எடுத்துரைத்தல் கட்டுரை (யேசசயவளைந நுளளயல)

வகைப்படுத்தல் கட்டுரை (ஊடயளளகைஉயவழைெ நுளளயல)

ஒப்பீட்டு கட்டுரை (ஊழஅியசளைழெ யனெ ஊழவெசயளவ நுளளயல)

புனைவுக் கட்டுரை (கஉைவழையெட நளளயல)

ஆயினும், "ஆங்கிலத்தில் "நளளயல, யசவஉைடந, கநயவரசந றசவைவைபெ" என நுண்ணியதாக வேறுபடுத்துவனவற்றைத் தமிழில் இன்னும் வேறுபடுத்திச் சுட்டுவதில்லை" என்று கா. சிவத்தம்பி சுட்டிகாட்டுகின்றார்.

பொதுவாக தர்க்க கட்டுரைகளே தமிழில் முக்கியம் பெறுகின்றன. தர்க்க கட்டுரைகள் தனது வாதங்களை (சநஅளைநள) முன் வைத்து, வாதங்களால் நிலைநிறுத்தப்படும் முடிவுகளுக்கு (உழஎடரளழைளெ) இட்டு செல்லும். ஒரு செய்திக் கட்டுரை (யசவஉைடந) செய்தி பற்றிய ஐந்து முக்கிய கேள்விகளான "என்ன? எங்கே? எப்பொழுது? ஏன்? யார்?" என்பவற்றிற்கு உடனடியாக பதில் தர முயலும். விஞ்ஞான விடயங்களை பகிர முனையும் ஆய்வு கட்டுரைகள் விபரண, தர்க்க, செயல்முறை நடைகளை தகுந்தவாறு பயன்படுத்தி விடயங்களை முன்நிறுத்தும்.

கட்டுரையின் நடை

கா. சிவத்தம்பி "நடை" பின்வரும் கூறுகளால் நிர்ணயிக்கப்படுகின்றது என்கிறார்.

சொல் தெரிவு

சொல்லும் திறன், உத்தி

அணிகள் (சொல் அணிகள்)

வாக்கியங்கள் அளவு, அமைவு முறைமை

மேலும், "நடை என்பது கவிதையோ, உரையோ கையாளப்படும் முறைமை பற்றியதாகும்", அது "எழுதுபவர்களின் ஆளுமையோடு தொடர்புடையது" என்கிறார்.

பேச்சு தமிழ் நடை எதிர் கட்டுரைத் தமிழ் நடை

பேச்சு தமிழுக்கும் உரைநடை (கட்டுரை) தமிழுக்கும் வேறுபாடு உண்டு. பேச்சு தமிழ் பாமரர் தன்மை ("டழற ளவயவரள") உடையதாகவும், கட்டுரை தமிழ் பண்டித தன்மை

(”ாபொ ளவயவரள”) உடையதாகவும், கருதுவோரும் உளர். கட்டுரைக்கு என்றும் கருத்துச் செறிவு, தெளிவு முக்கியம். வாசகரின் நேரத்தை வீணாக்காமல் இருக்க சீரமைக்கப்பட்ட (நனவைநன), ஒழுங்கமைக்கப்பட்ட (ழசபயணைநன), கட்டமைப்பு (ளவசரஉவரசந) கட்டுரைக்கு அவசியம். ஆகையால், பேச்சு தமிழ் போல எழுத வேண்டும் என்ற கருத்து நடைமுறையில் இல்லை. இருப்பினும், பேச்சு தமிழில் உள்ள எளிய சொற்களை உபயோகப்படுத்தல் மூலம் அதன் எளிமையையும், பேச்சு தமிழில் உள்ள வேகத்தையும் கட்டுரைப் பெற்றுக் கொள்ளும்.

நாட்டுப்புற தமிழ் நடை எதிர் கட்டுரைத் தமிழ் நடை

தமிழ் ஒலி சார்ந்த மொழி. அதுவே அதற்குப் பலமும், பலவீனமும். ஒவ்வொரு பிரதேசத் தமிழர்களினதும் உச்சரிப்பு, நடை சற்று வேறுபடும். ஆகையால், பிரதேச மொழி நடையில் எழுதும் பொழுது, ஒரு சொல் பல வடிவங்களைப் (ளிநடடபை) பெறுகின்றது. அது பரிச்சியம் அற்ற வாசகர்களைக் குழப்பி விடுகின்றது. இலக்கிய நயத்திற்காகக் கதைகளிலோ, கவிதைகளிலோ பிரதேச தமிழ் நடையைப் பயன்படுத்தினாலும், தகவல்களைத் தரும் கட்டுரைகளில் சீரிய கட்டுரைத் தமிழ் நடையைப் பயன்படுத்துவதே பன்முகத் தமிழரும் புரிந்து கொள்ள உதவும்.

சிறந்த கட்டுரையின் கூறுகள்

(1) ஒருமைப்பாடு (ருவைல)

ஒரு கட்டுரை ஒரே பொருளைப்பற்றியதா யிருத்தல் வேண்டும் பல பொருள்பற்றியதாயும் மற்றொன்று விரித்தலாயுமிருத்தல் கூடாது. ஒவ்வொரு பாகியும் ஒவ்வொரு கருத்தையே கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பொருட்பொலிவு

சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் முறையில், பல சிறந்த கருத்துகள் செறிந்திருப்பது கட்டுரைக்குச் சிறப்பாம். கட்டுரைப் பொருள் சரியாக வரையறுக்கப் பெறுவது (னுநகவைவைழை) இன்றியமையாதது.

(3) ஒழுங்கு (ழுசனநச)

ஒரு பொருளைப்பற்றிய கருத்துகளையெல்லாம் முன்பின் தொடர்பு கெடாதவாறு முறைப்படுத்தி, அம் முறைப்படியே கோவை பட எழுதுவது, பொருள் தெளிவையும் கட்டுரைப் பொலிவையும் உண்டுபண்ணும்.

(4) பாகியமைப்பு (யசயபசயிா ளுவசரஉவரசந)

ஒவ்வொரு கருத்தையும் ஒவ்வொரு தனிப்பாகியில் அமைத்து வரைதல் வேண்டும். ஒரு பெருங்கருத்தில் பல உட்கருத்துகளிருக்கு மாயின், அவ் வுட்கருத்துகளையும் வெவ்வேறு பாகியிலமைத்தல் வேண்டும். தோற்றப் பொலிவு, படிப்பு வசதி, பொருள் தெளிவு ஆகிய மூன்றும் பாகியமைப்பின் பயனாம்.

குறிப்பு: கல்லூரி மாணவரும், சிலர், பாகியமைப்பின்றிக் கட்டுரை வரைவதால், உயர்நிலைப்பள்ளி வகுப்புகளிலேயே தமிழாசிரியர் இப்பிழையைத் திருத்திவிடல் வேண்டும்.

(5) நன்னடை (புழழன ளுவலடந)

ஒவ்வொரு வரைவாளரும், தம்தம் திறமைக்கேற்ற இயல்பான நடையில் எழுத்துப்பிழை, சொற்பிழை, புணர்ச்சிப்பிழை, வாக்கியப்பிழை, பொருட்பிழை, மரபுப்பிழை ஆகிய அறுவகைப் பிழைகளுமின்றி, இலக்கண நடையாய் வரைதல் வேண்டும்.

ஒரு மாணவன் தன் சொல்லறிவிற் கேற்றபடி, எளிய சொற்களையும் சொற்றொடர்களையுமாவது, உயர்ந்த சொற்களையும் சொற்றொடர்களையுமாவது அமைத்தெழுதலாம். ஆயின், இலக்கணப்பிழை எதுவுமிருத்தல் கூடாது. ஆகவே, சொன்னடை பலதிறப் படினும், இலக்கணநடை அவை யெல்லாவற்றிற்கும் இன்றியமையாதது என்பதை, நினைவிலிருத்துதல் வேண்டும்.

உயர்ந்த சொன்னடை என்பது, "ஆண் யானை கத்தினது" என்பதைக் "களிறு பிளிறினது" என்று கூறும் தகுந்த சொன்னடையேயன்றி, "யானை சென்றது" என்பதை "வேழம் படர்ந்தது" என்று கூறும் அருஞ்சொல் நடையன்று.

உயர்நடை எல்லார்க்கும் இயல்பாய் அமையாமையானும், பெரும்பாலும் அறிஞரைப் பின்பற்றிப் பயில்வதாலேயே பலர்க்கு உயர்நடை அமைவதானும், நடையிற் பிறரைப் பின்பற்றிப் பயிலுந்திறம் கடியப்படுவதன்று. ஆயின், பின்பற்றப்படுவார் இலக்கண அறிவில் உயர்ந்தாராயிருத்தல் வேண்டும். திருமிகு மறைமலையடிகள், திருவாளன்மார் கலியாணசுந்தர முதலியார், கதிரேசச் செட்டியார், வேங்கடசாமி நாட்டார், ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, மகிழ்நனார் (க. ப. சந்தோஷம்), சேதுப்பிள்ளை, ஜெகவீரபாண்டியனார், டாக்டர் மு. வரதராசனார் முதலியோர் நடைகளை மாணவர் பின்பற்றுவது நன்று.

பிறர் நடையைப் பின்பற்றுதலாவது, அவர் நடையைப் பன் முறை படித்தும் வரைந்தும் பயின்று அதைத் தன்னடையாக்கிக் கொள்வதல்லது, அவர் எழுதியதில் ஒரு பகுதியை உருப்போட்டுக் கொள்வதன்று. "காக்கை அன்னநடை நடக்கப்போய்த் தன்னடையுங் கெட்டது போல", பிறர்நடையைப் பின்பற்றும் திறமையில்லாதார் பிறர் நடையைப் பின்பற்றின், தன்நடையுங் கெடுவரென்பது திண்ணம்.

தகுசொல், இன்சொல், இணைமொழி, மரபுத்தொடர் மொழி, பழமொழி, அணிமொழி ஆகியவை நடையைச் சிறப்பிக்கும்.

வழக்கிலிருப்பினும் இல்லாவிடினும், தமிழ்ச்சொல் லிருக்கும் போது அதற்குப் பதிலாய் அயற்சொல்லை வழங்குதல் கூடாது. வழக்கு வீழ்ந்த தமிழ்ச்சொல்லின் பொருளைத் தெரிவித்தற்பொருட்டு அதனையடுத்துப் பிறைக்கோட்டில் வழக்கூன்றிய அயற்சொல்லைக் குறித்தல் வேண்டும்.

தெளிவும் துப்புரவும் (டுநபடிடைவைல யனெ நேயவநெளள)

கட்டுரை முழுதும் இருண்ட மையில் தெளிவாக எழுதப்பெறல் வேண்டும். விளங்காத அளவு கூட்டெழுத்தா யெழுதுதல் கூடாது. அடித்தடித் தெழுதாமல் ஒரே தடவையில் செவ்வையாய் எழுதப் பழகிக்கொள்ளவேண்டும்.

எண்ணாமல் விரைந்தெழுதுவதினாலேயே பெரும்பாலும் அடித்தெழுத நேர்கிறது. அடித்தெழுதுவதைச் சற்று எண்ணியெழுதினால், முதன்முறையிலேயே திருத்தமாய் எழுதிவிடலாம்.

எழுத்துவேகத்தைப் படிப்படியாய்த்தான் மிகுத்தல் வேண்டும்.

பொருத்தவீதம் (சிழிழசவழைெ)

ஒவ்வொரு பொருட்பகுதியையும் கருத்தையும்பற்றி, அதற்குரிய அளவே எழுதுதல் வேண்டும். ஒரு கட்டுரையின் முகவுரையை விரித்தும் முக்கியப் பகுதியைச் சுருக்கியும் அல்லது ஒரு பொருளின் நன்மை தீமையைப்பற்றி வரையும்போது, நன்மையைப்பற்றி விரித்தும் தீமைமையைப்பற்றிச் சுருக்கியும் அல்லது ஒரு பொருளைப் பற்றிய பல கருத்துகளில், ஒன்றைப்பற்றி விரித்தும் பிறவற்றைப் பற்றிச் சுருக்கியும் வரைதல் கூடாது.

மாணவர் கட்டுரை காலத்தாலும் அளவாலும் வரம்புபட்டிருத்தலின், ஒரு பகுதியைச் சுருக்கின் மற்றொரு பகுதியை விரித்தே எழுத நேரும். இதனால் குன்றக்கூறல் மிகைபடக்கூறல் என்னும் குற்றங்கள் உண்டாம். ஆதலால் ஒவ்வொரு கருத்தின் அளவையும் உள்ளத்தில் நிலையிட்டுக்கொண்டு, அதன்பின் அதனைப்பற்றி அதற்குரிய அளவு வரைதல் வேண்டும்.

அளவு மிகாமை

எந்தக் கட்டுரையும் குறித்த அளவிற்கு மிஞ்சியிருத்தல் கூடாது. அரைத்தாட் பக்கத்தில் (குழழடளஉயி ளணைந), நடுநிலைப்பள்ளி மாணவர் அரைப் பக்கமும், உயர்நிலைப் பள்ளி மாணவர் ஒரு பக்கமும், இடை நடு (ஐவெநசஅநனயைவந) மாணவர் இரு பக்கமும், கலையிளைஞன் (.டீ.யு.) மாணவரும் அவருக்கு மேற்பட்ட வகுப்பினரும் முப்பக்கமும், வரைதல் வேண்டும். இவ் அளவீடு தேர்வு (பரீட்சை) பற்றிக் குறித்தது. மாணவர் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பொதுவாய்க் கட்டுரை வரையும் குறிப்புப் புத்தகம் (ழேவநடிழழம) கால் தாள் பக்கங் கொண்டதாதலின், அதற்குத்தக, மேற்குறித்த அளவை இருமடங்காக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

குறித்த அளவிற்குக் காற்பக்கம் அரைப்பக்கம் கூடினாற் குற்றமின்று. ஆயின் ஒரு பக்கமும் அதற்குமேலும் கூடுதல் கூடாது.

முடிவு (ஊழஒடரளழைெ ழச ீநசளழயெட வுழரஉா)

ஒரு காரியத்தின் விளைவு அல்லது பயன் எவ்வளவு முக்கியமானதோ, அவ்வளவு முக்கியமானதே ஒரு கட்டுரையின் முடிபும். அதுவே கட்டுரையாளரின் கருத்தாகும். அது ஓர் உண்மைக் கூற்றாகவாவது ஒழுக்க விதியாகவாவது இருக்கலாம்.

ஒரு காரியத்தை அல்லது பொருளைப்பற்றிய பிறர் கருத்துத் தமக்கு உடம்பாடாயின், ஒருவர் பிறர் கருத்தையும் தம் கருத்தாகக் குறிக்கலாம்.

ஒருவர் ஒரு பொருளைப்பற்றித் தாம் கொண்ட கருத்தைக் குறிப்பதே அறநூலுக்கு ஒத்ததாயினும், மாணவர் அரசியற் சட்ட திட்டங்கட்கு உட்பட்டிருத்தலால், முழுப் பேச்செழுத்துரிமை இல்லாத விடத் தெல்லாம் அரசியற்கு மாறாகத் தாங்கொண்ட கருத்துகளை மாற்றியோ மறைத்தோ எழுதுவதே உலகியலுக் கொத்த தாகும். கட்டுரை முடிபின் வடிவு, என முப்பகுதிகளை யுடைன.

எந்தக் கட்டுரையையும் முகவுரையின்றித் திடுமென்று தொடங்குவது, முகப்பில்லாத மண்டபம்போல், அத்துணைச் சிறவாது. வரலாற்றுக் கட்டுரைகளிலும், வரணனைக் கட்டுரைகளிலும், இன்னோரன்ன பிறவற்றிலும், முகவுரை யின்றியும் தொடங்கலாம். ஆயினும், அங்கும், ஒரு தொடரளவாகவாவது முகவுரை இருப்பது நன்று. எடுத்துக்காட்டாக, வள்ளுவரைப்பற்றி வரையும்போது, "உலகம் போற்றும் அறநூலாசிரியரான," என்னும் தொடர் முகவுரையாக அமையலாம். மேலும், ஓர் ஆளின் பிறப்பு, அல்லது ஒரு பொருளின் தோற்றம், அல்லது ஒரு நிகழ்ச்சியின் அமையம்பற்றித் தொடக்கத்திற் கூறும் பகுதியையும், முகவுரையாகக் கொள்ளலாம். இனிக் கட்டுரைப் பொருளின் வரையறையும் முகவுரையாய் அமையலாம்.

கட்டுரையின் உடலானது, முகவுரைக்கும், முடிவுரைக்கும் இடையில், முக்கியப் பகுதியாயும் பேரளவினதாயும் பல கருத்துகளைத் தழுவினதாயும் பெரும்பாலும் பல பாகிகளைக் கொண்டதாயுமிருத்தல் வேண்டும்.

முகவுரை, உடல், முடிவு ஆகிய மூன்றும், முறையே, தலையும் உடலும் காலும் (அல்லது வாலும்) போன்றிருத்தலின் அதற்குத்தக, முகவுரை முடிவுரைகளைச் சுருக்கமாகவும், உடலுரையைப் பெருக்கமாகவும் அமைத்தல் வேண்டும்.

எப்பொருளிலும் முதலும் முடிவும் பெருங் கவனிப்பிற் கிடமாயிருத்தலின், கட்டுரையின் முதல் வாக்கியம் வேட்கையைத் தூண்டுதலாகவும், இறுதிவாக்கியம் அதைத் தீர்த்தலாகவும், இருத்தல் வேண்டும்.

நாடகம்

நாடகம் என்பது ஒரு கலை அல்லது பலவகைக் கலைகளின் கூட்டுச் சேர்க்கையாகும். நாட்டு ு அகம் ஸ்ரீ நாடகம். அதாவது, நாட்டு மக்களின் அகத்தை பிரதிபலிக்கும் கலை. இயல் இசை நாடகம் என்ற தமிழ் இலக்கிய மூன்றாம் வடிவம். கதை ஒன்றை அரங்கிலே நடிப்பு, ஒப்பனை, இசை, ஓவியம், அரங்கமைப்பு, இலக்கியம், ஒலி, ஒளி முதலான கலைகளின் ஒன்றிணைப்பால் படைத்துக் காட்டுவதே நாடகம். இவற்றை எழுதுபவர்கள் நாடகாசிரியர் என அறியப்படுவார். தமிழ் நாடகத் தந்தை என பம்மல் கல்யாண சம்பந்தனார் அழைக்கப்படுகிறார்.

விளக்கமும் செயல்பாடுகளும்

“இயல்“ என்பது சொல் வடிவம்,

“இசை“ என்பது சொற்களோடு, இசையும் சேர்ந்த வடிவம்,

“நாடகம்“ என்பது, “இயல்“, “இசை“ மற்றும் உடல் அசைவுகளை அடிப்படையாகக் கொண்ட வடிவம்.

”உலகமே ஒரு நாடக மேடை” என்றார் சேக்ஸ்பியர். உலகில் நாடகங்கள் பலவகைகளாக நடத்தப்படுகின்றன. தமிழை, தமிழகத்தினை பொருத்தமட்டில் நாடகம் என்பது தெருக்கூத்து மற்றும் பாவை நாடகங்களாக நடத்தப்படுகின்றன.

நாடகம்

முதலில், நாடகம் என்றால் என்ன என்றும், என்ன பொருளில் இச்சொல் கையாளப்படுகிறது என்றும் பார்ப்போம்.

சொல் விளக்கம்

நாடகம் என்னும் சொல்லை நாடு ு அகம் என இரு சொல்லாக்கிப் பார்ப்போம். “நாடு” என்பது நாட்டில் வாழ்கின்ற மக்களைக் குறிக்கும். “அகம்” என்பது மக்களின் உள்ளங்களைக் குறிக்கும். “மக்கள் உள்ளத்தை மகிழ்விக்கும் ஒரு கலை வடிவம் நாடகம்” என்னும் அளவில் இச்சொல் விளக்கம் பெறுகிறது.

நாடு ு அகம் என்பதை மாற்றி அகம்நாடு என வைத்துப் பார்த்தாலும், ‘அகத்தை நாடு’, ‘உள்ளத்தை நாடு’ என்னும் பொருள் தருவதை உணரலாம்.

நாடகம் என்னும் சொல்லைப் பகுத்துப் பார்த்து ஆராய்ச்சி செய்த நாடகக் கலைஞர் ஔவை தி.க. சண்முகம், பின்வருமாறு விளக்கம் தருகிறார்.

‘நாடு ு அகம்ஸ்ரீ நாடகம். நாட்டை அகத்தில் கொண்டது நாடகம். அதாவது, நாட்டின் சென்ற காலத்தையும் நிகழ் காலத்தையும் வருங்காலத்தையும் தன் அகத்தே காட்டுவதால் நாடு-அகம்-நாடகம் என்று பெயர் பெற்றிருக்கிறது. நாடு-அகம். அதாவது, அகம்-நாடு உன்னுள் நோக்கு உன்னை உணர் அகத்தை நாடு என்றெல்லாம் பலவிதமாக அறிஞர்கள் இதற்குப் பொருள் கூறுவார்கள்’ என்கிறார் தி.க. சண்முகம்.

நாடகமும் விளையாட்டும்

இந்த நாடகம், விளையாட்டு உணர்ச்சியில் இருந்து தோன்றியது என்பது பலர் கருத்து. இந்த விளையாட்டு உணர்ச்சி, கலையுணர்ச்சி மிக்கவர்களிடம் இருந்து ஒரு கலையாக மாறியது.

மனிதர்கள் விளையாடிய விளையாட்டு மரப்பொம்மைகளின் விளையாட்டாகவும், தோல்பாவை விளையாட்டாகவும், நிழற்பாவை விளையாட்டாகவும் மாறியது. இவற்றை ஒவ்வொன்றாகச் சுருங்கிய நிலையில் அறிவோம்.

பொம்மலாட்டம்

பொம்மலாட்டம் மரத்தால் ஆகிய பொம்மைகளைக் கையில் பிடித்து இப்படியும் அப்படியும் நகர்த்துவர் எதிரெதிராக இரு பொம்மைகளை மோதச் செய்வர் இரண்டையும் அன்புடன் நெருங்கச் செய்வர் ஆரவாரத்துடன் குதிக்கச் செய்வர். இவ்வாறு பல வகைகளில் பொம்மை விளையாட்டை முதலில் காட்டினார்கள். இது பொம்மலாட்டம் அல்லது மரப்பாவைக் கூத்து எனப் பெயர் பெற்றது.

மரத்தால் செய்த பொம்மைக்குப் பதிலாக மண்ணாலும் பழைய துணிகளாலும் பொம்மை செய்து செயற்கையாகக் கைகால்களைப் பொருத்தினார்கள். இப்பொம்மைகளின் கை கால்கள், கழுத்து முதலிய உறுப்புகள் அசையும் விதமாகக் கயிறுகளைக் கட்டி அக்கயிறுகளை இயக்கும் வேலையைக் கலைஞர்கள் தம் கைகளில் வைத்துக் கொண்டனர். தம் கைகளின் அசைவிலேயே பொம்மைகளின் அசைவுகளைக் காட்டினார்கள். இந்த விளையாட்டு பொம்மலாட்டம் எனப்பட்டது.

தோல்பாவைக் கூத்து

தோல்பாவைக் கூத்து மரப்பொம்மை, மண் பொம்மை செய்ததைப் போலவே விலங்குகளின் தோல்களைக் கொண்டும் உருவங்களை வடித்தனர். மென்மையான தோல்களின் மூலம் மனிதர்கள், மிருகங்கள், பறவைகள் போன்ற உருவங்களைச் செய்தனர். இப்பொம்மைகள் வளைந்து நெளிந்து விடாமல் இருப்பதற்காக இவற்றை மூங்கில் தப்பை (சிறு குச்சிப்பட்டைகள்) களில் தைத்தனர். இந்தத் தோல் பாவைகளைக் கொண்டு விளையாட்டுக் காட்டினார்கள். இது தோல்பாவைக் கூத்து எனப்பட்டது.

நிழற்பாவைக் கூத்து

தோல் பாவைகளைப் பார்வையாளர்களுக்கு நேரடியாகக் காட்டாமல் வெள்ளைத் திரைச் சீலைகளுக்குப் பின்னால், ஒளிபொருந்திய விளக்குகளை வைத்து அவ்வொளியில் தோல்பாவைகளைக் காட்டினார்கள். இவ்வாறு காட்டும் போது, தோல் பாவைகளின் பிம்பம் தான் பார்வையாளர்களுக்குத் தெரியுமே தவிர நேரடியாகத் தோல் பாவைகளைப் பார்க்க முடியாது. இப்படிக் காட்டும் முறை தோல் பாவைக் கூத்து எனப்பட்டது.

தோல் பாவைக் கூத்து, நிழற்பாவைக் கூத்து ஆகியவற்றில் இராமாயணம், பாரதம் ஆகியவற்றில் இருந்து எடுக்கப்பட்ட கதை நிகழ்ச்சிகளும் சேர்த்துக் கூறப்பட்டன. இக்கதை நிகழ்ச்சிகள் பெருகப் பெருக நாடகத் தன்மையும் பெருகிக் கொண்டே வந்தது.

நிழற்பாவைக் கூத்து

நாடக முன்னோட்டம்

மரப்பாவைக் கூத்து, பொம்மலாட்டம், தோல்பாவைக் கூத்து, நிழற்பாவைக் கூத்து ஆகியவை தாம் நாடக உருவாக்கத்துக்கு முன்னோடிக் கலைகளாக விளங்கின.

பொம்மை மனிதன் இருந்த இடத்தில் உண்மை மனிதன் வந்தான் பொம்மைகளுக்குச் செய்த ஒப்பனை உண்மை மனிதனுக்குச் செய்யப்பட்டது. பொம்மை விளையாட்டு நாடகவிளையாட்டாக மாறியது.

இப்போதும் கூட நாடகத்தைத் தமிழ் நாட்டில் பல இடங்களில் விளையாட்டு என்று சொல்லும் பழக்கம் இருக்கிறது. ஆங்கிலத்திலும் கூட நாடகத்துக்குப் 'பிளே' (டயல) என்னும் இன்னொரு சொல் உண்டு.

விளையாட்டு நிலையில் தோன்றிய நாடகம் அறிவும் உணர்ச்சியும் சார்ந்த கலையாக மாறியது. அப்போது நாடகத்துக்கென்று கதை தேவைப்பட்டது. இந்திய நாடகங்களிலும், தமிழ் நாடகங்களிலும் தொடக்கத்தில் நாடகக் கதைகள் இராமாயணத்திலிருந்தும் மகாபாரதத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டன. காலம் செல்லச் செல்ல நாடகத்துக்கெனத் தனிக்கதைகள் உருவாயின.

நாடகக் கதைகள் இன்பியலாகவும் துன்பியலாகவும் வடிவமைக்கப்பட்டன. இந்திய நாடகங்கள் அனைத்தும் இன்பியல் முடிவினைக் கொண்டவையாகவே விளங்கின. மேனாட்டு நாடகங்கள் பெரும்பாலும் துன்பியல் முடிவைக் கொண்டவையாக இருந்தன. இந்திய நாடக அமைப்பில் துன்பியல் முடிவு வந்தால்கூட அதை இன்பியலாக மாற்றி அமைக்கும் பண்பு காணப்பட்டது. எதுவும் சுபமாகவே முடிய வேண்டும் என்னும் இந்திய மனோபாவமே அதற்குக் காரணமாகும்.

நாடகமும் கூத்தும்

உலக நாடகங்களை ஆராய்ச்சி செய்தவர்கள் இருபெரும் பிரிவுகளில் நாடகங்களை அடக்கிக் காட்டுவர். அவை,

1. இன்பியல் நாடகங்கள்

2. துன்பியல் நாடகங்கள்

மகிழ்ச்சியான நிலையில் நாடகம் முடிவுற்றால் இன்பியல் நாடகம் என்றும் துயர முடிவைக் கொண்டிருந்தால் துன்பியல் நாடகம் என்றும் நாடகங்களைப் பிரித்துக் காட்டினர்.

தமிழ் நாடகங்களிலும் பிற இந்திய மொழி நாடகங்களிலும் துன்பியல் முடிவு என்பது விரும்பி ஏற்றுக் கொண்ட ஒன்று அன்று. இந்திய நாடகங்கள் பெரும்பாலும் இன்பியல் முடிவைக் கொண்டவையாகவே இருக்கும். இருபதாம் நூற்றாண்டில் மேனாட்டு நாடகச் செல்வாக்கு இந்தியாவில் ஏற்பட்ட பின்னர்தான் துன்பியல் முடிவுகள் நாடகங்களில் பரவின.

பழைய நாடக வகைகள்

பழைய தமிழ் நாடகங்களும் இருபதாம் நூற்றாண்டு நாடகங்களும் வேறு வகையான பிரிவுகளைக் கொண்டிருந்தன. தமிழ் நாடகங்களைப் பொறுத்தவரையில் பழந்தமிழ் உரையாசிரியர்கள் பின்வருமாறு வகைப்படுத்தினர். அவை,

1. வேத்தியல்

2. பொதுவியல்

அரசர்களும் அரசர்களை ஒத்த பெரியவர்களும் காணும் நாடக வகை வேத்தியல். பொதுமக்கள் காண்பதற்குரிய நாடக வகை பொதுவியல்.

இந்த நாடகம் அல்லது கூத்து வகைகளை இன்னும் நுட்பமாகச் சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் பகுத்துக் காட்டுகிறார்.

வசைக் கூத்து-புகழ்க் கூத்து

வரிக் கூத்து-வரிசாந்திக் கூத்து

சாந்திக் கூத்து-விநோதக் கூத்து

ஆரியக் கூத்து-தமிழ்க் கூத்து

இயல்புக் கூத்து-தேசிக்கூத்து

என்பன அடியார்க்கு நல்லார் வகைப்படுத்தும் பத்துக் கூத்து வகைகள்.

இருபதாம் நூற்றாண்டு நாடக வகைகள்

மேடை நாடகமே தம் வாழ்வின் பெரும்பணி என்று செயல்பட்டவர் அவ்வை தி.க. சண்முகம். அவர், மேடை நாடகங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம் எனக் கூறுகிறார்.

"தமிழ் நாடகங்களைப் பல்வேறு வகைகளாகப் பிரிக்கலாம். புராண நாடகம், பக்தி இலக்கிய நாடகம், வரலாற்று நாடகம், கற்பனை நாடகம், பக்தி இலக்கிய நாடகம், சமுதாய நாடகம், சமுதாயச் சீர்திருத்த நாடகம், தேசிய நாடகம், நகைச்சுவை நாடகம் என நாடகங்களை இவ்வாறு பலவகைப்படுத்திப் பார்க்க வேண்டும். இந்த நாடகங்களோடு பிரச்சார நாடகம் என்னும் ஒரு பிரிவையும் சேர்த்துக் கொள்ளலாம்" என்று கூறுகிறார்.

1. புராண நாடகம்

சிவலீலா, கிருஷ்ணலீலா, சக்திலீலா, மகாபாரதம் போன்றவை புராண இதிகாச நாடகங்கள்.

2. வரலாற்று நாடகம்

இராஜராஜ சோழன், வீரபாண்டிய கட்டபொம்மன், தஞ்சை நாயக்கர் தாழ்வு, இமயத்தில் நாம் போன்றவை வரலாற்று நாடகங்கள்.

3. கற்பனை நாடகம்

இரண்டு நண்பர்கள், லீலாவதி, சுலோசனா, வேதாள உலகம் போன்றவை கற்பனை நாடகங்கள்.

4. பக்தி நாடகம்

நந்தனார், சிறுத்தொண்டர், பிரகலாதன், மார்க்கண்டேயர் போன்றவை பக்தி நாடகங்கள்.

5. சமுதாய நாடகம்

உயிரோவியம், வேலைக்காரி, நாலுவேலி நிலம், டம்பாச்சாரி விலாசம் போன்றவை சமுதாய நாடகங்கள்.

6. சீர்திருத்த நாடகம்

அந்தமான் கைதி, இரத்தக் கண்ணீர், இழந்த காதல், வாழ்வில் இன்பம் போன்றவை சமுதாயச் சீர்திருத்த நாடகங்கள்.

7. நகைச்சுவை நாடகம்

சபாபதி, பிரசிடெண்ட் பஞ்சாட்சரம், துப்பறியும் சாம்பு, ஒரு சொந்த வீடு வாடகை வீடாகிறது போன்றவை நகைச்சுவை நாடகங்கள்.

8. பிரச்சார நாடகம்

பதிபக்தி, ஐம்பதும் அறுபதும், விலங்கு மனிதன், காகிதப் பூ போன்றவை பிரசார நாடகங்கள்.

இலக்கிய நாடக வகைகள்

மேடையில் நடிக்கப்பெறும் நாடகங்களை வகைப்படுத்துவதைப் போல் இலக்கியமாக எழுதப்பெறும் நாடகங்களை இருவகையில் பிரிக்கலாம். அவை,

1) உரைநடை நாடகங்கள்

2) செய்யுள் நாடகங்கள்

இந்த இருவகை நாடகங்களும் நடிப்பதற்கும் படிப்பதற்குமாக எழுதப்படும் நாடகங்களாகும்.

காட்சி அமைப்பையும் காண்போரையும் மனத்துள் கொள்ளாமல் மொழிநடைக்கும் கருத்துக்கும் மட்டுமே முன்னுரிமை தந்து எழுதப் பெறும் நாடகங்களை அரங்கேற்ற முடியாது. இவற்றைப் படித்து மட்டுமே இன்புறலாம்.

மொழிநடைக்கும் முதன்மை தந்து, காட்சி அமைப்பையும் முன்னிறுத்தி எழுதப்படும் நாடகங்களைக் கண்டு மகிழ்வதுடன் கற்றும் மகிழலாம்.

நாடகங்களின் புதிய வகைப்பாடுகள்

மேற்குறிப்பிட்டவைகளைத் தவிரவும், நாடகங்களை ஆய்வு செய்த பேராசிரியர்கள் மேலும் பல பிரிவுகளைக் குறிக்கின்றனர்.

பின்புல நிலையில் நாடக வகைகள்

நாடக ஆக்கத்துக்குரிய கருத்துப் பின்புலம், மேடைப் பின்புலம், அமைப்புப் பின்புலம், மொழிப் பின்புலம் போன்றவற்றை எல்லாம் மனம் கொண்டு நாடக ஆய்வாளர்கள் நாடகங்களை வகைப்படுத்துகின்றனர்.

பேராசிரியர் ஆறு. அழகப்பன் பின்வரும் வகைகளைத் தருகிறார். அவை:

1) தெருக்கூத்து

2) குழந்தை நாடகம்

3) வானொலி நாடகம்

4) மொழிபெயர்ப்பு நாடகம்

5) மேடை நாடகம்

6) அமெச்சூர் நாடகம்

7) தேசிய நாடகம்

8) ஓரங்க நாடகம்

9) செய்யுள் நாடகம்

10) ஒளி நாடகம்

எனப் பத்து வகையாகத் தமிழ் நாடகங்களைப் பிரிக்கிறார். இந்த ஒவ்வொரு நாடக வகையிலும் உள்ளே அமையும் சிறு சிறு வகைகளையும் அவர் குறிக்கிறார்.

பேராசிரியர் ஆறு. அழகப்பன் நாடகங்களை வகைப்படுத்துவதைப் போல் பேராசிரியர் ஏ.என்.பெருமாள் இலக்கிய நிலையில் நாடகங்களை வகைப்படுத்துகிறார். அவை:

1) பாடல் நாடகங்கள்

2) பாடல் உரைநடை நாடகங்கள்

3) உரைநடை நாடகங்கள்

4) கவிதை நாடகங்கள்

5) உரைநடை கலந்த கவிதை நாடகங்கள்

என ஐந்தாக வகைப்படுத்துகிறார்.

பாடல் நாடகங்கள் என்று அவர் குறிப்பிடுவது இசைப்பாட்டு நாடகங்களையே ஆகும். ஆங்கிலத்தில் இவ்வகை நாடகங்களை ஆபெரா (ழிநசய) என்று குறிப்பிடுவர். பதினெட்டாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் நடிக்கப் பெற்ற நாடகங்கள் இசைப்பாடல் வடிவிலேயே அமைந்திருந்ததால் பாடல் நாடகங்கள் என்று பகுத்துள்ளார்.

இசைப்பாட்டு நாடகங்களில் சிறிது சிறிது உரைநடை இடம் பெற்ற நிலையில் அவை, பாடல் உரைநடை நாடக வகைக்கு உள்ளாயிற்று.

இசைப்பாடல், உரைநடை என்னும் கலப்பு நீங்கி முழுவதும் உரைநடையாகவே அமைந்த நாடகங்கள் பிற்காலத்தில் தோன்றின. இவ்வகை நாடகத்தைத் தோற்றுவித்த பெருமை பம்மல் சம்பந்த முதலியாரைச் சாரும். அவரால் 1891 ஆம் ஆண்டு அரங்கேற்றப்பட்ட புஷ்பவல்லி என்னும் நாடகம் முழுமையாக உரைநடையில் தோன்றிய முதல் உரையாடல் நாடகமாகும். தமிழில் தோன்றிய உரைநடை நாடகங்களில் மிகுந்த புகழ்பெற்றவையாக இராஜராஜ சோழன், வீரசுதந்திரம், பூவுக்குள் பூகம்பம், ஊஞ்சல் மனம் எனப் பல நாடகங்கள் திகழ்கின்றன.

வடிவ நிலையில் நாடக வகைகள்

நாடகங்களின் அமைப்பு அல்லது வடிவம் என்னும் அடிப்படையிலும் நாடகங்கள் வகைப்படுத்தப்படுகின்றன. வடிவ நிலையில் நாடகங்களை மூன்று வகையில் பகுத்துள்ளனர்.

பொதுவாக நாடகங்கள் பலவிதமான அளவுகளைக் கொண்டு விளங்குகின்றன. நாடகக் கதைக் கருவுக்கேற்ப இந்த அளவுகள் வேறுபடுகின்றன.

1. ஓரங்க நாடகம்

ஒரு சில நிகழ்ச்சியை அல்லது உணர்வை ஒரு சில களங்களில் முழுமைப்படுத்திக் காட்டுவதை ஓரங்க நாடகம் என்பர்.

2. குறு நாடகம்

குறுநாடகம் என்பது ஓரங்க நாடகத்தை விடச் சற்றுப் பெரியது. இந்த நாடகம் நடைபெறும் கால அளவு ஒரு மணி நேரத்திலிருந்து ஒன்றரை மணி நேரம் வரை இருக்கும்.

நாடக உருவாக்கத்துக்கு மையமாக அமையும் கருத்துடன் சில துணைக் கருத்துகளும் குறுநாடகத்தில் இடம் பெறும்.

3. ஓரங்க நாடகமும் குறு நாடகமும்

ஓரங்க நாடகம் சிறுகதை போன்றது குறுநாடகம் குறும்புதினம் போன்றது பெருநாடகம் புதினம் போன்றது.

4. நீள நாடகம்

பெருநாடகத்தை முழு நீள நாடகம் என்றும் கூறுவர். இவ்வகை நாடகத்தில் கால அளவு இரண்டுமணி நேரத்திலிருந்து மூன்றரை மணிநேரம் வரை அமையும்.

நாடகத்தின் மையக் கருத்தை நிலைநாட்டுவதற்காகக் கிளைக் கருத்தும் துணைக்கருத்தும் பெருநாடகத்தில் அமையும். அங்கம், காட்சி, காலங்கள் என்னும் நிலைகளில் நாடகம் விரிவாக்கம் பெறும்.

ஓரங்க நாடகம், குறுநாடகம், பெருநாடகம் ஆகியன நடிப்பின் கால அளவைக் கொண்டும் அமைப்புக் கூறுகளைக் கொண்டும் பகுத்தறியப் படுகின்றன.

உணர்ச்சிக் கூறுகளும் நாடக வகைகளும்

மனித குலத்தின் அனைத்து வகையான உணர்ச்சிக் கூறுகளும் கலக்கும் இடம் நாடகமாகும். பாத்திரப் படைப்பின் வழியாகவும் கதை அமைப்பின் வழியாகவும் எட்டுவகை மெய்ப்பாடுகளும் உணர்ச்சிகளும் நாடகத்தில் ஒன்று சேர்ந்து காண்போரை மகிழ்விக்கின்றது. இத்தகைய உணர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டும் நாடகங்கள் வகைப்படுத்தப்படுகின்றன. அவை பின்வருமாறு:

1) வேக உணர்ச்சி நாடகம் (ஆநடழனசயஅய)

2) துப்பறியும் நாடகம் (னுநவநஉவளைந ீடயலள)

3) மணவினை நாடகம் (றுநனனனபெ ஆயளஙரந)

4) உளவியல் நாடகம் (ீளலஉாழடழபஉையட ிடயலள)

5) அங்கத நாடகம் (ளுயவசைஉையட ீடயலள)

6) நையாண்டி நாடகம் (டீரசடநளஙரந)

7) கேலிக் கூத்து நாடகம் (குயசஉந)

ஆகியன உணர்ச்சிக்கூறு நாடக வகையுள் அடங்கும்.

நாடகங்களைப் பல அடிப்படைகளில் வகைப்படுத்தினாலும் அவை,

1) இன்பியல் நாடகம்

2) துன்பியல் நாடகம்

என்னும் இரு பெரிய வகையுள் முழுமை பெற்று விடும்.

நாடக வகைகளின் எடுத்துக்காட்டுகள்

முன்னர் விளக்கிக் காட்டப்பட்டுள்ள நாடக வகைகள் அனைத்துக்கும் எடுத்துக் காட்டுகளை அளித்தால் இக்கட்டுரை மிகவும் விரிந்து விடும். எனவே முக்கியமான சிலவற்றுக்கு மட்டும் எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம்.

இன்பியல் நாடகம்

நாடகத்தின் முடிவு மகிழ்ச்சியாகவோ இன்பமாகவோ கொண்டு முடிவது இன்பியல் நாடகமாகும். பல சோதனைகளைக் கடந்து இறுதியில் மன்னன் மணிமுடி சூடுவதாகவோ, பல இன்னல்களைக் கடந்து காதலர்கள் தம் காதலில் வெற்றி பெறுவதாகவோ, மக்களுக்காகப் போராடும் தலைவன் தோல்விகளை மீறி இறுதியில் வெற்றி பெறுவதாகவோ காட்டுவது இன்பியல் நாடகமாகும்.

பொதுவாக இந்திய நாடகங்களுக்குத் துன்பியல் முடிவு இல்லை. துன்பமே முடிவாக அமையும் என்றால்கூட நாடக இறுதியில் தலைமைக் கதைமாந்தர்க்கு மோட்சம் தந்து இன்பியலாக்குவது இந்திய நாடக மரபு.

வாலி மோட்சம், கர்ண மோட்சம் போன்ற புராணப் பின்னணி நாடகங்கள் இன்பியலாகவே முடிவு பெறுகின்றன. தமிழ்ச் சூழ்நிலையில் உருவான நொண்டி நாடகம் இன்பியலாகவே முடிவுறுகிறது.

துன்பியல் நாடகம்

துன்பியல் நாடக அமைப்பு தமிழில் மட்டுமல்லாமல் இந்திய நாடக வரலாற்றில் கூடப் புதுமையான ஒன்றாகும். மேலைநாட்டு நாடகச் செல்வாக்கினால் தமிழில் முழுத் துன்பியல் நாடகம் உருவானது. அதுவரை தமிழில் இருந்த நாடக மரபும் துன்பியலுக்கேற்ப நெகிழ்வடைந்தது.

தமிழில் உருவான முதல் துன்பியல் நாடகமாக, கள்வர் தலைவன் என்னும் நாடகம் கருதப்படுகிறது. இதன் ஆசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் ஆவார். நல்லவர் நலிவு, தீயவர் வெற்றி, இன்பத்தின் வீழ்ச்சி, துன்பத்தின் எழுச்சி, நன்மையின் தோல்வி, தீமையின் வெற்றி, இரக்கத்தின் இழிவு, அரக்க குணத்தின் மேன்மை என்னும் முரண்களின் முழு வெளிப்பாடாக இந்த நாடகம் அமைந்துள்ளது. நாடகத்தில் சாவுகளின் எண்ணிக்கையை மிகுதியாகக் கொண்ட இந்த நாடகம் 1894 ஆம் ஆண்டு எழுதி நடிக்கப்பட்டது.

பம்மல் சம்பந்த முதலியாரைப் பின்பற்றிப் பல நாடகாசிரியர்கள் துன்பியல் நாடகங்களை எழுதினர். ஆ.பழனி எழுதிய அனிச்ச அடி அருமையான துன்பியல் நாடகமாகும். அரங்கசாமி எழுதிய கனகை அவலம் பொதிந்த நாடகம். சூ.இன்னாசி எழுதிய தேசத் தியாகி நல்ல உள்ளம் கொண்டவரின் மரணத்தைச் சுட்டும் அவல நாடகம். ஏ.என். பெருமாள் எழுதிய பனிமொழி என்னும் கவிதை நாடகம் பெண்ணின் தியாகத்தைச் சுட்டும் அவல நாடகம்.

இசைப்பாட்டு நாடகங்கள்

தமிழில் 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் உருவான நாடகங்கள் அனைத்தும் பாடல் நாடகங்களே ஆகும். பாடல் நாடகங்களை இசைப்பாட்டு நாடகங்கள் என்றும் கூறுவர். இவ்வகை நாடகங்களில் உரைநடைப் பேச்சு மிகமிகக் குறைந்து இருக்கும்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாடகம், மேடை அமைப்பு சார் கலையாக மாறத் தொடங்கிய போது, இசைப்பாட்டு நாடகம் குறையத் தொடங்கியது. காலப் போக்கில் நாட்டுப்புறச் சிற்றூர்களில் மட்டும் இத்தகைய நாடகங்கள் நடித்துக் காட்டப்பட்டன.

அரிச்சந்திரன் நாடகம், பிரகலாதன் நாடகம், திரௌபதி வஸ்திராபஹரணம் மற்றும் காசி விசுவநாத முதலியாரின் டம்பாச்சாரி விலாசம் ஆகிய நாடகங்கள் இசைப்பாட்டு நாடகங்களே ஆகும்.

இசைப்பாட்டு உரைநடை நாடகங்கள்

மொழியில் உரைநடைப் பயன்பாடு வளர வளர, நாடகத்திலும் அவை இடம்பெறத் தொடங்கின. காலப்போக்கில் இசைப் பாடல்களே மறைந்து போகும் அளவுக்கு உரைநடை முழுவதுமாக நாடகத்தில் இடம் பெற்றது. ஆனாலும் இசைப்பாடல் வழியாக நாடகத்தை நடித்துப் பழகிய கலைஞர்கள் எளிதில் இசைப்பாட்டை விட முடியாது தவித்தனர். எனவே இசைப்பாட்டு, உரைநடை என்ற இரண்டின் கலவையாக நாடகம் உருவாயின.

1877 ஆம் ஆண்டு தி. இராமசாமி ராஜு என்பவர் எழுதிய பிரதாபச் சந்திர விலாசம் என்னும் நாடகம் உரைநடையும் பாடலும் கலந்து எழுதியதாகும். சங்கரதாஸ் சுவாமிகள்

எழுதிய வள்ளி திருமணம், கோவலன் நாடகம், சதி அனுசூயா, பிரகலாதா ஆகிய நாடகங்களும் இவ்வாறு உருவானவையே ஆகும்.

உரைநடை நாடகங்கள்

கதை மாந்தர்களின் உரையாடல், எதிர் உரையாடல் ஆகியவற்றில் இசைப்பாடலே கலவாமல் முழுக்க முழுக்க உரைநடை மட்டுமே அமைந்த நாடகங்கள் உரைநடை நாடகங்கள் ஆகும். பம்மல் சம்பந்த முதலியார் 1891 ஆம் ஆண்டு எழுதிய புஷ்பவல்லி என்னும் நாடகம் உரைநடை நாடகம் ஆகும். தமிழில் இப்போது ஆயிரக்கணக்கான உரைநடை நாடகங்கள் உள்ளன.

இசைப் பாட்டுக்களையே கேட்டு மகிழ்ந்த இரசிகர்களை மகிழ்விப்பதற்காகச் சில பாடல்கள் மட்டும் உரைநடை நாடகங்களில் சேர்க்கப்பட்டன.

கவிதை நாடகங்கள்

உரையாடல், எதிர் உரையாடல் என அனைத்தும் கவிதையிலேயே அமைந்து உருவான நாடகம் கவிதை நாடகமாகும். கவிதை நாடகம் யாப்பு நெறிகளுக்குக் கட்டுப்பட்டது செய்யுள் வடிவில் அமைந்தது. கவிதை வகை நாடகங்களும் மேலை நாட்டு நாடக வகையைப் பின்பற்றி எழுந்தனவே ஆகும்.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை

தமிழில் எழுந்த முதல் கவிதை நாடகம் மனோன்மணீயமாகும். இதை எழுதியவர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை ஆவார். 1891 ஆம் ஆண்டு இந்த நாடகம் எழுதப்பட்டது. சுந்தரம் பிள்ளையைத் தொடர்ந்து பலர் கவிதை நாடகங்களை எழுதினர். மறைந்த மாநகர், புகழேந்தி, புலவர் உள்ளம், அன்னி மிஞிலி எனப் பல கவிதை நாடகங்கள் தமிழில் வெளிவந்துள்ளன.

தமிழ் இலக்கியச் செய்திகளும், தமிழக வரலாற்றுச் செய்திகளும் கவிதை நாடக ஆசிரியர்களுக்குக் கருப்பொருள் ஆகின. கனகை, புகழேந்தி, அனிச்ச அடி, ஆபுத்திரன், வேங்கையின் வேந்தன், நெடுமான் அஞ்சி, இரவிவர்மன், இராஜாதேசிங்கு, சாகுந்தலை, தமயந்தி போன்ற கவிதை நாடகங்கள் இலக்கியம் மற்றும் வரலாற்றுப் பின்புலங்களிலிருந்து உருவானவையாகும்.

உரைநடைக் கலப்பு

இசைப்பாட்டு நாடகத்தில் சிற்சில இடங்களில் உரைநடை கலப்பதைப் போல் கவிதை நாடகத்தில் உரைநடை கலப்பதும் உண்டு. இந்த உரைநடை கதைமாந்தர் தன்மைக்கேற்பவும் நாடகாசிரியரின் தேவைக்கேற்பவும் இடம் பெறும். பேராசிரியர் க. பெருமாள் எழுதிய மாபெரும் அறம், பெரிய வெற்றி ஆகிய கவிதை நாடகங்களில் உரைநடை சிறிதளவு கலந்துள்ளது. வேறு சிலரின் நாடகங்களிலும் உரைநடைக் கலப்பு உண்டு.

சமய நாடகங்கள்

தமிழ்நாட்டில் சைவ, வைணவ நாடகங்களும் வீரவழிபாட்டு நாடகங்களும் கிறித்தவ, இசுலாமிய நாடகங்களும் எழுதப்பட்டிருக்கின்றன.

சைவ, வைணவ நாடகங்கள்

புராண, இதிகாசக் கதைகள், ஸ்தல புராணக் கதைகள், சிறு தெய்வ வணக்கக் கதைகள், சமயத் தொண்டர்களின் கதைகள் ஆகியவை இவ்வகை நாடகங்களில் இடம் பெற்றுள்ளன.

நாட்டுப்புற மக்களின் கலை இரசனைக்கேற்ப நாட்டுப்புறத் தெய்வம் பற்றிய கதைகளும், நாட்டுப்புறத் தலைவர்கள் பற்றிய கதைகளும் நாடகங்களாக ஆக்கம் பெற்றுள்ளன. இராமாயணம், மகாபாரதம் ஆகிய கதைகளும் அதன் கிளைக்கதைகளும் சமூகத்தின் அனைத்து மக்களுக்கான நாடகங்களாக ஆக்கம் பெற்றுள்ளன.

பெரிய புராணம், கந்த புராணம், திருவிளையாடற் புராணம் ஆகியவற்றை ஒட்டியும் பல நாடகங்கள் உருவாகி இருக்கின்றன.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாடகம் (1916), மாணிக்கவாசகர் (1919), திருஞான சம்மந்தர் சரித்திர நாடகம் (1929), திருநாவுக்கரசர் நாடகம் (1969) ஆகிய சைவ சமய நாடகங்களும், தொண்டரடிப் பொடியாழ்வார் (1929), மார்கழி நோன்பு அல்லது ஸ்ரீ ஆண்டாள் நோன்பு (1968) ஆகிய வைணவ நாடகங்களும் நடிக்கப் பெற்றுள்ளன.

வீரவழிபாட்டு நாடகங்கள்

நாட்டுப்புறத் தலைவர்கள், வீரம் நிறைந்த வாழ்க்கையை மேற்கொண்டவர்கள் கதை நாயகர்களாக ஆகும் போது அவர்களைப் பற்றி நாடகம் எழுதப்படுகிறது. அவர்களின் வீரம், விவேகம், கொடையுள்ளம் போன்றவை நாடகத்தில் விளக்கப்படுகின்றன.

இன்றும் தமிழகத்தின் தென் மாவட்டங்களில் மதுரைவீரன் கதையும், காத்தவராயன் கதையும் நாடகங்களாக நடித்துக் காட்டப்படுகின்றன. மேற்கு மாவட்டங்களில் பொன்னர் சங்கர் கதை நாடகமாக நடிக்கப்படுகிறது. இவ்வாறே வீரபாண்டிய கட்டபொம்மன், மருதுபாண்டியர் ஆகியோரின் கதைகள் கிழக்கு மாவட்டங்களில் நடித்துக் காட்டப்படுகின்றன.

தோட்டுக்காரியம்மன், பலிச்சியம்மன் போன்ற நாட்டுப்புறப் பெண் தெய்வங்களின் கதைகளும் நாடக வடிவம் பெற்றுள்ளன.

கிறித்தவ நாடகங்கள்

கிறித்தவ சமயக் கருத்துகளையும் இயேசு நாதர் வரலாற்றையும், விவிலியக் கருத்துகளையும் விளக்கும் நாடகங்கள் தமிழில் எழுதப்பட்டுள்ளன. தொடக்கத்தில் இவை, இசைப்பாட்டு நாடகங்களாக வெளிவந்தன. ஆதாம் ஏவாள் விலாசம், ஞான சவுந்தரி அம்மாள் விலாசம், எஸ்காத்தியர் நாடகம் எனப் பல நாடகங்கள் இசைப்பாடல் வடிவத்திலேயே நடிக்கப்பட்டன.

தொழில்முறை நாடக ஆசிரியர்களான சங்கரதாஸ் சுவாமிகள், நவாப் இராஜமாணிக்கம் போன்றோரும் கிறித்தவ நாடகங்களை நடத்தினர். இவர்கள் எழுதி நடித்த ஞான சவுந்தரி நாடகம், ஏசுநாதர் ஆகிய நாடகங்கள் அனைத்துச் சமயம் சார்ந்த மக்களிடமும் மிக்க செல்வாக்கைப் பெற்றன. என். பொன்ரத்தினம் என்பவர் 1979-இல் இதோ நமக்கு ஒருவர் என்னும் நாடகம் எழுதினார். இயேசு நாதரின் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த நாடகம் எழுதப்பட்டது. கிறித்தவம் தழுவிய நாடகங்கள் நாட்டுப்புறங்களில் இப்போதும் நடிக்கப்பட்டு வருகின்றன.

இசுலாமிய நாடகங்கள்

நாட்டியம் நாடகம் போன்ற நடிப்பு சார்ந்த கலைகள் இசுலாம் மார்க்கத்துக்கு முரணானவை ஆகும். எனவே இக்கலைகளுக்கு இசுலாத்தில் மிகுந்த வரவேற்பில்லை. ஆனால், இசுலாமியத் தமிழறிஞர்கள் பல நாடகங்களை எழுதி உள்ளனர். வண்ணக் களஞ்சியப் புலவர் 1887 இல் அலிபாதுஷா நாடகம் எழுதினார். இந்த நாடகம் தமிழ்நாட்டுக் கூத்து மரபை ஒட்டி எழுதப்பட்டது. இறைப்பற்றும், அறவாழ்வும் இந்த நாடகத்தில் விளக்கப்பட்டுள்ளன.

கொண்ணூர் ப.வே.முகம்மது இப்ராகிம் சாயபு என்பவர் 1879 ஆம் ஆண்டு தையார் சுல்தான் நாடகம் எழுதினார். தமிழ் நொண்டி நாடகத்தை நினைவூட்டும் வகையிலும், கோவலன் கண்ணகி கதைப் போக்கிலும் இந்த நாடகம் அமைந்துள்ளது. அப்பாஸ் நாடகம், லால் கௌஹர் நாடகம் என மேலும் பல நாடகங்கள் இசுலாமியத் தமிழ் அறிஞர்களால் எழுதப்பட்டன.

சிறுவர் நாடகமும் பெரியோர் நாடகமும்

சிறுவர் நாடகமும் பெரியோர் நாடகமும் நாடக வகையில் முக்கியமான இடத்தைப் பெறுவனவாகும். நாடகத்தில் விளக்கப்படும் கருத்து, நாடக மொழிநடை ஆகியவற்றின் அடிப்படையில் இவ்விருநாடகங்களும் வகைப்படுத்தப்படுகின்றன. தத்துவக் கருத்துகள் உட்பட நுட்பமான கருத்துடையவை சிறுவர் நாடகங்களில் இடம் பெறுவதில்லை. புராண, இதிகாச நாடகங்கள் பெரியவர்களுக்கே உரியன என்றாலும் சில நேரங்களில் சிறுவர்களும் இத்தகைய நாடகங்களை நடித்துக் காட்டுகின்றனர். ஆயினும் சிறியவர் நாடகம் என்னும் வகையில் இவை அடங்கா.

தமிழில் சிறுவர் நாடகங்கள்

சிறுவர்களின் அறிவு வளர்ச்சிக்கேற்பவும் வயது வளர்ச்சிக்கேற்பவும் அவர்களின் கலைத்திறனை வளர்க்கும் நிலையிலும் அமைவனவே சிறுவர் நாடகங்கள்.

சிறுவர்கள் அறிவைச் சேர்க்கும் நிலையில் உள்ளவர்கள் பெரியவர்கள் அறிவைக் கொடுக்கும் நிலையிலும் அனுபவிக்கும் நிலையிலும் உள்ளவர்கள். எனவே சிறுவர் நாடகங்களுக்கும் பெரியவர் நாடகங்களுக்கும் தரத்தில் மிகுந்த வேறுபாடுண்டு. அறிவைத் திரட்டலும், கலைத்திறனில் சுடர் விடுதலும் சிறுவர் நாடகங்களில் ஒருசேர வெளிப்பட வேண்டும். வியப்பு, மகிழ்ச்சி, கொண்டாட்டம், ஆரவாரம் ஆகியன சிறுவர் நாடகங்களில் முக்கியப் பங்கினை வகிக்க வேண்டும்.

குழந்தை எழுத்தாளர் சங்கம் 1955-ஆம் ஆண்டு சிறுவர் நாடக விழாவை நடத்தியது. சென்னையில் உள்ள ஜவஹர் பால பவன் சிறுவர்களுக்குக் கலைப் பயிற்சி அளித்து வருகிறது. தமிழில் சிறுவர் நாடகம் எழுதுவோரில் குறிப்பிடத்தகுந்தவர்கள், அழ.வள்ளியப்பா, தணிகை உலகநாதன், கூத்தபிரான், பூவண்ணன், அகமது பஷீர், கி.மா.பக்தவச்சலம் ஆகியோர். இவர்கள் திட்டமிட்டுச் சிறுவர் நாடகங்களை எழுதுகின்றனர்.

திரைப்படம், தொலைக்காட்சி போன்றவற்றால் நாடகம் நலிவடைந்த நிலையில் இருந்தாலும் முற்றிலுமாக இது அற்றுப்போய் விடவில்லை. இந்த நிலையில் நாடக வகைப்பாடுகளை அறிந்து கொள்வது மீண்டும் நாடக எழுச்சியை எவ்வாறு ஏற்படுத்தலாம் எனச் சிந்திப்பதற்குத் தூண்டுகோலாய் அமையும்.

தமிழ் நாடகங்கள்

பூர்வ காலத்தில் ஆடப்பட்ட நாடகங்கள் புராணக்கதை சம்பந்தமானவை என்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை. அல்லியம் கொடுகொட்டி முதலிய ஆடல்களைப் பற்றி முன்பே கூறியுள்ளோம். கதை தழுவி நாடகமாக ஆடிய கூத்துகளில் "வள்ளிக் கூத்து" என்பது ஒரு மிகப் பழமையானது என்று நாம் கூற வேண்டும். இதைப்பற்றித் தொல்காப்பியத்தின் உரையில் குறிப்பிட்டிருப்பதை முன்பே கவனித்திருக்கிறோம். முருகக் கடவுள் வள்ளியம்மையை மணந்த கதையே வள்ளிக் கூத்தாம். அக்காலத்தில் இதனை வள்ளி நாடகம் என்று பெயரிட்டழைக்காது வள்ளிக் கூத்து, என்று கூறப்பட்டிருக்கிறது இங்கு முக்கியமாய்க் கவனிக்கத்தக்கது. ஸ்ரீகண்ணபிரான் சிறு பருவத்தில் பலதேவரோடும் நப்பின்னைப் பிராட்டியோடு மாடிய ஆடல்கள் நாடகங்களாகப் பூர்வ காலத்தில் ஆடப்பட்டன என்பதும் தெரியவருகிறது.

இவை “பால சரிதை நாடகம்“ என்று கூறப்பட்டுள்ளன. பால சரிதை நாடகம் என்பதற்கு பிள்ளைச் சரித நாடகம் என்று உரையாசிரியர் உரை எழுதியுள்ளார்.

▪இதற்குப் பின் நான் இதுவரையில் ஆராய்ந்து பார்த்ததில் கிடைத்த தமிழ் நாடகத்தின் பெயர், ”ராஜராஜேஸ்வர நாடகம்” என்பதாம். இது தஞ்சாவூர் பிரஹதீஸ்வரர் கோயிலின் வடக்குப் பிரகாரத்தின் வெளியிலுள்ள கல்வெட்டில் குறிக்கப்பட்டிருக்கிறது. இந்த நாடகத்தைத் திருவாளன் திருமுதுகுன்றான விஜய ராஜேந்திர ஆசாரியன் என்பவனைத் தலைவனாக உடைய சில நபர்களால் அக்கோயிலில் வைகாசி மாசம் திருவிழாவில் ஆடுவதற்காக இவ்வளவு தான்யம் கொடுக்கப்பட்டதென்று வரையப்பட்டிருக்கிறது. அதில் எழுதியிருப்பது அடியில் வருமாறு :

”திருவாளன் திருமுது குன்றான விஜயராஜேந்திர ஆசாரியன் உடையார், வைகாசிப் பெரிய திருவிழாவில், ராஜராஜேஸ்வர நாடகமாட, இவனுக்கும் இவன் வர்க்கத்தார்க்கும், காணிய கப்பங்கு ஒன்றுக்கும், ராஜகேசரி யோடொக்கும், ஆடவல்லான் என்னும் மரக்காலால் நித்த நெல்லுத் துணியாக நூற்றிருபதின் கல நெல்லும், ஆண்டாண்டுதோறும் தேவர் பண்டாரத்தே பெறச் சந்திராத்யர். . ...கல்வெட்டித்து“, “ஸ்ரீராஜராஜேஸ்வரமுடையார் கோயிலில் ராஜ ராஜேஸ்வர நாடகமாட நித்தநெல்லுத் தூணியாக நிபந்தம் செய்த, நம் வாய்க் கேழ்விப்படி, சாந்திக் கூத்தன், திருவாளன் திருமுதுகுன்றான விஜய ராஜேஸ்வர ஆசார்யனுக்கும் இவன் வர்க்கத்தார்க்கும் காணியாகக் கொடுத்தே பெற்றா..... ....” இக் கல்வெட்டுகள் சோழராஜனாகிய ராஜேந்திர தேவர் காலத்தைச் சேர்ந்தன. இதனால் நாம் அறியத்தக்க விஷயங்கள் பல உள.

முதலாவது ராஜேந்திரதேவர் காலமாகிய அக்காலத்தில், தமிழ் நாடகங்கள் வழங்கி வந்தனவென்பதாம். அவைகள் சாதாரணமாக கோயில்களின் உற்சவ காலத்தில் நடத்தப்பட்டன வென்பதும் வெளிப்படையாம் ˙ தற்காலமிருப்பதுபோல கிராமதேவதைகளின் கோயில்களில் மாத்திரமன்றி பெருங்கோயில்களிலும் உற்சவ காலத்தில் இவ்வழக்கம் இருந்திருக்க வேண்டும், அன்றியும் கோயில்களிலுள்ளே நாடகங்கள் அக்காலத்தில் நடத்தப்பட்டபடியால் அவை மிகவும் கீழ்ப்பட்டனவாக அக்காலத்தில் மதிக்கப்படவில்லை யென்பதும் புலப்படும். மேலும் தற்காலம் சில கோயில்களில் தாசிகள் நாடகம் நடத்துவது போலல்லாமல் ஆண்மக்களும் நாடக மாடினர் என்பது தெற்றென விளங்குகிறது. அன்றியும் அந்நாடகமாடுபவர்களில் முக்கியமானவனுடைய பெயரைச் சொல்லும் பொழுது திருவாளன் என்று கூறியிருப்பது கவனிக்கத்தக்கது அவன் சாமன்யமானவனாய் இருந்தால் அப்பதம் அவனது பெயர் முன் வரையப்பட்டிராது என்பது திண்ணம். அல்லாமலும் அவனைச் சாந்திக்கூத்தன் என்று குறிப்பிட்டது நமக்கு மிகவும் உபயோகமாயிருக்கிறது. சிலப்பதிகாரத்தில் வகுக்கப்பட்ட சாந்திக்கூத்தானது ராஜேந்திரதேவர் சோழன் காலமாகிய சுமார் ஆயிரம் வருஷத்திற்கு முன்னிலும் வழக்கத்திலிருந்தது என்று நன்றாய் நிரூபிக்கப்படுகிறது. ராஜராஜேஸ்வரன் ஆள ஆரம்பித்த காலம் கி.பி.884 ஆம். சாந்தி கூத்தாடுபவனே சாந்திக்கூத்தன் ஆவான்.

▪ இவ்வளவாவது ஒரு பூர்வீகத் தமிழ் நாடகத்தைப் பற்றி நமக்கு விவரம் கிடைத்ததே என்று நாம் கொஞ்சம் சந்தோஷப்படுவதற்கு இடம் கொடுத்த போதிலும், அத்தமிழ்நாடகத்தின் பெயரன்றி, நாடகத்தின் கதை விவரம் ஏதும் கிடைத்திலதே என்று நாம் துக்கப்படக் காரணமாயிருக்கிறது. மேற்கூறிய கல்வெட்டுகளை வெளிப்படுத்திய கவர்ன்மென்ட் கல்வெட்டுப் பரீட்சகர், இந்த ராஜராஜேஸ் வர நாடகத்தின் கதையானது, ராஜராஜ சோழனால் தஞ்சாவூர் பிரஹதீஸ்வரர் கோயில் கட்டிய கதையென்பதற்குச் சந்தேகமில்லை யென்று கூறியிருக்கிறார், அவருடைய பேரறிவை மெச்சி, அவர் தமிழுலகத்திற்குச் செய்த பெரும் உதவியைச் சீர்தூக்கவேண்டியவ னாயினும், இந்நாடகக் கதையைப் பற்றி இவ்வாறு கூறியது சரியென என் சிற்றறிவிற்குப் புலப்படவில்லை யென்றே நான் கூறவேண்டும்.

ஒருகால் இந்நாடகக் கதை ராஜராஜ சோழன் கொண்ட வெற்றியைப் பற்றியதாயிருக்கலாம் இன்னும் நமக்குப் போதுமான ஆதாரங்கள் கிடைக்கும் வரையில் கதை

இன்னதென்று சொல்ல முடியாதென்று கூறுதலே தகுதியாம். இந்நாடகத்தைப் பற்றி ஏதேனும் வேறு விபரம் கிடைக்குமா என்று நான் தஞ்சைக்குச் சென்று எத்தனையோ பெயரைக் கேட்டும் ஒன்றும் கிடைத்திலது. கோயிலில் விசாரிக்குமிடத்து, தற்காலம் நடக்கும் பிரம்மோற்சவத்தில் அஷ்டக்கொடி உற்சவம் எனும் ஒரு தினத்தில் "சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம்" எனும் ஓர் நாடகம் ஆடப்படுவதாக அறிந்தேன். இது ஒண்டபுரம் சிவக்கொழுந்து தேசிகரால் இயற்றப்பட்டது. இந்நாடகம் தற்காலம் தாசிகளாலே ஆடப்படுகிறது. குறவஞ்சி என்பது பிற்காலத்தில் வந்த ஓர் நாடகப் பகுதியாகக் காண்கிறது. குறவஞ்சிகளைப் பற்றி பிறகு கூறுகிறேன்.

▪ பூர்வ காலத்தில் கோயில்களின் உற்சவ சமயத்தில் தமிழ் நாட்டில் தமிழ் நாடகங்கள் ஆடப்பட்டன வென்பதற்கு இன்னொரு உதாரணம் கிடைத்துள்ளது. திருநெல்வேலி ஜில்லாவில் பட்டமடை எனும் கிராமத்தில் ஸ்ரீவல்லீஸ்வரம் எனும் கோயில் கல்வெட்டுகளில் அக்கோயில் அதிகாரிகள் உய்யவந்தாள் அழகிய யசோதை எனும் தாசிக்கு, உற்சவ காலங்களில் நாடகமாடுவதற்காக, கொஞ்சம் பூமி மான்யமாகக் கொடுத்ததாக வரையப்பட்டிருக்கிறது. இதனால் நாம் அறியக்கூடிய விஷயங்கள், அக்காலத்தில் கோயில்களில் தாசிகள் நாடகமாடும் வழக்கம் உண்டென்றும், அவர்களுக்குப் பரம்பரையாக அவர்களனுபவித்து வர மான்யங்கள் விடப்பட்டனவென்பதுமாம். ஆயினும் நமது துர் அதிர்ஷ்டத்தால் இப்படி நடத்தப்பட்ட நாடகத்தின் பெயரும் நமக்குக் கிடைத்திலது. இச்சந்தர்ப்பத்தில் நாம் கவனிக்கத்தக்கது என்னவெனில், பூர்வ காலத்தில் அநேக ஸ்தலங்களில் அந்தந்த ஸ்தல புராணக் கதைகளே நாடக ரூபமாகத் தமிழில் அவ்வக்கோயில் தாசிகள் ஆடினர் என்பதாம்.

▪ இதற்குப் பிறகு சுமார் பதினேழாம் நூற்றாண்டின் கடைசியில் 1695இல் முதல் சில நொண்டி நாடகங்கள் இருந்ததாக அறிகிறோம். திருக்கச்சூர் நொண்டி நாடகம் " என்பது ஒன்று அச்சிடப்பட்டிருக்கிறது. இந்நாடகக் கதை என்னவெனில், கதா நாயகன் துன்மார்க்கனாயிருந்து, வேசிகள் வலையிற் சிக்கி, பிறகு தண்டனைக்குட்பட்டு, அவயவங்களை இழந்தவனுகி, நொண்டியாய், பிறகு ஒரு தெய்வத்தை அனுசரித்து வழிபட, தன் கைகால்களேப் பெற்றான் என்பதே, எல்லா நொண்டி நாடகங்களும் சற்றேறக்குறைய இம்மாதிரியாகவே இருக்கும். தற்காலம் சென்னையில் ராஜாங்கத்தார் ஏற்படுத்தியுள்ள ஓலைப் புஸ்தகசாலையில், பழனி நொண்டி நாடகம், செய்தக்காதிபேரில் நொண்டி நாடகம் எனும் இரண்டு நாடகங்கள் தமிழ்ப் பாஷையில் ஓலையில் எழுதப்பட்டன வாயிருக்கின்றன.

கடைசியில் கூறப்பட்ட நொண்டி நாடகமானது சுமார் இப்போதைக்கு 225 வருஷங்களுக்கு முன் எழுதப்பட்டதாகும்.

▪பிறகு "இராமநாடகம்" என்னும் ராமாயணக் கதையைத் தழுவிய தமிழ் நாடகம் உளது. இது 1712 முதல் 1779 வருஷம் வரையில் இருந்த அருணசலக்கவிராயரால் இயற்றப்பட்டது. இது சொற்சுவை, பொருட்சுவை முதலியன மிகவும் அமைந்தது. இதன் முழுப்பெயர் இராம நாடகக் கீர்த்தனை என்றிருந்த போதிலும் நாடக பாணியிலேயே எழுதப்பட்டதென்பதற்குச் சந்தேகமில்லை. மற்ற நாடகங்களிலிருப்பதுபோல் முதலில் கடவுள் வணக்கம், விநாயகர் ஸ்துதி முதலியனவும், முதலில் மங்களமும் தோடயமும் இருக்கிறதைக் காண்க. கட்டியம் வசனம் பொருந்தியது. இடையிடையே நாடகக் கதையைச் சொல்லுமிடத்து, விருத்தங்களை நாடக ஆசிரியர் உபயோகித்திருக்கிறார். இந்நாடக ஆசிரியர் இதைப் போலவே அசோமுகி நாடகம் என்னும் ஒரு நாடகத்தை இயற்றியுள்ளார்.

▪இராம நாடகத்தைப் போல். பாரதக் கதையை இராமச்சந்திரக் கவிராயர் என்பவர் "பாரதவிலாசம்" என்று இயற்றியுள்ளார். இவரது காலம் அருணசலக் கவிராயருடைய காலத்திற்குப் பிற்பட்டதாகும்.

இவரியற்றிய மற்ற தமிழ் நாடகங்கள், இரங்கூன் சண்டை நாடகம், சகுந்தலை விலாசம், தாருகா விலாசம். இதிகாசப் புராணக் கதைகளே யன்றி சரித்திரக் கதையைக் குறித்து தமிழில் எழுதிய நாடகங்களில் இரங்கூன் சண்டை நாடகம்தான் முற்பட்டதென

எண்ணவேண்டியிருக்கிறது. இவர் காலத்தில் தமிழ் நாடகங்களுக்கு விலாசம் எனும் பெயர் சாதாரணமாக வழங்கத் தலைப்பட்டதை இங்கு நாம் குறிப்போமாக.

▪இதற்கு முன்பாக "நீலி நாடகம்" என்ற ஒரு தமிழ்நாடகம் இருந்ததாகச் சிலர் கூறுகின்றனர். அதைப்பற்றி பெயர் அன்றி வேறொன்றும் தெரியவில்லை. இதற்குப் பிறகு தஞ்சாவூர் சரபோஜி மஹாராஜா சரஸ்வதி மஹாலில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் புத்தகசாலையில் ஏட்டுப் பிரதிகளாக சில தமிழ் நாடகங்கள் கிடைத்துள்ளன. அவைகளில் "மதன சுந்தர பிரசாத சந்தான விலாசம்" என்பது ஒன்று, இது அருணாசலக் கவிராயரால் இயற்றப்பட்டதாகத் தெரிகிறது. இவர் ராமநாடகம் இயற்றிய அருணாசலக் கவிராயர் அல்லவென்றும் அப்பெயர் கொண்ட வேறொருவர் என்றும் எண்ணவேண்டியிருக்கிறது. வட மொழியில் காளிதாசர் கீர்த்தியடைந்த பிறகு அநேக காளிதாசர்கள் கிளம்பியதாக அறிகிறோம், அதுபோல் அருணாசலக் கவிராயர் புகழடைந்த பிறகு மற்றவர்கள் அவர் பெயரைப் பூண்டாவது, அல்லது தாம் இயற்றிய நூலுக்கு அவரை ஆசிரியராகவாவது ஆக்கியிருக்கலாம். இந்த நாடகமானது தஞ்சாவூரில் அரசு புரிந்த ஒரு சோழ அரசனுடைய மகள் சுகமாய் வாழ்ந்திருக்கவேண்டி மதன சுந்தரேஸ்வரரைப் பூசித்து வரம் பெற்றக் கதையை கூறுவதாம். இதில் "சித்தமகிழ்ந்து சிவாஜி ராஜேந்திரன் உத்திரவுபடி உலகினிலோங்கிட அருணசலக் கவி அன்புடன் உரைத்த திருவளர் நாடகம்" என்று எழுதியிருப்பதால், 1883 முதல் 1855 வரை அம்மன்னன் தஞ்சையில் ஆண்டமையால் இதன் காலம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடையெனக் கூறலாம்.

▪புரூரவ சக்கரவர்த்தி நாடகம்:

இன்னொன்று, இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. நாடகக்கதை பாரதக் கதையை தொடர்ந்ததாகும். சந்திர வம்சத்துதித்த புரூரவன் தன் அரசையும் மனைவி மக்களையுமிழந்து பல துன்பங்கள் அனுபவித்து கடைசியில், எல்லாவற்றையும் முன்போல் பெற்ற கதையைக் கூறுவதாம். காளிதாச மகாகவி எழுதிய விக்ரமோர்வசியம் எனும் நாடகத்திற்கும் இதற்கும் ஒரு சம்பந்தமுமில்லை. மற்றொன்று அரிச்சந்திர நாடகம் என்பது, இதன் ஆசிரியர் மறையவர்குல வீரலிங்க பாரதி என்று அறிகிறோம். இந்த ஆசிரியரே சிறுத்தொண்டர் நாடகம் ஒன்றும் இயற்றியதாக எண்ண இடமுண்டு. இதன்றி ஆசிரியர் பெயர் தெரியாத இன்னும் சில அரிச்சந்திர நாடகங்கள் ஏட்டுப் பிரதிகளாயிருக்கின்றன. சாரங்கதர நாடகத்திற்கு மூன்று ஏட்டுப் பிரதிகள் இருக்கின்றன. இவைகளின் ஆசிரியர் பெயர்கள் விளங்கவில்லை.

பாண்டி கேளிவிலாச நாடகம் என்று ஒரு புஸ்தகமும் இருக்கின்றது. இதை இயற்றியவர் நாராயண கவி, தஞ்சாவூரை யாண்ட சிவாஜி மகாராஜா கேட்டுக்கொண்டபடி இந்நாடக ஆசிரியர் இதை இயற்றியதாக அறிகிறோம். இவைகளெல்லாம் இன்ன வருஷங் களில் இயற்றப்பட்டன என்று நிர்ணயிப்பதற்கு போதுமான ஆதாரமில்லை. சாதாரணமாக ஓலைப்புஸ்தகங்களில், அச்சிடப்பட்ட புஸ்தகங்களிலிருப்பதுபோல், இன்ன வருஷம் எழுதப்பட்டது என்று குறிப்பிடுவதில்லை. பாண்டி கேளிவிலாச நாடகம் தஞ்சாவூரையாண்ட சிவாஜி மகாராஜாவின் காலத்தில் இயற்றப்பட்டதால், இப்போதைக்கு சுமார் 150 வருஷங்களுக்கு முன் இயற்றப்பட்டிருக்க வேண்டுமென்று நிச்சயிக்கலாம்.

▪ மேற்குறித்த நாடகங்களன்றி, இத்தஞ்சை ஏட்டுப் பிரதிகளுள் "சுபத்திரைக் கல்யாணம்" என்பது அகவல், தரு, விருத்தம், சிந்து, முதலியன விரவி நாடகம்போற் செய்யப்பட்டுள்ளதென, அவ்வேட்டுப் பிரதிகளே மிகவும் பிரயாசைப்பட்டு பரிசோதித்த உலகநாத பிள்ளை எனும் தமிழ்ப் பண்டிதர் எழுதியிருக்கிறார். இதைச் செய்த ஆசிரியர் பெயர் நன்னிலம் நாரணன் என்பதாம், அன்றியும் சென்னை துரைத்தனத்தார் ஏற்படுத்தியிருக்கும் பழைய ஏட்டுப் புஸ்தகசாலையில், முப்பது தமிழ்

நாடகங்களுக்கு மேல் இருக்கின்றன. அவையாவன :

▪(1) இரணிய சம்ஹார நாடகம் :- இது மிகவும் பழைய ஏட்டுப் பிரதியாகத் தோன்றுகிறது, மிகவும் சிதிலமாய்க் கிடக்கிறது, எடுத்துப் பார்க்கும்பொழுது ஏடுகள் தூள் தூளாகிப் போகின்றன, இதில் வசனமும் தருக்களும், விருத்தங்கள் முதலியனவும் அடங்கியிருக்கின்றன.

இப்புஸ்தகத்தின் முதல் ஏடு இல்லை நாடகத்தின் கதை மஹாவிஷ்னு நான்காவது அவதாரமெடுத்து, பக்தனாகிய பிரஹ்லாதாழ்வாருக்காகத் தூணில் தோன்றி ஹிரண்யாசுரனைக் கொன்றதாம். இப்புஸ்தகத்தில் மல்லர்கள் ஆயுதங்களைக்கொண்டு பிரஹ்லாதரை வருத்துகையில் அவர் மஹாவிஷ்ணுவைத் துதிக்கும் வரையில் தானிருக்கிறது. கடைசியில் வேறு சுவடியின் சில ஏடுகள் சில சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதில் கட்டியக்காரன் வருகிற தருவில், அவன் சல்லடம் பூண்டிருப்பதாயும், சால் வயிறுடையவனாகவும் வர்ணித்திருக்கிறது.

கட்டியக்காரனே அகசியக் காரணுகவும் இதில் வருவது கவனிக்கத்தக்கது, செய்யுள் நடையும் வசன நடையும் மிகவும் பிழையுள்ளதாயிருக்கிறது விருத்தம் என்பதற்கு விருற்றம் என்று எழுதியிருக்கிறது இது ஆசிரியர் குற்றமோ அல்லது எழுதியவர் குற்றமோ கூறுவதற்கில்லை. இச் சுவடியில் கவனிக்கவேண்டிய இன்னொரு விஷயம் என்னவென்றல் இதில் கண்டிருக்கும் தருக்களுக்கு தாளங்கள் குறிப்பிடவில்லை. இதே கதையை பிரஹ்லாத நாடகமெனப் பெயரிட்டு எழுதப்பட்ட இன்னொரு நாடகச் சுவடியும் இங்குள்ளது.

▪(2) இராம நாடகம்: இதைப்பற்றியும் இதன் ஆசிரியரைப் பற்றியும் முன்பே கூறியிருக்கிறேன். இந்தப் பிரதி சம்பூர்ணமாயிருக்கிறது. பெயர்த்து எழுதியவர் குறையாக இதில் பல எழுத்துப் பிழைகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் கவனித்து இதனை ம-ள-ள-ஸ்ரீ திவான் பஹதூர் பவானந்தம் பிள்ளை அவர்கள் அச்சிட்டிருக்கிறார். இந்த ஓலைக்கட்டின் கடைசியில் உத்தர ராமாயண நாடகமும், மைராவண நாடகமும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதில் வசனநடை கிடையாது.

▪(3) உத்தரராமாயண நாடகம்: இதில் வெண்பா, விருத்தம், முதலியனவும் ராக தாளங்களோடு கூடிய தருக்களும் இருக்கின்றன. வசனம் கிடையாது. செய்யுள் நடை அவ்வளவு சிறந்ததாகத் தோன்றவில்லை. இதை இயற்றியவர் சுமார் 108 வருடங்களுக்கு முன்பிருந்த அநந்தர் எனும் ஓர் விப்பிரர். இதை அரங்கேற்றியது கலி 4921இல் என இதிலுள்ள ஒரு பாட்டினால் தெரிகிறது.

▪(4) கந்தர் நாடகம்: ஸ்காந்த புராணக் கதையை ஒட்டி எழுதப்பட்ட நாடகம் சுப்பிரமணியர் பிறந்தது முதல் வள்ளியம்மை மணம் வரையில் நாடக ரூபமாக எழுதியிருக்கிறது. இதை இயற்றியவர் பாலசுப்பிரமண்யக் கவிராயர் என்பவர் அரங்கேற்றியது கலி 4905ல் இயற்றியது சுமார் 114 வருடங்களுக்கு முன்பாம். இதில் தர்க்கப் பாட்டுகளும் அடங்கியிருக்கின்றன, அதாவது நாடக பாத்திரங்கள் ஒருவர்க்கொருவர் பாட்டுகளினாலேயே பதில் உரைப்பதாம்.

▪(5) காத்தவராய நாடகம்: இதில் கதாநாயகனை காத்தவராயன் என்பான், நாரதர் தூண்டுகோளின் மீது மூன்று அழகிய பெண்களை மணந்த கதையை நாடகமாக எழுதப்பட்டிருக்கிறது. இதில் கட்டியக்காரனை வர்ணிக்கிற தருவில் ”கோணங்கி குல்லாய் போட்டு காலில் சிலம்பணிந்து வேடிக்கைக் கட்டியக்காரன்” வருவதாக வர்ணித்திருப்பது கவனிக்கத்தக்கது. இதில் வசனமும் உண்டு. தருக்களுக்கு ராக தாளங்கள் குறிப்பிடவில்லை. இதை நோக்குமிடத்து இதை இயற்றியவர் இசைஞான மில்லாதவரா யிருக்கலாம் எனத் தோன்றுகிறது. தற்காலத்திலும் சிலர் பாட்டுகளை எழுதிவிட்டு அவைகளுக்கு இசை வல்லாரைக்கொண்டு தக்க ராக தாளங்கள் அமைப்பது வழக்கமாயிருக்கிறது. கோவிந்த நாயக்கர் என்பவருடைய ஏட்டு பிரதிக்கிணங்க இது அச்சிடப்பட்டிருக்கிறது. இதிலுள்ள தருக்களுக்கு ராக தாளங்கள் அமைத்தவர் பொன்னரங்கம் முதலியார் என்பவர்.

▪(6) குசலவ நாடகம் : இதன் கதை உத்தரராம சரித்திரத்தின் கதையே. இது நாடகமாக ஆடப்பட்டதென்று கூறுவதற்கு, இதில் “சகல ஜனங்களும் பாருங்களேய்யா“ என்று எழுதியிருக்கிறதே சான்றாகும். நடை பிழையுள்ளதாயிருக்கிறது. இ∴தன்றி இன்னொரு குசலவ நாடகப் பிரிதியும் இருக்கின்றது.

▪(7) ஜமதக்னி நாடகம்: இது பரசுராமர் கதையை நாடக ரூபமாகக் கூறுவதாகும்.

▪(8) சவ்வருண நாடகம் : இது சவ்வருணன் எனும் அரசனுடைய புராணக் கதையைக் கூறும் நாடகமாம்.

▪(9) தக்க நாடகம் : தட்ட யாகத்தின் கதையை நாடகமாகக் கூறுவதாகும். இதில் விருத்தங்களும் ராக தாளங்களோடு கூடிய தருக்களும், வசனமும், இருக்கின்றன. இதில் தர்க்கம் என்பதற்கு பதிலாக பாணி என்கிற பதம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. "மஹா விஷ்ணு பரமசிவனுக்கு சொல் "பாணி" என்று எழுதியிருக்கிறது.

▪(10) தேரூர்ந்த நாடகம் : இது வரதப்பைய குமாரர் பெருமாளேயர் என்பவரால் இயற்றப்பட்டது. திருவாரூரில் சோழ அரசன் ஒருவன் கன்றின்மீது தேரைச் செலுத்தின குற்றத்திற்காகத் தன் மகன்மீது தன் தேரைச் செலுத்தின கதையை நாடகமாகக் கூறுவது.

▪(11) பாண்டவர் சூதாட்ட நாடகம்: என்கிற ஒரு ஏட்டுப் பிரதியிருக்கிறது. இது நாடகம் எனும் பெயர் படைத்தாயினும், புஸ்தக அட்டவணையில் நாடகங்களின் கீழ் இதை குறித்திருந்தபோதிலும், இது நாடகமன்று என்றே கூறவேண்டும் புகழேந்திப்புவவரியற்றிய அல்லி அரசாணிமாலை புலந்திரன் தூது முதலிய நூல்களுடன் இதைச் சேர்க்கவேண்டும், இதை இசைப்பாட்டெனவே கூறவேண்டும். நாடக லட்சனங்கள் இதில் ஒன்றையும் காணோம். இது பாடப்பட்டிருக்கலாமேயொழிய ஆடப்பட்டிருக்க மாட்டாது. எனது சிறு வயதில் பெண்கள் இதை இசையுடன் பாடியதைக் கேட்டிருக்கிறேன்.

▪(12) துரௌபதி துகிலுரிதல் நாடகம்: இது பாரதக் கதையை ஒட்டியது.

▪(13) துளசிதாசர் நாடகம் : துளசிதாசரது சரித்திரத்தை நாடக ரூபமாய்க் கூறுவதாம்.

▪(14) மன்மத நாடகம் : இதற்கு மற்றொரு பெயர் ரதி புலம்பல்.

▪(15) மைராவண நாடகம் : தற்காலத்தில் பாகவதர்கள் மயில் ராவணன் கதை என்று சொல்லுகிற கதையை நாடக ரூபமாக உடையது. சமஸ்கிருதத்தில் "மைராவணன்" என்றே கூறப்பட்டிருக்கிறது. இப்பெயர் மருவி மயில் ராவணன் என்று வழங்கியிருக்கலாம் எனத் தோற்றுகிறது.

▪(16) பாராங்குச நாடகம் : இது வைஷ்ணவ மதாசாரியர்களுள் ஒருவராகிய நம்மாழ்வார் சரித்திரத்தை கூறுவது. இதை இயற்றியவர் ஸ்ரீரங்கத்து கந்தாடை அண்ணன் என்பவருடைய சிஷ்யராகிய சேஷக்கவி என்பவர். இதில் தோடயமானது சம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் கூறப்பட்டிருக்கிறது. தோடயத்துக் கப்புறம் மங்களம் எழுதப்பட்டிருக்கிறது. ஆயினும் நாடகங்களுக்குரிய மற்ற இலட்சணங்கள் இல்லாதிருக்கிறபடியால் இதை இசைப் பாட்டின் பகுதியிலேயே சேர்க்கவேண்டும்.

▪(17) சீங்கீஸ்வர ஸ்வாமியார் பாரிஜாத நாடகம்: இதை இயற்றியவர் பொன்னையா என்பவரின் புத்திரரான குமாரஸ்வாமி என்பவர். இதில் வசனத்தைக் கூறுமிடத்து, சபா வசனம் என்றும் பொது வசனம் என்றும் இரண்டு பிரிவுகளைக் காட்டியிருக்கிறது.

▪மேற்குறிப்பிட்டவைகள் அன்றி, ராஜகோபாலன் என்பவர் இயற்றிய சுக்கிரீவ விஜயம் எனும் நாடகமும், குமரபிள்ளை என்பவர் எழுதிய வள்ளியம்மை நாடகம் என்பதும், சுப்பிரமணிய விலாசம் அல்லது சுப்பரா விலாசம் என்பதும் இப் புஸ்தகசாலையில் இருக்கின்றன.
▪இவைகளன்றி சாரங்கதார யட்சகானம், சிறுத்தொண்டர் யட்சகானம், கீலியட்சகானம், வல்லாளராஜன் யட்சகானம் என்று நான்கு யட்சகானப் பிரதிகளும் இவ்விடம் இருக்கின்றன.

இவைகள் யட்ச கானம் எனும் பெயர் படைத்தவையாயினும் நாடகங்களின் பகுதியிலேயே சேர்க்கப்படவேண்டும் இவைகள் நாடகங்களுக்குரிய உறுப்புகளைப் பெரும்பாலும் உடைத்தாயிருக்கின்றன. சிறுத்தொண்ட நாயனாருடைய கதையைக் கூறும் சிறுத்தொண்டர் யட்ச கானம் என்பது ஞானப்ரகாசம் என்பவரால் இயற்றப்பட்டது வசனமுடைத்தாயிருக்கிறது. நீலியட்ச கானம் இரட்டைக் குழந்தைகளாகப் பிறந்த நீலன் நீலி

என்னும் பேய்களின் சரித்திரத்தைக் கூறுவது இதுதான் முன்பு கூறப்பட்ட நீலி நாடகம் என்பது போலும், வல்லாளயட்ச கானமானது வல்லாள ராஜன் கதையை நாடக ரூபமாகக் கூறுவது. இம்மாதிரியான யட்ச கானங்கள் தெலுங்கு தேசத்தில் ஆந்திர பாஷையில் அநேகம் இருக்கின்றன.

▪ இதன் பிறகு, எனது ஆராய்ச்சிக்குக் கிட்டியவரையில், வள்ளி நாடகம், மார்க்கண்டேயர் நாடகம், என்னும் இரண்டைக் கூறவேண்டும். இவை இரண்டும் அநேக வருஷங்களுக்குமுன் காஞ்சீபுரம் கோயில் நட்டுவனான சுப்பராய நட்டுவன் என்பவனிடம் கண்டேன். இவை இரண்டும் பனை ஏட்டில் வரையப்பட்டன. அவனை விசாரிக்குமிடத்து நான்கு ஐந்து தலைமுறையாகத் தன் குடும்பத்தில் இவை காப்பாற்றப்பட்டு வந்தனவென்று தெரிவித்தபடியால், இவை சுமார் நூற்றிருபது. வருஷங்களுக்கு முன் எழுதப்பட்டன என்பதற்கு ஐயமில்லை.

இவைகள் காஞ்சீபுரம் ஏகாம்பர நாதர் சந்நிதியில் வசந்தோற்சவ முதலிய உற்சவகாலங்களில் சில சமயங்களில் ஆடப்பட்டன வென்றும் தெரிவித்தான் அக்கோயில் தாசிகள்தான் இவைகளை ஆடுவது வழக்கமாம். இவைகளை நான் விலைகொடுத்து வாங்க முயன்ற பொழுது, தான் அவைகளைப் பூசித்து வருவதாயும், ஆகையால் அவைகளை விற்கக் கூடாதென்றும் கூறி வாங்கிக்கொண்டு போய் விட்டான். அந்நட்டுவன் அவைகளை அச்சிடவும் இடங்கொடுக்க வில்லை. இப்பொழுது இப் புஸ்தகங்கள் நசித்துப்போயினவோ இருக்கின்றனவோ அறிகிலேன். நாகரீகம் அடைந்திருக்கிறோமென நாம் கொஞ்சம் கர்வம் கொள்ளும் இக்காலத்திலேயே, நமது தமிழ்ப் புஸ்தகங்களின் கதி இப்படியானால், பூர்வீக காலத்திலிருந்த தமிழ் நாடகங்கள் பெரும்பாலும் நசித்துப்போனது ஓர் ஆச்சரியமன்று. மற்றவர்கள் அறிந்தால் அதன் மகிமை குறைந்து போய்விடும் எனும் எண்ணத்தினாலோ. அல்லது மற்றவர்கள் அதைக் கற்றால், அதனால் தங்களுக்கு வரும் ஊதியம் குறைந்துபோகும் எனும் எண்ணத்தினாலோ, மேற்கூறியவை போன்ற அநேகம் தமிழ் நாடகங்கள், இரகசியமாய் மற்றவர் கண்களுக்குப்படாமல் பாதுகாக்கப்பட்டு நாளாவர்த்தியில் நசித்துப்போயிருக்க வேண்டுமென்பதற்குச் சந்தேகமே யில்லை. இச்சந்தர்ப்பத்தில் வள்ளியின் கலியாணக் கதையானது வெகுநாளாய் நாடக ரூபமாக நமது தமிழ் நாட்டில் ஆடப்பட்டது என்பது கவனிக்கற்பாலது.

சிலப்பதிகார உரையாசிரியர் காலத்திலேயே "வள்ளிக்கூத்து" என்று ஒரு தமிழ்க் கூத்து இருந்ததைமுன்பே குறித்திருக்கிறோம் முருகக்கடவுள் தமிழ் நாட்டிற்குரிய கடவுள் என்பது எல்லோரும் அறிந்த விஷயமே அவர் வள்ளி நாயகியாரை மணந்த கதை ஆதிகாலம் தொட்டு நாடகமாக ஆடப்பட்டது ஆச்சரியமன்று. தற்காலத்திலும் அநேக சுப்பிர மணிய க்ஷேடித்திரங்களில் வள்ளி நாயகியின் மனத்தை உற்சவ காலங்களில் கோயில் தாசிகள் வேஷம் பூண்டு நடித்து வருவதைக் காணலாம். இன்றைக்கும் சென்னை ஸ்ரீ கந்தசுவாமி கோயில் உற்சவத்தில், ஒரு நாள் இக்கதையை நாடகமாக அக்கோயில் தாசிகள் "வேடர் பறி" எனும் உற்சவ தினத்தில் ஆடி வருகிறார்கள்.

▪ முற்காலத்தில் ஒவ்வொரு க்ஷேத்திரத்திலும், அந்தக்ஷேத்திரத்தின் மஹாத்மியத்தை நாடக ரூபமாக ஆடுவதுண்டென்பதற்கு ஒரு உதாரணமாக புறம்பயம் என்னும் க்ஷேத்திரத்தில் ஆடப்பட்ட வன்னி நாடகம் எனும் ஓர் தமிழ் நாடகத்தைக் கூறலாம். புறம்பயம் எனும் க்ஷேத்திரம் கும்பகோணத்திற்கு அருகாமையிலுள்ள ஒரு சிவஸ் தலம். இந்த வன்னி நாடகமானது பல வருஷங்களுக்கு முன்பு வரையில், வருஷாவருஷம் இவ்வூரில் ஆடப்பட்டதாக ம-ள-ள- ஸ்ரீ திரு மலைக்கொழுந்து பிள்ளை அவர்கள் பி. ஏ. கூறியிருக்கிறார்,

▪திருக்கழுக்குன்றம் எனும் பாடல் பெற்ற க்ஷேத்திரத்தில் அநேக வருஷங்களுக்கு முன், கோயில் உற்சவகாலத்தில் அந்த க்ஷேத்திரத்தின் கதையை நாடகரூபமாக சுரகுரு-நாடகம்" என்று கோயில் தாசிகள் ஆடி வந்தார்கள், தற்காலத்தில் என்ன காரணம் பற்றியோ அது நின்று விட்டது. இந்த சுரகுரு நாடகத்தை தமிழில் எழுதியவர் பேறை தசாவதானம் ஜெகந்நாத பிள்ளை என்று அறிகிறேன்.

▪ இதற்கப்பால் இதிகாச புராணங்களிலுள்ள கதைகளை ஒட்டி தமிழில் எழுதப்பட்ட நாடகங்கள் அநேகம் உள்ளன. உதாரணங்களாக கீசக நாடகம், வாணாசுர நாடகம், பதினெட்டாம் போர் நாடக அலங்காரம், சயிந்தவ நாடக அலங்காரம், இரணிய நாடகம், மார்க்கண்டேயர் நாடகம், சூரபத்ம நாடகம், குசலவ நாடகம், ருக்மாங்கத நாடகம், நந்தனார் சரித்திரக் கீர்த்தனை, முதலியவற்றைக் கூறலாம். இவைகளைப்பற்றி அனுபந்தத்தில் மற்ற விஷயங்களைத் தெரிவித்திருக்கிறேன். இக்காலத்தில் புராணக் கதைகளைத் தழுவாது, பூர்வீக கற்பனைக் கதைகளைத் தழுவிய நாடகங்கள், சில உண்டு அவை: வீர குமார நாடகம், காத்தவராய நாடகம், மதுரைவீர நாடகம், நல்ல தங்காள் சரித்திரம், அலிபாதுஷா நாடகம், சந்திரஹாச நாடகம், அதிரூபவதி நாடகம், அலங்காரரூபவதி நாடகம், ஜோகி நாடகம், முதலியனவாம். இவற்றைப்பற்றியும் மற்ற விஷயங்களை அனுபந்தத்தில் கண்டு கொள்க. மேற்கூறிய நாடகங்களில் நாம் முக்கியமாகப் பாராட்டத்தக்கது, நந்தனர் சரித்திரக் கீர்த்தனை என்பதேயாம். இது கீர்த்தனை என்று பெயர்படைத்தபோதிலும் நாடகமே. இது பழைய நாடகங்களைப்போல் வினாயகர் துதி, தோடயம், முதலில் மங்களம், பொதுவசனம் முதலியன உடைத்தாயிருந்தபோதிலும், சொற்சுவை பொருட்சுவையில் மிகவும் அழகும் அருமையும் வாய்ந்தது.

இது கோபாலகிருஷ்ண பாரதி என்பவராற் செய்யப்பட்டது. இதிலுள்ள பாடல்கள் தென் இந்தியா முழுவதும் பரவி சாதாரண சங்கீதக் கச்சேரிகளில் மிகவும் உபயோகப்பட்டு வருகின்றன. இந்நாடக ஆசிரியரால் செய்யப்பட்ட மற்றொரு நாடகம் இயற்பகை நாயனார் சரித்திர கீர்த்தனை என்பதாம். இது அச்சிலிருப்பதாகத் தெரியவில்லை ஆயினும் அந்நூலாசிரியருடைய நெருங்கிய பந்து ஒருவர் இதிலுள்ள அநேகம் பாடல்களைப் பாட நான் நேரிற் கேட்டிருக்கிறேன்.

சொற்சுவை பொருட்சுவையிலும் ராக தாள அமைப்பிலும் நந்தனர் சரித்திரக் கீர்த்தனைக்குப் பிற்பட்டதன்று என்றே கூறவேண்டும். இக்காலத்தில் சில வித்வான்கள் தாங்கள் இயற்றிய நாடகங்களுக்கு நாடகம் என்று பெயர் வைக்காமல் கீர்த்தனை என்று பெயரிட்டது இங்கு கவனிக்கத்தக்கது. முத்துராம முதலியார் என்பவர் தாமியற்றிய நூலுக்கு பாரத கீர்த்தனம் என்றே பெயரிட்டிருக்கின்றனர். இதை நோக்குமிடத்து, நாடகமானது பாமரர்கள் கையிற்பட்டு மிகக் கீழ்ப்பட்ட ஸ்திதியையடைந்தமையால், கவிகளியற்றிய நூல்களுக்கு நாடகம் எனும் பெயரை வைக்காது கீர்த்தனை என்று பெயரிட்டிருக்கலாம் எனும் யோசனைக்கு இடங்கொடுக்கிறது.

தமிழில், இதிகாசப் புராணக் கதைகளையும், மதசம்பந்தமான விஷயங்களையும் தழுவாது, பொதுஜன விஷயத்தைத் தழுவிய நாடகங்களுள் (ளுழஉயைட னுசயஅய) முற்பட்டது டம்பாச்சாரி விலாசம் எனும் நாடகமே. இந்நாடகத்தை இயற்றியவர் காசி விஸ்வநாத முதலியார் என்பவர் இவர் ஆங்கிலம், தமிழ். சம்ஸ்கிருதம் மூன்று பாஷையும் நன்குணர்ந்தவர் சென்னையில் வசித்திருந்தவர் காலஞ்சென்ற என் அருமைத் தந்தையாருக்கு இவரை நன்றாய்த் தெரியும். இந்நாடகத்தின் ராகதாளங்களே அமைப்பதற்குத் துணையாயிருந்தவர் தாயுமான முதலியார் என்பவர். இவரை நான் நேரிற் பார்த்து இவருடன் இந்நாடகத்தைப் பற்றிய பல கதைகளைக் கேட்டிருக்கிறேன்.

அவைகளே விரித்துரைக்க இங்கு இடமுமில்லை, அவகாசமுமில்லை. ஆயினும் இந்நாடகத்தைப்பற்றி முக்கியமாக நாம் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்று இருக்கிறது, அ.்.தென்னையெனின், சென்னையைச் சார்ந்த சிந்தாதிரிப் பேட்டையில் முருகப்ப முதலியார் என்பவர், ஒருவர் இருந்தார், அவர் துளுவ வேளாள வம்சத்தைச் சார்ந்தவர். அவருடைய பிள்ளை அவர் வைத்துவிட்டுப்போன ஏராளமான ஆஸ்தியை அழித்து விட்டார் வஸ்தவமாக நடந்த இவரது கதையையே நாடகமாக எழுதி, அவருக்கும் அவரைப் போன்றவர்களுக்கும் புத்தி வரும்படியாக ஓர் சிறந்த எண்ணத்துடன், இந்நாடக ஆசிரியர் இந்நாடகத்தை எழுதினர். இன்றும் சிங்தாதிரிப்பேட்டையில் ஒரு வீட்டிற்கு டம்பாச்சாரி வீடு என்று வழங்குகிறது.

இந் நாடகமானது சிறந்த புத்திமதியைப் புகட்ட எழுதிய நாடகம். ஆயினும் தற்காலம் இந்த நாடகமானது கல்வியறிவில்லாக் கீழ்ப்பட்ட பாமர ஜனங்களால் நடிக்கப்பட்டு மிகவும் ஆபாசமாக்கப்படுகிறது. நாடக ஆசிரியர் எழுதாத சில ஆபாசமான விஷயங்களை யெல்லாம் இதனுடன் சேர்த்து, கற்றுணர்ந்தோர் கடியும்படியான விஷயமாக் கப்பட்டுள்ளது. இந்த தமிழ் நாடக ஆசிரியராலியற்றப்பட்ட மற்ற இரண்டு நாடகங்கள்:- பிரம்ம சமாஜ நாடகம் என்பதும், தாசில்தார் நாடகம் என்பதுமாம். இவைகளும் பொதுஜன விஷயமாக, தமது நாட்டாரைச் சீர்திருத்தவேண்டி எழுதப்பட்டவைகளாம். பிரம்ம சமாஜ நாடகத்தில் தற்காலத்தில் தமிழ் நாட்டில் அதிக குழப்பத்தை விளைவித்துக் கொண்டிருக்கும், பிராம்மணர்-பிராம்மணர் அல்லாதார் கட்சி, விதவா விவாகம், முதலிய பல விஷயங்களைப்பற்றி மிகவும் விமரிசையாய் நாடக ஆசிரியர் வரைந்திருக்கிறார்.

முன்னால் நாம் கவனித்த டம்பாச்சாரி விலாசம் என்பது மிகவும் கீழ்ப்பட்ட ஸ்திதிக்கு வந்ததைக்கண்ட காலஞ்சென்ற ம-ள-ள-ஸ்ரீ ராமஸ்வாமி ராஜு என்பவர் பிரதாபசந்திர விலாசம் என்று ஒரு தமிழ் நாடகத்தை 1877 வருஷத்தில் எழுதினார்.

இவர் தமிழ், சம்ஸ்கிருதம், ஆங்கிலம் எனும் மூன்று பாஷைகளிலும் தேர்ச்சி பெற்றவர். இங்கிலாந்துக்குப் போய்த் திரும்பி வந்தவர் சங்கீதத்தில் தேர்ச்சியடைந்தவர் தனது மேற்கூறிய நாடகத்துக்கு வேண்டிய பாட்டுகளைத்தானே கவனம் செய்து, ராக தாளங்களை அமைத் திருக்கிறர். நாடக நாயகனை, டம்பாச்சாரி விலாசத்திலிருப்பது போல் கல்வியறிவு இல்லாதவனாயல்லாது, கற்றறிந்தவகை ஏற்படுத்தியுள்ளார். இந்த நாடகமானது சில சமயங்களில் மேடையில் ஆடப்பட்டதை நான் பார்த்திருக்கிறேன், இந்நாடகத்தின் முதற்பதிப்பு சில வழிந்து போக ம-ள-ள-ஸ்ரீ திவான் பஹதூர் எம். எஸ். பவாநந்தம் பிள்ளை அவர்கள் இதை மறுபடியும் அச்சிட்டிருக்கிறார். இதற்குப் பிறகு அப்பாவு பிள்ளை என்பவர் சில தமிழ் நாடகங்களை இயற்றி அச்சிட்டிருக்கின்றனர். அவற்றுள் சத்திய பாஷா அரிச்சந்திர விலாசம் என்பது இந்நாள் வரையில் அந்நாடகத்தை ஆடுபவர்களுக்கு மிகவும் உபயோகப்பட்டு வருகிறது. கதை யானது பழைய மார்கத்தை ஒட்டியிருந்தபோதிலும், இவரால் இயற்றப்பட்ட புதிய வர்ணமெட்டுகளுள்ள பாடல்கள் நாடகாபிமானிகளால்

சிலாகிக்கப்பட்டிருக்கின்றன. 1886 வருஷம் சோழ விலாசம் எனும் நாடகத்தை இவர் எழுதி அச்சிட்டிருக்கிறார். இவர் 1889 வருஷம் இந்திரசபா எனும் ஒர் நூதன நாடகத்தைத் தமிழில் இயற்றியுள்ளார். இது பல வருஷங்களுக்கு முன் சென்னைக்கு வந்த பாரசீக நாடகக் கம்பெனியார் ஆடிய கதையாகும் அதைத் தழுவி தமிழில் இந்நாடகத்தை இயற்றியுள்ளார். 1894 வருஷம் இந்நாடக ஆசிரியர் "பத்மினி சபா" எனும் நாடகத்தை அச்சிட்டார்.

- 1892 வருஷம் ரத்னாவதி நாடக அலங்காரம் எனும் தமிழ் நாடகம் அச்சிடப்பட்டது. இதை இயற்றியது மகாலிங்க பாரதியார் குமாரத்தி ஆதிலட்சுமு அம்மாள் அவர்கள் இதன் கதை திரிசிரபுரத்தில் தாயுமான சுவாமி கோயில் ஸ்தல மஹாத்மியமேயாம்.

இது தான் நான் அறிந்த வரையில் பெண்பாலால் முதல் முதல் இயற்றப்பட்ட தமிழ் நாடகம். இதுவும் பழைய மாதிரியைத் தழுவி எழுதப்பட்டதாகும், சற்றேறக்குறைய நாம் ஆராய்ந்து வந்த இக்காலத்தில் குறவஞ்சி நாடகம் எனும் ஓர் நாடகப் பிரிவு வழக்கத்திலிருந்ததை நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. குறவஞ்சி நாடகத்தில், ஓர் அரசனோ அல்லது தேவதையோ பவனி வருங்கால் அவரைக் கண்ட ஒரு பெண் மணி அவர் மீது காதல்கொண்டு வருந்த, ஓர் குறத்தி வந்து நீ அவரையே மணம் புரிவாய் என்று சொல்ல, பிறகு அப்பெண்மணி தான் காதல் கொண்டவரை அவ்வண்ணமே மணம் புரிவதும் காணாமற் போன குறத்தியைத் தேடி அவள் புருஷனை குறவன் அவளைத் தேடி கடைசியில் கண்டுபிடித்து சுகமாய் வாழ்வதும் கதையாகும், என்று முன்பே குறித்துள்ளேன்.

சற்றேறக் குறைய எல்லாக் குறவஞ்சி நாடகங்களும் இம்மாதிரியாகத் தானிருக்கும். இக்குறவஞ்சி நாடகங்களுள் மிகச் சிறந்தது குற்றாலக் குறவஞ்சியாம். தஞ்சாவூர்

பிரஹதீஸ்வரர் கோயிலில் மராட்டிய மன்னர்கள் கால முதல் ஒரு குறவஞ்சி நாடகமானது ஆடப்பட்டு வருகிறது. முன்பு கூறியபடி அக்கோயில் பிரம்மோத்சவத்தில் அஷ்டக்கொடி எனும் உற்சவ தினம் கோயில் தாசிகளால் இன்றைக்கும் ஆடப்பட்டு வருகிறது. இக்குறவஞ்சி நாடகம் இரண்டாவது சரபோஜ மஹாராஜா காலத்தியது. இதை எழுதியவர் கோட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர். இதன் ஏட்டுப் பிரதி தஞ்சாவூர் அரண்மனை சரஸ்வதி மஹால் புத்தக சாலையிலிருக்கிறது. சுமார் 1840 வருஷம் பிரம்ம ஸ்ரீ கவிகுஞ்சரபாரதி அவர்கள் அழகர் குறவஞ்சி யெனும் தமிழ் நாடகத்தை எழுதியுள்ளார். இந்நாடகம் அவரது பேரப்பிள்ளையாகிய நா.கோடீஸ்வர ஐயரால் அச்சிடப்பட்டிருக்கிறது.

புதிய நாடகங்கள் தயாரிக்க நிதியுதவி வழங்குதல்

நாடகக் கலையையும், அதில் ஈடுபட்டுள்ள நாடகக் கலைஞர்களையும் ஊக்குவிக்கும் வகையில், தமிழ்ப் பண்பாட்டினையும், தமிழர்களின் வீரத்தினையும், தமிழ் இலக்கிய காட்சிகளையும் மையக் கருத்தாகக் கொண்டு தமிழர்களின் நீண்ட நெடிய வரலாறு குறித்த வரலாறு ∴ புராண ∴ சமூக நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்திட கலைக்குழுக்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 102 நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்யப்பட்டுள்ளன.

புதிய நாட்டிய-நாடகங்கள் தயாரிக்க நிதியுதவி வழங்குதல்

நாட்டிய-நாடகக் கலையையும், அதில் ஈடுபட்டுள்ள கலைஞர்களையும் ஊக்குவிக்கும் வகையில், தமிழ் கலை. இலக்கியம் மற்றும் பண்பாட்டை பின்னணியாகக் கொண்டு, தமிழில் சிறந்த நாட்டிய-நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்திட கலைக்குழுக்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 35 நாட்டிய-நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்யப்பட்டுள்ளன.

மாநிலங்களுக்கிடையே கலைக்குழுக்கள் பரிமாற்றம்

கலைகளின் வாயிலாக தேசிய ஒருமைப்பாட்டினை மேம்படுத்தவும், பல்வேறு கலாச்சாரங்களையும், கலை வடிவங்களையும் கொண்ட இந்தியாவில், தமிழ் பண்பாட்டு மரபினையும், கலையினையும் பல்வேறு மாநில மக்களும் அறிந்து கொள்ள ஏதுவாக, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் கலைப் பரிமாற்றத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வெளிநாடுகளில் கலைநிகழ்ச்சிகள் நடத்துதல்

நமது தமிழ்ப் பண்பாட்டினையும், கலைகளையும் அயல் நாடுகளில் பரப்பும் வண்ணமும், அயல் நாடுகளில் வாழும் தமிழர்களின் கலை பண்பாட்டுத் தாக்கத்தினையும், கலை அனுபவங்களையும் தமிழ் வம்சாவழியினர் தொடர்ந்து பெறும் வகையிலும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் வெளிநாடுகளில் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக ஓமன், மலேசியா, ஆஸ்திரேலியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு கலைக்குழுக்கள் சென்று, கலை நிகழ்ச்சிகள் நடத்தி வந்துள்ளனர்.

திறம்படைத்த இளம் கலைஞர்களை ஊக்குவித்தல் இளங்கலைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, குரலிசை, பரதநாட்டியம் மற்றும் கருவியிசை ஆகிய கலைகளில் பயிற்சியும், திறமையும் மிக்க இளங்கலைஞர்களை கண்டறிந்து, அவர்களுக்கு மேடையேற்றம் செய்திட தன்னார்வக் கலை நிறுவனங்கள் வாயிலாக கலை நிகழ்ச்சிகள் நடத்திட ரூ.5000∴- முதல் ரூ.10000∴- வரை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 1993 இளங்கலைஞர்கள் பயன்பெற்றுள்ளனர்.

நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு ∴ கலைக் குழுக்களுக்கு இசைக்கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்க நிதியுதவி வழங்குதல்

நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு இசைக் கருவிகள் ∴ ஆடை அணிகலன் வாங்குவதற்கு தனி நபருக்கு ரூ.2,000∴-மும், கலைக் குழுக்களுக்கு ரூ.6,000∴-மும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 1585 நாட்டுப்புறக் கலைஞர்களும். 307 கலைக்குழுக்களும் பயன்பெற்றுள்ளனர்.

கலை நிகழ்ச்சிகள் வழங்குதல்

தமிழக கலைப் பெருமைகளை இளைய தலைமுறையினர் உள்ளிட்ட அனைவரும் அறிந்துக் கொள்ளும் வகையில் செவ்வியல் மற்றும் கிராமிய கலை நிகழ்ச்சிகளை நடத்துதல் நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல்

மறைந்த புகழ்பெற்ற கலைஞர்களின் குடும்பத்தினருக்கு குடும்ப பராமரிப்பு நிதியுதவி வழங்குதல். மறைந்த புகழ்பெற்ற கலைஞர்களின் குடும்ப வாரிசுதார்களுக்கு வழங்கப்படும் குடும்ப பராமரிப்பு தொகை (ஒருமுறை மட்டும்) தற்போது ரூ.10,000∴-த்திலிருந்து ரூ.25,000∴-ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை மொத்தம் 496 மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

அரிய கலை நூல்கள் பதிப்பிப்பதற்கு மானியம் வழங்குதல்

கலைகள் குறித்த அரிய நூல்களை பதிப்பித்து, வெளியிடுவதற்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 119 புத்தகங்கள் பதிப்பித்திட நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

கலைஞர்களுக்கு பயணக் கட்டண சலுகை

கலை நிகழ்ச்சிகள் நடத்திட தேவையின் அடிப்படையில் வெளியூர்களுக்கு கலைஞர்கள் ∴ கலைக்குழுக்கள் தொடர் வண்டியில் ∴ தமிழ்நாடு அரசு பேரூந்துகளில் சென்று வருவதற்காக பயணக் கட்டணச் சலுகை மன்றத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல்

நலிந்த நிலையில் வாழும் சிறந்த வயோதிகக் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் திங்கள்தோறும் ரூ.3,000∴- வழங்கப்பட்டு வருகிறது.

வினாக்கள்

1) நாடகத்தின் இரு பெரிய வகைகள் யாவை?

2) பழந்தமிழ் நாடக வகைகள் யாவை?

3) மேடை நாடகமே தம் வாழ்வென வாழ்ந்த தமிழ் நாடகப் பெரியவர் யார்?

4) இலக்கிய நிலையில் நாடகங்களை எத்தனை வகையாகப் பிரித்திருக்கின்றனர்?

5) வடிவ நிலையில் அமைந்த நாடக வகைகள் எத்தனை?

6) பெரிய நாடகம் இன்னொரு பெயரிட்டு எவ்வாறு குறிப்பிடப்படுகிறது?

1) நாடகம் என்பதை இரண்டு சொல்லாகப் பிரித்துக் காட்டுக.

2) நாடகம் என்பதற்கு, தி.க.சண்முகம் கூறும் விளக்கம் யாது?

3) பொம்மலாட்டத்தின் இன்னொரு பெயர் என்ன?

4) தோல்பாவை வளையாமல் இருப்பதற்கு எதைக் கொண்டு தோல்பாவையைத் தைத்தார்கள்?

5) தொடக்கக் காலத்தில் தமிழ் நாடகங்களுக்குரிய கதைப் பொருளை எவற்றிலிருந்து எடுத்தார்கள்?

1) தமிழில் எழுதப்பட்ட முதல் துன்பியல் நாடகம் எது? எழுதியவர் யார்?

2) இசைப்பாட்டு நாடகங்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகளைத் தருக.

3) தமிழில் முதல் கவிதை நாடகத்தை எழுதியவர் யார்?

4) நவாப் இராஜமாணிக்கம் எழுதி நடித்த கிறித்தவ நாடகத்தின் பெயர் என்ன?

5) அலிபாதுஷா நாடக ஆசிரியரின் பெயர் யாது?

கவிதை

தோற்றம்

தமிழ் இலக்கிய வளர்ச்சியும் அதனோடு கூடிய தேவையும் புதுக்கவிதைக்கு வித்திட்டது. ஆங்கிலத்தில் நேற ீழநவசல, ஆழனநசெ ீழநவசல என அழைக்கப்பட்ட கவிதை வடிவம் தமிழுக்கே உரிய மரபில் புதுக்கவிதையாகத் திகழ்கிறது.

அமைப்பு

மரபுக்கவிதை போன்று சீர், தளை, அடி, தொடை என்னும் கட்டுப்பாடுகளை கொண்டிராத ஒன்றாக புதுக்கவிதை காணப்படுகின்றது. புதுக்கவிதைகளில் காணும் காட்சியினை அலங்கார வார்த்தைகளின்றி, உள்ளதை உள்ளபடியே எளிய தமிழ்ச் சொற்கள் கொண்டே எழுதப்படும் கவிதை வடிவம்.

அடிவரையறை (வரி எண்ணிக்கை)

இத்தனை அடிகள்தான் எழுதப்பட வேண்டும் என்ற வரையறை இல்லை.

அடியமைப்பு (வரியமைப்பு)

ஒவ்வொரு அடியிலும் குறிப்பிட்ட சீர்கள் இருக்க வேண்டுமென்ற வரையறை இல்லை.

சொற்சுருக்கம்

சொற்சுருக்கம் இருக்க வேண்டியது புதுக்கவிதைக்கான முக்கிய அம்சம்.

ஒலிநயம்

பேச்சுவழக்குச் சொற்களிடையே ஒலிநயம் காணப்படுவது பொதுவானது.

சொல்லாட்சி

சொற்கள் சிறப்பாகப் பயன்படுத்தப்படுவதும் வடமொழி, ஆங்கிலம், பேச்சுவழக்குச் சார்ந்த சொற்களுக்கும் பாவிக்கப்படுகிறது.

தொடை நயம்

எதுகை, மோனை, இயைபு என்னும் தொடை நயங்களெல்லாம் கட்டாயம் என்ற நிலையில்லை. யாப்புச் சாயல் மற்றும் நாட்டுப்புறச் சாயல் அடிவரையறை செய்து எழுதும்போது மரபுக்கவிதை போன்று இது தோற்றமளிக்கும்.

வசன நடை மற்றும் உரையாடல் பாங்கு

வசன நடையும் உரையாடல் பாங்கும் சிறப்பாக எளிய முறையில் பாவிக்கப்படும்.

காட்சி அமைப்பு

ஒரு கருப்பொருளை காட்சியாகக் கொண்டு நம்கண் முன்னே கொண்டு வந்து நிறுத்தும் எளிய வடிவம் புதுக்கவிதை இந்த புதுக்கவிதை உலகிற்கு புதுப்பாதை அமைத்த பெருமை கவியரசு நா.காமராசன் அவர்களையே சாரும்.

கவிதை

தோற்றமும் வளர்ச்சியும்

மரபுக்கவிதை காலத்தால் முந்தியது. பல்வேறு இலக்கிய நூல்களாக இருபது நூற்றாண்டுகளுக்கும் மேலாகத் தழைத்து விளங்கும் சிறப்புடையது. புதுக்கவிதை, கடந்த இருபதாம் நூற்றாண்டில் தோன்றிச் செழிக்கத் தொடங்கியது. இக்கவிதைகளின் தோற்றம், பெயர்க்காரணம், நோக்கம், நூல்கள், படைப்பாளர்கள், வளர்ச்சி, இன்றைய நிலை ஆகியன குறித்து இங்குக் காண்போம்.

தோற்றம்

மரபுக்கவிதை

நமக்குக் கிடைத்துள்ள நூல்களுள் மிகவும் தொன்மையானதாக விளங்குவது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலாகும். இந்நூல் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப் பெறுகின்றது. இதற்கும் முந்தையனவாக இலக்கண நூல்கள் இருந்திருக்கின்றன. அவ்விலக்கண நூல்கள் 'எள்ளிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுவது போல' இலக்கியத்திலிருந்து இலக்கண நூல்கள் ஏற்படுகின்றன என்னும் விதிக்கு இணங்க, தமக்கு முற்பட்ட இலக்கியங்களைக் கொண்டு இலக்கணம் வகுத்தனவாகும். இலக்கண நூல்களில் செய்யுள் தொடர்பான எழுத்து, சொல், அகம்-புறம் என்னும் பாடுபொருள் குறித்த செய்திகள், யாப்பு, அணி ஆகியன பற்றிய வரையறைகள் இடம் பெற்றிருக்கும். எனவே இவற்றைக் கருதிப் பார்க்கும்போது, செய்யுள் என்னும் கவிதை வடிவம் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட ஆண்டுக்காலத் தொன்மையுடையது என உறுதிபடக் கூறலாம்.

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, பரிபாடல் ஆகியன குறித்த இலக்கணங்களைத் தொல்காப்பியம் எடுத்துரைக்கின்றது. இறையனார் களவியல் உரையில் மறைந்து போன சங்க நூல்களின் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. முதுகுருகு, முதுநாரை, களரியாவிரை ஆகிய தலைச் சங்க நூல்களும், கலி, குருகு, வியாழமாலையகவல், வெண்டாளி ஆகிய இடைச் சங்க நூல்களும் அவ்வகை நூல்களுள் அடங்கும். சிற்றிசை, பேரிசை என்பன கடைச்சங்கத்தில் இருந்து மறைந்தவற்றுள் அடங்கும். 'மறைந்துபோன தமிழ்நூல்கள்' என மயிலை சீனிவேங்கடசாமி, இவ்வகை நூல்கள் குறித்துத் தனியொரு நூலே எழுதியுள்ளார். அவற்றின்வழி மரபுக்கவிதையின் தொன்மையை நன்கு அறியலாம்.

தொன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடும்

சூழ்கலை வாணர்களும் - இவள்

என்று பிறந்தவள் என்றுண ராத

இயல்பின ளாம்எங்கள் தாய்

எனப் பாரதியார் பாடும் பாடல், மரபுக்கவிதையின் காலத் தொன்மைக்கும் பொருந்தக் கூடியதாகும்.

புதுக்கவிதை

பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை தமிழ் இலக்கிய வடிவம் என்பது செய்யுள் வடிவமாகவே இருந்தது. இந்நூற்றாண்டில் மேலைநாட்டில் பழைய யாப்பு உருவத்திலிருந்து விலகி, இயைபுத் தொடை (சுாலஅந) முதலியன இன்றி உரைநடைச் சாயலில் புதிய கவிஞர்கள் கவிதை படைக்கத் தொடங்கினர். 1892இல் அமெரிக்கக் கவிஞர் வால்ட் விட்மன் புல்லின் இலைகள் என்ற தலைப்பில் வெளியிட்ட பன்னிரண்டு கவிதைகளைக் கொண்ட தொகுப்பு, யாப்பு மரபைப் புறக்கணித்து .ப்ரீவெர்ஸ் (குசநந எநசளந) என்னும் வசன கவிதையாக அமைந்தது. அவர்தம் பாடுபொருளும் பிறர் இதுவரையில் பேசாப் பொருளாக அமைந்தது. இவரை அடியொற்றி எமர்சன், கார்ல் சான்ட்பெர்க், லின்ட்ஸே, வாலெஸ் ஸ்டீவன்ஸன், ஸ்டீவன் கிரேன், அமி லோவல் போன்ற எண்ணற்ற கவிஞர்கள் வசன கவிதை படைக்கலாயினர்.

பிரெஞ்சு நாட்டிலும், ரிம்பாடு என்னும் இளங்கவிஞர், 1886ஆம் ஆண்டு ஒளி வெள்ளம் என்னும் தலைப்பில் வெர்ஸ் லிப்ரே என்ற கட்டற்ற கவிதைகளைப் படைத்தார். இவரையடுத்து 1889-இல் வியல் கிரிப்பின் என்பவர் கட்டற்ற கவிதை என்ற அறிவிப்புடன் தம் கவிதைகளை வெளியிட்டார்.

இத்தாலி, ஸ்பானிஷ், செர்மன், ருஷ்ய மொழிகளின் இலக்கண மரபுகளிலும் நெகிழ்ச்சியும் மாற்றமும் ஏற்படத் தொடங்கின. பிரெஞ்சு நாட்டினரின் சர்ரியலிசம், இத்தாலியக் கவிஞர்களின் ப்யுச்சரிசம், ஜெர்மானியரின் எக்ஸ்பிரஷனிசம் என்பன அவ்வந்நாடுகளின் மரபுக்கவிதை நிலை கடந்து வசன கவிதைகளைத் தோற்றுவிக்கலாயின.

‘விட்மனின் பாடலில் எதுகை, மோனை, தளை எதுவுமே இருக்காது வசன நடை போலவே இருக்கும் கவிதையைப் பொருளில் காட்ட வேண்டுமே யொழியச் சொல்லடுக்கில் காட்டுவது பயனில்லை எனக்கருதி வசன நடையிலேயே அவர் எழுதிவிட்டார்’ என்பார் மகாகவி பாரதியார். மரபுக் கவிதையில் வல்லவரும் தம் பல்வேறு பாடல்களை அதிலேயே படைத்தவருமாகிய பாரதியார் வசன கவிதையில் விருப்புற்றவராகத் தாமும் காட்சிகள் என்னும் தலைப்பில் பல வசன கவிதைகளைப் படைத்துள்ளார்.

பாரதியைத் தொடர்ந்து ந.பிச்சமூர்த்தி, கு.ப.ராஜகோபாலன் போன்றோர் புதுக்கவிதை படைக்கலாயினர். புதுக்கவிதைகள், பத்திரிகைகளில் வெளியிடப் பெற்றுப் படிப்படியாகச் செல்வாக்குப் பெற்றன என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

பெயர்க்காரணம்

தமிழ்க் கவிதைகளை மரபுக்கவிதை, புதுக்கவிதை என்பன போன்ற பெயர்களில் குறிப்பிடுகிறோம். அதற்கான காரணங்களைப் பார்ப்போம்.

மரபுக் கவிதை

தொன்று தொட்டு வரும் தன்மையுடையது என்பதை மரபு என்னும் சொல் உணர்த்தி நிற்கின்றது. இனிய ஓசை நயம் அமைந்த பாடல்களைக் கேட்டுப் பழகியவர், அதே ஓசையில் பாடல் புனைய முயன்று, பிறர் படிக்கவும், இவ்வாறே புதியன படைக்கவும் ‘பாடல் அமைப்பை’

எழுத்து, அசை, சீர் என அமைத்து ஒழுங்குபடுத்தியிருத்தல் வேண்டும். இவ்வாறு யாப்பிலக்கணம் தோன்ற, அடுத்தடுத்து வந்தவர் அம்மரபு மாறாமல் கவி படைக்கத் தொடங்கினர்.

பாக்களையடுத்துப் பாவினங்களும், அவற்றையடுத்துக் கும்மி, சிந்து போன்றனவும் தோன்றின. இவ்வாறுதான் பாடப்படவேண்டும் என்னும் வரையறை இருப்பதால் சிதறாத வடிவமாகப் பாதுகாக்கப் பெற்றுக் காலந்தோறும் இம்முறை பின்பற்றப்பட்டு வருகின்றது.

பாடுபொருளும் உத்திகளும்

புதியனவாயினும் மரபு இலக்கணத்தின்படி படைக்கப்படுதலின் இவை மரபுக்கவிதை எனப்படுகின்றன.

புதுக்கவிதை - யாப்பு

ஆசிரியப்பா, வெண்பா, விருத்தம், சிந்து எனக் காலந்தோறும் யாப்பு வடிவங்கள் செல்வாக்குப் பெற்றுவந்தன. மேனாட்டுத் தாக்கத்தால் உரைநடை செல்வாக்குப் பெற்ற நிலையில், யாப்பிலக்கணத்திற்குக் கட்டுப்படாமல் கவிதை உணர்வுகளுக்குச் சுதந்திரமான எழுத்துருவம் கொடுக்கும் இப்படைப்பு முயற்சி, வசன கவிதை என்றே அழைக்கப்பட்டது. பின்னர், யாப்பில்லாக் கவிதை, இலகு கவிதை, கட்டிலடங்காக் கவிதை போன்ற பெயர்களை அவ்வப்போது பெற்று வரலாயிற்று.

பழக்கத்தில் உள்ள நிலையிலிருந்து சிறிதளவோ முற்றிலுமோ மாறுபட்டுத் தோன்றுவது புதுமை எனப்படும். வழிவழியாக மரபு கெடாது யாப்பிலக்கணத்தோடு பொருந்தி வரும் கவிதைகளிலிருந்து மாறுபடும் கவிதைப் படைப்புதான் புதுக்கவிதை ஆகும். புதுக்கவிதைகள் உருவத்தால் மட்டுமன்றி, உள்ளடக்கம், உத்திமுறைகள் ஆகியவற்றாலும் புதுமையுடையனவாகும்.

இலக்கணச் செங்கோல்

யாப்புச் சிம்மாசனம்

எதுகைப் பல்லக்கு

மோனைத் தேர்கள்

தனிமொழிச் சேனை

பண்டித பவனி

இவையெதுவும் இல்லாத

கருத்துக்கள் தம்மைத்தாமே

ஆளக் கற்றுக்கொண்ட

புதிய மக்களாட்சி முறையே

புதுக்கவிதை (ஊர்வலம்)

என மேத்தா கூறும் புதுக்கவிதை, புதுக்கவிதையின் இலக்கணத்தையும் இயல்பையும் புலப்படுத்தும். இதனை, சாலை இளந்திரையன் உரை வீச்சு எனக் கூறுவார்.

நோக்கம்

கவிதை, ஒரு கருத்தை எடுத்துச் சொல்கிறது. அந்தக் கருத்து எதற்காகச் சொல்லப்படுகிறது? அதையே நோக்கம் என்கிறோம்.

மரபுக்கவிதை

மரபுக்கவிதை, சங்க காலத்தில் மன்னர்களோடு தொடர்புடையதாக இருந்தது. மன்னர்களின் வீரம், வெற்றி, கொடை, ஆட்சிச் சிறப்பு ஆகியவற்றைப் புகழ்வதாகவும், துணிச்சலுடன் புலவர்கள் அறிவுறுத்துவதாகவும் அமைந்தன. அரசவையிலோ, சங்கம் போன்ற தமிழ் அவைகளிலோ ஒன்று குழுமிய புலவர்கள் அகப்பொருள் பாடி இன்புறுத்துவதாகவும் அறிவுறுத்துவதாகவும் அமைந்தன.

இடைக்காலத்தில் பக்தி இலக்கிய மறுமலர்ச்சியின் காரணமாகப் பாடுபொருள் இறைவனைப் பற்றியதாகவும், திருத்தலங்களின் (கோயில் உள்ள ஊர்) சிறப்பை உணர்த்துவதாகவும் அமைந்தது.

சித்தர் இலக்கியம், தத்துவம், மருத்துவம், அரசர்களையும் குறுநில மன்னர்களையும் மகிழ்வுறுத்தும் சிற்றிலக்கியங்கள் என அடுத்தடுத்த காலங்களில் பாடுபொருள்கள் அமைந்தன.

கவியரங்கம், வரையறுக்கப்பட்ட தலைப்பு, இயற்கை, சமூக அவலம் என இன்றைய நிலையில் மரபுக்கவிதையின் பயன்பாடு அமைகின்றது. எனவே, மரபுக்கவிதை தொழிலுக்கு உரியதாகவும், அறிவுறுத்துவதாகவும், இன்புறுத்துவதாகவும் அமைந்து வரும் நிலையை அறிகின்றோம்.

புதுக்கவிதை

புதுக்கவிதையைத் தொழிலாகக் கொண்டு வாழ்பவர்கள் மிகச் சிலரே. பலர் சமுதாய அவலம் கண்டு அவ்வப்போது கவிதைகள் புனைபவராக உள்ளனர். தனிமனித உணர்வுகளைப் பாடுவதும், நாட்டுப்பற்று, மொழியுணர்வு, பொதுவுடைமை, அநீதியை எதிர்த்தல், பெண்ணுரிமை, தலித்தியம், பகுத்தறிவு என்பனவற்றைப் பாடுதலும் இன்றைய புதுக்கவிதைகளின் நோக்கங்களாக உள்ளன.

மரபுக்கவிதை இயற்றுவது என்பது, பெரும்பாலும் அடித்தட்டு மக்களிடத்தில் இடம் பெறாததாகவே இருந்து வந்துள்ளது. புதுக்கவிதையைப் பொறுத்தவரை பெண்கள், அடித்தட்டு மக்கள், தொழிலாளிகள் எனப் பலரும் படைப்பாளராகி விடுவதனால், தங்களின் உண்மை நிலையையும், வாழ்வியல் சிக்கல்களையும், தாங்கள் எதிர்நோக்கும் தீர்வுகளையும் தெளிவாக எடுத்துக் கூற வல்லவர்களாய் அமைகின்றனர். அவர்தம் புதுக்கவிதைப் படைப்புகளும் அவர்களின் மனநிலையையும் வாழ்வியலையும் படிப்பவருக்கு நன்கு உணர்த்துவனவாகின்றன.

படைப்பாளர்களும் நூல்களும்

இவ்வாறு இரு வகையாகப் பிரிக்கப்பட்ட கவிதைகளைப் படைத்தவர்கள் பற்றியும், அவர்களது நூல்களைப் பற்றியும் இனிக் காணலாம்.

மரபுக் கவிதை

சங்க இலக்கியம், காப்பியங்கள், நீதி நூல்கள், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், தனிப்பாடல்கள் என்னும் யாவும் மரபுக் கவிதைகளால் ஆனவையே ஆகும்.

பாரதியார் காலந்தொட்டு வரும் மரபுக்கவிதை படைப்பாளர்களும் அவர்தம் படைப்புகளும் குறிப்பிடத்தக்க சிறப்புடையனவேயாகும்.

(1) பாரதியார் - பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில்பாட்டு

(2) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை - ஆசியசோதி, மருமக்கள்வழி மான்மியம்

(3) நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை - தமிழன் இதயம்,

கவிதாஞ்சலி

(4) பாரதிதாசன் - பாண்டியன் பரிசு, இருண்ட வீடு, குடும்பவிளக்கு, அழகின் சிரிப்பு

(5) கண்ணதாசன் - இயேசு காவியம், மாங்கனி, ஆட்டனத்தி ஆதிமந்தி

(6) சுத்தானந்த பாரதியார் - பாரதசக்தி மகாகாவியம், தமிழ்த் திருப்பாவை

(7) சுரதா - சிரிப்பின் நிழல், தேன்மழை, துறைமுகம்

(8) அழ.வள்ளியப்பா - மலரும் உள்ளம், பாட்டிலே காந்தி

(9) வாணிதாசன் - கொடி முல்லை

(10) வைரமுத்து - வைகறை மேகங்கள்

புதுக்கவிதை

பாரதியார் தொடங்கிப் புதுக்கவிதைக் கவிஞர் பலர் நல்ல பல படைப்புகளை நல்கியுள்ளனர்.

(1) பாரதியார் - வசன கவிதை

(2) ந.பிச்சமூர்த்தி - காட்டு வாத்து, வழித்துணை

(3) அப்துல் ரகுமான் - பால்வீதி, சுட்டுவிரல்

(4) வாலி - அவதார புருஷன், பாண்டவர் பூமி

(5) மீரா - கனவுகள், கற்பனைகள் ஸ்ரீ காகிதங்கள்

(6) நா.காமராசன் - கறுப்பு மலர்கள், நாவல்பழம்

(7) மேத்தா - கண்ணீர்ப் பூக்கள், ஊர்வலம்

(8) வைரமுத்து - இன்னொரு தேசிய கீதம், திருத்தி எழுதிய

தீர்ப்புகள், கொடிமரத்தின் வேர்கள்

(9) சிற்பி - சர்ப்ப யாகம்

(10) அறிவுமதி - நட்புக்காலம்

வளர்ச்சி வரலாறு

எண்ணத்தை அழகாக எடுத்துச் சொல்வது கவிதை. சொல்வதையும் அழகிய வகையில் சொல்லப்பயன்படுவது பா வடிவங்களாகும். காலந்தோறும் மாறிய பா, பாவினம் பற்றி அறிந்து கொள்ளலாம்.

மரபுக் கவிதை

ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய மரபுக்கவிதை வடிவம் இன்றும் நிலைபெற்று வருகின்றது. இலக்கியம் என்றாலே அது மரபுக்கவிதைதான் என்று விளங்கிய கால கட்டங்களைப் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையில் காண முடிகின்றது.

'முதலில் தோன்றியது, மிகுந்த கட்டுப்பாடு இல்லாததாகிய ஆசிரியப்பாவாகும் வரவர ஓசை நலம் கருதியும் செப்பமான நிலையை எண்ணியும் சிற்சில கட்டுப்பாடுகள் தோன்றியிருக்கும். ஆசிரியப்பாவை அடுத்து அதனோடொத்த இயல்புடைய வஞ்சிப்பா தோன்றியதெனலாம். அடுத்துக் குறள் வெண்பா உள்ளிட்ட பலவகை வெண்பாக்களும், பிறகு மருட்பாவும், அதன் பிறகு கலிப்பாவும், பரிபாடலும் தோன்றியிருத்தல் வேண்டும். அடுத்து வந்த காலத்தில் விருத்தப்பா, தாழிசை, துறை என்பன பயன்பாட்டிலமைந்தன' என்பார் அ.கி.பரந்தாமனார்.

யாப்பிலக்கணம் குறித்து அகத்தியம், அவிநயம், காக்கைபாடினியம், கையனார் யாப்பியல், சங்க யாப்பு, பல்காயம், பனம்பாரம், பெரிய பம்மம், மயேச்சுரர் யாப்பு, மாபுராணம், வாய்ப்பியம், யாப்பருங்கலம் எனப் பல்வேறு இலக்கண நூல்கள் காலந்தோறும் தோன்றி வந்துள்ளன. இந்நூல்கள் தொல்காப்பியக் காலம் சார்ந்தும், காரிகைக்கு முன்னரும் தோன்றியனவாகும்.

காரிகைக்குப் பின், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், முத்துவீரியம், அறுவகை இலக்கணம் என்னும் நூல்களும் யாப்பிலக்கணம் உரைப்பனவாய் அமைந்துள்ளன.

இருபதாம் நூற்றாண்டிலும் யாப்பிலக்கண வழிகாட்டி நூல்கள் பல தோன்றியுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கன:

(1) புலவர் குழந்தை - யாப்பதிகாரம், தொடையதிகாரம் (உரை)

(2) அ.கி.பரந்தாமனார் - கவிஞராக (உரைநடை)

(3) கி.வா.ஜகந்நாதன் - கவி பாடலாம் (உரைநடை)

(4) த.சரவணத் தமிழன் - யாப்பு நூல் (நூற்பா)

(5) ச.பாலசுந்தரம் - தென்னூல் (நூற்பா)

(6) இரா.திருமுருகன் - சிந்துப் பாவியல் (நூற்பா)

சங்க இலக்கியத்தில் அகவலும், நீதி இலக்கியத்தில் வெண்பாவும், பிற்காலக் காப்பியங்களில் விருத்தமும், குறவஞ்சி, பள்ளு முதலியவற்றில் சிந்துப் பாடலுமாக மரபுக்கவிதை வடிவம் சிறந்து வந்துள்ளது.

புதுக்கவிதை

கி.பி.1930-1945 காலகட்டத்தில் மணிக்கொடிக் குழுவினர், பாரதியாரை அடுத்துப் புதுக்கவிதை இயற்றியவர்களாவர். அவர்களுள் கு.ப.இராசகோபாலன், ந.பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன், வல்லிக்கண்ணன்

இன்றைய நிலை

பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குப் பின் மொழியமைப்பிலும், வெளியிடும் பாங்கிலும் மாறுதல்கள் ஏற்பட்டன. அவற்றை விரிவாகக் காணலாம்.

மரபுக்கவிதை

நற்றமிழ், தெளிதமிழ், வெல்லும் தூயதமிழ் போன்ற இலக்கிய இதழ்களில் வல்லமை படைத்த மரபுக் கவிஞர்களின் படைப்புகளும், போட்டிக் கவிதைகள் பலவும் இன்றும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

கவியரங்குகளில் மரபுக் கவிதைகள் சிறப்பிடம் பெறுகின்றன.

பாரதியார் பிள்ளைத் தமிழ், காமராசர் பிள்ளைத் தமிழ், சிவாஜிகணேசன் பிள்ளைத் தமிழ் என்பன போன்ற மரபுவழி இலக்கியங்கள் இன்றும் படைக்கப் பெற்று வருகின்றன. மருதூர் அரங்கராசனின் யாப்பறிந்து பாப்புனைய என்னும் நூல் இன்றைய நிலையில் மரபுக்கவிதை படைப்பவர்க்கு ஏற்ற வகையில் இயற்றப் பெற்றுள்ளது.

புதுக்கவிதை

உயர்நிலைக் கல்வி பயிலும் மாணவர்கள் உட்படப் பலரும் எளிதில் எழுதுவதாகப் புதுக்கவிதை விளங்குகின்றது. பெண்ணியம், தலித்தியம் என்பன போன்ற கொள்கைவாதிகளும், கவியரங்கம் நிகழ்த்துவோரும், சமுதாயத்தின் பல்வேறு தரப்பினரும் புதுக்கவிதை நூல்களை வெளியீடு செய்யும் வழக்கத்தைத் தொடர்ந்து காணமுடிகின்றது.

நாளிதழ்கள், வார இதழ்கள், பல்வேறு மாத இதழ்கள், தை, நறுமுகை போன்ற காலாண்டிதழ்கள் எனப் பல வகை இதழ்களிலும் புதுக்கவிதைகள் சிறப்பிடம் பெறக் காண்கிறோம்.

ஹைக்கூ (துளிப்பா), சென்ரியு (நகைத் துளிப்பா), லிமரைக்கூ (இயைபுத் துளிப்பா) என்னும் வகைகளும் புதுக்கவிதையின் சாராம்சமாய் நாளும் தழைத்து வருகின்றன.

கவிதை என்பது சொற்களில் இல்லை சொற்களுக்கு இடையில் இருக்கிறது. முருகியல் உணர்வு தருவதோடு வாழ்வியலை நெறிப்படுத்துவதும் அதன் பயன்களாகும். மரபுக்கவிதை, இசைப்பா, புதுக்கவிதை, குறுங்கவிதை என்பன கவிதை வகைமைகளாகும்.

மரபுக்கவிதை சந்தமும் தொடையும் செறிந்தது. வெண்பா, ஆசிரியப்பா என்னும் பாவகைகளும், தாழிசை, துறை, விருத்தம் என்னும் பாவினங்களும் மரபுக்கவிதை வகைமையில் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன. சந்தப்பா, கும்மிப்பாடல், சிந்துப்பா என இசைப்பா மூன்று வகைப்படும். சந்தப்பா வல்லினம் முதலான இசைகளால் சிறந்து விளங்குவது கும்மிப்பா வெண்டளை யாப்பும் முடுகியல் ஓசையும் கொண்டு சிறப்பது சிந்துப்பா அடிதோறும் இயைபுத் தொடை கொண்டு திகழ்வது.

புதுக்கவிதை, மரபுக்கவிதையின் வரையறைகள் கடந்தது சுதந்திரமாக எழுத ஏற்றது. எளியன, பல உத்திமுறைகளில் அமைந்தன, இருண்மை நிலையின என வகைப்படுத்தி உணரத் தக்கன புதுக்கவிதைகள். குறுங்கவிதை மூன்றடிகளில் அமைவது. ஜப்பானியக் கவிதைகளின் தாக்கத்தால் தோன்றியது. இது துளிப்பா (ஐக்கூ), அங்கதம் உடையதான நகைத் துளிப்பா (சென்ரியு), முதலடியும் ஈற்றடியும் இறுதியில் இயைந்து அங்கதம் பொருந்த வரும் இயைபுத் துளிப்பா (லிமரைக்கூ) என மூவகைகளில் அமைவது.

கவிதை வகைமைகளைச் சான்றுகளோடு இப்பாடத்தில் கற்ற நாம், இனி அவற்றை அடையாளம் காணலாம் உரிய உத்திமுறைகளில் பொருத்தி உணரலாம். இவ்வாறே நாமும் கவிதை படைக்கவும் முற்படலாம்.

புகழ்பெற்ற புதுக்கவிதை நூல்களில் சில:

நா.பிச்சமூர்த்தியின் - "காட்டு வாத்து", "வழித்துணை",

மீராவின் - "கனவுகளு, கற்பனைகள்ரீ காகிதங்கள்", "ஊசிகள்"

ஞானக்கூத்தனின் - "அன்று வேறு கிழமை" ஆகியவை புகழ்பெற்ற சில நூல்களாகும்.

வல்லிக்கண்ணனின் - “புதுக்கவிதை தோற்றமும் வளர்ச்சியும்“

தேவிராவின் - “புதுக்கவிதை இலக்கணம்“ போன்ற நூல்களும் உள்ளன.

புகழ்பெற்ற புதுக்கவிதை நூல்கள்

காட்டு வாத்து, வழித்துணை: நா.பிச்சமூர்த்தி

கனவுகளு, கற்பனைகள்ரீ காகிதங்கள், ஊசிகள்: மீரா

அன்று வேறு கிழமை: ஞானக்கூத்தன்

புதுக்கவிதை தோற்றமும் வளர்ச்சியும்: வல்லிக்கண்ணன்

புதுக்கவிதை இலக்கணம்: தேவிரா (எ) ராஜேந்திரன் .

புதுக்கவிதை

இலக்கிய வகைகளில் முதலிடம் பெறுவது கவிதையே ஆகும். கவிதையின் கருத்து, கற்பனை, உணர்ச்சி, வடிவம் ஆகியவற்றின் ஒருங்கமைவும், ஒழுங்கமைவும் இதற்கான காரணம் எனலாம். ‘ஒவ்வொரு கோணத்திலும் கவிதை என்பது உணர்ச்சிகளின் மொழி’ என்கிறார் வின்செஸ்டர். ‘கவிதை என்பது சொற்களில் இல்லை சொற்களுக்கு இடையில் இருக்கிறது’ என்னும் கருத்து, ‘உணர்த்தும் முறையே’ கவிதை இலக்கணம் என்பதைப் புலப்படுத்துகிறது. எந்தப் பொருளைப் பற்றி வேண்டுமானாலும் கவிதை தோன்றும். கவிதை என்பது காணும் பொருள்களை வருணிப்பதில் இல்லை அப்பொருள்களைக் காணும்பொழுது எழும் மனநிலையில்தான் உள்ளது. ‘கவிதையில் சரியான வார்த்தைகள் சரியான இடத்தில் அமைய வேண்டும். கவிஞன் வார்த்தைகளை எடுத்துக் கோப்பதில்லை. உணர்ச்சியின் பெருக்கு, சரியான வார்த்தைகளைச் சரியான இடத்திற்குக் கொண்டு செல்கிறது’ என்பார் புதுமைப்பித்தன். மேலும், ‘கவிதை, மனிதனின் உணர்ச்சியில் பிறந்த உண்மை மனித உள்ளம் யதார்த்த உலகத்துடன் ஒன்றுபட்டோ, பிரிந்தோ கண்ட கனவு அது உள்ள நெகிழ்ச்சியிலே உணர்ச்சி வசப்பட்டு வேகத்துடன் வெளிப்படுவது’ எனவும் உரைப்பார்.

கவிதை முருகியல் (யநளவாநவஉைள) உணர்ச்சியைத் தரக்கூடியது. உயர்ந்த கவிதைகள் யாவும் அவற்றில் ஈடுபட்டுப் படிப்போரிடம் கவிஞர்களின் அனுபவத்தையே பெற வைத்துவிடுகின்றன. அவர்கள் உணர்த்த விரும்பும் உண்மைகளையும் உணர்த்தி விடுகின்றன. கவிதைகளில் பெரும்பாலானவை பயிலும்போது இன்பம் தருவதுடன் உள்ளத்தைத் திருத்தும் பண்பையும் பெற்றிருப்பதால், அவை படிப்போரின் வாழ்க்கையைச் செம்மைப் படுத்துவனவாக உள்ளன.

முழுமையாகவும் விரைவாகவும் உணர்த்தும் திறனும், மகிழ்வூட்டி வாழ்வை நெறிப்படுத்தும் பொருண்மையும் ஆகிய தன்மைகளைக் கொண்ட கவிதைகள் தமிழில் காலந்தோறும் தோன்றி வருகின்றன. அவற்றை மரபுக் கவிதை, இசைப்பா, புதுக்கவிதை, துளிப்பா என்பனவாக வகைப்படுத்திக் கொள்ளலாம்.

புதுக்கவிதை என்பதற்கான வரைவிலக்கணம் என்பது இன்றைய சூழலில் பல்வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. எனினும் இலகுவாக புதுக்கவிதை என்பது கவிதைக்குரிய மரபு, இலக்கணம் அற்ற ஒரு கவிதை முறையாக நோக்கப்படுகின்றது. மரபுக்கவிதையானது சீர், தளை, அடி, தொடை என்னும் கட்டுப்பாடுகளைக் கொண்டு காணப்பட புதுக்கவிதை அவற்றை புறந்தள்ளியதாக புதுக்தோற்றத்துடன் காணப்படுகின்றது.

இயல்புநிலைக் கவிதை

அகராதி தேடும் வேலையின்றிப் படித்த அளவில் புரியும் பாங்குடையவை இவை. சில சான்றுகளைக் காண்போம்.

1. காதலும் நட்பும் குறித்த கவிஞர் அறிவுமதியின் கவிதை :

கண்களை வாங்கிக்கொள்ள

மறுக்கிறவள்

காதலியாகிறாள்

கண்களை வாங்கிக்கொண்டு

உன்னைப்போல்

கண்கள் தருகிறவள்தான்

தோழியாகிறாள்

(நட்புக்காலம்)

2. முதிர்ச்சியின் பக்குவம் குறித்த இரா.த

காய்கள்கூட

கசப்புத் தன்மையை

முதிர்ச்சிக்குப் பின்

இனிப்பாக்கிக் கொள்கின்றன

மனிதர்களில் சிலர்

மிளகாய்போல் காரத்தன்மை மாறாமல்

காலம் முழுவதும்

வார்த்தை வீச்சில் வல்லவர்களாய்

(ஒளிச்சிறை)

3. காதலியை நலம்பாராட்டும் காதலனின் கூற்றாகப் பா.விஜய்யின் கவிதை:

உன்மீது மோதி

வாசம் பார்த்த தென்றல்

தெருப்பூக்களைப் பார்த்தால்

திரும்பிப் போகிறது

(18-வயசுல)

4. அன்பை அடையாளப்படுத்தும் தமிழன்பனின் கவிதை:

தொப்பையாய்

நனைந்துவிட்ட மகள்

அப்பா

தலையை நல்லாத் துவட்டுங்க

என்றாள்

கிழியாத அன்பும் கிழிந்த துண்டுமாய்

(நடை மறந்த நதியும் திசைமாறிய ஓடையும்)

5. பணிக்குச் செல்லும் பெண்கள் பற்றிய பொன்மணி வைரமுத்துவின் கவிதை:

வீட்டுத் தளைகள்

மாட்டியிருந்த கைகளில்

இப்போது

சம்பளச் சங்கிலிகள்

6. தன்னம்பிக்கையூட்டும் மதியழகன் சுப்பையாவின் கவிதை:

வாய்ப்புகளை

நழுவவிட்டபின்

அழுகிறது மனம்

அடுத்துவரும்

வாய்ப்புகளை

அறியாமலேயே

(மல்லிகைக் காடு)

7. ஐம்பூதங்கள் குறித்த தங்கம் மூர்த்தியின் கவிதை:

குடந்தையில்

நெருப்பால் இழந்தோம்

சுனாமியில்

நீரால் இழந்தோம்

போபாலில்

வாயுவால் இழந்தோம்

ஆந்திராவில்

வான்மழையால் இழந்தோம்

குஜராத்தில்

நிலநடுக்கத்தால் இழந்தோம்

ஐந்தையும்

பூதங்கள் என்றவன்

தீர்க்கதரிசிதான்

8. மதநல்லிணக்கம் குறித்தமைந்த அப்துல் ரகுமான் கவிதை:

எப்படிக் கூடுவது

என்பதிலே பேதங்கள்

எப்படி வாழ்வது

என்பதிலே குத்துவெட்டு

பயணத்தில் சம்மதம்

பாதையிலே தகராறு

9. அரவாணிகள் குறித்த ஆஷாபாரதியின் கவிதை:

என்ன பெயர்

சொல்லிவேண்டுமானாலும்

எங்களைக் கூப்பிடுங்கள்

மனிதநேயம் ம(ை)றந்த

மனிதர்களே

என்னவோ போல் மட்டும்

எங்களைப் பார்க்காதீர்கள்

10. இன்னா செய்யாமை குறித்த கவிதையொன்று:

விழுங்கிய மீன்

தொண்டையில் குத்துகையில்

உணர்கிறேன்

தூண்டிலின் ரணம்

(வலியிழந்தவள்)

மேற்கண்ட கவிதைகள் அனைத்தும் எளியன் படித்ததும் புரிவன ஆழ்ந்த கருத்தடங்கியன் கற்போரை நெறிப்படுத்த வல்லன் பல்வேறு கவிஞர்களால் பாடப்பட்டன் பல பொருண்மையில் அமைந்தன.

சமுதாய நிகழ்வில் பாதிப்படைந்த ஒவ்வொருவரும் தாம் அறிந்த சொற்றொடரால் தம் உணர்வைச் சமுதாயத்திற்குக் கவிதைகளாகப் படைத்து வழங்கலாம் என்னும் துணிச்சலை இந்த எளிய கவிதை நடைகள் நமக்கு உணர்த்துகின்றன.

இந்தக் கருத்து நிலைகளே ஒப்பீட்டுத் திறனாய்வின் கருதுகோள்கள் ஆகும்.

உத்திமுறைக் கவிதை

மரபுக் கவிதைக்கு அணியிலக்கணம் போல, கருத்தை உணர்த்துவதற்குப் புதுக்கவிதையிலும் சில உத்திமுறைகள் கையாளப்படுகின்றன.

படிமக் குறியீடு, தொன்மக் குறியீடு, அங்கதம் என்பன புதுக்கவிதைகளில் காணலாகும் உத்திமுறைகளாகும்.

படிமம்

அறிவாலும் உணர்ச்சியாலும் ஆன ஒரு மன பாவனையை ஒரு நொடிப் பொழுதில் தெரியக் காட்டுவதுதான் படிமம் என்பார் வெ.இராம.சத்தியமூர்த்தி. ஐம்புல உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தும் வகையில் இது அமையும்.

ஆகாயப் பேரேட்டில் பூமி

புதுக்கணக்குப் போட்டது

என்பது மேத்தாவின் கருத்துப் படிமம். மேலும் அவர்,

பூமி உருண்டையைப்

பூசணித் துண்டுகளாக்குவதே

மண்புழு மனிதர்களின்

மனப்போக்கு

எனக் காட்சிப் படிமத்தையும் அமைத்துக் காட்டியுள்ளார்.

தொன்மம்

புராணக் கதைகளைப் புதுநோக்கிலும், முரண்பட்ட விமரிசன நிலையிலும் கையாண்டு கருத்துகளை உணர்த்துவது தொன்மம் ஆகும்.

துஷ்யந்தன் தன் காதலின் சின்னமாகச் சகுந்தலைக்கு மோதிரம் பரிசளிக்கிறான். அந்த மோதிரம் தொலைந்த நிலையில் அவள் பல துன்பங்களை அனுபவிக்கின்றாள். அத்தொன்மத்தை உன்னுடைய பழைய கடிதங்கள் என்னும் கவிதையில் மேத்தா கவிதையாக்குகின்றார்.

நானும்

சகுந்தலைதான்

கிடைத்த மோதிரத்தைத்

தொலைத்தவள் அல்லள்

மோதிரமே

கிடைக்காதவள்

(ஊர்வலம்)

எனக் காதலியின் பரிதாப நிலையைச் சகுந்தலையினும் மோசமான நிலைக்காட்பட்டதாகக் காட்டியுள்ளார் கவிஞர்.

அங்கதம்

அங்கதம் என்பது முட்டாள் தனத்தையும் மூடநம்பிக்கையையும் தீச்செயல்களையும் கேலி பேசுவதாக அமைவதாகும்.

கல்வி இங்கே

இதயத்தில் சுமக்கும்

இனிமையாய் இல்லாமல்

முதுகில் சுமக்கும்

மூட்டையாகிவிட்டது

(ஒரு வானம் இரு சிறகு)

என்பது மேத்தாவின் அங்கதக் கவிதையாகும்.

இவ்வுத்தி முறைகள் குறித்து மேலும் விரிவாக நான்காம் பாடம் விவரிக்கும்.

2.3.3 இருண்மைநிலைக் கவிதை

புரியாத தன்மையைக் கொண்டு விளங்குவது இருண்மைநிலைக் கவிதையாகும். பேசுவோன், பேசப்படுபொருள் ஆகியன சார்ந்த மயக்கங்கள் கவிதையில் இருண்மையை ஏற்படுத்துவதுண்டு. அவ்வகையில் அமைந்த பிரமிளின் கவிதை,

எதிரே

தலைமயிர் விரித்து

நிலவொளி தரித்து

கொலுவீற்றிருந்தாள்

உன் நிழல்

என்பதாகும்.

என்.டி.ராஜ்குமாரின்,

எறும்புகள் வரிசையாக

பள்ளிக்குச் செல்கிறார்கள்

வரும்பொழுது கழுதையாக வருகிறது

என்பதும் அவ்வகையினதே யாகும் (திணை, பால் கடந்தது?).

இருண்மைக் கவிதைகளின் நோக்கம், வாசகரிடத்தே கருத்துத் திணிப்பை ஏற்படுத்தலாகாது அவர்களே சுதந்திரமாகச் சிந்தித்துப் பொருள் உணர வேண்டும் என்பதேயாகும் என்பர்.

இனித் துளிப்பாக் குறித்துக் காணலாம்.

குறுங்கவிதை

இயந்திர கதியில் இயங்கும் இன்றைய அறிவியல் உலகில், சுருங்கிய வடிவில் 'நறுக்' எனக் கருத்தினைக் தெரிவிக்கும் புதுக்கவிதை வடிவையும் கடந்து, இன்னும் சுருக்கமாக 'நச்' என்று கருத்துரைக்கும் குறுங்கவிதை வடிவம் தோன்றலானது. மூன்றடி வடிவக் கவிதையே குறுங்கவிதையாகும். ஜப்பானிய இலக்கிய வடிவத் தாக்கமாக எழுந்ததே இது. தமிழின் ஐங்குறுநூற்றிலும் மூன்றடிப் பாடல்கள் உள்ளன எனினும் அடி எண்ணிக்கையில் தவிரக் குறுங்கவிதைக்கும் அதற்கும் ஒற்றுமை காணுதல் அரிது.

குறுங்கவிதையைத் துளிப்பா (ஜக்கூ), நகைத் துளிப்பா (சென்ரியு), இயைபுத் துளிப்பா (லிமரைக்கூ) என மூவகைப்படுத்தலாம்.

துளிப்பா (ஜக்கூ)

ஜப்பானிய மொழியில் தோன்றிய ஜக்கூ, 5-7-5 என்னும் அசையமைப்புடையதாக, ஜென் (ணுநெ) தத்துவத்தை விளக்குவதற்கும் இயற்கையைப் போற்றுவதற்கும் பயன்பட்டது. தமிழிலக்கியத்தில் இவ்வடிவத்தில் அமைந்த கவிதைகள் சமூக விமர்சனத்திற்கும் சமூகக் கேடுகளைச் சாடுவதற்கும் பயன்படலானது.

துளிப்பாவானது படிமம், குறியீடு, தொன்மம், முரண், அங்கதம், விடுகதை, பழமொழி, வினாவிடை, உவமை, உருவகம் எனப் பல்வேறு உத்திமுறைகளில் அமைகின்றது.

படிமம்

துளிப்பாவில் பெரிதும் கையாளப் பெறுவது படிம உத்தியேயாகும். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐம்புல உணர்வுகளையும் அனுபவித்தவாறே வெளியிடுகின்ற உணர்ச்சி வெளிப்பாடே படிமம் எனப்படும். வருணனைத் திறன் மிக்கது இது.

எடுத்துக்காட்டு :

1. கட்புலப் படிமம்

சாரல் அடிக்கிறது

ஜன்னலைச் சாத்தும்போது மரக்கிளையில்

நனைந்தபடி குருவி (பரிமள முத்து)

2. விளையாட்டுப் படிமம்

நல்ல கயிறு

எறும்பின் பாதை

பம்பரம் சுற்ற (மித்ரா)

3. அச்சு வடிவக் காட்சிப் படிமம்

அதிக சுமையா?

மெ. .ல் . . .ல நகரும்

நத்தை (மு.முருகேஷ்)

குறியீடு

செறிவான கவிதை வடிவத்திற்குக் குறியீடுகள் பெரிதும் உதவுகின்றன. 'ஒப்புறவாலும் ஒட்டுறவாலும் மற்றொன்றைக் குறிப்பாக உணர்த்தும் பொருள் (ழடிதநஉவ), குறியீடு எனப்படுகிறது. ஒரு குறியீடு மற்றொன்றிற்குப் பதிலாக நிற்கலாம் சுட்டிக்காட்டுவதோடு மட்டுமேகூட அமைந்துவிடலாம். இயற்கை, சமயம், வாழ்க்கை என்பனவற்றைச் சுட்டுவனவாகவே அமைவதே பெரும்பான்மை எனலாம்.

எடுத்துக்காட்டு :

1. இயற்கைக் குறியீடு

அந்தக் காட்டில்

எந்த மூங்கில்

புல்லாங்குழல்

(அமுதபாரதி)

2. சமயக் குறியீடு

இதயத்தில் இறுக்கம்

இதழ்களில் மௌனம் இங்கே

சிலுவையில் நான் (பரிமள முத்து)

3.வாழ்க்கைக் குறியீடு

உழுதுவந்த களைப்பில்

படுக்கும் மாடுகள்

காயம் தேடும் காக்கை (அறிவுமதி)

தொன்மம்

புராண, இதிகாச நிகழ்வுகளை ஒட்டியோ, திரித்தோ, மறுத்தோ இக்கால நிலைக்கேற்பக் குறியீடாக்குதல் தொன்மப் படிமம் ஆகும்.

எடுத்துக்காட்டு :

கல்லாகவே இருந்துவிடுகிறேன்

மிதித்து விடாதே

சுற்றிலும் இந்திரன்கள் (ராஜ.முருகுபாண்டியன்)

என்பது கௌதமரின் சாபத்தால் கல்லான அகலிகை இராமனின் கால்பட்டுச் சாபவிமோசனம் அடைந்து பெண்ணான நிகழ்வை அடியொற்றியது. பெண்ணாக இருப்பதினும் கல்லாக இருப்பதே பாதுகாப்பானது என்றால் இச்சமூகம் எப்படிப்பட்ட நிலையில் இருக்கிறது என்பது இதன்வழிப் புலப்படுகின்றது.

ஆராய்ச்சிமணி அடித்த மாடுகள்

அரண்மனைத் தட்டில்

பிரியாணி (அவைநாயகன்)

என்னும் கவிதை, மனுநீதிச் சோழனிடம் முறையிட்ட கன்றை இழந்த பசுவின் கதறலையும், அக்கதறல் கேட்டுத் தன் மகனையே கொன்று முறைசெய்த மன்னனின் நீதிமுறையையும் கொண்டு அமைக்கப்பட்டது. நீதிமன்றங்கள், தக்க தீர்ப்பு வழங்காமல் குற்றவாளிக்கு ஆதரவாக இருப்பதையும், முறையிட வந்தவர்களையே தண்டிப்பதுமாகிய நிலையில் இருக்கும் நாட்டுநடப்பினைப் புலப்படுத்துகின்றது.

முரண்

மாறுபடத் தொடுப்பது முரண் எனப்படும். இது சொல் முரண், பொருள் முரண், சொற்பொருள் முரண் என வகைப்படுத்தப்படும்.

1. சொல் முரண்

தாழ்வு இல்லை

உயர்வே குறிக்கோள்

விலைவாசி (ல.டில்லிபாபு)

என்பதில் தாழ்வு ஒ உயர்வு எனச் சொல் முரண் அமைந்தது.

2. பொருள் முரண்

அன்புடைமை அதிகாரத்தை

ஆசிரியர் கற்பிக்கிறார்

கையில் பிரம்புடன் (கழனியூரன்)

என்னும் கவிதையில் அன்புடைமைக்கு முரணாகத் தண்டனை எனும் பொருண்மை இணைத்துக் கூறப்படுகிறது.

3. சொற்பொருள் முரண்

மௌன ஊர்வலம்

முடிந்தது

கலவரத்தில் (பா.உதயகண்ணன்

என்னும் கவிதையில், மௌனமும் கலவரமும் சொல்லாலும் பொருளாலும் முரண்படுகின்றன.

அங்கதம்

சமூகக் கேடுகளை வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல் நயம்பட எடுத்துரைத்துத் திருத்த முயல்வது அங்கதம் எனப்படும்.

எங்கள் மக்கள்

எப்போதும் நலமே தெருவுக்கு

நான்கு டாக்டர்கள் (பரிமள முத்து)

என்பதில் நலத்திற்குக் காரணம் நோய் வாராமையன்று, நோய் நிலையாமையே எனக் கூறுவதாக அமைகின்றது.

நான்கு கால்களும்

பல கைகளுமாய்

அரசாங்க மேசைகள் (தங்கம் மூர்த்தி)

என்னும் கவிதை, கையூட்டு அரசு அலுவலகங்களில் அங்கிங்கெனாதபடி பரவி நிலைபெற்றிருப்பதைப் புலப்படுத்துகின்றது.

விடுகதை

பெரும்பாலான ஐக்கூப் பாடல்கள், விடுகதை நடையில் எது? யார்? ஏன்? எப்படி என்பது போலும் பொருண்மையில் முன்னிரண்டடிகளும், அதற்குரிய விடையாக ஈற்றடியும் கொண்டு திகழ்ந்து சுவைபயப்பதுண்டு.

அழித்து அழித்துப் போட்டாலும்

நேராய் வராத கோடு

மின்னல் (மேகலைவாணன்)

என்னும் கவிதையில், முயன்று தவறிக் கற்றல் என்பதன்படி, ஒரு முறை தவறினும் மறுமுறை திருத்திக் கொள்வது தானே இயல்பு? ஒவ்வொரு முறையும் கோடு நேராகவில்லையென்றால் எப்படி? அப்படிப்பட்ட கோடு எது? என அவ்வினா பல்வேறு சிந்தனைகளைத் தூண்டுகிறது. விடையாக இறுதியடி அமைகின்றது.

இருந்தால் மேடு

இல்லாவிட்டால் பள்ளம்

வயிறு (மேகலைவாணன்)

என்பது எதிர்பாராத விடை கொண்ட கவிதை. உணவு இருந்தால் இல்லாவிட்டால் எனக் கொள்ள வேண்டும். வயிறு உணவு குறையாத நிலையில் இருந்தவன் தான் மோடு என்று வயிற்றிற்குப் பெயரிட்டவனாதல் வேண்டும்.

பழமொழி

பழமொழிகளை நயமுறக் கையாண்டு கருத்தை விளக்குதலும் உண்டு.

கந்தலானாலும் கசக்கிக்கட்டு

கசக்கினான்

கிழிந்து போனது (மலர்வண்ணன்)

என்னும் கவிதையில் தூய்மைக்குச் சொல்லப்பட்ட பழமொழியை, வறுமையைச் சித்திரிக்க எடுத்துக் கொண்டுள்ளார் கவிஞர்.

ஐந்தில் வளைப்பதற்கோ

பிஞ்சு முதுகில்

புத்தக மூட்டைகள் (பாட்டாளி)

என்பதில், 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமோ?' எனப் பணிவுக்குக் கூறப்பட்ட பழமொழி இன்றைய கல்வி முறையை விமரிசிக்கக் கையாளப்பட்டுள்ளது.

வினாவிடை

கவிதை முழுவதும் வினாவாக அமைந்து, தலைப்பு அதற்குரிய விடையாக அமைவதுண்டு. மூன்றாம் அடியே விடையாவதும் உண்டு.

வெட்ட வெட்ட

வளரும் நீ என்ன

விரல் நகமா? (பரிமள முத்து)

என்னும் கவிதைக்குரிய பதிலாகிய கவலை இதற்கான தலைப்பாக அமைகிறது.

தாகம் தணிக்குமோ

கடல்நீர்

வெட்டிப்பேச்சு (செந்தமிழினியன்)

என்பதில், மூன்றாமடி தணிக்காது எனப் பதில் தருவதோடு, வெட்டிப் பேச்சும் அத்தகையதே என்பதை இணைத்துணர்த்துகின்றது.

உவமை

புதுப்புது உவமைகளைக் கையாளும் உத்தியையும் துளிப்பாவில் காண்கிறோம்.

கவிதைகள் எழுத

நல்ல தாள்

பனிப்புகை (மித்ரா)

என்பதில் பனிப்புகை வெண்தாளாக நிற உவமையாக்கப்பட்டுள்ளது.

நெருப்புதான் பெண்

அம்மாவிற்கு அடிவயிற்றில்

மாமியாருக்கு அடுப்படியில் (அறிவுமதி)

என்னும் கவிதையில், மணமாகும்வரை கவனித்து வளர்க்க வேண்டியிருப்பதால் தாய்க்கு அடிவயிற்றில் கட்டிய நெருப்பாகவும், சமையலறையிலேயே இருத்தப்படுவதாலும், வரதட்சணைக் கொடுமை காரணமாகச் சமையலறை அடுப்பு வெடித்து அழிய நேர்வதாலும் மாமியாருக்கு அடுப்படி நெருப்பாகவும் அமைகிறாள் பெண்.

உருவகம்

பொருளும் உவமையும் வெவ்வேறு அல்ல என்பது உருவகம்.

இடியின் திட்டு

மின்னலின் பிரம்படி

அழுதது வானக்குழந்தை (பல்லவன்)

என்பதில் இடி திட்டாகவும், மின்னல் பிரம்படியாகவும், மழை அழுகையாகவும், மேகம் தண்டிக்கப்படும் குழந்தையாகவும் உருவகப்படுத்தப் பட்டுள்ளன.

பள்ளிக்குப் போகாத சிறுமி

செல்லமாய்க் குட்டும்

ஆலங்கட்டி மழை (அறிவுமதி)

என்னும் கவிதையில் ஆலங்கட்டி மழை ஆசிரிய நிலையில் கருதப்பட்டுக் குட்டுவதாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது.

நகைத் துளிப்பா (சென்ரியு)

துளிப்பாவை அடுத்துச் சிறந்திருப்பது நகைத் துளிப்பாவாகும். ஜப்பானின் சென்ரியு என்னும் கவிதை வகையே தமிழில் இவ்வாறு அழைக்கப்படுகிறது. ஜக்கூவின் அங்கத வடிவம் சென்ரியு. ஜக்கூ இயற்கை உலகில் பார்வை செலுத்துகிறது எனில், மக்கள், பொருள், சம்பவங்கள் ஆகியவற்றின் மீதான பார்வையைக் குறிப்பது சென்ரியுவாகும். 5,7,5ஸ்ரீ17 என்னும் அசைகள் அமைப்போடு ஒழுங்கு வகைப்பட்டு ஒவ்வொரு கவிதையும் இருக்கும். சென்ரியு கவிதைகள் நடுத்தர மக்களின் அனுபவம், உணர்வு போன்றவற்றை 3. சொற்பொருள் முரண்

மௌன ஊர்வலம்

முடிந்தது

கலவரத்தில் (பா.உதயகண்ணன்)

என்னும் கவிதையில், மௌனமும் கலவரமும் சொல்லாலும் பொருளாலும் முரண்படுகின்றன.

அங்கதம்

சமூகக் கேடுகளை வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல் நயம்பட எடுத்துரைத்துத் திருத்த முயல்வது அங்கதம் எனப்படும்.

எங்கள் மக்கள்

எப்போதும் நலமே தெருவுக்கு

நான்கு டாக்டர்கள் (பரிமள முத்து)

என்பதில் நலத்திற்குக் காரணம் நோய் வாராமையன்று, நோய் நிலையாமையே எனக் கூறுவதாக அமைகின்றது

நான்கு கால்களும்

பல கைகளுமாய்

அரசாங்க மேசைகள் (தங்கம் மூர்த்தி)

என்னும் கவிதை, கையூட்டு அரசு அலுவலகங்களில் அங்கிங்கெனாதபடி பரவி நிலைபெற்றிருப்பதைப் புலப்படுத்துகின்றது.

விடுகதை

பெரும்பாலான ஐக்கூப் பாடல்கள், விடுகதை நடையில் எது? யார்? ஏன்? எப்படி என்பது போலும் பொருண்மையில் முன்னிரண்டடிகளும், அதற்குரிய விடையாக ஈற்றடியும் கொண்டு திகழ்ந்து சுவைபயப்பதுண்டு.

அழித்து அழித்துப் போட்டாலும்

நேராய் வராத கோடு

மின்னல் (மேகலைவாணன்)

என்னும் கவிதையில், முயன்று தவறிக் கற்றல் என்பதன்படி, ஒரு முறை தவறினும் மறுமுறை திருத்திக் கொள்வது தானே இயல்பு? ஒவ்வொரு முறையும் கோடு நேராகவில்லையென்றால் எப்படி? அப்படிப்பட்ட கோடு எது? என அவ்வினா பல்வேறு சிந்தனைகளைத் தூண்டுகிறது. விடையாக இறுதியடி அமைகின்றது.

இருந்தால் மேடு

இல்லாவிட்டால் பள்ளம்

வயிறு (மேகலைவாணன்)

என்பது எதிர்பாராத விடை கொண்ட கவிதை. உணவு இருந்தால் இல்லாவிட்டால் எனக் கொள்ள வேண்டும். வயிறு உணவு குறையாத நிலையில் இருந்தவன் தான் மோடு என்று வயிற்றிற்குப் பெயரிட்டவனாதல் வேண்டும்.

பழமொழி

பழமொழிகளை நயமுறக் கையாண்டு கருத்தை விளக்குதலும் உண்டு.

கந்தலானாலும் கசக்கிக்கட்டு

கசக்கினான்

கிழிந்து போனது (மலர்வண்ணன்)

என்னும் கவிதையில் தூய்மைக்குச் சொல்லப்பட்ட பழமொழியை, வறுமையைச் சித்திரிக்க எடுத்துக் கொண்டுள்ளார் கவிஞர்.

ஐந்தில் வளைப்பதற்கோ

பிஞ்சு முதுகில்

புத்தக மூட்டைகள் (பாட்டாளி)

என்பதில், 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமோ?' எனப் பணிவுக்குக் கூறப்பட்ட பழமொழி இன்றைய கல்வி முறையை விமரிசிக்கக் கையாளப்பட்டுள்ளது.

வினாவிடை

கவிதை முழுவதும் வினாவாக அமைந்து, தலைப்பு அதற்குரிய விடையாக அமைவதுண்டு. மூன்றாம் அடியே விடையாவதும் உண்டு.

வெட்ட வெட்ட

வளரும் நீ என்ன

விரல் நகமா? (பரிமள முத்து)

என்னும் கவிதைக்குரிய பதிலாகிய கவலை இதற்கான தலைப்பாக அமைகிறது.

தாகம் தணிக்குமோ

கடல்நீர்

வெட்டிப்பேச்சு (செந்தமிழினியன்)

என்பதில், மூன்றாமடி தணிக்காது எனப் பதில் தருவதோடு, வெட்டிப் பேச்சும் அத்தகையதே என்பதை இணைத்துணர்த்துகின்றது.

உவமை

புதுப்புது உவமைகளைக் கையாளும் உத்தியையும் துளிப்பாவில் காண்கிறோம்.

கவிதைகள் எழுத

நல்ல தாள்

பனிப்புகை (மித்ரா)

என்பதில் பனிப்புகை வெண்தாளாக நிற உவமையாக்கப்பட்டுள்ளது.

நெருப்புதான் பெண்

அம்மாவிற்கு அடிவயிற்றில்

மாமியாருக்கு அடுப்படியில் (அறிவுமதி)

என்னும் கவிதையில், மணமாகும்வரை கவனித்து வளர்க்க வேண்டியிருப்பதால் தாய்க்கு அடிவயிற்றில் கட்டிய நெருப்பாகவும், சமையலறையிலேயே இருத்தப்படுவதாலும், வரதட்சணைக் கொடுமை காரணமாகச் சமையலறை அடுப்பு வெடித்து அழிய நேர்வதாலும் மாமியாருக்கு அடுப்படி நெருப்பாகவும் அமைகிறாள் பெண்.

உருவகம்

பொருளும் உவமையும் வெவ்வேறு அல்ல என்பது உருவகம்.

இடியின் திட்டு

மின்னலின் பிரம்படி

அழுதது வானக்குழந்தை (பல்லவன்)

என்பதில் இடி திட்டாகவும், மின்னல் பிரம்படியாகவும், மழை அழுகையாகவும், மேகம் தண்டிக்கப்படும் குழந்தையாகவும் உருவகப்படுத்தப் பட்டுள்ளன.

பள்ளிக்குப் போகாத சிறுமி

செல்லமாய்க் குட்டும்

ஆலங்கட்டி மழை (அறிவுமதி)

என்னும் கவிதையில் ஆலங்கட்டி மழை ஆசிரிய நிலையில் கருதப்பட்டுக் குட்டுவதாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது.

நகைத் துளிப்பா (சென்ரியு)

துளிப்பாவை அடுத்துச் சிறந்திருப்பது நகைத் துளிப்பாவாகும். ஜப்பானின் சென்ரியு என்னும் கவிதை வகையே தமிழில் இவ்வாறு அழைக்கப்படுகிறது. ஐக்கூவின் அங்கத வடிவம் சென்ரியு. ஐக்கூ இயற்கை உலகில் பார்வை செலுத்துகிறது எனில், மக்கள், பொருள், சம்பவங்கள் ஆகியவற்றின் மீதான பார்வையைக் குறிப்பது சென்ரியுவாகும். 5ூ5ஸ்ரீ17 என்னும் அசைகள் அமைப்போடு ஒழுங்கு வகைப்பட்டு ஒவ்வொரு கவிதையும் இருக்கும். சென்ரியு கவிதைகள் நடுத்தர மக்களின் அனுபவம், உணர்வு போன்றவற்றைப் பற்றி, அவர்களின் வாழ்க்கை அலுப்பை அகற்றும் சாதனமாக அமைந்து சுய அறிவுக்கு ஏற்றதாக அமைகின்றன. இவை மறைபொருள் தன்மை உடையனவாய் இருப்பதால் ஒரே சமயத்தில் ஒன்றிரண்டு என்று கொஞ்சம் கொஞ்சமாகப் படிப்பதே பயனளிப்பதாக அமையும்.

மூன்றடி, தலைப்பு இல்லாமை என்பன ஐக்கூ, சென்ரியு என்னும் இரண்டிற்குமான ஒற்றுமைப் பண்புகள். படிம அழகு, தத்துவச் சார்பு, இயற்கைத் தரிசனம் போன்ற கூறுகள் ஐக்கூவில் சிறப்பிடம் பெறுகின்றன. அன்றாட வாழ்வைப் படம் பிடித்தல் ஆழமற்றிருத்தல் வேடிக்கை, விடுகதை, நகைச்சுவை போன்ற தன்மைகளுடன் பொன்மொழி போன்றிருத்தல் ஆகியவை சென்ரியுவின் தனிச்சிறப்பாகும்.

நகைத் துளிப்பாவைத் தமிழுக்கு அறிமுகம் செய்துள்ள ஈரோடு தமிழன்பனின் 'ஒரு வண்டி சென்ரியு' என்னும் நூலிலிருந்து சில கவிதைகளை அரசியல், உறவுகள், கடவுள், குழந்தையுள்ளம் என்னும் தலைப்புகளில் இங்குக் காண்போம்.

அரசியல்

அரசியல்வாதி ஆவதற்கென்று தனித்தகுதி தேவையில்லை. எப்படிப்பட்டவர்களும் அதில் சென்று முன்னேறி விடலாம் என்பதை,

அது வராவிட்டால் இது

இது வராவிட்டால் அது

எதுவும் வராவிட்டால் அரசியல் (ப.66)

என்னும் கவிதையில் நையாண்டி செய்கிறார் கவிஞர்.

கட்சிகள்தோறும் காணப்படும் கூட்டங்கள், தானே திரண்டனவல்ல் திரட்டப்பட்டனவேயாகும். இதனை,

ஆயிரம் பேரோடு

வேட்பு மனுத்தாக்கல்

ஐம்பது வாக்குகள் (ப.30)

என்னும் கவிதையில் பட்டவர்த்தனமாக்கியுள்ளார்.

'மன்னன் எப்படி, மக்கள் அப்படி' என்பார்கள். பொறுப்பான பதவியில் உள்ள அமைச்சர் பெருமக்களே, தாங்கள் கூடும் பொதுச்சபையில் சட்டதிட்டங்களைக் கடைப்பிடிப்பதில்லை என்றால், இவர்களால் ஆளப்படும் நாடு என்னாவது?

சட்டம் ஒழுங்கைக்

காப்பாற்ற முடியவில்லை

சட்டசபையில் (ப.31)

என்பது அதைச் சுட்டும் கவிதை.

பதவியிலிருக்கும்வரை அதிகார தோரணையில் தன் விருப்பப்படி நடப்பவராகவும் மக்களைப் பற்றிக் கவலைப்படாதவராயும் இருப்பவர், வீட்டுக்கனுப்பப்பட்டதும் நாட்டைப் பற்றிச் சிந்திக்கிறார்.

பதவி இழந்த அமைச்சர்

அறிக்கை

இனி நாட்டுக்கு உழைப்பேன் (ப-63)

என்னும் கவிதை அது பற்றியதாகும்.

அரசியல்வாதிகளாகிய கட்சித் தலைவர்கள் சுயநலவாதிகள் தொண்டர்கள் அப்பாவிகள் என்பதை,

கட்சி தொண்டர்களுக்கு

காசு குடும்பத்துக்கு

தலைவர் மரணமுறி (ப.92)

என்னும் கவிதை புலப்படுத்துகின்றது.

உறவுகள்

இன்றைய வாழ்வில் உறவுகள், பணத்தையே குறியாகக் கொண்டுள்ளன. மனைவியின் எண்ணமும் அதுவாக இருப்பதே வியப்பு கசப்பான உண்மை.

வழியனுப்ப வந்த மனைவி

கண்ணீரோடு சொன்னாள்

பணம்அனுப்ப மறந்திடாதீங்க (ப.97)

என்பது அது சார்பான கவிதை.

அண்ணன் தம்பி உறவும்கூடப் பொருளாதாரத்தை மையமிட்ட நிலையில் ஐயப்பாட்டிற்கு உரியதே என்பதை,

அயர்ந்த தூக்கத்தில் அண்ணன்

தம்பிவைத்தான் தலைமாட்டில்

ஊதுவத்தி (ப.58)

என்னும் கவிதை உணர்த்தும். 'ஐந்து வயதில் அண்ணன் தம்பி, பத்து வயதில் பங்காளி' என்னும் பழமொழிக் கருத்துடையது இது.

கடவுள்

வழிபாட்டிடம், வணிக இடமாகி விட்டது. நல்ல உள்ளம் படைத்தவர்களும் பொருளாசைக்கு அடிமைப்பட்டுப் பண்பு குன்றி விடுகின்றனர் என்பதை,

குருக்களாகி விட்ட கடவுள்

மறுபடியும் கடவுளாகவில்லை

தட்டுநிறைய காணிக்கை (ப.27)

எனக் கடவுள்மேலிட்டுக் குறிப்பிடுகின்றார்.

குழந்தையுள்ளம்

வெளியுலகிற்குச் சென்று விளையாட விரும்பும் குழந்தையை வீட்டில் அடைத்துப் பழைய கதைகளைத் திணித்தல் கூடாது. அனுபவமே தலைசிறந்த கல்வி. கதைகள் கட்டுச்சோறு போன்றன.

கதை வேண்டாம்

கதவைத் திறந்துவிடு

குழந்தை அடம் (ப.77)

என்னும் கவிதை இக்கருத்தை உணர்த்துகின்றது. சொல்புத்தி விடுத்துச் சுயபுத்தியுடன் வாழும் குழந்தையே சாதிக்கவல்லதாகும்.

இனி இயைபுத் துளிப்பாவைக் காணலாம்.

இயைபுத் துளிப்பா (லிமரைக்கூ)

அங்கதத்தோடு மூன்றடிக் கவிதையில் முதலடியின் ஈற்றுச் சீரும் மூன்றாமடியின் ஈற்றுச் சீரும் இயைபுத் தொடையமையப் பாடப்படுவது இயைபுத் துளிப்பா. இதன் இரண்டாமடி ஏனைய இரண்டடியையும் விட நீண்டிருத்தல் சிறப்பு. ஈரோடு தமிழன்பனின் சென்னிமலை கிளியோபாத்ராக்கள் என்னும் நூல் இத்தன்மைத்தாகும். அந்நூற் கவிதைகளில் சிலவற்றை முரண்பாடு, சுயநலம், பொய், தன்பலம் அறியாமை என்னும் தலைப்புகளில் காண்போம்.

முரண்பாடு

சொல்லொன்று, செயலொன்றாய் மனிதன் வாழ்கின்றான். 'ஊருக்குத்தான் உபதேசம்' என்பது அவன் கொள்கையாக இருக்கின்றது.

பாடுவது அருட்பாப் பதிகம்

அன்றாடம் உணவில் ஆடு கோழி

மீன் நண்டு வகையே அதிகம் (ப.28)

என்னும் கவிதை அதனைப் புலப்படுத்துகின்றது.

சொல்லை வைத்து அன்பைப் புரிந்து கொள்ள முடியாத காலமிது. நண்பனைப் போல் பழகும் உட்பகையாளர் பலர் நாட்டில் உள்ளனர். இதனை,

வார்த்தைகள் பாசவெள்ளம்

நண்பர்க்கு நண்பர் தோண்டுவதோ வெட்டிப்

புதைக்க ஆழப் பள்ளம் (ப.41)

என்னும் கவிதை உணர்த்தும்.

சுயநலம்

தம் இன்பத்திற்காகப் பிறர்க்குத் துன்பம் தருதல் தகுதியுடையதாகாது.

புகை பிடித்தால் இறப்பாய்

மது குடித்தால் இறப்பாய் இரண்டும்

விற்றால் வாழ்வில் சிறப்பாய் (ப.18)

என்னும் கவிதை. சமுதாயத்திற்குத் தீங்கு தருவதைத் தடைசெய்யாமல், தீங்கு என்று அறிவுறுத்துவதோடு நின்று, அத்தீங்குப் பொருள்களை உற்பத்தி செய்தும் வணிகம் செய்தும் வாழ்வோரைச் சிறப்புறச் செய்வதாய் அரசு விளங்குவதைச் சுட்டிக் காட்டுகின்றது.

பொய்

மனிதர்கள் பலர், இல்லறத்தின் வேராம் மனைவியை விட்டுவிட்டுத் தகாத நெறியொழுகுதலையும் அதற்காகப் பொய் பேசுதலையும் இயல்பாகக் கொண்டு வாழ்கின்றனர். அவர்களை,

மணக்கும் மதுரைமல்லி

வாங்கிப் போனான் காதலிக்கு

மனைவி பேரைச் சொல்லி (ப.56)

என்னும் கவிதை அடையாளம் காட்டுகிறது.

தன்பலம் அறியாமை

'இக்கரைக்கு அக்கரை பச்சை' என்பார்கள். உலகில் தன் வாழ்வெல்லாம் துன்பம் என்றும், பிறர் வாழ்வெல்லாம் இன்பம் என்றும் கருதி மயங்குவோர் பலர். தரமாகக் கவிதை எழுதியிருந்தும், எதுகைமோனை வரம்போடு எழுதுவதுதான் கவிதை என்று பிறர் கருதுவதை விரும்பியவன், யாப்புக் கற்க முயன்றதாக,

கவிதை எல்லாம் விற்றான்

கைக்கு வந்த காசைக் கொண்டு

தேமா புளிமா கற்றான் (ப.91)

என்னும் கவிதையில் எடுத்துரைக்கின்றார் தமிழன்பன்.

புதுக்கவிதை வரலாறு

புதுக்கவிதை என்று தமிழில் இப்போது வழங்கிவரும் இலக்கியவடிவம்.மிகமிகப்பரவலானதும் பல்நோக்குப் பயன்பாடு கொண்டதுமாகும்.

இன்றையசூழலில் இவ்வடிவத்தைப்பற்றிய ஒரு வரையறையை அளிப்பது எளிதல்ல என்னுமளவுக்கு இது பரந்து விரிந்திருக்கிறது. ஆகவே கோட்பாட்டு ரீதியாக ”ஒரு மொழியில் ஒரு சொல்லுக்குப் பின் இன்னொரு சொல் வரக்கூடியதும் எழுதியவராலோ பிரசுரித்தவராலோ வாசித்தவராலோ அல்லது சம்பந்தமில்லாத பிறராலோ கவிதை என்று கருதப்படுவதுமான மொழியமைப்பே கவிதை’ என்ற பொதுவரையறை இங்கே அளிக்கப்படுகிறது.

புதுக்கவிதை என்ற பெயரை இதற்குப் போட்டவர் க.நா.சுப்ரமணியம் என்ற இலக்கிய விமரிசகர். ஆங்கிலத்தில் நெற ிழநவசல என்ற சொல்லை எஸ்ரா பவுண்ட் என்ற கவிஞர் பயன்படுத்திருப்பதைக் கண்ட இவர் ”அப்டீண்ணா நமக்கும் இருக்கட்டும் ஒண்ணு...என்னங்கிறேள்?” என்று தன் தோழர் சி.சு.செல்லப்பாவுடன் பூரிக்குத் தொட்டுக்கொள்ள புதினாச் சட்டினி கொடுக்கும் ஒரு ராயர் காபி கிளப்பைத் தேடி திருவல்லிக்கேணிவழியாகச் சென்றுகொண்டிருந்தபோது சொன்னார் என்பது வரலாற்றுத்தகவல். அதற்கு சி.சு.செல்லப்பா ”கெடந்துட்டு போகுது களுத... ஒஞ்சவேளைக்குப் போது போகும்” என்று ஆமோதிப்பு அளித்தார்.

உடனே வீடு திரும்பிய க.நா.சுப்ரமணியம் தன் பழைய நாட்குறிப்பை எடுத்து அதில் உள்ள அன்றாடக்குறிப்புகளை எஸ்ரா பவுண்டின் கவிதைகளின் வடிவுக்கு மடக்கி எழுதலானார். நாற்பது கவிதைகளை இவ்வாறு பெருமாச்செட்டி பென்சிலால் பிரதி எடுத்தபின் விடியற்காலையில் பிளாஸ்கில் எஞ்சியிருந்த காப்பியையும் குடித்தபின் அவற்றின் அடிப்படையில் எஸ்ரா பவுண்டின் புகழ்பெற்ற புதுக்கவிதை இலக்கணத்தின் சாயலில் ஜயு சநவசழளிநஉவளைந வழ அழனநசளைஅஸ இவர் புதுக்கவிதைக்கு ஒரு இலக்கணம் உருவாக்கினார் அவையாவன:

1 ஒருவரி எக்காரணத்தாலும் சாதாரண அளவுள்ள விரலில் ஒரு விரலுக்கு அதிகமாக நீளக்கூடாது. ஐவரி நீளமாக அமையும்போது அதற்கேற்ப விரலை நகட்டி அளவிடுதல் தகாதுஸ

2 வரிகளைக் கீழ் கீழாக எழுதும்போது எதுகை மோனை முதலிவை நிகழாமல் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும்

3 பெண்கள் என்றால் மார்புகள், கூந்தல், இடுப்பு ,உதடுகள் மற்றும் அல்குல் போன்ற உறுப்புகள் வர்ணிக்கப்படலாகாது

4 ஆண்கள் என்றால் தோள்கள், புஜங்கள், மீசை போன்றவை வர்ணிக்கப்படக்கூடாது.

6 ஆண்களும் பெண்களும் அறுபது வயதுக்கு மேற்பட்டவர்கள் என்றால் விதி 3,4 லில் இருந்து விலக்கு உண்டு

7. வரிகள் எந்நிலையிலும் எவராலும் பாடும்படி அமையலாகாது

8 மளிகைப்பட்டியலை எண்வரிசை இல்லாமல் எழுதியதுபோன்ற வடிவம் கொண்டிருக்கவேண்டும்

9 தினத்தந்தி நாளிதழ் பயன்படுத்தாத எந்தச் சொல்லையும் பயன்படுத்தக்கூடாது. குறைந்தபட்சம் தினமணியாவது அதைப் பயன்படுத்தியிருக்க வேண்டும்

10 ஒருசொல் சிற்றிதழில் உருவானதாக இருந்தால் விதி 9 ல் இருந்து விலக்கு உண்டு

11 பிரசுரிக்கும் இதழாசிரியருக்குப் பொருள் புரியக்கூடாது.

12 இதழாசிரியரே அக்கவிதையை எழுதினார் என்றால் விதி 11 இல் இருந்து விலக்கு உண்டு. ஆனால் அதை அவர் அனுபவித்தாகவேண்டுமெனக் கட்டாயமில்லை.

13 வாசகர்கள் ஐஇருக்கும் பட்சத்தில்ஸ தங்களுக்குத் தோன்றிய பொருளை அளிக்கும்படி சொற்சேர்க்கை இருக்க வேண்டும்.

14 கவிதை வாசகர்களுக்குப் புரியும்படி இருக்குமென்றால் கவிஞரே அதை விளக்கி பேட்டிகள் கொடுத்துக் கவிதையாக ஆக்க உரிமை உண்டு.பேட்டிகளை விளக்க மேலும் பேட்டி கொடுக்கலாம்.

15 சராசரிக் கைவிரலில் ஒரு விரல் அளவுக்குக் கவிதையின் நீளம் அமையலாம். அதற்குமேல் நீளுமென்றால் அதேயளவுள்ள பத்திகளாக அமைக்கலாம்.

இந்த இலக்கண அடிப்படையில் அன்று காலையிலேயே க.நா.சுப்ரமணியம் கீழ்க்கண்ட விமரிசன மதிப்பீடுகளை உருவாக்கினார்

1. சிறந்தகவிதை சி.சு.செல்லப்பா எழுதாததாகவே இருக்க இயலும்.

2 புதுக்கவிதையில் மேஜர் போயட் என க.நா.சுவை சொல்லலாம். பிறர் எதிர்பார்க்கப்படுகிறார்கள்

3 சிறந்த கவிதை கவிதைபோல இருக்காது. உரையாடல் போல இருக்கும். நல்ல உரையாடல் எங்ஙனம் கவிதையாக உள்ளதோ அதைப்போல

அதே நாளில் கிட்டத்தட்ட அதே வேளையில் அதே திருவல்லிக்கேணியில் அரிக்கேன் விளக்கொளியில் சிசு.செல்லப்பாவும் புதுக்கவிதைக்கான இலக்கணங்களை உருவாக்கிக் கொண்டிருந்தார். எஸ்ரா பவுண்டின் அதே கட்டுரையை அவரும் வாசித்திருந்தமையால் கிட்டத்தட்ட அதே இலக்கணங்களையே அவரும் உருவாக்கியிருந்தார். உபரியாக அவர் உருவாக்கிய இரு இலக்கண விதிகள் கீழ்க்கண்டவை

1. புதுக்கவிதை அலங்காரமில்லா மொழியில் எழுதப்பட்டிருக்க வேண்டும். உதாரணம், ‘அதற்கு’ என்பது அலங்கார மொழி. ‘அதுக்கு’ என்பது கவிதைமொழி

2. தமிழ்ப்பண்டிதர்களைத் தூக்கிலே போடவேண்டும். சேர்த்துப் போடுவது நிர்வாகச் சிக்கல்களை உருவாக்கும் என்றால் ஒவ்வொருவரையாகப் போடலாம். அவர்களை எப்படிக் கண்டுபிடிப்பது? ”யாரையோய் நீ?” என்று கேட்டால் ”யாரைப்பாத்து ஓய்னு சொல்றே?” என்று கேட்காதவர்கள் தமிழ்ப்பண்டிதர்கள்.

இதைத்தவிர அவர் மூன்று விமரிசனக் கோட்பாடுகளை உருவாக்கினார். அவையாவன:

1. சிறந்தகவிதை க.நா.சுப்ரமணியம் எழுதாததாகவே இருக்க இயலும்.

2 புதுக்கவிதையில் ‘மேஜர் போயட்’ என சி.சுசெல்லப்பாவைச் சொல்லலாம். பிறர் எதிர்பார்க்கப்படுகிறார்கள்

3 சிறந்த கவிதை கவிதைபோல இருக்காது. உரையாடல் போலவும் இருக்காது. அது பாட்டுக்கு இருக்கும்.

விளைவாக மறுநாள் காலை பத்துமணி அளவில் திருவல்லிக்கேணி ராயர் காபிகிளப்பில் வைத்துப் புதுக்கவிதை இயக்கம் வரலாற்றுச்சிறப்புமிக்க பிளவுக்கு ஆளாகியது. கோபத்துடன் வீடுதிரும்பிய சி.சு.செல்லப்பா, உடனே தன் கையாலேயே தலைப்பை வரைந்து எழுத்து என்ற சிற்றிதழை உருவாக்கினார். இவ்விதழ் தமிழ்ப்புதுக்கவிதைக்கான அடிப்படைகளை அமைத்தது

இவ்விதழில் பல இளைஞர்களைத் திரட்டி எழுதவைத்துத் தன் தரப்பை வலுவாக நிறுவினார் செல்லப்பா. தன் வீட்டுமுன் பெட்டிக்கடை வைத்திருந்த நாரண நாயுடு என்பவரைப் பற்றி ந.பிச்சமூர்த்தி எழுதிய ஒரு கட்டுரையைப் புதுக்கவிதை வடிவுக்கு ஒடித்து அமைத்து இவர் இதழில் வெளியிட்டார். ‘பெட்டிக்கடை நாரணன்’ என்ற அக்கவிதையின் சாயலில் எழுதுபவர்களின் பெயர்கள் வெளியே விடப்படமாட்டாது என்ற உறுதியையும் அளித்தார்.

தொடர்ந்து எழுத்து இதழில் ஏராளமான பேர் எழுதினாலும் மூவர் முக்கியமான முன்னூதாரணங்களாக அமைந்தனர். நாகர்கோயிலைச் சேர்ந்த சுந்தர ராமசாமி என்பவர் பசுவய்யா என்ற மாற்றுப்பெயரில் 'அம்மா இங்கே வா வா' கவிதையால் ஊக்கம் பெற்று அவர் எட்டாம் வகுப்பில் படித்தபோது டிரில் வகுப்பில் சொல்லிக்கொடுக்கப்பட்ட பாடத்தை மையக்கருவாகக் கொண்டு "நகத்தை வெட்டு உன் நகத்தை வெட்டு!" என்ற கவிதையை எழுதினார்.

திருவனந்தபுரத்தைச் சேர்ந்தவரும் சிறிய செவிச்சிக்கல் கொண்டவருமான டி.கெ.துரைசாமி என்பவர் நகுலன் என்று பெயர் சூட்டிக் கொண்டு அவரது சமீபத்திய தடுமாற்றம் ஒன்றை எழுதி அனுப்பினார்.

"ராமச்சந்திரனா என்று கேட்டேன்

ராமச்சந்திரன் என்றான்

ராமச்சந்திரன்தானா என்றேன்

ஆமாய்யா என்றான்

ராமச்சந்திரனேதானா என்றேன்

டேய் ஆமாடா என்றான்"

என்ற இக்கவிதையை மேலும் சுருக்கி சி.சு.செல்லப்பா தன் இதழில் வெளியிட அது புகழ்பெற்றது.

மறுமாதத்திலேயே சிவராமன் என்ற இலங்கைக்காரர் தருமு சிவராமு என்றும் சீவராம் பிரமிள் என்றும் பலவாறாகப் பெயர் சூட்டியபடி அவர் ஹோமியோபதி மருத்துவருக்குத் தன் நோய் குறித்து எழுதியளித்த குறிமானத்தைக் கவிதைவடிவிற்கு மாற்றி அனுப்பி அச்சாயிற்று. 'புறந்தோலில் அழுக்குத்தேமல் மருதி புணர்ந்து பாயும் விந்து.."என்ற அவ்வரிகள் அவரது கையெழுத்து புரியாமையால் "பூமித்தோலில் அழகுத்தேமல் பரிதி புணர்ந்து பாயும் விந்து" என்று பிரசுரமாகி தமிழில் படிமக்கவிதைக்கான தொடக்கப்புள்ளியாக அமைந்தது.

டைரிக்குறிப்பு, தடுமாற்றம், படிமம் என்ற இம்மூன்று அம்சங்களின் நீட்சியாகவும் கலவையாகவும் தமிழில் புதுக்கவிதைகள் சரமாரியாக உருவாயின. இவற்றுக்கு இரு தரப்பிலிருந்து கடும் எதிர்ப்பு உருவாகி வந்தது. தமிழ்ப்பேராசிரியர்கள் எதிர்த்தமைக்குக் காரணம் புதுக்கவிதைக்கு உரை போட முடியாது என்று கோனார் நிறுவனம் மறுத்துவிட்டமையே.

க.கைலாசபதி,நா.வானமாமலை போன்ற இடதுசாரிகள் எதிர்த்தமை அரசியல் நெடுநோக்கினால். எதிர்காலத்தில் புரட்சி வெடித்து சோஷலிஸ ஆட்சி ஏற்பட்டு அவர்கள் கலாச்சார கம்மிஸார்களாக உருவாகும்போது கவிதை எழுதுபவர்களை எதிர்புரட்சிக்காகக் கைதுசெய்து ராஜஸ்தானில் கட்டாய உழைப்பு முகாமுக்கு அனுப்புகையில் தங்களுடையது கவிதையல்ல லாண்டிரி பட்டியல் அல்லது மச்சினிக்குக் கடிதம் என்று சொல்லி புதுக்கவிதையாளர்கள் தப்பிக்க வழியிருக்கிறது என அவர்கள் அஞ்சினர். மேலும் கவிதைகளைக் கண்டுபிடிக்கும் தானியங்கிக் கருவிகள் உருவாக்கப்படும்போது அவற்றுக்கு குழப்பம் வராமலிருக்க தெளிவான திட்டவட்டமான வடிவம் இருப்பது அவசியம். அது யாப்பே என்றனர் இவர்கள்.

குடத்திலிட்ட விளக்காக வெளியே புகை மட்டும் விட்டுக்கொண்டிருந்த புதுக்கவிதை இயக்கத்தை மேடைகளுக்குக் கொண்டுவந்தவர்கள் நா.காமராசன், மு.மேத்தா, அப்துல் ரகுமான் ஆகியோர். இவர்கள் வானம்பாடிகள் என்ற இதழை நிறுவிக் கவிதைகளை வெளியிட்டமையால் வானம்பாடிக் கவிஞர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். சி.ஆர்.ஐ முறுக்குக்

கம்பிகளின் விளம்பரத்தை அடியொற்றி மு.மேத்தா எழுதிய ஒரு நெம்புகோல் கவிதையால் இவர்களை நெம்புகோல்கள் என்றும் அழைக்கத்தலைப்பட்டார்கள்.

மேற்கண்ட நெம்புக்கவிதை வானம்பாடிகளுடைய அதிகார பூர்வ பிரகடனமாக வரலாற்றில் இடம்பெற்றது. பிற்காலத்தில் ஒரு விருதுவழங்கும் விழாவில் தொழிலதிபர் ஒருவர் "இவர் இந்தப் பந்தையெல்லாம் போட்டு நெம்புற அந்தக் குச்சி பத்தி எழுதின ஒரு கவிதை..." என்று நெற்றியைத் தட்டியதாகவும் விடலைகளின் நகைப்பைத் தவிர்க்க அருகே அமர்ந்திருந்த அமைச்சர் "கால்.ப்,கால்.ப்"என்று அடியெடுத்துக் கொடுத்ததாகவும் சொல்லப்படுகிறது.

வானம்பாடிக் கவிதைகளின் இலக்கணம் மூன்று. அவையாவன

1 உரக்கச்சொல்லப்படும் வரிகளே கவிதை எனப்படுகின்றன.

2 சொற்றொடர்களுக்கு முன் ஆ! ஏ! ஓ! போன்ற உயிரெழுத்துக்கள் அமைதல் வேண்டும்.ஐ அதிகப்பிரசங்கித்தனமாக ஈ!, ஊ! என்றெல்லாம் எழுதலாகாதுஸ

3 ஒவ்வொருவரியையும் இரண்டுமுறை சொல்லுதல் வேண்டும்.ஐகைதட்டலை எதிர்பார்த்து அதிகபட்சம் நான்குமுறை மட்டும் சொல்லாம்.மேலே போவது அடுத்த கவிஞரின் நேரத்தை எடுத்துக் கொள்ளுதலாகும்ஸ

4 கைதட்டல் எப்பகுதியில் விழ வேண்டும் என எழுதும்போதே கவிஞனே முடிவுசெய்து அதற்காக இடைவெளிவிட்டுக் காத்து நிற்றல் வேண்டும்.

5 எதுகைமோனைகளை எங்கு வாய்ப்புகிடைத்தாலும் சேர்க்கலாம்.

6 சொற்பொழிவுக்கும் கவிதைக்கும் ஒரே வேறுபாடுதான், பிந்தையது கவியரங்கத்தில் ஒலிக்கும்

7 முதிர்கன்னிகள், வண்ணத்துப்பூச்சிகள், தீக்குச்சிகள், அக்கினிக்குஞ்சுகள் ஆகியவற்றைப் பற்றி ஒரு கவிதையாவது எழுதியிருக்கவேண்டும்

எழுபதுகளில் இந்திராகாந்தி அம்மையார் நெருக்கடிநிலையைக் கொண்டுவந்தபோது வானம்பாடிகள் மறைந்தார்கள். கோவை ஞானி தலைமையில் சிறு குழு மட்டும் எஞ்சி ராப்பாடிகள் என்று பெயர் மாற்றி சிலகாலம் இயங்கியதாக தெரியவருகிறது. இவர்களில் பலர் பின்னர் திரைப்படப் பாடல்கள் எழுதத் தலைப்பட்டார்கள். ஆவாரம்பூ என்ற பூவைத் திரைப்பாடலில் அழுத்தமாக நிறுவியவர்கள் இவர்களே. எதற்கெடுத்தாலும் லாலால லாலா என்று மோகனத்தில் மெட்டமைத்த இளையராஜாவே இதற்குக் காரணம் என்று ஒரு கவிஞர் இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்

வானம்பாடிகளின் சாதனை என்பது கவிதையை மக்கள் மயமாக்கியது. இவர்களின் கவிதைகளைக் கேட்கும் எவரும் "இம்புட்டுத்தானா? தாளி , இதை நானே எழுதுவேனே" என்ற தெளிவை அடைந்தமையால் எங்கும் கவிதை பெருகியது. இளைஞர்களின் செலவில்லாப் பொழுதுபோக்காகக் கவிதை மாறியது. காதல்கடிதங்கள் புதுக்கவிதையில் எழுதப்பட்டன. இவ்வகைப்பட்ட கவிதைகள் ஏறத்தாழ ஒரு லட்சத்தி அறுபதாயிரம் வரை ஒரு மாதத்தில் வெளியாவதாகத் தெரியவருகிறது. சமீபத்திய தொகுதிச் சீரமைப்பில் நெல்லை பணகுடி நடுவே இவர்கள் ஒரு தனித்தொகுதி கேட்டுப் போராடியிருக்கிறார்கள்

இவ்வகைக் கவிதைகள் மூன்று வகை என விமரிசகர் வகுத்துள்ளனர்

1.'அடி இவளே' பாணி . இதற்கு முன்னோடியாக விளங்குபவர் அண்ணன் என்று சான்றோரால் அழைக்கப்படும் அறிவுமதி அவர்கள். உதாரணம்

”இனியவளே

நான் என் காதலை விளக்கினேன்

நீ வாரியலால் விளக்கினாய்”

2 ‘ஏ சமுதாயமே!’ பாணி. இவ்வகைக் கவிதைகளுக்கு எழுச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் முன்னோடியாவார். உதாரணம்

குனிந்து பெருக்காதே

நிமிர்ந்து கூட்டு!

புதிய திட்டம் வகுத்திடு!

3 ‘ஓ இளைஞனே’ பாணி. இவ்வகைக்கவிதைகளுக்கு முன்னோடி என திரைப்படத்துக்கு எழுதுவதற்கு முந்திய வைரமுத்து குறிப்பிடப்படுகிறார். பள்ளிமாணவர்கள் அதிகமும் இதை எழுதுகிறார்கள். உதாரணம்

இளைஞனே நீ

பேனாவை எடு

அது போர்வாள்

ஒழிக சார்வாள்!

புதுக்கவிதையின் வளர்ச்சிப் படிக்கட்டில் உச்சநிலை திரைப்பாடலாக அதன் பரிணாமம். இரு கவிதைகள் இதன் சிறந்த உதாரணங்களாகும்

மாறுகோ மாறுகோ மாறுகயீ

ஜோருகோ ஜோருகோ ஜோருகயீ

அஜக்கு இன்னா அஜக்குதான்

குமுக்கு இன்ன்னா குமுக்குதான்!

புதுக்கவிதையின் பிதாமகர்கள் விழைந்த முடிவிலாது பொருள் கொள்ளும் தகைமை கொண்டவரிகளை இங்ஙனம் தமிழ்ப்புதுக்கவிதை அடைந்தேவிட்டது!

வினாக்கள்

1. புதுக்கவிதைக்கு முன்னோடி யார்?
2. குறுங்கவிதையின் வகைகள் யாவை?
3. துளிப்பாவிற்கான ஜப்பானிய இலக்கியப் பெயர் யாது?
4. விடுகதை அமைப்பில் அமையும் பா எது?
5. இயைபுத் துளிப்பா எவ்வாறு அமையும்?

புதுக்கவிதை ஐக்கூ சென்ரியூ லிமரைக்கூ

புதுக்கவிதை பற்றி தெரிந்து கொள்வதற்க்கு முன்னர் யாப்பு இலக்கணம்பற்றி தெரிந்து கொள்வது நலம்.

யாப்பு இலக்கணம் :

யாத்தல் என்னும் சொல்லுக்குக் கட்டுதல், பிணைத்தல், தளைத்தல் என்று பொருள். குறிப்பிட்ட ஓர் ஓசை அமையும் வகையில், எழுத்து, அசை, சீர் முதலான யாப்பு உறுப்புகளைச் சேர்த்து அமைப்பதற்கு யாப்பிலக்கணம் என்று பெயர். இவ்வுறுப்புகள் தகுந்த முறையில் பிணைக்கப்படுவதால் இவ்விலக்கணத்தை யாப்புஎனும் பெயரால் குறித்தனர். செய்யுளுக்குரிய உறுப்புகள் ஓர் ஒழுங்கமைதியோடு கட்டப் பெறுகின்றன. யா என்னும் வினையடிச் சொல்லிலிருந்து இச்சொல் வந்தது. செய்யுள் குறிப்பிட்ட ஓர் ஓசையைப் பெறும் வகையில் செய்யுள் உறுப்புகள் சேர்த்து அமைக்கப் பெறுகின்றன. யாப்பு என்பதற்குப் புலவர்களால் செய்யப்பெறும் செய்யுள் என்பது பொருள். செய்யுள் இயற்றுதற்குரிய இலக்கணம் யாப்பிலக்கணமாகும்.

யாப்பு இலக்கணம் பற்றி ஓரளவு புரிந்திருக்கும் என நினைக்கிறேன் . சரி புரியாவிட்டாலும் விட்டிருங்க . எல்லாவற்றையும் சொல்லி உங்களை குழப்ப விரும்பல்ல. இப்போ நாம புதுக்கவிதை பற்றி பார்க்கலாம் .

புதுக்கவிதை :

இந்த யாப்பு இலக்கண கட்டுபாட்டுகளுக்கு அடங்காமல் கைவிலங்கு அகற்றப்பட்டு சுதந்திரமாக எழுதப்படும் கவிதைகளுக்கு புதுக்கவிதைகள் எனப்பெயர் . யாப்பின் இலக்கண கட்டுப்பாட்டில் அடங்கும் மரபுக்கவிதையிலிருந்து விடுபட்டுப் புதிய வானில் சிறகடித்தப் பறவைகளே புதுக்கவிதைகள். தமிழில் நமக்கு புதுக்கவிதையை அறிமுகபடுத்தியவர் ந. பிச்சமூர்த்தி ஆவார் . புதுக்கவிதையின் ஆதிக்கம் 1970 இல் வானம் பாடிக் கூட்டத்தினர் எழுதிய பின்னரே ஏற்பட்டது .

ஆங்கில மொழியில் வால்ட் விட்மன் என்பவர் தான் புதுக்கவிதையை தொடங்கி வைத்தார் . புல்லின் இதழ்கள் (டநயஎநள ழக புசயளள) என்பதுதான் அவரது முதல் படைப்பு . டி .எஸ் . எலியட் எழுதிய பாழ் நிலம் (றுயளவந டுயனெ) என்ற புதுக்கவிதை நூலுக்கு நோபல் பரிசு கிடைத்தது மிகப்பெரிய எழுச்சியாக அமைந்தது. சொல்லவந்த கருத்தை நேரடியாக சொல்லுதல் , நறுக்கென்று சொல்லவந்ததை சுருங்கச்சொல்லுதல். இசை நீட்சி இவைகள் தான் இதன் சிறப்பு அம்சம். வெள்ளைக்காரர்கள் இவ்வகையை விடுதலைக் கவிதை (குசநந எநசளந) என்று கூறுவர் .

புதுக்கவிதை

என்பது

சொற்கள் கொண்டாடும்

சுதந்திரதின விழா!

மரபுக்கவிதைகள் -

மண்ணில் இருந்தாலும்

விண்ணையே பார்த்துக்கொண்டிருக்கும்

மலர் வர்க்கங்கள்!

புதுக்கவிதைகளோ

விண்ணிலிருந்தாலும்

மண்ணையே பார்த்துக்கோண்டிருக்கும்

சூரிய சந்திரர்கள்!

யாப்பின் அரியாசனத்தில்

கொலுவிருப்பதால் மட்டுமே

செத்த வார்தைகளுக்கு

வெண்சாமரங்கள்

வீச முடியாது !

என்ற வைரமுத்துவின் வரிகளில் புதுக்கவிதையின் பெருமையை காணலாம்.

ஐக்கூ: (துளிப்பா

ஜப்பான் நாட்டு சென் மதத்தினர் பாடிய ஹொக்கு என்ற ஒரு வகையே ஹைக்கு, ஐக்கூ என்று நாம் நாட்டிலும் பரவியது . இது மூன்று அடிகளால் பாடும் குறுங்கவிதையாகும். இதன் மூன்றாவது அடி , முதல் இரண்டு அடிகளின் பொருளை அதிரடியாய் திசை திருப்பும்: சாட்டையடி போல் மனதை இறுக்கும். படித்த பொறியாளர் முதல் சாதாரண தொழிலாளி வரை பலரும் ஐக்கூ எழுதி வருகின்றனர். கணினியுகத்தில் நீண்ட நெடிய கவிதைகளைப் படிக்க நேரமும், பொறுமையும் இருப்பதில்லை. ஆனால் இந்த மூன்று வரி முத்துக்களான ஐக்கூ கவிதைகளை எல்லோரும் விரும்பிப் படிக்கின்றனர். ஐக்கூ கவிதைகளுக்கு வயது வரம்பு இன்றி அனைத்துத் தரப்பினர்களிலும் வாசகர்கள் உண்டு. கவிதை ரசிகர்கள் என்ற சின்ன வட்டத்தையும் தாண்டி பரவலாக பலராலும் படிக்கப்படும் வடிவம்தான் ஐக்கூ.

ஆர்.எச்.பிளித் என்பவர் ஐக்கூ வைப்பற்றி கூறுகையில் இவ்வாறாக விவரிக்கிறார் :

”பாறைகளுகுள்ளே ஒளிந்திருக்கும் சிலையை உளி கண்டுபிடிக்கிறது. ஐக்கூவும் அப்படியே சொற்களுக்குள் உள்ள கவிதையைக் கண்டுபிடிக்கும். சொற்கள் தொடக்கமே முடிவல்ல.”

”இறுகிக் கிடக்கும் ஒரு மலர்மொட்டின் மெல்லிய இதழ்களைக் கதிரவனும் மழையும் எவ்வாறு விரிய வைக்கின்றனவோ அவ்வாறு காட்சியின் பொருளை வெளிக் கொணர்வதேயாகும்.”

உதாரணமாக கவிஞர் அமுதபாரதி எழுதிய ஐக்கூ :

மழை சூடாக இருக்குமா ? என்ற கேள்வியை எழுப்பி, எப்போது சூடாக இருக்கும்என்று விடையைச் சொல்லி காட்சிப்படுத்துகிறார் கவிஞர்.

பேருந்து நிறுத்தம்

சூடாய் மழை

பக்கத்தில் அவள்

சென்ரியூ: (நகைப்பாக்கள்)

சென்ரியும் மூன்றடிகளால் பாடும் ஐக்கூ போன்றதே . எனினும் நகைச்சுவையும் எள்ளலுமாக பாடப்படுவது சென்ரியூ இதனை நகைப்பாக்கள் அல்லது நகைத்துளிப்பா என்றும் அழைப்பர் .

உதாரணமாக கவிஞர் மாமதயானை எழுதிய நகைத்துளிப்பா:

நன்றியுள்ள நாய்

வாலை ஆட்டியது

திருடனுக்கு

நகைத் துளிப்பாவைத் தமிழுக்கு அறிமுகம் செய்துள்ள கவிஞர் ஈரோடு தமிழன்பன் இப்படியாக எழுதுகிறார்:

மன்னன் எப்படி, மக்கள் அப்படி' என்பார்கள். பொறுப்பான பதவியில் உள்ள அமைச்சர் பெருமக்களே, தாங்கள் கூடும் பொதுச்சபையில் சட்டதிட்டங்களைக் கடைப்பிடிப்பதில்லை என்றால், இவர்களால் ஆளப்படும் நாடு என்னாவது?

சட்டம் ஒழுங்கைக்

காப்பாற்ற முடியவில்லை

சட்டசபையில்

லிமரைக்கூ :(இயைபுத் துளிப்பா)

மூன்றடிக் கவிதையில் முதலடியின் ஈற்றுச் சீரும் மூன்றாமடியின் ஈற்றுச் சீரும் இயைபுத்தொடையமையப் பாடப்படுவது இயைபுத் துளிப்பா அல்லது லிமரைக்கூ என்பர் . இதன் இரண்டாமடி ஏனைய இரண்டடியையும் விட நீண்டிருத்தல் சிறப்பு.

'இக்கரைக்கு அக்கரை பச்சை' என்பார்கள். உலகில் தன் வாழ்வெல்லாம் துன்பம் என்றும், பிறர்வாழ்வெல்லாம் இன்பம் என்றும் கருதி மயங்குவோர் பலர். தரமாகக் கவிதை எழுதியிருந்தும், எதுகைமோனை வரம்போடு எழுதுவதுதான் கவிதை என்று பிறர் கருதுவதை விரும்பியவன், யாப்புக் கற்க முயன்றதாக, கவிதையில் எடுத்துரைக்கின்றார் தமிழன்பன்.

கவிதை எல்லாம் விற்றான்

கைக்கு வந்த காசைக் கொண்டு

தேமா புளிமா கற்றான்

இன்றைய மக்களின் ஆங்கில விருப்பத்தையும் ஆங்கிலத் திரைப்படங்கள் தமிழ் விளக்கங்களுடன் வருவதையும் சீனு.தமிழ்மணி நமக்கு இவ்வாறாக நினைவூட்டுகிறார்.

தன்வரலாறு

இருபதாம் நூற்றாண்டு அறிவியல் யுகம், நாவல் நூற்றாண்டு என்றெல்லாம் போற்றப்படுகின்றது. இக்காலத்தின் போக்கிற்கு ஏற்ப இலக்கியமும் புது வடிவம் பெற்றது. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் விடுதலை இயக்கம், தனித்தமிழ் இயக்கம், தமிழிசை இயக்கம், காந்தியம், பொதுவுடைமை, குழந்தை இலக்கியம் போன்றன இலக்கியத்தை இயக்கின. நாடகத் தமிழ் மலர்ச்சி பெற்றது. பல்துறையிலும் தமிழ் வளர்ச்சி பெற்றது.

தன்வரலாறு அல்லது சுயசரிதை (யரவழடிழைபசயிால)ஜ1ஸ என்பது ஒரு நபர் தானே எழுதிய அவரது வாழ்க்கை வரலாறு ஆகும்.

யுரவழடிழைபசயிால என்ற ஆங்கில மொழிச் சொல்லை முதலில் "மந்த்லி ரிவியூ" என்ற இதழில் 1797 ஆம் ஆண்டில் வில்லியம் டெய்லர் என்பவர் பயன்படுத்தினார். அவர் அதனை இன்றைய பொருளில் பயன்படுத்தவில்லை. அடுத்து இராபர்ட் சௌதி என்பவர் 1809 ஆம் ஆண்டில் இச்சொல்லை இன்றைய பொருளில் பயன்படுத்தினார்.ஜ2ஸ பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இதற்குப் பெயரிடப்பட்டாலும், தானே தன் வரலாற்றை எழுதுவது மிகப் பழங்காலத்திலேயே தொடங்கியது. ராய் பாசுக்கல் என்பவர் தன்வரலாறு என்பதைக் காலத்துக்குக் காலம் எழுதப்படும் சொந்த நினைவுக் குறிப்புகளில் இருந்தும், நாட்குறிப்புகளில் இருந்தும் வேறுபடுத்துகிறார். "தன்வரலாறு என்பது, குறிப்பிட்ட ஒரு தருணத்தில் இருந்து கடந்தகால வாழ்க்கையை மீளாய்வு செய்வது என்றும், நாட்குறிப்பு தொடர்ச்சியான பல தருணங்களில் எழுதப்பட்ட நினைவுகள் என்றும் அவர் குறிப்பிடுகிறார்".ஜ3ஸ எனவே சுயசரிதை, அது எழுதப்படும் காலத்தில் இருந்துகொண்டு எழுதுபவரின் வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கிறது. வாழ்க்கை வரலாறு எழுதுபவர்கள் பொதுவாக பலவிதமான ஆவணங்கள் மற்றும் கண்ணோட்டங்களில் தங்கியிருக்கும்போது, சுயசரிதை முற்றிலும் எழுத்தாளரின் நினைவின் அடிப்படையில் அமைந்திருக்கலாம். "நினைவுக் குறிப்பு" வடிவம் தன்வரலாற்றோடு நெருக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ளபோதும், பாசுக்கல் குறிப்பிடுவது போல் நினைவுக் குறிப்பை எழுதுபவரின் வாழ்க்கையைப் பற்றிய மீளாய்வில் அவரைப் பற்றிக் குறைவாகவும், மற்றவர்களைப் பற்றிக் கூடுதலாகவும் காணப்படும்.ஜ3ஸ

தன்வரலாற்றை வரையறுத்தல்

அமெரிக்க சுயசரிதை பற்றிய ஒரு கட்டுரையில் ஜேம்ஸ் எம். காக்ஸ் என்பவர் சுயசரிதை என்பதற்குப் "பொதுவான ஒரு" வரையறையை அளித்தார் அக்கூற்றின்படி "தன்னைப் பற்றி எழுதப்பட்ட ஒரு நபரின் கதையே சுயசரிதை" என்று அவர் கூறுகிறார்.

தன்வரலாற்றின் இயல்பு

சுயசரிதைப் படைப்புகள் இயல்பாகவே தன்னுணர்வு சார்ந்தவை. துல்லியமாக நினைவுகளை மீட்டுக் கொண்டுவருவதற்கு இயலாமை அல்லது விருப்பமின்மை காரணமாகச் சுயசரிதைகளில் பிழையாக வழிநடத்துகின்ற அல்லது பிழையான தகவல்கள் தரப்படுகின்றன. சில சமூகவியலாளர்களும் உளவியலாளர்களும், சுயசரிதை அதை எழுதுபவர்களுக்கு வரலாற்றைத் திருப்பி எழுதுவதற்கான வல்லமையை வழங்குகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆன்மீக தன்வரலாறு

ஆன்மீக சுயசரிதை என்பது அதை எழுதியவரின் கடவுளை நோக்கிய பயணம் அல்லது போராட்டத்தினதும், தொடர்ந்த மாற்றம், அதாவது பெரும்பாலும் பின்னடைவுத் தருணங்களுடன் கூடிய மத மாற்றம் ஆகியவற்றினது விபரிப்பு ஆகும். தெய்வீகத்துடனான சந்திப்புக்களின் ஊடான தெய்வீக விருப்பத்தின் வெளிப்பாடாகத் தனது வாழ்க்கையை ஆன்மீகச் சுயசரிதை ஆசிரியர் மீளமைப்புச் செய்கிறார். ஆன்மீக சுயசரிதையின் மிகப் பழைய எடுத்துக்காட்டு ஆகஸ்டீனின் "ஒப்புதல்கள்" (ஊழகெநளளழைளெ) ஆகும். எனினும் மற்ற மத மரபுகளைச் சேர்ந்த சாகித் ரொகாரியின் "ஆன் ஸ்டோபோகிராபி" மற்றும் "பிளாக் எலெக் ஸ்பீக்ஸ்" போன்ற படைப்புகளையும் உள்ளடக்கும் வகையில் நமது மரபுகள் விரிவாக்கம் பெற்றுள்ளன. ஆன்மீக சுயசரிதை அதை எழுதியவரின் மதத்துக்கான அவரது அங்கீகாரமாகச் செயற்படுகிறது.

நினைவுக் குறிப்புகள்

நினைவுக் குறிப்பு, சுயசரிதையிலும் சற்று வேறுபட்ட இயல்பைக் கொண்டது. ஒரு சுயசரிதை பொதுவாக எழுத்தாளருடைய "வாழ்க்கையிலும் காலத்திலும்" கவனம் செலுத்தும் போது, நினைவுக் குறிப்பு, அவரது நினைவுகள், உணர்வுகள் மற்றும் உணர்ச்சிகள் மீது குறுகிய, மேலும் நெருக்கமான கவனத்தைச் செலுத்துகின்றது. தமது பொதுச் சாதனைகளைப் பதிவு செய்வதற்கும் வெளியிடுவதற்குமான ஒரு வழியாக அரசியல்வாதிகளும் இராணுவத் தலைவர்களும் நினைவுக் குறிப்புகளை எழுதினர். ஜுலியஸ் சீசரின் "காலிக் போர்களின் வர்ணனைகள்" இதற்கான ஒரு ஆரம்ப எடுத்துக்காட்டு ஆகும். இந்த ஆக்கத்தில், காலிக் போர்களில் அவர் உள்ளூர்ப் படைகளுடன் சண்டையில் ஈடுபட்டிருந்த ஒன்பது ஆண்டுகளில் இடம்பெற்ற சண்டைகளை விபரிக்கிறார். அவரது இரண்டாவது நினைவுக் குறிப்பு, "உள்நாட்டுப் போரின் வர்ணனைகள்" என்பது. இது கினேயசு பொம்பியசுவுக்கும், ஆட்சிக்குழுவுக்கும் எதிராக கிமு 48க்கும் 49க்கும் இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்த உள்நாட்டுப் போரின் நிகழ்வுகளை விபரிக்கிறது.

லியனோர் லோபஸ் டி கோர்டோபா (1362-1420) எசுப்பானிய மொழியின் முதல் சுயசரிதையை எழுதினார். ஆங்கிலேய உள்நாட்டுப் போர் (1642-1651) இவ்வகையான பல ஆக்கங்கள் உருவாவதற்குத் தூண்டியது. சர் எட்மண்ட் லுட்லோ, சர் ஜான் ரிரெஸ்பி ஆகியோரின் படைப்புகள் இவற்றுக்கு எடுத்துக்காட்டுகள். அதே காலப்பகுதியைச் சேர்ந்த பிரெஞ்சு எடுத்துக்காட்டுகளுள் கார்டினல் டி ரெட்ஸ் (1614-1679), டுக் டி செயிண்ட்-சைமன் ஆகியோர் எழுதிய நினைவுக் குறிப்புகள் அடங்கும்.

கற்பனைச் சுயசரிதை

"கற்பனைச் சுயசரிதை" என்ற சொல், கற்பனைக் கதாபாத்திரம் ஒன்று தன் சுயசரிதையை எழுதுவது போல் எழுதப்பட்ட ஒரு கற்பனைப் புதினம் ஆகும். இதில் குறித்த கதாபாத்திரம் தன்மையில் கதை சொல்வதுடன், அது பாத்திரத்தின் உள் அனுபவத்தையும், வெளி அனுபவத்தையும் எடுத்துச் சொல்கிறது. டேனியல் டெபோவின் மோல் ப்ளாண்டர்ஸ் (ஆழடட குடயனெநசள) இதற்கு ஒரு தொடக்ககால எடுத்துக்காட்டு. சார்லஸ் டிக்கன்சின் டேவிட் காப்பர்.்பீல்ட் இன்னொன்று. ஜே.டி.சலின்கரின் தி கச்சர் இன் தி ரய் (வாந ஊயவஉாநச ளை வாந சுலந) என்பது நன்கு அறியப்பட்ட தற்கால கற்பனைச் சுயசரிதை. அசல் பதிப்பின் முதல் பக்கத்தில் குறிப்பிட்டபடி, சார்லோட் ப்ரோண்டேயின் ஜேன் ஐர் கற்பனைச் சுயசரிதையின் இன்னொரு எடுத்துக்காட்டு. உண்மையான பாத்திரங்களின் சுயசரிதைகளாக இருப்பதாக கூறப்படும் புனைகதைப் படைப்புக்களுக்கும் இந்தச் சொல் பொருந்தும், எ.கா., ராபர்ட் நேய்சின் நினைவுக் குறிப்பான லார்ட் பைரோன்.

ஆரம்பகால சுயசரிதைகள்

இஸ்லாமிய சமுதாயத்தின் முதல் சுயசரிதை 11 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிரனாடாவின் கடைசி சிரித் மன்னரான அப்தல்லா இபின் புலுகின் என்பவரால் எழுதப்பட்டது.

15 ஆம் நூற்றாண்டில், ஸ்பானிய பிரபுத்துவப் பெண் லியனோர் லோபஸ் டி கோர்டோபா, அவரது நினைவுக் குறிப்புக்களை எழுதினார், இது எசுப்பானிய மொழியின் முதல் சுயசரிதை ஆகும்.

தெற்காசியாவின் முகலாய வம்சத்தை நிறுவிய சஹிர் உத்-தீன் முகம்மது பார்பர், பாபர்நாமா என்னும் நினைவுக் குறிப்புப் புத்தகம் ஒன்றைப் பேணி வந்தார். இது 1493 ஆம் ஆண்டுக்கும் 1529 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டது.

மறுமலர்ச்சிக் காலத்தின் மிகச் சிறந்த முதல் சுயசரிதைகளில் ஒன்று 1556 ஆம் ஆண்டுக்கும் 1558 ஆம் ஆண்டுக்கும் இடையில் சிற்பியும் பொற்கொல்லருமான பென்வெனுட்டோ செலினி (1500-1571) என்பவரால் எழுதப்பட்டது. இதற்கு அவர் எளிமையாக "வாழ்க்கை" (ஏவைய) எனப் பெயரிட்டிருந்தார். "எப்படியானவராக இருந்தாலும், ஒவ்வொருவரும்

ஏதாவது சாதனைகளைச் செய்திருப்பர். அவர் உண்மையையும், நல்லதன்மையையும் போற்றுபவராக இருந்தால் அவர் தனது வாழ்க்கையின் கதையைத் தன் கையால் எழுதவேண்டும்.

ஆனால், நாற்பது வயதைக் கடக்குமுன் எவரும் இந்த முக்கியமான வேலையில் ஈடுபடக்கூடாது" என்று நூலின் ஆரம்பத்தில் செலினி கூறுகிறார். சுயசரிதத்துக்கான இந்த விதிகள் பொதுவாக அண்மைக்காலம் வரை நிலைத்திருந்தன. அடுத்த மூன்று நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட முக்கியமான சுயசரிதைகள் அவற்றிற்கு இணங்கவே எழுதப்பட்டன.

இந்த காலத்தின் மற்றொரு சுயசரிதை இத்தாலிய கணிதவியலாளரும், மருத்துவரும், சோதிடருமான ஜெரோலாமோ கார்டானோ (1574) என்பவரால் எழுதப்பட்ட டி வைட்டா பிராப்பிரியா ஆகும்.

ஆங்கிலத்தில், மிக முந்தியதாக அறியப்பட்ட சுயசரிதை 15 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதப்பட்ட மார்கெரி கெம்பே நூல் (டீழழம ழக ஆயசபநசல முநஅிந) ஆகும். பிற விடயங்களுடன், கெம்பேயின் புனித நிலத்துக்கும், ரோமுக்குமான யாத்திரை பற்றி இது விவரிக்கின்றது. ஆகக் கூடியது இதை ஒரு பகுதிச் சுயசரிதை எனலாம். ஆனாலும், கூடுதலாக இது ஒரு மத அனுபவங்களின் நினைவுக்குறிப்பாகவே உள்ளது. கையெழுத்துப்படியாகவே இருந்த இந்நூல் 1936 வரை வெளியிடப்படவில்லை.

17 ஆம் நூற்றாண்டின் ஏனைய குறிப்பிடத்தக்க ஆங்கில சுயசரிதைகளுள் சேர்பரி ஹெர்பர்ட் பிரபு (1643, 1764 இல் வெளியானது), ஜான் புன்யன் (1666), ஆகியோர் எழுதிய சுயசரிதைகளும் அடங்கும்.

வாழ்க்கை வரலாற்று இலக்கியம்

வாழ்க்கை, வரலாறு என்னும் இரு சொற்களின் இணைப்பாக இப்பெயர் அமைகின்றது. பொதுமக்களிடையே கலை, அரசியல், இலக்கியம், அறிவியல் என ஏதாவது துறையில் புகழ் பெற்றவர்களின் வாழ்க்கையையோ, சுவையான அனுபவங்களையோ சுவைபடத் தொகுத்து அளிப்பது வாழ்க்கை வரலாறு இலக்கியம் ஆகும்.

ஆனந்தரங்கம் பிள்ளை நாட்குறிப்பு, விநோத ரசமஞ்சரி, வண்ணச் சரபம், தண்டபாணி சுவாமிகளின் புலவர் புராணம், தமிழ்நாவலர் சரிதை, குருபரம்பரைப் பிரபாவம், சேய்த்தொண்டர் புராணம் என்பவற்றை வாழ்க்கை வரலாற்று இலக்கியத்தின் முன்னோடிகள் என நாம் கொள்ளலாம்.

வாழ்க்கை வரலாற்று இலக்கியம் பிறர் வரலாறு, தன் வரலாறு எனும் இருபெரும் பிரிவுகளை உடையது என்கிறார் ச.வே.சுப்பிரமணியன். இவ்விரு வகைப் பிரிவிலும் உரைநடை, கவிதை, கடிதம், நாடக வடிவில் நூல்கள் உள்ளன.

பிறர் வரலாறு கூறும் நூல்கள்

1 டாக்டர் உ.வே.சா. - மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் சரித்திரம்

2 மு.நமச்சிவாயம் - காசி முதல் தாஷ்கண்ட் வரை

3 சி.ஞானமணி - எழுத்தாளர் ம.பொ.சி

4 திரு.வி.க - மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்

5 மு.வ - அறிஞர் பெர்னாட்ஷா

6 ரகுநாதன் - புதுமைப்பித்தன் வரலாறு

7 கல்கி - மாந்தருக்குள் ஒரு தெய்வம்

8 மறை. திருநாவுக்கரசு - மறைமலையடிகள் வரலாறு

9 சோ.சிவபாத சுந்தரம் - கௌதம புத்தர் அடிச்சுவட்டில்

10 கௌசிகன் - டாக்டர் ராதாகிருஷ்ணன்

11 சோமலெ - பண்டிதமணி

12 அ.லெ. நடராசன் - ஏழைப்பங்காளன் லெனின்

13 பி.ஸ்ரீ - பாரதி - நான் கண்டதும் கேட்டதும்

14 ம.பொ.சி - வீரபாண்டிய கட்டபொம்மன்

15 ரா. கணபதி - அறிவுக்கனலே அருட்புனலே

ஒருவர் தன் வரலாற்றினைத் தானே எழுதிக் கொள்ளுதல் தன்வரலாறு ஆகும். பாரதியின் பாரதி அறுபத்தாறு என்ற நூலைத் தன்வரலாற்றிலக்கிய முதல் நூல் எனலாம். பம்மல் சம்பந்த முதலியாரின் நாடகமேடை நினைவுகள் நீண்டதாக ஆறுபகுதிகள் கொண்டமைகிறது. உ.வே.சாவின் என் சரித்திரம், நான் கண்டதும் கேட்டதும், நினைவு மஞ்சரி என்பன குறிப்பிடத் தக்கன.

- பிற குறிப்பிடத்தக்க நூல்கள்

1 திரு.வி.க - வாழ்க்கைக் குறிப்புகள்

2 நாமக்கல் கவிஞர் - என் கதை

3 வ.உ.சி - சுயசரிதை

4 கண்ணதாசன் - வனவாசம்

5 ஜெயகாந்தன் - நினைத்துப் பார்க்கிறேன்

6 ச.து.சு யோகியார் - ஆத்ம சோதனை

பயண இலக்கியமும் கடித இலக்கியமும்

வாழும் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு ஏதாவது காரணம் பற்றிச் செல்லுதல் பயணம் ஆகும். பயணம் சென்ற ஒருவர், தான் சென்ற இடத்தில் பார்த்தவை, கேட்ட செய்திகள், அனுபவங்கள், அதன் சிறப்பியல்பு, அங்கு வாழ்வோர் போன்றவற்றைச் சுவையாக எழுதும்போது அது பயண இலக்கியமாக மலர்கிறது. தமிழ் இலக்கியத்தில் இதனைத் தனித்துறையாக வளர்க்க உதவியவர்கள் ஏ.கே. செட்டியாரும், சோமலெயும் ஆவார்கள்.

ஏதேனும் ஒரு செய்தியை ஒருவர் குறிப்பிட்ட நபருக்குக் குறித்து அனுப்புவது கடிதத்தின் இயல்பாகும். கடிதம் உரிய வடிவுடன் பொருட் செறிவாலும் கற்பனை நயத்தாலும் சிறக்கும் போது கடித இலக்கியமாக உருப்பெறுகிறது. கடித இலக்கியத்தை முற்றிலும் உரைநடைக்கே உரியது எனக் கூறமுடியாது. காப்பியங்களிலும் சிற்றிலக்கியங்களிலும் கடித இலக்கியத்தின் தோற்றுவாய் உள்ளது. செய்யுள் உலகிலோ சீட்டுக்கவி என அது புகழ் பெற்றது.

பயண இலக்கியம்

தமிழில் வழங்கும் பயண இலக்கியங்கள் இருநிலைகளில் அமைகின்றன. மதத்திற்கு முக்கியத்துவம் அளித்து சமயச் செய்திகள் மட்டும் பேசப்படுவது ஒருநிலை. தொழில், சமூகநோக்கு, கல்வி பற்றிய செய்திகளுக்கு முக்கியத்துவம் அளிப்பது மற்றொரு நிலை. பயண இலக்கியங்களில் சிட்டியும் ஜானகிராமனும் இணைந்து படைத்த நடந்தாய் வாழி

காவேரி என்பது ஒரு புதுமைப்படைப்பாகும். காவிரியின் முகத்துவாரத்தில் இருந்து அது கடலில் கலக்கும் இடம் வரை பயணம் செய்து, அதனிரு கரைகளிலும் உள்ள சிறப்பான இடங்கள், வாழும் மக்களின் இயல்புகள், வழங்கும் கதைகள் போன்றவற்றைத் தந்துள்ளனர். வா.மு. சேதுராமன் எழுதிய மலைநாட்டு மீதினிலே என்ற நூல் காவிய வடிவம் கொண்டு பழமையை நினைவூட்டுகிறது. மு.வ. தன் இலங்கைப் பயணக் கட்டுரையைக் கடித வடிவில் அளித்துள்ளார்.

பயண அனுபவங்கள், நாவல், சிறுகதை படைப்புகளுக்கும் உதவியுள்ளதற்கு சாவியின் தெப்போ 76, வாஷிங்டனில் திருமணம், ராஜம் கிருஷ்ணனின் வளைக்கரம், அகிலனின் தாஷ்கண்டில் ஒரு தங்கை என்பன எடுத்துக்காட்டுகள். பிலோ இருதயநாத் எழுதியுள்ள நூல், பயணம் ஒரு கலை, ஆனால்... என்பது பயணம் மேற்கொள்வோர்க்குப் பயனுள்ள குறிப்புகள் தருவது. பிரயாண இலக்கியம் என்ற நூலை ஒரு தொகுப்பாக வாசகர் வட்டம் வெளியிட்டுள்ளது.

குறிப்பிடத்தகுந்த பயண நூல்களும் அவற்றின் ஆசிரியர்களும்

1 உ .வே.சா - திருமலைராயன் பட்டணம்

2 கல்கி - கோடிக்கரை, ஐந்து நாடுகளில் அறுபது நாள்

3 பாரதியார் - பாபநாசம், எங்கள் காங்கிரஸ் யாத்திரை

4 எனுகுல வீராசாமி ஐயர் - காசி யாத்திரை (1832)

5 பரணீதரன் - ஆலய தரிசனம், கேரள விஜயம்

6 ஏ.கே.செட்டியார் - உலகம் சுற்றும் தமிழன்

7 சோமலெ - அமெரிக்காவைப் பார், என் பிரயாண நினைவுகள்

8 மணியன் - இதயம் பேசுகிறது

9 சு.ந. சொக்கலிங்கம் - ஜப்பானில் நான் கண்டதும் கேட்டதும்

10 நெ.து. சுந்தரவடிவேலு - நான் கண்ட சோவியத் ஒன்றியம்

11 சாவி - நான் கண்ட நாலு நாடுகள்

12 அரு. சோமசுந்தரம் - வட இந்தியப் பயணம்

13 தி.க. சண்முகம் - கலை கண்ட மலேசியா

14 தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான - வேங்கடம் முதல் குமரி வரை

5.6.2 கடித இலக்கியம்

மறைமலையடிகளின் கோகிலாம்பாள் கடிதங்கள், வெ.சாமிநாத சர்மாவின் அவள் பிரிவு என்பன புனைகதை வடிவில் மலர்ந்தவை. ரா.பி.சேதுப்பிள்ளை இலக்கியக் கடிதங்கள் தீட்டுவதில் வல்லவர். பாரதிதாசன் பல கடிதங்களைக் கவிதையில் படைத்துள்ளார்.

உண்மைக் கடிதங்கள், புனைவுக் கடிதங்கள் எனக் கடித இலக்கியம் இரு வகைப்படும். தமிழில் மொழிபெயர்ப்புக் கடிதமும் காணப்படுகிறது.

- உண்மைக் கடித வடிவில் அமைந்தவை

1) கருமுத்துத் தியாகராச செட்டியார் கடிதங்கள்

2) டாக்டர் மு.வ.வின் கடிதங்கள்

3) ரசிகமணி கடிதங்கள்

4) மறைமலையடிகளார் கடிதங்கள்

5) பாரதியின் கடிதங்கள்

மு.வ

• புனைவுக் கடிதம் வடிவில் அமைந்தவை

1) மு.வ. - அன்னைக்கு, தங்கைக்கு, தம்பிக்கு, நண்பர்க்கு

2) அண்ணாதுரை - தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள் (ஒன்பது தொகுதி)

3) கவியோகியின் கடிதங்கள், தலைவர்களுக்கு, முக்தி நெறி, வீரத் தமிழருக்கு, இல்லற நெறி - கட்டுரைத் தன்மையன.

• மொழிபெயர்ப்புக் கடிதங்கள்

1) செஸ்டர்பீல்டின் கடிதங்கள் (1954)

2) டால்ஸ்டாய் கடிதங்கள் (1961)

3) பிளேட்டோவின் கடிதங்கள் (1965)

4) ஜவகர்லால் நேருவின் கடிதங்கள் (1941)

5) ஹோரேஸ் வால்போல் கடிதங்கள் (1949)

(அடைப்புக்குள் உள்ளவை நூல் வெளியான ஆண்டுகள்)

செய்திகள் கூறல், அறிவுறுத்தல், சீர்திருத்த நோக்கு போன்ற பல தன்மைகள் கடித இலக்கிய இயல்பாகும். அங்கதம், எள்ளல், சொற்பொழிவுத் தன்மை என்பன கூடச் சில சமயம் கடித இயல்பாகின்றன.

தன் வரலாறுகள்

எஸ்.ராமகிருஷ்ணனைத் தொடர்ச்சியாகப் பின் தொடர்பவர்களுக்குத் தெரியும். அவரது ஒவ்வொரு உரையிலும் பதிவு செய்யப்படாத வாழ்க்கைகளைப் பற்றிய தனது அச்சலாத்தியைத் தெரிவித்துக்கொண்டே இருப்பார். லட்சக்கணக்கான புத்தகங்கள் எழுதப்பட்ட பின்னரும் எத்தனையோ வரலாறுகள் கண்ணுக்கு முன்னே குவித்து வைக்கப்பட்ட பிறகும் ஏன் இந்த வாழ்க்கைகள் பதிவு செய்யப்பட வேண்டுமென்கிறார்?

வரலாறென்று நமக்கு கிடைப்பதெல்லாம் ஏதோ ஒருவகை அதிகாரம் கைவரப்பெற்றவர்களின் கதைகள்தாம். இக்கதையாடல்களின் சுருள்களை நீவி நீட்டிப் பார்த்தால், பெரும்பாலும் ஒரே திரைக்கதை. அசகாய சூரத்தனங்கள். அவற்றைக் கொண்டு அன்றைய வாழ்க்கையையும் புரிந்து கொள்ள இயலாது. இன்றைய சிக்கல்களுக்கும் அவை பொருந்தி வராது. உடனடி உதாரணம்: இடைநிலைச் சாதிகளின் வீரவரலாற்றுக் கதைகள். பின்புலமும் மாந்தர்களின் பெயர்களும் மட்டுமே வேறு. நரேஷன் ஒன்றுதான்.

பெருவரலாற்றின் ஒளிவட்டங்களுக்குள் வராத தன்வரலாற்று நூல்களின் மீது எனக்குப் பிரேமை உண்டு. சமத்காரங்களின் கூக்குரலுக்கு மத்தியில் மிக மெதுவாக மிருதுவாக நெருக்கமான மாற்று உண்மையை முன்வைப்பவை இந்த இணை வரலாறுகள். மாலைச் சூரியன் மறைவதும் அந்தியில் சந்திரன் எழுவதும் எங்கள் சாதனையே என திரும்பும் திசையெங்கும் திராவிடத்தின் 'டால் க்ளேய்ம்' கூவல் சூழலை நிறைத்துள்ளது.

தத்துவங்களுக்குத் தாலி கட்டிக்கொண்டவர்கள் முற்போக்கு முகமூடிகளுடன் சமூக ஊடகங்களுக்குள் நுழைந்து அன்றாடம் வாக்கரசியல் பிரச்சாரங்களை முன்னெடுக்கிறார்கள்.

இவர்கள் கட்டியெழுப்பும் பிம்பப்பெருக்குகள் தனி வாழ்வில், கட்சி அரசியலில், நிர்வாகத்தில், பொதுவாழ்வில் செய்த அத்தனைக் கீழ்மைகளையும் சொட்டு விமர்சனங்களின்றி தங்கள் அரக்க இரைச்சலுக்குள் அடக்கிவிடுவார்கள். இன்று நாம் எதிர்கொள்கிற அத்தனைச் சிக்கல்களுக்கும் வேர் தங்கள் பாட்டுடைத்தலைவனைச் சென்று சேர்கிறதென்பதை வசதியாக மறைப்பார்கள். கண்ணதாசனின் வனவாசம், வலம்புரிஜானின் வணக்கம், சின்ன அண்ணாமலையின் சொன்னால் நம்பமாட்டீர்கள், வே. இராமநாதன் எழுதிய மாண்புமிகு உளவுத்துறை உள்ளிட்ட பல இணை வரலாற்று நூல்கள் மௌனமாக இந்த ஆளுமைகளின் மறுபக்கத்தை நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும். திராவிடத் தலைமைகளின் சமூகபங்களிப்பைப் பற்றி மயிர்கூச்செறியும்போதே அவர்கள் உருவாக்கிய கீழ்மைகளையும் பேசுவதற்கு இத்தகு 'பனை பாடினால்' நூல்கள் விதைகள் போல உறங்கிக்கொண்டிருக்கும். சரி போட்டு. அரசியல் கட்டுரை அல்ல இது.

அப்பாவைப் போல 'ஒரு சிறந்த குடும்ப மனிதனாக' இருக்க வேண்டும் என்கிற உறுதி எனக்குண்டு. குடும்பத்துடன் இருப்பதன் பொருட்டு எதையும் தியாகம் செய்வேன். இயகோகா சுப்பிரமணியம் எழுதிய திரைகடல் ஓடு திரவியம் தேடு என்ற நூலில் ஸ்விட்ஸர்லாந்தின் மிகப்பெரிய கோடீஸ்வரரான ஹெபாசிட் நிறுவனத்தின் தலைவர் சொல்வார் 'குடும்ப மனிதனாக இருப்பதென்பது எப்போதும் குடும்பத்துடன் நேரத்தைச் செலவிட்டுக்கொண்டிருப்பது மட்டுமல்ல. ஒருவன் இருப்பினும் இல்லாது போயினும் அவனது குடும்பம் நல்ல வாழ்க்கைத்தரத்தைக் கொண்டிருக்க வகை செய்வதே ஒரு சிறந்த குடும்ப மனிதனின் அடையாளம்'. அந்த வரி என் வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றத்தை உண்டு பண்ணியது. குடும்பம் அடிப்படை வசதிகளுக்கு அல்லாடும் நிலையில் குடும்பத்தோடு நேரம் செலவிடுகிறேன் என்பது எவ்வளவு பெரிய அனர்த்தம்.

கொடீசியா இந்தியாவில் முன்மாதிரியான அமைப்பு. அதைக் கட்டி எழுப்பிய ஆளுமைகளுள் மிக முக்கியமானவர் ஏ.வி.வரதராஜன். மீப்பெரும் தொழிலதிபர். அவரைப் பற்றி இந்திய தொழில் வர்த்தக சபை சிறு நூல் வெளியிட்டுள்ளது. அதில் ஒரு சம்பவம். பழனிக்கு காந்தி வருகிறார். சொல் எழா கூட்டம். பத்து வயதுப்பையனாக சித்தப்பாவின் கைகளைப் பிடித்துக்கொண்டு திருவிழா பார்க்கச் செல்கிறார் ஏவிவி. காந்தி இருக்கும் கார் கூட்டத்திற்குள் நுழைகிறது. முன் இருக்கையில் காந்தி ஜனங்களைப் பார்த்து வணங்கியபடி இருக்கிறார்.

ஏவிவி என்ன நினைத்தாரோ தெரியவில்லை. சடாரென குதித்து கூட்டத்தைப் பிளந்து வேகமாக ஓடிச்சென்று காரின் ∴புட் ஸ்டெப் - அக்காலங்களில் கார்களில் ∴புட் ஸ்டெப் இருக்கும் - தொற்றி ஏறிக்கொள்கிறார். காந்தியின் நீட்டிய கரங்கள் கார் கதவின் இடைவெளிக்குள் இவரது கைக்குள் மாட்டிக்கொண்டது. கொஞ்ச தூரம் சென்றபின் காரை நிறுத்தி இவரை அன்போடு இறக்கி விடுகிறார்கள். ஏவிவி பின்னாட்களின் தொட்ட சிகரங்கள் அனைத்திற்குமான விதைபோல இந்தச் சம்பவம் என நினைத்துக்கொள்வேன். புயல் போன்ற செயலிலும் துறவியைப் போன்ற எளிமையிலும் அவர் எனக்கு ஒரு குட்டி காந்தியாகவே தெரிவார். கோவையில் காந்தி நட்ட மரம் இருக்கிறது. தொட்ட மனிதரும் இருக்கிறார் என அவ்வப்போது நினைத்துக்கொள்வேன்.

தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ் அமைப்பைத் தோற்றுவித்த முன்னோடிகளுள் ஒருவரான அண்ணாமலை அவர்களின் வாழ்க்கை வரலாறு 'அறவாழ்வும் அர்ப்பணிப்பும்' என்ற பெயரில் வெளியாகியுள்ளது. திராவிட இயக்கம் கோலோச்சிய காலத்தில் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் உறுப்பினர்கள் பட்ட இன்னல்கள், அரசுப்பணியில் இருப்பவர்கள் அரசியல் நிலைப்பாடுகளுக்காக கொடுக்கவேண்டியிருந்த விலை, எமர்ஜென்சி தளும்புகள்,

கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறை அமைக்கப்படுவதற்கு இடையூறு செய்த ஒரு வங்க அமைச்சருக்கு எதிராக கல்கத்தாவிற்கே சென்று வீதி வீதியாகப் பிரச்சாரம் செய்தது என பல சுவாரஸ்யங்கள்.

ஜிடிநாயுடு இரண்டு முறை ஐரோப்பியப் பயணத்திற்குத் திட்டமிட்டும் கப்பல் விபத்துக்குள்ளானதால் நீந்தி கரையேறி உயிர் பிழைத்தார். மூன்றாவது முயற்சியில் ஐரோப்பா சென்றார். பற்பல சாகசங்கள் நிரம்பிய அவரது பயணங்களில் ஹிட்லர், முஸோலினி ஆகியோரைச் சந்தித்துப் பேசினார். புகைப்படங்கள் எடுத்துக்கொண்டார். தன்னுடைய கண்டுபிடிப்புகளை அவர்களுக்குப் பரிசளித்தார். பெருந்தொழிலதிபர் என்றபோதும் அங்குள்ள கல்விக்கூடங்களில் சேர்ந்து மோட்டார்களை மேம்படுத்த கற்றுக்கொண்டார். கற்றும் கொடுத்தார். சென்ற நாடுகளின் பொது நிர்வாகத்தை, தொழில்முனைவை, மக்களின் பண்புநலன்களைப் பரிசோதிக்கும் பல்வேறு பரிட்சார்த்தங்களை மேற்கொண்டார். எல்லாமே சர்க்கஸ் பார் விளையாட்டு போல வித்தையும் விபரீதங்களும் கலந்தவை. ஒரு தொழிலதிபர் ஏன் பயணம் மேற்கொள்ள வேண்டும்? அதன் நோக்கம் என்னவாக இருக்கவேண்டுமென்பதை அறிந்துகொள்வதற்கு அவசியம் வாசிக்க வேண்டிய நூல் 'நான் கண்ட உலகம்'

தினத்தந்தி ஆதித்தனார் திரட்டிய சொத்துக்களுடன் நாடு திரும்பியபோது கப்பல் தீக்கிரையாகி நீந்தியே தமிழகம் வந்து சேர்ந்தது (ஆதித்தனார் வரலாறு) பிசாசு என நினைத்து ஊரே அஞ்சி நடுங்கிய திருடனை ஒற்றையாய் போராடி பிடித்த நாமக்கல் கவிஞரின் அம்மா (என் கதை), ஜோர்டான் ∴பெல்போர்ட் சிறுவயதிலேயே சாதாரண ஜஸ்க்ரீமை வெளிநாட்டு ஜஸ்க்ரீம் என்று கடற்கரைக் காதலர்களிடம் விற்று பணம் சம்பாதித்தது (வுல்∴ப் ஆ∴ப் வால்ஸ்ட்ரீட்), ரயிலில் பயணம் செய்ய இருப்பவர்கள் வீட்டிலிருந்தே குண்டுபல்பு கொண்டு வந்து பயணிக்கும் பெட்டியில் பொருத்திக்கொள்ளவேண்டியது (ஏகே செட்டியார் பயணநூல்கள்), பர்மாவிலிருந்து கால்நடையாகவே வந்து சேர்ந்தவர்கள் இந்திய எல்லைக்குள் நுழைந்ததும் பட்ட அவலங்கள் அலைக்கழிப்புகள் (பர்மா நடைப்பயணம்), அன்றாடம் ஊரே குளித்த தெள்ளிய நீர் ஓடிய கூவம் பற்றிய சித்தரிப்புகள் (திருவிக வாழ்க்கைக் குறிப்புகள்), இந்தி தெரியும் என்கிற காரணத்தினாலேயே ராஜாஜி பக்கம் சாய்ந்த காந்தி (சாண்டில்யனின் எனது போராட்டங்கள்) ஆலயப் பிரவேசத்தை எதிர்த்த உவேசா (நாடார் கறுப்பா காவியா?) அரவணைக்க ஆட்களிருந்தாலும் எந்த அமைப்பிற்குள்ளும் ஒழுங்கிற்குள்ளும் அடங்க மறுத்து வறுமையை வாரிச்சூடிக்கொண்ட புதுமைப்பித்தன் படுத்திய பாடுகள் (தொமுசியின் புதுமைப்பித்தன் வரலாறு) கர்நாடக சங்கீத இசையுலகிற்குள் இருந்த அரசியல்கள், பக்கச் சாய்வுகள் (ரஸிகமணி கடிதங்கள்) வெள்ளை அதிகாரிக்கு எதிராக காந்தி கோவையில் நடத்திய போராட்டம் (ஆர்.கே.எஸ். வாழ்க்கை வரலாறு) எழுதும் போது ஒவ்வொரு இணைவரலாற்று நூலின் பெயர்களும் சம்பவங்களும் நினைவில் முட்டிக்கொண்டே இருக்கின்றன. நிற்க.

இந்தக் கொரானா காலத்தில் சில தன்வரலாற்று நூல்களின் கைப்பிரதிகளை வாசிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவற்றுள் முக்கியமானது நண்பர் யுவராஜின் அம்மாவுடையது. தலைமைக் காவலர் பதவிக்குப் பெண்களை நியமனம் செய்யலாம் என அன்றைய முதல்வர் எம்ஜிஆர் கொண்டு வந்த திடீர் சட்டத்தின் பயனாக 22 பெண்கள் தலைமைக்காவலர் ஆகிறார்கள். அதில் ஒருவர் யுவராஜின் அம்மா. 18 வயதிலேயே தலைமைக்காவலராகப் பணியில் சேர்ந்து டிஎஸ்பி வரை உயர்ந்து ஓய்வு பெறுகிறார். அக்காலத்தைய போலீஸ் குவார்ட்டர்ஸ் வாழ்வு, பெண்களின் நிலை, சமூகச்சூழல், நாற்பது வயதைத்தாண்டிய ஆண் காவலர்கள் 18 வயது பெண் தலைமைக் காவலரை எதிர்கொண்ட விதம், பிள்ளைகளை வளர்க்க முடியாமல் அவரது அப்பா - அவரும் ஒரு காவலர் - காவல்நிலையத்திற்கு எதிரேயே ஒரு சைக்கிள் கடை நடத்தியது என படு சுவாரஸ்யமான நாவலைப் போல இருந்தது. அன்று தமிழகத்திலேயே மிக அதிகம் தற்கொலை பழனியில்தான் நிகழ்ந்திருக்கிறது.

புண்ணிய ஸ்தலத்தில் இறந்தால் மோட்சம் போகலாமென பழனிக்கு வந்து சண்முகா நதியில் மூழ்குபவர்கள், மலையிலிருந்து குதிப்பவர்கள், விடுதி அறைக்குள் தற்கொலை

செய்பவர்கள் என அன்றாடம் குறைந்தபட்சம் இரண்டு மூன்று சாவுகள் விழும். பழனி காவல்நிலையத்தில் பணியாற்றுவது ஏறக்குறைய தண்டனை. எடுத்த எடுப்பில் தலைமைக் காவலரான பெண்ணை யார் சித்திரவதை செய்யாமல் இருப்பார்கள்? தற்கொலைப் பிணங்களைக் கைப்பற்றி விசாரிக்கும் பொறுப்பு இவருக்கு அளிக்கப்படுகிறது. இன்று போல கர்ப்பிணிகளுக்கு விடுப்பு கொடுக்கும் வழக்கம் அன்றில்லை.

திருமணத்திற்குப் பின் யுவராஜின் அம்மா நிறைமாத கர்ப்பிணியாக இருக்கும்போது, ஒரு பெண் வீட்டைப் பூட்டிக்கொண்டுவிட்டாள் என்று தகவல் வருகிறது. வீட்டுக்கதவை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைகிறார். தூக்கிட்டு பிணமாகத் தொங்குபவளின் கால்கள் இந்த நிறைமாத கர்ப்பிணியின் வயிற்றில் மோதுகிறது. கைப்பிரதியை மூடிவைத்துவிட்டு அப்படியே உறைந்துபோய்விட்டேன்.

இன்னொரு சுவாரஸ்யமான வரலாறு செயின் ஆ.ப் ஸ்கூல்ஸ் உருவாக்கிய ஒரு இளம்தொழில்முனைவியுடையது. வசதியான பெற்றோர்களுக்குப் பிறந்து வெளிநாடுகளில் உயர்கல்வி பெற்றவர். வேலைக்கெல்லாம் போகவேண்டாமென 22 வயதிலேயே திருமணம் செய்து அனுப்பிவிட்டனர். அந்த வீட்டில் ஒரு மாமியார்.

கல்வி கற்காதவர். ஐம்பதாண்டுகளாக சமையல்கட்டிலேயே கிடப்பவர். ஆணாதிக்கச் சிந்தனை மிக்க கணவரிடமும் மாமனாரிடமும் கட்டுண்டவர். எந்தச் சபையிலும் ஒரு சொல் சொல்லிப் பழகாதவர். ஆனால், தொடர்ச்சியாக இந்த உலகை அவதானித்து வந்தவர். சிறு கனலை மனதிற்குள் மிருதுவாக ஊதி ஊதி புகைய வைத்தவர். தழையத் தழையப் புதுத்தாலியுடன் வளைய வந்த மருமகளிடம் 'நீயும் என்னை மாதிரியே அடுப்பங்கரையிலேயே கிடக்கப் போறீயா' என்று கேட்டார். அங்கு விழுந்தது முதல் விதை. சீரியலில் வரும் ஸ்டீரியோ டைப் மாமியார்களைப் பார்த்து அலுத்துப் போயிருப்பீர்கள்தானே? இந்த மாமியார் ஒரு நெடிய போருக்குத் தன் மருமகளைத் தயார் செய்தார்.

கார் ஓட்டுவது முதல் ஒப்பந்தங்களை வாசித்துப் புரிந்துகொள்வது வரை சகல விஷயங்களையும் ஒவ்வொன்றாகப் போராடி போராடி கற்றுக்கொள்ள வைத்தார். ஒரு மதியூக மந்திரியாகப் பின்னாலிருந்து தன் மருமகளை இயக்கத் துவங்கினார். இன்று பத்து பள்ளிக்கூடங்கள். கர்த்தருக்குச் சித்தமானால் அந்த வாழ்க்கை வரலாற்றை நானே மொழிபெயர்ப்பேன்.

இன்னொன்று பன்னிரெண்டாயிரம் சம்பளம் வாங்கிய வேலையைத் துறந்துவிட்டு நிறுவனம் ஆரம்பித்த பத்தே வருடங்களில் 200 கோடி ரூபாய்க்கு விற்று விட்டு பெண்கள் மறுமலர்ச்சிக்கு மீத நாட்களை ஒப்புக்கொடுத்து விட்ட ஒரு மேனாள் பெண் தொழிலதிபரின் சரிதம். இது ரியல் கார்ப்பரேட் கிரிமினல்களின் கதை. ஊழியர்களைப் போல நிறுவனத்திற்குள் நுழைந்த போட்டி கம்பெனியின் ஆட்கள், வெஞ்சர் என உள்ளே நுழைந்த வல்ச்சர்கள், ஏற்றுமதி செய்த நாடுகளில் அங்குள்ள தொழிலதிபர்களுடன் அரசுகளே இணைந்து செய்த மோசடி என்று பற்பல வெப்சீரிஸுகளுக்கான சம்பவங்கள். விரைவில் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியாக இருக்கிறது.

இன்னொரு நூல் ஒரு நகைக்கடைக்காரரின் வரலாறு. மிகச்சிறிய நகரமொன்றில் மிகச்சிறிய நகைக்கடை. ஆனால் தமிழகத்தில் எவரோடும் போட்டியிடும் அளவிற்கு டர்ன் ஓவர். எந்தக் கலர் கலர் விளம்பரத்தாலும் முறியடிக்க முடியாத குடி நாணயம். வியாபாரத்தில் விதம் விதமான வித்தைகளைக் காட்டியிருக்கிறார். உதாரணமாக ஒன்று. அந்தச் சிறிய நகரத்தைச் சுற்றி சுமார் 80 கிராமங்கள். அந்தக் கிராமத்திலிருந்து டவுணுக்கு வந்து இந்த நகைக்கடைக்குள் எவர் நுழைந்தாலும் பஸ் டிக்கெட்டுக்கான பணம் இனாம். நகை வாங்க வேண்டுமென்பது அவசியமில்லை. டிக்கெட்டைக் காட்ட வேண்டுமென்பதும் அவசியம் இல்லை. நுழைந்து வேடிக்கை பார்த்தாலும் குறைந்தபட்சம் ரூபாய் முப்பது கையில் கொடுத்து விடுவார்கள். கெத்தெல் சாகிப்புக்கு நட்டம் இல்லை என்பது இலக்கிய வாசகன் அறிவான்.

ஏன் வரலாறுகள் எழுதப்பட வேண்டுமென்று எழுத்தாளர்கள் சொல்கிறார்கள் என்பது புரிகிறதில்லையா. ஒவ்வொரு வாழ்க்கையும் முக்கியமானது. அனைத்தும் வரலாற்றின் விசையோடு பின்னிப்பிணைந்தது. எதிர்காலத்தை நோக்கி எழுதப்படுவது. என்றென்றும் மண்ணில் நிலைத்திருக்கக் கூடியது. காடுகள், மலைகள், நதிகள், கோட்டைகள், அரண்மனைகள், பேராலயங்கள் அழிந்திருக்கின்றன. ஆனால் எழுத்துக்கு மரணமில்லை. என்றோ எழுதப்பட்ட இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், குகை ஓவியங்களைக் கொண்டு இன்று நாம் வரலாற்றை மீட்டிக்கொள்கிறோம்.

ஒரு குயவனின் பானையொட்டுக் கிறுக்கலில் கீழடிக்கும் சிந்துவெளி நாகரீகத்திற்குமான ஒரு கோட்டை இழுக்கிறோம் இல்லையா? நூல்களுக்கு ஒருபோதும் அழிவில்லை. ஒரெயொரு நூல் ஏதேனும் ஒரு நாட்டின் நூலகத்தில் எஞ்சியிருந்தாலும் விதை போல உறங்கிக்கொண்டிருக்கும். ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வாழப்போகும் பெருமரத்தின் விதை. அதைக் கொண்டு வரலாற்றின் இடைவெளிகளை நிரப்பிக்கொள்ள முடியும்.

பேராளுமைகளின் வாழ்வைச் சித்தரிக்கும் வரலாறுகள், வெற்றியாளர்களின் சாதனைகள், நிறுவனங்கள் தோன்றி வளர்ந்த கதைகள், முன்னோடி விவசாயிகளின் அனுபவங்கள், பெருவாழ்வு வாழ்ந்த மனிதர்களின் நினைவோடை, குடும்ப வரலாறுகள், பொருட்கள் மானுட வாழ்க்கைக்குள் நுழைந்த தருணங்கள், காபி டேபிள் புத்தகங்கள், நினைவு மலர்கள், சங்கங்களின் செயல்பாடுகள், முத்திரை பதித்த அதிகாரிகள், போராட்டங்களின் வரலாறு என ஒவ்வொன்றிற்குமான தேவைகள் இருக்கிறது.

ஆனால், இவை காமா சோமோ மொழியில் எழுதப்படுவதனால் பிரயோசனமில்லை. பல தொழிலதிபர்கள் சித்திரவதையான மொழிநடையில் பல நூல்களை வடித்துள்ளார்கள். எந்த வாழ்க்கை வரலாறும் தேர்ந்த எழுத்தாளர்களால் எழுதப்பட வேண்டும். ஜெயமோகனுடன் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னார் குமாரமங்கலம் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் அவர் காங்கோவில் போர் செய்ததை ஒருவரி தகவலாகச் சொல்லிச் செல்கிறார் என்று.

இத்தகைய நூல்களை எழுதுவதற்கு சில அடிப்படைகள் உண்டு. மிகத் தீவிரமான ஆராய்ச்சி, எதையும் விரிவான வரலாற்றுப் பின்புலத்தில் நோக்கும் பார்வை, தளராத படைப்பூக்கம், நுட்பமானச் சித்தரிப்புகளுடன் பாயும் நடை, போலியான மிகையுணர்ச்சிகள், தேய்வழக்குகளைக் களைவது, நான் லீனியராக அலைவுறும் பாணியில் கதையை சொல்வது, உணர்ச்சித் தருணங்களை அடையாளம் கொண்டு போதிய அழுத்தத்தை உருவாக்குவது, கச்சிதமான வடிவம் வரும்வரை அயற்சியின்றி எடிட் செய்வது போன்றவை முக்கியமானது. இவற்றுக்குரிய பயிற்சி இல்லாதவர்கள் ஒரு எழுத்தாளரை அமர்த்திக்கொண்டு தங்கள் வரலாற்றை எழுதுவதே சரியானது.

ஜிடிநாயுடுவின் 'நான் கண்ட உலகம்' இன்று பிரபலமடைந்திருப்பதற்கு முக்கியமான காரணம் அதன் கோஸ்ட் ரைட்டரான திருலோகசீதாராம். இன்றும் நாட்டுக்கு உழைத்த நல்லவர்கள் சீரிஸ் நூல்கள் விற்பதற்குக் காரணம் யார் என்பதை 'அறம்' சிறுகதை வாசித்தவர்கள் உணர்வார்கள்.

வரலாறுகள், சுயசரிதைகள், நினைவோடைகள் எழுதுவதற்கு வரலாற்றிலேயே மிக உகந்த காலகட்டம் இதுதான். கிரிக்கெட் ஸ்கோர் போல சாவுச் செய்திகளைப் பார்த்துக்கொண்டிருப்பதற்குப் பதில், பிஸினஸ் என்னவாகும் என்கிற ஆரூடங்களை நாள் முழுக்க போனில் பேசிக்கொண்டிருப்பதற்குப் பதில் உங்கள் பேரன் பேத்திகள் வாசித்து அறிந்து கொள்ளும்படி குறைந்தபட்சம் குடும்ப வரலாறுகளையாவது எழுதி வையுங்கள்.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ் உரைநடையில் சாதனை படைத்தவர்கள் மறைமலையடிகள், திரு.வி.க., உ.வே.சா என்ற மூவராவர். தமிழில் முதன் முதலில் அறிவியல் நூல்களை எழுதியவர் மறைமலை அடிகளாகத்தானிருக்க வேண்டும். மணிக்கொடி என்ற பத்திரிகையால் சிறுகதை இலக்கியம் வளம் பெற்றுக் கொண்டிருக்கும் போது, நாவல்

இலக்கியம் படைத்தோர் புதிய சமுதாயத்தைப் படைப்பதில் ஈடுபட்டனர். தமிழ்த் திறனாய்வு நெறியிலே புதுமை படைத்தார் வையாபுரிப்பிள்ளை. உரையாசிரியர்களால், பண்டிதர்கள் மட்டுமே படித்துச் சுவைத்த தமிழ் இலக்கியம் எளிமை பெற்றது.

வெண்பாவும் விருத்தமும் மங்கிப் போகாத காலத்திலேயே புதுக்கவிதை தோற்றம் பெற்றது. புதுப்புது இலக்கியத் துறைகள் காலத்தின் தேவையொட்டி எழுந்தன. தமிழிசைக் சங்கத்தால் தமிழிசை ஏற்றம் பெற்றது. இலக்கணத் துறையில் உரிச்சொல் விளக்கம் என்ற நூல் முத்திரை பதித்தது. பார்சி மற்றும் மராட்டி நாடகக் குழுக்களின் தாக்கத்தால் படித்தவர்கள் சமுதாயத்தில் அந்தஸ்து உள்ள பெரியோரும் நாடக நடிகர்களாக நடிக்கும் அளவு நாடகத் துறை மலர்ச்சி பெற்றது. சிற்றிலக்கியத்தின் தோற்றம் இலக்கண நூலில் கூறப்பட்டது போலவே கடித, பயண, வாழ்க்கை வரலாற்று இலக்கியங்கள் தனிப் பிரிவாகக் கிளைத்தன. மொத்தத்தில் இருபதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் ஏற்றம் பெற்றது

தமிழிசை

இக்கால இலக்கியங்களில் தமிழிசை என்பது, பண்டைக்கால இலக்கியங்களில் தொடங்கி, இருபதாம் நூற்றாண்டில் புத்துயிர் பெற்று, நவீன இலக்கியங்கள் வரை தொடர்ந்து வளர்ந்துவரும் இசையைக் குறிக்கிறது. அகத்தியம் மற்றும் தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களில் தமிழிசைக்கான கோட்பாடுகள் செம்மைப்படுத்தப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்கள் தமிழிசையின் சிறப்பை வெளிப்படுத்துகின்றன, குறிப்பாக கம்பர் அவர்களின் படைப்புகளில் பல்வேறு பண்களும் இசைக் கருவிகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. இருபதாம் நூற்றாண்டில் தமிழிசை இயக்கம் உருவாகி, தமிழ் இசைப் பள்ளிகள் மற்றும் சங்கங்கள் தோன்றின, இதன் மூலம் இசைத்துறையில் தமிழிசை மீண்டும் வளர்ச்சி கண்டது.

பண்டைக்கால இலக்கியங்களில் தமிழிசை

தொல்காப்பியம்: இது தமிழிசை தொடர்பான மிகவும் பழமையான நூல். இது தொழிலிசை (பறை) மற்றும் இன்ப இசை (யாழ்) பற்றிக் குறிப்பிடுகிறது.

சங்க இலக்கியங்கள்: சங்க இலக்கியங்கள் தமிழிசையின் சிறப்பை விளக்குகின்றன. இசைக் கருவிகள், பண்கள், இசையின் பயன்பாடு போன்றவை பற்றிய குறிப்புகள் நிறைந்துள்ளன.

கம்பராமாயணம்: இது தமிழிசை பற்றிய குறிப்புகளுக்கு ஒரு சிறந்த உதாரணமாகும். இதில், பல்வேறு பண்களான காமரம், குறிஞ்சிப்பண், கொன்றைக் குழவி மற்றும் செவ்வழி ஆகியவை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

இடைக்காலம் மற்றும் பக்தி இலக்கியங்கள்

நாயன்மார்கள்: அப்பர், திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் போன்றோர் தமிழிசைக்கு புத்துயிர் அளித்தனர். தேவாரப் பாடல்கள் பண்முறையிலேயே பாடப்பட்டு வருகின்றன.

நவீன இலக்கியங்களில் தமிழிசை

இருபதாம் நூற்றாண்டு: இந்த காலகட்டத்தில், தமிழ் இசையின் பெருமையை உணர்த்தும் முயற்சி உருவானது. ஆபிரகாம் பண்டிதர், விபுலானந்தர் போன்றோர் தமிழிசை ஆய்வுகளை மேற்கொண்டனர்.

தமிழிசை இயக்கம்: அண்ணாமலை அரசர், ஆர்.கே. சண்முகம் ஆகியோரின் முயற்சியால் 1942-ல் தமிழிசை இயக்கம் தோன்றியது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழிசைக் கல்லூரியும், சென்னையில் தமிழிசைச் சங்கமும் உருவாக்கப்பட்டன.

இன்றைய இலக்கியங்கள்: இந்த இசை மரபு நவீன தமிழ்க் கவிதைகள், பாடல்கள், மற்றும் இசைக் கலையின் பல்வேறு வடிவங்களிலும் தொடர்கிறது.

தமிழ் இலக்கியங்களில் தமிழிசை

இசை எனப்படும் போது மெய்யது பனிப்ப உள்ளமது இனிக்க ஒரு வகையான பேருவகை மனத்தில் ஏற்படுகிறது. இவை மக்களின் வாழ்வியலில் உட்பட்ட ஒரு முக்கிய கூறாகும். இசைக்கலை நுண்கலைகளுள் ஒன்று. இந்திய கலாச்சாரம் நுண்கலைகளுக்குப் பெயர்பெற்றது. இசை பற்றி ஒவ்வொரு இலக்கியமும் அதன் தேவைக்குத் தக்கவாறு குறிப்பிட்டுள்ளது. அவற்றைத் திரட்டி முறைப்படுத்தினால், அக்கால இசைக்கலையைப் பற்றிச் சிறிது அறிய வாய்ப்பு கிடைக்கிறது. இசைக்கலை சிறப்புற்று இருப்பதற்கான பல்வேறு குறிப்புகள் தொல்காப்பியத்திலும், பிற இலக்கியங்களிலும் நிறைய இருக்கின்றன. காப்பியங்களில் ஒன்றான கம்பராமாயணத்தில்(12-ஆம் நூற்) இசைக்குறிப்புகளை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பண்ணிசை

பண்ணிசை கம்பர் காலத்தில் வளமான முறையில் அமைந்திருந்தது என்பதை கம்பராமாயணம் குறிப்பாக உணர்த்துகின்றது. பாடும் பெண்களின் சிறப்புகளை எடுத்துக்காட்ட விரும்பும் கம்பர்,

“பண்கள் வாய் மிளற்றும் இன்சொல் கடைசியர்” (க.ரா.41)

என்று குறிப்பிடுகின்றார். பண்களைப் பாடுவது மனிதச் சிறப்புடையது என்பது இதனால் அறியத்தகும் கருத்து. பொருநர்களின் பாடல்களிலும் பண்ணின் தன்மைகள் சிறந்து காணப்பட்டதாகக் கம்பராமாயணம் உரைகிறது.

“பண்ணிமை யடைத்தபல கள்பொருநர் பாடல்”(க.ரா.4996)”

கள் அருந்தியுள்ள பொருநர் பண்ணிசை சிறக்கப் பாடியதினால் பலருடைய கண்ணிமைகள் மயக்கத்தால் மூடின. பண்ணிசையின் இனிமை மயக்கம் ஊட்டுவது இங்கு குறிப்பிடப்படுகிறது.

இசையுணரும் அசுணம்

ஊயிரினங்கள் இசைக்குக் கட்டுப்பட்டுத் தங்கள் இயல்பான உணர்வுகளை மறந்து அதில் ஈடுபடுவதாக இலக்கியப் புலவர்கள் கூறியுள்ளனர். கம்பராமாயணம் தன்னுடைய பாயிரவுரையிலேயே அசுணத்தைப் பற்றிய குறிப்பைத் தருகிறது.

“துறையடுத்த விருத்தத் தொகைக் கலிக்

குறையடுத்த செவிகளுக் கோதில்யாழ்

நறையடுத்த அசுண நன் மாச்செவிப்

பறையடுத்தது போலுமென் பாவரோ”(க.ரா.7)

கம்பர் அவையடக்கமாக இப்பாடலை பாடுவதில் அசுண நன்மானின் இசைநுகர் உணர்வைச் சுட்டுகிறார். இந்த உயிரினம் இனிய யாழின் இசையை மகிழ்வுடன் சுவைப்பதும், கடுமையான பறை முழக்கை வெறுத்து ஒதுக்குவதும் இப்பாடலில் அறியத்தக்க இசைத்தொடர்புடைய கருத்தாகும்.

கம்பரமாயணத்தில் உள்ள பண்கள்

1.காமரம்: இது காதற்சுவையுடைய பண். வண்டுகள் தேனுண்டு காமங்கொண்டு பாடும் பண் இது.

“காமரம் கனிந்ததெனக் கனிந்த மென்மொழி”(கா.1892)

“காமரம் கனிவண்டு”(கா.5563)

“காமரம் முரலும் பாடல்களெனக் கனிந்த இன்சொல்”(கா.3232)

2.குறிஞ்சிப்பண்: இந்த பெரும்பண் மலை நிலமாகிய குறிஞ்சிக்குரியது. படுமலைப்பாலை எனப்படுவது. துத்தம் குரலாயது நடபைரவி. மலை நாட்டுக்குறவர், கொடிச்சியர் விரும்பிப் பாடுவது,

“கொடிச்சியர் எடுத்த இன்குறிஞ்சி கனிந்த பாடல் கேட்டு”(கா.2158)

3. கொன்றைக் குழவி: இது திறப்பண் ஐந்து நரம்புடையது. மூங்கில் குழலில் (வேய்ங்குழலில்) கொன்றை என்னும் பண்ணை ஆடு மேய்த்திடும் கோவலலர்கள் ஊதினார்கள் என்று கூறியுள்ளது ஏற்றற்குரியது.

“கொன்றை வேய்ங்குழற் கோவலர்”(கா.65)

4. செவ்வழி: இது கடல் சார்ந்த நெய்தல் நிலத்திற்குரியது. மென்சுரங்களால் ஆனது. எனவே காலை நேரத்திற்கும் உரியது. இருமத்திமங்கள் கொண்ட தோடி.

“தும்பி காலைச் செவ்வழி முரல்வ”(கா.45)

5. தாரப்பண்: தாரம் குரலாய பண்ணைத் தாரப்பண் என்று கூறுவது மரபு.

“ஈளி தாரம் இயம்பிய வண்டுகள்”(கா.7150)

6.பஞ்சமம்: இது கோடிப்பாலை. இளி பஞ்சமமான இளி குரலாகப் பிறப்பது என்பதன் இக்கால அராகம் கரகரப்பிரியா.

“பஞ்சமம் சிலனும் இன்னிசை பாட”(கா.6999)

7. பாலையாழ்: இது செம்பாலை என்னும் பெரும்பண். இது ஏழ்பெரும் பாலை வரிசையுள் தலைமைப் பண்(தாய்பண்).

“பாலையாழ் யாழ் பழித்த சொல்”(கா.32558)

8. யாம யாழ்: இது குறிஞ்சி நிலத்திற்குரிய பெருபண்ணாகிய படுமலைப் பாலை - நடபைரவி நள்ளிவிற்குறியது. காம சுவையுடையது.

“யாம யாழ் மழலை யாழ்”கா.4568)

9. விளரி: நான்கு வகை நிலங்களுள் நெய்தல் நிலத்திற்குரியது விளரிப் பெரும்பண். இது இன்றைய தோடி என்றுரைகலாம் இது இரங்கற் பண்.

“விளரி நிரம்ப பாடலொடு ஆடினர் வீதிகள் நெருங்க”(கா.487)

தாளவிசைக் கருவிகள்

கம்பராமாயணத்தில் 23 தாளவிசைக் கருவிகள் கூட்டமான இசைக்கப்படுவதை ஒரு பாடல் சுருக்கமாகப் பெயர்களைத் தந்து குறிப்பிட்டுக் காட்டுகிறத

“கும்பிகை திமிலை செண்டை

குறடுமாம் பேரி கொட்டி

பம்பை தார் முரசும் சங்கம்

பாண்டில் போர்ப்பணவம் தூரி

கம்பலி உறுமை தக்கை

கரடிகை துடிவேய் கண்டை

அம்பலி 'கனுவை' ஊமை

சகடையோ டார்த்த லன்றே" (க.ரா.8445)

அப்பாடலில் இருபத்தி மூன்று தாளவிசைக் கருவிகள் பெயருடன் தரப்படுகின்றன. செண்டை இப்பொழுது கேரளாவில் புகழுடன் விளங்குகிறது. தார், முரசு என்பன இரு வேறு கருவிகள். உறுமை என்பது இப்பொழுது உறும் என்று கூறப்படுகிறது. பலவகையான தாளவிசைக் கருவிகள் கம்பர் காலத்தில் தமிழ் மக்களிடம் வழக்கத்தில் இருந்துள்ளதை நன்கு அறியலாம்.

யாழ்

பண்ணிசை கருவிகளில் யாழுக்கு முக்கிய இடம் கொடுக்கப்படுகின்றது. கம்பர் காலத்தில் யாழ் புழக்கத்தில் இருந்துள்ளது. கம்பர் மகரயாழைக் குறிப்பிட்டுள்ளார்.

"இறங்குவ மகரயாழ் எடுத்த இன்னிசை

நிறங்கிளர் பாடலான் நிமிர்வ"(க.ரா.146)

மகரயாழின் இசை மிடற்றிசையோடு இணைந்து இனிமையாக இசைக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளன.

"யாழ்க்கும் இன்குழற்கும் இன்பம்

அளித்தன இவையாம் என்னக்

கேட்குமென் மழலைச் சொல்லை

கிஞ்சுகம் கிடந்த வாயாள்" (க.ரா.1059)

என்ற வரிகளிலிருந்து, மழலையின் சொல்லுடன் யாழிசை உவமை யாக்கப்பட்டுள்ளதை அறியலாம். அக்காலகட்டத்தில் யாழிசை எங்கும் பரந்து மலிந்து காணப்பட்டிருந்தது என்பதை, "மழலை யாழ் இசையோடு மலிந்தவே" (க.ரா.1113) என்ற வரிகள் மூலம் அறியலாம்.

பேரிகை

"காரிகைப் படித்து கலி பாடுவதை விட, பேரிகை கொட்டி பிழைக்கலாம்" என்ற பழமொழி மூலம், பேரிகை கொட்டப்படும் கருவி என்பது விளங்கும், இதனைப்பற்றி கம்பர்,

"ஆர்த்தன பேரிகை"(க.ரா.1252)

"பேரி கலித்தன"(க.ரா.8326)

"பேரி கொட்டி"(க.ரா.8445)

என்று உரைப்பதில் பேரிகை ஒரு தாளவிசைக் கருவி என்பது தெரிகிறது.

வீணை, குழல், சங்கு, வயிர், கொம்பு, தண்ணும்மை, பறை, பம்பை, பாண்டில் போன்ற இசைக்கருவிகளின் குறிப்புகள் காணக்கிடக்கின்றன.

புதுவை மாவட்ட முனைவர் இரா.திருமுருகன் அவர்களால் எழுதப்பட்ட "கம்பன் பாடிய வண்ணங்கள்" எனும் நூலில் கம்பன் பாடல்களுக்குச் சந்த வாய்பாடுகள் தந்து விளக்கியிருப்பது தனிப் பெருஞ் சிறப்பாகும்.

பண்டைத் தமிழருடைய வாழ்க்கையின் ஒரு கூறாகவே இசைத்தமிழ் இலங்கியதோடு, தம் செவிக்கு இன்பம் தரும் ஒலிப்பரப்பினைக் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனும் எழுவகைப் பண்களாகப் பாகுபடுத்தி, ஐவகை நிலத்திற்குரிய பண்களை வளர்த்துப் போற்றினர். கம்பராமாயண காப்பியம் எழுதப்பட்ட காலத்தில் இசைக்கு இருந்த பெருமை, சிறப்பு, இசையின் அமைப்பு முறைகளையும் கம்பராமாயணம் ஓரளவு தெரிவிக்கிறது. பக்தி இயக்க காலம் முதல் 20-ஆம் நூற்றாண்டு வரை இசைத்தமிழ் தெய்வீக மணம் கமழ்வதாகவே இருந்து, இன்று 'இசை இன்பம் பயப்பது' எனும் நோக்கில் சமய சார்பற்ற நிலையினை அடைந்து வருகிறது.

தமிழிசையின் தொன்மை

பழந்தமிழ் மக்கள் வேறு இன மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்வதற்கு முன்பே இசையும் அதோடு இணைந்த கூத்தும் உருவாகி வளரத் தொடங்கின. இசை, கூத்து ஆகியவற்றின் கலை நுட்பங்களை விளக்கும் இலக்கணத் தமிழ் நூல்கள் எழுந்தன.

இந்நூல்கள் எழுதப்பட்ட காலம் முச்சங்க காலம் என அறியப்படுகிறது. இம்முச்சங்க காலம் இற்றைக்கு ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. எனவே தமிழர் இசையும் கூத்தும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே செவ்விய கலைகளாக (உடயளளஉையட யசவள) விளங்கின என உறுதியாகக் கொள்ளலாம்.

மேற்கண்ட கருத்தை மேலும் தெளிவுபடுத்திக் கொள்ள முச்சங்க காலத்தில் இசைக்கும் கூத்துக்கும் இலக்கணம் எழுதிய தமிழ் நூல்கள் யாவை என்று தெரிந்து கொள்வோமா?

பழந்தமிழ் இசை இலக்கண நூல்கள்

இசையும் கூத்தும் ஒன்றோடொன்று இணைந்த கலைகள். கூத்து என்பதைப் பழந்தமிழ் மக்கள் நாடகம் என்றும் அழைத்தனர். நாட்டியம், ஆடல் என்ற சொற்களும் கூத்துக் கலையைக் குறிக்கும். முச்சங்க காலத்தில் இசைக்கு இலக்கண நூல்கள் எழுதப்பட்டன. கூத்துக்கும் இலக்கணம் எழுதப்பட்டது. எனவே இரு கலைகளை இணைத்தும் இலக்கண நூல்கள் எழுதப்பட்டன.

கால ஓட்டத்தில் பல நூல்கள் அழிந்துபோயின. எஞ்சிய நூல்கள் பற்றி இடைக்கால உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.அந்நூல்கள் பற்றித் தெரிந்து கொள்வோமா? அகத்தியம்இது அகத்திய முனிவரால் எழுதப்பட்டது. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழுக்கும் இந்நூல் இலக்கணம் கூறும்.

இசை நுணுக்கம்

சிகண்டி என்னும் முனிவரால் எழுதப்பட்டது. இது ஓர் இசைத் தமிழ்நூல்.

இந்திர காளியம்

யாமளேந்திரர் என்பவரால் எழுதப்பட்டது. பஞ்சபாரதீயம்தேவவிருடி நாரதன் எழுதிய நூல். பஞ்சமரபுஅறிவனார் என்பவர் இந்நூலின் ஆசிரியராவார். பழந்தமிழர் இசை நாடக இலக்கண நூலிது. இசை மரபு, வாக்கிய மரபு, நிருத்த மரபு, விநய மரபு, தாளமரபு என்னும் ஐந்து மரபுகள் பற்றிய நூலிது.

பெருங்குருகு இந்நூல் முதுகுருகு என்றும் சொல்லப்படும்- பெருநாரை

இந்நூல் முதுநாரை என்றும் சொல்லப்படும் - ஓர் இசைநூலே.

தாளவகை யோத்து

தாள இலக்கணம் கூறும் பழந்தமிழ் நூல். இசை, கூத்து ஆகிய இரண்டிற்கும் அவசியம் தேவைப்படுவது தாளம். இசையையும் கூத்தையும் ஓர் ஒழுங்கு அல்லது கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வருவது 'தாளம்' அல்லவா?

காலம் அழித்த மூலநூல்கள்

இதுவரை சொன்ன பழந்தமிழ் இசை இலக்கண நூல்கள் எல்லாமே காலத்தால் அழிந்துவிட்டன. இது தமிழுக்கு ஒரு பெரிய இழப்பு.

தொல்காப்பியத்தில் இசைக் கூறுகள்

பழந்தமிழ் இலக்கண நூல்களுள் முழுமையாகக் கிடைக்கும் நூல் தொல்காப்பியம். இது தொல்காப்பியர் என்பவரால் எழுதப்பட்டது. எழுத்து, சொல், பொருள் என்ற தமிழ் இலக்கணம் கூறும் நூல் இது. இசைத்தமிழ், தொடர்பான செய்திகளை இந்நூலில் ஆங்காங்குக் காணலாம். எடுத்துக்காட்டாகப் பொருளதிகாரம் அகத்திணையியல் 18 ஆம் சூத்திரம் தமிழக வாழ்க்கை நெறியின் அடிப்படைப் பண்பாட்டுக் கருவூலங்களைக் குறிப்பிடுகிறது. அந்தச் சூத்திரம் வருமாறு :

இங்கு தெய்வம், உணா, மா, மரம், புள், பறை, யாழ் ஆகிய பொருள்கள் சொல்லப்பட்டுள்ளன. இந்த ஏழும் தமிழர் பண்பாட்டுக் கருப்பொருள்கள்.

ஏழு கருப்பொருளில் ஒன்று யாழ். மற்றொன்று பறை.

யாழ்

தொல்காப்பியம் கூறும் 'யாழ்' என்னும் சொல் பழந்தமிழர் வகுத்த பண்ணிசையைக் குறிக்கும். இது மிடற்றிசை (குரலிசை), நரம்புக் கருவியிசை (யாழ் என்னும் தந்திக் கருவி இசை) காற்றுக் கருவியிசை (குழல் கருவியிசை)ஆகியவற்றின் முறைகளும் மரபுகளும் பற்றியதாகும்.

பறை

தொல்காப்பியர் கூறும் "பறை" என்னும் சொல் தாளம் பற்றியதாகும். அதாவது தாளத்தைக் கொட்டிக் கொடுக்கும் பல்வேறு தாளக்கருவிகளின் (நசஉரளளழைஎ ளைவசரஅநவெள) முறைகளும் மரபுகளும் பற்றியதாகும்.

தொல்காப்பியர் காலம் கி.மு. 3 ஆம் நூற்றாண்டளவினது என்பது அறிஞர்கள் கருத்து. இந்நூலின் காலக் கணிப்பு தமிழர் இசையின் தொன்மையை உறுதிப்படுத்துகிறது அல்லவா?

ஐந்துதிணைப் பண்கள், அதற்குரிய காலம்

பழந்தமிழக மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்க்கை நடத்தினர். தாம் வாழ்ந்த நிலத்தை ஐந்தென வகுத்துக் கொண்டனர். மலையும் மலைசார்ந்த இடமும் "குறிஞ்சி" என்றனர். காடும் காடு சார்ந்த இடமும் "முல்லை" என்றனர். வயலும் வயல் சார்ந்த இடமும் "மருதம்" என்றனர். கடலும் கடல் சார்ந்த இடமும் கடலோரப் பகுதியும் "நெய்தல்" என்றனர். குறிஞ்சியும் முல்லையும் தன் இயல்பில் திரிந்து பாலை என்னும் வடிவம் கொள்ளும். (குறைவான வளம் கொண்ட நிலப் பகுதியைப் "பாலை" என்றனர்).

நிலத்தை ஐந்தாக வகுத்துக் கொண்ட தமிழர் அந்தந்த நிலத்துக்குரிய இசையை உருவாக்கினர். அந்தந்த நிலத்திற்குரிய பண்களைக் கீழ்க்கண்டவாறு வகுத்துக் கொண்டனர்.

குறிஞ்சி நிலத்திற்குரியது குறிஞ்சிப் பண்.

முல்லை நிலத்திற்குரியது முல்லைப் பண்.

மருத நிலத்திற்குரியது மருதப் பண்.

நெய்தல் நிலத்திற்குரியது செவ்வழிப் பண்.

பாலை நிலத்திற்குரியது பாலைப் பண்.

இசைக்கருவிகளும் அவற்றுக்கான பொழுதும்

”பண்” பாடிய தமிழர் அவ்வந் நிலத்தில் இசைத்த யாழ், முழக்கிய பறை, தொழுத தெய்வம் ஆகியவற்றையும் வகுத்துக் கொண்டனர். பண் இசைப்பதற்குரிய சிறுபொழுதையும் வரையறை செய்தனர்.

தமிழிசை வளர்ச்சி

தமிழ் இசை வளர்ச்சிக்கென ஆய்வு மேற்கொள்ளப்பட்ட நிலைகளைப் பற்றியும், இசைத் தமிழ் ஆய்விற்கு மூல இலக்கியமாகச் சிலப்பதிகாரமும், இந்நூலுக்கு எழுந்த உரைநூற்களான அரும்பத உரையும், அடியார்க்கு நல்லார் உரையும் பயன்பட்ட நிலை பற்றியும் இந்தப் பாடம் குறிப்பிடுகின்றது. சிலப்பதிகாரம் உரையுடன் வெளியிடப்பட்ட பின்பு, தஞ்சாவூர் மு.ஆபிரகாம் பண்டிதர், யாழ் நூலாசிரியர் விபுலானந்த அடிகளார், மதுரை பொன்னுச்சாமி பிள்ளை போன்றோர் இசைத் தமிழ் ஆய்வில் ஈடுபட்டனர். இவர்கள் மேற்கொண்ட இசைத் தமிழ் ஆய்வினை உணர வைக்கிறது.

மேலும் குடந்தை ப.சுந்தரேசன், கு.கோதண்டபாணி, வெள்ளை வாரணனார், பேராசிரியர். வீ.ப.கா.சுந்தரம், பேராசிரியர் தனபாண்டியன் போன்றோர் இவ்வகை ஆய்வினை மேற்கொண்ட நிலைகளை எடுத்துரைக்கின்றது. இசைக்கலைக்கு அடிப்படையாக அமையும் இசைக் கலைஞர்கள் பற்றி எடுத்துரைக்கின்றது.

மிடற்றிசை, கருவி இசைக் கலைஞர்களுள் ஆண்பால், பெண்பால் கலைஞர்களின் கலைச் சிறப்பை உணர வைக்கிறது.

வாய் மொழி இலக்கியம்

வாய்மொழி இலக்கியம் என்பது ஏட்டில் எழுதப்படாமல், தலைமுறைகள் தாண்டி வாய்வழியாகப் பரவும் இலக்கிய வடிவமாகும். இது பாடல்கள், பழமொழிகள், நாட்டுப்புறக் கதைகள் மற்றும் விடுகதைகள் போன்ற வடிவங்களில் உள்ளது. இதன் ஆசிரியர் யார் என்று அறிய முடியாது, ஏனெனில் இது வாய்வழியாகவே பரவி வருகிறது.

முக்கிய பண்புகள்

எழுத்து வடிவம் இல்லாதது: இது எழுதப்படாத இலக்கியமாகும், எனவே ஆசிரியர் யார் என்று குறிப்பிட முடியாது.

வாய்வழிப் பரவல்: இது ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு வாய்வழியாகவே கடத்தப்படுகிறது.

பல்வேறு வடிவங்கள்: இது நாடோடிப் பாடல்கள், கிராமியப் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், புராணங்கள், காவியங்கள் மற்றும் நாட்டுப்புறக் கதைகள் என பல வடிவங்களில் காணப்படுகிறது.

மாறும் தன்மை: எழுதப்பட்ட இலக்கியங்களைப் போலன்றி, வாய்மொழி இலக்கியம் சில சமயங்களில் காலத்திற்கு ஏற்ப மாறக்கூடியது, மேலும் இது ஒரு குறிப்பிட்ட நிலையான வடிவம் இல்லாமல் இருக்கும்.

எடுத்துக்காட்டுகள்

தாலாட்டுப் பாடல்கள்: உலகின் முதல் இலக்கியமாக “தாலாட்டுப் பாடல்“ கருதப்படுகிறது, இது மனிதகுலம் தோன்றியதிலிருந்தே வாய்வழியாகப் பரவி வருகிறது.

பழமொழிகள்: “ஆனைக்கும் அடி சறுக்கும்“, “அறிவே ஆற்றல்“ போன்ற பழமொழிகள் வாய்மொழி இலக்கியத்தின் முக்கிய அங்கங்களாகும்.

காவியங்கள் மற்றும் புராணங்கள்: சில காவியங்களும், புராணங்களும் வாய்வழியாகவே பரவி பின்னர் எழுதப்பட்டிருக்கலாம்.

நாட்டுப்புறக் கதைகள்: இவை பல தலைமுறைகளாக வாய்வழியாகவே சொல்லப்பட்டு வந்துள்ளன.

பணிப் பாடல்கள்: கிராமப்புறங்களில் வேலை செய்யும் போது பாடப்படும் பாடல்கள்.

புதிர்கள்: “விளக்கு இல்லாத வீட்டிற்கு ஒரு ஓலைச் சுருள் கதவு“ போன்ற புதிர்கள்.

முக்கியத்துவம்

கலாச்சாரப் பாதுகாப்பு: இது ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் கலாச்சாரத்தையும் பாரம்பரியத்தையும் பாதுகாக்கிறது.

தகவல் தொடர்பு: இது தகவல் பரிமாற்றத்திற்கும், சமூக நம்பிக்கைகள் மற்றும் அறிவைப் பரப்பவும் உதவுகிறது.

பண்பாட்டு வரலாறு: இது ஒரு சமூகத்தின் பண்பாட்டு வரலாற்றைப் புரிந்துகொள்ள உதவுகிறது.

வாய் மொழி இலக்கியம் என்பது ஏட்டில் எழுதப்படாமல் வழி வழியாக ஒரு நாட்டில், ஒரு குறிப்பிட்ட பகுதியில்,நகர்ப்புறங்களில்,கிராமப்புறங்களில் பின்பற்றப்படும் இலக்கிய வகை. இது எழுதப்படாத இலக்கியம் என்பதால் இதன் ஆசிரியர் எவர் என குறிப்பிட்டுக் கூற முடியாது.

வாய்மொழி இலக்கிய வகைப்பாடு

பாமரர் பாடல்கள், காற்றிலே மிதந்த கவிதை, ஏட்டில் எழுதாக் கவிதை, நாடோடி பாடல்கள், வாய்மொழிப்பாடல்கள், வாய்மொழி இலக்கியம், கிராமியப்பாடல்கள், கிராமிய இலக்கியம், ஊரகப் பாடல்கள், நாட்டுப்புறப்பாடல்கள், நாடோடி இலக்கியம்,

வாய்மொழி இலக்கியப்பிரிவுகள்

கதை சார்ந்த கதையாடல்கள், கதைப்பாடல்கள்,தேவதைக் கதைகள்,புராணக் கதைகள், சிறுவர்கள் சார்ந்த குழந்தைப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், ஒலிநயப் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், தொழில் சார்ந்த ஏற்றப் பாடல்கள், விதைப்புப் பாடல்கள், நடவுப் பாடல்கள், அறுவடைப் பாட்டுகள், பொலிப் பாட்டுகள், நெல்குத்தும் பாடல்கள், சுண்ணம் இடிப்போர் பாடல்கள், அம்பாப் பாடல்கள், பூப்புப் பாடல்கள், திருமண எள்ளல் பாடல்கள், தெம்மாங்குப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள், மாரடிப் பாடல்கள், கும்மிப் பாடல்கள், உடுக்கடிப் பாடல்கள், வில்லுப் பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், நாப்புரட்டுகள், வாழ்த்துகள், வசவுகள்

வாய்மொழி இலக்கியம்

தொடக்க நிலையில் மனிதனால் படைக்கப்பட்ட இலக்கியங்கள் ஓலைச் சுவடியில் பதிவு பெறுவதற்கு முன்பு வாய்மொழியாக ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் தான் பதிவு செய்யப்பட்டன. பின்னர் மனிதனின் அறிவியல் கண்டுபிடிப்பான அச்சு இயந்திரத்தால் இத்தகு வாய்மொழி இலக்கியங்கள் எழுத்து இலக்கியங்களாகப் பதிவாயின. எனவே இலக்கியத்தின் தோற்றம் வாய்மொழியினதாக விளங்கியது. அதன் வளர்ச்சி நிலை எழுத்து இலக்கியமாக நிலைப்பாட்டினைப் பெற்றது என்று கூற இயலும். வாய்மொழி இலக்கியங்களுக்கும் எழுத்து இலக்கியங்களுக்கும் இடையே கருத்து, கற்பனை, எதுகை, மோனை, உவமை, உருவகம்,

அந்தாதி என்று யாப்புக் கூறுகளில் ஒற்றுமைகள் உண்டு. ஆனால் வாய்மொழி இலக்கியத்திற்கு ஒரு குறிப்பிட்ட படைப்பாளன் இல்லை.

மரபு ரீதியாகப் பாரம்பரியமாகப் பயிற்றுவிக்கப்பட்டு, பழக்கத்தினால் நிலைப்பாட்டினைப் பெறுவது. எழுத்திலக்கியமோ படைப்பாளனின் பெயரோடு இலக்கணக் கட்டமைப்புக்கு உட்பட்டு எழுதிப் பாதுகாக்கப்படுவது. படித்த - கண்ணுக்குத் தெரியாத வாசகர்கள் பொருட்டு, செந்நெறி வாழ்வுக்காகப் படைக்கப்படுவது எழுத்திலக்கியத்தில் நாட்டுப்புறக் கூறுகளின் தாக்கம் இடம் பெறுவதுண்டு.

எழுத்திலக்கியம்

காலந்தோறும் இலக்கியங்கள் தோன்றியுள்ளன. இவை அந்நாளில் படித்த சிலரால் ஓலை முதலியவற்றில் எழுதப்பட்டன. அச்சுக் கலையின் வருகைக்குப் பின்பு மிகுதியாகப் பதிவு செய்யப்பட்டு எழுத்திலக்கியங்களாயின. இதில் நாட்டுப்புறக் கூறுகளான வாய்மொழி இலக்கியப் பண்புகள் காணப்படுகின்றன. வாய்மொழி இலக்கியம் பேச்சு நடையில் அமைவது, இப்பண்பு எழுத்திலக்கியத்தில் காணப்படுகிறது.

- ஒரே சொல்லாட்சியினைத் திரும்பத் திரும்பக் கூறுவதைச் சங்கப் பாடல்களில் காணமுடியும்.

- ஒரு கருத்தை மூன்றுமுறை அடுக்கிக் கூறும் தாழிசை எனப்படும் யாப்பின் கூறு சங்கப்பாடல்களிலும், சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்களிலும் உண்டு.

- மக்கள் வாழ்வில் பயின்று வந்த கண்ணகி - கோவலன் கதையே சிலப்பதிகாரம்.

ஊடகத்தமிழ்

ஊடகத்தமிழ் என்பது ஊடகங்கள் பயன்படுத்தும் தனித்துவமான தமிழ் மொழியைக் குறிக்கிறது. இது உரைநடை, நாடகத்தமிழ் போன்ற மற்ற தமிழ் நடைகளைப் போலவே, ஊடகத் துறையில் தகவல்களைத் தொடர்புபடுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு சிறப்பு நடையாகும். இதழியல், விளம்பரம் மற்றும் பிற ஊடக வடிவங்களில் இதன் பயன்பாடு அதிகரித்து வருகிறது. பல பல்கலைக்கழகங்களில் இது ஒரு பாடமாகவும் கற்பிக்கப்படுகிறது.

ஊடகங்களில் மொழி: ஊடகங்களில் மொழிப் பயன்பாட்டின் ஒரு பகுதியாக ஊடகத்தமிழ் உருவாகியுள்ளது.

பயன்பாடுகள்: இது விளம்பரங்கள், செய்தித்தாள்கள், வானொலி, தொலைக்காட்சி மற்றும் இணையம் போன்ற பல்வேறு ஊடகங்களில் பயன்படுத்தப்படுகிறது.

கல்வி: ஊடகத்தமிழ் ஒரு பாடப்பிரிவாக பல்வேறு கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கற்பிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, சில பல்கலைக்கழகங்களின் முதுகலை தமிழ் பாடத்திட்டத்தில் ஊடகத்தமிழ் ஒரு விருப்பப் பாடமாக உள்ளது.

நோக்கம்: ஊடகத்துறையில் மாணவர்கள் அழகு தமிழில் பேசுவதற்கும், எழுதுவதற்கும் ஊக்கமளிப்பது இதன் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

ஊடகம் என்றால் தகவல்தொடர்பில், ஊடகம் (ஊடகங்கள்) என்பது தகவல்களைச் சேமித்து வழங்கப் பயன்படுத்தப்படும் கருவிகளாக உதவுகின்றன. இது பெரும்பாலும், மக்கள் ஊடகம் அல்லது செய்தி ஊடகம் என்றும் குறிப்பிடப்படும். மாறாக ஒருமையில் ஊடகம் எனக் குறிப்பிடப்படுகிறது.

ஊடகத்தின் வகைகள்

செய்தித்தாள்கள், இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி, சமூக வலைத்தளங்கள் போன்ற ஊடகங்கள் இவற்றுள் அடங்கும்.

ஊடகவியல் விசாரித்து பலருக்கு தெரிவிப்பது தினப்பதிவியம், நாட்பதிவியம், ஊடகவியல் அல்லது இதழியல் (தழரசயெடளைஅ) என்பது அன்றாட நிகழ்வுகள், உண்மைகள், எண்ணங்கள், நபர்கள் ஆகியவற்றுடனான இடைவினைகளைக் குறைந்தபட்சம் ஓரளவுக்கு சமூகத்திற்கு தெரிவிக்கும் அறிக்கைகளின் தயாரிப்பு, மற்றும் பகிர்வு ஆகும்.

செய்தித்தாள்கள், இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி, சமூக வலைத்தளங்கள் போன்ற ஊடகங்கள் இவற்றுள் அடங்கும். இதழியல் என்பது செய்திகளை அல்லது செய்திக் கட்டுரைகளை சேகரித்தல், எழுதுதல், தொகுத்தல், வெளியிடுதல் என்பவற்றை உள்ளடக்கிய ஒரு பணி ஆகும். முன்னர் இத்துறை அச்சு ஊடகங்களான செய்தித்தாள்கள், சஞ்சிகைகள் முதலியவற்றில் செய்திகளைச் சேகரித்து வெளியிடுவதை மட்டுமே செய்து வந்தது. 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து மின்னணு ஊடகங்களையும் இது தனக்குள் உள்ளடக்கியது. எழுத்தாளர் அல்லது ஊடகவியலாளர் மக்களோடு தொடர்புள்ள நிகழ்வுகளையும், எண்ணங்களையும், பிரச்சினைகளையும் விளக்குவதற்கு உண்மையாக தகவல்களை வெளியிட வேண்டும் என்பதே ஊடக நெறியாக இருக்க வேண்டும், என எதிர்பார்க்கப்படுகிறது.

ஊடகவியலாளர் தகவல்களைத் திரட்டி வெளியிடுவதனால் உள்ளூர், மாநில, தேசிய என அனைத்து தரப்பு செய்திகளையும் உடனுக்குடன் மக்கள் அறிந்து கொள்ள முடிகிறது. ஊடகவியல் அரசு, பொதுத்துறை அலுவலர்கள், நிறுவன நிறைவேற்று அதிகாரிகள், தொண்டு நிறுவனங்கள், ஊடகவியல் நிறுவனங்கள், சமூக அதிகாரங்களைக் கொண்டிருப்போர் போன்றோரின் நடவடிக்கைகள் பற்றி அறிவிப்பதுடன் நடப்பு நிகழ்வுகள் குறித்த தமது கருத்துக்களையும் வெளியிடுவதுண்டு.

தற்காலத்தில் நிருபர்கள் தமது தகவல்களையோ அவை தொடர்பான கட்டுரைகளையோ மின்னணுத் தகவல் தொடர்புகள் மூலம் தொலை தூரங்களில் இருந்தே அனுப்புகிறார்கள். புதிய செய்திகள் உருவாகும்போது நிகழிடத்துக்குச் செல்லும் நிருபர்கள் தகவல்களை சேகரித்து உடனுக்குடன் ஊடக அலுவலகத்துக்கு அனுப்புவர். இவற்றை அடிப்படையாகக் கொண்டு செய்திகள் எழுதப்பட்டு வெளியிடப்படுகின்றன.

வானொலி தொலைக்காட்சி நிருபர்கள் களத்திலிருந்தபடியே நேரடியாகத் தகவல்களைத் தருவதும் உண்டு. மேலும், 21ம் நூற்றாண்டில் துவக்கப்பட்ட தொலைக்காட்சி ஊடகங்கள், நிகழ்வு நடைபெற்ற இடம் அல்லது செய்தி நடைபெறும் இடத்திற்கே சென்று, களத்தில் இருந்து நிருபர்கள் மூலமாக தகவலை உடனுக்குடன் மக்கள் பெறும் வகையில் செயல்படுகின்றன. தற்போதுள்ள தொழில்நுடப் வளர்ச்சியின் காரணமாக, இணைய இதழியல், குறுஞ்செயலி வழியாக செய்திகளை உடனுக்குடன் பகிர்வது, என செய்தி துறை மற்றும் இதழியல் துறை வளர்ந்து கொண்டே செல்கின்றது.

சொல் விளக்கம்

ஆங்கிலச் சொல்லான தழரசயெடளைஅ என்ற சொல்லின் மூலம் னரைசயெட என்ற பழைய இலத்தீன் மொழிச் சொல்லில் இருந்து பிறந்தது. இலத்தீன் மொழியில் இதற்கு “அன்று” என்று பொருள். “தழரசயெட” என்றால் “அன்றாடம் நடந்ததை எழுதி வைக்கும் ஏடு” என்று பொருள். இப்போது இது என்பது “இதழ்கள்” என்பதை மட்டும் குறிக்கும் சொல்லாகிவிட்டது. இதழ் என்பது “பத்திரிகை”, “செய்தித்தாள்”, “தாளிகை” என்றும் குறிப்பிடப்படுகிறது. இதழ்களுக்கும், குறிப்பாக செய்தித்தாள்களுக்கும் எழுதும் தொழிலைத்தான் முதலில் “இதழியல்” என்ற சொல் குறித்தது. ஆனால் தற்போது அதனுடைய பொருளும், பரப்பும் விரிவடைந்து செய்திகளையும் கருத்துக்களையும் பரப்புகின்ற மக்கள் தொடர்பு நிறுவனமாக மாறிவிட்டது.

அகராதி விளக்கம்

வெப்ஸ்டரின் மூன்றாவது பன்னாட்டு அகராதியில், "வெளியிடுவதற்காகவோ, பதிப்பிப்பதற்காகவோ, ஒலிபரப்புவதற்காகவோ நடைமுறை ஈடுபாடுள்ள விவரங்களைத் தொகுப்பதும், எழுதுவதும், செப்பனிடுவதும் "இதழியல்" என்ற விளக்கமுள்ளது.

சேம்பரின் இருபதாம் நூற்றாண்டு அகராதி, "பொது இதழ்களுக்கு எழுதுதல், அவற்றை நடத்துதல் ஆகிய தொழிலே இதழியல்" என்று கூறுகிறது.

அறிஞர்கள் கருத்து

ஹரால்டு பெஞ்சமின் எனும் அமெரிக்க இதழியல் பேராசிரியர், "பொது நோக்கமுடைய இதழியல் துறை ஓர் ஆற்றல் மிக்க கருவியாகும். அதன் மூலம்தான் இன்றைய சமுதாயம் அதனுடைய வழிகளை வகுத்துக் கொண்டும் மாற்றிக் கொண்டும் தெளிவாக வரையறுக்கப் பெற்ற வளரும் மனித நலன் என்னும் லட்சியத்தை நோக்கி நடை போடுகிறது" என்கிறார்.

ஜி.எப்.மோட் என்பவர், "இதழியல் என்பது, பொதுமக்கள் தொடர்புக்குரிய புதிய சாதனங்களைப் பயன்படுத்தி பொதுச் செய்திகளையும், பொதுக் கருத்துக்களையும், பொது பொழுதுபோக்குகளையும் முறையாக, நம்பிக்கைக்குரிய வகையில் பரப்புவதாகும்" என்கிறார்.

லார்டு கிரே என்பவர், "பத்திரிகைதான் நாட்டுச் சுதந்திரத்தின் மிகப்பெரிய காவலாளி" என்கிறார்.

மேத்யூ அர்னால்டு என்பவர், "இதழியல் அவசரத்தில் பிறக்கும் இலக்கியம்" என்கிறார்.

பிராங் மோரஸ், "பெரும்பாலும் ஒரு நாளிதழ் அறிவிப்பதும் கருதுவதும்தான் வரலாற்றுக்கு மூலப்பொருளாகவும், வரலாற்று ஆசிரியர்களுக்கு மிகவும் மதிப்புடையதாகவும் அமைகின்றது" என்கிறார்.

இலங்கை ஊடக ஆய்வாளர் எஸ்.மோசேஸ், "வெகுஜன ஊடகங்கள் மக்களை காக்க வேண்டிய தார்மீக பொறுப்பு வாய்ந்த சமூக சாதனங்கள்" என்கிறார்.

ஊடக வடிவங்கள்

ஊடகவியலானது வேறுபட்ட பார்வையாளர்களைக் கொண்ட பல்வேறு வடிவங்களில் உள்ளது. இந்த ஊடகத்துறையே அரசுகளின் செயல்பாடுகளை காவல் செய்யும் காவல் நாய் போல இருந்து தவறுகளைச் சுட்டிக்காட்டும் பொறுப்பைக் கொண்டுள்ளது. எனவேதான் இத்துறையை ஜனநாயகத்தின் நான்காவது தூண் என வர்ணிக்கப்படுகிறது. ஒரு ஒற்றை வெளியீடு (ஒரு செய்தித்தாள் போன்றது) பலவிதமான ஊடக வடிவங்களைக் கொண்டுள்ளது. அவை ஒவ்வொன்றும் வெவ்வேறு வடிவங்களில் அதாவது ஒரு நாளிதழாகவோ, ஒரு பத்திரிகையாகவோ, அல்லது ஒரு வலைத்தளமாகவோ இருந்து ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறு வகையான பார்வையாளர்களைக் கொண்டிருக்கும்.

சில ஊடக வடிவங்களின் வகைகள்

வழக்காற்று ஊடகவியல்- குறிப்பிட்ட கருத்துரைகளுக்கு ஆதவாக அல்லது பார்வையாளர்களின் கருத்துகளில் தாக்கங்களை ஏற்படுத்துவதற்காக எழுதுதல்.

ஒளிபரப்பு ஊடகவியல்-வானொலி அல்லது தொலைக்காட்சிகளில் எழுத்து அல்லது பேச்சு வடிவிலான ஊடகவியல்

குடிமகன் ஊடகவியல்- பங்கேற்பு ஊடகவியல்

தரவுத்தள ஊடகவியல்- எண்கள் மற்றும் தரவுகளில் இருந்து செய்திகளைத் திரட்டுதல் கண்டுபிடித்தல், செய்திகளைக் கூற தரவுகளையும் எண்களையும் பயன்படுத்துதல். தரவு பத்திரிகையாளர்கள் தங்கள் அறிக்கையை ஆதரிக்க இத்தகைய தரவுகளை பயன்படுத்தலாம். தரவுகளின் பயன்பாடுகள் மற்றும் அமைப்புகள் , அரசாங்கங்களால் தவறாக பயன்படுத்தப்பட்ட விவகாரங்களை அறிக்கைகளாக வெளியிடுவர். அமெரிக்க செய்தி அமைப்பான புரோபப்ளிக்கா (சழீரடிடஉைய) ஒரு முன்னோடி தரவுத்தள பத்திரிகையாக அறியப்படுகிறது.

வானியல் புகைப்பட ஊடகவியல்- ஆளில்லாத பறக்கும் ஒளிப்பட கருவிகளை இயக்கி சம்பவங்களை நேரடியாக படம்பிடித்தல்.

கொன்ஸோ ஊடகவியல்- இம்முறை ஊடவியலானது ஹன்டர் எஸ். தாம்சன் என்பவரால் புகழ் பெற்ற இவ்வகை ஊடகவியலானது செய்தியை மிகவும் தனிப்பட்ட பாணியில் வெளிப்படுத்துவது.

ஊடாடும் ஊடகவியல்-இணைய வழியிலான பத்திரிக்கை வகைகள்

துப்பறிதல் ஊடகவியல்- சமூகப் பிரச்சனைகள் தொடர்பாக ஆழமாகவும் விரிவாகவும் துப்பறிந்து அதனைத் தீர்க்கும் வழிமுறைகளை நோக்கி செய்திகளை வெளியிடுவது

ஒளிப்பட ஊடகவியல்- புகைப்படங்கள் மூலமாக செய்திகளை வெளியிடுதல்

சமீப காலங்களாக சமூக வலைத்தளங்களின் தீவிர எழுச்சியும் வளர்ச்சியும் ஊடகவியலி்ல் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. ஒரு ஊடகத்தில் வெளிவரும் உண்மைத்தன்மைகள் சமூக ஊடகங்களில் கேள்விக்குள்ளாக்கப்படும் போது இக்னும் கவனமாக செய்திகளை வெளியி்டுவதற்கான நிர்பந்தங்கள் ஏற்படுகின்றன.

வரலாறு

பிரான்சு நாட்டின் கிழக்கு பகுதியிலுள்ள ஸ்திராஸ்பூர்க் என்ற நகரத்திலிருந்து 1960 ஆம் ஆண்டு ஜோகன் கார்லசு என்பவரால் வெளியிடப்பட்ட "அனைத்து கொள்கைகளுக்குமான தொடர்பும் மறக்கமுடியாத வரலாறுகளும்" என்ற பிரெஞ்சு மொழி நாளிதல் வெளியிடப்பட்டது. இதுவே உலகின் முதல் செய்தித்தாளாக அங்கீகரிக்கப்பட்டள்ளது. ஜசான்று தேவைஸ 1702 முதல் 1735 வரை வெளிவந்த தி டெய்லி கொரண்ட் (னுயடைல ஊழரசயவெ) என்ற ஆங்கில செய்தித்தாள் வெற்றிகரமாக வெளிவந்த முதல் ஆங்கில செய்தித்தாளாகும்.1950 களில் டயாரியோ கரியோகா என்ற செய்தித்தாளின் சீர்திருத்தம் பொதுவாக பிரேசிலில் நவீன பத்திரிகைகளின் பிறப்பு என்று குறிப்பிடப்படுகிறது.

ஊடகத்தின் பங்கு

1920 களில் நவீன இதழியல் ஒரு முழுமையான வடிவம் பெற்றது.ஜ7ஸ எழுத்தாளர் வால்டர் லிப்மேன் மற்றும் அமெரிக்க தத்துவியலாளர் ஜான் டிவே சனநாயகத்தில் ஊடகத்தின் பங்கு பற்றி விவாதித்தனர். அவர்களுடைய வேறுபட்ட விவாதக் கருத்துக்கள் தேசம் மற்றும் சமுதாயத்தில் இதழியலின் பண்புகளை வரையறுக்க ஏதுவாகின்றன.

இதழியலின் கூறுகள்

பில் கோவாச் மற்றும் டாம் ரோசன்டைல் ஆகியோர் இதழியலின் கூறுகள் (வாந நுடநஅநவெள ழக துழரசயெடளைஅ) என்ற புத்தகத்தில் இதழியலாளர்களுக்கான முக்கிய வழிகாட்டுதல்களை முன்வைத்துள்ளனர்.ஜ8ஸ ஏனெனில் இதழியலின் முதல் விசுவாசம் குடிமகள்களுக்கானதாக இருக்க வேண்டும். இதழியலாளர்கள் என்பவர்கள் உண்மையை கட்டாயம் கூறவேண்டிய பொறுப்பில் இருப்பவர்களாவர். சக்தி மிக்க தனி நபர்கள் மற்றும் அரசுகள் அதன் அமைப்புகளை வெளிப்படைத்தன்மையோடும் சுதந்திரமாகவும் கன்காணிக்கும் பொறுப்பும் ஊடகவிலாளர்களுக்கு உள்ளது. தகுந்த ஆதாரங்களை சுட்டிக்காட்டி நம்பகமான தகவல்களை குடிமக்களுக்கு வழங்குவதே இதழியலின் முக்கியச் சாரம்சம் ஆகும்.

தொழில்முறை மற்றும் நெறிமுறைகள்

தற்போதுள்ள பல்வேறு இதழியல் குறியீடுகளில் சில வேறுபாடுகள் இருந்த போதிலும் பெரும்பாலான கொள்கைகள் உட்பட பொதுவான அம்சங்களான உண்மை, துல்லியத்தன்மை, புறவயத்தன்மை , பாரபட்சமற்ற, ஒரு பாற் கோடாமை, நேர்மை மற்றும் பொதுப் பொறுப்புடைமை ஆகியவை ஊடகங்கள் பொதுமக்களுக்காக செய்திகளை திரட்டி வெளியிடுதலில் கடைபிடிக்கப்பட வேண்டிய கூறுகளாகும்.

சில ஊடக நெறிமுறைகளில் ஐரோப்பிய இதழியல் நெறிகள் குறிப்படத்தக்கதாகும்.அவை இனம் , மதம், பால் மற்றும் உடலியல் மனம் சார் குறைபாடுகள் அடிப்படையிலான பாகுபாட்டுச் செய்திகள் குறித்து கவலை கொள்கிறது.